[illegible]

வேதாகம வரலாற்றின் வரைக்குறிப்பு

H.S. [illegible]

[illegible]

வேதாகம வரலாற்றின் வரைக்குறிப்பு

பழைய ஏற்பாட்டு வரலாற்றின் வரைக் குறிப்பு

அறிமுகம்

1. ஜலப்பிரளயத்திற்கு முந்தைய காலம், கி.மு. 4004 ? 2348
2. ஜலப்பிரளயத்திற்கு பிந்தைய காலம் கி.மு. 2348 - 1921
3. முற்பிதாக்களின் காலம் , கி.மு. 1921-1706
4. அடிமைத்தளத்தின் காலம், கி.மு. 1706 ? 1491
5. யாத்திரைக்காலம், கி.மு. 1491-1451
6. வெற்றிக்கொள்ளுதலின் காலம், கி.மு. 1451- 1400
7. நியாயதிபதிகளின் காலம், கி.மு. 1400 ? 1095
8. ஒன்றுபட்டிருந்த இராஜ்யம், கி.மு. 1095 ? 975
9. வடக்கு இராஜ்யம், கி.மு. 975 ? 722
10. தெற்கு இராஜ்யம், கி.மு. 722 - 586
11. சிறையிருப்பின் காலம், கி.மு. 586 - 536
12. சிறையிருப்பிற்கு பிந்திய காலம், கி.மு. 536 ? 400

புதிய ஏற்பாட்டு வரலாற்றின் வரைக்குறிப்பு
பழைய ஏற்பாட்டுக்கும் புதிய ஏற்பாட்டுக்கும் மத்தியில் இடைவேளை
அறிமுகம்

13. சுவிசேஷ வரலாறு
14. பிறப்பும் குழந்தைப்பருவமும்
15. தயாரிப்பின் காலகட்டம்
16. தெளிவற்றக் காலகட்டம்
17. மாபெரும் கலிலேய ஊழியம்
18. பாலஸ்தீனத்தின் எல்லாப் பகுதிகளிலும் முடிவு ஊழியம்
19. இயேசுவின் ஊழியத்தில் கடைசி வாரம்
20. கடைசி நாள்
21. நாற்பது நாட்கள்
22. அப்போஸ்தலிக்க வரலாறு
23. எருசலேமில் சபை ஸ்தாபிக்கப்படுதலும் வளர்ச்சியும் கி.பி. 30 ? 35
24. சபையின் விரிவாக்கம்
25. புறஜாதியினரின் மத்தியில் பவுலின் ஊழியப்பயணங்கள், கி.பி. 45-58
26. பவுலின் நான்காண்டு சிறைவாசம், கி.பி. 58-63
27. பின்னாளைய அப்போஸ்தலிக்க வரலாறு

படிப்பு உதவிகள், பழைய ஏற்பாடு
படிப்பு உதவிகள், புதிய ஏற்பாடு

பழைய ஏற்பாட்டு வரலாற்றின் வரைக்குறிப்பு

அறிமுகம்

I. வேதாகம வரலாற்றைப் படிக்க வேண்டியது ஏன்?
II. வேதாகம வரலாற்றின் குறிக்கோள்
III. வேதாகம வரலாற்றின் யுகங்கள்
IV. பழைய ஏற்பாட்டு வரலாற்றின் காலங்கள்

ஜலப்பிரளயத்திற்கு முந்திய காலம், கி.மு. 4004-2348

ஜலப்பிரளயத்திற்குப் பிந்திய காலம், கி.மு. 2348-1921

முற்பிதாக்களின் காலம், கி.மு. 1921-1706

I. ஆபிரகாமின் வாழ்வு. (ஆதி. 11:27-25:10.)
II. ஈசாக்கின் வாழ்வும் பண்பும். (ஆதி. 24:1-28:9.)
III. யாக்கோபின் வரலாறு. (ஆதி. 27:1-49:33.)
IV. யோசேப்பின் வரலாறு. (ஆதி. 37:1-50:26.)
V. யோபுடைய புத்தகம்.

அடிமைத்தனத்தின் காலம், கி.மு. 1706-1491

I. எபிரெயர்கள் அடிமைத்தனத்தில் இருந்த காலத்தில் எகிப்து.
II. கொடுமைப்படுத்தப்படுதல்.
III மோசேயின் பிறப்பும் ஊழியமும்.
IV. மாபெரும் போட்டி.
V. எகிப்தில் சஞ்சரித்ததின் செயல் விளைவு.

யாத்திரைக்காலம், கி.மு. 1491-1451

I. செங்கடலில் இருந்து சீனாய் (மலை) வரை. (யாத். 15 -18.)
II. சீனா(ய் மலை)யில் (தங்கி) இருந்த ஆண்டு.
III. சீனாய் மலையிலிருந்து காதேஸ் வரைக்கும்.
IV. காதேஸில் இருந்து யோர்தான் வரைக்கும்.

வெற்றிகொள்ளுதலின் காலம், கி.மு. 1451-1400

I. யோர்தானைக் கடத்தல்.
II. எரிகோவைக் கைப்பற்றுதல்.
III. கானானின் மையப்பகுதியை வெற்றி கொள்ளுதல்.
IV. தென்பகுதியில் அரசியல் கூட்டும் வெற்றி கொள்ளுதலும்.
V. வடபகுதியில் அரசியல் கூட்டும் வெற்றி கொள்ளுதலும்.
VI. நாடு பங்கிடப்படுதலும் யோசுவாவின் மரணமும்.

நியாயாதிபதிகளின் காலம், கி.மு. 1400-1095

I. மத ரீதியான நிலை.

II. *அரசியல் ரீதியான நிலை.*
III. *முதன்மையான ஆறு படையெடுப்புகள்.*
IV. *ரூத்தின் வரலாறு.*
V. *தீர்க்கதரிசியும் - நியாயாதிபதியுமான, சாமுவேல்.*
(1 சாமுவேல் 1-10.)

ஒன்றுபட்டிருந்த இராஜ்யம், கி.மு. *1095-975*

I. *அறிமுகம் -தேவனுடைய ஆளுகை.*
II. *சவுலின் ஆளுகை. (கி.மு. 1095-1055. 1 சாமு. 11-31.)*
III. *தாவீதின் வாழ்வும் ஆளுகையும். (கி.மு. 1055-1015. 1 சாமு. 16-31;*
2 சாமு.; 1 இரா. 1-11:11; 1 நாளா. 11-29).
IV. *சாலொமோனின் ஆளுகையும் அவரது பண்பும். (1 இரா. 2 -11;*
2 நாளா. 1-9.)
V. *தீர்க்கதரிசிகளின் எழுச்சி.*
VI. *இந்தக் கால கட்டத்தின் இலக்கியம்.*

வடக்கு இராஜ்யம், கி.மு. *975-722*

I. *அறிமுகம்.*
II. *நான்கு கால கட்டங்கள்.*

தெற்கு இராஜ்யம், கி.மு. *722-586*

I. *முதல் வீழ்ச்சியும் எழுச்சியும்.*
II. *இரண்டாம் வீழ்ச்சியும் உயிர்ப்பித்தலும்/எழுச்சியும்.*
III. *மூன்றாம் வீழ்ச்சியும் எழுச்சியும்/உயிர்ப்பித்தலும்.*
IV. *கடைசி வீழ்ச்சியும் சிறைப்படுதலும்/பிடிக்கப்படுதலும்.*

சிறையிருப்பின் காலம், கி.மு. *586-536*

சிறையிருப்பிற்கு பிந்திய காலம், கி.மு. *536-400*

அறிமுகம்

I. *வேதாகம வரலாற்றைப் படிக்க வேண்டியது ஏன்?*

இந்தக் கேள்வி தகுதியான ஒன்றாகவே உள்ளது. ஊழியக்காரர் வேதாகமத்தைப் படிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றார். அதை அவர் தமக்காக அறிந்து கொள்வதும், அதைப் பிறருக்குப் போதிப்பதும் அவரது கடமையாக உள்ளது. கிறிஸ்தவ மக்கள் யாவரும் தங்களின் தனிப்பட்ட மற்றும் சொந்த பக்தி விருத்திக்கான வழிமுறை என்ற வகையில் தங்கள் வேதாகமங்களை வாசிக்க வேண்டும் என்று கூறுப்படுகிறது. ஆனால் கல்லூரிப் பாடத் திட்டத்தில், வேதாகம வரலாறு பற்றிய முறையான பாடத் திட்டம் ஒன்றை ஒரு பாகமாக ஏற்படுத்த வேண்டியது ஏன்?

1. ஏனென்றால், வேதாகமம் அவ்வளவு பரவலாக அறியப் பட்டுள்ளது.—கிறிஸ்தவ வட்டாரத்தின் ஒவ்வொரு இல்லத்திலும் இதன் வரலாறுகள் வாசிக்கப்பட்டு திரும்பவும் கூறப்படுகின்றன. இது சபையின் மிக மேன்மையான இடத்தையும், விடுதி, சட்ட சபை கூடும் அறை மற்றும் நீதிமன்ற அவையில் மதிப்பிற்குரிய ஒரு இடத்தையும் பிடித்துள்ளது. இது நமது மாபெரும் நவீன இலக்கியங்களுடன் உள்ளாக இணைவிக்கப்பட்டும் முந்நூறு மொழிகள் மற்றும் வட்டார மொழிகளில் மொழிபெயர்க்கப் பட்டும்[1] உள்ளது. இது நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ, உலகில் உள்ள வேறெந்தப் புத்தகத்தைக் காட்டிலும் பத்து மடங்கு அதிகமான புத்தகங்களை உருவாக்குகிறது. இவ்வளவு மிகவும் பரவலாக அறியப் பட்டும் இவ்வளவு படைப்பாக்கத் திறன் கொண்டதாகவும் உள்ள இப்படிப்பட்ட ஒரு புத்தகமானது சுயாதீனக் கலாச்சாரத்தின் எந்த ஒரு திட்டத்திலும் உள்ளடக்கப்பட வேண்டியதாக இருக்கிறது.

2. ஏனென்றால் இது அவ்வளவு குறைவாக அறியப்பட்டுள்ளது.— மனிதர்கள் வேதாகமத்தை வாசிப்பதைக் காட்டிலும் அதிகமாக வேதாகமத்தைப் பற்றி வாசிக்கின்றனர். அவர்கள் அதைப் படிப்பதைக் காட்டிலும் அதிகமாக அதை வாசிக்கின்றனர். அதைப் பற்றிய அவர்களின் அறிவானது மேம்போக்கானதாகவும் சிறு சிறு பகுதிகளானதாகவும் உள்ளது. அவர்கள் அதைப் பற்றிய தெளிவான தொடர்புடைய கண்ணோட்டம் கொண்டிருப்பதில்லை. மாணவர், எகிப்து மற்றும் பெர்ஸியா, கிரேக்கம் மற்றும் ரோம் ஆகியவற்றின் வரலாற்றை வரைக்குறிப்பிடக் கற்பிக்கின்றார். கல்லூரியில் பட்டம் பெற்ற எத்தனை பேர், ஆபிரகாம் அல்லது மோசே அல்லது தாவீது பற்றிய மதிநுட்பமான விவரங்களைத் தரவோ அல்லது இயேசு அல்லது பவுலின் வாழ்வில் நடந்த ஒரு டஜன் உண்மைகளை வரிசை முறைப்படி தரவோ முடியும்?

3. ஏனென்றால் வேதாகமத்தின் திட்டம் என்பது வரலாற்று ரீதியானது.—இது தர்க்க ரீதியானதோ அல்லது அறிவியல் ரீதியானதோ அல்ல. இதன் பக்கங்களில் மீட்பு என்பது வரலாற்று ரீதியாக விரித்துரைப் பட்டுள்ளது; அது வரலாற்று ரீதியாக படிக்கப்பட வேண்டும். வேதாகமத் தின் வரலாற்று அமைப்பிலிருந்து துண்டிக்கப்பட்ட ஒரு வசனம், ஒரு உண்மை, ஒரு பாத்திரப் படைப்பு ஆகியவற்றிலிருந்து ஒருவர் நன்மையைப் பெறலாம் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை; அதன் தொடர்புகளுடன் மீளக்கட்டுவிக்கப்படும் பொழுது இது இன்னும் எவ்வளவு அதிகமா கின்றது! தலை சிறந்த கலைப்படைப்பொன்று சிறு சிறு துண்டுகளாய் வெட்டப்பட்டு நமது பாராட்டுதலுக்காக துணுக்குகளாய் ஒப்படைக்கப் படுவதைக் கற்பனை செய்து பாருங்கள்; இங்கு ஒரு குத்துச் செடி, அங்கு ஒரு பாறை, மற்றும் இன்னொரு துண்டில் நீலவானத்தின் ஒரு பகுதிப் பட்டை அல்லது அதைத் திரும்பப் பிரதிபலிக்கும் தெளிந்த நீர்க்குட்டை! இவை ஒவ்வொன்றும் தனது சொந்தமான சிறப்புக்களைக் கொண்டுள்ளது என்பதில் ஐயமில்லை, இருப்பினும் கலையின் உன்னத படைப்புக்களை மனிதர்கள் இவ்விதமாய்க் கற்பதில்லை; அவர்கள் ஆவியானவரின் மிக உன்னதமான வெளிப்பாடுகளை இவ்விதமாய்ப் படிக்கக் கூடாது. அவர்களுக்குள், இந்திய அரசியலமைப்புச் சட்டம், நேருவின் கட்டுரைகள் அல்லது காந்தியின் பண்பு ஆகியவை ஊக்கமான படிப்புக்குத் தகுதியான வையாய் உள்ளன என்பதில் ஐயம் எதுவும் இல்லை; வரலாற்றின் நோக்கில் காணும் பொழுது இவை அளவு கடந்த ஆர்வம்மிக்கவைகளாய் உள்ளன. நீங்கள் ஆபிரகாமை அல்லது மோசேயை அல்லது தாவீதை அல்லது பவுலைப் பற்றி அறிந்திருந்தால், நீங்கள் ஆபிரகாமுடனான உடன்படிக்கை, சீனாய் மற்றும் கல்வாரி மலைக் காட்சிகள் அல்லது பெந்தெகொஸ்தேயன்று பிரசங்கம் போன்றவற்றை புரிந்து/அறிந்து கொள்வீர்களென்றால், நீங்கள் அவற்றை மிக உன்னதமான முழுமையின் பாகங்கள் என்ற வகையில் அறிய வேண்டும். வேதாகமமானது வரலாற்று ரீதியாகப் படிக்கப்பட வேண்டும்.

4. இதன் ஒருமைப்பாட்டை உணர்ந்தறிவதற்காக.—வேதாகமம் என்பது (ஒரே) ஒரு புத்தகமல்ல; அது பல புத்தகங்களைக் கொண்டுள்ளது. அதன் நாற்பது எழுத்தாளர்களும் தூரத்தின் மிகுந்த விரிவினாலும் காலத்தின் பல நூற்றாண்டுகளாலும் பிரிக்கப்பட்டிருந்தார்கள். அவர்கள் கலாச்சாரத்தின் ஒவ்வொரு படி நிலையிலிருந்தும் வந்தவர்களாக, மேய்ப்பு வேலையாட்கள் மற்றும் மீனவர்களிலிருந்து, அரசவைக் கவிஞர்கள் மற்றும் ஒழுங்குடன் கற்பிக்கப்பட்ட கல்விமான்கள் வரை எல்லாத் தரப்பிலிருந்தும் வந்தவர்களாய் இருந்தனர். (வேதாகமத்தின்) தொகுப்பின் வகையில் வீச்சடம் கூட இதே அளவு பெரியதாய் உள்ளது; வரலாறு, சட்டம், கவிதை, செய்யுள் மற்றும் பாடல், பழமொழி, தீர்க்கதரிசனம், உவமை, உரை, நிருபம், பிரசங்கம், இவை யாவும் இந்த வியப்புமிக்க பக்கங்களில் இடம் பெற்றுள்ளன. மேலும் இந்த நாற்பது எழுத்தாளர்களும் பெரும்பாலும் ஒருவர் மற்றவரின் ஊழியத்தைப் பற்றி அறிந்திராத நிலையிலேயே ஊழியம் செய்தனர்.[2] இருப்பினும் இது ஒரே புத்தகமாய் உள்ளது. அறியாதிருப் பினும், இந்த நாற்பது எழுத்தாளர்களும் உண்மையில் ஆவியில்

ஒருமைப்பாட்டுடனும் நோக்கத்துடனும் பணியாற்றினர். தெய்வீக நோக்கத்தின் அறுபடாத நூலானது, தெய்வீக பலியினால் மனித மீட்புக் கான செவ்வண்ண நூலானது இந்த அறுபத்தியாறு சிறு சிறு நூல்களுக் கிடையே ஓடி இவற்றை ஒன்றாய் இணைக்கின்றது. சிறிது சிறிதாக, காலத்திற்குப் பின் காலமாக நோக்கமானது விரித்துரைக்கப்படுகிறது; "முதலில் இலை, பின்பு கதிர், அதன் பிறகு கதிரில் முழுமையான சோளம்." இந்த உருவகத்தில் கிறிஸ்துவே கண்ணோட்டத்தின் மையக் கருத்தாக இருக்கிறார். இழந்துபோன பரதீசிலிருந்து முன்னோக்கி ஓடி வருகின்ற அல்லது மீண்டும் பெறப்படவிருக்கும் பரதீசிலிருந்து பின்னோக்கி ஓடி வருகின்ற எல்லா குவிய வரிகளும் அவரது சிரசின்மீதுதான் கவிகின்றன. கிறிஸ்து திறவுகோலாய் இருக்கின்றார்; அவரின்றி அனைத்தும் பெரும் குழப்பமாய் உள்ளது; அவருடன் அனைத்தும் kosmos ஆக, வனப்புள்ளதாக, ஒழுங்குள்ளதாக, ஒருமைப்பாடுள்ளதாக இருக்கின்றது.

5. மனித வரலாற்றின் புத்தகம் என்ற வகையில்.—தனது சொந்த இனத்தின்/வகையின் வரலாற்றை அறியாதிருக்கிற எவரும் கலாச்சாரத்தை விரிவாக்கும் உரிமைகோருதலை ஏற்படுத்த இயலாது. தனிப்பட்ட நற்பண்புத் தன்மை அல்லது தவறுகளின் மிக உன்னதமான பாடங்கள், எல்லாக் காலங்களின் வளமான இலக்கியங்கள் ஆகியவை வரலாற்றில் பொதியப்பட்டுக் கிடக்கின்றன. வேதாகமமானது பூமியின் மிகவும் குறிப்பிடத்தக்க இனங்களின் ஒன்றான எபிரெயர்களின் தொடக்கம் மற்றும் நல்வாய்ப்புக்கள் ஆகியவற்றை குறிப்பிடத்தக்க முழுமைத்தன்மையுடன் ஆராய்ந்து கண்டறிகின்றது. அவர்களுடைய வரலாற்றின் நூலானது பழங்காலத்தின் ஒவ்வொரு மாபெரும் நாட்டினுடைய நல்வாய்ப்புக் களுடனும் இடை நெசவிடப்பட்டுள்ளது/பின்னிப் பிணைக்கப் பட்டுள்ளது. இவ்விதமாக, கல்தேயா, எகிப்து, அசீரியா, பாபிலோனியா, பெர்ஸியா, மெக்கதோனியா மற்றும் ரோமாபுரி ஆகிய யாவையும் ஒவ்வொன்றாக தொடப்பட்டது.

6. ஒருவர் வேதாகமத்தின் மீதுள்ள தம் விசுவாசத்தைக் காத்துக் கொள்ள.—நாம் ஆயிரக்கணக்கில் குழந்தைத்தனமான கருத்துக்களை விட்டு நம்மை வெளியே வளர்த்துக் கொள்கிறோம். பல ஆண்டுகளுக்குப் பிறகு நமது குழந்தைப் பருவத்தின் இல்லத்திற்கு நாம் திரும்பி வருகிறோம். ஒவ்வொன்றும் எவ்வளவாக மாறியுள்ளது! அந்தப் பழைய வீடும், களஞ்சியமும், நாம் விளையாடின அல்லது வேலை செய்த அந்த நிலங் களும், நாம் சுற்றித் திரிந்த அந்த குன்றின் அடிவாரமும், நாம் குளித்த அல்லது மீன் பிடித்த அல்லது சறுக்கு விளையாடின அந்த நீரோடையும், எல்லாமே அளவுகளில் சிறிது சிறிதாய்ச் சுருங்கியுள்ளன. நமது வாழ்வு உள்ளாகவும் புறம்பாகவும் விரிவாகியுள்ளது. குழந்தைப் பருவத்தின் பிற கருத்துக்களுடன், நமது தந்தையின் வேதாகமத்தின் மீதான நமது விசுவாசத்தை நாம் எறிந்து விட்ட அபாயமும் உள்ளது. உண்மையில் நாம் அதை அறியாமல் இருப்பதில் தான் நமது அபாயம் உள்ளது; ஒரு மேன்மை யான அதிமான புரிந்துகொள்ளும் அறிவில்தான் இதற்குப் பரிகாரம் உள்ளது.

II. வேதாகம வரலாற்றின் குறிக்கோள்

மதரீதியான கருத்தே அடிப்படைக் குறிக்கோளாக உள்ளது. வரலாறு யாவற்றிலும் மதம் என்பது முக்கியமானதாக உள்ளது. இது கலை, கவிதை, சட்டங்கள், பழக்கவழக்கங்கள், இல்வாழ்வு, அடிக்கடி பெரும் யுத்தங்கள் ஆகியவற்றுடன் பின்னிப் பிணைக்கப்பட்டுள்ளது. இருப்பினும், இன்னமும் இது ஒரு விதியாக, ஒரு சார்பொருள், துணை நிலையாகவே கருதப்படுகின்றது. அரசியல் ரீதியான மற்றும் மதிநுட்பம் உள்ள வாழ்வு, மாபெரும் பேரரசுகள் அல்லது கட்டிடக் கலையின் மிக மேன்மையான நினைவுச் சின்னங்களைக் கட்டி எழுப்புதல், கலை அல்லது சட்டம் அல்லது இலக்கியத்தின் தலைசிறந்த படைப்புக்களை உருவாக்குதல் - இவை யாவும் முதலிடத்தைப் பெற்றுள்ளன.

இதற்கு நேர்மாறாக, வேதாகம வரலாற்றில், மதரீதியான நோக்க மானது மேலோங்கியுள்ளது. தேவனுடைய மக்கள் தங்கள் அற்புதமான வரலாற்றின் தொடக்கம் முதல் நிறைவு வரையிலும் பழங் காலத்தின் மாபெரும் நாடு ஒவ்வொன்றுடனும் தொடர்பு கொண்டனர் என்பது உண்மையே. வல்லமைக்கு எழும்பிய அவர்களின் அடிச்சுவடுகளிலும், அவர்களின் வீழ்ச்சிக்குக் காரணங்களிலும் இருந்து நாம் சிலவற்றைக் கற்றுக் கொள்ளுகின்றோம். இருந்தாலும் வேதாகமத்தில் பொதுவான வரலாறு என்பது தற்செயலானதாகவே உள்ளது. உண்மையான மதத்தின் தோற்றம் மற்றும் வளர்ச்சியை அதன் மாபெரும் மூன்று நிலைகளில் - முற்பிதாக்கள், யூதத்துவம் மற்றும் கிறிஸ்தவம் - கண்டறிதல் என்பதே அடிப்படை/ முதன்மை நோக்கமாய் உள்ளது. ஒரு மனிதர், வரலாற்றின் மாபெரும் மதம் ஒன்றை நம்பாதிருந்தாலும், அதைப் பற்றிய மதிநுட்பமான கருத்தறிவு இன்றி அவரால் இருக்க முடியாது.

III. வேதாகம வரலாற்றின் யுகங்கள்

மூன்று தலைசிறந்த நிகழ்ச்சிகள் வேதாகம வரலாற்றின் மூன்று மாபெரும் யுகங்களை அல்லது சகாப்தங்களைக் குறிக்கின்றன. அவைகள்: (1) சீனாய் மலையில் மோசேயின் நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுதல்; (2) பெந்தெகொஸ்தே நாளன்று ஆவியானவர் இறங்கி வருதல்; (3) கடைசி அப்போஸ்தலரின் மரணம். இவ்விதமாக இந்த யுகங்கள் பின்வருமாறு விளக்கப்படலாம்:

1. முற்பிதாக்களின் யுகம்,[3] கி.மு. 4004-1491. படைப்பில் இருந்து நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டது வரை.

2. யூதத்துவ யுகம், கி.மு. 1491-கி.பி. 30. நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டதிலிருந்து பரிசுத்த ஆவியானவர் இறங்கி வரும் வரையில்.

3. கிறிஸ்தவ யுகம், கி.பி. 30-100. ஆவியானவர் இறங்கியதிலிருந்து யோவான் அப்போஸ்தலர் மரித்தது வரை.

குடும்பம் என்பதே - குடும்ப வெளிப்படுத்துதல், குடும்ப மார்க்கம், குடும்ப அரசு - முதல் யுகத்தின் பண்பாக உள்ளது; இரண்டாவது யுகம் என்பது, நாடு - நாட்டு மார்க்கம், நாட்டு உடன்படிக்கை - என்பதைப்

பண்பாகக் கொண்டுள்ளது; மூன்றாவது யுகம் என்பது ஒரு இனத்தை (மனித இனத்தை) - உலகளாவிய மார்க்கம் மற்றும் செய்தியைக் கொண்டுள்ளது. முதல் யுகத்தில் தேவன் முற்பிதாக்களின் மூலமாகக் குடும்பங்களுடன் பேசி வந்தார்; இரண்டாவது யுகத்தில் அவர் மோசேயின் மூலமாக ஒரு நாட்டிற்குப் பேசினார்; மூன்றாவது யுகத்தில் அவர் தம்முடைய குமாரன் மூலமாக உலகம் முழுவதற்கும் பேசுகிறார்.

IV. பழைய ஏற்பாட்டு வரலாற்றின் காலங்கள்

வரலாற்றின் நிகழ்ச்சிகளை தக்க நோக்கில் பற்றிக் கொள்வதற்கு, ஒருவர் வரலாற்றின் கணுக்களில் ஒரு சிலவற்றின் மீதும் அவற்றின் தேதிகளின் மீதும் உறுதியாய் நிலைத்த கண்ணோட்டமிட்டு அவற்றை உற்று நோக்க வேண்டும். பின்வரும் காலங்களை அதற்குத் தக்கதான ஒவ்வொரு நிகழ்ச்சியையும் எப்பொழுதும் குறிப்பிடும் பழக்கத்துடன் மனப்பாடம் செய்ய செலவிடும் ஒரு மணி நேரமானது வாழ்நாள் முழுவதற்குமான ஊழியத்தை மெய்ப்பிக்கும்.

1. ஜலப்பிரளயத்திற்கு முந்திய காலம், கி.மு. 4004-2348. படைப்பிலிருந்து ஜலப்பிரளயம் வரை.

2. ஜலப்பிரளயத்திற்குப் பிந்திய காலம், கி.மு. 2348-1921. ஜலப்பிரளயத்திலிருந்து ஆபிரகாம் அழைக்கப்பட்டது வரை.

3. முற்பிதாக்களின் காலம், கி.மு. 1921-1706. ஆபிரகாம் அழைக்கப் பட்டதிலிருந்து எகிப்துக்கு இடம் பெயர்ந்தது வரை.

4. அடிமைத்தனத்தின் காலம், கி.மு. 1706-1491. எகிப்துக்கு இடம் பெயர்ந்ததிலிருந்து வெளியேற்றம் வரை.

5. யாத்திரைக் காலம், கி.மு. 1491-1451. வெளியேற்றத்திலிருந்து யோர்தானைக் கடந்து சென்றது வரை.

6. வெற்றி கொள்ளுதலின் காலம், கி.மு. 1451-1400. யோர்தானைக் கடந்ததிலிருந்து யோசுவாவின் மரணம் வரை.

7. நியாயாதிபதிகளின் காலம், கி.மு. 1400-1095. யோசுவாவின் மரணத்திலிருந்து சவுல் அபிஷேகம் செய்யப்பட்டது வரை.

8. ஒன்றுபட்டிருந்த இராஜ்யம், கி.மு. 1095-975. சவுல் அபிஷேகம் செய்யப்பட்டதிலிருந்து ரெகொபெயாம் அரியணை ஏறியது வரை.

9. இரண்டு இராஜ்யங்கள், கி.மு. 975-722. ரெகொபெயாம் அரியணை ஏறியதிலிருந்து சமாரியாவின் வீழ்ச்சி வரை.

10. யூதா மட்டும், கி.மு. 722-586. சாமாரியாவின் வீழ்ச்சியிலிருந்து எருசலேமின் வீழ்ச்சி வரை.

11. சிறையிருப்பின் காலம், கி.மு. 586-536. எருசலேமின் வீழ்ச்சியிலிருந்து செருபாபேலின் கீழ் திரும்ப வருதல் வரை.

12. சிறையிருப்பிற்குப் பிந்திய காலம், கி.மு. 536-400. திரும்பி வந்ததிலிருந்து பழைய ஏற்பாட்டுச் சட்ட முடிவு வரை.

குறிப்புகள்:

[1]*இந்தப் புள்ளி விவரமானது 1921 வரையிலான மொழிபெயர்ப்பின் வளர்ச்சி நிலையைப் பிரதிபலிக்கின்றது.* [2]*டீன் இவ்விடத்தில்* “wrought” *என்று எழுதியிருந்தார்.* [3]*தொடக்க கால வேதாகம நாள் அட்டவணை வரிசையானது மிகவும் நிச்சயமற்றதாக உள்ளது.* Ussher *அவர்களுடையது போன்று ஏற்றுக் கொள்ளப்பட்ட முறைமை எதுவும் இல்லாத காரணத்தினால், நமது வேதாகமத்தின் பக்க ஓரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது இங்கு தரப்பட்டுள்ளது. யாத்திரை என்பது அநேகமாக நூறு முதல் நூற்று ஐம்பது ஆண்டுகள் பின்புள்ள காலத்திற்குரியதாயிருக்கலாம்.*

1

ஜலப்பிரளயத்திற்கு முந்திய காலம், கி.மு. 4004–2348

படைப்பில் இருந்து ஜலப்பிரளயம் வரை
ஆதி. 1:1-8:13

அறிமுகம்: ஆதியாகம புத்தகம்.—ஆதியாகமம் (சந்ததி, தொடக்கம்) என்பது "தொடக்கங்களின்" புத்தகமாக உள்ளது. ஆதி. 1:1 எல்லாவற்றின் தொடக்கத்தைக் கொடுக்கின்றது. "வம்ச வரலாறு" என்ற சொற்றொடர் பின்வரும் பத்து இடங்களில் உள்ளது: "வானமும் பூமியும் சிருஷ்டிக்கப் பட்ட வரலாறு;'' ஆதி. 2:4; ''ஆதாமின்,'' 5:1; ''நோவாவின்,'' 6:9; "நோவாவின் புதல்வர்களின்," 10:1; "சேமின்," 11:10; "தேராகுவின்," 11:27; ''இஸ்மவேலின்,'' 25:12; ''ஈசாக்கின்,'' 25:19; ''ஏசாவின்,'' 36:1; "யாக்கோபின்," 37:2. இந்தச் சொல் வழக்கை அடிக்கடி பயன்படுத்திய தென்பது ஏதோ தற்செயலானதல்ல. எழுத்தாளர், வரலாற்றின் தொடக்கங் களை உணர்வுடன் கையாளுகின்றார். வேதாகமத்தின் முதல் புத்தகத்தினு டைய இந்தப் பண்பானது தொடக்கத்தில் கவனத்தைக் கவர்ந்தது, மற்றும் இது தக்க வகையில் "ஆதியாகமம்" என்று அழைக்கப்பட்டது.

1. அண்டத்தின் தொடக்கம் (ஆதி. 1:1).—*அ. பிரச்சனை விவரிக்கப் பட்டது.*—இரும்புப் பாளம்/கம்பி ஒன்று கொடுக்கப்பட்டால், நாம் அதிலிருந்து சுத்தியல்கள், கத்தரிக்கோல்கள், ஊசிகள், கடிகாரச் சுருள் கம்பிகள், முதலியவற்றைச் செய்ய முடியும். அது படைப்பாய் இருப்ப தில்லை; அது உருமாற்றமாய் உள்ளது. இரும்பு எங்கிருக்கிறது? யார் அதை உருவாக்கியது? இங்கு ஒரு அண்டம் உள்ளது: சூரியன், விண்மீன்கள், கடல்கள், பல தரப்பட்ட பக்கங்களுடைய வாழ்வு. உருமாற்றம் பற்றியல்ல ஆனால் தொடக்கம் பற்றியே ஆதாரக் கேள்வி உள்ளது.

ஆ. பிரச்சனை தீர்க்கப்பட்டது.—பல காலங்களாக இந்தப் பிரச்சனை யின் மீது காரண அறிவு செயல்பட்டது,[1] "நித்தியமானது"; "தானாகவே ஏற்படுத்தப்பட்டது"; "தற்செயலானது"; போன்றவை அளிக்கப்பட்ட தீர்வு களாய் இருந்தன. பிற தீர்வுகள் முழுமையான பல தெய்வக் கோட்பாட்டு டன் சித்தரிப்புக் கலையைப் பெற்றன. அபிப்பிராயங்களின் இந்தக் குழப்பத் திற்கு மத்தியில், நமது எழுத்தாளர், தற்செயலானது எதுவும் இருப்பதில்லை;

தானாகவே எதுவும் ஏற்படுத்தப்பட்டதில்லை; ஒவ்வொரு விளைவுக்கும் தகுந்த காரணம் இருக்க வேண்டும்; என்று தெளிவாய்க் காண்கின்றார். ஏவப்பட்ட அவரது எழுதுகோலில் இருந்து வந்த ஒரு வார்த்தையானது இந்தப் பிரச்சனையைத் தீர்க்கிறது; "ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்."[2] தேவன் என்பது முடிவாயிருக்கிறது. தந்த தேவனை, மற்ற யாவும் பின் தொடருகின்றன. "அவர் சொல்ல ஆகும், அவர் கட்டளையிட நிற்கும்" (சங். 33:9).

இ. காலம்.—"ஆதியிலே." அறிவியலானது கற்றறிந்த வகையில் பல இலட்சக்கணக்கான ஆண்டுகளைப் பற்றிப் பேசுகின்றது. ஆதியாகமமோ, "ஆதியிலே" என்று மட்டும் கூறுகின்றது.

2. ஒழுங்கமைவின் தொடக்கம் *(ஆதி. 1:2-2:3).*—படைப்பு பற்றிய பதிவேடானது *(அ) ஒரு மிக முந்திய பெருங்குழப்பம்,* "ஒழுங்கின்மையும், வெறுமையும்"; *(ஆ) ஒழுங்கு படுத்தப்பட்ட சக்தி;* "தேவ ஆவியானவர் ஜலத்தின்மேல் அசைவாடிக் கொண்டிருந்தார்"[3]; *(இ) அடுத்தடுத்து வந்த ஆறு நாட்கள்* என்பவற்றைச் சுட்டிக்காண்பிக்கிறது. (1) வெளிச்சத்தின் தொடக்கம். லேப்லாஸ் என்பவர் நெபுலார் கருதுகோளை எழுதியவ ராவார். அது தொடக்கத்தை ஆதரிப்பதற்கல்ல ஆனால் இந்த அண்டத்தைப் பற்றி விவரம் தருவதற்கான முன்னேற்றப்பட்ட(கருத்)தாக இருந்தது. அந்தக் கோட்பாட்டின்படி, அதிக வெப்பத்துடன் இணைந்த வாயுப் பொருளின் சுருக்கமானது/செறிவானது வெளிச்சத்தை உமிழ்ந்தது. சூரியனுக்கு முன்னதாகவே வெளிச்சம் உண்டாக்கப்பட்டது என்று கூறிய மோசேயை மதியற்றவர் என்றும், ஆனால் அதே விஷயத்தைக் கூறிய லேப்லாஸை அறிவியல் அறிஞர் என்றும் மக்கள் கூறுகின்றனர். (2) ஆகாய விரிவு அல்லது வான வெளியின் தொடக்கம். பூமியின் மேல்ஓடு குளிர்ந்தது; நீராவியின் கனத்த உறையானது செறிவடைந்து மழையாக விழுந்தது அல்லது மேகங்களாக எழுந்தது, மற்றும் வானத்தின் விரிவானது தலைக்குமேல் நீல நிறம் கொண்ட எல்லைக்குட்படுத்த முடியாதது போன்ற காட்சியாயிற்று. (3) கண்டங்கள், கடல்கள் மற்றும் தாவரங்கள் ஆகிய வற்றின் தொடக்கம். (ஒரு காலத்தில்) கண்டங்கள், தீவுகள், கடற்கரைகள் எதுவுமின்றி உலகளாவிய கடல் இருந்திருக்க வேண்டும் என்று காணப் படுகின்றது. தேவன் பேசுகின்றார்/பேசினார்; சமுத்திரப் படுக்கைகளில் இருந்து கண்டங்கள் எழும்புகின்றன/எழும்பின; தீவுகள் கடல்களின் பரப்பின்மீது அழகுற அமைவுறுகின்றன/அமைவுற்றன, இவை முதலில் ஒன்றுமற்றதாகவும் வெறுமையாகவும் இருந்தன, ஆனால் கால ஓட்டத்தில் பல்வகைத் தாவரங்கள் இவற்றில் நிரம்பின. (4) சூரியன் சந்திரன் மற்றும் விண்மீன்கள் ஆகியவற்றின் தொடக்கம். படைப்பு பற்றிய பதிவானது "புலன் உணர்வு சார்ந்த" அல்லது "காட்சித்துவம் சார்ந்த" செயல் என்று கருத்தில் உணரப்படலாம், அதாவது, பூமியிலிருந்து பார்ப்பவருக்கு அவைகள் தோற்றமளிக்கும் வகையில் நிகழ்ச்சியாக விவரிக்கப்படலாம். நான்காம் நாளுக்கு முன்னதாக வான்பொருட்கள் நிச்சயமாய் அங்கு இருந்தன என்பதில் சந்தேகம் எதுவும் இல்லை, ஆனால் (4ம் நாளுக்குப்) பின்புதான் அவை பூமியிலிருந்து காணக் கூடியவைகளாயின. (5) கடல்

உயிர்கள் மற்றும் பறவையினங்கள் ஆகியவற்றின் தொடக்கம். வாழ்வின் கோடானது தடை செய்யப்பட்டுள்ளது. இது வரைக்கும் எந்த மிருகமும் பூமியில் சுற்றியதில்லை, எந்தப் பறவையும் காற்றில் பறந்ததில்லை, எந்த மீனும் கடலில் நீந்தியதில்லை. மீண்டும் ஒருமுறை தெய்வீக ஆணையானது முன் செல்லுகிறது, மற்றும் காற்றும் கடல்களும் உயிர் வாழ்வினை ஏராள மாய்ப் பெற்றன. இது நத்தைகள் மற்றும் ஊர்வன, பறவையினங்கள் மற்றும் மீன்கள் ஆகியவற்றின் காலமாய் உள்ளது. (6) நில - உயிரினங்கள் மற்றும் மனிதனின் தொடக்கம். மனித(ன்) (படைப்பு) என்பது ஆறாம் நாளின் பண்பாக உள்ளது; மனிதன் தேவ சாயாலாக இருக்கிறான் என்பது அவனது பண்பாக உள்ளது (ஆதி. 1:27). "சிருஷ்டித்தார்" என்பது இந்த அதிகாரத்தில் மூன்றுமுறை பயன்படுத்தப்பட்டுள்ளது: 1:1ல், அண்டம் பற்றி; 1:21ல் விலங்குயிர்களின் தோற்றம் பற்றி; 1:27ல் மனிதனின் தொடக்கம் பற்றி. இவற்றில் முதல் பயன்பாடு இல்லாமையிலிருந்து இருத்தலுக்கு இடையி லுள்ள கோட்டைக் கடக்கின்றது, இரண்டாவது பயன்பாடு உயிரற்ற திலிருந்து உயிர் உள்ளதற்கு இடையிலுள்ள கோட்டைக் கடக்கின்றது, மூன்றாவது பயன்பாடு மிருகத்திற்கும் மனிதனுக்கும் இடையில் உள்ள கோட்டைக் கடக்கின்றது. மனிதனின் கீழான பக்கத்தில் அவன் தான் மீண்டும் செல்லுகின்ற மண்ணின் உருவத்தில் இருக்கின்றான், தாவர வாழ்வானது தனது மண்ணில் வேரூன்றியுள்ளது, மற்றும் விலங்கு அதன் மேற்பரப்பில் திரிகின்றது. ஆனால் அவன் (மனிதன்) மேல் நோக்குபவனா யிருக்கும்போது இவைகள் (விலங்கு மற்றும் தாவரம்) அவ்வாறு செய்வ தில்லை. அவன், பின்வருவனவற்றில் தேவனுடைய சாயலாயிருக்கிறான்: (i.) புத்தி கூர்மையுடன் புரிந்துகொள்ளுதலில் வல்லமை. மனிதனுக்கு முந்திய வேளையில் ஒழுங்கு முறையும் வனப்பும் இருந்தது; ஆனால் ஒழுங்கு முறையை அல்லது வனப்பை பாராட்டுவதற்கு அல்லது காரணத் தையும் விளைவையும் தொடர்பு படுத்துவதற்குப் பூமியில் எந்த ஜீவியும் இல்லை. தேவன் மட்டுமே படைக்க முடிந்தது; தேவனுடைய சாயலில் ஆன மனிதன் மட்டுமே தேவனுடைய படைப்பில் இருந்த திட்டத்தையும் வனப்பையும் உய்த்துணர முடிந்தது. (ii.) உணர்வறிவில், மதிநுட்பத்தில், ஏற்புடைய உணர்வில். (iii.) மதி நுட்பமாகத் தேர்ந்து கொள்ளுதலின் வல்லமையில். (iv.) ஒழுக்க இயல்பில், சரி மற்றும் தவறு ஆகியவை பற்றிய கருத்தறிவில். (v.) ஆளுகையில். ''அவன் ஆளக் கடவன்''[4] என்ற சொற்றொடர் அவனது "குடியேற்றப் பண்பாக" உள்ளது. இது அவனுக்குப் பூமியில் அவனது இயற்பெயரைத் தருகிறது, மற்றும் அதன் எல்லா விளைவு களையும் தருகிறது. இது பொருள் படைப்பை அதன் ஒழுக்கம் சார்ந்த அர்த்தத்தினால் உடுத்துவிக்கவும் செய்கிறது: இதன் முடிவு மனிதனாக உள்ளான், அவனுடைய மிக மேலான முடிவு தேவனாக இருக்கிறார்.

படைப்பு பற்றிய பதிவில் ஒன்று அல்லது இரண்டு அம்சங்கள் விசேஷக் குறிப்பிடுதலுக்குத் தகுதியானவைகளாய் உள்ளன. (1) அறிவியலில் நிலைநாட்டப்பட்ட விளைவுகளுடனான இதன் குறிப்பிடத் தக்க இசைவு; அதில் ஒரு தொடக்கம் இருந்தது; ஒழுங்கமைவுக்கு முன் அந்தப் பெருங் குழப்பம் இருந்தது; படைப்பு என்பது ஒரே வேளையில் (எல்லாம்)

நடைபெற்றதாயிராமல் ஒன்றன் பின் ஒன்றாக நடைபெற்றதாயிருந்தது; இது படிப்படியான வளர்ச்சியினால் செயல்பட்டது; இந்தப் படிப்படியான வளர்ச்சி என்பது தாழ்ந்தவற்றிலிருந்து உயர்ந்தவற்றிற்குச் சென்றது; மற்றும் கடைசியாக, வரிசையான படைப்புகளின் ஒழுங்கமைவைப் பொறுத்த அளவில் பொதுவான உடன்பாடு காணப்பட்டது. ஆதியாகமத்தின் முதல் அதிகாரம் ஒரு கற்பனைப் பணியாக உள்ளதா? அறிவியல் (வளர்ச்சி) அற்ற காலத்தில் டார்வின் அல்லது டின்டால் அல்லது ஹக்ஸ்லீ என்பவர்கள் இவ்வளவு நன்றாய்க் கற்பனை செய்திருப்பார்களா? (2) இது கண்டிப்பாக ஒரு வரலாறாயிருப்பதில்லை. வரலாறு என்பது தகவலுக்கான மனித ஆதார மூலங்களைப் பயன்படுத்துகின்றது; இதில் வாய்மொழிப் பாரம்பரியங்கள், எழுதப்பட்ட சட்டங்கள் மற்றும் பதிவேடுகள், பழங்கால நினைவுச் சின்னங்கள் ஆகியவை அடங்கும். மனிதன் பூமியில் தோன்றியதற்கு முற்பட்ட காலத்தை எந்தப் பாரம்பரியமும் சென்றடைய முடிவதில்லை. இது ஒரு வெளிப்படுத்துதலை, இயற்கைக்கு அப்பாற்பட்ட ஒரு வெளிப் படுத்துதலைக் கொண்டிருக்க வேண்டும். வேதாகமம் இவ்வாறே தொடங்கி, இவ்வாறே முடிகின்றது. அறியப்படாத கடந்த காலமும், அறியப்படாத எதிர் காலமும், வேதாகமத்தை தொடங்குவதும் முடிப்பது மான தரிசனங்களில் வெளிப்படுத்தப்பட்டு நிலைநிற்கின்றன.

3. பாவத்தின் தொடக்கம் (ஆதி. 2:4-3:24).—ஆதி. 1:1-2:3 வசனப் பகுதியானது படைப்பைப் பற்றிய ஒரு பொதுவான விவரத்தைக் கொடுக்கின்றது. இந்தப் பகுதியானது மனிதனைப் பற்றி அதிகம் குறிப்பான விவரத்துடன் முக்கியமானவற்றை மீண்டும் எடுத்துரைக்கின்றது. முதல் பகுதியில், மனிதன் உட்பட்ட இயற்கையே ஆய்வுப் பொருளாக உள்ளது. இயற்கை யாவும் தேவனைத் தனது எல்லையற்ற மதிநுட்பமான ஆதார மூலமாகக் கண்டறிந்தது. இரண்டாவது பகுதியில் மனிதன் என்பவன் மாபெரும் ஆய்வுப் பொருளாய் இருக்கிறான். அவன் தன்னைப் படைத்த வரின் சாயலில் இருக்கின்ற காரணத்தினால் படைப்பின் கிரீடமாகவும் ஆள்பவனாகவும் தனது உண்மையான உறவுமுறையில் இங்கு முன் வைக்கப்பட்டுள்ளான்.

அ. வரலாற்றில் மிக முந்திய நிலை.—இங்கு நாம் தக்க வரலாற்றில் உள் நுழைகின்றோம். வெளிப்படுத்துதல் என்பது அறிவிற்கான மனித ஆதாரக் கூறுகளைப் பயன்படுத்தலாம். வரலாற்றில் மிக முந்திய நிலை பற்றிய நமது அறிவு பின்வரும் நான்கு விஷயங்களில் விரிவாக்கம் அடைகின்றது: (1) மனிதனின் தங்குமிடம். இது ஏதேன் தோட்டமாயிருந்தது. ஐப்பிராத்து மற்றும் இதெக்கேல் (டைகிரீஸ்) என்ற நன்கறியப்பட்ட இரு நதிகள் தென்மேற்கு ஆசியாவைச் சுட்டிக்காட்டுகின்றன. அறிவியல் ஆராய்ச்சி யினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ள, விரிவாய்ப் பரவியுள்ள பாரம்பரிய மானது காகேஸஸ் (மலையின்) பகுதியின் தெற்கில் உள்ள உயரமான நிலப்பகுதியே (மனித) இனத்தின் தொட்டில் என்று சுட்டிக்காண்பிக்கிறது. (2) சமுதாயம். மனிதன் தனிமையாய் இருப்பதற்கென்றோ அல்லது விலங்குயிர்களில் மிகவுயர்ந்த இனத்துடன் கூட உண்மை (குடும்பத்) தோழமையைக் காண்பதற்கென்றோ படைக்கப்படவில்லை. அவன்

இருத்தலுக்கான உயர்ந்த (நோக்க) முடிவுகள் அவனது சொந்த இனத்திலும் குடும்ப வாழ்விலும் மட்டுமே சாதிக்கப்பட வேண்டியவையாக உள்ளன. ஏவாள் படைக்கப்பட்ட விஷயமானது ஒருமைப்பாட்டின் இன்றியமையாமையையும் (மனித) இனத்தின் சமத்துவத்தையும் போதிக்கின்றது. (3) தொழில். மனிதன் ஒருக்காலும் சோம்பேறியாய் இருக்கும்படி அர்த்தப்படுத்தப்படவில்லை. சோம்பேறித்தனத்தில் சக்திகள் துருப்பிடிக்கின்றன, ஒழுக்கங்கள் சிதைவடைகின்றன. ஆகையால், அவன் தோட்டத்தைப் பண்படுத்தி அதைக் காவல் செய்யும்படி அங்கு வைக்கப்பட்டான். (4) ஒழுக்க நிலை. வரலாற்றாளர், தேவனுடன் (மனிதன்) முழுமையாக ஐக்கியப்பட்டிருந்த நிலையை, முற்றிலுமான ஒன்றுமறியாத் தன்மை மற்றும் நம்பிக்கையின் ஆசீர்வாதத்தின் நிலையைச் சித்தரிக்கின்றார்; இது பெரிய அளவில் சுயாதீனமானதாயுள்ளது; “நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம்.”[5]; இது, “ஆனாலும் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்க வேண்டாம்”[6] என்ற ஒரே ஒரு கட்டுப்பாட்டுடன் இருந்தது. சுயாதீனத்திற்கு வரையரைகள்/எல்லைகள் இருக்க வேண்டும். மனிதன் சட்டத்தை மதிக்க வேண்டும், மற்றும் உயர்வான நன்மைக்காக சுய நல விருப்பத்தைக் கீழ்ப்படுத்த வேண்டும். பூமியில் இராஜரீகம் செய்பவர் என்ற வகையில் உள்ள தேவனுக்கு அவன் கீழ்ப்படிய வேண்டும்.

ஆ. மீறுதல்.—பாவமும் பாவி ஒருவனும் ஏற்கனவே அண்டத்தில் உள்ளனர். இவ்விருவரும் ஏதேனுக்குச் செல்லத் தங்கள் வழியைக் கண்டறிகின்றனர். பாம்பு சாத்தானின் அடையாளமாக அல்லது முகவராகத் தோன்றுகின்றது (இ.வ. யோவா. 8:44; வெளி. 12:9; 20:2). சோதனையின் ஓட்டத்தையும் பாவத்தையும் கவனியுங்கள். மறைமுகமாய் உட்புகும் கேள்வியொன்று உள்ளது: “... புசிக்க வேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டோ?” பின்பு ஒரு அவதூறான பொய் வருகிறது: “நீங்கள் சாகவே சாவதில்லை.”[7] பிறகு தேவன்மீது நம்பிக்கையின்மை, தவறான விருப்பம், தவறான தேர்ந்து கொள்ளுதல், வெளிப்படையான கீழ்ப்படியாமை ஆகியவை மிக விரைவாக ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்ந்தன. தேவனிடத்திற்குத் திரும்புவது இவை எல்லாவற்றிலும் இருந்து திரும்புதல் ஆகின்றது. சத்தியத்தை விசுவாசித்தல், தேவனிடத்தில் நம்பிக்கை கொள்ளுதல், சரியான விருப்பம், சரியான தேர்ந்து கொள்ளுதல், தேவனுடைய சித்தத்திற்கு வெளிப்படையாகக் கீழ்ப்படிதல்.

இ. தண்டனை.—குற்றவுணர்வு மற்றும் விலகியிருத்தல் என்ற அவசியமான விளைவு இயல்பாகவே அங்கு பின் தொடருகின்றது; ஆதாமும் ஏவாளும் “தங்களை ஒளித்துக் கொண்டார்கள்”[8] அங்கு சட்ட ரீதியான தண்டனையும் (அவர்கள் மீது) வீழ்ந்தது: பெண்ணின்மீது வேதனைகள் பெருகப் பண்ணியது; ஆணின்மீது கடின உழைப்பு பெருகியது; இருப்பினும் இருவருக்கும் சர்ப்பத்தின் தலையை நசுக்கும் (ஸ்திரீயின்) வித்து பற்றிய வாக்குத்தத்தம் ஒரு மிக உயர்வான நம்பிக்கையாகக் கொடுக்கப்பட்டது. ஆதி. 3:15ல், இழந்து போகப்பட்ட ஏதேன் தோட்டத்தின் நுழைவாயிலேயே கிறிஸ்துவின் மீட்பு ஊழியம் பற்றிய

மங்கலான முதல் தீர்க்கதரிசனத்தை நாம் பற்றிப் பிடிக்கின்றோம்.

4. படைப்பு மற்றும் வீழ்ச்சியின் எதிரொலிகள்.—இங்கு பதிவு செய்யப்பட்ட மாபெரும் உண்மைகளின் சுவடுகள் பழங்கால இலக்கியங் களில் அடங்கியுள்ளன.[9] ஆனால் அச்சுவடுகள் தேவ நம்பிக்கையற்ற கருத்துக்களினால் நாசம் செய்யப்பட்டுள்ளன, மற்றும் இவை ஏவுதலின் மிக உன்னதமான பதிவினின்று வெகு தூரம் கீழே தாழ்ந்துள்ளன. "படைப்பின் வரலாறு போன்றே வீழ்ச்சியின் வரலாறும் உலகம் முழுவதிலும் நடமாடி யுள்ளது. தேவ நம்பிக்கையற்ற இனங்கள்/நாடுகள் இதை வடிவத்திலும், வண்ணத்திலும் ஆவியிலும் முற்றிலுமாக ஒருபோதும் மாறாவிட்டாலும், இதை மறு நடவு செய்து, தங்கள் புவியியல், தங்கள் வரலாறு, தங்கள் புராணங்கள் ஆகியவற்றுடன் நீங்கள் அடையாளம் கண்டு கொள்ளாத அளவுக்கு கலந்து விட்டனர். இருப்பினும் இங்கு, பிரமாணத்தில் இது உலகளாவிய மனிதப் பண்பை, உலகளாவிய உண்மையை, மற்றும் படைப்பின் வேதனைக் குரல்களை, கிறிஸ்து இயேசுவுக்குள் இருக்கிற மீட்பை, மற்றும் எடுத்துரைக்கப்பட்டதன் நேரடியான/நேர்ப்பொருளான சத்தியத்திற்கு அவர்களின் சாட்சியத்தில் ஒவ்வொரு மனிதரும் (செய்யும்) இரகசிய உடன்படிக்கையின் இருதயம் போன்ற மையப் பகுதியைப் பாதுகாக்கின்றது."[10]

5. பலியின் தொடக்கம் *(ஆதி. 4:1-15).*—இந்த முதல் மனித குடும்பத் திற்கு(ள்) (பிறந்து) வந்த பிள்ளைகள் சூரிய ஒளியையும் நிழலையும் கொண்டு வந்தனர். சகோதரர்கள் தங்கள் தொழில்களிலும் தாங்கள் கொண்டு வந்த காணிக்கைகளிலும் மாறுபட்டனர். அம்மனிதர்களுக் குள்ளாகவே ஆழமான வேறுபாடு ஒன்றிருந்தது. காயீன் நிலத்தை (உழுது) பயிரிடுகிறவனாயிருந்தார், ஆபேல் ஆடுகளை மேய்ப்பவராயிருந்தார். ஒருவர் (காயீன்) நிலத்தின் கனிகளை அதாவது நன்றி காணிக்கை யொன்றைக் கொண்டு வந்தார். இன்னொருவர், மந்தையின் முதல் ஈற்றுக்களை ஒரு பாவ நிவாரண பலியாகக் கொண்டு வந்தார். காயீனின் காணிக்கையானது ஏதேனில் ஆதாமும் ஏவாளும் ஒன்றுமறியாமையில் (முன்பு) அளித்திருந்திருக்கக் கூடியதைப் போன்றதாக மட்டுமே இருந்தது. இது பாவத்தின் கருத்தை, மன்னிப்புக்கு ஜெபத்தை வெளிக் காண்பிக்க/ உணர்த்தவில்லை. மேலும், காயீன் தனது தம்பி ஆபேலைக் காட்டிலும் விசுவாசத்தில் குறைவுபட்டார் (எபி. 11:4). அவருடைய ஆவி ஆபேலின் ஆவிக்கு நேரெதிரான வகையில், அவிசுவாசமும், சுயநீதியும், சுயசித்தமும் உடையதாயிருந்தது. இது ஏதேன் தோட்ட வாயிலில் பரிசேயன் மற்றும் ஆயக்காரன் நிகழ்ச்சியாக இருந்தது. காயீனின் பொறாமை நிறைந்த வெறுப்பானது கொலை செய்யும்படி அவரை இயக்கியது; ஆபேலின் தேவ நம்பிக்கையானது அவரை இரத்த சாட்சியாக ஆக்கியது: ஒருவர் இரத்தக் கறைபடிந்த மனிதர்களின் நீண்ட வரிசையில் முதல்வரானார்; இன்னொருவர், தேவனுடைய வீரர்களின் வல்லமையான வரிசையில் முதல்வரானார்.

6. காயீனின் வம்சா வழி *(ஆதி. 4:16-26).*—காயீனுக்கு ஏனோக் என்று ஒரு மகன் பிறந்தான், மற்றும் அவர் (காயீன்) ஏனோக் என்று ஒரு நகரைக்

கட்டியெழுப்பினார். தந்தையைப் போன்றே மகனும் இருந்தார். காயீனின் பரம்பரையில் வந்தவர்கள் இடர்நிறைந்த பணியை ஏற்கும், தேவ பக்தியற்ற இனமாயினர். இந்த வம்சா வழியில், காயீன், ஏனோக்கு, ஈராத், மெகுயவேல், மெத்தூசவேல், லாமேக் ஆகியோர் இருந்தார்கள். பக்கவம்சா வழிகளும் இருந்தன என்பதில் சந்தேகம் எதுவும் இல்லை. இதன் முடிவில் நிற்கிற லாமேக்கின் குடும்பத்தில் இந்த வம்சா வழியின் பண்பு உச்ச நிலையடைந்த காரணத்தால் இது கொடுக்கப்படுகிறது. லாமேக்கு இரு மனைவிகளைக் கொண்டிருந்தார், அவர்கள் அவருக்கு மூன்று மகன்களைப் பெற்றார்கள்: யூபால், ஒரு இசைக் கலைஞர்; யாபால், ஒரு மந்தை மேய்ப்பவர்; மற்றும் தூபால் காயீன், ஒரு உலோகத் தொழிலாளி. லாமேக்கின் ''பட்டயப் பாடலில்'' காண்பிக்கப்பட்டபடி, காயீனின் வன்முறையே லாமேக்கில் மீண்டும் வருகிறது:

> "ஆதாளே, சில்லாளே, நான் சொல்வதைக் கேளுங்கள்;
> லாமேக்கின் மனைவிகளே, என் சத்தத்துக்குச் செவி கொடுங்கள்;
> எனக்குக் காயமுண்டாக ஒரு மனுஷனைக் கொன்றேன்;
> எனக்குத் தழும்புண்டாக ஒரு வாலிபனைக் கொலை செய்தேன்"
> (ஆதி. 4:23).

சுருக்கமான (இப்)பதிவேட்டிலிருந்து இரு பாடங்கள் பொறுக்கி யெடுக்கப்படலாம்: (1) பொருளாதாய நாகரீகமானது தெய்வீகக் கொடையாய் இராமல், முற்றிலும் மனித முன்னேற்றமாகவே உள்ளது. (2) நாகரீகம் என்பது மதமாகவோ அல்லது அதற்குப் பதிலீடாகவோ இருப்பதில்லை. காயீனின் வம்சா வழியானது நமக்குப் பின்வரும் முதல் விஷயங்களைத் தருகின்றது: கொலை, நகரம், பல பெண்களைத் திருமணம் செய்தல், இசைக் கலைஞர், உலோகத் தொழிலாளி, கவிதை; ஆனால் இது "தேவனுடன் சஞ்சரித்த" மனிதர்கள் பற்றி ஒரு உதாரணத்தைக் கூடத் தரவில்லை.

7. சேத்தின் வம்சா வழி (ஆதி. 5).—சேத்திற்குப் பின்பு ஆதாம் மற்ற மகன்களைப் பெற்றிருப்பார் என்பதில் ஐயத்திற்கிடமில்லை, அவர்கள் மூலமாக மற்ற வம்சா வழிகள் ஏற்பட்டிருக்கும். இது (சேத்தின் சந்ததி) இதன் மிகச் சிறந்த பண்பினங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகிற மற்றும் இந்த இனமானது முழுநிறைவாக்கப்படுவதற்குக் காரணமான நபரான நோவாவுக்கு வழிநடத்தியதாலும், மற்றும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட வித்தானது (இந்த சந்ததியில்) வர இருந்ததாலும் சேத்தின் சந்ததி (வேதாகமப் பதிவேட்டில்) பாதுகாக்கப்பட்டது. இந்த வம்சா வழியானது பின்வரும் பத்து பெயர்களைக் கொண்டுள்ளது: ஆதாம், சேத், ஏனோஸ், கேனான், மகலாயேல், யாரேத், ஏனோக், மெத்தூசலா, லாமேக்கு, நோவா. முதல் பார்வையில் இது, பிறப்புகள், வயது மற்றும் மரணங்கள் பற்றிய ஒரு குடும்பத்தின் எளிய பதிவேடு போன்று காணப்படுகிறது. மற்றும் இது காயீனின் வம்சா வழியில் வந்த பெயர்களை சில இடங்களில் ஒருமையில் ஒத்துள்ளதாகவும் காணப்படுகிறது. ஆனால் கூறப்பட்ட குறைவான விஷயங்கள் (கூட) அந்த (காயீனின்) வம்சா வழியுடன் மிகவும்

மாறுபடுகின்றன. சேத் மற்றும் ஏனோள் ஆகியோரின் நாட்களில் "மனுஷர் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ள ஆரம்பித்தார்கள்"[11] "ஏனோக்கு தேவனோடே சஞ்சரித்துக் கொண்டிருக்கையில், காணப் படாமற் போனான்; தேவன் அவனை எடுத்துக் கொண்டார்."[12]; இது தெய்வீக ஐக்கியத்தையும் ஆசீர்வதிக்கப்பட்ட அழியாமைமையையும் சிறப்பாய்க் குறிப்பிடும் கூற்றாகும். நோவா "நீதிமானாயிருந்தார்" மற்றும் அவர் "தேவனோடே சஞ்சரித்துக் கொண்டிருந்தார்."[13] பதிவேடு மிகக் குறைவாயிருப்பினும், காயீன் மற்றும் சேத் ஆகியோரின் வம்சா வழியினரின் சித்தரிப்புகளில் மிகவும் வேறுபடுத்துவதாயுள்ளது.

8. விசுவாச விலக்கமும் ஜலப்பிரளயமும் *(ஆதி. 6:1-8:14).—*

*அ. ஜலப்பிரளயத்தின் பாரம்பரியங்கள்.—*இந்த அதிகாரங்கள் மாபெரும் வரலாற்று நிகழ்ச்சியொன்றை விவரிக்கின்றன என்பதில் சந்தேகம் எதுவுமில்லை. நாம் கண்டுள்ளபடி, ஏதேனின் எதிரொலிகளும் வீழ்ச்சியும் பழங்கால இலக்கியங்கள் பலவற்றில் காணப்படுகின்றன. ஆனால் ஜலப் பிரளயத்தைப் போன்று வேதாகமத்தின் வேறெந்த வரலாறும் இவ்வளவு முழுமையாக ஆதாரம் அளிக்கப்படுவதில்லை. இது ஒரு ஆழமான, நீடித்து நிற்கிற மனப் பதிவை விட்டுச் சென்றுள்ளது. இதன் பாரம்பரியங்கள் துரானியன், ஹெமெட்டிக், செமிட்டிக் மற்றும் ஆர்யன் ஆகிய நான்கு மாபெரும் இனங்களின் மத்தியில் காணப்படுகின்றன. இவைகள் மாபெரும் அளவில் மாறுபடுகின்றன: (இவற்றில்) சில, பல தெய்வ வணக்கத்தால் முற்றிலுமாக உருக்கெடுக்கப்பட்டுள்ளன; ஆனால் பேழை தங்கிய இடத்திற்கு வெகு அருகாமையில் இருந்தவைகள் மிகவும் நுண்ணியவையாகவும், மிகவும் சரியானவையாகவும் இருக்கின்றன. சீனர்கள், இந்துக்கள், கல்தேயர்கள், எகிப்தியர்கள், கிரேக்கர்கள், செல்த்தியர்கள், லேப்பியர்கள், எஸ்கிமாவ்க்ஸ்கள், மெக்சிக்கேயர்கள் மற்றும் மைய, தெற்கு அமெரிக்கர்கள் யாவரும் பாரம்பரியத்தைப் பாதுகாத்துள்ளனர். இவற்றில் கல்தேயர்களின் பாரம்பரியம் மிகவும் புகழ் பெற்றதும், வேதாகம விவரத்திற்கு மிகவும் அண்மையில் உள்ளதுமாக இருக்கின்றது. இது இரு வடிவங்களில் நிலவுகின்றது: (1) கி.மு. 260ல் கிரேக்க மொழியில் எழுதிய பாபிலோனிய ஆசாரியரான பெரோஸஸ் என்பவரின் பாரம்பரியம். (2) இருபத்து ஐந்து நூற்றாண்டுகளாகப் புதையுண்டு கிடந்த பின்பு 1872ல் நினிவேயின் சிதிலங்களில் இருந்து தோண்டியெடுக்கப்பட்ட பழங்காலக் கூம்பு வடிவ எழுத்து முறை கொண்ட (கல் அல்லது மண்) பலகைகள்.[14]

*ஆ. ஜலப்பிரளயத்திற்கான ஒழுக்க ரீதியான காரணங்கள்.—*ஜலப் பிரளயமானது வெறுமனே உலகப் பொருள் ரீதியான பேரழிவாய் மட்டும் இருக்கவில்லை. இது மிக மேன்மை வாய்ந்த ஒழுக்க நிகழ்ச்சியாக இருந்தது. ஆதி. 6:5ஐ வாசியுங்கள். சமுதாயம் ஒழுக்க ரீதியான விஷயங்களில் நம்பிக்கையற்ற அளவுக்கு அழுகிய நிலையில் இருந்தது. விசுவாச விலக்கத் திற்கான காரணங்கள், தேடுவதற்கு வெகு தொலைவில் இருந்ததில்லை. ஆதி. 6:1-5ஐ வாசியுங்கள். காயீன் மற்றும் சேத் ஆகியோரின் இரு வம்சா வழிகளையும் பற்றிக் கூறப்பட்டுள்ளது என்ன என்பதை நினைவில்

வையுங்கள். சேத்தின் வம்சா வழியினர் ("தேவ குமாரர்கள்") காயீனின் வம்சா வழியினருடன் ("மனுஷ குமாரத்திகள்") கலப்பு திருமணம் செய்து கொண்டதால் முழுமையான சீர் குலைவு விளைந்திருக்கலாம்.[15] தீமையுடனான எல்லா உடன்பாடுகளிலும் உள்ளது போன்றே அனுகூலங்கள் யாவும் தவறான பக்கமே இருந்தன. விசுவாச விலக்கத்தின் விளைவாக (மனித) இன அழிவு ஏற்பட்டது. மிக உச்சமான குற்றம் மிக உச்சமான தண்டனையை வருவிக்கிறது. கடினப்பட்ட (இருதயம் கொண்ட) குற்றவாளியை நாம் ஆயுள் தண்டனை கொடுத்துச் சிறையில் அடைக்கின்றோம் அல்லது அவன் சாகும் வரை தூக்கில் இடுகின்றோம். ஜலப்பிரளயத்திற்கு முன்பிருந்த மக்கள் தங்கள் குற்றங்களுக்காகப் பூமியிலிருந்து துடைத்தெறியப்பட்ட கடைசி மக்களாய் இருந்ததில்லை. ஜலப்பிரளயத்தின் தண்ணீரும், சோதோமை வேகமாய்த் தாக்கி என்றென்றுமாய் அழித்த அக்கினியின் மழையும், கொள்ளை நோயின் சுவாசமும், யுத்தத்தின் கொந்தளிப்பும், நியாயத்தீர்ப்பின் தெய்வீக செய்தியாளர்களாய் இருந்துள்ளன.

இ. ஜலப்பிரளயத்தின் வழிமுறைகள்.—பூமியைப் படைத்தவர் அதன் அழிவுக்கான ஏராளமான வழிமுறைகளைக் கட்டுப்படுத்துகின்றார். மனித யுகத்திற்கு முன்பு இந்த பூமியானது மீண்டும் மீண்டுமாக மழைகளினால் வெள்ளம் சூழப்பட்டு, கடல்களுக்கு அடியில் அமிழ்ந்திருக்க வேண்டும். மகா ஆழத்தின் ஊற்றுக்கண்களும் திறவுண்டன, மற்றும் வானத்தின் மதகுகளும் திறவுண்டன (ஆதி. *7:11*). மனிதனின் தோற்றத்திற்கு முன் அடிக்கடி நடைபெற்ற விஷயமானது ஒரு மாபெரும் ஒழுக்கத்தின் நோக்கத்திற்காக தேவனுடைய அருளிரக்கத்தின் கீழ் சுலபமாக நடைபெற்றிருக்கலாம். மேற்கு ஆசியாவின் (சில) பகுதிகள் இன்னமும் கடலின் கீழ் உள்ளன, மற்றும் பிற பகுதிகளின் நிலைத்த பாகமானது அவற்றை மூழ்கடித்து, ஆயிரக்கணக்கானவற்றைப் பூமியிலிருந்து துடைத்தெறியும்.

ஈ. ஜலப்பிரளயத்தின் கால அளவும் விரிவெல்லையும்.—நாற்பது நாட்கள் அளவாக மழை பெய்தது. தண்ணீரானது நூற்றைம்பது நாட்கள் தொடர்ந்து பெருகிக் கொண்டிருந்தது, மற்றும் அது வற்றுவதற்கு இருநூற்று இருபத்தி ஐந்து நாட்களாயிற்று. இது, ஒன்று உலகளாவியதாக இருந்தது அல்லது மிகப் பெரும்பாலும் மனித இனம் பூமியின்மீது எல்லா இடங்களிலும் பரவுவதற்கு முன்பு மனித இனத்தின் வரலாற்றில் தொடக்க காலத்தில் நடந்திருக்கலாம். இவ்விரண்டில் எந்தக் கண்ணோட்டமும் உலகளாவிய பாரம்பரியத்தை விவரிப்பதாயிருக்கும்.

உ. நோவாவும் ஜலப்பிரளயமும்.—சில பெயர்கள் மாபெரும் நிகழ்வுகள் நடந்த சகாப்தங்களுடன் எப்பொழுதும் இணைவு படுத்தப்பட்டுள்ளன. நேரு பஞ்சசீலக் கொள்கையுடன், வல்லபாய் பட்டேல் ஒருமைப்படுத்துதலுடன், மோசே வனாந்திர யாத்திரையுடன்; அது போலவே நோவா ஜலப்பிரளயத்துடன் (இணைவு படுத்தப்படுகின்றார்). ஆதி. *6:9; 7:1*; எசே. *14:14* ஆகிய வசனப் பகுதிகளை வாசியுங்கள். நோவா தேவனுடைய மனுஷனாக, விசுவாச விலக்க காலத்தில் வீரத்துவத்தின் உருவகமாக இருந்தார். பலிபீடத்திற்குப் பின் பலிபீடம் சிதைந்து நொறுங்கி

யிருந்தன. ஆனால் நோவாவின் பலிபீடத்தின் மீதியிருந்த அக்கினியோ வெள்ளத்தினால் அணைக்கப்படும் வரை தொடர்ந்து (எரிந்து கொண்டு) இருந்தது. தனியே நிலை நிற்பதற்குத் தைரியம் வேண்டியிருக்கிறது. ஆனால் ஒரு சிலர் மட்டுமே பின்பற்றத் துணிந்த பொழுது நோவா வழிநடத்தத் துணிந்தார். நோவாவின் முழுமையான கீழ்ப்படிதலும் பாதுகாப்பும், (மக்கள்) இனத்தின் நம்பிக்கையற்ற மோசம்போன நிலையும் அழிவும் - இவை போன்றவைகள் மனதில் ஆழப்பதியும் பாடங்களாக உள்ளன. நோவா நூற்றிருபது ஆண்டுகளாகப் பிரசங்கித்து வீரத்துவமாக வாழ்ந்தார். அவருடைய உழைப்புகளுக்குப் பலனாக ஏழு பேர் மாத்திரமே மனம் மாறினார்கள்: அவரது மனைவி, மற்றும் அவரது மகன்கள் சேம், காம், யாப்பேத் மற்றும் அவர்களின் மனைவிகள். இருப்பினும், நோவா வெற்றி பெற்றவராகவே இருந்தார்: அவர் தமது கடமையைச் செய்தார், மற்றும் அவர் பெரு வெள்ளத்தை விட்டு அப்பால் பயணம் செய்தார்.

குறிப்புகள்

[1]டீன் இவ்விடத்தில் "wrought" என்று எழுதியிருந்தார். [2]ஆதி. 1:1. [3]ஆதி. 1:2. [4]ஆதி. 1:26. [5]ஆதி. 2:16. [6]ஆதி. 2:17. [7]ஆதி. 3:1, 4. [8]ஆதி. 3:8. [9]கெய்க்கியின் "Hours with the Bible," என்ற நூலில் Vol. I, Chap. 8ல் காணவும். [10]Delitzsch, quoted in Smith's O.T. Hist., p. 29.

[11]ஆதி. 4:26. [12]ஆதி. 5:24. [13]ஆதி. 6:9. [14]கெய்க்கியின் "Hours with the Bible," என்ற நூலில் Vol. I., Chap. 13ல் காணவும். [15]ஆதி. 6:2.

2

ஜலப்பிரளயத்திற்குப் பிந்திய காலம், கி.மு. 2348–1921

ஜலப்பிரளயத்திலிருந்து ஆபிரகாம் அழைக்கப்பட்டது வரை

ஆதி. 8:10 -11:26

1. இரண்டாம் தொடக்கம் *(ஆதி. 8:15-9:29).—*பேழையானது மனித இனத்தின் இரண்டாம் தொட்டிலாயிற்று. அதிலிருந்து நோவாவும் அவரது குடும்பத்தாரும் ஒரு புதிய தேர்வு நிலைக்கு முன் சென்றனர்.

*அ. பலி பீடமும் உடன்படிக்கையும்.—*நோவா சுத்தமான மிருகங்களின் ஒவ்வொரு வகையிலும் எவ்வேழு ஜோடிகளைப் பாதுகாத்து வைத்திருந்தார். பேழையை விட்டு வெளியேறியதும், சுத்தமான ஒவ்வொரு மிருகத்திலிருந்தும் பறவையிலிருந்தும் பலி செலுத்துவதற்காகப் பலிபீடம் ஒன்றைக் கட்டியெழுப்பியதே அவரது முதல் நடவடிக்கையாயிருந்தது. அவரது ஆராதனையை ஏற்றுக்கொண்ட வகையில், தேவன் நோவாவுடன் ஒரு உடன்படிக்கையை ஏற்படுத்தி, அதைத் தம்முடைய வாக்குத்தத்தத்தின் வண்ணமிக்க வானவில்லினால் முத்திரையிட்டார். அந்த உடன்படிக்கையின் முக்கிய கருத்துக்கள் பின்வருமாறு: (1) இனி வெள்ளப் பெருக்கு இராது; (2) மனிதன் பலுகிப் பெருகி பூமியை நிரப்ப வேண்டும்; (3) விலங்குகளை உணவாகக் கொள்வது உறுதிப்படுத்தப்பட்டது; (4) கொலைக்கு மரண தண்டனை என்பது மனித வாழ்வின் பரிசுத்த தன்மையை அமுல்படுத்தியது.

*ஆ. நோவாவின் மகன்களுடைய அடைவிடம்.—*நோவாவின் வரலாற்றில் முடிவு நிகழ்ச்சிகள் அவர் மதுபானத்தினால் மயக்கமடைதல், காமின் மரியாதையற்ற வெட்கக்கேடான செயல், மற்றும் சேம், யாப்பேத் ஆகியோரின் அதிக தன்னடக்கமான/நாகரிகமான நடக்கை ஆகியவைகளாய் உள்ளன. இதன் இயல்பான நேர்மாறுள்ள செயல்கள் அவர்களின் மாறுபட்ட அடைவிடங்கள் பற்றிய நோவாவின் தீர்க்கதரிசனச் சித்தரிப்புகளின் நிகழ்ச்சியாயின: (1) கானானுக்கு சாபம் (காமின் சந்ததிக்கு), (2) சேமுக்கு ஆசீர்வாதம், (3) யாப்பேத் பெருக்கமடைதல்.

2. இனங்களின் தொடக்கம் *(ஆதி. 10).—ஆதியாகமம் 10ம் அதிகாரம் இனங்களின் இயல் மீதான மிகப் பழமையான ஆதாரம்/அதிகாரமுடைமை யாக உள்ளது. இது நோவாவின் மகன்களுடைய சந்ததியாரையும் அவர்களின் பரவுதல்களையும் பற்றி (விவரம்) தருகின்றது. (1) காமுக்கு நான்கு மகன்கள் பிறந்தனர், இவர்கள் ஐப்பிராத்து நதியின் கீழ்ப்பாகத் திலும், நைல் நதியின் சமவெளிகளிலும் குடியமர்ந்தனர். ஹேமாட்டிக்/ காமின் இனம் என்பதே மிகத் தொடக்க கால நாகரிகங்களாய் இருந்தன. (2) சேமின் ஐந்து மகன்கள் தென்மேற்கு ஆசியாவில் குடியமர்ந்தனர். அவர்கள் ஐப்பிராத்தில் இருந்த காமின் தொடக்க கால இனத்தவரை வெற்றி கொண்ட கல்தேயர்களின் முன்னோர்களாய் இருந்தனர்; அசீரியர் கள், சீரியர்கள், அரபியர்கள் மற்றும் எபிரெயர்கள். இவர்கள் பேரரசுகளின் அடுத்த மாபெரும் குழுக்களைத் தோற்றுவித்தனர். (3) யாப்பேத் ஏழு மகன்களைப் பெற்றார், இவர்களிலிருந்து மேதியர்கள், கிரேக்கர்கள், ரோமர்கள் மற்றும் ஐரோப்பாவின் தற்காலத்திய இனத்தவர்கள் யாவரும் உதித்தனர். அவர்கள் பரவலாகச் சிதறி, ஆயிரக்கணக்கான ஆண்டுகள் மறைவான வாழ்க்கை வாழ்ந்தனர், ஆனால் இருபத்து நான்கு நூற்றாண்டு களாக இவர்கள் உலகை ஆளும் இனங்களாய் இருந்தனர்.*

3. பாபேல் கோபுரமும் பாஷைகளின் குழப்பமும் *(ஆதி. 11:1-9).— நூற்றாண்டுகள் கடக்கின்றன. மக்கள் தொகையானது ஐப்பிராத்து நதியின் கீழ்ப்பாகமான சிநெயார் பகுதியில் செறிவுடையதாயிருக்கத் தொடங்கு கிறது. அவர்கள் தங்களுக்குப் பெரும் பெயர் உண்டாக்குதல் மற்றும் சிதறிச் செல்வதை முன்கூட்டியே தவிர்த்தல் என்ற இரண்டு நோக்கங்களுடன் ஒரு மாபெரும் கோபுரத்தை (கட்டத்) தொடங்கினர். நோவாவுடன் தேவன் செய்து கொண்ட உடன்படிக்கையில் விவரிக்கப்பட்ட அவரது நோக்க மானது பூமியின்மீது அவர்களும், (அவர்களின்) மக்களும் பரந்து விரிய வேண்டும் என்பதாயிருந்தது. அவர்களின் பாவம் என்பது அவர்கள் (கட்டிய) கோபுரத்தில் அல்ல, ஆனால் அவர்களின் இருதயங்களிலேயே இருந்தது. தேவன் அவர்களின் பேச்சை (மொழியை) குழப்பமடையச் செய்ததன் மூலம் அவர்களின் நோக்கத்தைத் தோல்வியுறச் செய்தார், அது அவர்களைச் சிதறடித்தது; அதிலிருந்து பாபேல் என்றால் தாறுமாறு (மொழிக் குழப்பம்) என்றாயிற்று.*

4. சேமின் சந்ததியார் *(ஆதி. 11:10-26).—இவ்வசனங்கள் ஐந்தாம் அதிகாரத்தின் தொடர் பகுதியையும் வளர்ச்சி நிலையையும் கொண்டுள்ளன. அது ஆதாம் முதல் நோவா உள்ளடங்கலாக சேத்தின் வம்சா வழியைக் கொடுக்கிறது. இது சேமில் இருந்து ஆபிரகாம் உள்ளடங் களாக சேமின் வம்சா வழியைத் தொடர்ந்து தருகின்றது. ஒவ்வொரு வம்சா வழியும் பத்து பெயர்களை அடக்கியுள்ளன/கொண்டுள்ளன. இந்த வம்சாவழி/தலைமுறைப் பெயர் அட்டவணைகள் குடும்பப் பதிவேடு களை விட அதிகமான விவரங்களைக் கொண்டவைகளாய் உள்ளன. இவைகள் வேதாகம வரலாற்றின் அடிப்படையான நோக்கத்தை நெருக்க மாய் இணைக்கின்றன. உண்மையான மார்க்கத்தின் எழுச்சி மற்றும் வளர்ச்சி என்பவற்றைக் கண்டறிதலே அந்த நோக்கமாக உள்ளது. அந்த*

மேம்பாடானது விசுவாசத்தின் மனிதர்களாகவும் இருக்கின்ற வாக்குத் தத்தத்தின் வம்சா வழியைத் தொடருகின்றது. இந்த வம்சா வழியில் மங்கலாக தெரிகிற நம்பிக்கையின் நட்சத்திரமாகவும் தூரத்தில் தெரிகிற முடிவாகவும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மேசியா விளங்குகின்றார்; ஏனோக்கு, நோவா, ஆபிரகாம் ஆகியோர் (விசுவாசத்தில்) வீரமிக்க உருவங்களாய் இருக்கையில், அது இந்த முந்திய நூற்றாண்டுகளில் மங்கிய அளவிற்கு மேலாக உதிக்கின்றது.

3

முற்பிதாக்களின் காலம், கி.மு. 1921–1706

ஆபிரகாம் அழைக்கப்பட்டது முதல் எகிப்துக்கு இடம் பெயர்ந்தது வரை

ஆதி. 11:27-50:26

அறிமுகம்—எபிரெயர்களின் ஊழியம்.—மீட்பர் பற்றிய மங்கலான முதலாவது வாக்குத்தத்தத்தை, (மனித) இனத்திற்கான நம்பிக்கையின் ஒளிக்கதிரை நாம் (ஆதி. 3:15)ல் கண்டுள்ளோம். (ஆனால் இந்த) நம்பிக்கை யானது, ஜலப்பிரளயத்திற்கு முன்பிருந்ததும் (ஜலபிரளயத்திற்கு) காரணமுமாயிருந்த மோசம் போக்கும் செயல்களின் மத்தியில் ஏறக்குறைய மரித்துப்போன நிலையில் இருந்தது. பெருவெள்ளத்திற்குப் பிறகும் கூட வானமானது மீண்டும் ஒருமுறை இருள் படர்ந்ததாயிற்று. நைல் மற்றும் ஐப்பிராத்து பகுதிகளில் இருந்த தொடக்க கால நாகரீகங்கள் மற்றும் பேரரசின் இருக்கைகள் மிக இழிவான விக்கிரகாராதனைகளின் மையங்களாயின. ஏதோ ஓரிடத்தில், யாரோ ஒருவரால், மெய்யான ஒரே தேவனுக்கான ஒரு நிலைப்பாடு ஏற்படுத்தப்பட வேண்டும் அல்லது மனித இனம் *நம்பிக்கையற்ற வகையில்* இழந்து போகப்படும். இதுவே எபிரெயர் களின் மிக மேன்மையான ஊழியமாய் இருந்தது. சற்று காலத்திற்கு தேவன் காம் மற்றும் யாப்பேத்தின் இனங்களினூடாகக் கடந்து செல்கின்றார். அவர் மாபெரும் செமிட்டிக் (சேமின்) இனத்தையும் கூட அந்த இனத்தின் கல்தேயக் கிளையில் உதித்த ஒரு தனிக் குடும்பத்தைத் தவிர, அவ்வினத்தின் ஊடாகவும் கடந்து செல்லுகிறார். தேவனைப் பற்றிய அறிவை உயிருடன் காத்துக் கொள்வதற்காகவும் மற்றும் இறுதியாக, வாக்குத்தத்தம் பண்ணப் பட்ட "வித்தின்" மூலமாக *எல்லா* இனங்களையும் தேவனுடைய ஐக்கியத் திற்குத் திருப்பிக் கொண்டு வருவதற்காகவும் - இப்படிப்பட்டது தெய்வீக நோக்கமாய் உள்ளது - அவர் இவ்வாறு செய்கிறார். இது முதல், ஆர்வ நோக்கானது மனிதர்களின் மீதுள்ளதைக் காட்டிலும் நிகழ்ச்சிகளின்மீது அதிகமாய் மையப்படுத்தப்பட்டுள்ளது, *அவர்களில்* ஒரு சிலர் மட்டுமே தொடப்படுகின்றனர். பரிசுத்த வரலாற்றாளர், நூற்றாண்டுகளின் இடைவெளியை பெருநடையிட்டுக் கடக்கின்றார், அவர் நினைவு கூரத்தக்க நிகழ்ச்சிகளின் சிகரத்திலிருந்து சிகரத்திற்கு இவ்வாறு கடந்து செல்லுகின்றார். இந்த இடத்திலிருந்து, ஆர்வ நோக்கானது மனிதர்களில் மையம் கொள்ளுகிறது; வரலாற்றின் பிரதான ஓட்டமானது எபிரெயர்கள்

என்ற தனிப்பட்ட இனத்தளவுக்குக் குறுகிவிடுகிறது, மற்றும் இது தொடர்ந்து முழுமையாக வளர்ந்தேறுகிறது. இந்தக் கால கட்டத்தின் வரலாறானது எபிரெயர்களின் யாத்திரைப் பிதாக்களான ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு மற்றும் யோசேப்பு என்ற மாபெரும் முற்பிதாக்கள் நால்வரின் வரலாற்றைப் பின்பற்றித் தொடருகின்றது.

I. ஆபிரகாமின் வாழ்வு. (*ஆதி. 11:27-25:10.*)

"விசுவாசத்தின் தகப்பன்" என்ற வகையில் மற்றும் எபிரெய இனத்தைத் தோற்றுவித்தவரான ஆபிரகாம், எல்லாக் காலங்களிலும் மாபெரும் பாத்திரங்களில் ஒருவராய் இருக்கிறார். அவருடைய வாழ்வானது இயல்பாகவே பின்வரும் இரண்டு பிரதான பிரிவுகளில் அடங்குகிறது: (1) அலைந்து திரிதல்கள், (2) எபிரோனில் குடியமர்ந்த வாழ்வு.

1. அலைந்து திரிதல்கள்.—*அ. தொடக்க கால இருப்பிடம்.*—ஆபிரகாம், தொடக்க கால ஆசியாப் பகுதியின் நாகரிகத்தினுடைய இருப்பிடமான ஐப்பிராத்து நதியின் கீழ் பாகத்தில் இருந்த ஊர் என்ற ஊரைச் சேர்ந்தவ ராவார். அது தொடக்கத்தில் ஹெமேட்டிக் அல்லது டர்னியன் இனத்தவரு டையதாயிருந்தது, பின்பு வெற்றி கொள்ளப் படுதலினால் அது செமேட்டிக் (சேமின் சந்ததியார்) இனத்தவருடையதாயிற்று. அது விக்கிரகாராதனை செய்யும் ஊராய் இருந்தது என்பது தெளிவு (இ.வ. ஆதி. 11:31; யோசு. 24:2).

ஆ. அழைப்பும் உடன்படிக்கையும் (ஆதி. 12:1-3).—இங்கு அவர் (ஆபிரகாம்) தன் வீட்டையும், இனத்தையும், சொந்த நாட்டையும் விட்டு இனி அறியப்படுத்தப்படப் போகிற நாட்டை நாடிச் செல்லும்படிக்கு தேவனுடைய அழைப்பைக் கேட்டார். இந்த அழைப்பும் இதன் விளைவும் மத ரீதியாக/மார்க்க ரீதியாக (ஆதியில் ஏற்பட்ட) வீழ்ச்சி முதற் கொண்டு (நடந்த) மிக முக்கியமான நிகழ்ச்சியாக இருந்தது. இந்த அழைப்புடன் தேவன் தம்முடைய உடன்படிக்கையை இணைத்தார். இது நான்கு வாக்குத் தத்தங்களைத் தழுவிக் கொண்டிருந்தது: (1) ஒரு பெரிய இனம்; இது எபிரெய அல்லது யூத மக்களில் நிறைவேறிற்று. (2) ஒரு மாபெரும் பெயர். நிம்ரோத்களும், பார்வோன்களும், இராயர்களும் தாங்கள் வாழ்ந்திருந்த வேளைகளில் உலகளவில் ஒரு மாபெரும் இடத்தை நிரப்பியிருந்தார்கள், ஆனால் அவர்களில் எவர் ஒருவரும் வரலாற்றில் மிகப் பரந்த அடையாளத்தை விட்டுச் சென்றதில்லை அல்லது (மக்கள்) இனத்தின்மீது தம்மைப் பற்றியும் தமது கருத்துக்களைப் பற்றியும் அதிகமான மனப்பதிவு களை விட்டு சென்றதில்லை. யூதர், கிறிஸ்தவர், முகம்மதியர் என்ற மூன்று மாபெரும் மதங்கள் ஆபிரகாமை (தங்கள்) விசுவாசத்தின் தகப்பனாகப் பின்னிட்டுக் கண்ணோக்குகின்றன. (3) ஒரு நாடு; இது எபிரெயர்களால் கானான் நாடு சுவாதீனம் கொள்ளப்பட்டதில் நிறைவேறியது. (4) எல்லா இனங்களின் மீதுமான ஒரு ஆசீர்வாதம்; இது ஈராயிரம் ஆண்டுகளுக்குப் பின் கிறிஸ்துவுக்குள்ளும் சுவிசேஷத்தின் உலகளாவிய அறிவிப்பிற்குள்ளும் நிறைவேறியது. எப்பொழுதும் விரிவடைந்து கொண்டிருக்கும் வட்டங் களில் இது இன்னமும் நிறைவேற்றத்தின் செயல்முறையில் உள்ளது.

இ. இடம் பெயருதல்.—ஒவ்வொரு தனிச்சிறந்த இனத்தின் வாழ்வும் அதன் இடம் பெயருதலில் வேரூன்றியிருக்கிறது; ஆனால் மிகச் சில இடம் பெயருதல்களே எபிரெயர்களுடையதைப் போன்று மத ரீதியாக/மார்க்க ரீதியாகத் தனிச்சிறப்புடையதாக அல்லது வரலாற்று வெளிச்சத்தில் மிகத் தெளிவாகக் கிடப்பதாக உள்ளன. எழுபத்தி ஐந்து வயதில், உறவினர் மற்றும் நாட்டுடன் உள்ள கடுமையான பிணைப்புக்களை அறுத்து தான் எங்கு போகிறோம் என்பதையே அறியாமல் புறப்பட்டுச் செல்ல வீரமிக்க விசுவாசம் அவசியமாயிருந்தது. “விசுவாசத்தினாலே ஆபிரகாம் … கீழ்ப்படிந்து, தான் போகும் இடம் இன்னதென்று அறியாமல் புறப்பட்டுப் போனான்” (எபி. 11:8). இப்படிப்பட்ட ஒரு மனிதர் நீடித்திருக்கும் ஒரு இனத்தைத் தோற்றுவிக்கப் பொருத்தமானவராகவும்/தகுதியானவராகவும் - தேவனுடன் ஒருமைப்பாடு என்ற - மேன்மை மிகுந்த சத்தியத்திற்கு இடம் அளிப்பவராகவும் இருந்தார்.

அவர் (ஆபிரகாம்) தனது தந்தையான தேராகு, அனாதையாயிருந்த லோத்து என்ற தனது சகோதரன் (ஆரானுடைய) மகன், மற்றும் தனது மனைவியான சாராய் ஆகியோருடன் ஐப்பிராத்தின் மேல் பகுதியில் இருந்த ஆரானுக்குக் கடந்து சென்றார். அங்கு தேராகு இறந்து போனார், மற்றும் ஆபிரகாம் இன்னமும் தெய்வீக அழைப்புக்குக் கீழ்ப்படிந்து ஐப்பிராத்து நதியின் பள்ளத்தாக்குப் பகுதியை விட்டு கானான் நாட்டுக்குக் கடந்து சென்றார். இப்பொழுது அவர் ஒரு அந்நிய நாட்டில், வேற்றினத்தவர் மத்தியில் இருக்கின்றார். சீகேம் என்ற இடத்தில் தேவன் அவருக்குத் தரிசனமாகி உடன்படிக்கையைப் புதுப்பிக்கின்றார்: “உன் சந்ததிக்கு இந்தத் தேசத்தைக் கொடுப்பேன்”[1] பின்பு இது நாடாக உள்ளது. இடம் பெயருதல் செய்து முடிக்கப்பட்டுள்ளது.

சில ஆண்டுகளாக ஆபிரகாம் இடம் விட்டு இடம் அலைந்து திரிந்து கொண்டுள்ளார். அவர் (1) பெத்தேல், (2) தெற்கு, (3) எகிப்து, (4) தெற்கு, (5) பெத்தேல் ஆகிய பகுதிகளில் பயணப்பட்டார். இங்கு லோத்தும் ஆபிரகாமும் பிரிகின்றனர்: லோத்து யோர்தான் சமவெளியில் சோதோமை நோக்கிக் கூடாரம் இடுகின்றார், மற்றும் சோதோமில் குடியமர்வதில் முடிகின்றார். (6) ஆபிரகாம் தெற்கில் எபிரோனுக்கு (நீங்கிச்) செல்லுகின்றார். இது அதிகமாய்க் குடியமர்ந்த வாழ்க்கையின் மையமாகின்றது. ஆனால் கடைசி வரையிலும் அவர் கூடாரங்களிலேயே வாழ்ந்திருந்தார். ஒவ்வொரு இடத்திலும் அவர் (தமது) பலிபீடத்தைக் கட்டியெழுப்பியிருந்தார். கூடாரமும் பலிபீடமும் அவருடைய கானான் வாழ்வின் பண்பாய் இருக்கின்றன.

2. எபிரோனில் குடியமர்ந்த வாழ்வு.—இந்தக் கால கட்டத்தின் பிரதான நிகழ்ச்சிகள் பின்வருமாறு:

அ. கல்தேயப் படையெடுப்பு.—ஏலாமித்திய வம்சம் ஒன்று கல்தேயாவை ஆண்டு கொண்டிருந்தது. பேராசைமிக்க இந்த வம்சமானது தங்கள் நாடு பிடித்தல்(செயல்)களை தொலை தூர மேற்கில் யோர்தான் பள்ளத்தாக்கு வரையிலும் தள்ளியிருந்தது. யோர்தான் (பகுதிகளில் இருந்த) சிற்றரசர்கள் இந்த நுகத்தைப் பன்னிரெண்டு ஆண்டுகளாய்ச் சுமந்திருந்து,

அதற்குப் பின்னர் கலகம் செய்தனர். கல்தேயாவின் ஆட்சியாளராய் இருந்த ஏலாமியனான கெதர்லாகோமேர் இந்தப் புரட்சியை நொறுக்கிப் போட்டு, லோத்து உட்பட சோதோமின் மக்களை (அடிமைகளாய்) பிடித்துச் சென்றான். ஆபிரகாம் பயிற்சி பெற்ற முன்னூற்றுப் பதினெட்டு வேலை யாட்களுடன் (அவர்களைத்) தொடர்ந்து துரத்திச் சென்று அடிமைகளை மீட்டுக் கொண்டு வந்தார். அவர் திரும்பி வருகையில் மெல்கிசேதேக் என்ற தெளிவாய் அறியப்படாத ஆசாரிய அரசரால் சந்திக்கப்பட்டு ஆசீர்வதிக்கப் பட்டார். இவருக்கு ஆபிரகாம் தசம பாகம் செலுத்தினார்.

ஆ. ஆகாருடன் திருமணம்.—வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மகன் பிறந்திராத நிலையிலேயே வருடங்கள் பல கடந்து சென்றன. ஆபிரகாமும் சாராளும் வயது முதிர்ந்தவர்களாயினர். சாராளுடைய ஆலோசனைப்படி ஆபிரகாம் தங்கள் வேலைக்காரியான ஆகாரை இரண்டாவது மனைவி யாக்கிக் கொண்டார். அவள் இஸ்மவேலுக்குத் தாயானாள் மற்றும் அரபியர்களின் முன்னோரானாள்.

இ. விருத்தசேதனம் ஏற்படுத்தப்படுதல்.—ஆபிரகாம் தொன்னூற் றொன்பது வயதுடையவர் ஆனார். (அவரை விட) சாராள் பத்து ஆண்டுகள் இளையவளாய் இருந்தாள். உடன்படிக்கை வாக்குத்தத்தமானது இன்னமும் நிறைவேற்றப்படாமலேயே இருந்தது: ஏனெனில் சாராள் மூலமாகவே வாக்குத்தத்தம் ஏற்படுவதாயிருந்தது, அவள் (இன்னமும்) பிள்ளையில்லாதவளாய் இருந்தாள். மீண்டும் ஒருமுறை தேவன் தரிசன மாகி உடன்படிக்கையைப் புதுப்பித்து அதை இரு அடையாளங்களைக் கொண்டு முத்திரையிட்டார்: (1) தொடக்கத்தில் ஆபிராம் (உயர்வான தந்தை), சாராய் (அரசி[2]) என்றிருந்த அவர்களின் தொடக்க பெயர்கள் ஆபிரகாம் (திரளான இனங்களின் தந்தை), சாராள் (திரளான கூட்டங்களின் அரசி) என்று மாற்றப்பட்டன; (2) உடன்படிக்கையின் மக்களுக்கு என்றென் றைக்குமான சடங்கு முறையாக விருத்தசேதனச் சடங்கு அளிக்கப்பட்டது.

ஈ. சோதோமின் அழிவு.—யோர்தான் சமவெளியின் நகரங்கள் மட்டுமீறிய தீயொழுக்கத்தின் ஆழங்களில் மூழ்கியிருந்தன, அவைகளின் தொடர்ந்து இருத்தலானது சுற்றியுள்ள நாடுகளுக்குக் கெடுதியாக்கின. தேவன் அவைகளின் அழிவை ஆணையிட்டு, அவற்றின் முடிவை ஆபிர காமுக்கு வெளிப்படுத்தினார், ஆபிரகாமின் பரிந்துரையானது அந்த நகரங் களைக் காப்பாற்ற முடியாது போய் விட்டாலும், அது முழுமையாக இழந்து போகப்படாதிருந்தது. லோத்தின் மனைவி சோதோமை மூழ்கச் செய்த அக்கினி மற்றும் கந்தகத்தின் பெரும் புயலில் ஏக்கம் கொண்டு பேராவலுடன் தாமதித்துக் கொண்டிருந்த போதிலும் லோத்து எரியும் தழலிருந்து பற்றியிழுக்கப்பட்ட கம்பி போல் இருந்தார், லோத்து சோவாருக்குத் தப்பிச் சென்றார், அவர் தம் சொந்த மகள்களின் மூலம் மோவாபுக்கும் அம்மோனுக்கும் தந்தையானார், அவர்களின் சந்தியார்கள் எபிரெயர்களுக்கு நீடித்த (காலமாக) விரோதிகளாய் இருந்தார்கள்.

உ. ஈசாக்கின் பிறப்பும் (அவரைப்) பலியிடுதலும்.—இப்பொழுது ஆபிரகாம் நூறு வயதுடையவராயிருக்கின்றார், சாராள் தொண்ணூறு வயதுடையவளாய் இருக்கின்றாள். இருபத்து ஐந்து ஆண்டுகளாக அலைந்து

திரிந்து, காத்துக் கொண்டிருந்ததற்குப் பிறகு, வாக்குத்தத்தத்தின்மீது நிறைவேற்றத்தின் வெளிச்சம் உதிக்கின்றது. சாராள் ஒரு மகனைப் பெறுகிறாள், அவருக்கு ஈசாக்கு என்று பெயரிடப்பட்டது. ஆனால் இன்னும் மிகுந்த வலியுள்ள சோதனை அவர்களுக்குக் காத்துள்ளது. உறவினர்(கள்) மற்றும் நாட்டின் மீதான ஆபிரகாமின் அன்பை அவரது விசுவாசம் வெற்றி கொண்டிருந்தது. அது (விசுவாசம்) அவரது சொந்த வாரிசின் மீதான அன்பை வெற்றி கொள்ளுமா? திகைப்பூட்டும் செய்தி யானது அவரது காதுகளில் விழுகின்றது, "உன் புத்திரனும், உன் ஏகசுதனும் உன் நேச குமாரனுமாகிய ஈசாக்கை நீ ... தகன பலியாகப் பலியிடு."[3] இப்படிப்பட்ட ஒரு கட்டளையானது நமது ஒழுக்கக் கருத்தறிவை/ஒழுக்க உணர்வறிவை அதிர்ச்சியடையச் செய்வதாய் இருக்கும். இது கடமைகளின் போராட்டமாய்க் காணப்படும். (ஆனால்) ஆபிரகாமுக்கு இது அவ்வாறு இருக்கவில்லை. மனித பலி என்பது பொதுவாக இருந்தது; (அந்த) காலம் அதினால் (மனித பலிகளினால்) நிறைந்திருந்தது, ஆபிரகாம் அதைக் குறித்து (அறிந்து) பழக்கப்பட்டிருந்தார் என்பதில் ஐயம் இல்லை. போராட்டம் அங்கு இருக்கவில்லை. மாறாக அது (போராட்டம்), ஒரு புறம் தேவனுடைய அழைப்புக்கும், ஈசாக்கின் மீதான அவரது அன்பிற்கும், மறுபுறம் உடன்படிக்கையின் வாக்குத்தத்தத்தின் மீதான அவரது நம்பிக்கைக்கும் இடையில் இருந்தது. அவர் தமது ஆத்துமாவை அந்த வாக்குத்தத்தத்துடன் இரும்புக் கொக்கியைப் போல் இறுகப் பற்றிப் பிடித்திருந்தார். மீண்டும் ஒருமுறை விசுவாசம் வெற்றி பெற்றது (எபி. 11:17-19). இங்கு நாம் ஆபிரகாமின் விசுவாசம் மற்றும் அனுபவம் ஆகியவற்றின் உச்சகட்டத்தை அடைகின்றோம். அவரது மகன் காக்கப்பட்டார்; ஏனெனில் தேவன் உண்மையில் அவரை (ஈசாக்கை) பலியிடுதலை கேட்கவில்லை. அவர் (ஈசாக்கு) திருமணம் செய்வதையும், அவரைச் சுற்றிலும் (அவரது) மகன்கள் வளருவதையும் காண்பதற்கு அந்த முற்பிதா உயிர் வாழ்கின்றார். அவர் (ஆபிரகாம்) சாராளை, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நாட்டில் அவருக்குச் சொந்தமாயிருந்த ஒரே இடமான எபிரோனின் மக்பேலா குகையில் அடக்கம் செய்கின்றார். கானானில் ஒரு நூற்றாண்டு காலம் யாத்திரைக்குப் பிறகு அவரும் கூட அவ்விடத்தில் ஈசாக்கு மற்றும் இஸ்மவேல் ஆகியோரால் அடக்கம் செய்யப்பட்டார்.

உலகமானது ஒரு சில ஆபிரகாம்களையே கொண்டிருந்ததாக இருந்துள்ளது. இது நித்தியத்தைப் பணயம் வைத்து உலக அனுகூலங்களைப் பற்றிக் கொள்ளும் லோத்துகள் பலரைக் கொண்டுள்ளது. லோத்தும் அவரது சந்ததியாரும் விடியற்காலத்து மூடுபனியைப் போல் கடந்து போயினர்; ஆபிரகாமும் அவருடைய சந்ததியாருமோ உலகத்தின் என்றென்றைக்குமான அடைவிடத்தை உருவாக்கியுள்ளனர்.

II. *ஈசாக்கின் வாழ்வும் பண்பும். (ஆதி. 24:1-28:9.)*

1. ஈசாக்கினுடைய வாழ்வின் தன்மை.—ஈசாக்கினுடைய வாழ்வு பற்றிய வரலாறு விரைவிலேயே கூறப்படுகிறது. இது ஒரு புறம் அவரது

தகப்பனுடைய வாழ்வின் வரலாற்றுடனும், மறுபுறம் அவரது மகனான யாக்கோபின் வரலாற்றுடனும் பின்னிப் பிணைக்கப்பட்டுள்ளது. ஈசாக்கின் வாழ்வுக் காலம் ஆபிரகாமின் (வாழ்வின் கடைசி) எழுபத்தி ஐந்து வருடங்களுடனும், யாக்கோபின் (வாழ்வின் முதல்) நூற்றிருபது வருடங்களுடனும் மேற்கவிந்து/ஒரு சேர அமைந்துள்ளது. இவரது வாழ்வின் முக்கிய நிகழ்ச்சி ஒவ்வொன்றும் அவர்களின் (வாழ்வின் முக்கிய நிகழ்ச்சிகளுக்கு) அதிகம் ஏற்புடையதாக உரித்தாகுகின்றது. இவர் வரலாற்றுப் பாத்திரம் என்ற வகையில், அவர்களினால் நிழலிடப்படுகின்றார். இவர் எதிர்ப்பு இல்லாமலும், அமைதியை நேசிக்கும் தன்மையுடனும் தம்மைப் பலியாக ஒப்புக்கொடுக்கும்படி தமது தந்தைக்கு இணங்குகின்றார், இவரது தாயார் வாழ்ந்த வேளையில் இவர் அவளது செல்வாக்கின் கீழிருந்தார் என்பது உறுதியாக உள்ளது, மற்றும் அதன் பிறகு இவர் தமது மனைவியின் செல்வாக்கிற்கு உட்படுகின்றார், மற்றும் பிலிஸ்தியர்களுடன் (தமது) கிணறுகளுக்காகப் போராடுவதற்கு மாறாக அவற்றை ஒன்றுக்குப் பின் ஒன்றாக அவர்களுக்குக் கொடுத்து விட இணங்குகின்றார். நூற்று எண்பது ஆண்டுகள் கொண்ட அவருடைய நீண்ட வாழ்வானது தென் தேசத்தில் எபிரோனில் அல்லது அதற்கருகில் முடிந்தது. அவருடைய வாழ்வானது ஆபிரகாமினுடையதைப் போல கருங்கல் வார்ப்பாகவோ அல்லது யாக்கோபினுடையதைப் போல கொந்தளிப்பான அனுபவமாகவோ இருந்ததில்லை. இன்னமும், வாக்குத்தத்தத்தின் மகன் என்ற வகையிலும், வாக்குத்தத்தங்களின் உடன்படிக்கையின் வாரிசு என்ற வகையிலும் அவரது தகுதி நிலையானது (அந்தக்) கால கட்டத்தின் நான்கு முற்பிதாக்களின் மத்தியில் மதிப்பிற்குரிய இடம் கொண்டுள்ளது. இவர் ஆபிரகாமின் மேன்மைமிக்க விசுவாசத்தில் நடக்கின்றார், மற்றும் ஆபிரகாமுடனான உடன்படிக்கையைப் புதுப்பிப்பதற்காக தேவன் இவருக்கு மீண்டும் மீண்டும் தரிசனமாகின்றார்.

2. இவரது திருமணமும் குடும்பமும்.—ஆபிரகாமின் சகோதரரான நாகோர், ஊரிலிருந்து குடும்ப இடம் பெயருதலில் ஐப்பிராத்து மீது ஆரான் வரை சேர்ந்து வந்தார் அல்லது பின்பற்றித் தொடர்ந்தார். அங்கு (ஆரானில்) அவர் தங்கி விட்டார். விக்கிரகாராதனைக்காரர்களாகிய கானானியருடன் குடும்ப இணைப்பு எதையும் ஏற்படுத்தப் பயம் அடைந்த ஆபிரகாம், மிகவும் நம்பிக்கைக்குரிய தமது வேலைக்காரனை ஆரானில் இருந்த நாகோரிடத்தில் அனுப்பினார். அவர் அங்கிருந்து பெத்துவேலின் மகளான ரெபேக்காளை அழைத்து வந்தார், அவள் ஈசாக்கின் மனைவியாகவும், ஏசா மற்றும் யாக்கோபு என்ற இரட்டைப் பிள்ளைகளின் தாயாகவும் ஆனாள்.

III. யாக்கோபின் வரலாறு. (ஆதி. 27:1-49:33.)

யாக்கோபின் இரண்டு பெயர்களுக்கும் அவரது பண்பின் வேறுபாடுள்ள இரு நிலைகளுக்கும் இணையாக அவரது வாழ்வில் இரு அத்தியாயங்கள் உள்ளன. முதலாவதில் அவர் யாக்கோபு (எத்தன்) என்றுள்ளார்; இரண்டாவது பிரிவில் அவர் இஸ்ரவேல் (தேவனுடைய

பிரபு) என்றாகின்றார். அவர் தூதனுடன் போராடி வெற்றி கொண்டு வெற்றியாளராக விளங்கிய பெனியேல் என்ற இடமே (இவ்விரு பிரிவுகளையும்) பிரிக்கும் கோடாக உள்ளது. வேறு எந்த முற்பிதாவின் வாழ்வும் இவருடையது போல கிறிஸ்தவ மனமாற்றத்திற்கு இவ்வளவு இணையான ஏதொரு விஷயத்தையும் காட்சிப்படுத்துவதில்லை. மற்றவர்(முற்பிதாக்)கள் தொடக்கம் முதல் கடைசி வரை விசுவாசத்தின் வாழ்வை வாழ்ந்தார்கள். ஆனால் பிரபுவான இஸ்ரவேலோ எத்தனாயிருந்த யாக்கோபிலிருந்து முற்றிலும் மாறுபட்ட மனிதராய் இருந்தார்.

1. எத்தனாயிருந்த யாக்கோபு (ஆதி. 27:1-32:32).—*அ. அவரது பெயர்.*—அவரது பிறப்பில் நடந்த ஒரு நிகழ்ச்சியிலிருந்து அவர் யாக்கோபு என்று பெயரிடப்பட்டார்; குதிங்காலைப் பிடிப்பவன், இன்னொருவரைத் தடுக்கி விழச் செய்பவர், எத்தன் (ஆள் மாறாட்டம் செய்பவர்). யாக்கோபு இளையவராயிருந்தும் தேர்ந்து கொள்ளப்பட்ட சந்ததியும் உடன்படிக்கையும் அவர் மூலமாகவே இருக்க வேண்டியதாயிற்று; ஆகவே, அவருடைய பிறப்பின் போது அவ்வாறே முன்னுரைக்கப்பட்டது, ''மூத்தவன் இளையவனைச் சேவிப்பான்.''[4]

ஆ. கைவசமாய் பெற்றுக் கொண்ட பிறப்புரிமை.—ஏசா ஒரு வேட்டைக்காரராய் இருந்தார்; யாக்கோபு ஒரு "அமைதியான" மனிதராகவும் தோட்டக்காரராகவும் இருந்தார். ஏசா வேட்டையிலிருந்து களைத்துப் போய்த் திரும்பி வருகிறார், அவர் யாக்கோபின் கூழுக்காகத் தனது பிறப்புரிமையை கொடுத்து விடத் தயாராய் இருக்கின்றார், இவ்விதமாக ஒரு கண நேர இன்பத்திற்காக/திருப்திக்காக உடன்படிக்கையின் ஆசீர்வாதத்தை வீசியெறிந்து விடுகின்றார். இப்படிப்பட்ட பண்புடைய ஒருவர் நீடித்திருக்கும் ஒரு இனத்தைத் தோற்றுவிக்கவோ அல்லது மிக மேன்மையான ஆவிக்குரிய மார்க்கத்தைத் தோற்றுவிக்கவோ மிகச் சிறிதளவே பொருத்தமானவராயிருக்கின்றார். "அமைதியான" யாக்கோபு பிறப்புரிமையையும் உடன்படிக்கை வாக்குத்தத்தத்தையும் விலை கொடுத்துப் பெறுகின்றார், ஆனால் அவற்றை அவர் பெரும்பசியாயிருந்த தனது சகோதரனிடம் இருந்து பெற்றுக் கொள்கின்றார்.

இ. களவு செய்யப்பட்ட ஆசீர்வாதம் என அழைக்கப்பட்டது.—ஆண்டுகள் கடக்கின்றன. முதிர் வயதான ஈசாக்கு, முற்பிதாக்களுக்குரிய (தனது) ஆசீர்வாதங்களைப் பொழிவதற்குரிய காலம் வருகிறது. (தனது) பையன்களின் பிறப்பின் போது வெளியாக்கப்பட்ட தெய்வீக நோக்கத்திற்கு/தீர்மானத்திற்கு மாறாக அவர் அதை ஏசாவின்மீது பொழியத் தீர்மானித்தார். ஆனால் ரெபேக்காள் உறங்குபவளாய் இருக்கவில்லை. அவள் ஒரு வஞ்சனையை முன் மொழிகிறாள், யாக்கோபு தனது பெயருக்கேற்ப, அவளது சூழ்ச்சியின்படி செய்யத் தன்னை ஒப்புக் கொடுக்கின்றான். சூழ்ச்சி வெற்றியடைகிறது. பார்வை மங்கலான ஈசாக்கும், அங்கிராமற்போன ஏசாவும் சூழ்ச்சியால் வெல்லப்படுகின்றனர், மற்றும் அந்த முற்பிதாவின் கரங்கள் முக்கியத்துவம் வாய்ந்த ஆசீர்வாதங்களைத் தருவதற்கு யாக்கோபின் தலையின்மீது வைக்கப்படுகின்றன.

ஈ. ஆரானுக்கு தப்பி ஓடுதல்.—யாக்கோபு தனது தந்தையிடமிருந்தும்,

தனது சகோதரனிடமிருந்தும், தனக்கு பிரியமான தாயாகிய ரெபேக்காளிடமிருந்தும் பிரிந்து செல்லுதல் என்பதே அவருடைய முதல் செயல்விளவாய் இருந்தது. அவனுடைய உயிரைப் பறிக்க ஏசா தேடுகிறான். ரெபேக்காளின் ஆலோசனைப்படி, ஆரானில் (உள்ள) அவளது உறவினர்களின் மத்தியில் யாக்கோபுக்கு ஒரு மனைவியைத் தேடுவதற்காக ஈசாக்கு யாக்கோபை அனுப்புகின்றார். இது ஒரு கவலை தரும் ஓட்டமாக உள்ளது; - இதன் பின்னால் குழந்தைப் பிராயத்தின் நினைவுகள், தனது சொந்த அற்பத் தன்மையின் நிழல்கள், ஏசாவின் பழி வாங்குதலின் மாயத்தோற்றம்; இதன் முன்னால் என்ன (உள்ளதென்று) தேவன் ஒருவரே அறிகின்றார். இரவு வேளை வருகிறது. அவர் உறங்குவதற்காக விண்மீன்களின் கீழே சாய்கின்றார். பகலின் நினைவுகளிலிருந்து இரவின் கனவுகள் உருவெடுக்கின்றன. அவர் தேவனை முற்றிலுமாகக் கைவிட்டு விடவில்லை; அல்லது அவர் தேவனால் கைவிடப்படவும் இல்லை. ஏணியின் தரிசனத்தில் தேவன் தம்மை ஆபிரகாமின் தேவனாகவும், ஈசாக்கின் தேவனாகவும், உடன் படிக்கையின் தேவனாகவும் வெளிப்படுத்துகிறார், மற்றும் அற்பமான, தவறான, தப்பி ஓடுகிற யாக்கோபுக்கும் கூட அதன் அடைதற்கரிய அளிப்புகளைப் புதுப்பிக்கின்றார். பயபக்தியும் தாழ்மையும் அடைந்த யாக்கோபு காலையில் எழுந்து, தனக்குத் தலையணையாயிருந்த கல்லை ஒரு தூணாக நிறுத்தி, அவ்விடத்திற்குத் தேவனுடைய வீடு என்று அர்த்தப் படுகிற பெத்தேல் என்று பெயரிடுகின்றார், மற்றும் யாக்கோபு போன்ற அளித்தலுடனும் கூட இருப்பினும், யெகோவா தமது தேவனாயிருப்பார் என்று பொருத்தனை செய்கின்றார்.

உ. ஆரானில் வாழ்க்கை.—ஆரானில் யாக்கோபு தனது மாமனின் வீட்டில் தனது இணையைச் சந்திக்கின்றார், அவரோ, யாக்கோபு கிணற்றண்டையில் சந்தித்த முதல் சந்திப்பில் நேசித்த ராகேலை(யும்) திருமணம் செய்து கொள்வார் என்பதை அறிந்த நிலையில் முதலில் தனது மூத்த மகளான லேயாளைத் திருமணம் செய்து கொள்ளும்படி அவரை (யாக்கோபை) அகப்படுத்துகின்றார். வெளிநாட்டில் தங்குவதிலேயே இருபது ஆண்டுகள் கடந்து செல்கின்றன. கடைசியில், அவர் ஏராளமான உடைமைகளுடனும் எண்ணிறந்த குடும்பத்துடனும் தமது முகத்தைத் தம் பழைய இல்லம் நோக்கித் திருப்புகின்றார். அவர் கானானின் கிழக்கு எல்லைகளுக்கருகில் நெருங்கி வந்த பொழுது, தன்னைச் சந்திப்பதற்காக நானூறு மனிதர்களுடன் ஏசா அணி வகுத்து வருவதை அறிகின்றார். மீண்டும் ஒருமுறை அவரது பாவங்களும், அவரது சகோதரனின் பழி வாங்குதலும் அவருக்கு முன்பாக எழும்புகின்றது. அவரது ஆத்துமாவானது தகுதியற்ற தன்மை மற்றும் பலவீனம் ஆகியவற்றினால் மயங்கிச் சுழலுகின்றது. ஏசாவைச் சமாதானப்படுத்துவதற்காக வெகுமதிக்குமேல் வெகுமதி (வரிசையாக) அனுப்பப்படுகின்றது. குடும்பம் யாப்போக்கு நதியை கடந்து சென்றது. யாக்கோபு பெனியேலில் தனித்து விடப் படுகின்றார். பிறகு அவர் (அங்கு) யெகோவாவின் திகைப்பூட்டும்/விளங்கப் படாத தூதனுடன் இரவு முழுவதும் போராடுகின்றார். கடைசியாக இருள் மறைகின்றது; பகல் உதிக்கின்றது; சுய சித்தம் கொண்ட யாக்கோபு

இணங்குகின்றார்; பின்பு அவர் விரும்பத்தக்க ஆசீர்வாதத்தை வெற்றி கொண்ட யாக்கோபு இஸ்ரவேலாக மாற்றம் அடைகின்றார்.

2. இஸ்ரவேல் என்னும் பிரபு.—*இதுமுதல் யாக்கோபு ஒரு புதிய மனிதனாக இருக்கிறார். சகோதரர்கள் சந்தித்து சமாதானத்துடன் பிரிகின்றனர். நீண்ட நாட்களுக்குப் பிறகு, அவர்கள் தங்களின் தந்தை யினுடைய சவ அடக்கத்தில் இணைகின்றனர். தேவனுடைய அழைப்பின் பேரில், இஸ்ரவேல் பெத்தேலுக்குத் செல்லுகின்றார். அவருக்கு அன்பான ராகேல் பெத்லகேமுக்கு அருகே பெஞ்சமீனின் பிறப்பின்போது மரிக்கின்றாள். அவரது மகன்கள் தங்கள் வன்முறையினால் அவரது ஆத்துமாவைக் கலங்கச் செய்கின்றனர். அன்பார்ந்த இராகேல் மூலம் பிறந்த அன்பார்ந்த மகன் யோசேப்பு இருபதாண்டுகளாய் அவரிடமிருந்து இழந்து போகப்படுகிறார். எகிப்தை ஆண்ட அந்நிய அதிகாரியினால் பெஞ்சமீன் வற்புறுத்திக் கேட்கப்படுகிறார். ஆனால் இந்த இருளின் ஊடாகக் கடந்து செல்லுகையில் இஸ்ரவேல் யெகோவாவின் கரத்தை விட்டு (பிரிந்து) செல்லவில்லை. இந்தக் கால கட்டத்தின்போது, அவர் ஒவ்வொரு இடத்திலும் தனது பலிபீடத்தைக் கட்டியெழுப்பி, ஆபிரகாம், ஈசாக்கு ஆகியோருடைய உடன்படிக்கையின் தேவனைத் தொழுது கொள்ளு கின்றார். நாடு விட்டு நாடு செல்லுதல் மற்றும் எதிர்ப்புகள் மற்றும் உடன் படிக்கை(யின் மீதான) நம்பிக்கை ஆகியவை அவரது பண்பில் தங்கள் பணியைச் செய்கின்றன. யாக்கோபு இஸ்ரவேலாகின்றார், மற்றும் இஸ்ரவேல் பக்குவமாய் முதிர்ந்து, அழகுமிக்க வகையில் (முதிர்) வயதடைகின்றார். கடைசியில் மேகங்கள் விலகுகின்றன. யோசேப்பும் பெஞ்சமீனும் அவருக்குத் திருப்பிக் கொடுக்கப்படுகின்றனர். வாழ்வின் கதிரவன் எகிப்தின் அமைதியில் மறைகிறான், மற்றும் அவரது எலும்புகள் எபிரோனில் இருந்த அவரது முன்னோர்களின் கல்லறையில் அவரது தகப்பனின் எலும்புகளுடன் இளைப்பாறுகின்றன.*

IV. யோசேப்பின் வரலாறு. *(ஆதி. 37:1-50:26.)*

அறிமுகம்.—*எபிரெய மக்களுடனான யோசேப்பின் உறவானது, ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபு ஆகியோர் கொண்டிருந்த உறவிலிருந்து வேறுபடுகின்றது. அவர்கள் முழு உடன்படிக்கையின் மக்களுக்கு முன்னோர்களாய் இருக்கின்றனர்; கருவிலிருந்து விரிவடைந்த நாடான இஸ்ரவேலின் பன்னிரண்டு மகன்களில் இவர் (யோசேப்பு) ஒருவராக மட்டுமே உள்ளார். எதிர்கால(த்தில்) அந்த இனம் தன்னை இஸ்ரவேல் என்று அழைத்துக் கொள்ளலாம், ஆனால் யோசேப்பு மட்டுமே இஸ்ரவேல் இனம் என்றாகி விடாது. யோசேப்பு உடன்படிக்கையின் மக்களுக்குத் தலைவராயிருக்கவில்லை, மற்றும் யோசேப்பு மூத்த முற்பிதா என்ற வகையில் உடன்படிக்கையைப் புதுப்பித்துக் கொள்வதற்கு தேவன் அவருக்குத் தரிசனமாகவில்லை. இருப்பினும் கூட அவரும் அவரது சகோதரர்களும் முற்பிதாக்களின் காலத்திற்குரியவர்களாய் உள்ளனர், அவர்கள் முற்பிதாக்களுடன் வரிசைப்படுத்தப்பட்டுள்ளனர் (அப். 7:8, 9).*

யோசேப்பின் வரலாறு (இருதயத்தை) மிகவும் தொடுவதாயுள்ளது, மற்றும் அவரது பண்பு பழைய ஏற்பாட்டு வரலாற்றில் எவரொருவருடையதைக் காட்டிலும் மிகச் சிறந்த வகையில் முழுமையானதாக உள்ளது. இவர் பழைய முற்பிதாக்களின் மிகச் சிறந்த பண்பு நலன்கள் சிலவற்றை ஒன்றிணையக் கொண்டவராய் இருக்கின்றார்: ஆபிரகாமின் பலம் மற்றும் தீர்மானம், ஈசாக்கின் பொறுமை மற்றும் சாந்த குணம், யாக்கோபின் மென்மையான பிரியம், இவர்கள் யாவருக்குள்ளும் இருந்த விசுவாசம் ஆகியவை யோசேப்பிடம் ஒருங்கே அமையப் பெற்றிருந்தன. இவரது வாழ்வானது இரு பிரிவுகளாகப் பிரிக்கப்படலாம்: (1) கானானில் அவரது இளமைப் பருவம்; (2) எகிப்தில் அவரது மனிதப் பருவம்.

1. கானானில் அவரது இளமைப் பருவம்.—இந்தக் கால கட்டத்தின் நிகழ்ச்சிகள் பின்வரும் இரண்டு உண்மைகளால் வடிவாக்கப்படுகின்றன:

அ. அவருடைய தந்தையின் (இவர்மீது மட்டுமான) நலம் பேணும் தன்மை.—இவர் (யோசேப்பு) அவரின் (யாக்கோபின்) முதிர் வயதில் பிறந்த மகனாய் இருந்தார், இவர் ராகேலுக்குப் பிறந்த முதல் மகனாய் இருந்தார், அவளையே அவர் (யாக்கோபு) தனது உண்மையான மனைவியாக மதித்தார். யோசேப்பு தன்னிலேயே கொண்டிருந்த அன்புகாட்டக்கூடிய பண்பும் இன்னொரு காரணமாயிருந்தது என்பதில் சந்தேகமில்லை. யாக்கோபின் ஆழ்ந்த பிரியமானது தன்னைப் பல்வேறு வழிகளில் (வெளிக்) காண்பித்தது; குறிப்பாக, பிரபுக்கள் அணிவது போன்ற பல வண்ணங்கள் (அல்லது முழு கை அங்கி) கொண்ட ஒரு மேலங்கியில் - இது ஒரு வேளை அவர் (யாக்கோபு) பிறப்புரிமையை அவருக்கு (யோசேப்புக்கு) மாற்றுவார் என்று அர்த்தப்படுத்தியிருக்கலாம் - ஆழ்ந்த பிரியம் காண்பிக்கப்பட்டது. விரைவிலேயே இதன் செயல்விளைவானது மூத்த சகோதரர்களின் பொறாமையில் தோன்றியது. அது யோசேப்பைத் தன்னிலேயே பாழாக்கி விடவில்லை என்பது அவரது இயல்பின் தனிச் சிறந்த பலத்திற்கு ஆதாரமாக உள்ளது, ஏனெனில் அதிகமான ஈடுபாடு என்பது இழப்பைக் காட்டிலும்/ கை விட்டு விடுதலைக் காட்டிலும் அதிகமான (அளவில்) பண்புகளை அழித்து விடுகிறது. யோசேப்பு பிற்பாடு தனது தந்தையின் கூடாரத்தில் வலுவிழந்த சூழ்நிலையில் காட்சிப் படுத்திய ஆரோக்கியமான வளர் மனிதப் பண்பை மேம்படுத்தியிருப்பாரா என்பது கூடச் சந்தேகமே.

ஆ. அவருடைய சகோதரர்களின் ஆழ்ந்த வெறுப்பு.—இது யோசேப்பின் இரண்டு கனவுகளால் வலுப்படுத்தப்பட்டது. ஒரு கனவில் அவர்களின் கதிர்க்கட்டுகள் அவருடைய கதிர்க்கட்டைப் பணிந்து வணங்குகின்றன; இரண்டாம் கனவில் சூரியனும், சந்திரனும், பதினோரு விண்மீன்களும் அவருக்குப் பணிவாக வணக்கம் தெரிவிக்கின்றன - இது அவர் பிறப்புரிமையை எதிர்நோக்கினார் என்பதற்கான கூடுதலான ஆதாரமாக அவர்களுக்குத் தோன்றுகிறது. பொறாமை வெறுப்பைப் பிறப்பிக்கிறது; வெறுப்பு கொலையின் கருமுளையாக உள்ளது. யாக்கோபு யோசேப்பை எபிரோனில் இருந்த அவர்களின் குலமரபு இல்லத்திலிருந்து அவரது (யோசேப்பின்) ஆடுமேய்க்கும் சகோதரர்களிடத்தில் அனுப்புகின்ற பொழுது அவர்களின் வாய்ப்பு வருகின்றது, அவர்கள் சீகேமில் கண்படும்

இடத்தில் தங்கள் மந்தைகளுடன் இருக்கின்றனர். "இதோ, சொப்பனக் காரன் வருகிறான், நாம் அவனைக் கொன்று, இந்தக் குழிகள் ஒன்றிலே அவனைப் போட்டு, ஒரு துஷ்ட மிருகம் அவனைப் பட்சித்தது என்று சொல்லுவோம் வாருங்கள்; அவனுடைய சொப்பனங்கள் எப்படி முடியும் என்று பார்ப்போம்."[5] கொஞ்ச காலம் சென்ற பிறகு அவரை (யோசேப்பை) அவரது தந்தையிடம் மீட்டுக் கொண்டு போக நினைத்த ரூபன், அவரை (யோசேப்பை) குழியில் போடலாம் என்ற திட்டத்தை முன்மொழிந்தார். ரூபன் இல்லாத பொழுது, யூதாவின் ஆலோசனைப்படி யோசேப்பு எகிப்துக்குச் செல்லும்படி ஒட்டகங்கள்மீது அவ்வழியே பயணம் செய்யும் வர்த்தகக் குழுவினரிடம் விற்கப்படுகின்றார். வெறுக்கப்பட்ட (பல வண்ண) மேலங்கியானது ஆட்டுக்குட்டியொன்றின் இரத்தத்திலே தோய்க்கப்படுகிறது, இது, ஆழ்ந்த அன்புடைய தந்தை, யோசேப்பு காட்டு மிருகங்களுக்கு இரையாகி விழுந்தார் என்று நம்பும்படி அவரை மோசம் போக்குகிறது. குடும்பக் குற்றம் மற்றும் துக்கத்தின் காட்சியுடன் திரை விழுகின்றது.

2. எகிப்தில் அவரது (முழு) மனிதப் பருவம்.—*அ. அவரது அடிமை வாழ்வு.*—பார்வோனின் தலையாரிகளுக்கு அதிபதியான போத்திபாரின் அடிமை என்ற வகையில் அவரது (யோசேப்பின்) திறமையும் உண்மைத் தன்மையும் விரைவிலேயே அவரைத் தமது எஜமானரின் வீட்டாருக்குத் தலைவராக்குகின்றது. அவரது உண்மை/ஒழுக்க நெறியே அவருக்கு அழிவு தருவதாகப் பயமுறுத்துகிறது. போத்திபாரின் மனைவியினால் தவறாகக் குற்றம் சாட்டப்பட்ட யோசேப்பு சிறையில் அடைக்கப்படுகின்றார்.

ஆ. அவரது சிறைவாழ்வு.—யோசேப்பு நம்பிக்கையிழந்து கீழே உட்கார்ந்து விடுகிற மனிதராக இருக்கவில்லை. சிறைக் கம்பிகளுக்குப் பின்னால் இருக்கையிலும் கூட துணிவுடனும் உதவி செய்யும் பண்புடனும் இருந்த அவர், மீண்டுமாக நம்பகத் தகுந்த இடத்திற்கு எழும்புகின்றார். சக கைதிகள் இருவரின் கனவுகளுக்கு அர்த்தம் விளக்கிக் கூறியதிலிருந்து அவர் பார்வோனின் கனவுகளுக்கு விளக்கம் கூறும்படி அழைக்கப்படுகின்றார். அது பூமியின் மிகவும் பெருமை வாய்ந்த அரசின் ஏறக்குறைய மிக உன்னதமான அதிகாரத்திற்குப் படியெடுத்து வைக்கும் கல்லாயிருந்ததை நிரூபிக்கின்றது.

இ. அவரது அரசவை வாழ்வு.—யோசேப்பு, எகிப்தின் ஆளுநர் என்ற வகையில், பார்வோனின் கனவுகளினால் முன் நிழலிடப்பட்ட ஏழாண்டுகள் பஞ்ச காலத்திற்கு எதிராக, வளமான ஏழாண்டுகளில் தானியத்தை/கோதுமையைச் சேர்த்து வைக்கின்றார். வளமான வருடங்கள் கடந்து செல்லுகின்றன; பஞ்சமான ஆண்டுகள் வருகின்றன, அவற்றுடன் தானியத்திற்காக யோசேப்பின் சகோதரர்கள் வருகின்றனர். இப்பொழுது (இது) அவருடைய வாய்ப்பாக உள்ளது. அவர்களை ஒற்றர்கள் என்று அவர் பிடித்து வைக்கின்றார். சிமியோனைப் பிணையமாக வைத்துக் கொண்டு மற்றவர்களை அவர் விடுவிக்கின்றார், ஆனால் பெஞ்சமீனை அழைத்துவரா விட்டால் மீண்டும் அவர்களைக் காண்பதற்கு அவர் மறுத்து விடுகின்றார். முதிர் வயதான முற்பிதா (யாக்கோபு) முதலில் பெஞ்சமீனை விட்டுப் பிரிய

மறுக்கின்றார்; ஆனால் பசி என்பது கடினமான எஜமானராய் உள்ளது, (எனவே) கடைசியாக அவர் யூதா உத்திரவாதம் அளிக்க முன் வந்ததன் பேரில் (பெஞ்சமீனை) அவர்களுடன் அனுப்பச் சம்மதிக்கின்றார். அவர்களின் இரண்டாம் வருகையின் போது, யோசேப்பு தமது பான பாத்திரத்தை பெஞ்சமீனின் (தானியச்) சாக்கு மூட்டையில் வைக்கச் செய்து, சகோதரர்கள்மீது திருட்டுக் குற்றம் சாட்டுகின்றார். பிறகு அவர்கள் தங்களுக்கு நேர்ந்த பெருந்துன்பங்களைத் தங்கள் குற்றத்துடன் தொடர்பு படுத்தத் தயாரானபொழுது மனச்சாட்சி எழுப்பப்படுகிறது, கடைசியில் யூதா மாண்புமிக்க வகையில் தம்மையே பெஞ்சமீனுக்குப் பதிலாக அடிமையாக ஒப்புக்கொடுக்கின்றார், யோசேப்பு தம்மை அறியப்படுத்து கின்றார், மற்றும் அவர்களின் குற்றத்தைத் தாராள(குண)மாக மன்னிக் கின்றார். யாக்கோபு (எகிப்துக்கு) அழைத்து வரப்படுகின்றார், மற்றும் உடன்படிக்கையின் மக்கள் எகிப்தில் இருக்கையில் காலம் முடிவடைகிறது. ஆனால், யோசேப்பு எகிப்திலேயே மரித்து அடக்கம் செய்யப்பட்டாலும், மரிக்கும் வேளையில் அவர் கொடுத்த கட்டளையானது (ஆதி. 50:24, 25), உடன்படிக்கை(யின்) வாக்குத்தத்தங்களிலும் தம் மக்களின் எதிர் காலத்திலும் அவர் விசுவாசம் எவ்வளவு உறுதியாய் உள்ளது என்பதைக் காண்பிக்கிறது.

யோசேப்பின் நல்லொழுக்கம் ஒரு ஒருமையான நேர்மையாக உள்ளது. அவர், கற்பனை செய்யப்படக் கூடிய ஒவ்வொரு சோதனைக்கும் ஆளானார்; அவரது தந்தையின் ஒரு தலைப்பட்சமான பாசம், சகோதரர் களின் பொறாமை மற்றும் முற்றிலுமான சேதம், சுத்தமற்ற பெண்ணொருத் தியின் பொய்க் குற்றச்சாட்டுகள், ஒழுக்கமுடைமை குற்றத்தின் தண்டனை யைச் சுமத்தல், மதிப்பும் வல்லமையும்/அதிகாரமும் திடீரென்று உயருதல், ஒவ்வொரு தவறுக்கும் பழி தீர்த்துக் கொள்ளக் கூடிய வாய்ப்பு - இவை அவரது வாழ்வில் இடர்ப்பாடுமிக்க அனுபவங்களாய் இருந்தன. வேறு எந்த மனிதரும் எக்காலத்திலும் இவ்வளவாய்ச் சோதிக்கப்பட்டதில்லை; வேறு எவரும் இவ்வளவாய் வெற்றியடைந்ததுமில்லை. மனித குல மன்னிப்பின் வரலாற்றில் இவர் மிக உன்னதமான முன்னுதாரணமாய்த் திகழுகின்றார்; ஆபிரகாம் கூட தமது விசுவாசத்தில் இவ்வளவு சீராக வெற்றியடைந்த தில்லை. பிறகு ஏன் யோசேப்புக்கு மாறாக ஆபிரகாம் "விசுவாசத்தின் தந்தை" என்று மதிப்பளிக்கப்படுகின்றார்? ஏனெனில் அவர் "விசுவாசப் பயணத்தின் கொலம்பஸ்" ஆக இருந்தார் என்பது தெளிவு. அறியப்படாத சமுத்திரங்களில், அறியாத நாட்டை நோக்கி ஆபிரகாம் பயணம் செய்தார். யோசேப்போ, ஆபிரகாமும், ஈசாக்கும், யாக்கோபும் இருந்து நிறைவேற்றிய வெளிச்சத்தில் தமது பயணத்தை மேற்கொண்டார்.

V. யோபுடைய புத்தகம்.

யோபுடைய புத்தகம் இந்தக் காலத்தைச் சேர்ந்ததாக உள்ளது. பல நூற்றாண்டுகளினால் இது அவ்வளவு முன்னதாக எழுதப்பட்டிருந்தது என்பதல்ல; ஆனால் இதன் நிகழ்ச்சிகள், காட்சிகள், திரைகள், முழுத்தொனி

ஆகியவை முற்பிதாக்களுக்குரியவைகளாக உள்ளன. யோபு கிழக்கத்திய (நாட்டின்) வல்லமைமிக்க பெரிய மனிதராய் இருக்கின்றார், இவரது உடமைகளையும் பிள்ளைகளையும் சூறையாடவும், அவரை வெறுக்கத் தக்க வியாதியினால் உபத்திரவப்படுத்தவும் சாத்தானை தேவன் அனுமதிக் கின்றார்.[6] மூன்று நண்பர்கள் அவரை ஆறுதல்படுத்த வருகின்றனர். இப்புத்தகத்தின் முக்கிய பகுதியில்/பொருளடங்கலில் யோபுவுக்கும் அவரது மூன்று நண்பர்களான எலிப்பாஸ், பில்தாத் மற்றும் சேப்பாருக்கும், எலிகூ என்ற பெயர் கொண்ட இன்னொருவருக்கும், மற்றும் யெகோவா விற்கும் இடையே நடக்கும் மாபெரும் கவிதைத்துவமான வாதம் அடங்கியுள்ளது. யோபு தனது நேர்மையைக் காத்துக் கொள்கின்றார், மற்றும் தமது முன்னைய வளமையிலும் இரு மடங்கை மீண்டும் பெறுகின்றார். அநேகமாக, இந்தப் புத்தகமானது உயர் குறிக்கோள் கொண்ட முற்பிதாக்களின் வரலாற்றினுடைய ஒரு துணுக்காக உள்ளது. இது கவிதைத்துவமான விரிவாக்கமும் அலங்காரமும் சேர்ந்துள்ள வரலாற்றுப்பூர்வமான ஆதாரத்தைக் கொண்டுள்ளது. நிகழ்ச்சிகளின் நாடகத்துவமான வளர்ந்தேறுதலும் தொடர்பும், முன்னேற்பாடற்ற உரையாய் இருக்க (கூடாத அளவுக்கு) மிக விரிவானதாகவும், கவிதைத்துவ மானதாகவும் இந்தக் கண்ணோட்டத்தில் சுட்டிக்காட்டப்படுகின்றது. வாதத்தின் கருப்பொருளாக உள்ளது தீமையின் பிரச்சனை—பண்பிற்கு பெருந்துன்பத்துடன் உள்ள தொடர்பு—ஆகும்; மனிதர்களை அவர்கள் காண முடியாதவற்றின் மீது நம்பிக்கை வைக்கும்படி வழிநடத்துதல் என்பது நோக்கமாக உள்ளது.

குறிப்பு.

முற்பிதாக்கள் காலத்தின் சில பண்புகள்.

1. இது நாடோடித்துவமானதாக இருந்தது.—ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோர் மேனெஸ், நிம்ரோத் மற்றும் ஆசூர் போன்றவர் களைப் போல் நகரங்களைத் தோற்றுவித்தவர்களாயிராமல், இனத்தையும் விசுவாசத்தையும் தோற்றுவித்தவர்களாயிருந்தனர். இவர்கள் கூடாரங் களில் வாழ்ந்தனர். இவர்கள் இடம் விட்டு இடம் பெயர்ந்து சென்றனர். இருப்பினும் இவர்கள் நோக்கமற்று அல்லது சட்டத்திற்கு விரோதமாக சுற்றித்திரிபவர்களாய் இராதிருந்தனர்; இவர்கள் *பயணிகளாய்*, தேவனு டைய அழைப்பின் பேரில் இடம் பெயர்ந்து, மேன்மையான, தொலை தூரத்தில் அடையப்பெறும் நோக்கத்தினால் ஏவப்பட்டு பயணிப்பவர் களாய் இருந்தனர்.

2. இது முற்பிதாக்களுடையதாக இருந்தது.—தந்தை என்பவர் *(அ) குடும்பத்தின் அதிகாரியாக இருந்தார்.* அவர் (குடும்பத்தின்) வாழ்வு மற்றும் மரணத்தின்மீது அதிகாரம் கொண்டிருந்தார். (ஆதி. 22:10; 28:24ஐக் காணவும்.) *(ஆ) இராணுவத் தலைவராய் இருந்தார்.* ஆபிரகாம் மெசொபொத்தோமியர்களுக்கெதிராக ஒரு படையெடுப்புக்குத் தலைமை வகித்தார். *(இ) குடும்ப ஆசாரியராக இருந்தார்.* அவர் பலிபீடத்தைக் கட்டி

குடும்பத்திற்காக பலி செலுத்துகிறார். *(ஈ)* குடும்பத் தீர்க்கதரிசியாக இருந்தார். தேவன் தமது சித்தத்தையும் நோக்கங்களையும் இவருக்கும் இவர் மூலமாகவும் அறியச் செய்கின்றார்.

3. தேவனைப் பற்றிய கருத்துருவாக்கங்கள்.—முற்பிதாக்கள் பின்வரும் கருத்துக்களை உறுதியாகப் பற்றிக் கொண்டிருந்தார்கள்: *(அ)* தேவனுடைய ஒருமைத் தன்மை. பல தெய்வ வணக்கம் பெரு வழக்கமாயிருந்தமைக்கான சுவடு/அடையாளம் எதுவும் இருப்பதில்லை. *(ஆ)* தேவனுடைய ஆளுமைத் தன்மையில் எகிப்தில் மிக அதிகமாக இருந்தது போல இயற்கையை வழிபடுதலின் தொடுகை எதுவும் இருப்பதில்லை. *(இ)* தேவனுடைய உலகளாவிய தன்மை. அவர் முழு உலகத்திற்கும் தேவனாயிருக்கின்றார் (ஆதி. 18:25); பார்வோனுடைய தேவனே ஆபிரகாமுக்கும் இஸ்ரவேலுக்கும் தேவனாக இருக்கிறார்; அவர் நைல் மற்றும் ஐப்பிராத்து மேலும், யோர்தான் மேலும் கூட ஆளுகை செய்கின்றார். *(ஈ)* தேவனுடைய பரிசுத்த தன்மை. அவர், புறமார்க்கத் தெய்வங்களின் குற்றங்களினால் ஒருக்காலும் உருக்கலைக்கப்படுவதில்லை. பூமி முழுவதற்கும் நியாயாதிபதியாக உள்ளவர் சரியானதையே செய்வார் (ஆதி. 18:25).

4. ஆராதனையின் வடிவங்கள்.—ஆலயங்களோ அல்லது எடுத்துரைக்கப்பட்ட பண்டிகைகளோ இருந்ததில்லை; பின்னாளில் வந்த மோசேயின் பிரமாணமானது தேவன் படைப்பு (தொழிலில்) இருந்து ஏழாம் நாளில் ஓய்ந்திருந்ததின் அடிப்படையில் அமைந்திருந்தாலும், (முற்பிதாக்களின் யுகத்தில்) ஓய்வு நாளை ஆசரித்ததற்கான குறிப்பிட்ட சுவடு/அடையாளம் எதுவும் இருப்பதில்லை, மற்றும் காலத்தின் வாராந்திரப் பிரிவுக்கான அடையாளங்கள் உள்ளன (ஆதி. 8:10-12). கரடு முரடான பலிபீடங்களும், மிருக பலியும், பரிசுத்தப் படுத்தப்பட்ட நினைவு(ச் சின்னங்)களும், பொருத்தனைகளும், பயணங்களும், ஜெபங்களும், தசம பாகங்களும், மற்றும் விருத்தசேதனச் சடங்கும் இருந்தன.

5. நாகரிகத்தின் அளவு.—முற்பிதாக்கள் நாடோடிகளாய் இருந்த போதிலும், அவர்கள் நாகரிகமற்ற காட்டு மிராண்டிகளாய் இருந்ததில்லை. அவர்கள் கல்தேயாவிலும் எகிப்திலும் அந்தக் காலத்திலிருந்த மிகவுயர்ந்த நாகரிகத்துடன் தொடர்பு கொண்டிருந்தார்கள். அவர்கள் மேய்ப்பர்களாய் இருந்தார்கள், ஆயினும் விவசாயத்தைச் செயல் (முறைப்) படுத்தினார்கள். அவர்கள் பணமும் ஆபரணமும் வைத்திருந்தார்கள்; யூதா ஒரு முத்திரை மோதிரம் வைத்திருந்தார், மற்றும் யோசேப்பு பிரபுக்களுக்குரிய ஆடை கொண்டிருந்தார்; மற்றும் அவர்கள் நைல், ஐப்பிராத்து சமவெளிகளில் மலர்ந்த எழுத்துக் கலையிலும் பழக்கம் கொண்டிருந்தார்கள் என்பது பொருத்தமற்றதாக இருப்பதில்லை.

6. உடன்படிக்கையின் முக்கியத்துவம்.—ஆபிரகாமுடனான உடன்படிக்கையானது முற்பிதாக்கள் காலத்தின் மற்றும் எபிரெயர்களின் முழு வரலாற்றின் முக்கியமானதாக உள்ளது. இவ்வரலாறு வலுமிக்க வகையில் மனிதத்துவமானதாக உள்ளது என்பதில் சந்தேகம் இல்லை. இடம் பெயருதல்கள், குடும்ப மற்றும் இன வாழ்வு ஆகியவற்றில் இயல்பான நோக்கங்கள் தங்கள் பங்குப்பணியைச் செய்கின்றன. ஆனால் உடன்

படிக்கைதான் படைப்பாற்றல்மிக்க உண்மை மற்றும் சக்தியாக உள்ளது. அதுதான் எபிரெயர்களை உலகின் தனிச் சிறந்தவர்களாக்கிற்று. அதுதான் அவர்களை, ஒரு நாட்டையும், ஒரு இனத்தையும் மற்றும் எல்லா இனங்களையும் ஆசீர்வதிக்க வேண்டிய ஒரு “சந்ததியையும்” தொடர்ந்து முன் கண்ணோக்கும்படி வழிநடத்தியது. தொடக்கத்தில் ஆபிரகாமுடன் கல்தேயாவில் செய்து கொள்ளப்பட்ட இந்த உடன்படிக்கையானது கானானில் அவருக்கு ஐந்து அல்லது ஆறு முறைகள் உறுதிப்படுத்தப் பட்டது, ஈசாக்குக்கு புதுப்பித்து விளக்கப்பட்டது, மற்றும் யாக்கோபுக்கு மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டது. இதன் அடிப்படையிலேயே யோசேப்பு தன் மரண வேளையில் கட்டளை கொடுத்தார்; அதே வேளையில் பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு அது மோசேக்கு எரியும் புதரில் புதுப்பிக்கப் பட்டு, இனத்திற்குரிய உடன்படிக்கையாக சீனாய் மலையில் விரிவாக்கப் பட்டது. ஒரு மனிதனின் அல்லது மக்களின் பண்பின்மீதான இப்படிப் பட்ட விசுவாசம் மற்றும் நம்பிக்கையின் படைப்புருவாக்க வல்லமைக்கு அளவென்பதே இருப்பதில்லை.

குறிப்புகள்

[1]*ஆதி. 12:7.* [2]இவ்விடத்தில் டீன் அவர்கள் “சண்டையிடுன்றவள்” என்று குறிப்பிட்டிருந்தார். [3]*ஆதி. 22:2.* [4]*ஆதி. 25:23.* [5]*ஆதி. 37:19, 20.* [6]இவ்விடத்தில் டீன் "suffered" என்று எழுதியிருந்தார்.

4

அடிமைத்தனத்தின் காலம்,

கி.மு. 1706–1491

எகிப்துக்கு இடம் பெயர்ந்ததிலிருந்து
வெளியேற்றம் வரை
யாத்திராகமம் 1-14

I. எபிரெயர்கள் அடிமைத்தனத்தில் இருந்த காலத்தில் எகிப்து.

பழங்கால எகிப்தின் வரலாறு சில வேளைகளில் (பின்வருமாறு) மூன்று கால கட்டங்களாகப் பிரிக்கப்படுகின்றது:

1. பழைய பேரரசு. *அறியப்படாத பழங்காலத்திலிருந்து கி.மு. 2100 வரை.*

2. மத்திய கால அல்லது ஹிக்ஸோஸ் பேரரசு, *கி.மு. 2100-1650.*

3. புதிய பேரரசு, *கி.மு. 1650-525. ஹிக்ஸோஸ்கள் வெளியேற்றப்பட்ட பிறகு பெர்ஸியப் பேரரசினால் எகிப்து முழுவதுமாக எடுத்துக் கொள்ளப் படுதல் வரை.*

முதலாவது கால கட்டத்தில், மேனெஸ் என்பவர் எகிப்தின் கீழ்ப்பகுதியில் இருந்த இனங்களை ஒன்று படுத்தி/பலப்படுத்தி மெம்ப்பிஸ் என்ற மிகப் பழைமையான தலைநகரைத் தோற்றுவித்தார், மற்றும் இவர் எகிப்தின்மீது ஆட்சி செலுத்திய முப்பத்தியொரு அரச பரம்பரைகளில் முதலாமவராக இருந்தார். (பல) நூற்றாண்டுகளுக்குப் பின்னர், நான்காம் அரச பரம்பரையைச் சேர்ந்தவர் மாபெரும் பிரமிடுகளைக் கட்டி யெழுப்பினார். இன்னும் பிற்காலத்தில் பன்னிரெண்டாம் அரச பரம்பரை யைச் சேர்ந்தவர் அதிகாரத்தின் இருக்கையை எகிப்தின் மேல்பகுதியில் இருந்த தெபெஸ் என்ற இடத்திற்கு மாற்றினார், அங்கு அவர்கள் (இந்த) முதல் காலகட்டத்தின் மகா மேன்மையான யுகத்தைத் தொடங்கி வைத்தனர்.

மத்திய காலப் பேரரசின் ஹிக்ஸோஸ் அல்லது மேய்ப்பர் அரசர்கள் ஆசியாவிலிருந்து ஊடாடிய செமிட்டிக் இனத்தவராயிருந்தனர். அவர்கள் வல்லமையுள்ள ஒருங்கமைப்பாளர்களாக இருந்த போதிலும், முதலில் பண்படாத காட்டு மிராண்டிகளாகவே இருந்தனர், அவர்களின் ஆளுகை

யின் கீழ் எகிப்திய நாகரிகமானது ஒரு கிரகணத்தை (மறைக்கப்படுதலை) அனுபவித்து பாடுபட்டது.

ஹிக்ஸோஸ்களை வெளியேற்றி புகழ் பெற்ற பதினெட்டாவது அரச பாரம்பரியத்தைத் தோற்றுவித்த அமோசிஸ் என்பவரால் புதிய பேரரசு தொடங்கப்பட்டது, இப்பாரம்பரியத்தில் எகிப்தியரின் அலைக்சந்தர் எனப்படும் மூன்றாம் தோத்மெஸையும் உள்ளடக்கும். இது, பத்தொன்ப தாவது அரச பரம்பரையுடன் (சேர்த்து) எகிப்திய வரலாற்றின் மிக உன்னதமான சகாப்தத்தைக் கொண்டிருந்தது. (இந்த அரசாட்சியின்) முற்பகுதியில் கல்தேயாவிலிருந்து எபிரெயர்கள் (இங்கு) இடம் பெயர்ந்து வந்த நிகழ்ச்சி நடைபெற்றிருக்கலாம், மற்றும் அவர்கள் (இந்த) மத்திய காலத்தின் பிற்பகுதியில் எகிப்துக்கு இடம் பெயர்ந்திருக்கலாம். இது ஆபிரகாம், யோசேப்பு, மற்றும் யாக்கோபு ஆகியோரை பார்வோன் அக்கறையுடன் நடத்தியதற்கு காரணமாக இருக்கும். செமிட்டிக் இனத்தவர்கள் தங்களுக்குள்ளாக, அந்நியர்கள் மீதான எகிப்தியரின் வெறுப்புணர்வைப் பகிர்ந்து கொள்ள மாட்டார்கள்.

II. கொடுமைப்படுத்தப்படுதல்.

எகிப்தியர்களிடம் எபிரெயர்கள் உயர்வான சலுகைகளைப் பெற்றுக் கொள்வதுடன் ஆதியாகமம் முடிவடைகின்றது, அடிமைகளின் இனத்துடன் யாத்திராகமம் தொடங்குகின்றது. எகிப்திய நாடானது "அடிமைத்தனத்தின் வீடானது." இதுவரை கடந்து சென்ற பரிசுத்த வரலாற்றின்படி, இவைகள் இடைப்பட்டுக்கிடந்த அமைதியான நூற்றாண்டுகளாய் உள்ளன.[1] அரச பரம்பரைகள் எழுச்சியுற்றிருக்கலாம், வீழ்ச்சியுற்றிருக்கலாம், தொலை தூரத்தில் யுத்தங்கள் நடத்தப்பட்டிருக்கலாம், மேன்மை மிக்க ஆலயங்களின் சிதிலங்கள் உலகத்தை இன்னமும் பிரமிப்பில் ஆழ்த்துகிற, அவைகள் கட்டி எழுப்பப்பட்டிருக்கலாம், ஆனால் உலக மகிமை மாத்திரமே தெய்வீகப் பதிவேடுகளில் இடம் பெறுவதில்லை. தொகுத்துரைக்கப்பட்ட வரலாற்றில் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மீட்பின் பரிணாமத்தில் ஒரு புதிய முன்னேற்றத்திற்கான செயல் தாக்கத்தின் வேளை இன்னமும் வராதிருந்தது.

கடைசியில், "யோசேப்பை அறியாத புதிய ராஜன் ஒருவன் எகிப்தில் தோன்றினான்" (யாத். 1:8). மாபெரும் பயன்கள் விரைவில் மறக்கப்படுகின்றன. சாலாமிஸின் பதினான்கு ஆண்டுகளுக்குள்ளாக, தெமிஸ்டோக்கிள்ஸ் நாடு கடத்தப்படுகிறார்; வாட்டர்லூவின் பதினேழு ஆண்டுகளுக்குள்ளாக வெல்லிங்டன் கோமகன் இலண்டன் கும்பல் ஒன்றினால் தாக்கப்பட்டார். நூற்றாண்டுகள் காலமானது எபிரெயரான யோசேப்பினால் அளிக்கப்பட்ட மாபெரும் பணியின் கருத்தை அழித்திருந்தது பற்றி நாம் வியப்படைவது மிகவும் அரிதான விஷயமாகும். "புதிய அரசன்" அநேகமாக, செமிட்டிக் ஹிக்ஸோஸ்களை எகிப்திலிருந்து துரத்தி சொந்த நாட்டின் ஆட்சியாளர்களை மீளக்கட்டியெழுப்பிய புரட்சியையே சுட்டிக்காண்பித்துள்ளார் (என்று நாம் கருத இடமுண்டு). முதலாம் சேட்டி,

இரண்டாம் இராம்சேஸ் மற்றும் மெனேப்தா ஆகிய மூன்று அரசர்களே அடிமைத்தனம் மற்றும் கடந்து செல்லுதல் காலங்களில் ஆண்ட பார்வோன்களாயிருக்க வேண்டும், இவர்கள் யாவரும் பத்தொன்பதாம் அரச பரம்பரையின் அரசர்களாய் இருந்தனர். சேட்டி என்ற பார்வோன் எபிரெயர்களின் வளர்ச்சி பற்றி எச்சரிக்கை செய்து, படையெடுப்பையும் மற்றும் ஹிக்ஸோக்களின் நீண்ட கால வன்முறையாக அதிகாரத்தைக் கைப்பற்றும் செயலையும் மீண்டும் நினைவுபடுத்தி, எபிரெயர்களின் ஆவியை முறித்துப் போடத் தீர்மானம் செய்தார். அவர்களை அவர் செங்கல் சூளைகளில் தங்களுடைய உழைப்பை வீணாக்கும்படிக்கு மட்டுப் படுத்தினார்; இருந்தாலும் அவர்கள் பலுகிப் பெருகினார்கள். கடைசியில் அவர் (எபிரெயர்களுக்குப்) பிறக்கும் ஒவ்வொரு ஆண் குழந்தையையும் நைல் நதியில் வீசி எறியும்படி கட்டளையிட்டார். பின்பு விடுவிப்பவர் வந்தார்.

III. மோசேயின் பிறப்பும் ஊழியமும்.

எல்லாவற்றிலும் எல்லாமுமாக, ஒரு நாட்டுப் பற்றாளர், கவிஞர், விடுவிப்பவர், பிரமாணத்தைக் கொடுப்பவர், வரலாற்றாளர், *மனிதர்* என்ற வகையில் மோசே, வரலாற்றில் மாபெரும் பாத்திரமாக உள்ளார். பதினெட்டாவது மற்றும் பத்தொன்பதாவது அரச பரம்பரைகளின் பார்வோன்கள் தங்கள் மாபெரும் செய்கைகளை கருங் கற்பலகைகளில் செதுக்கி விட்டுச் சென்றனர். இருப்பினும் அவர்களின் பெயர்கள் சமீபத்தில் தோண்டியெடுக்கப்பட்ட பாதுகாத்து வைக்கப்பட்டிருந்த சடலங்களின் புகைப்படங்கள் என்ற வகையில் நிழல் ரூபமாக மட்டுமே உள்ளன. மோசே தமது பதிவேட்டை ஒரு இனத்தின் மீதும் ஒரு மதத்திலும் எழுதி வைத்தார். அவரது பெயரானது, பெருமைமிக்க பார்வோன் தேவனுடைய மக்களை (நாட்டை விட்டு) செல்வதற்கு அனுமதிக்கச் சம்மதித்த வேளையில் அவர் சுழன்று எழும்பிய அந்த இரவு வேளையைக் காட்டிலும், முப்பத்து-மூன்று நூற்றாண்டுகளுக்குப் பிறகு (இன்று) மாபெருமையுடன் விளங்குகின்றது. அவரது வாழ்வானது இயல்பாகவே மூன்று சம அளவான பிரிவுகளில் அடங்குகின்றது: எகிப்தில் நாற்பது ஆண்டுகள்; மீதியான் நாட்டில் நாடு கடந்த நிலையில் நாற்பது ஆண்டுகள்; இஸ்ரவேலின் விடுதலையாளராக, நடத்துனராக மற்றும் ஒருங்கமைப்பாளராக நாற்பது ஆண்டுகள். அவரது வாழ்வின் கடைசி நாற்பது ஆண்டுகள் அவரது மக்களின் வரலாறாக உள்ளது, அது அடுத்த கால கட்டத்தின் அடிப்படையாக அமைந்துள்ளது.

1. எகிப்தில் நாற்பது ஆண்டுகள்.—*அ. அவரது பிறப்பும் கல்வியும்.*— லேவி கோத்திரத்தைச் சேர்ந்த அம்ராம் மற்றும் ஏகொபேத் என்ற தேவபக்தி யுள்ள பெற்றோருக்கு மோசே பிறந்தார். அவர்களின் முந்திய பிள்ளை களான மிரியாமும் ஆரோனும், சேட்டியின் கொலைத்தன்மை கொண்ட உத்தரவு இடப்படு முன்பே பிறந்தார்கள் என்று காணப்படுகின்றது. அவர்களின் மூன்றாவது குழந்தை பிறந்த போது நிலைமை அப்படியிருக்க வில்லை. அவரது பிறப்பு மூன்று மாதங்கள் வரையிலும் அதிகாரிகளிடத்தில்

(விஷயம் தெரிந்து விடாமல்) இரகசியமாய்க் காக்கப்பட்டிருந்தது. இனியும் அதை இரகசியமாய் வைக்க முடியாதென்ற நிலை வந்த பொழுது, அந்த அழகுமிக்க குழந்தை நாணற் பெட்டியில் வைக்கப்பட்டு நைல் நதியில் ஒப்புவிக்கப்பட்டது. அக்குழந்தையைப் பார்வோனின் மகள் கண்டெடுத்து தத்தெடுத்துக் கொண்டு, அதற்கு மோசே என்று பெயரிடுகின்றாள். பலவீனமான அந்த (நாணற்) கை வேலைப் பெட்டியையும் அதில் இருந்த விலைமதிப்பேறப் பெற்ற சுமையையும் பின்தொடர்ந்து சென்ற மிரியாம், அக்குழந்தைக்குப் பாலூட்டி வளர்க்க ஒரு தாதியை அழைத்து வருவதாகக் கூறி, தனது சொந்தத் தாயையே அழைத்துக் கொண்டு வருகின்றாள். இவ்விதமாகத் தேவனுடைய அருளிரக்கத்தினால், (இஸ்ரவேல்) இனத்தின் எதிர்கால நண்பர், அடிமைத்தனத்திலிருந்து விடுவிப்பவர், மற்றும் ஒருங்கமைப்பாளர் (அக்காலத்தில்) உலகிலிருந்த வற்றிலேயே சாத்தியக் கூறுள்ள வகையில் மதிநுட்பமான கலாச்சாரத்தில் (அப். 7:22) வளர்க்கப் படுகின்றார், மற்றும் அவரது சொந்தத் தாயாலேயே அக்காலத்தில் உலகில் இருந்த மிக மிக மேன்மையான ஆவிக்குரிய விசுவாசத்தில் பயிற்றுவிக்கப் படுகின்றார்.

ஆ. மோசேயின் தெரிவு.—மோசே (வளர்ந்து) மனிதராகின்றார். அவரது எபிரெயத் தோற்றம்/தொடக்கம் என்பதன் இரகசியம் அவருடைய தாக(வே) உள்ளது. எகிப்திய ஆளோட்டி ஒருவர் எபிரெயர் ஒருவரை அடித்ததைக் கண்ட அவர் (மோசே) அந்த எகிப்தியனைக் கொன்று, அந்த உடலை மணலினுள் மறைத்தார். மோசே தனது இரத்தக் குழாய்களில் அநீதியைப் பொறுக்க கூடாமல் துடிக்கக் கூடிய சூடான இரத்தத்தைக் கொண்டிருந்தார் என்பதில் ஐயம் எதுவும் இல்லை. ஆனால் அந்தச் செய்கை யானது அந்தக் கணத்தின் அவசரத் தூண்டுதலினால் ஆனதாயிராதிருந்தது. எபிரெயர் 11:24-26 மற்றும் அப்போஸ்தலர் 7:23-25 வசனப் பகுதிகளி லிருந்து இரு விஷயங்கள் தெளிவாய் உள்ளன: (1) அவர் அடிமைப்படுத்தப் பட்டிருந்த தம் சகோதரர்களுடன் பாடநுபவிப்பதற்காக எகிப்து அளிக்கக்கூடிய அந்தஸ்து எல்லாவற்றையும் வேண்டுமென்றே மனப்பூர்வ மாகத் துறந்து விட்டிருந்தார்; (2) அவர் இஸ்ரவேலரை விடுதலைக்காகத் தைரியமாய்ப் போராடுபவர்களாக்குவதற்கு (அவர்களின் உணர்வைத் தட்டி) எழுப்பலாம் என்று நம்பிக்கை கொண்டிருந்தார். ஆனால் காலம் இன்னும் கனியாதிருந்தது, மற்றும் அவரோ அல்லது அவருடைய மக்களோ இன்னமும் ஆயத்தமாகவில்லை. விலங்குகள் (அடிமைத்தனக் கொடுமை கள்) அதிக பாரமாக ஆகியிருக்க வேண்டும், மற்றும் மோசே தாமே தமது மாபெரும் ஊழியத்திற்கு ஒழுங்கு படுத்தப்பட்டிருக்க வேண்டும். எகிப்து கலைகளுக்கும் அறிவியல்களுக்கும் சிறந்ததொரு கலாசாலையாக இருந்தது; மற்றும் அவரது தாயின் மடியில் அவர் மதத்தின் அடிப்படைப் பாடங்களை மனதில் ஈர்த்திருந்தார்; ஆனால் அவர் தமது மேன்மை மிக்க ஊழியத்திற்குத் தேவையான யாவும் அளிக்கப்பட்டுத் தயாராவதற்கு முன் தேவனுடன் அதிக(நேர)ம் தனிமையில் இருக்க வேண்டியிருந்தது. மீதியானின் பாலைவனத்தில் மற்றும் சீனா(ய் மலை)யின் தனிமையில், தேவனைத் தமது போதகராகக் கொண்ட நிலையில் அவர் தமது பல்கலைக் கழகத்தைக்

கண்டறிகின்றார், தமது பட்டத்தைப் பெறுகின்றார்.

2. மீதியானில் நாற்பது ஆண்டுகள்.—மோசே, செங்கடலுக்குக் கிழக்கே இருந்த மீதியான் நாட்டிற்குத் தப்பியோடுகின்றார். ஒரு நாள் மாலைப் பொழுதில் ஒரு கிணற்றை மூடியிருந்த கல்லின் அருகே அவர் அமர்ந்திருந்த வேளையில், மீதியானின் ஆசாரியராயிருந்த எத்திரோவின் ஏழு மகள்கள் தங்கள் மந்தைகளுக்குத் தண்ணீர் காட்டுவதற்காக அவ்விடத்திற்கு வந்தனர். முரட்டுத்தனமான நாடோடி மேய்ப்பர்கள் சிலர், அப்பெண் களின் மந்தைகளை விரட்டினர். ஒடுக்கப்பட்ட தமது சகோதரர்களின் சார்பாக வீறு கொண்டெழுந்த மோசேயின் ஆவி, ஒடுக்கப்பட்ட இப்பெண் களின் சார்பாக(வும்) சற்றேனும் வீரம் குறையாதிருந்தது. தேடப்பட்டு வந்த "எகிப்தியர்" (மோசே) என்பவரால் தக்க காலத்தில் செய்யப்பட்ட இந்த உதவியானது ஒரு சாதகமான அறிமுகமாய் இருந்ததாக நிரூபிக்கப்பட்டது. அவர், எத்திரோவின் மகளான சிப்பொராளைத் திருமணம் செய்து கொள்கின்றார். நாற்பது ஆண்டுகள் அளவாக அவர் மீதியானில் ஒரு மேய்ப்பராக அமைதியான (அத்)தொழிலைப் பின்பற்றுகின்றார். அங்கு அவர் தமது மக்களை வாக்குத்தத்தம் செய்யப்பட்ட நாட்டிற்கு வழிநடத்திச் செல்ல வேண்டியிருந்த கரடுமுரடான நாட்டைப் பற்றி நன்கறிந்து பழக்கப்படுத்திக் கொள்ளுகின்றார். கடைசியில், தேவன் எரியும் புதரில் அவருக்குத் தரிசனமாகின்றார். அவர் (தேவன்) தம்மை "ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோரின் தேவன்"[2] என்று வெளிப்படுத்துகின்றார், முற்பிதாக்களின் யுகத்தின் முழுவதிலும் வலிவான வகையில் செயல்பட உடன்படிக்கையைப் புதுப்பிக்கின்றார், மற்றும் இஸ்ரவேலரை விடுவிக்கும் படி மோசேக்கு கட்டளை கொடுக்கின்றார். இப்பொழுது பயம் வளரப் பெற்ற மற்றும் பேச்சில் தாமதப் போக்கு கொண்ட மோசே, தம்மை அரசர் களுக்கு முன்பாக அரண்மனைகளுக்கு இட்டுச் செல்ல வேண்டியிருந்த ஒரு ஊழியத்திலிருந்து பின்வாங்குகின்றார். ஆனால் தேவனிடமிருந்து தமது சான்றுகளாக இயற்கைக்கு அப்பாற்பட்ட அற்புதங்கள் என்ற ஆயுதந் தரிக்கப்பட்ட நிலையிலும், ஆரோன் தமக்காக (மோசேக்காக) பேச நியமிக்கப்பட்ட நிலையிலும், மோசே எகிப்துக்குத் திரும்புகின்றார்.

IV. மாபெரும் போட்டி.

இப்பொழுது, வரலாற்றிலேயே மிகவும் குறிப்பிடத்தக்கதான போட்டி தொடருகின்றது. மோசே மீதியான் நாட்டை விட்டுச் செல்லுகின்ற (வழியில்) போது ஆரோன் அவரைச் சந்திக்கின்றார். அவர்கள் ஒன்றாகத் தங்கள் சொந்த மக்களின் மூப்பர்களுக்கு முன்பாகச் செல்லுகின்றனர், தங்கள் ஊழியத்தை (அவர்கள்) அறியச் செய்கின்றனர், மற்றும் நியமிக்கப் பட்ட அடையாளங்களைக் கொண்டு அதை உறுதிப்படுத்துகின்றனர். ஒடுக்கப்பட்ட மக்கள் இவர்களின் ஊழியத்தை ஏற்றுக் கொண்டு, தங்கள் பிதாக்களின் உடன்படிக்கையினுடைய தேவனை பயபக்தியுடன் பணிந்து கொள்கின்றனர். அவர்கள் பார்வோன் மன்னரிடம் அவ்வளவாக வெற்றி யடையவில்லை. யேகோவாவின் நாமத்தினால் அவர்கள் (மோசே &

ஆரோன்), இஸ்ரவேல் மக்களை யேகோவாவுக்குப் பலி செலுத்துவதற்காக வனாந்திரத்திற்கு மூன்று நாட்கள் பயணம் செல்ல அனுமதிக்க வேண்டும் என்று (பார்வோனிடத்தில்) கேட்கின்றனர். அவர் இவ்வளவு மிதமான ஒரு வேண்டுகோளுக்கு சம்மதித்திருந்தாரானால், பார்வோனுக்கும் (மோசே யின்) மக்களுக்கும் நன்மையாய் இருந்திருக்கும். விலங்குகள்/கட்டுகள் (இன்னும் அதிகமாய்) பிணைக்கப்பட்டதும் சுமைகள் அதிகமாக்கப் பட்டதுமே முதல் செயல்விளைவாயிருந்தது. பார்வோனிடமிருந்து முரட்டுத்தனமான மறுப்பையும் கடினமான உழைக்கும் தமது சகோதரர் களிடமிருந்து கசப்பான வசவுகளையும் சந்தித்த மோசே தமது கவலை யினால் செய்வதறியாத நிலையில் இருக்கின்றார். அடிமேல் அடியாக பத்து வாதைகள் அல்லது "அடிகள்" தொடருகின்றன: தண்ணீர் இரத்தமாகுதல், தவளைகள், பேன்கள், வண்டுகள், கொள்ளை நோய், கொப்புளங்கள், கல்மழை, வெட்டுக்கிளிகள், காரிருள், முதற் பேறான/தலைப் பிள்ளைச் சங்காரம்.

1. போட்டியின் இயல்பு.—இது அடிமைப்படுத்தப்பட்ட இனமொன் றிற்கும் அவர்களை ஒடுக்கி வைத்திருப்பவர்களுக்கும் இடையிலான போராட்டம் மட்டுமாக இருந்ததில்லை; இது மோசேக்கும் பார்வோனுக் கும் இடையிலான ஒரு போட்டியாக இருந்தது. இது யேகோவாவுக்கும் எகிப்திய தெய்வங்களுக்கும் இடையிலான ஒரு வாக்குவாதமாக இருந்தது. ஏறக்குறைய ஒவ்வொரு வாதையும் எகிப்தின் இயற்கைச் சீற்றமாகவே இருந்தது; இருப்பினும், அவற்றின் அற்புதவிதமான பண்பானது அநேக சூழ்நிலைகளிலிருந்து காணப்படுகின்றது: அவற்றின் கடுமையான நிலை/ தீவிரத் தன்மை, மிகத்துரிதமாக ஒன்றன் பின் ஒன்றாக வருதலில் அவற்றின் பெருக்கம்; அவைகள் மோசேயின் வார்த்தைகளினால் வந்தன மற்றும் போயின; முதல் மூன்று வாதைகளில் இஸ்ரவேலர் விதிவிலக்காகக் காக்கப் படுகின்றார்கள், எகிப்திய விக்கிரக ஆராதனையின் ஏதோ ஒரு வடிவத்தைப் பின்பற்றியவர்களில் ஏறக்குறைய அனைவருமே அடி பெற்றனர்.

2. போட்டியின் தேவை.—உலகம் முழுவதிலும் ஒரு தனித்த இனம் தேவனுடைய ஒருமைப்பாட்டையும் ஆவிக்குரிய தன்மையையும் பற்றிக் கொண்டிருந்தது என்பதை நினைவில் வையுங்கள்; மற்றும் அவர்கள் தங்கள் விசுவாசத்தையும், இன அடையாளத்தையும் இழந்து போகும் அபாயத்தில், அடிமைத்தனத்தில் இருந்தனர். எண்ணிக்கைகள், சொத்துக்கள், கலாச் சாரம், வல்லமை/அதிகாரம், நூற்றுக்கு ஒன்று என்பதாக அவர்களுக்கு எதிரானவைகளாய் இருந்தன. ஒருபோதும் இழந்து போகப்படக் கூடாது என்பதற்கு ஒரு பாடம் தேவைப்பட்டிருந்தது;—மற்றும் அது இழந்து போகப்படாதிருந்தது. எகிப்தின் விக்கிரகங்கள் தூசியாகும்படி நொறுக்கப் பட்டன அல்லது பழம்பொருள் ஆய்வாளர்களின் பழம்பொருள் காட்சிக் கூடங்களை அலங்கரிக்கச் சென்றன; இஸ்ரவேலின் தேவன் நாகரிகமடைந்த உலகத்தினால் ஆராதிக்கப்படுகின்றார். எகிப்தில் நடந்த அடையாளங்களும் அற்புதங்களும் எபிரெய இலக்கியத்தின் பெரும் பகுதியை நிரப்புவதற்கு வந்தன. அவைகள் இஸ்ரவேலரை எல்லா வகையிலும் சங்கடப்படுத்தும் பல தெய்வ வணக்கத்திற்கு மத்தியில் தங்கள் முன்னோர்களின் விசுவாசத்தைப்

பற்றிப் பிடித்துக் கொள்ளும் மிகுந்த செயல்வலிவுமிக்க சக்திகளை வடிவமைக்கக் கூடிய இன உணர்வின் கூறுகளாக ஆயின.

3. போட்டியின் முடிவு.—கடைசி அடி விழுகின்றது. மரணத்தின் தூதர் அரண்மனையிலிருந்து சிறைச்சாலை வரை எகிப்தின் கதவு ஒவ்வொன்றையும் தட்டுகின்றார், முதற் பிறந்தவர்கள் யாவரும் மரணம் அடைந்து கிடக்கின்றனர். ஆனால் எபிரெயரின் எளிய இல்லங்கள் பாதுகாப்பாக உள்ளன. அவர்கள் தேவனுக்குக் கீழ்ப்படிந்து பஸ்காவை ஏற்படுத்தினார்கள். ஆட்டுக்குட்டி கொல்லப்படுகின்றது; அதன் இரத்தமானது எபிரெய விசுவாசத்தின் அடையாளமாக கதவு நிலைக் கால்களில் தெளிக்கப்படுகின்றது. பஸ்கா பண்டிகை கடைப்பிடிக்கப்படும் இல்லங்களுக்கு மேலாக, திகைப்பூட்டும் தூதர் துன்பம் எதுவும் தராமல் கடந்து செல்லுகின்றார். எகிப்திலிருந்து மாபெரும் கூக்குரல் எழும்புகின்றது. விலங்குகள் (கட்டுகள்) வீழ்கின்றன, இஸ்ரவேலர்கள் விடுதலையை நோக்கி முன்னாகச் செலுத்தப்படுகின்றனர். பார்வோனின் இருதயம், கடைசியாக ஒருமுறை கடினப்படுத்தப்படுகின்றது. அவர் பின்தொடருகின்றார்; இஸ்ரவேலர்கள் தங்களுக்கு முன்பாகச் செங்கடல் இருக்க, மலைகளின் அசுத்தத்தில்/அசுத்தக் குவியலில் சிக்கிக் கொள்ளுகின்றனர்; கடல் பிரிகின்றது; இஸ்ரவேலர்கள் (அதனூடாகக்) கடந்து சென்று காக்கப்படுகின்றனர்; எகிப்தியர்கள் பின்தொடருகின்றனர், மற்றும் அவர்கள் கடலில் மூழ்கடிக்கப்படுகின்றனர்.[3]

V. எகிப்தில் சஞ்சரித்ததின் செயல் விளைவு.

எகிப்திய அடிமைத்தனத்தில் இருந்ததென்பது கசப்பாய் இருந்தது எனினும்/போலவே, அது (பின்வரும்) முக்கிய விளைவுகளையும் நிகழ்த்தியிருந்தது:

1. அது இஸ்ரவேலை ஒரு இனமாக்கியது.—அவர்கள் பன்னிரெண்டு நாடோடிக் குடும்பங்களாக எகிப்தில் நுழைந்தார்கள். யாக்கோபும் அவரது நேரடிப் பின் சந்ததியினரும் எண்ணிக்கையில் எழுபது பேர்களாய் இருந்தார்கள். வேலைக்காரர்கள் உட்பட, அந்த முழு இனமும் எண்ணிக்கையில் இரண்டு அல்லது மூன்று ஆயிரமாய் இருந்திருக்கலாம். அவர்கள் கானானிலேயே இருந்திருந்தால், நிச்சயமாய் அவர்கள் அலைந்து திரியும் பன்னிரெண்டு சிறு இனங்களாக உடைந்து போயிருப்பார்கள். மக்கள் நெருக்கம் அதிகமாயிருந்த நாட்டில், ஒடுக்கப்படுதலின் கனத்த கரத்தின் கீழ் தங்கியிருந்ததென்பது அவர்களை ஒரு இனமாகக் கச்சிதமாய்க் கட்டி எழுப்பிற்று.

2. அது அவர்களை நாகரிகப்படுத்தியது.—அவர்கள் கானானின் நாடோடிகளை விட்டுச் சென்றனர். அவர்கள் எந்த அளவுக்கு நாகரிகம் கொண்டிருந்தனர் என்பதை நாம் ஏற்கனவே கண்டுள்ளோம். ஆனால் அவர்கள் எகிப்தில் இனியும் வெறும் மேய்ப்பர்களாக மட்டுமே வாழ்க்கையைத் தொடர முடியாதிருந்தது. எகிப்து ஒரு விவசாய நாடாகவே

உள்ளது, அது எப்பொழுதும் இவ்வாறே இருந்திருக்க வேண்டும். மேலும் அது ஆயிரம் ஆண்டுகள் அளவாக உலகின் மதிநுட்ப வாழ்வு மற்றும் பொருளாதாய நாகரீகம் ஆகியவற்றில் தலைமை நிலையில் இருந்து வந்தது. இப்படிப்பட்ட ஒரு பள்ளியில் நீண்ட காலம் சஞ்சரிப்பதற்கு எபிரெயர்கள் மிகவும் வரம் பெற்ற மக்களாக இருந்தார்கள். விசேஷமாக மோசே, "எகிப்தியருடைய சகல சாஸ்திரங்களிலும் கற்பிக்கப்"பட்டார் (அப். 7:22); ஆனால் ஆசரிப்புக் கூடாரம் கட்டப்பட்ட விவரத்திலிருந்து (யாத். 25—40) அவர் தமக்குக் கீழ் திறமைமிக்க தளபதிகளைக் கொண்டிருந்தார் என்பது தெளிவாகின்றது.

3. அதன் முடிவு நிகழ்ச்சிகள் இன விசுவாசத்தில் அவர்களை உறுதிப்படுத்தின.—அவர்கள் எகிப்திலேயே நிரந்தரமாய் இருக்கத் தொடர்ந்திருந்தால், கடைசியில் அவர்கள் இன விசுவாசத்தையும் இன அடையாளத்தையும் இழந்து போயிருப்பார்கள். ஆனால் எகிப்து, இஸ்ரவேலர்கள் ஒருபோதும் மறந்து போயிராத பாடங்களை யெகோவா எழுதிய[4] கரும் பலகையாக ஆயிற்று. விக்கிரகாராதனைக்குள் மீண்டும் மீண்டும் திரும்பிச் சென்று கொண்டிருந்தாலும், நீண்ட காலத்தில்/ஓட்டத்தில் அவர்கள் (தங்கள்) இன விசுவாத்திற்கு உண்மையுள்ளவர்களாய் இருந்தனர். மற்றும் இப்பொழுது அவர்கள், ஆபிரகாமும், ஈசாக்கும், யாக்கோபும் இருநூறு ஆண்டுகள் அளவாக பரதேசிகளாய்ச் சஞ்சரித்த கானான் நாட்டை வெற்றி கொண்டு உடைமையாக்கிக் கொள்ளத் திரும்ப வேண்டியதாயிருந்தது. ஆனால் அது உடனடியாக நடக்கக் கூடியதல்ல. ஒரு சில நாட்கள் பிரயாணம் செய்தாலே அவர்கள் கானான் நாட்டிற்குள் வந்து சேர்ந்திருக்கலாம். அவர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நாட்டை அடைவதற்கு முன்பு ஒருங்கமைப்பு ஊழியமும் நாற்பது ஆண்டுகள் அளவாக அவர்களை ஒழுக்கத்திற்கு உட்படுத்துதலும் இடைப்பட்டன.

குறிப்புகள்

[1]எகிப்தில் (அவர்கள்) சஞ்சரித்த காலத்தின் அளவு என்பது தீர்க்கப்படாத பிரச்சனைகளில் ஒன்று ஆகும். எபிரெய வேதாகமத்தில் இது நானூறு (மிகச் சரியாக நானூற்று முப்பது) ஆண்டுகள் என்று கூறப்பட்டுள்ளது, இ.வ. ஆதி. 15:13; யாத். 12:40, 44; அப். 7:6. செப்துவஜிந்த்(வேதாகமத்)தில் யாத். 12:40, 41, இதைத் தொடர்ந்து பவுல் கலா. 3:17ல் கூறும் கூற்றில் கானான் நாட்டில் முற்பிதாக்கள் அலைந்து திரிந்தது உட்பட நானூற்று முப்பது ஆண்டுகள் என்றுள்ளது. [2]யாத். 3:6
[3]கடந்த இடம் பற்றிய மிகச் சிறப்பான கலந்துரையாடலுக்கு மெக்கார்வியின் "வேதாகமத்தின் நிலங்கள்/நாடுகள்" என்ற புத்தகத்தில் பக்கம் 438-443ஐக் காணவும்.
[4]இவ்விடத்தில் டீன் அவர்கள் "wrought" என்று எழுதியுள்ளார்.

5

யாத்திரைக்காலம், கி.மு. 1491–1451

வெளியேற்றத்திலிருந்து யோர்தானைக் கடந்தது வரை
யாத். 15-40; லேவி., எண்., உபா.

I. செங்கடலில் இருந்து சீனாய் (மலை) வரை. *(யாத். 15-18.)*

1. **விடுதலையின் பாடல்** (யாத். 15).—செங்கடலின் கிழக்குக் கரையில் இஸ்ரவேலரின் உணர்வெழுச்சிகள் சுலபமாய் விவரிக்கப்படாதவைகளாக அல்லது உணரப்படாதவைகளாகவும் உள்ளன. தாழ்மையானதும், இருப்பினும் வெற்றி முழக்கமிடுவதுமான நன்றியுணர்வே அங்கு மேலோங்கியிருந்த உணர்வாக இருந்திருக்க வேண்டும். பெருமைக்கு அங்கு இடமில்லாதிருந்தது. அவர்களின் அழிவானது அவ்வளவு உச்ச அளவாயிருந்திருந்தது, அவர்களின் விடுதலையானது அவ்வளவு முழுமையானதாக இருந்தது மற்றும் அது விடுதலையின் நினைவுச் சின்னமாக நமக்கு வந்துள்ள சிறப்புமிக்க பாடலில்/கவிதையில் யெகோவாவின் துதியே அன்றி வேறெதுவும் கேட்கப்படாத அளவுக்கு மிக முழுமையானதாக இருந்தது.[1]

2. **ரெவிதீமில் அணிவகுத்துச் செல்லுதல்.**—வெற்றியின் காட்சியிலேயே இஸ்ரவேலர்கள் காலம் தாழ்த்திக் கொண்டிருக்கக் கூடாதிருந்தது. இன ஒருங்கமைப்பானது சீனாய்(மலை)யில் நிறைவு பெற வேண்டியதாக இருந்தது. அங்கிருந்து கடலின் கிழக்குக் கரை வழியாகவே தூரத்தில் உள்ள வெளிப்பகுதிகள் சிலவற்றுக்கு வழி அமைந்திருந்தது; வடபகுதியில் இருந்த மாகாணம்/மாவட்டம் "சூர்வனாந்திரம்" என்றும், தென்பகுதியில் இருந்த மாவட்டம் "சீன் வனாந்திரம்" என்றும் அழைக்கப்பட்டுள்ளது. மாராவின் தண்ணீர்கள் மதுரமானதும், பன்னிரெண்டு ஊற்றுக்களும் எழுபது பேரீச்ச மரங்களும் இருந்த ஏலீம் என்னுமிடத்தில் பாளையம் இறங்கியதும் அந்த அணிவகுப்பின் தொடக்க கால நிகழ்ச்சிகளாய் இருந்தன. (எகிப்திலிருந்து) கடந்து வந்து ஒரு மாதம் ஆகியிருந்தது. அவர்கள் பெருந்திகிலூட்டும் சீன் வனாந்தரத்திற்கு வந்து சேருகின்றனர். எகிப்திலிருந்து கொண்டு வந்த உணவு தீரத் தொடங்குகின்றது, மற்றும் பசியின் கொடுமையுடன் தாகத்தின் தாக்கமும் கூடிக் கொண்டது. கடந்த கால விடுதலையையும்

தேவனுடைய நிச்சயமான வாக்குத்தத்தங்களையும் மறந்த அம்மக்கள், தங்களை இறந்து போகச் செய்வதற்காக வனாந்திரத்திற்கு அழைத்துக் கொண்டு வந்ததாக மோசேயின்மீது கசப்புமிக்க பழி தூற்றுகின்றனர். இப்பொழுது இரக்கத்தின் அற்புதமான மன்னா (பொழிதல்) தொடங்கு கிறது, இது அவர்கள் அலைந்து திரிந்த நாற்பது ஆண்டுகள் காலமும் நாள்தோறும் அவர்களைப் பின் தொடர்ந்தது, இதையே இயேசு தம்மைப் பற்றி வானத்திலிருந்து வந்த அப்பம் என்று கூறுகையில் வனப்பு மிக்க அடையாளமாகப் பயன்படுத்துகின்றார்.

3. ரெவிதீமில் பாளையம் இறங்குதல்.—இப்பொழுது இஸ்ரவேலர் சீன் வனாந்திரத்தின் தீப்பறக்கும் சமவெளியிலிருந்து ரெவிதீமின் பள்ளத் தாக்கிற்கு வந்து பாளையம் இறங்கினர். அவர்கள் ஒரேப் என்று அறியப் பட்ட மலைகள் நிறைந்த மாகாணத்திற்குள் வந்து நுழைந்தனர். இங்கு அவர்கள் மீண்டும் தண்ணீரின்றிப் பாடநுபவித்தனர். மோசே கன்மலையை அடிக்கவே, அதில் இருந்து தண்ணீர் ஏராளமாய்ப் புறப்பட்டது. இங்கு அமலேக்கியர்கள், எதிர்பாராத வகையில் தூண்டுதலில்லாமலேயே தீவிரமாய் (இஸ்ரவேலர்களை) தாக்கும் செயலில் ஈடுபட்டனர். இந்தத் தாக்குதலானது யோசுவாவின் தலைமையின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட மனிதர்களைக் கொண்டு எதிர்த்து நிற்கப்பட்டது, அவ்வேளையில் ஆரோனும், ஊர் என்பவரும் மோசேயின் கரங்களைத் தாங்கிப் பிடித்து அவர் ஜெபம் செய்ய உதவினார்கள். இங்கு மோசே தம் குடும்பத்துடன் இணைந்து கொள்ளுதலும் நடைபெற்றது, அவர்கள் மாபெரும் போட்டி மற்றும் (எகிப்திலிருந்து) கடந்து வருதல் ஆகியவற்றின் போது எத்திரோவு டன் தங்கியிருந்திருந்தனர். நியாயம் விசாரித்தலைச் செயல்படுத்துதல் பற்றி மதிப்புமிக்க ஆலோசனைகளை எத்திரோ மோசேக்கு அளித்து உதவி செய்தார்.

II. *சீனா(ய் மலை)யில் (தங்கி) இருந்த ஆண்டு.*

மோசே இஸ்ரவேலரை ரெவிதீமில் இருந்து சீனாய் மலைக்கு வழிநடத்திச் சென்றார். ஆழமான அசுத்தக்குவியல்களினூடே அணுகிச் சென்றது என்பது அவர்களைப் பயபக்தியினால் நிறைக்கச் செய்யும்படி நன்கு கணக்கிடப்பட்டிருந்தது. கடைசியில் அவர்கள் ஆயிரத்து ஐந்நூறு அடி உயரத்திற்கு ஒரு மாபெரும் கருங்கல் பலிபீடம் போல் திடீரென உயர்ந்து நின்ற பரிசுத்த மலையின் முன்பாக இருந்த சமவெளிப் பரப்பொன்றில் பாளையமிறங்கினர்.

1. இனத்திற்கான உடன்படிக்கை *(யாத். 19; 20).*—முற்பிதாக்களில் அடிக்கடி புதுப்பிக்கப்பட்டதும், மிக சமீபத்தில், மோசேக்கு எரியும் புதரில் புதுப்பிக்கப்பட்டதுமான ஆபிரகாமுடன் செய்யப்பட்ட உடன்படிக்கை யானது இவ்விடத்தில் ஒரு இனத்திற்கான உடன்படிக்கையாக பயபக்தி யான முறைப்படி புதுப்பிக்கப்பட்டு, விரிவாக்கப்படுகின்றது. ஆபிரகாமை அழைத்து, முற்பிதாக்கள் மீது அக்கறை செலுத்தியவர்; எகிப்திலே தமது மக்களின் கூக்குரல்களைக் கேட்டு அவர்களை அடிமைத்தனத்திலிருந்து

மீட்டவர்; அவர்களின் பயணத்தில் அதுவரை அவர்களை வழிநடத்தி, அவர்களுக்கு உணவூட்டி வந்தவர், இப்பொழுது அவர்களைத் தம்முடன் தனிப்பட்ட வகையிலான உடன்படிக்கை உறவுகளில் சேர்த்துக் கொள்வதற்கான ஒரு திட்டத்தை முன் மொழிகின்றார். மோசேயின் மூலமாக தேவனால் முன்வந்து அளிக்கப்பட்ட உடன்படிக்கையானது மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, ஒரு புத்தகத்தில் எழுதப்பட்டு, பலிகளினாலும் இரத்தம் தெளிப்பினாலும் பரிசுத்தத்திற்கு ஏற்ற விதத்தில் உறுதிப்படுத்தப் பட்டது. இந்த உடன்படிக்கையானது பத்துக் கட்டளைகளாக விவரிக்கப் பட்டது, இது இடி முழக்கங்கள், மின்னல்கள் மற்றும் பூமியதிர்ச்சி ஆகிய வற்றின் மத்தியில் சீனாய் மலையின் மீது தொடக்கத்தில் உரைக்கப்பட்டது. பிற்பாடு அவைகள் தேவனால் கற்பலகைகளில் எழுதப்பட்டன. அவைகள் பின்வருமாறு:

(1) என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்.

(2) சொரூபத்தையாகிலும் விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம்.

(3) உன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக.

(4) ஓய்வு நாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக.

(5) உன் தகப்பனையும் தாயையும் கனம் பண்ணுவாயாக.

(6) கொலை செய்யாதிருப்பாயாக.

(7) விபசாரம் செய்யாதிருப்பாயாக.

(8) களவு செய்யாதிருப்பாயாக.

(9) பொய்ச் சாட்சி சொல்லாதிருப்பாயாக.

(10) இச்சியாதிருப்பாயாக.

ரோமாபுரியின் பன்னிரு பலகைகளுக்கு ஒரு ஆயிரம் ஆண்டுகள் முன்பாக, லைகர்கஸ்ஸின் சட்டங்களுக்கு ஐந்நூறு ஆண்டுகள் முன்பாக சீனாய் மலையில் தரப்பட்ட சட்டமானது இவ்வாறு மிகச் சிறந்த மேன்மையுடையதாயிருந்தது. பத்து கட்டளைகள், குடிமை மற்றும் சடங்காச்சாரச் சட்டங்களின் முழு அமைப்பாக மேலும் கூடுதலாக விரிவாக்கப்பட்டது.

2. இன ஆசாரியத்துவம்.—முற்பிதாக்களின் காலத்தில் குடும்பத் தலைவரே ஆசாரியராகச் செயல்பட்டார். (எகிப்திலிருந்து) கடந்து வந்த பிறகு, முழு இனமும், அதிலும் விசேஷமாக முதற்பிறந்த யாவரும் பரிசுத்தமானவர்களாகக் கருதப்பட்டனர் (யாத். 13:2, 11-15). பிற்பாடு, முதற்பேறானவர்களுக்கு மாற்றாக லேவியின் கோத்திரமானது ஆசாரியத் துவக் கோத்திரமாகப் பிரித்து வைக்கப்பட்டது (எண். 3:5-13). ஆரோனின் குடும்பம் ஆசாரியத்துவத்திற்குரியதாகப் பரிசுத்தப்படுத்தப்பட்டது, ஆரோனும் அவருக்குப் பின் அவரது மகன்களும்/சந்ததிகளும் என்றும் மாறாத் தொடர் நிலையில் யூத இனத்தின் மிக உயர்ந்த பணிப்பொறுப்பான

பிரதான ஆசாரியர் என்ற பொறுப்பை வகித்தனர்.

3. இனப் பண்டிகைகள்.—ஆண்டுப் பண்டிகைகள் மூன்று இருந்தன. அவை யாவையும் அவர்களின் இன வரலாற்றில் முக்கிய நிகழ்ச்சிகளின் நினைவுகூருதல்களாய் இருக்கையில், அறுவடைக் காலத்தின் வளர்நிலைப் படிகளில் ஆசரிக்கக் கூடிய அளவுக்கு கால அளவுக்குட்படுத்தப்பட்டன.

அ. பஸ்கா, அல்லது புளிப்பில்லாத அப்பப் பண்டிகை, இது (எகிப்திலிருந்து) கடந்து வந்த இரவில் ஏற்படுத்தப்பட்டது மற்றும் இது அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்டதின் நினைவுகூருதலாக இருந்தது; இது ஆபீப் 14-21(நமது நாட்காட்டியில் ஏப்ரல் முற்பகுதி)யில் ஆசரிக்கப்படுகையில், இது அறுவடையின் தொடக்கமாகவும் கொண்டாடப்பட்டது. பஸ்கா ஆட்டுக்குட்டி (சமைக்கப்பட்டு) புளிப்பில்லாத அப்பத்துடனும் கசப்பான கீரைகளுடனும் உண்ணப்பட்டதும், அறுவடையின் தேவனுக்கு நன்றி செலுத்துமுகமாக முதிர்ந்த தானியக் கதிர் அசைவாட்டப்படுதலும் இதன் முக்கிய அம்சங்களாயிருந்தன.

ஆ. வாரங்களின் பண்டிகை அல்லது பெந்தெகொஸ்தே.—இது பஸ்காவுக்கு ஐம்பது நாட்கள் கழித்து நடைபெற்றது, மற்றும் தானிய அறுவடையின் முடிவில் கொண்டாடப்பட்டது. பிற்காலத்திய யூதர்கள் இப்பண்டிகையை, முதல் பஸ்காவிலிருந்து சுமார் ஐம்பது நாட்களுக்குப் பிறகு நடைபெற்ற நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டதின் நினைவு கூருதலாகவும் கவனித்து மதித்தனர். (புதிதாய்ச்) சுட்ட அப்பத்தின் வடிவில் முதற்கனிகளின் காணிக்கையளித்தல் என்பதே இதன் மிக முக்கியமான பக்திக் கொண்டாட்டமாய் இருந்தது.

இ. கூடாரங்களின் பண்டிகை அல்லது சேர்ப்பு கால பண்டிகை.—இது ஏழாம் மாதத்தின் பதினைந்தாம் தேதியிலிருந்து இருபத்தியிரண்டாம் தேதி வரையிலும் ஆசரிக்க/கடைப்பிடிக்கப்பட்டது. இது ஒரு வகையான அறுப்புக்கால இல்லிடமாய் இருந்தது—இது கனிகளை/விளைச்சலை சேர்க்கும் ஒரு கொண்டாட்டமாய் இருந்தது. இது யூதர்களின் நன்றி செலுத்துதலாய் இருந்தது. வனாந்தரத்தில் நாற்பது ஆண்டுகள் (தங்களின் முன்னோர்கள் வாழ்ந்த) கூடார வாழ்க்கையின் நினைவுகூருதலாக அவர்கள் (இப்பண்டிகையின் போது) மரக்கிளைகளினால் கட்டப்பட்ட கூடாரங்களில் ஒரு வார காலம் வாழ்ந்தனர்.

4. இனப் புனித இடம்.—சீனா(ய் மலை)யில் இருந்த ஆண்டின் போது, ஆசரிப்புக் கூடாரம் கட்டப்பட்டது. இது பதினைந்து அடி அகலமும் நாற்பத்து ஐந்து அடி நீளமும் கொண்ட, தூக்கிச் செல்லக் கூடிய ஒரு ஆலயமாக இருந்தது. இதில் பதினைந்தடி அகலமும் முப்பதடி நீளமும் கொண்ட "பரிசுத்த ஸ்தலத்தில்" தூபபீடமும், தேவ சமூகத்து அப்ப மேஜையும், ஏழு கிளைகளுடைய குத்து விளக்கும் இருந்தன, இவை யாவும் (சாத்தப்) பொன்னினால் செய்யப்பட்டிருந்தன. பதினைந்துக்குப் பதினைந்து சதுர அடி கொண்ட "மகாப் பரிசுத்த ஸ்தலமானது" வேறெந்தத் தட்டுமுட்டு பொருட்களும் வைக்கப்படாமல், நியாயப்பிரமாணக் திரப் பலியை செலுத்திய பொழுது உட்செல்லுவார். ஆசரிப்புக் கூடாரத் தைச் சுற்றிலும் இருந்த வெளிப்பிரகாரத்தில் தகன பலிபீடமும் கை கழுவும்

தொட்டியும் வைக்கப்பட்டிருந்தன. ஆசரிப்புக் கூடாரமானது வனாந்தரத் தில் அலைந்து திரிந்த போது அவர்களுடன் சுமந்து செல்லப்பட்டது, பின்பு சீலோவில் அமைக்கப்பட்டது, சாலொமோனின் ஆலயம் கட்டியெழுப்பப் படும் வரைக்கும் நானூறு ஆண்டுகளுக்கும் மேலாக அக்கூடாரம் அங்கேயே தொடர்ந்து இருந்தது.

5. இனப் பலிகள்.—பலிகள் என்பவை எபிரெய ஆராதனையின் மைய அம்சங்களாக இருந்தன. இவைகள் மிருகங்களாகவோ அல்லது பூமியின் முதற் பலன்களாகவோ இருந்திருக்கலாம். மிருக பலிகளில் மூன்று பிரிவுகள் இருந்தன:

அ. தகன பலிகள்.—இவைகள் தினமும் காலையிலும் மாலையிலும் செலுத்தப்பட்டன; இவை முற்றிலுமாகப் பட்சிக்க/எரியூட்டப்பட்டன மற்றும் இவை தேவனுக்கு முழுமையாக ஒப்புக் கொடுத்தலின் அடையாளப்படுத்துதலாயிருந்தன.

ஆ. சமாதான பலிகள்.—இவற்றின் ஒரு பகுதியானது இவற்றைச் செலுத்துபவர் தம் நண்பர்களை விருந்துக்கு அழைக்கும் நிகழ்ச்சிக்காக ஒதுக்கி வைக்கப்படுவது என்பது இப்பலிகளின் பண்பாக இருந்தது. இவை தேவனுடன் ஐக்கியம், தொடர்பு ஆகியவற்றை விளக்கப்படுத்துவன வாகவும் சில வேளைகளில் ஏராளமான எண்ணிக்கையில் செலுத்தப்படுவன வாகவும் இருந்தன.

இ. பாவ நிவாரண பலிகள்.—இவை தனிநபருக்குரியதாகவோ அல்லது இனத்திற்குரியதாகவோ இருந்திருக்கலாம். எந்த விஷயத்திலும், பலியானது ஒரே ஒரு மிருகத்தை மட்டுமே கொண்டிருந்தது. (அதன்) ஒரு பகுதியானது பீடத்தின் மீது தகனிக்கப்பட்டது; ஒரு பகுதியானது ஆசாரியரால் உண்ணப்பட்டிருக்கலாம், ஆனால் அவ்விறைச்சி சமைக்கப்பட்ட பாத்திர மானது உலோகத்தாலானதாக இருந்தால், (சமையல் முடிந்தபின்) தூய்மைப் படுத்தப்பட வேண்டும் அல்லது மண்ணால் ஆனதாக இருந்தால், உடைக்கப்பட வேண்டும். (அம்மிருகத்தின்) குடல்கள் முதலிய உறுப்புக்கள் பாளையத்திற்குப் புறம்பாகச் சுட்டெரிக்கப்பட வேண்டும். பாவ நிவாரண பலியின் சடங்கானது பாவத்தின் தீட்டான தன்மை பற்றிய பாடங்களை (யூதர்களின்) மனதில் பதியச் செய்யும் நோக்கங் கொண்டிருந்தது.

6. இன ரீதியான விசுவாச விலக்கம்.—இன உடன்படிக்கையின் முதல் மீறுதலானது சீனாய் மலையின் அடிவாரத்திலேயே நடந்தேறிற்று. (மலையின் மீதேறிச் சென்றதால்) மோசே அங்கு (மலையடிவாரத்தில்) இல்லாத நிலையில் மக்கள் தங்களுக்கு முன் செல்லும்படி தெய்வங்களை உண்டாக்க ஆவல் கொண்டார்கள். ஆரோன் (அதற்கு) இணங்கினார். எகிப்தில் கன்றுக்குட்டி ஆராதனை செய்தமை போல அவர் ஒரு பொன் கன்றுக்குட்டியை உருவாக்கினார், இஸ்ரவேலர்கள் விக்கிரகாராதனைப் பண்டிகையில் ஈடுபட்டார்கள். மோசே கற்பலகைகளுடன் (மலை மேலிருந்து இறங்கி) திரும்பி வந்தார். அவர்கள் உடன்படிக்கையை மீறி யிருந்தபடியால், அவர் அந்த உடன்படிக்கை எழுதப்பட்டிருந்த கற்பலகை களை உடைத்துப் போட்டார். அவருடைய வேண்டுதலினால் மக்கள் மீண்டும் (தேவனுடன்) இணைக்கப்பட்டனர், இருப்பினும், அவர்களின்

குற்றத்திற்குத் தண்டனையாக அவர்களில் மூவாயிரம் பேர் தண்டனை பெற்று (மரணமடைந்து) விழுந்தனர்; உடன்படிக்கையானது புதுப்பிக்கப் பட்டது மற்றும் புதுக் கற்பலகைகள் தயார் செய்யப்பட்டன.

III. *சீனாய் மலையிலிருந்து காதேஸ் வரைக்கும்.*

1. மக்கள் தொகை கணக்கிடுதல்.—*சீனாய் மலையிலிருந்து முகாமைப் பெயர்த்தெடுத்துப் பயணம் தொடரும் முன்பாக, இனங்களின் கணக் கெடுப்பு ஒன்று நடைபெற்றது. முப்பத்தெட்டு ஆண்டுகளுக்குப் பின்பு அலைந்து திரிதல்களின் முடிவில் இரண்டாம் கணக்கெடுப்பொன்று மேற்கொள்ளப்பட்டது. இந்த இரட்டைக் கணக்கெடுப்புதான் எண்ணாக மம் என்ற புத்தகத்திற்கு அப்பெயரைத் தருகின்றது.*

2. காதேஸுக்கு அணிவகுத்துச் செல்லுதல்.—*(எகிப்திலிருந்து) கடந்து வந்து ஓராண்டிற்குப் பின்பு, சீனாய் மலையிலிருந்து இஸ்ரவேலர்கள் கானானின் தென்முனையிலிருந்த காதேஸ் என்ற இடம் நோக்கி அணி வகுத்துச் சென்றனர். அந்தப் பாதையானது இளைப்படையச் செய்யும் பாலைவனமொன்றில் சென்றது. தபேரா என்ற இடத்தில் மக்கள் கசப்புடன் முறுமுறுத்துக் கலகம் செய்தபடியால் நெருப்பினால் பட்சிக்கப்பட்டார்கள். அணிவகுத்துச் செல்லுதலை மீண்டும் தொடரு முன்பாக, இஸ்ரவேலர் தங்களுடன் துணையாக இருந்த திரளான கூட்டத்தின் தூண்டுதலினால் மன்னாவை அருவருத்தனர், மற்றும் எகிப்தின் உணவுக்காக ஏங்கினர். ஏராளமான எண்ணிக்கையில் காடைகள் அனுப்பப்பட்டன; ஆனால் அவற்றுடன் திரள் கூட்டமான மக்கள் செத்தொழியும்படியான கொள்ளை நோயும் வந்து சேர்ந்தது, மற்றும் தபேரே (எரிதல்) என்ற முகாமானது கிப்ரோத் அத்தாவா (இச்சையின் கல்லறைகள்) என்று அறியப்படலாயிற்று. ஆரோனும் மிரியாமும் கலகம் செய்ததென்பது (அந்த) அணி வகுப்பின் இன்னொரு வேதனை மிக்க நிகழ்ச்சியாயிருந்தது. மிரியாம் தொழு நோயினால் பாதிக்கப்பட்டாள், ஆனால் மோசேயின் வேண்டுதலினால் குணப்பட்டாள்.*

3. விசுவாசத்தில் வீழ்ச்சி.—*(கானான்) நாட்டை ஆராய்ந்து வருவதற் காக காதேஸில் இருந்து பன்னிரண்டு வேவுகாரர்கள் அனுப்பப்பட்டனர். அவர்கள் அந்நாட்டின் புகழ்ச்சி பற்றி ஒருமனதான கருத்துடனும், அதன் வளமைக்கு நிரூபணமாக இனிய கனிகளையும் சுமந்தவர்களாய் திரும்பி வந்தனர். ஆனால் காலேப், யோசுவா ஆகிய இருவரைத் தவிர மற்ற யாவரும் (அந்த நாட்டை) வெற்றி கொள்வது நம்பிக்கையற்றது என்று அறிக்கை தந்தனர். இனத்தின் விசுவாசமானது முற்றிலுமாக முறிந்து விழுந்தது. அவர்கள் (தங்களுக்கு) வேறொரு தலைவரைத் தேர்ந்து கொண்டு எகிப்து திரும்பும் திட்டத்தை முன் மொழிந்தனர். அவர்களை (இஸ்ரவேல் மக்களை) தைரிய மூட்ட முற்பட்ட காலேபும் யோசுவாவும் கல்லெறியப் படுதலில் இருந்து மயிரிழையில் உயிர் தப்பினர். இதற்கு முன்பும்கூட அவர்களின் விசுவாசம் அடிக்கடி பலவீனமடைந்து, அலை பாய்ந்திருந்தது; (ஆனால்) இதற்கு முன்பு அவர்கள் ஒருக்காலும் வாக்குத்தத்தம் பண்ணப்*

பட்ட நாட்டிற்குத் தங்கள் முதுகுகளைத் திருப்பி, (தங்கள்) அடிமைத் தளையின் இல்லம் நோக்கி தங்கள் முகங்களைத் திருப்பியதில்லை. இது அவிசுவாசத்தின் உச்சகட்டமாயிருந்தது (எபி. 3:19). அந்தக் கீழ்ப்படியா மையுள்ள சந்ததியார் ஒருவர் பின் ஒருவராக மரித்து அவர்கள் யாவரின் எலும்புகளும் வனாந்தரத்தில் வெளுக்கப்படும் வரையிலும் முப்பத்தெட்டு ஆண்டுகள் அளவாக அங்கேயே அலைந்து திரியும் தண்டனை அவர் களுக்குக் கொடுக்கப்பட்டது. கானானுக்குள் நுழைவதற்கு (எகிப்திலிருந்து புறப்பட்டவர்களில்) காலேபும் யோசுவாவும் மட்டுமே உயிரோடிருந்தனர். இந்த முப்பத்தெட்டு ஆண்டுகள் ஏறக்குறைய ஒரு வெறுமையாகவே உள்ளன. ஓய்வுநாளை மீறிய ஒருவருக்கு தண்டனை, கோரா, தாத்தான் மற்றும் ஆபிராம் ஆகியோரின் கலகம் மற்றும் ஆரோனின் கோலைத் தளிர்க்கச் செய்ததினால் அவரது பிரதான ஆசாரியத்துவ அதிகாரம் உறுதிப்படுத்தப்படுதல் ஆகியவையே இந்தக் கால கட்டத்தின் நிகழ்ச்சி களாய் உள்ளன. இதன் முடிவில் இஸ்ரவேலர்கள் கானானுக்குள் நிறைவாக முன்னேறிச் செல்வதற்காக மீண்டும் காதேசில் ஒன்று கூடினார்கள்.

IV. காதேஸில் இருந்து யோர்தான் வரைக்கும்.

காதேசில் இரண்டாம் முறை சஞ்சரித்த பொழுது, மோசேயும் ஆரோனும் கன்மலையை இரண்டாம் முறையாக அடித்ததினால் பாவம் செய்கின்றனர், அவர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நாட்டினுள் பிரவேசிக்க அனுமதிக்கப்படாதிருக்கின்றனர். இங்கு மிரியாம் மரிக்கிறாள். ஏசாவின் சந்ததியாரான ஏதோமியர்கள் தங்கள் எல்லைகளினூடாக (இஸ்ரவேலர்கள்) கடந்து செல்லுவதை மறுக்கின்றனர், மற்றும் (இதனால்) இஸ்ரவேலர் செங்கடலின் கவைப் பகுதியைத் தொட்டு தெற்கு நோக்கி நீண்ட பயணம் செல்லுகின்றனர். வழியில் ஆரோன் மரித்து ஓர் என்ற மலையில் அடக்கம் செய்யப்படுகின்றார். அவிசுவாசத்தின் ஒரு புதிய கிளர்ந்தெழுதலுக்குத் தண்டனையாகக் கொள்ளிவாய்ச் சர்ப்பங்கள் அனுப்பப்படுகின்றன. குணமாக்குதலின் அடையாளமாக/அர்த்தமாக மற்றும் சிலுவையில் கிறிஸ்துவின் ஒரு (முன்) மாதிரியாக வெண்கல சர்ப்பம் ஒன்றை மோசே உயர்த்துகின்றார். இஸ்ரவேலர்கள் யோர்தானின் கிழக்குப் பகுதியில் இருந்த அமோரிய இனத்தின் வல்லமை நிறைந்த பிரதானிகளான ஓக் மற்றும் சீகோன் ஆகியோரை வெற்றி கொள்ளுகின்றனர். அவர்களின் நாட்டெல்லைகளில் ரூபன், காத் மற்றும் மனாசேயின் பாதிக் கோத்திரத் தார் குடியமருகின்றனர். மோவாபிய அரசர், இஸ்ரவேலரின் வெற்றி மிக்க வளர்ச்சியால் எச்சரிக்கையடைந்து அவர்களை சபிப்பதற்காக பாலாம் (பிலேயாம்) என்ற பெயர் கொண்ட புகழ் பெற்ற தீர்க்கதரிசியைக் கைக் கூலி கொடுத்து நியமிக்கின்றார். அவரது (பிலேயாமின்) உதடுகளிலிருந்து புறப்பட்ட அவரது சாபங்கள் ஒவ்வொரு முறையும் ஆசீர்வாதங்களாகவே மாறுகின்றன. ஆனால் அவர் நேரடியாகத் தாம் நிறைவேற்றிக் கொள்ள முடியாதிருந்ததை மறைமுகமாய் நிறைவேற்றிக் கொள்ளுகின்றார். அவர் இஸ்ரவேலரை மோவாபிய மற்றும் மீதியானியப் பெண்களுடன் விபசாரம்

செய்யத் தூண்டி, அவர்களைப் பாவம் செய்ய வைக்கின்றார், அதன் தண்டனையாகத் தேவன் அனுப்பிய கொள்ளை நோயினால் ஆயிரக் கணக்கில் தேவனுடைய மக்கள் (இறந்து) விழுகின்றனர். ஆனால் கடைசியில், வெறுமையான பாலைவனங்கள், உக்கிரமான விரோதிகள், மற்றும் தங்களின் சொந்த அவிசுவாசம் ஆகியவை எல்லாம் இருந்தும் கூட, இஸ்ரவேலர்கள் அவைகளை வெற்றியுடன் கடந்து வந்து, யோர்தானுக்கு முன்பாக அதன் கிழக்குப்பகுதியில் முகாமிடுகின்றனர். மோசே தமது பிரியாவிடை உரையை நிகழ்த்துகின்றார், இது உபாகமத்தின் பெரும் பகுதியாக உள்ளது. சவக் கடலின் கீழக்குப் பகுதியில் பிஸ்காவின் கொடுமுடியில் இருந்து வாக்களிக்கப்பட்ட நாட்டின் வனப்புமிக்க காட்சியொன்று அவருக்கு அளிக்கப்படுகின்றது. அங்கு அவர் மரிக்கின்றார் மற்றும் அறியப்படாத கல்லறையொன்றில் அடக்கம் செய்யப்படுகின்றார். அவரது ஊழியம் செய்து முடிக்கப்பட்டிருந்தது. அவர் தமது மக்களை மீட்டிருந்தார், அடிமைகளாய் இருந்த இனமொன்றை ஒருங்கமைக்கப் பட்ட ஒரு இனமாக்கி, அவர்களை வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நாட்டின் வாசல்கள் வரைக்கும் வழிநடத்திச் சென்றார். அவர் தம் ஊழியத்தையும் உயிரையும் ஒருசேரக் கிடத்தினார்.

குறிப்பு

[1]மோசேயின் பாடல் மற்றும் பென்ட்டவுரின் கவிதை ஆகியவற்றிற்கிடையில் உள்ள வேறுபாடுகளுக்கு கிப்ஸன் அவர்களின் “Mosaic Era” என்று நூலில் காணவும்.

6

வெற்றிகொள்ளுதலின் காலம், கி.மு. 1451–1400

யோர்தானைக் கடந்ததிலிருந்து
யோசுவாவின் மரணம் வரை
யோசு. 1-24

I. யோர்தானைக் கடத்தல்.

1. புதிய தலைவர். மோசே இஸ்ரவேலர்களை யோர்தானின் கிழக்குப் பகுதியில் முகாமிருக்கச் செய்து (அவர்களை விட்டு) பிரிந்து சென்றார் (மரணம் அடைந்தார்). சீகோன் மற்றும் ஓக் ஆகியோர்மீது கொண்டிருந்த வெற்றிகள் நதியின் கிழக்கில் இருந்த படுகை நிலங்களை பெற்றுத் தந்திருந்தன. கானான் என்பது யோர்தானுக்கு மேற்கிலிருந்த பகுதியையே குறிப்பிடுவதாயிருந்தது; இது அரண் சூழ்ந்த நகர்களில் வாழ்ந்த யுத்த விரும்பிகளாயிருந்த மக்களைக் கூட்டம் கூட்டமாய்க் கொண்ட மலை நாடாயிருந்தது. அவர்களுக்கு (இஸ்ரவேலர்களுக்கு) முன்னால் இருந்தது இலேசான பணிப்பொறுப்பாய் இல்லை. மாபெரும் நிகழ்ச்சிகள் மாபெரும் மக்களையே அழைக்கின்றன. இஸ்ரவேலுக்கு இரண்டாவது மோசே ஒருவர் ஒருக்காலும் இருந்ததில்லை. ஆனால் புதிய நிகழ்ச்சிகள் புதிய மனிதர்களை அழைக்கின்றன. விடுதலை மற்றும் ஒருங்கமைத்தல் ஆகியவற்றிற்காக மோசேயைக் கொடுத்த அதே தேவனே இப்பொழுது வெற்றி பெறுதல் மற்றும் குடியமருதல் ஆகியவற்றிற்காக யோசுவாவைக் கொடுக்கிறார்.

2. யோர்தான் (நதி) பிரிகின்றது.—இஸ்ரவேலர்கள் தங்களைப் பின்னாலிருந்து வலிமைமிக்க விரோதிகள், துரத்திய நிலையில் செங்கடலுக்கு வந்து சேர்ந்திருந்தனர். அவர்கள் தங்களை வலிமைமிக்க விரோதிகள் எதிர்கொண்டு வந்த நிலையில் யோர்தான் நதிக்கு வந்து சேர்ந்தனர். கடலில் போலவே இங்கும் கூட, தேவன் மீதும் தங்கள் தலைவர் மீதும் விசுவாசத்தினால் அவர்கள் ஏவப்படும்படியாக சைகையினாலான அற்புதம் ஒன்று செயல்படுகின்றது. அது அறுவடைக் காலமாய் இருந்தது. லீபனோன் மலையில் உருகும் பனிக்கட்டிகள் யோர்தானின் தாழ் நிலத்தில் வெள்ளப் பெருக்கெடுக்கச் செய்தன. அங்கு படகுகளும் இல்லை பாலங்களும் இல்லை. ஆனால் ஆசாரியர்கள் பரிசுத்த பேழையைச் சுமந்து கொண்டு நதியின் விளிம்பில் கால் எடுத்து வைக்கையில், தண்ணீர் பிரிந்து விலகிற்று, இஸ்ரவேலர்கள் வெறுமையான ஆற்றுப் படுகையினூடாக

அணிவகுத்துச் சென்றனர். ஆற்றுப் படுகையில் ஒன்றும் அவர்கள் இரவுக்காகத் தங்கியிருந்த கில்காலில் ஒன்றும் ஆக, இரண்டு நினைவு(த் தூண்) கற்கள் எழுப்பப்பட்டன.

3. கில்காலில் முகாமிட்டுத் தங்குதல்.—அலைந்து திரிந்த காலங்களின் போது விட்டுவிடப்பட்டிருந்த விருத்தசேதனச் சடங்கானது இவ்விடத்தில் புதுப்பிக்கப்பட்டது, மற்றும் அவர்களின் அவிசுவாசமும் அதற்கான தண்டனையும் புறம்பே உருண்டோடும்படி செய்யப்பட்டது; ஆகவே அவ்விடம் கில்கால் என்று பெயர் பெற்றது. இதுவும் கூட கடந்து செல்லுதலின் இரவாக இருந்ததினால் இவ்விடத்திலும் மீண்டும் ஒருமுறை பஸ்காவானது ஆசரிக்கப்பட்டது. அந்த வேளையில் மரண தூதர் நாட்டின் மீது கடந்து சென்ற பிரசன்னத்தினால் எகிப்தியர்கள் பயமடைந்தார்கள்; இப்பொழுது, எரிகோவின் மதில்களுக்குப் பின்னால் கானானியர்கள் பயத்தினால் குறுகிப் போயிருந்தார்கள். இவ்விடத்தில் மன்னா பொழிதலும் ஒழிந்து போனது; மற்றும் இவ்விடத்திலோ அல்லது பெத்தேலின் அருகாமையில் உள்ள இன்னொரு கில்காலிலோ, இதுவரையிலும் வெற்றி கொள்ளப்பட்ட கானான் நாட்டின் பகுதிகள் இனங்களின் மத்தியில் பிரித்துக் கொடுக்கப்படும் வரைக்கும் இஸ்ரவேலர்கள் முகாமிட்டுத் தங்கியிருந்தார்கள்.

II. எரிகோவைக் கைப்பற்றுதல்.

யோர்தானைக் கடப்பதற்கு முன் யோசுவா, விரோதியின் பலமுள்ள நிலைகளை வேவு பார்த்து வருவதற்காக ஒற்றர்களை அனுப்பி வைத்தார். ராகாப் என்ற பெயர் கொண்ட எரிகோ நகரப் பெண்ணொருத்தி தேவனுடைய மக்களின் எதிர்காலத்தின் மீது உறுதியான விசுவாசம் கொண்டவளாய், அந்த ஒற்றர்களை மறைத்து வைத்தாள் மற்றும் அந்நகரைக் கைப்பற்றும் போது அவளது வீட்டாருக்கு பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டது. மோசே தனக்கு கட்டளைகளைப் பெற்றுக் கொண்டது போலவே கில்காலில் முகாமிட்டிருந்த வேளையில் யோசுவாவும் தனக்குக் கட்டளைகளைப் பெற்றுக் கொண்டார். இருப்பினும் தேவன் (யோசுவாவுக்கு) எரியும் முட்புதரில் தரிசனமாகாமல் உருவிய பட்டயத்துடன் தரிசனமானார், இது வெற்றி கொள்ளும் பணியைக் குறிப்பதாய் உணர்த்துவதாயிருந்தது. ஆனால் அது மனிதனுடைய பணியாய் இருப்பதற்கு மாறாக, தேவனுடைய பணியாய் இருந்ததென்பது, எரிகோவைக் கைப்பற்றுதலுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட வழிமுறைகளின் வெளிவடிவமைப்பில்/செயல் நடவடிக்கையில் இருந்து வெளிப்படுத்தப்பட்டது. எரிகோ (என்ற நகர்) கடந்து செல்ல வேண்டிய இடத்தில் இருந்தது. அது கானானின் நுழைவாயிலாக இருந்தது. அது பின்னால் விட்டுச் செல்லப்படக் கூடாததாக இருந்தது. அதன் மதில்களை இடித்து வீழ்த்துவதற்கு இஸ்ரவேலரிடம் இயந்திரப் பொறிகள் எதுவும் இல்லை. தேவனுடைய கட்டளையின்படி, அவர்கள் பரிசுத்த பேழையைச் சுமந்து கொண்டு தொடர்ச்சியாக ஆறு நாட்கள் அதைச் சுற்றி வந்தார்கள், மற்றும் ஏழாம் நாளில் ஏழு முறைகள்

அதைச் சுற்றி வந்தார்கள், அவர்கள் தங்கள் எக்காளங்களினால் உரத்த சத்தமிட்ட பொழுது, மதில்கள் விழுந்தன, எரிகோ அவர்களுடைய தாயிற்று. யெகோவாவே எகிப்திய நுகத்தை முறித்து, கடலின் வழியே வழி திறந்து, அவர்களுக்கு உணவூட்டி, வனாந்திரத்தில் வழிநடத்தி, அவர்களுக்குத் தம்முடைய பிரமாணத்தைக் கொடுத்து, அவர்களுக்காக யோர்தான் நதியைப் பிரித்தார். மற்றும் யெகோவாவே மோசமான கானானியரின் உடமைகளை எடுத்து, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நாட்டை தமது உடன்படிக்கையின் மக்களுக்குக் கொடுத்ததினால் தம்முடைய உடன்படிக்கையை நிறைவேற்றினார்.

III. கானானின் மையப்பகுதியை வெற்றி கொள்ளுதல்.

1. ஆயி பட்டணத்தைக் கைப்பற்றுதல்.—*ஆயி என்பது கானானின் மையப் பகுதிக்குத் திறவுகோலாக இருந்தது. முதல் தாக்குதலில் இஸ்ரவேலர்கள் கடுமையாகத் தாக்கப்பட்டனர். இதற்கான காரணமானது எரிகோவின் சேதமான பொருட்களில் இருந்து ஒரு தங்கப் பாளத்தையும், வெள்ளிப் பணத்தையும், ஒரு பாபிலோனிய சால்வையையும் எடுத்துத் தனக்கென்று வைத்துக் கொண்ட பாவம் ஆகானில் கண்டறியப்பட்டது. அது சுயநலப் பேராசைக்கான வேளையாய் இருந்ததில்லை; மற்றும் ஆகான் தனது பாவத்திலிருந்து நீங்கி தூய்மைப்படத் தனது உயிரையே கொடுக்க வேண்டியதாயிற்று. இரண்டாம் முறை தாக்கிய பொழுது, ஆயி நகர் மற்றும் கானானின் மையப் பகுதி முற்றிலும் அவர்களுடையதாயிற்று.*

2. சீகேமில் சபை கூடுதல்.—*இஸ்ரவேலர் இப்பொழுது (கானான்) நாட்டின் மையப்பகுதியில் உள்ளனர். (அவர்களது) முற்பிதாக்களின் காலடிச் சுவடுகள் அவர்களைச் சுற்றிலும் இருக்கின்றன. சீகேமில் ஆபிரகாம் தமது முதல் கூடாரத்தை நாட்டி, தமது பலிபீடத்தைக் கட்டியெழுப்பி யிருந்தார். நாடோடியாய் இருந்த யாக்கோபு பெத்தேலில் தரிசனம் கண்டிருந்து, தமது நினைவுச் சின்னத்தை எழுப்பியிருந்தார். அவர் தமது (மாமன் வீட்டில் இருந்த) அந்நிய நாட்டு இருப்பிற்குப் பின் திரும்பி வந்த பிறகு சீகேமில் சஞ்சரித்து இருந்தார், மற்றும் தமது குடும்பத்தாரால் மெசபொத்தாமியாவிலிருந்து கொண்டு வரப்பட்டிருந்த விக்கிரகாராதனை யின் சொரூபங்களை அங்கு புதைத்திருந்தார். மற்றும் இப்பொழுது, தெய்வீக வல்லமையினால் தெய்வீக உடன்படிக்கை நிறைவேறியிருந்தது, உடன்படிக்கையின் மதச் சடங்குடன் கூடிய புதுப்பித்தலும் நினைவு கூருதலும் இருக்கும் என்பது பொருத்தமானதாக உள்ளது. ஆகவே, மோசே யின் முந்திய அறிவுறுத்தல்களின்படி (உபா. 27) சீகேமில் ஒரு மதச் சடங்குக் கூட்டம் நடத்தப்படுகின்றது. சீகேம், வடக்கில் ஏபால் மலையும், தெற்கில் கெரீசிம் மலையும் உள்ளதும் அவற்றிற்கிடையில் அமைந்திருந்த பள்ளத் தாக்கில் உள்ள ஊருமாய் இருக்கின்றது. அந்தப் பள்ளத்தாக்கின் மத்தியில் லேவியர்கள் நின்றனர். அவர்கள், கீழ்ப்படிதலுக்காக ஆறு கோத்திரங்களின் மீது ஆசீர்வாதத்தைக் கூறுகையில் மக்கள் கெரீசிம் மலையின் மீதிருந்து*

"ஆமென்" என்று பதில் அளித்தார்கள்; அவர்கள் கீழ்ப்படியாமைக்கான சாபத்தை கூறுகையில் மற்ற ஆறு கோத்திரங்களின் மக்கள் ஏபால் மலையிலிருந்து தங்கள் "ஆமென்" என்பதை உரத்த சத்தமிட்டுக் கூறினார்கள். பின்பு பிரமாணங்கள் பொறிக்கப்பட்ட ஒரு நினைவுச் சின்னம் எழுப்பப்பட்டது, மற்றும் பலி செலுத்தும் பண்டிகையொன்று கொண்டாடப்பட்டது.

IV. தென்பகுதியில் அரசியல் கூட்டும் வெற்றி கொள்ளுதலும்.

1. கிபியோனியர்களுடன் அவர்களின் (இஸ்ரவேலர்களின்) இணைவு. —வெற்றி கொள்ளுதலின் ஆண்டுகளில் இஸ்ரவேலரின் பிரதான முகாமானது கில்காலில் இருந்ததாகக் காணப்படுகின்றது, இது கானானின் மத்திய பகுதியில் அமைந்திருந்தது. ஆயி (நகர்) விழுந்த பின்பு விரைவிலேயே ஆயிக்கு நேர்தெற்கில் இருந்த ஒரு நகரமான கிபியோனிலிருந்து செய்தியாளர்கள் யோசுவாவிடம் வந்து, தாங்கள் தூர தேசத்திலிருந்து வந்ததாக உரிமைகோரி, தங்கள் சொந்தப் பாதுகாப்பைக்கோரும் ஒரு உடன்படிக்கையை முன் மொழிகின்றனர். யோசுவா சம்மதித்தார். வஞ்சிக்கப்பட்டதை அறிந்த பின் அவர் (யோசுவா) அவர்களை அழிப்பதில்லை என்று உடன்படிக்கையைப் பரிசுத்தமாய்க் காத்தார், ஆனால் அவர்களை இஸ்ரவேலர்களுக்கு "விறகு வெட்டுபவர்களாகவும், தண்ணீர் சுமப்பவர்களாகவும்" ஆக்கினார்.

2. பெத்தொரோனில் யுத்தம்.—கிபியோனுடனான உடன்படிக்கையானது தெற்கே அமைந்திருந்த எருசலேம், எபிரோன், யர்மூத், லாகிஸ், மற்றும் எக்லோன் ஆகிய நகர்களுடன் தற்காப்பு மற்றும் குற்றப்படுத்துதல் ஆகிய இரு செயல்களுக்குமான ஒப்பந்தம் ஒன்றை அமைக்க வழிநடத்திற்று. அவர்கள் கிபியோனைத் தாக்கினர், இது யோசுவாவுக்குப் பிரியமாய் இருந்தது. அவர் இரவில் அணி வகுத்துச் சென்று கூட்டாக வந்தவர்களைத் தாக்கினார், மற்றும் பெத்தொரோனில் பெரும் யுத்தத்தில் அவர்களை தோல்வியடையச் செய்தார். இது பழங்காலப் பாடல் ஒன்றின்படி (யோசு. 10:12, 13) யோசுவாவின் கட்டளைக்கிணங்க சூரியனும், சந்திரனும் (சுற்றாமல்) நின்ற "நீண்ட நாளாகும்."

V. வடபகுதியில் அரசியல் கூட்டும் வெற்றி கொள்ளுதலும்.

கானானியர்களால் இன்னொரு முறை கூட்டு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. வடக்கில் இருந்த ஆத்சோரின் வல்லமைமிகுந்த பிரதானியான யாபீன் என்பவர் தலைமை வகித்து வந்து யுத்தக் கூட்டுறவை மேரோமின் தண்ணீர் அருகே யோசுவா தோல்வியடையச் செய்தார். இது கூட்டமான தடையை/எதிர்ப்பை முடிவுக்குக் கொண்டு வந்தது. பல கோத்திரங்கள் வெற்றி கொள்ளுதலை முடிக்கையில் போராட்டமானது மிகச் சிறு உள்ளூர்

போட்டிகளாய் ஒழிந்து போயிற்று என்று விரிவாய்க் கூறப்பட்டுள்ளது. இது தேவன் இணைத்திருந்த முற்றான தன்மையினால் செய்யப்பட்ட தாயிருந்ததில்லை, மற்றும் இது அவர்களின் இனவாழ்வின் நோக்கத்திற்கு மிகவும் அவசியமான பணியாக இருந்தது. (பிற) இனங்களுடன் உடன் படிக்கை மற்றும் கலப்புத் திருமணங்கள் ஆகியவற்றிலேயே அவர்களின் அழிவு இருந்தது. அவர்கள் முற்றிலும் தனிப்பட்டு நிற்பதென்பதே அவர்களின் ஒரே பாதுகாப்பாகவும் சுத்தமான பக்தியாகவும் இருந்தது. கானானியர்களை வெளியேற்றத் தவறியது என்பதே அடுத்த காலகட்டத் தில் அவர்களின் நிலைமைக்குத் திறவுகோலாய் உள்ளது.

VI. நாடு பங்கிடப்படுதலும் யோசுவாவின் மரணமும்.

1. நாடு பங்கிடப்படுதல்.—ஒன்றிணைந்து எதிர்த்து நிற்றல் என்பதை இயலாததாக ஆக்கின நிலையில், நாட்டைப் பன்னிரு கோத்திரங்களுக்கும் சீட்டுப் போட்டுப் பிரித்துக் கொடுக்கும் செயலில் யோசுவா ஈடுபட்டார். இந்த ஒதுக்கீட்டில் லேவியர்கள் ஒரு கோத்திரமாகக் கருதப்படவில்லை, ஆனால் அவர்கள் கானான் முழுவதிலும் பரவலாக இருந்த நாற்பத்தி எட்டு நகரங்களைப் பெற்றார்கள். இவைகளில் யோர்தானுக்குக் கிழக்கில் இருந்த கோலான், கீலேயாத்தின் ராமோத் மற்றும் பேசேர், யோர்தானுக்கு மேற்கில் இருந்த காதேஸ், சீகேம் மற்றும் எபிரோன் என்ற ஆறு அடைக்கலப் பட்டணங்களும் இருந்தன. யோசேப்பின் இரு மகன்களான எப்பிராயிமை யும் மனாசேயையும் யாக்கோபு தமது மகன்களாகச் சுவிகரித்திருந்தார், இவ்விதம், லேவி (கோத்திரம்) இல்லாமலேயே பன்னிரெண்டு கோத்திரங் கள் ஏற்படுத்தப்பட்டன. அவை, ரூபன், சிமியோன், யூத, இசக்கார், செபுலோன், தாண், நப்தலி, காத், ஆசேர், எப்பிராயீம், மனாசே மற்றும் பென்யமீன் கோத்திரங்களாகும்.

2. யோசுவாவின் பிரியாவிடையும் மரணமும்.—எகிப்திலும் செங்கடலிலும் அற்புதங்களைக் கண்டிருந்த தலைமுறையில் யோசுவா மிக நீண்ட காலம் வாழ்ந்திருந்தார். காலேப் யோசுவா ஆகியோரைத் தவிர, அவர்கள் யாவரும் வனாந்திரத்தில் மடிந்து வீழ்ந்தனர், இவர் (யோசுவா) தம் நூற்றுப்பத்து வயது வரை வாழ்ந்தார். யேகோவாவுக்கும் உடன்படிக்கைக்கும் கடைசி வரையிலும் பற்றுறுதி கொண்டு வாழ்ந்த அவர், மீண்டும் ஒருமுறை, வரலாற்றுப் புகழ்பெற்ற, சீகேமில் (பன்னிரு) கோத்திரங்களையும் பரிசுத்த கூட்டமாய் கூடி வர அழைக்கின்றார். அங்கு அவர் வரலாற்றை மறுகண்ணோட்டமிடுகிறார், மற்றும் விசுவாச விலக்கத்தின் அபாயம் குறித்து அவர்களை எச்சரிக்கை செய்கின்றார். "... யாரை சேவிப்பீர்கள் என்று இன்று தெரிந்து கொள்ளுங்கள் ... நானும் என் வீட்டாருமோவென்றால் கர்த்தரையே சேவிப்போம்,"[1] இப்படிப்பட்ட மாண்புமிக்க வார்த்தைகளுடன் அவர், தேவனுடைய ஊழியத்திற்கென்று அவர்களையும் தமது சொந்தக் குடும்பத்தையும் (மீண்டும்) புதிதாய் ஒப்புவிக்க நாடுகின்றார். பின்பு இந்த இன உடன்படிக்கையின்

புதுப்பித்தலுக்கான நினைவுச் சின்னக் கல் ஒன்றை நாட்டி, கூட்டத்தைக் கலையச் செய்து, பின் விரைவிலேயே தனது பிதாக்களுடன் சேர்த்துக் கொள்ளப்படுகின்றார்.

குறிப்பு

[1]*யோசுவா 24:15.*

7

நியாயாதிபதிகளின் காலம், கி.மு. 1400–1095

யோசுவாவின் மரணத்திலிருந்து சவுல் அபிஷேகம் செய்யப்பட்டது வரை நியாயாதிபதிகள், ரூத், 1 சாமு. 1 -10

I. மத ரீதியான நிலை.

இஸ்ரவேலரின் மதரீதியான நிலை பின்வருமாறு தொகுத்துரைக்கப் படலாம்:

1. விக்கிரகாராதனைக்குத் திரும்புதல்களின் வரிசைத் தொடர்.—இதற்கான காரணங்கள் பின்வருவனவற்றில் காணப்பட வேண்டியவை களாய் உள்ளன:

அ. விக்கிரகாராதனைக்காரர்களாயிருந்த முன் பரம்பரை (இ.வ. ஆதி. 31:19; 35:2; யோசு. 24:2-14).—ஆபிரகாம் விக்கிரகாராதனையைக் கை விட்டிருந்தார், ஆனால் அது, யாக்கோபின் திருமணத்தின் மூலம் குடும்ப வாழ்வில் மீண்டும் உட்புகுந்திருந்தது; மற்றும், யாக்கோபு (அந்த) விக்கிரகங்களைப் புதைத்திருந்தாலும், அதன் தடயங்கள் சில அநேகமாய்த் தொடர்ந்திருந்தன.

ஆ. அவர்களின் எகிப்திய அடிமைத்தனம் (இ.வ. யாத். 32:21-34; யோசு. 24:14).—இஸ்ரவேலர்கள் சீனாய் மலையின் அடிவாரத்திலே அவ்வளவு விரைவில் மற்றும் அவ்வளவு கீழ்மையாக விக்கிரகாராதனையில் வீழ்ந்து போயிருந்த அளவுக்கு (எகிப்தில்) அவர்கள் அதில் ஆழமாக ஊறியிருந்திருக்க வேண்டும்; மற்றும் யோசுவாவின் (பிரியாவிடை) உரையானது, வனாந்தரத்தில் ஒழுங்கு நடவடிக்கை அதை (விக்கிரகாராதனையை) முற்றிலுமாக நீக்கிப் போடவில்லை என்பதற்கு முடிவான ஆதாரமாக உள்ளது.

இ. கானானிய இனத்தவரின் கெடுக்கும் போக்குகள்.—கானான் நாடானது அக்காலத்தின் மிகவும் தரக் குறைவான மத அமைப்பின் மையமாய் இருந்தது. அங்கிருந்து கார்த்தேஜ், கிரேக்கம் மற்றும் ரோமாபுரி ஆகியவை தங்கள் மதங்களின் சிற்றின்பப் பற்றான அம்சங்களை எடுத்திருந்தன. எனவேதான் கானானியரைத் துரத்தி விடும்படி அல்லது அவர்களை அழித்துப் போடும்படி தெய்வீக ஆணை உண்டாயிற்று. அது மட்டுமே இஸ்ரவேலரின் ஒரே பாதுகாப்பாக இருந்தது. எமோரியரின்

அக்கிரமம் நிறைவடைந்தது. அந்த ஆணைக்குக் கீழ்ப்படியத் தவறி, தொடர்ந்த கலப்புத் திருமணங்கள் சுத்தமான பக்தியை அழிக்கும் வழிமுறைகளாயின.

2. பின்தொடர்ந்த அடக்கு முறைகள் இயல்பான விளைவாயிருந்தன. —அருகில் இருந்த இனத்தவரால் ஆன இந்த அடக்கு முறைகள் இயல்பான விளைவாய் இருந்தன. ஒழுக்க ரீதியில் பலவீனமானவர்கள், அரசியல் ரீதியில் பலவீனமாயினர். அவைகள் ஒழுங்குபடுத்தும் நியாயத்தீர்ப்புக் களாகவும் இருந்தன. மோவாபியர்கள் அல்லது மீதியானியர்கள் அல்லது பிலிஸ்தியர்களின் கொடுமையினால் மீண்டும் மீண்டும் வருத்தத்திற் குள்ளான இஸ்ரவேலர்கள் தங்களை ஒடுக்கியவர்களின் விக்கிரகாராதனை யில் இருந்து யெகோவாவை ஆராதிப்பதற்குத் திரும்பினார்கள். நீண்ட (கால) ஓட்டத்தில் மிகச் சுத்தமான விசுவாசம் வெற்றியடைந்தது.

3. நியாயாதிபதிகள் என்று அழைக்கப்பட்ட விடுதலையாளர்களின் வரிசைத் தொடர். —இவர்கள் முழு நிறைவான மனிதர்களாய் இருந்த தில்லை. இவர்கள் கிறிஸ்தவ விசுவாச வீரர்களுக்கு மிகத் தாழ்ந்த நிலையில் இருந்தனர். இவர்கள் அடிக்கடி, மூட நம்பிக்கை உள்ளவர்களாக, எளிதில் உணர்வுக்கு ஆட்படக் கூடியவர்களாக, ஒழுக்க ரீதியாகப் பலவீனம் கொண்டவர்களாக இருப்பினும் இவர்கள் தேவன்மீது விசுவாசம் கொண்டிருந்தனர். இப்படிப்பட்ட காலகட்டத்தில் அதுவே அதிகமானதா யிருந்தது. பவுலும் லூத்தரும் தங்கள் மட்டங்களுக்கு மேலாகச் செயல் பட்டது போலவே இவர்கள் தங்கள் வயதின் எல்லா மட்டங்களுக்கும் மேலாக, எழும்பி நின்றனர், எனவே விசுவாச வீரர்களின் பட்டியலில் இடம் பெறத் தகுதியாகின்றனர். மேலும், இவர்கள் நாட்டுப் பற்றாளர்களாகவும் இருந்தனர். இன ரீதியான மற்றும் உள்ளூர் சார்ந்த பொறாமை நிலவி வந்த ஒரு கால கட்டத்தில், இவர்கள் பெருமளவுக்கு விடுதலை உணர்வுடன் எழும்பி நின்றனர். இவர்கள் தங்கள் நாட்களின் நேருகளாக, சாஸ்திரிகளாக, பட்டேல்களாக இருந்தனர்.

II. *அரசியல் ரீதியான நிலை.*

அரசியல் ரீதியாக தேசிய நிறுவனமோ, தேசீயத் தலைமையகமோ அல்லது தேசியத் தலைவரோ (அன்று இஸ்ரவேல் மக்களிடையில்) இருந்ததில்லை. மோசே ஒரு மத அமைப்பைக் கொடுத்திருந்தார், ஆனால் அது நன்கு விளக்கியுரைக்கப்பட்டிருந்த அரசியல் ஆட்சி முறையாய் இருந்ததில்லை. அவர்கள் பன்னிரெண்டு கோத்திரங்களாயிருந்தனர், சில வேளைகளில் பொதுத் தற்காப்புக்காக ஒன்றுகூடி இணைந்தனர், சில வேளைகளில் ஒருவர் மற்றவரை முற்றிலும் அழித்துப் போடுமளவுக்குச் சச்சரவு செய்தனர். அவர்களின் நிலைமையானது வல்லபாய் பட்டேல் அவர்களால் ஒன்றிணைக்கப்படுவதற்கு முன் இந்தியாவின் சமஸ்தானங்கள் இருந்த நிலையுடன் ஒப்பிடப்பட்டுள்ளது. இருப்பினும், அவர்கள் சிற்றினங்களாய் பிரிந்து போகாதவாறு அவர்களை ஒன்றுகூட்டிப் பிணைத்திருந்த மூன்று பிணைப்பு(காரணங்)கள் பின்வருமாறு:

அ. ஒரு பொதுவான முன் பரம்பரையும் வரலாறும்.—ஆபிரகாம் அந்த இனத்தைத் தோற்றுவித்தவராக இருந்தார்; அவர்கள் ஈசாக்கு மற்றும் யாக்கோபுமீது தங்கள் பயபக்தியைச் சமமாய்ப் பகிர்ந்து கொண்டார்கள்; யோசேப்பு, மோசே, யோசுவா போன்ற இப்படிப்பட்ட பெயர்கள் அவர்களின் ஒளிர்வாய் இருக்கையில், செங்கடல் மற்றும் யோர்தானைக் கடந்து, (கானானை) வெற்றி கொண்டது ஆகியவை அவர்களின் இன மரபுரிமையாய் இருந்தன.

ஆ. எபிரெயம் என்ற ஒரு பொது மொழி.—பல்வேறு வட்டார மொழி வழக்குகள் இருந்ததின் தடயங்கள் உள்ளன, ஆனால் இம்மாறுபாடு என்பது ஆல்ஃபிரடின் நாட்களில் இங்கிலாந்தில் இருந்ததைக் காட்டிலும் அதிகமாய் இருந்ததில்லை.

இ. ஒரு பொது மதம்.—ஆசரிப்புக் கூடாரம் சீலோவில் அமைக்கப் பட்டிருந்தது. அங்கு (ஒரே) ஒரு பலிபீடம் இருந்தது. அங்கு (எபிரெய) இனத்தின் பிரதான ஆசாரியர் குடியிருந்தார். அங்கு அன்றாடம் (எபிரெய) இனத்திற்கான பலிகள் செலுத்தப்பட்டன. கோத்திரங்களின் பிரதிநிதிகள் ஆண்டின் மாபெரும் மூன்று பண்டிகைகளுக்கு இங்குதான் சென்றனர். இப்படிப்பட்டவையே இப்பணியின் மைய ஈர்ப்பு சக்தியாய் இருந்தன. கிரேக்கர்களும் இதே போன்ற பிணைப்புகளைக் கொண்டிருந்தனர்; ஆனால் புவியியல் நிலைகள், ஒரு இனமாக/நாடாக அவர்கள் வடிவெடுக்கும்படி ஒருக்காலும் ஒன்றுபடாதபடி வலிவானதொரு தனித்துவத்தை முன்னதாக வளர்ந்திருந்தன. இந்தப் பிணைப்புகள் எபிரெயர்களை, தீர்க்கதரிசியான சாமுவேலிடத்திலும், அரசரான தாவீதினிடத்திலும் மிக மேன்மையான விசுவாசத்தையும் அவர்களை ஒரே நாடாக இணைத்து வைத்திருப்பதற்கான அரசியல் நிறுவன மதிநுட்பத்தை யும் அவர்கள் கண்டறியும் வரைக்கும் பிணைத்து வைத்திருந்தன.

III. முதன்மையான ஆறு படையெடுப்புகள்.

இன/நாட்டு வாழ்வின் இந்தப் பண்படாத ஆனால் வடிவு பெறும் கால கட்டத்தின் போது, வெளியிலிருந்து (எபிரெயர்கள் மீது) முதன்மையான ஆறு படையெடுப்புகள் நடைபெற்றன. நாம் ஏற்கனவே கண்டுள்ளபடி, இவைகள் இனரீதியான விசுவாச விலக்கத்திற்கான தெய்வீக, நியாயத் தீர்ப்பாகவும் இயல்பான விளைவாகவும் வந்தன. "இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தார்கள்"; "இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டார்கள்" - இப்படிப்பட்ட வாக்கியங் கள் நியாயாதிபதிகளின் புத்தகத்தில் பத்து முறைகள் திரும்பத் திரும்பக் கூறப்படும் அடுத்தடுத்த வாக்கியங்களாக உள்ளன,[1] இவை தமது ஒழுக்க ரீதியான தனிச் சிறப்பினால் வரலாற்றை உடுத்துவிக்கின்றன. இது, சிலுவைப் போர்கள் அல்லது நார்மனின் வெற்றி கொள்ளுதல் போன்றே வரலாற்றின் ஒரு அத்தியாயம் என்ற வகையில் வலிவான மதத்துவம் கொண்டுள்ளன; ஆனாலும், யெகோவாவைத் தேவனாகக் கொண்ட இஸ்ரவேல் மக்கள் கடைசியில் ஒரு இனமாவதற்கு/நாடாவதற்குரிய

ஒழுங்குபடுத்தும் செயல் என்பதே இதில் அமையப்பெற்ற மிக மேன்மையான தனிச்சிறப்பாக உள்ளது.

1. கிழக்கிலிருந்து மெசொப்பொத்தாமியர்களின் படையெடுப்பு.—ஆபிரகாமின் காலத்தில் ஐப்பிராத்து நதியின் பிரபுக்கள் யோர்தான் வரைக்கும் தங்கள் பேரரசை விரிவாக்கி, லோத்தைச் சிறைப்பிடித்துச் சென்றனர் என்று நாம் கண்டிருக்கின்றோம். ஐந்நூறு ஆண்டுகள் கடந்து விட்டன. அம்மாபெரும் சமவெளியின் இன்னொரு பிரபு இன்னொரு மேற்கத்தியப் படையெடுப்பைத் தலைமை தாங்கி நடத்திச் செல்லுகின்றார். அந்த நுகத்தின் கீழ் இஸ்ரவேலர்கள் எட்டு ஆண்டுகள் அளவாக வேதனைப் பட்டுக் கூக்குரலிடுகின்றனர், அப்பொழுது காலேபின் தம்பி(கேனாஸ்)யின் மகனான ஒத்னியேல் என்பவர் எழும்புகின்றார், இவர் படையெடுத்து வந்த அவர்களை (மெசொப்பொத்தாமியரை) எதிர்த்து நின்று, அவர்களை ஐப்பிராத்துப் பகுதிக்கு திரும்பத் துரத்துகின்றார்.

2. தென்கிழக்குப் பகுதியிலிருந்து மோவாபியரின் படையெடுப்பு.—லோத்தின் சந்ததியாரான மோவாபியர்கள் சவக்கடலின் கிழக்குப் பகுதியில் வாசம் பண்ணினார்கள். எக்லோனின் (தலைமையின்) கீழ் அவர்கள் தென்கிழக்குக் கோத்திரங்களைக் கீழ்ப்படுத்தியிருந்தார்கள், மற்றும் யோர்தானைக் கூடக் கடந்து வந்து எரிகோவைப் பதினெட்டு ஆண்டுகள் அளவாகப் பிடித்து வைத்திருந்தார்கள். பென்யமீன் கோத்திரத்தாரான ஏகூத் என்பவர் (இஸ்ரவேல்) கோத்திரங்களின் காணிக்கையை/கப்பத்தை எடுத்துக் கொண்டு செல்ல எக்லோனிடத்தில் எரிகோவுக்குச் சென்றார். இரகசியமாக ஒரு நேர்முகப் போட்டியின் போது அவர் அரசரைக் குத்திக் கொன்று விட்டு, மேற்கு மலைகளுக்குத் தப்பியோடி, ஒரு படையை ஏற்படுத்தி, யோர்தானின் துறைகளைப் பிடித்து, மோவாபியர்களில் பத்தாயிரம் பேரை யுத்தத்தில் வெட்டிக் கொன்றார். இது குறைந்தது எண்பது ஆண்டுகள் அளவாக நாட்டின் அப்பகுதிக்குச் சமாதானத்தைக் கொடுத்தது.

3. வட பகுதியிலிருந்து கானானியரின் படையெடுப்பு.—யோசுவா, மேரோம் ஏரியின் அருகில் யாபீன் என்பவரின் தலைமையின் கீழ் வந்த வடபகுதி யுத்தக் குழு ஒன்றைத் தோல்வியடையச் செய்திருந்தார். பிற்பாடு வந்த ஒரு யாபீனின் தலைமையின் கீழ் இந்த வடபகுதிக் கானானியர்கள் அணிவகுத்து வந்து வடக்குக் கோத்திரங்களை இருபது ஆண்டுகள் அளவாக அடக்கி ஆண்டார்கள். கடைசியில் அரிதான விசுவாசமும் தைரியமும் கொண்ட பெண் தீர்க்கதரிசியான தெபொராள் என்ற பெண்மணி நப்தலி கோத்திரத்தைச் சேர்ந்த பாராக் என்பவரைத் தூண்டினாள். அவர் பத்தாயிரம் மனிதர்களைக் கொண்ட ஒரு படையைச் சேகரித்து, எஸ்தரலோன் சமவெளியில் மாபெரும் வெற்றியை அடைந்தார். கானானியப் படைத் தளபதியான சிசெரா, கால் நடையாய்த் தப்பியோடி, யாகேலின் கூடாரத்தில் தஞ்சம் அடைந்தான், இந்த யாகேல் மோசேயின் மாமனாரான எத்திரோவின் சந்ததியில் வந்த கேனியனான ஏபேர் என்பவரின் மனைவியாயிருந்தாள். யாகேல் தன் காலத்தின் ஜான்ஸி ராணி என்று தன்னை நிரூபித்தாள், உறங்கிக் கொண்டிருந்த சிசெராவின் நெற்றியில் அவள் கூடார ஆணியை அடித்துச் செலுத்தினாள். அந்த வெற்றியானது

தெபொராளினால் சொல்லாற்றல்மிக்க யுத்தப் பாடல் ஒன்றில் கொண்டாடப்பட்டது (நியா. 5).

4. கிழக்கிலிருந்து மீதியானியர்களின் படையெடுப்பு.—மீதியானியர்கள் என்பவர்கள் ஆபிரகாமுக்கு அவரது மனைவியான கேத்தூராள் மூலமாகப் பிறந்த சந்ததியார்களான அரபியர்களாய் இருந்தனர். அவர்கள் நாட்டில் குடியமர்ந்திருக்கவில்லை, ஆனால் அறுவடை வேளையில் நிலத்தில் கொள்ளையிட்டு, கொள்ளைப் பொருளைச் சுமந்து கொண்டு புறம்பே சென்று விடுவார்கள். இஸ்ரவேலர்கள் மலைகளிலும், அரண் சூழ்ந்த நகர் களிலும், மலைக் குகைகளிலும் கூட சென்று தங்கும் அளவுக்கு மீதியானி யரின் கொள்ளையிடுதல் மிகவும் பயங்கரமானதாக இருந்தது. தேவன் மனாசே கோத்திரத்திலிருந்து கிதியோன் என்ற இரட்சகனை எழுப்பினார். அவர் தன் சொந்த ஊரில் மற்றும் தனது தந்தையின் வீட்டில் பாகாலுக்கு செய்யப்படும் வழிபாட்டை அழிப்பதிலிருந்து தமது பணியைத் தொடங் கினார். பின்பு அவர், முப்பத்து இரண்டாயிரம் மனிதர்கள் கொண்ட படையைச் சேகரித்து, பயம் கொண்டவர்களை வீடு திரும்ப அனுமதித்த தின் மூலம் அவ்வெண்ணிக்கையை பத்தாயிரமாய்க் குறைத்தார்; இன்னும் அதை அவர், தண்ணீரைத் தங்கள் கையில் எடுத்து முன் ஜாக்கிரதையுடன் குடித்தவர்களாகிய முந்நூறு பேரை மட்டும் தேர்ந்தெடுத்ததின் மூலம் எண்ணிக்கையை இன்னும் குறையச் செய்தார். இந்தச் சிறு அணியுடன் அவர் மீதியானியர்களின்மீது இரவு நேரத் தாக்குதல் ஒன்றைத் தொடுத்து அவர்களைத் துருவித் தேடிப் பெருமளவு கொன்று குவித்து, கிழக்குப் பாலைவன முனை வரையிலும் அவர்களை விரட்டிச் சென்றார். பாராக் மற்றும் கிதியோன் ஆகிய இருவரின் வெற்றிகளும் வடக்குக் கோத்திரங் களால் பெற்றுத் தரப்பட்டன. வல்லமை நிறைந்த எப்பிராயீமின் மைய கோத்திரமானது இந்த மகிமைகளில் தனது சிறிய பங்கினால் மனவேதனை யடைந்தது; அவர்களின் பொறாமையைக் கிதியோன் புத்தி கூர்மைமிக்க அதிகப் புகழ்ச்சியின் ஒரே ஒரு பொழிவினால் அமைதிப்படுத்தினார் (நியா. 8:1-3). கிதியோன் அந்த வேளையின் வீரரானார். அவருக்கு கிரீடம் அளிக்கப்பட்டது ஆனாலும் அதை அவர் பெற்றுக் கொள்ள மறுத்து விட்டார். அவரது, அதிகப் பேராவல் கொண்ட ஆனால் குறைவான தகுதி கொண்ட மகனான அபிமெலேக்கு என்பவர் தனது சகோதரர்கள் யாவரையும் - ஒருவரைத் தவிர - கொலை செய்தார், மற்றும் சீகேமில் சற்று காலமே இருந்த உள்ளூர் ஆளுகையொன்றை வெற்றி கொண்டார். அவர் ஒரு கலகத்தை அடக்கிய வேளையில் தனது கிரீடத்தையும் வாழ்க்கையையும் இழந்தார்.

5. கிழக்கிலிருந்து அம்மோனியர்களின் படையெடுப்பு.—மோவாபியர் களைப் போன்றே அம்மோனியர்களும் லோத்தின் சந்ததிகளாய் இருந்தனர். யோர்தானுக்குக் கிழக்குப் பகுதியில் இருந்த நாட்டை அவர்கள் பிடித்து, கிழக்குப் பாலைவனத்தில் திரளாய் நிறைந்திருந்தனர். விரைவிலேயே அவர்கள் கிழக்குக் கோத்திரங்களைப் பின்னோக்கித் துரத்தத் தொடங்கினார்கள். யெப்தா என்பவர் (இஸ்ரவேல் மக்களின்) விடுதலைக் கருவியானார். இவர் கீழ்மையாய்க் கருதப்பட்ட பிறப்புடையவராக,

(தகப்பனின்) உடைமைகளின் உரிமைகோர முடியாத (பரஸ்திரீக்குப் பிறந்த) சட்டத்திற்குப் புறம்பானவராக இருந்தார், ஆனால் அம்மோனியர் களை வெளியேற்றுவதற்காக அவர் மீண்டும் அழைக்கப்பட்டு, மீண்டும் பதவியளிக்கப்பட்டு, படைகளின் தலைவராக்கப்பட்டார். அவர் யுத்தத் திற்குச் செல்வதற்கு முன், தாம் வெற்றியுடன் திரும்பினால், தம் வீட்டு வாயிலில் தமக்கு முன் முதலாவதாக எதிர்ப்படுவதை யெகோவாவுக்குப் பலி செலுத்துவதாகப் பொருத்தனை செய்து கொண்டார். அவர் யுத்தத்தில் வெற்றி பெற்றார், வீடு திரும்புகையில் தமது ஒரே மகளால் எதிர்கொள்ளப் பட்டார், அவள் மீது தனது பொருத்தனையை நிறைவேற்றினார்.

6. தென் மேற்கில் இருந்து பெலிஸ்தியரின் படையெப்பு.—பெலிஸ்தர் கள் மத்திய தரைக்கடல் பகுதியில் வலுச்சண்டை செய்யும் வர்த்தக மக்களாய் இருந்தனர். அவர்கள் பெனிக்கியர்களின் விரோதிகளாய்/போட்டியாளர்களாய் இருந்தனர், ஒருமுறை அவர்கள் சீதோன் நகரைச் சிறைப்பிடித்தனர், அது முதல் அந்நகரானது பெனிக்கியாவில் தீர் என்ற நகருக்கு அடுத்த இரண்டாம் இடத்திற்கு மூழ்கிப் போயிற்று. பெலிஸ்தர்கள் இஸ்ரவேல் மக்களுக்கு மிகவும் ஆழமான விரோதிகளாய் இருந்தார்கள், நியாயாதிபதிகளின் காலம் முழுவதிலும், மற்றும் முடியாட்சி காலத்திலும் கூட தாவீதினால் முறியடிக்கப்படும் வரையிலும் இவர்கள் இஸ்ரவேலரைத் துன்புறுத்தி வந்தார்கள். விசேஷமாக, தென் பகுதிக் கோத்திரங்களான சிமியோன், தாண் மற்றும் யூதா ஆகிய கோத்திரங்கள் இவர்களின் தாக்குதலுக்குள்ளாயின. தாண் கோத்திரத்தைச் சேர்ந்த சிம்சோன் இந்த இராணுவ வீரர்களில் கடைசியானவராக, சில அம்சங்களில் குறிப்பிடத் தகுந்தவராக இருந்தார், அவர் பிறப்பில் இருந்தே நசரேயனாக[2] (Nazarite) அதாவது, அசுத்தமான/தீட்டான ஏதொன்றையும் உண்ணாதிருத்தல், திராட்ச இரசத்தை அருந்தாமல் இருத்தல் மற்றும் ஒருக்காலும் தன் தலை முடியைக் கத்தரியாமல் இருத்தல் என்பவற்றைக் கைக் கொள்ளும்படி தனது தாயினால் பொருத்தனை மேற்கொள்ளப்பட்டவராயிருந்தார். அவர் எபிரெய ஹெர்குலிஸாக இருந்தார், சக்திமானுக்குரிய செயல்களில் மகிழ்ந்தார், அடிக்கடி நம்ப இயலாத செயல்களைச் செய்தார் ஆனால் எப்பொழுதும் நாட்டுப் பற்றுள்ளவராயிருந்தார். தென்மேற்கு மலைகளில் இருந்த தமது வீட்டில் இருந்து அவர் அடிக்கடி பெலிஸ்தருக்கு எதிராகச் சூறையாடுதல்களைச் செய்தார், எப்பொழுதும் தாம் ஒருவராகவே, தனியராகவே இவைகளைச் செய்தார். பெலிஸ்தியப் பெண்கள் இருவரை அவர் திருமணம் செய்து கொண்ட விஷயமானது அவரது வெற்றிகளுக்கும் அவரது கடைசி வீழ்ச்சிக்கும் வழிகோரியவைகளாய் இருந்தன; ஏனெனில் சிம்சோன் ஒரு பலவீனமான பலவானாய் இருந்தார். தெலீலாளின் வேண்டுகோள்களுக்கு இணங்கி, அவர் தமது பலத்தின் இரகசியத்தை வெளிப்படுத்துகின்றார், தமது நசரேய விரதத்தை மீறும்படி தம் முடி வெட்டப்படுவதை அனுமதிக்கின்றார். அவர் (ஒரு காலத்தில்) பெயரைக் கேட்டாலே பெலிஸ்தர் அனைவரும் பயம் கொண்ட சிம்சோனைச் சிறுமைப்படுத்தும் காட்சியாயிற்று, அப்போது அவரது தலை தெலீலாளின் மடியில் இருந்தது. அவர் அவளது முன்னிலையினின்று அகற்றப்பட்டு,

தேவனுக்கு அந்நியப்பட்டு, அவருடைய விரோதிகளின் கையில் அகப் பட்டார். கபோதியாக்கப்பட்டு, சிறைபிடிக்கப்பட்டு, அடிமைப் பெண்கள் செய்யும் மாவறைக்கும் பணிக்குத் தாழ்த்தப்பட்டார், (இருப்பினும்) அவர் தம் பொருத்தனையைப் புதுப்பிக்கவும், தம் பலத்தை மீண்டும் பெறவும் (சிறையில்) ஒரு வாய்ப்பைப் பெறுகின்றார். பெலிஸ்தரின் தெய்வமான தாகானின் திருவிழாவின் போது கூடி வந்த கூட்டத்தை மகிழ்விப்பதற்காக வெளியே அழைத்து வரப்பட்ட சிம்சோன், சுவிட்சர்லாந்து நாட்டின் வின்க்ளெரியட்டு போலத் தனது நாட்டின் விடுதலைக்காகத் தம் உயிரையை அர்ப்பணிக்கின்றார். கோயிலின் மையத் தூண்களைக் கீழே இழுத்துத் தள்ளிய அவர் தமது விரோதிகள் ஆயிரக்கணக்கில் உயிருடன் புதையுண்ட அக்கல்லறையில் தம்மைத் தாமே புதைத்துக் கொண்டார். பெலிஸ்தியாவின் வல்லமை முறிக்கப்படாதிருந்தது; ஆனால் அவரது (சிம்சோனின்) துணிகரமான செயல்கள் இஸ்ரவேலரின் தைரியத்தை மீண்டும் தூண்டவும், சாமுவேல் மற்றும் தாவீது ஆகியோரின் அதிக நிலையான செயல்களைச் சாத்தியமாக்கவும் தொலைவில் சென்று நோக்கங்களை நிறைவேற்றின.

IV. ரூத்தின் வரலாறு.

நியாயாதிபதிகளின் காலத்தில் ஏதோ ஒரு வேளையில் ரூத்தின் புத்தகத்தில் எடுத்துரைக்கப்பட்ட நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. இது அக்காலத்தில் வாழ்ந்த ஒரு இனிய அமைதி நிறைந்த (குடும்ப) வரலாறாகும். இப்புத்தகத்தை முழுமையாகப் படிக்க வேண்டியது அவசியம். எலிமெலேக்கும் நகோமியும் பெத்லகேமில் வாழ்கின்றனர். ஒருவேளை படையெடுப்புகள் பலவற்றின் காரணமாய் ஏற்பட்ட பஞ்சம் அவர்களை மோவாப் நாட்டுக்கு இடம்பெயரும்படி வழிநடத்திற்று. அங்கு அவர்கள் மகன்கள் திருமணம் செய்து கொள்கின்றனர். பத்து ஆண்டுகள் கடக் கின்றன, அம்மூன்று பெண்களும் பிள்ளைகளற்ற விதவைகளாகின்றனர். நகோமி தனது முகத்தைச் சொந்த ஊரை நோக்கித் திருப்புகின்றாள். இளம் பெண்கள் இருவரும் அவளுடன் பயணமாகின்றனர். புற இனத்தைச் சேர்ந்த அவ்விரு (மரு)மகள்களும் (தங்களுக்கு) அந்நியமான நாட்டிலே எவ்வளவு தனிமைப்பட்ட வாழ்வை வாழ வேண்டியிருக்கும் என்று உணர்ந்த நகோமி அவர்களைத் திரும்பிச் செல்லும்படி அறிவுரை கூறுவதில் பிரயாசப்படுகின்றாள். அதில் தடுமாறிய ஓர்ப்பாள் திரும்பிச் செல்லு கின்றாள். ரூத் கூறிய மறுமொழியானது மிகச் சிறந்த மொழிநடையாகி யுள்ளது (ரூத். 1:16, 17). அப்படிப்பட்ட விசுவாசமும் அர்ப்பணிப்பும் பலன் அளிக்கப்படாமல் போய் விடவில்லை. பெத்லகேமை அடைந்த பொழுது ரூத் தனது கணவரின் நெருங்கிய உறவினரான போவாஸின் நிலத்திற்குக் கதிர் பொறுக்க செல்லுகின்றாள். நகோமியினால் அறிவுறுத்தப்பட்ட அவள் (ரூத்) தனது (இறந்து போன) கணவரின் பெயரையும் சுதந்தரத்தையும் நிலைநாட்டுவதற்காக திருமணத்திற்கான நெருங்கிய உறவுமுறையாளான தனது உரிமையைக்கோருகின்றாள்; எனவே அவள் தாவீது, மரியாள் மற்றும் இயேசு ஆகியோரின் மதிப்புமிக்க முன்னோர் ஆகிறாள்.

V. தீர்க்கதரிசியும் - நியாயாதிபதியுமான, சாமுவேல்.

(1 சாமுவேல் 1-10.)

சாமுவேல் என்பவர் மோசேக்கும் தாவீதுக்கும் இடையில் மிக முக்கிய மான பாத்திரமாக விளங்குகின்றார். அவர், தன் காலத்தின் லூத்தராகவும் யோவான் ஸ்நானனாகவும் இருந்தார். அவரது பிறப்பு முதல் அவரது மரணம் வரை அவரது முழுப்பணியும் நம்மைக் காலத்தின் தாழ்வான மட்டங்களில் இருந்து மேலாக உயர்த்துகின்றது. குழந்தையில்லாத அன்னாள், குழந்தைகள் வேண்டும் என்கிற எபிரெயத் தாயின் ஏக்கத்துடன் தேவனிடம் அவருக்காக (சாமுவேல் பிறப்புக்காக) கெஞ்சுகின்றாள், பின்பு அவரை தேவனுக்கே அர்ப்பணித்து விடுகின்றாள். இவ்விதமாக அவர் சீலோவில் ஆசரிப்புக் கூடாரத்தில் வளர்க்கப்படுகிறார்.

இந்த வேளையில் பிரதான ஆசாரியராய் இருந்த ஏலி, "நியாயாதி பதி"யாகவும் இருந்தார். இவ்விரு பணிகளையும் ஒரு நபருக்குள் இணைத்து வைத்த முதல் நபர் இவரே. வயது முதிர்ந்த ஏலி, தம்மில் (ஒழுக்கத்) தூய்மையுடையவராய் இருப்பினும், தமது மகன்களின் பாவங்களைக் கட்டுப்படுத்தாமல் அனுமதித்தார்.[3] பிள்ளையாயிருந்த சாமுவேலின் மூலம் தேவன் ஏலியின் வீட்டின் வீழ்ச்சியை வெளிப்படுத்தினார். ஆப்பெக் என்ற இடத்தில் நடைபெற்ற புகழ்மிக்க யுத்தத்தில் பெலிஸ்தர்கள் ஏலியின் இரு மகன்களையும் கொன்று பேழையைக் கைப்பற்றினார்கள். அந்தச் செய்தியைக் கேட்டவுடன் ஏலி கீழே விழுந்து இறந்தார். தொடர்ந்து வந்த இருளான ஆண்டுகள், சாமுவேல் தேவனுடைய தீர்க்கதரிசியாய் இருக்கும்படி அழைக்கப்பட்டதனால் வளர்ந்த நம்பிக்கையைக் கொண்டு விடுவிக்கப் பட்டன. சாமுவேலின் மாபெரும் ஊழியம் பின்வருமாறு தொகுத்துரைக் கப்படலாம்:

(1) அவர் ஒரு மாபெரும் தேச/இன/நாட்டு சீர்திருத்தத்தைக் கொண்டு வந்தார், உடன்படிக்கையைப் புதுப்பித்து, மக்களை யெகோவாவை வழிபடுவதற்குத் திருப்பிக் கொண்டு வந்தார்.

(2) பெலிஸ்தரால் தாக்கப்பட்ட பொழுது எபெசேனர் என்ற இடத்தில் இவர் (சாமுவேல்) தமது நியாயாதிபதி காலத்தில் அவர்கள் ஒருக்காலும் தாக்குதலைப் புதுப்பிக்காதவாறு அப்படிப்பட்ட ஒரு வெற்றியை அடைந்தார்.

(3) அவர் தீர்க்கதரிசிகளுக்குப் பள்ளிகளை நடத்தி வந்தார்.

(4) அவர் தம் வாழ்நாள் முழுவதும் இஸ்ரவேலை "நியாயந்தீர்த்தார்."

(5) அவர் முடியாட்சிக்கு வழியைத் தயார் செய்து, அதை அறிமுகப்படுத்தி, சவுலை அபிஷேகம் செய்வித்தார், சவுல் (தேவனால்) புறக்கணிக்கப்பட்ட பிறகு தாவீதை அபிஷேகம் செய்வித்தார். இவ்விதமாக சாமுவேல் நியாயாதிபதிகளிலிருந்து முடியாட்சிக்கு மாறிய காலத்திற்குரிய வராகின்றார். அவர் நியாயாதிபதிகளிலேயே கடைசியானவரும் மகா பெரியவருமாவார் மற்றும் அவர் மோசேக்குப் பிறகு எபிரெய

தீர்க்கதரிசிகளின் முதலாவது மாபெரும் வழித் தோன்றலாகவும் இருந்தார்.

குறிப்புகள்

[1]*நியா. 3:7, 9; 3:12, 15; 4:1, 3; 6:1, 7; 10:6, 10.* [2]அல்லது Nazirite. [3]இவ்விடத்தில் டீன், “suffered” என்று எழுதினார்.

8

ஒன்றுபட்டிருந்த இராஜ்யம், கி.மு. 1095–975

சவுல் அபிஷேகம் செய்யப்பட்டதிலிருந்து ரெகொபெயாம் அரியணை ஏறியது வரை

1 சாமு. 11-31; 2 சாமு.; 1 இராஜா. 1-11

I. அறிமுகம் - தேவனுடைய ஆளுகை.

1. தொடக்க வடிவமைப்பு.*—சீனாய் மலை அடிவாரத்தில் நிறுவன மாக்கப்பட்ட பொழுதில் இருந்தே இஸ்ரவேல் மக்கள் உண்மையில் ஒரு இராஜ்யமாய் இருந்தார்கள். அவர்கள் தேவ ஆளுகைக்குட்பட்டவர்களாக, தேவனுடைய ஒரு இராஜ்யமாக இருந்தார்கள். உண்மையில் தேவனே அவர்களின் இராஜாவாய் இருக்க வேண்டியிருந்தது என்றாலும், முதலாவது மோசே (அரசராக) இருந்தார், மற்றும் சில கருத்துக்களில் பிரதான ஆசாரியர்கள் (இஸ்ரவேல்) இனத்திற்காக/நாட்டிற்காக தேவனுடைய பிரதிநிதியாக இருந்தார்கள். இருப்பினும் கூட முதலில் இருந்தே பூமிக்குரிய ஒரு இராஜா ஆழ்ந்து சிந்திக்கப்பட்டு வந்ததாகக் காணப்படுகின்றது. ஆபிரகாமின் சந்ததியில் அவர்கள் (எழும்பி) இருக்க வேண்டியதாயிருந்தது (ஆதி. 17:16). அரசருக்கான பிரமாணத்தை மோசே வகுத்துக் கொடுத்தார் (உபா. 17:14-20).*

மேலும், பூமிக்குரிய இராஜா இனங்கள் எல்லாவற்றையும் ஆசீர்வதிக்க இருந்த ஆபிரகாமின் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட "சந்ததி"யின் மிகச் சிறந்த மாதிரியைக் கொடுத்தது; ஆகவே, பிற்காலத் தீர்க்கதரிசனத்தில், மேசியா தாவீதின் சந்ததியில் வரவேண்டியவராகவும், தாவீதின் அரியணையில் அமர வேண்டியவராகவும் இருக்கிறார்.

2. முடியாட்சிக்கு மாற்றம் அடைதல்.*—பிற்காலத்தில் சாமுவேலின் வாழ்நாட்களின் போது மக்கள் (தங்களை ஆள) அரசர் ஒருவர் வேண்டு மென்று வேண்டுகோள் விடுத்தார்கள். (1 சாமு. 8ஐக் காணவும்.) அவர்கள் இரண்டு காரணங்களை வற்புறுத்தினார்கள்: சாமுவேலின் மகன்கள் நியாயாதிபதிகளாய்த் தொடரத் தகுதியற்றுப் போன நிலை, மற்றும் தங்களைச் சுற்றிலும் உள்ள நாட்டவர்கள் போல் தங்களை(யும்) யுத்தத்தில் வழிநடத்திச் செல்வதற்கு ஒரு அரசர் வேண்டும் என்ற தங்களின் விருப்பம். நியாயாதிபதிகளின் கீழ் வளர்ந்து கொண்டிருந்த ஒழுங்கற்ற நிலை மற்றும் அவர்களை(இஸ்ரவேல் நாட்டவரை)ச் சுற்றிலும் இருந்த பிற நாட்டவரின்*

வலுச் சண்டை செய்யும் தன்மை போன்ற பிற காரணங்களும் இருந்தன என்பதில் ஐயமில்லை. (அவர்களின்) அவ்வேண்டுகோளானது சாமுவேலின் இருதயத்தைப் பிளந்தது; அது ஒரு பகுதி தமக்கு அவர்கள் நன்றியற்றுப் போன காரணத்தால் என்பது உறுதியானதே, ஆனாலும் அது அவர்கள் தங்களின் உண்மையான அரசத்துவ அதிகாரம் கொண்டவர் யெகோவா என்ற வகையில் அவருக்குப் பற்றுறுதியின்மையை வெளிப்படுத்தியதே பிரதான காரணமாயிருந்தது. இருப்பினும் அவர்களின் செயலில் என்பதற்கு மாறாக அவர்களின் எண்ணப்போக்கிலேயே பாவம் இழைந்து கிடந்தது; மற்றும் (அவ்வேண்டுகோளுக்கு) இணங்கிச் செல்லும்படி தேவனால் அவர் அறிவுறுத்தப்பட்டார், மற்றும் யெகோவாவின் மீது (தாம்) கொண்டிருந்த மிக மேன்மையான மெய்ப்பற்றுடன் அவர் தம்மை ஒதுக்கி வைத்து முடியாட்சியைத் தொடங்கி வைக்கும் அடிவைப்பை மேற்கொள்ளுகின்றார்.

II. *சவுலின் ஆளுகை.*

(கி.மு. 1095-1055. 1 சாமு. 11-31.)

1. சவுல் தேர்ந்தெடுக்கப்படுதல்.—*அ. அவர் தனிப்பட்ட வகையில் அபிஷேகம் பெறுதல்.*—சவுல், பென்யமீன் என்ற சிறிய கோத்திரத்தில் கீஸ் என்பவரின் மகனாய் இருந்தார். ஒரு நாள் அவர் தம் தந்தையின் கழுதைகளைத் தேடிச் சென்ற பொழுது, தீர்க்கதரிசியான சாமுவேலைச் சந்திக்கச் சென்றார். அந்தச் சந்திப்பின் விளைவாக, சாமுவேல், தெய்வீக அறிவுறுத்துதலினால் சவுலை அரசராய் இருக்கும்படி அபிஷேகம் செய்கிறார்.

ஆ. அவர் வெளிப்படையாகத் தேர்ந்து கொள்ளப்படுதல்.—அதன் பின், விரைவிலேயே சாமுவேல், மிஸ்பா என்ற இடத்தில் (இஸ்ரவேல்) இனத்தவரின் கூட்டம் ஒன்றுக்கு அழைப்பு விடுக்கின்றார். அவர்கள் திருவுளச் சீட்டு மூலம் (அரசரை) தேர்வு செய்யும் நிகழ்ச்சியைச் செயல்படுத்துகின்றனர். சீட்டு சவுலின் பெயரில் விழுகின்றது, அவரோ தளவாடங்கள் இருக்கிற இடத்திலே தன்னடக்கத்துடன் ஒளிந்து கொண்டிருக்கின்றார். அங்கிருந்து அவர் அழைத்துக் கொண்டு வரப்பட்ட பொழுது, அவரது உயர்ந்த உருவ அமைப்பானது மாபெரும் உற்சாகத்தை எழுப்புகின்றது. இருப்பினும் சிலர், அவரை (சவுலை) “அற்பமானவர்” என்று கூறி இகழ்கின்றார்கள். சவுல் அந்த மரியாதைக் குறைவான நடக்கையை அமைதியாய்க் கடக்கின்றார், மற்றும் அரசருக்குரிய செய்கைகளினால் அங்கீகாரத்தை வெற்றி பெற வாய்ப்பு ஒன்றிற்காக ஞானத்துடன் காத்திருக்கின்றார்.

இ. அம்மோனியர்களைத் தோல்வியுறச் செய்தல்.—அவரது வாய்ப்பு விரைவிலேயே வந்தது. அம்மோனியர்கள் வந்து கீலேயாத்தின் யாபேலைப் பிடித்துக் கொண்டார்கள். அதன் குடிமக்கள் சவுலிடம் வந்து அச்சம் கலந்த துன்பத்துடன் முறையிட்டார்கள். அப்பொழுது சவுல், ஒரு ஜோடி ஏர்மாடுகளைப் பன்னிரண்டு துண்டுகளாக வெட்டி ஒவ்வொரு துண்டையும் ஒவ்வொரு கோத்திரத்திற்கு அனுப்பி வைத்து, அவர்கள் (அம்மோனியரை எதிர்த்து) யுத்தம் செய்ய வரவில்லையென்றால்

அவர்களின் மாடுகளுக்கும் அப்படியே செய்யப்படும் என்று எச்சரித்து, யுத்தத்திற்கு எல்லாரும் அவசியம் வர வேண்டும் என்று கட்டளையிட்டார். அதற்குப் பதில் அளிக்கும் வகையில் இஸ்ரவேலில் முந்நூறு ஆயிரம் ஆண்கள் திரண்டனர், சவுல் விரோதியின் மீது திடீரென்று விழுந்து, அவர்களை பதரைப் போல் சிதறடித்தார்.

ஈ. கில்காலில் முடி சூட்டப்படுதல்.—சவுலின் வெற்றியானது (அவருக்கிருந்த) எதிர்ப்பை அமைதிப்படுத்திற்று, மற்றும் கில்காலில் நடத்தப்பட்ட கோத்திரங்களின் இன்னொரு கூட்டத்தில் அவர், இஸ்ரவேலின் அரசராக வெற்றிகரமாய் முடி சூட்டப்பட்டார்.

2. சவுல் புறக்கணிக்கப்படும் வரை அவரது ஆளுகை.—*அ. சுதந்திரப் போர்.*—சாமுவேலின் கீழ் இஸ்ரவேலர்கள் எபெநேசர் என்ற இடத்தில் பெலிஸ்தரின் மீது தொடுத்த யுத்தத்தில் வெற்றி பெற்றிருந்தார்கள், ஆனால் அவர்களின் சார்புத் தன்மையை ஒருக்காலும் முற்றிலுமாகக் களைந்து போட்டிருந்ததில்லை; மற்றும் சமீபத்தில் தான் இஸ்ரவேலர்களின் ஆயுதங் களைக் களையச் செய்ததின் மூலம் பெலிஸ்தியர்கள் இஸ்ரவேலர்கள்மீது விலங்குகளை இன்னும் அதிகமாய் இறுக்கியிருந்தார்கள். சவுல் தம் அரியணையில் தாம் பாதுகாப்புடன் இருப்பதை உணர்ந்த உடனேயே இந்தத் தாழ்மையான சார்புத் தன்மைக்கு முடிவு கட்ட வேண்டும் என்று தீர்மானித்தார். மிக்மாஸில் கிடைத்த வெற்றிதான் இந்தப் போரில் மிகவும் நினைவுகூரத் தக்க நிகழ்ச்சியாய் இருந்தது. சவுலின் மகன் யோனத்தான் தனது ஆயுதங்களைச் சுமக்கும் பணியாளுடன் குன்றுகளின் மீதேறி பெலிஸ்தரின்மீது திடீர்த் தாக்குதல் நடத்தி, அவர்களைக் குழப்பத்தில் ஆழ்த்தினார். சவுல் அந்த அனுகூலத்தைப் பின்பற்றி அவர்களை பெத்தாவேன் (maritime plain) *(1 சாமு. 14:23)* மட்டும் துரத்தியடித்தார்.

ஆ. சவுலின் மற்ற யுத்தங்கள்.—இஸ்ரவேலின் ஒவ்வொரு பக்கத்தி லிருந்தும் எண்ணற்ற நாடுகள் அதை (இஸ்ரவேலை) அழுத்திக் கொண்டிருந் தன, மற்றும் சவுல், மோவாப், அம்மோன், ஏதோம் மற்றும் வடகிழக்கில் இருந்த சீரியாவின் ஒரு அரசான சேபா ஆகியவற்றுடன் யுத்தம் நடத்தினார்.

இ. சவுல் புறக்கணிக்கப்படுதல்.—இதுவரை உள்ள மனிதர்களில் பலரைப் போன்றே சவுலும் தம் பணிப் பொறுப்பில் சீர் குலைந்தவரா கின்றார். அவர் தாம் ஒருவரே இஸ்ரவேலின் உண்மையான அரசரின் பூமிக்குரிய பிரதிநிதியாய் இருப்பதை மறந்து போகின்றார். அவர் யெகோவாவிடம் பற்றுறுதியற்றவராக, சுய சித்தம் கொண்டவராக, கீழ்ப்படியாதவராக ஆனார். அமலேக்கியரை அழிப்பதற்கு அனுப்பப்பட்ட அவர் (சவுல்) வெற்றிச் சின்னம் என்ற வகையில் ஆகாகு அரசரையும் மற்றும் யெகோவாவுக்கு மிக மேன்மையான பலியாக ஆடுகளையும் மாடுகளையும் கொல்லாமல் விட்டு வைத்து ஒதுக்கிக் கொண்டிருந்தார். கீழ்ப்படியாமை யின் அந்த நாளில் இருந்து அவர் தேவனால் உரிமை கொள்ளப்படாமலும், சாமுவேலினால் கை விடப்பட்டும் இருந்தார்.

3. சவுலின் வீழ்ச்சியும் தாவீதின் எழுச்சியும்.—சவுலின் ஆட்சிக் காலத்தின் எஞ்சிய பகுதியானது தாவீதின் வரலாற்றில் தக்க வகையில் அடங்குகின்றது. தாவீது அரசராய் இருக்கும்படி சாமுவேலினால் தனிப்

பட்ட முறையில் அபிஷேகம் பண்ணப்படுகின்றார்; (சவுல்) அரசரின் பித்த நிலையைச் சரிப்படுத்துவதற்காக அவரது அரண்மனையில் பணிபுரிய அழைப்பாணை விடுக்கப்பட்டது; பிற்பாடு பெலிஸ்தருடன் நடந்த யுத்தம் ஒன்றில் அவர் (தாவீது), இராட்சதனாயிருந்த கோலியாத்தைக் கொலை செய்தார்; மக்களின் புகழ்ச்சியினால் சவுலின் பித்தம் கொண்ட பொறாமை விழித்தெழுகின்றது. சவுல் தம் சொந்தக் கைகளினாலேயே தாவீதைக் கொல்லுவதற்கு இருமுறை முயற்சி செய்கின்றார்; தமது மகளைத் தாவீதுக்குத் திருமணம் செய்து கொடுத்து அதன் மூலம் அவரை அகப்படுத்தப் பார்க்கின்றார், மற்றும் கடைசியாக, அவரைச் சட்ட விரோதமான வாழ்வுக்குத் துரத்தி பல ஆண்டுகளாக ஒளிந்து கொண்டிருந்த இடங்கள் ஒன்றிலிருந்து இன்னொன்றிற்குத் துரத்தி வேட்டையாடு கின்றார். பெலிஸ்தருடனான புதிய யுத்தம் ஒன்றில் சவுல் தேவனால் கை விடப்பட்ட நிலையில், வரவிருந்த யுத்தத்தில் தனது நல்வாய்ப்புக்களை அறிவதற்காக எந்தோர் என்ற இடத்தில் இருந்த ஒரு சூனியக்காரியிடம் போக்கிடமாய்ச் செல்கின்றார். அடுத்த நாளில் கில்போவா என்ற இடத்தில் நடந்த யுத்தத்தில் இஸ்ரவேல் தோற்கடிக்கப்படுகின்றது, சவுலின் மகன்கள் கொல்லப்படுகின்றனர், பிலிப்பியின் புரூட்டஸ் மற்றும் காஸியஸ் போல சவுல் தமது சொந்த வாளினாலேயே மரணம் அடைகின்றார். கீலேயாத்தின் யாபேசில் மிக மேன்மையாய் உதிக்கும் வகையில் தோன்றிய சூரியன் கில்போவாவில் மிகவும் இருண்ட நிலையில் மறைந்தான்.

4. சவுலின் ஆட்சியின் தன்மைகள். சவுல், நகரங்களை கட்டி யெழுப்பியவராகவோ, அரசியல் நிறுவனராகவோ/ஒருங்கமைப்பாள ராகவோ, இலக்கியத்தின் பாதுகாவலராகவோ, அல்லது உண்மையான பக்தியை/மதத்தை மேம்படுத்துபவராகவோ இருந்ததில்லை. அவர் இராணுவ நிபுணராயிருந்தார், நாடானது அபாயத்தில் அழிந்து கொண்டிருந்த வேளையில் அதன் அண்டை நாடுகளின் மத்தியில் தனது படை பலத்தை நிலைநிறுத்தும்படி அதற்கு ஒரு இராணுவ நிலைப் பாட்டைத் தர அவர் அதிகமாய்ப் பணியாற்றினார். அது போலவே, அவர் மக்களின் இருதயத்திற்குப் பின் சென்ற மனிதராயிருந்தார். ஆனால் தேவனு டைய ஆளுகையில், தேவனுடைய நோக்கத்தை நிறைவேற்றும் காரியத்தில் அவர் யெகோவாவிற்குப் பற்றுறுதியற்றவராகி, மிகவும் சுய சித்தம் கொண்டவரானார், மற்றும் நாட்டின் மிகச் சிறப்பான நிலைக்கு தேவனு டைய இருதயத்தின்படியாக வழிவகுக்கக் கூடியவர் என்ற நிலையில் அவர் இல்லாததால் அதைச் செய்யாதபடி (அரச பதவியிலிருந்து) நீக்கப்பட்டார்.

III. தாவீதின் வாழ்வும் ஆளுகையும்.
(கி.மு. 1055-1015. 1 சாமு. 16-31; 2 சாமு.; 1 இரா. 1-11:11; 1 நாளா. 11-29).

வரலாற்றில் தாவீதிற்கான இடம்.—ஆபிரகாம், மோசே, தாவீது— இவைகள் பழைய ஏற்பாட்டு வரலாற்றில் மாபெரும் மூன்று பெயர்களாக உள்ளன. ஆபிரகாம் (யூத இனத்தின்) தோற்றுவிப்பாளராக இருந்தார்,

மோசே நியாயப்பிரமாணத்தைக் கொடுப்பவராயிருந்தார்; தாவீது ஒப்புயர்வற்ற அரசராயிருந்தார். அவரது ஆட்சியானது நாட்டளவிலான வல்லமை மற்றும் வளமையின் உச்சகட்டத்தைக் குறிப்பிடுவதாக உள்ளது. ஆனால் தாவீது அரசர் என்பதற்கும் மேலானவராயிருந்தார்; அவர் தம் மக்களின் பாடகராயிருந்தார். மோசேக்கு அடுத்தப்படியாக எபிரெய இலக்கியத்தில் தாவீதின் வாழ்வும் எழுத்துக்களும் பெருமளவு இடத்தைப் பிடிக்கின்றன. சொல்லப் போனால், பழைய ஏற்பாட்டின் வேறு எந்தப் பாத்திரத்தைக் காட்டிலும் இவரைப் பற்றி நாம் மிக அதிகமாய் தனிப்பட்ட வரலாற்றை அறிகின்றோம். அவரது வாழ்வு மற்றும் ஆளுகையின் நிகழ்ச்சிகள் பின்வருமாறு ஐந்து சகாப்தங்களின் கீழ் வகைப்படுத்தப்படலாம்.

1. சகாப்தம் I.—பெத்லகேமில் ஆடு மேய்க்கும் வாழ்வு.—*அ. பிறந்த இடமும் குடும்பமும்.*—தாவீது, ஈசாயின் மகனாகவும், போவாஸ் மற்றும் ரூத் ஆகியோரின் கொள்ளுப் பேரனாகவும் இருந்தார். அவர் சார்ந்திருந்த யூதா கோத்திரம் யாக்கோபின் முற்பிதாவுக்குரிய ஆசீர்வாதத்தில் இராஜரீகக் கோத்திரமாகக் குறிப்பிடப்பட்டிருந்தாலும் (ஆதி. 49:8-12), அது தன்னை அவ்விதமாய் குறிப்பிட்டுக்காட்டுவதற்கு இன்னமும் சிறிதளவே (பணி) செய்திருந்தது. தன்னிலே தனிச் சிறப்பெதுவுமற்றதா யிருந்தாலும் எப்பொழுதும் பரிசுத்தமான பெத்லகேம் என்ற ஊரில் தாவீது பிறந்தார், அது அவரது தொடக்க காலத்தின் சொந்த இடமாக இருந்தது மட்டுமின்றி, அவரது மாபெரும் மகன் பிறந்த இடமாகவும் ஆயிற்று.

ஆ. அவரது தொழில்.—தாவீது ஒரு ஆடு மேய்ப்பராய் இருந்தார், இது ஒரு தாழ்மையானதாயினும் மதிப்புக்குரிய அழைப்பாக இருந்தது, மற்றும் இது ஒருவரிடத்தில் தைரியத்தையும் கவன உணர்வையும் வேண்டுகின்ற தாயிருந்தது. அவரது இளம் வயதின் சாகசங்களாக பதிவு செய்யப்பட்ட விவரங்களில் அவர் தமது மந்தையைக் காப்பதற்காக ஒரு சிங்கத்தையும் கரடியையும் கொன்ற நிகழ்ச்சிகள் உள்ளன. அவரது சங்கீதங்கள் பலவற்றில் அவரது வெளிப்புறமான மேய்ப்பு வாழ்க்கையின் சுவடுகள் உள்ளன.

இ. அவரது தனிப்பட்ட அபிஷேகம்.—சவுல் புறக்கணிக்கப்பட்ட பின்பு, ஈசாயின் மகனை அபிஷேகம் செய்விப்பதற்காக சாமுவேல் அனுப்பப்பட்டார். அம்மகன்களில் மூத்தவரான எலியாபின் தோற்றம் கண்டு அவர் (சாமுவேல்) ஈர்க்கப்பட்டார். தோற்றத்தின் கம்பீரம் அல்ல ஆனால் இருதயத்தின் நேர்மையே உயர்வான நம்பிக்கை/ஒப்புவித்தல் களுக்கு மனிதர்களைத் தகுதிப்படுத்துகின்றது என்பதை சாமுவேல் கூட ஒரு கணம் மறந்து விட்டார் என்றே காணப்படுகின்றது. சவுல், மக்களின் இருதயத்திற்கேற்ற ஒரு மனிதனாக, தோற்றத்தில் வசிகரம் மிக்க, ஒரு இராணுவ வீரராக, இன்னும் சற்று மிகைப்பட்டவராக இருந்தார். ஈசாயின் மகன்கள் ஒவ்வொருவராய்க் கடந்து வந்து (சாமுவேலினால்) கண்ணோக் கப்பட்டு, தாவீதின் முறை வரும்வரை (மற்ற) யாவரும் புறக்கணிக்கப் பட்டார்கள். அவர் (தாவீது) "தேவனுடைய இருதயத்திற்கு ஏற்ற மனிதரா யிருந்து," இஸ்ரவேலின் உண்மை அரசரான யெகோவாவிடம் பற்றுறுதி

கொண்டவராயிருப்பார். (அவரை) அபிஷேகம் செய்வித்தது தனிப்பட்ட தாக இருந்தது, அநேகமாக அது அவரது (தகப்பன்) வீட்டாரால் கூட முழுமையாகப் புரிந்து கொள்ளப்படாமல் இருந்திருக்கலாம்.

ஈ. சவுலுக்கு ஊழியம் செய்தல்.—"அந்நாள் முதற்கொண்டு, கர்த்தருடைய ஆவியானவர் தாவீதின் மேல் வந்து இறங்கியிருந்தார்."[1] "கர்த்தருடைய ஆவி சவுலை விட்டு நீங்கினார்; கர்த்தரால் வரவிடப்பட்ட ஒரு பொல்லாத ஆவி அவனைக் கலங்கப் பண்ணிக் கொண்டிருந்தது" (1 சாமு. 16:13, 14). தாவீது அபிஷேகம் செய்விக்கப்பட்டதைத் தொடர்ந்து நடந்த விவரங்களை விளக்கும் பதிவேடு இவ்விதமாக உள்ளது. பழங் காலத்தில் சாதாரணமாய்க் காணப்பட்ட ஒரு வழக்கத்தின்படி சவுலின் அரண்மனையாட்கள், அவருடைய (சவுலுடைய) கலக்கம் கொண்ட, இருளாக்கப்பட்ட ஆவியை இசையினால் அமைதிப்படுத்தும்படி நாடினார்கள். ஏற்கனவே புகழ்மிக்க இசைக் கலைஞராயிருந்த இளைஞர் தாவீது, அரசரின் அரண்மனையில் வந்து பணிபுரியும்படி அழைப்பிக்கப் பட்டார். இருப்பினும், அவர் அரண்மனையில் இருந்ததென்பது தற்காலிக மானதாயிருந்ததாக அல்லது ஒருவேளை, எப்போதாவது நடைபெற்ற தாகவே இருந்ததாகக் காணப்படுகின்றது, ஏனெனில் அவரை (தாவீதை) நாம் விரைவிலேயே அவரது தந்தையின் மந்தைகளுடன் காணப் போகின்றோம்.

உ. கோலியாத்துடன் தாவீதின் போர்.—சவுல் விரைவிலேயே பெலிஸ்தருடன் இன்னொரு யுத்தத்தில் ஈடுபட்டார். கோலியாத் என்னும் பெயர் கொண்ட மாபெரும் இராட்சதன் ஒருவன் தனிநபர் யுத்தத்திற்கு யாரேனும் வரும்படி நாற்பது நாட்களாகச் சவால் விட்டு அழைத்துக் கொண்டிருந்தான், ஆனால் அந்த யுத்தத்தைச் செய்யத் துணிந்த தைரியசாலி எவரும் இஸ்ரவேலில் இருக்கவில்லை. இளமை நிறைந்த தாவீது, படையிலிருந்த தம் சகோதரர்களுக்குச் செய்தி கொண்டு போகும்படி அனுப்பப்பட்டிருந்தார், அவர் (கோலியாத்தின்) சவாலை ஏற்றுக்கொண்டு, கவண் தவிர வேறெந்த ஆயுதமும் இல்லாமல், யெகோவாவின்மீது விசுவாசம் தவிர வேறெந்தக் கவசமும் இல்லாமல், தற்பெருமை பேசிய அந்தப் பெலிஸ்தனை வெற்றி கொண்டார். அதைத் தொடர்ந்து இஸ்ரவேலுக்கு வெற்றியளித்த பொதுவான யுத்தமொன்று நடந்தது. தாவீதின் துணிவான செயலினால் இரு விளைவுகள் ஏற்பட்டன. இது சவுலின் மகன் யோனாத்தானுடைய ஆத்துமாவை தாவீதுடன் ஒரு மென்மையான, நீடித்த நட்புறவில் பின்னிப் பிணைத்தது, மற்றும் இது தாவீது சவுலின் படை வீட்டில் உறுப்பினராகும்படி வழிநடத்தியது.

2. சகாப்தம் II.—சவுலின் அரண்மனையில் தாவீதின் வாழ்வு.—*அ. சவுலின் பொறாமை.*—யுத்தத்திலிருந்து (அவர்கள்) திரும்பிய வேளையில், வெற்றி ஊர்வலம் சென்ற பெண்கள், "சவுல் கொன்றது ஆயிரம், தாவீது கொன்றது பதினாயிரம்" என்று பாடினார்கள்.[2] சவுல், ஒரு புறக்கணிக்கப்பட்ட அரசராகத் தாம் இருந்ததை அறிந்தார், மற்றும் (அரசராய்) வரப் போகிற மனிதர் தாவீதுதான் என்று அவர் சந்தேகப்படத் தொடங்கினார் என்பதில் ஐயம் இல்லை. "அந்நாள் முதற்கொண்டு சவுல்

தாவீதைக் காய்மகாரமாய்ப் பார்த்தான்."[3]

தாவீது தன்னடக்கத்துடனேயே நடந்து கொண்டார், ஆனால் அவருக்கு வளர்ந்து கொண்டிருந்த புகழானது சவுலின் பொறாமைக் கனலை விசிறி விட்டது. சவுல் தாவீதைக் கொல்லுவதற்கு மீண்டும் மீண்டும் முயற்சி செய்தார்; இருமுறை அவர் தம் சொந்தக் கைகளாலேயே கொல்ல முயற்சி செய்தார், ஒருமுறை தமது அரண்மனையாட்கள் அவரைக் கொல்லும்படி வற்புறுத்தினார்; நூறு பெலிஸ்தர்களைக் கொன்று வந்தால், தம் மகள் மீகாளை அவருக்குத் திருமணம் செய்து கொடுப்பதாகக் கூறி அவரை (தாவீதை) அகப்படுத்த நாடினார். இந்த சோதனை காலம் முழுவதிலும் யோனத்தான் தாவீதுக்கு நண்பராகவே நிலைத்து நின்றார், ஆனால் தனது தந்தை தாவீதைக் கொலை செய்ய நிலைத்த நோக்கம் கொண்டிருப்பதைக் கடைசியில் உறுதியாய் நம்பிய அவர் தாவீது தப்பிச் செல்வதற்குப் பெருந்தன்மையுடன் உதவினார்.

3. சகாப்தம் III.—சட்டத்திற்குப் புறம்பான தாவீதின் வாழ்வு.—பல ஆண்டுகளாகத் தாவீது, சவுலினால் வேட்டையாடப்பட்டு சட்டத்திற்குப் புறம்பானவராகவும், தமது நண்பர்களாயிருந்த மக்களாலேயே காட்டிக் கொடுக்கப்பட்டவராகவும் எங்குமே பாதுகாப்பில்லாதவருமாகவே இருந்தார். யோசேப்பைப் போல, மகா ஆல்ஃபிரடைப் போல, இராபர்ட் புரூஸைப் போல இவர் எதிர்ப்பின் பள்ளியிலேயே அரியணைக்குத் தயார் செய்யப்பட்டார். சவுலின் அரண்மனையிலிருந்து தப்பியோடிய பின்பு அவர் (ஆசரிப்புக்) கூடாரம் இருந்த நோப் என்ற ஊருக்குச் சென்றார். அங்கு அவர் தேவ சமூகத்தப்பங்களை ஆசாரியரிடமிருந்து உணவாகப் பெற்றுக் கொண்டு, கோலியாத்தின் பட்டயத்தையும் அவரிடமிருந்து பெற்றுக் கொண்டார். அவர் காத் என்ற பெலிஸ்தரின் நகருக்குத் தனது ஓட்டத்தைத் தொடர்ந்தார், இது அவரது பழைய எதிரியான தேவ நம்பிக்கையற்ற கோலியாத்தின் சொந்த ஊராய் இருந்தது. அங்கும் கூட அவருக்குப் பாதுகாப்பில்லை, ஏனெனில் அவரைப் பெலிஸ்தர்கள் விரைவிலேயே அடையாளம் கண்டு கொண்டார்கள், மற்றும் அவர் மேற்கு யூதாவில் இருந்த அதுல்லாம் என்ற மலைக்குகையில் ஒளிந்து கொண்டார். விரைவிலேயே அவரைச் சுற்றிலும் தைரியம்மிக்க ஆவிகளைக் கொண்ட மனிதர்கள் ஒன்று கூடினார்கள், அவர் விரைவிலேயே சட்டத்திற்குப் புறம்பான கூட்டமொன்றின் தலைவரானார். தமது வயதான பெற்றோர் களின் பாதுகாப்பைக்கருதி யோர்தானைக் கடக்கச் செய்து அவர்களை மோவாப் நாட்டிற்கு அழைத்து வந்தார், பின்பு அவர் சவக்கடலில் மேற்கு முனையைச் சுற்றிலும் இருந்த வனாந்தர மலை நாட்டிற்குத் திரும்புகின்றார். அவரைச் சவுல் பலத்த பாதுகாப்பிடங்கள் ஒன்றிலிருந்து இன்னொன்றிற்கு வேட்டையாடித் துரத்துகின்றார். இருமுறை சவுல் தாவீதின் ஆதிக்கத்தில் இருக்கின்றார், ஆனால் தாவீது பெருந்தன்மையாக அவரை (சவுலை) உயிர் தப்பிக்கச் செய்கின்றார். அவர் (தாவீது), கர்த்தரால் அபிஷேகம் செய்யப்பட்டவருக்கு விரோதமாகத் தமது கையை உயர்த்த மாட்டார். தெய்வீகத் தேர்ந்தெடுப்பின் உரிமை மற்றும் அபிஷேகம் ஆகியவற்றினால் அவரே (தாவீதே) அரசாயிருந்தாலும் தேவனுடைய

நேரத்திற்காக அவர் காத்திருப்பார். இந்தக் காலகட்டத்தின் ஏதோ ஒரு வேளையில் தாவீதுக்கும் யோனாத்தானுக்கும் இடையில் (இருதயத்தைத்) தொடுகின்ற கடைசி சந்திப்பு நடைபெற்றது. சூழ்நிலைகள் அவர்களை இயல்பான எதிரிகளாக்கின, ஆனால் இவ்வளவு வீரத்துவம் நிறைந்த இரு ஆத்துமாக்களின் நட்புறவை எந்த ஒரு விரோதப் போக்கும் அபாயத்திற் குள்ளாக்க முடியாதிருந்தது. மீண்டும் ஒருமுறை தாவீது பெலிஸ்தரிடம் அடைக்கலம் அடைகின்றார். அவர்களின் அரசரான ஆகீஸ், அவரை அன்புடன் வரவேற்கின்றார், ஆனால் அவர் பெலிஸ்திய பிரபுக்களால் நம்பப்படாதிருந்தார்; மற்றும் சவுலுடனான அவர்களின் கடைசி யுத்தத்தில், ஆகீஸ் தாவீதை அவரது சொந்த மக்களுக்கு எதிராகப் போர் செய்யும்படி அழைத்துப் போக விரும்பிய வகையில், தாவீதைப் பற்றிய அவர்களின் பொறாமை ஒரு வேதனைமிக்க இக்கட்டான நிலையிலிருந்து அவரை (தாவீதை) விடுவிக்கின்றது. கடைசியில், கில்போவாவில் சவுலின் தோல்வியும் மரணமும், தாவீதுக்கு அரியணையேகும் வழியைத் திறந்து வைத்தது.

4. சகாப்தம் IV.—யூதா மீது அரசர்; உள்நாட்டு யுத்தம்.—சுயாதீனமான இந்த booter (வழிப்பறிக்காரர்/போராளி?) எவ்வகையான அரசராயிருப் பார்? இவர் கீழ்மைப்பட்ட வகையில், தனது சொந்தப் பகைவர்களைப் பழி வாங்குபவராக, தம்மை முழுமையான பறிமுதல்களினால் வளமூட்டுபவ ராக இருப்பாரா? “தேவனுடைய இருதயத்திற்குப் பிரியமான மனிதர்” அப்படிப்பட்டவராய் இருக்கவில்லை. அவரைச் சட்டத்திற்குப் புறம்பான வர் என்றும் நாடு கடத்தப்பட்டவர் என்றும் அடையாளப் படுத்தியிருந்த அதே பெருந்தன்மையும் சுயகட்டுப்பாடும் அவரை அரசராகவும் பண்பு படுத்துகின்றன. அவர் தமது முந்திய விரோதியைப் பெருந்தன்மையாக நடத்துகின்றார், ஒரு விருதை/பலனைப் பெறலாம் என்ற நம்பிக்கையில், யுத்த களத்தில் சவுலைக் கொன்றதாக உரிமைகோரிப் பொய்யுரைத்த ஒரு அமலேக்கியனை அவர் தூக்கில் இட்டார். மேலும் அவர் சவுல் மற்றும் யோனத்தான் ஆகியோர்மீது ஒரு மென்மையான இரங்கற் பாடலையும் தொகுத்தார். தாவீது சட்டத்திற்குப் புறம்பான தமது வாழ்வின்போது தமது சொந்த கோத்திரமான யூதாவின் தலைவர்களின் நம்பிக்கையை அதிகமாய்ப் பெற்றிருந்தார், இப்பொழுது அவர்கள் அவரை அரசர் என்று ஏற்புடைய வகையில் அங்கீகரித்தார்கள். எபிரோன் என்பது முற்பிதாக்களின் காலத்தில் ஒரு பழங்கால முன்னோர்களின் நகராயிருந்தது. ஆபிரகாம் அங்கு வாழ்ந் திருந்தார்; ஈசாக்கு அங்கு (தான்) பிறந்தார், மற்றும் அங்கிருந்த மக்பேலா குகையிலேதான் ஆபிரகாமும் சாராளும், ஈசாக்கும் ரெபோக்காளும், யாக்கோபும் லேயாளும் புதைக்கப்பட்டிருந்தார்கள். மேலும் வெற்றி கொள்ளப்பட்ட வேளையில் இது கானானியர்களின் நகர்களில் ஒன்றாக இருந்தது. இங்கு தாவீது தம் தலைநகரை நிலை நிறுத்தினார்; இங்கு அவர் யூதாவின் மனிதர்களால் வெளியரங்கமாய் அபிஷேகம் செய்யப்பட்டார், மற்றும் இங்கு அவர் ஏழாண்டுகளுக்கும் மேலாக ஒரு கோத்திரத்தின்மீது ஆளுகை செய்தார். மற்ற கோத்திரங்கள் சவுலின் மகனான இஸ்பொஸேத் துக்குக் கீழ்ப்படிந்தன. அவர் மிகப் பலவீனமானவராகவும், வெறுமனே

பெயருக்குத் தலைவராகவும் மட்டும் இருந்தார். அவரது படைத்தலைவரான அப்னேர் என்பவர் தான் அவர் (இஸ்பொஸேத்) நிமித்தம் எல்லா கட்டளைகளையும் பிறப்பித்து வந்தார். யோர்தானுக்குக் கிழக்கில் இருந்த மகனாயீம் என்ற இடம் அவர்களின் தலை நகராகத் தேர்ந்து கொள்ளப் பட்டது, அவர்கள் தங்களுக்குப் பின்னால் பதினோரு கோத்திரங்களைக் கொண்டிருந்து ஏழாண்டுகள் அளவாக போட்டி அரசு ஒன்றைப் பராமரித்து வந்தனர். ஏழு ஆண்டுகள் உள்நாட்டு யுத்தத்திற்குப் பிறகு, இஸ்பொசேத்து தனது படைத் தளபதியான அப்நேருடன் சண்டையிட்டார், அவர் (அப்நேர்) உடனே எல்லாக் கோத்திரங்களையும் தாவீதின் கீழ் கொண்டு வரும்படி தாவீதுடன் ஒரு உடன்படிக்கை செய்தார். இது நிறைவேறு முன்னர், அப்நேரின்மீது பொறாமை கொண்டவராய்க் காணப்பட்ட யோவாப் என்ற தாவீதின் படைத்தளபதி அப்நேரை வஞ்சகமாய் கொலை செய்தார். அப்நேர் மரணம் அடைந்ததும், எதிர்த்து நின்ற அரசு சீர் குலைந்தது, தாவீது இஸ்ரவேல் முழுவதற்கும் வெற்றிகரமாக அரசராய் முடி சூட்டப்பட்டார்.

5. சகாப்தம் V.—இஸ்ரவேல் முழுவதன் மீது அரசர்.—தாவீது எபிரோனில் இரண்டாவது முறையாக வெளிப்படையாய் அபிஷேகம் செய்யப்படுகின்றார். எல்லாக் கோத்திரங்களின்மீதும் முப்பத்துமூன்று ஆண்டுகள் அளவான அவரது ஆளுகையானது இயல்பாகவே இரு பிரிவுகளாக அல்லது கால வேளைகளாக அமைகின்றது.

அ. வளமும் வல்லமையும்/அதிகாரமும் அதிகரித்த காலவேளை.—இது தேவன்மீது பற்றுறுதி அதிகரித்த கால வேளையாகவும் இருந்தது. மிகவும் மையமான தலைநகர் ஒன்றைத் தேர்ந்தெடுத்தல் என்பதே தாவீதின் முதல் அடிவைப்பாய் இருந்தது. எபூஸ் அல்லது எருசலேம் என்ற நகரானது கானானியர்களின் பழைய தலைநகராய் இருந்தது. வெற்றி கொண்டதிலிருந்து இருமுறை - யோசுவாவின் நாட்களில் ஒருமுறையும், நியாயாதிபதிகளின் காலத்தில் ஒருமுறையும் - இந்த நகரம் பிடிக்கப்பட்டிருந்தது; ஆனால் அங்கிருந்த கோட்டையை எபூசியர்கள் தொடர்ந்து கைப்பற்றியிருந்தபடியால் நகரையும் அவர்கள் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்தார்கள். தாவீது அதைத் தமக்குக் கீழ்ப்பட்டிருக்கும்படி (எபூசியர்களை அங்கிருந்து) துரத்தி விட்டு, பேழையை அங்கு கொண்டு வந்து, இவ்விதமாய் அந்த நகரத்தை மதரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் தலைநகரமாக்கினார். தாவீதின் நாட்களில் இருந்து இது எபிரெயர்களின் எல்லா நகரங்களின் நகரமாக விளங்கி வந்துள்ளது. ஆனால் அவர் (தாவீது) கானானியர்களின் இந்தச் சிறு துணுக்கைத் தனக்குக் கீழ்ப்படுத்தியதோடு நிறுத்தி விடவில்லை. சவுல் யுத்தத்தில் பெரியவராய் இருந்தார், அது போல தாவீது யுத்தத்தில் இன்னும் பெரியவராய் இருந்தார். அவர் எகிப்திலிருந்து ஐப்பிராத்து வரையிலும் ஒவ்வொரு நாடும் தம் அதிகாரத்திற்கு உரிமையாகும் வரையிலும் தமது படையெடுப்புகளை பெலிஸ்தர், ஏதோமியர், மோவாபியர், அம்மோனியர், சீரியர் ஆகியோர் மீது ஒவ்வொரு திசையிலும் செயல்படுத்தினார். பெனிக்கியாவின் அரசனான ஈராம் (தாவீதுடன்) நட்புறவு உடன்படிக்கை ஏற்படுத்திக் கொண்டதால் அந்நாடு சுதந்திரமாய் இருக்கும்

படி விடப்பட்டது. இவ்விதமாக, ஆபிரகாமுடனான உடன்படிக்கையின் வாக்குத்தத்தமானது தாவீதின் பேரரசில் மாபெரும் புவியியல் பரப்பில் நிறைவேறிற்று.

ஆ. வீழ்ச்சியின் கால வேளை.—தாவீது மாபெரும் நபராய் இருந்தாலும், அவர் சோதனைக்கு அப்பாற்பட்டவராய் இருக்கவில்லை. படைவீரன் உரியாவின் மனைவியான பத்சேபாளுடன் குற்ற உணர்வுள்ள உறவுப் பிணைப்பொன்றை ஏற்படுத்திக் கொண்டபடியால், தாவீது உரியாவைப் போரில் சாகும்படி விடச் செய்து பத்சேபாளைத் திருமணம் செய்து கொண்டார். தீர்க்கதரிசியான நாத்தான் தாவீது அரசரின் முகத்திற்கெதிராக அவரது குற்றத்தை உணர்த்தி, பெண் ஆட்டுக் குட்டியொன்றின் கதை வழியே தாவீதின் குற்றத்தினுடைய பெருங் கொடுமையை அவர் உணரச் செய்தார். ஐம்பத்தி ஒன்றாம் சங்கீதம் தாவீதின் மனந்திரும்புதலின் பக்குவமான/முதிர்ந்த விளக்கமாக உள்ளது. ஆனால் எந்த மனந்திரும்புத லும் அவரது குற்றத்தின் விளைவுகளை விலக்க முடியாதிருந்தது. அந்த நாள் முதல் தாவீதின் (வாழ்க்கை) வானமானது சொந்த வீட்டில் அவல நிலை களால் மேகமூட்டமாய் இருந்தது. அவரது ஒரு மகன் தன் சகோதரிக்குத் தவறிழைத்தமைக்காக இன்னொரு மகனைக் கொல்லுகின்றார். அவரது மிகப் பிரியமான மகன் அப்சலோம் ஒரு கலகத்தில் அழிகின்றார், அது ஏறக்குறைய அரசரின் அரியணையையும் அவரது உயிரையும் விலையாகக் கொடுக்க வேண்டிய அழிவாயிற்று. அவர் தம் நம்பிக்கைக்குரிய படைத் தலைவரான யோவாப், (தாவீதின்) மூத்த மகனான அதோனியாவின் சூழ்ச்சியில் அக்கறை கொண்டு இருக்கின்றார்; மற்றும் சாலொமோனின் ஆட்சி பின் தொடருவதற்காக அவருக்குத் தாவீது முடிசூட்டியிருக்கின்றார். நாற்பது ஆண்டுகள் ஆட்சிக்குப் பிறகு அவரது (சுய) மரணம் விரைவில் நேரிட்டது.

6. தாவீதினுடைய ஆட்சியின் தன்மைகள்.—தாவீதின் ஆட்சியானது எபிரெய வரலாற்றில் மிகவும் மகிமைக்குரியதாக இருந்தது. வெளிப் பகட்டான மேன்மையில் வேண்டுமானால் சாலொமோனின் ஆட்சியானது தாவீதின் ஆட்சியை விட அதிகமானதாயிருக்கலாம், ஆனால் வலிவிலும் வளத்திலும் மிகச் சிறந்த கூறுகளிலும் தாவீதின் ஆட்சியே உச்சகட்ட மானதாகக் குறிப்பிடுகிறது.

அ. இது ஒரு இராணுவ ஆட்சியாக இருந்தது.—இந்தக் காலகட்டத்தில் எகிப்தும் அசீரியாவும் மேற்கு ஆசியாவின் சிறிய இனங்களை விடுத்து தாழ்ந்த நிலைக்குச் சென்றிருந்தன. மேன்மைத்துவத்தில் மட்டுமே பாதுகாப்பு அமைந்து கிடந்தது. சவுலின் தொடக்க ஆண்டுகளின் வெற்றி யானது தாவீதின் வெற்றிகரமான முகாம்களினால் ஒளி குறைக்கப்பட்டது/ மங்கலாக்கப்பட்டது, தாவீதின் பேரரசானது எகிப்திலிருந்து ஐப்பிராத்து வரைக்கும் மகா கீர்த்தியில் (மற்ற பேரரசுகளை) ஒளி குன்றச் செய்தது.

ஆ. இது உள்ளான மேம்பாட்டின் காலமாய் இருந்தது.—தாவீது மனிதர்களை அதிகாரம் செய்வதற்கென்றே பிறந்தவராக, இயல்பாகவே ஒருங்கமைப்பாளராக இருந்தார். அவர் அரசின் அரசியல் நிர்வாகத்தையும் தொழில்/செயல் சக்திகளையும் ஒருங்கமைத்தார்; பயன்மிக்கதும் அலங்கார வேலைப்பாடுமான கலைகளை அறிமுகப்படுத்தினார்; சேமிப்புக்

கிடங்குகளையும் கோட்டைகளையும் கட்டியெழுப்பினார்; எல்லா வற்றிற்கும் மேலாக, அவர் எருசலேமை விரிவாக்கி அதன் பாதுகாப்பைப் பலப்படுத்தினார், அங்கு ஒரு இராஜரீக அரண்மனையைக் கட்டியெழுப்பி, "தாவீதின் நகரத்தை" நாட்டின் பெருமையாக்கினார்.

இ. இது இலக்கிய ரீதியான ஆளுகையாய் இருந்தது.—சங்கீதங்கள் வேதாகமத்தின் மிகச் சிறந்த கவிதைகளாய் உள்ளன, மற்றும் தாவீதின் பாடல்களே சங்கீதங்களில் மிகச் சிறந்தவைகளாக உள்ளன. ஆனால் நாம் காணப் போகின்றபடி தாவீது மாத்திரமே எழுத்தாளராகவோ அல்லது கவிதை மட்டுமே இலக்கியத்தின் ஒரே வடிவமாகவோ இருப்பதில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக

ஈ. இது மதரீதியான ஆளுகையாய் இருந்தது.—தாவீது தன்னிடம் இருளான (ஒரே) ஒரு குற்றம் இருந்தாலும் இருதயத்தில் ஆழமிக்க மத உணர்வுள்ள மனிதராய் இருந்தார். அவருடைய வாழ்வின் ஓட்டமானது சரியானதாயிருந்தது. தேவனிடத்தில் விசுவாசம், தேவனிடத்தில் மெய்ப்பற்று, தேவனிடத்தில் நன்றியுணர்வு - என்ற இம்மூன்று பண்புகளும் மற்ற ஒவ்வொரு அரசரிடத்திலிருந்தும் அவரை சிறப்புறத் தனிப்படுத்தி யவையாகவும், அவற்றை நாட்டவர் மீது அவர் வலிவுடன் மனதில் பதியச் செய்தவையாகவும் உள்ளன. பரிசுத்த (உடன்படிக்கைப்) பேழையை, அது பெலிஸ்தரிடமிருந்து கைப்பற்றப்பட்டு அவர்களால் திருப்பி அனுப்பப் பட்ட நாள் முதலாய் இருந்த இடமான கீரியாத் யாரீமில் இருந்து எருசலேமுக்கு மாற்றுவித்தார். அவர் நாட்டின் மதரீதியான வாழ்வை ஒருங்கமைத்து விரைவுபடுத்தி, அது அடைந்திருந்ததிலேயே உயர்வான மட்டத்திற்குக் கொண்டு வந்தார். ஆலயம் கட்டுவதற்கான தயாரிப்புப் பணிகள் யாவற்றையும் அவர் செய்தார், தேவனுடைய தடையினால் மாத்திரமே அதைக் கட்டுவதினின்று அவர் நிறுத்தப்பட்டார். மெய்யான ஒரே தேவனுக்கு ஒப்புக்கொடுக்கும் உணர்வினால் ஏற்பட்ட உற்சாகத்தில் பின் வந்த எல்லா அரசர்களுக்கும் தாவீது ஒரு எடுத்துக்காட்டைக் கொடுத்தார். "அவன் தாவீதின் வழிகளில் நடந்தான்;" "அவன் தாவீதின் வழியில் நடவாதிருந்தான்;" இதுவே வரலாற்றாளர் தாவீதின் பின் சந்ததி யினரைப் புகழ்ந்துரைக்கவோ அல்லது கண்டனம் பண்ணவோ பயன் படுத்திய முறைப்படியான கூற்றாக இருந்தது. மேலும் அவர் (தாவீது) பூமியின் மீதேங்கும் நீதியில் ஆட்சி செய்யப் போகிறவராயிருந்த மேசியா வின் மிக உயர்வான மாதிரியையும் கொடுத்தார்.

IV. சாலொமோனின் ஆளுகையும் அவரது பண்பும்.

(1 இரா. 2 -11; 2 நாளா. 1-9.)

1. சாலொமோனின் அரியணையேற்றமும் ஆளுகைகளும்.—சாலொமோன், ''இரத்தாம்பரத்தில் பிறந்த'' முதல் எபிரெய அரசரா யிருந்தார். (அவரது) பதவிக்கு வரும் உரிமையானது வரலாறு முழுவதிலும் இடர்பாட்டிற்குரிய ஒன்றாகவே இருந்துள்ளது. தாவீதுக்கு அவரது மனைவியர் பலரின் மூலம் இருபது அல்லது அதற்கு அதிகமான மகன்கள்

இருந்தனர். நாம் ஏற்கனவே கண்டுள்ளபடி, அம்மோனும் அப்சலோமும் கொடூரமரணம் அடைந்தனர். மற்ற மூத்த மகன்கள் எல்லாரையும் விட்டுவிட்டு, தாவீது தமக்குப் பின் பதவியில் அமர்வதற்கு சாலொமோனைத் தேர்ந்து கொண்டார். அவருடைய இந்தத் தேர்ந்து கொள்ளுதலானது ஒருவேளை அவர், சாலொமோனின் தாயான பத்சேபாளிடம் காண்பித்த ஒரு தலைப்பட்சமான/அதிகப்படியான அன்பினால் ஏற்பட்டிருக்கலாம், ஆனால் அநேகமாகப் பெரும்பாலும் சாலொமோனின் மேன்மைமிக்க தகுதிகளினாலேயே ஏற்பட்டிருந்தது. அதோனியாவின் கலகத்தின் பொழுது சாலொமோனை முடி சூட்டும்படி தாவீது துரிதமாய்ச் செயல்பட்டதன் மூலம், அவர் (சாலொமோன்) தாவீதின் மரணத்தின் பொழுது சமாதானமாய் பதவிக்கு வந்தார். ஆனால் அதோனியாவிற்கு ஆதரவான இன்னொரு சூழ்ச்சியின் அடையாளங்கள் தோன்றுகின்றன, சாலொமோன் துரிதமாக யோவாபையும் அதோனியாவையும் தூக்கிலிடும்படி உத்தரவிடுகின்றார். இவ்வாறு அவர் தம் தந்தையின் பரந்து விரிந்த ஆளுகையின்மீது பிரச்சனையற்ற வகையில் இராஜரீகம் செலுத்தும்படி விடப்பட்டார். (அவரது) நாற்பதாண்டுகள் ஆட்சியின்போது, உள்நாட்டில் தீவிரமான கலகங்களோ அல்லது வெளியிலிருந்து யுத்தங்களோ உள்ளான மேம்பாட்டிற்கான அவருடைய திட்டங்களுக்குத் தொந்தரவு தரவில்லை.

2. சாலொமோனின் ஞானமான தேர்ந்துகொள்ளுதல்/தெரிவு.— சாலொமோன் அரியணை ஏறிய உடனே எருசலேமில் இருந்து வடக்கில் ஏழு மைல் தொலைவில் இருந்த கிபியோனில் மதரீதியான மிகச் சிறப்பான பண்டிகையைக் கொண்டாடினார், அங்குதான் பழைய உடன்படிக்கையின் கூடாரம் அப்பொழுது வரையிலும் இருந்தது. பேரரசின் சுமையானது அவரது இளம் நெஞ்சில் கிடந்ததென்பது மெய்ப்பிக்கப்படுகின்றது, ஏனெனில் அந்த இரவில் கனவொன்றில் அவருக்கு தோன்றிய தேவன், அவர் கேட்பது எதுவாயிருந்தாலும் கொடுப்பதாகக் கூறினார்; இது ஒரு அபாயமான சுயாதீனம் என்று நாம் அனைவருமே உணருகின்றோம். பொதுவான சிந்தைகளின் கீழான பொருட்களைக் கடந்து சென்ற சாலொமோன், தமது மக்களை ஆள்வதற்கான ஞானத்தைக் கேட்டார். “அவர் ஞானத்தைக் கேட்டதன் மூலம் தம் ஞானத்தைக் காண்பித்தார்;” மற்றும் அவர் காலத்தில் இருந்த எல்லாரைக் காட்டிலும் மிக மேலான ஞானம் அவருக்குத் தரப்பட்டது. அவரது ஞானம் பற்றிய விவரிப்புகள் நடைமுறை நியாயத்தீர்ப்பிலும் (1 இரா. 3:16-28), அறிவியல் அறிவு மற்றும் இலக்கியத் திறன் (1 இரா. 4:29-34) ஆகியவற்றிலும் தரப்பட்டுள்ளன. அவரது மூவாயிரம் நீதிமொழிகளில் ஆயிரத்திற்கும் குறைவானவைகளே நமக்குக் கிடைத்துள்ளன; மற்றும் அவரால் எழுதப்பட்டதாய்க் குறிப்பிடப்படும் சங்கீதம் 72 மற்றும் 128 ஆகியவற்றை நாம் உள்ளடக்காமல் இருந்தால், அவரது ஆயிரத்து ஐந்து “பாடல்களில்” ஒன்றே ஒன்று மட்டும் நமக்குப் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளது. அவரது அளவுக்கதிகமான நிர்வாகப் பணிகள், மாபெரும் கட்டிடப் பணிகள் ஆகியவற்றின் மத்தியிலும் (அவர் செய்த) இப்படிப்பட்ட இலக்கியப்

பணியானது, மிக உயர்வான மதிநுட்பத் திறமையைக் காண்பிக்கின்றது; மற்றும் பதிவேட்டிலிருந்து, "... பூமியின் சகல ராஜாக்களிடத்திலுமிருந்து நானா ஜாதியான ஜனங்களும் அவனுடைய ஞானத்தைக் கேட்கிறதற்கு வந்தார்கள்"[4] என்பதும், சேபாவின் இராஜ ஸ்திரீயின் வார்த்தையின்படி "இவைகளில் பாதியாகிலும் எனக்கு அறிவிக்கப்படவில்லை"[5] என்பதும் புரிந்துகொள்ளப்பட்டது.

3. சாலொமோனின் தேவாலயம்.—தேவாலயத்தைக் கட்டி எழுப்புதல் என்பது இந்த இளம் அரசரின் முதல் அக்கறைகளில் ஒன்றாக இருந்தது. தாவீது ஏற்கனவே திட்டங்கள் தீட்டி, தயாரிப்புகளை விரிவாக ஏற்படுத்தி யிருந்தார். லீபனோன் மலையிலிருந்து கேதுரு மரங்களையும், திறமை கொண்ட தொழிலாளிகளையும் தருவிப்பதற்காகத் தீருவின் மன்னர் ஈராம் என்பவருடன் ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. அதன் (ஆலயத்தின்) கட்டுமானப் பணியில் ஏழு ஆண்டுகள் செலவிடப்பட்டன. முதன்மைக் கட்டிடமானது 30க்கு 90 அடி அளவு (ஆசரிப்புக் கூடாரம் போல் இரு மடங்கு) மட்டுமே இருந்தது, இது உலகின் புற தெய்வ வணக்கக்காரர்களின் மாபெரும் கோவில்கள் மற்றும் கிறிஸ்தவ தேவாலயங்கள் ஆகியவற்றுடன் ஒப்பிடும் போது மிகச் சிறு வடிவமைப்பாகும். ஆனால் இதன் விலைமதிப் பில் போட்டியிடக் கூடாததாகவே இருந்தது. இக்கட்டிடம் முழுவதும் இரண்டாயிரத்து எழுநூற்று அறுபது கோடி ரூபாய் மதிப்புள்ள தங்கத் தகடுகள் போர்த்தப்பட்டது. ஆனால் காணப்படாத தேவனின் உருவாய்க் காணக் கூடிய எந்த ஒரு சொரூபமும் இல்லாதிருந்ததே அதன் மிக மேன்மையான தனிச்சிறப்பாயிருந்தது. முற்றிலுமான புலனுணர்வுமிக்க விக்கிரகாராதனையின் காலத்தில் இது மிக உயர்வான ஆவிக்குரிய தன்மை யுடன் நின்றது. "இதோ, வானங்களும், வானாதி வானங்களும் உம்மைக் கொள்ளாதே; நான் கட்டின இந்த ஆலயம் எம்மாத்திரம்?"[6] "உம்முடைய வாசஸ்தலமாகிய பரலோகத்தில் இருக்கிற தேவரீர் கேட்டு"[7] இப்படிப் பட்டவை சாலொமோன் தமது அர்ப்பணிப்பு ஜெபத்தில் வெளிப்படுத்திய மேன்மையான கருத்துக்களாயிருக்கின்றன. தேவாலயம் (கட்டி) முடிக்கப் பட்ட செயலானது நாட்டின் தலைநகருக்கான தாவீதின் மிகவுயர்வான குறிக்கோளாயிருந்தது. இராணுவம் என்பதல்ல ஆனால் ஆவிக்குரிய ஆளுகை; (உலகப்) பொருள் (வளம்) அல்ல ஆனால் ஒழுக்க மேன்மை என்பதே நாட்டின் குறிக்கோளை உணர்ந்தறிவதில் உதவுவதாகவும் இருந்தது. முதல் தேவாலயம் நேபுகாத்நேச்சாரால் அழிக்கப்படும் வரைக்கும் நானூறு ஆண்டுகளாக, நிலைநின்றது.

4. சாலொமோனின் பிற கட்டிடங்கள்.—சாலொமோனின் ஆளுகை, எபிரெய கட்டிடக் கலையின் மிக உன்னதமான காலமாக இருந்தது. "எருசலேமிலே ராஜா வெள்ளியைக் கற்கள் போலவும், கேதுரு மரங்களைப் பள்ளத்தாக்குகளில் இருக்கும் காட்டத்தி மரங்கள் போலவும் அதிகமாக்கி னான்."[8] அவர் தமக்கென்று சிறப்புமிக்க ஒரு அரண்மனையையும், அவரது உண்மையான அரசியாகக் கருதப்பட்ட பார்வோனின் மகளுக்கென்று ஒரு அரண்மனையையும், தமது பேரரசின் பல பகுதிகளில் எண்ணற்ற கோட்டைகளையும் நகரங்களையும் கட்டினார். அந்நகர்களில் ரோமரின்

காலத்தின் பனை மரம் என்று கருதப்பட்ட தாதமோர் மிகப் புகழ் பெற்ற நகராயிருந்தது.

5. சாலொமோனின் வர்த்தகம்.—தொடக்கத்தில் எபிரெயர்கள் ஆட்டு மந்தைகளையும், மாட்டு மந்தைகளையும் கவனித்து வந்த மேய்ப்புத் தொழில் செய்த மக்களாக இருந்தார்கள். எகிப்திலும், (கானான் நாட்டைக்) கைப்பற்றி வெற்றி கொண்ட பிறகும் அவர்கள் கனிகளையும் தானியங் களையும் வளரச் செய்த விவசாயப் பெருங்குடி மக்களாக இருந்தார்கள், மந்தையையும்/கால்நடைகளையும் வளர்த்தார்கள். இப்பொழுது, முதன் முறையாக அவர்கள் வர்த்தகம் செய்யும் மக்களாயினர். தீரியருடனான உடன்படிக்கை தொடர்பின் மூலமாக அவர்கள் ஸ்பெயினில் இருந்த தர்ஷீஸ் வரையிலும் மத்திய தரைக்கடல் வழியே வர்த்தகத்தில் ஈடுபட்டார் கள்; செங்கடலின் துறைமுகங்களின் மூலமாக அவர்கள் இந்தியாவுடன் விரிவான வர்த்தகத் தொடர்பு கொண்டிருந்தார்கள். அவர்கள் தங்கள் அருகாமையிலிருந்த பெனிக்கியர்கள், எகிப்தியர்கள் மற்றும் அரபியர்கள் ஆகிய அயலகத்தவர்களிடத்திலும் தங்கள் உற்பத்திப் பொருட்களைப் பண்டமாற்றுச் செய்து கொண்டார்கள்.

6. சாலொமோனின் விசுவாச விலக்கம்.—ஒரு சில வாழ்க்கை வரலாறுகளே சாலொமோனின் வாழ்க்கை வரலாறு போல் ஏமாற்றம் அளிப்பவையாக உள்ளன. அவர் அரசர்களின் பொதுவான கூட்டங்களின் தாழ்ந்த மட்டங்களுக்கு ஒரு நாளும் மூழ்கிப் போயிருந்ததில்லை; ஆனால் அவரது பிந்திய ஆண்டுகளின் நிறைவேற்றமானது அவரது இளமையில் இருந்த மேன்மையான வாக்குத்தத்தத்தில் இருந்து வேதனைமிக்க வகையில் தாழ்ந்து விழுவதைக் காண்கின்றோம்.

அ. அரசருக்குரிய சட்டத்தை மீறுதல்.—மோசே (உபா. 17:14-20ல்) அரசருக்கான சட்டத்தை வகுத்து வைத்திருந்தார். இதை சாலொமோன் மூன்று வழிகளில் மீறினார்: (1) இராணுவ இயலின் குறி மற்றும் அடையாளமாக குதிரைகளை ஏராளமாய்ப் பெருகச் செய்தது (1 இரா. 10:26), (2) தனது அந்தப்புறத்தில் ஆயிரம் பேராகும் வரை தனக்கு மனைவிகளைப் பெருகச் செய்தது; (3) தனது மக்கள் வறுமையடையச் செய்வதினால் மட்டுமே பெருகச் செய்திருக்கக் கூடியதான வெள்ளியை யும் பொன்னையும் ஏராளமாய்ச் சம்பாதித்தது. அவர் இவைகளைக் கூட்டிக் கொண்டார்.

ஆ. தேவ ஆளுகையின் அடிப்படைச் சட்டத்தைத் தீவிரமாய் மீறிய செயல்கள்.—“என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் இருக்க வேண்டாம்”[9]; இது முதலாவது கட்டளையாக இருந்தது. இதனைப் பரிசுத்தமாய்க் கடைப்பிடிப்பதற்கு இஸ்ரவேல் உறுதிக்குட்படுத்தப் பட்டது. உலகளாவிய பல தெய்வ வணக்கத்தை எடுத்தெறிந்து விட்டு, தூய்மையான ஆவிக்குரிய ஆராதனையை ஏறெடுப்பதே (இஸ்ரவேல்) இனத்தின் உயர் குறிக்கோளாயிருந்தது; நாட்டின் இருப்புக்கு வேறெந்த நிறைவான காரணமும் இருந்ததில்லை. “சாலொமோன் வயது சென்ற போது, அவனுடைய மனைவிகள் அவன் இருதயத்தை அந்நிய தேவர் களைப் பின்பற்றும்படி சாயப்பண்ணினார்கள்.”[10]

இ. நாட்டின் பலவீனம் மற்றும் சிதைவு ஆகியவற்றின் கூறுகள்.— அரசருக்கான சட்டத்தை மீறிய இச்செயல்களும், அரசாட்சிக்கான சட்டமும் பலவீனத்தின் கூறுகளாய் இருந்ததாக நிரூபித்து அவரது (சாலொமோனின்) வீட்டார்மேல் தேவனுடைய நியாயாத்தீர்ப்பைக் கொண்டு வந்தது. வர இருந்த பிரிவினையின் வீழ்ச்சியானது அவருக்கு வெளிப்படுத்தப்பட்டது, மற்றும் அவரது பிந்திய வாழ்வானது வீட்டில் திருப்தியின்மையையும் கப்பம் கட்டும் வெளிநாடுகளின் மத்தியில் அமைதி யின்மையையும் அடையாளங் காண்பித்தது. இருப்பினும் மும்முரமான அழிவு ஒன்றும் நேரவில்லை, மற்றும் சாலொமோன் தனது நீண்ட ஆளுகையை ஒப்பீட்டளவில் சமாதானமாய் முடித்தார்.

V. தீர்க்கதரிசிகளின் எழுச்சி.

மோசே தமது சொந்த காலத்திலும், அதன் பிறகு பல நூற்றாண்டுகள் அளவும் தனிப்பட்ட மேன்மையுடன் நிற்கின்றார். யோசுவா மற்றும் சாமுவேல் ஆகியோருக்கிடையில் ஒரு தீர்க்கதரிசியின் பெயர் கூடக் குறிப்பிடப்பட்டதில்லை. ஆனால் சாமுவேல் மற்றும் முடியாட்சியுடன் மாபெரும் தீர்க்கதரிசிகளின் காலம் தொடங்குகின்றது. தீர்க்கதரிசி என்பவர் அரசருக்கு அவசியமான ஈடுதுணையாக இருந்தார்; மற்றும் சாமுவேல், சவுல் ஆகியோரின் நாட்களிலிருந்தே அவரது உருவகச் சித்தரிப்பும், மனதில் பதியும் செய்தியும் பழைய ஏற்பாட்டு வரலாற்றுத் தொகுதி முடியும் வரையிலும் அரிதாகவே காத்துள்ளன. மொத்தத்தில் சாமுவேல் சவுலைக் காட்டிலும் அதிகம் முக்கியமான நபராக உள்ளார். தீர்க்கதரிசிகளில் மகாபெரியவர்களில் ஒருவரான தாவீதே தீர்க்கதரிசிகளினால் நிலையாக அறிவுறுத்தப்பட்டும், எச்சரிக்கப்பட்டும் இருக்கின்றார். சாலொமோனின் ஆட்சிக் காலத்தில் தீர்க்கதரிசிகள் முக்கியத்துவமற்ற வகையில் பணியாற்றி னாலும் முடிவில் ஒரு தீர்க்கதரிசி தோற்றமளிக்கிறார். இந்தக் கால கட்டத்தின் தீர்க்கதரிசிகளாக, சாமுவேல், காத் (1 சாமு. 22:5; 2 சாமு. 24:11), நாத்தான் (2 சாமு. 7:2-17; 12:1-12; 1 இரா. 1:8-24), இத்தோ (2 நாளா. 9:29; 12:15; 13:22), மற்றும் அகிசா (1 இரா. 11:29-39; 2 நாளா. 9:29) ஆகியோர் உள்ளனர். வரலாற்றில் பொதியப்பட்டுள்ள நாத்தானின் உவமை போன்ற இங்கும் அங்குமாக துணுக்கு(கள்) தவிர இவர்களின் போதனைகளில் எதுவும் நமக்கு வந்து சேரவில்லை.

VI. இந்தக் கால கட்டத்தின் இலக்கியம்.

எபிரெய இலக்கியத்தின் மிக முந்திய தேதியைத் தருதல் என்பது மிகவும் இயலாத செயலாக உள்ளது. பஞ்சாகமங்கள் (ஆதி. - உபா.) மோசேயின் காலத்திற்கு முற்பட்ட பதிவேடுகளை ஒரு பகுதி சார்ந்தமைந் தன என்பதில் ஏற்பில்லாதது எதுவும் இருப்பதில்லை. லாமேக்கின் “பட்டயப் பாடல்” (ஆதி. 4:23, 24) மற்றும் எண். 21:12-17, 27-30ல் உள்ள கவிதைத் துணுக்குகள் மிகப் பழங்காலத்திய கவிதைத் தொகுப்பைச் சுட்டிக்காண்பிக்கின்றது. அநேகமாக சாமுவேலின் காலத்தில் தொகுக்கப்

பட்டிருக்கக் கூடிய யோசுவாவின் புத்தகத்தில் "யாசேரின் புத்தகத்தில்" இருந்து மேற்கோள் காண்பிக்கப்பட்டுள்ளது, அப்புத்தகம் இப்பொழுது காணப்படாமல் போய் விட்டது. தாவீதின் நாட்களில் இருந்தே வளம் மிக்கதொரு வரலாற்று இலக்கியம் உதித்தெழும்பிற்று, இது எகிப்து, கல்தேயா அல்லது அசீரியா ஆகியவற்றின் பேரரசுகள் நமக்கு உவந்தளித் துள்ள எதையும் அதிகம் மிஞ்சுவதாக உள்ளது. இவரின் (தாவீதின்) கால கட்டத்திலே நியாயாதிபதிகள் மற்றும் ரூத் என்ற புத்தகங்கள் எழுதப் பட்டிருக்கலாம். இந்தக் காலகட்டத்தில் எழுதப்பட்ட பிற வரலாற்றுப் புத்தகங்களாக, "சாமுவேலின் வரலாறு," "நாத்தானின் வரலாறு," "காத்தின் பிரபந்தம்" (1 நாளா. 29:30) மற்றும் "சாலொமோனின் நடபடிகளின் புத்தகம்" (1 இரா. 11:41), ஆகியவைகளைக் கூறலாம். இவைகள் இப்பொழுது தொலைந்து போய் விட்டன, ஆனாலும் இப்பொழுது நாம் கொண்டுள்ள சாமுவேல் மற்றும் இராஜாக்களின் புத்தகங்களுக்கு இவைகள் அடிப்படையாய் இருந்தன என்பதில் ஐயம் இல்லை. ஆனால் தாவீது மற்றும் சாலொமோன் ஆகியோரின் காலமானது, கவிதை மற்றும் "ஞான" இலக்கியத்தின் மேன்மையான அதன் வெளிப்பாட்டிற்கென்று விசேஷித்த வகையில் சிறப்பித்துக் குறிப்பிடப்படுகின்றது. சங்கீதங்களில் எழுபத்தி இரண்டு சங்கீதங்கள் தாவீதினால் எழுதப்பட்டவையென்று குறிப்பிடப்படுகின்றன, மற்றும் இரண்டு சங்கீதங்கள் (எழுபத்தி இரண்டாம் மற்றும் நூற்றி இருபத்தி எட்டாம் சங்கீதங்கள்) சாலொமோ னால் எழுதப்பட்டவையென்று குறிப்பிடப்படுகின்றன, சாலொமோனின் இலக்கியமானது தாவீதின் எழுத்துக்களில் இருந்த ஆவிக்குரிய உள்ளார் வத்தில் அதிகமான அளவை இழந்து போயிருக்கின்றது, ஆனாலும் யூகித்தறியும் வல்லமையையும் கலைநுட்பமான நிறைவுப் பணியையும் அதிகமாய்க் கொண்டு விளங்குகின்றது. நீதிமொழிகள், பிரசங்கி, உன்னதப் பாட்டு ஆகியவை (சாலொமோனின்) முதன்மைப் பணிகளாய் உள்ளன.[11]

குறிப்புகள்

[1]1 சாமு. 16:13. [2]1 சாமு. 18:7. [3]1 சாமு. 18:9. [4]1 இரா. 4:34. [5]1 இரா. 10:7. [6]1 இரா. 8:27. [7]1 இரா. 8:39. [8]1 இரா. 10:27. [9]யாத். 20:3. [10]1 இரா. 11:4.

[11]பிரசங்கியின் புத்தகம் பின்வந்த கால கட்டத்திற்குரியதாக இருக்கலாம்.

9

வடக்கு இராஜ்யம், கி.மு. 975–722

ரெகொபெயாம் அரியணை ஏறியதிலிருந்து சமாரியாவின் வீழ்ச்சி வரையிலும் 1 இரா. 12-22, 2 இரா. 1-17

I. அறிமுகம்.

இந்த இடத்திலிருந்து, எபிரெய வரலாற்றின் விரிந்து பரவும் நீரோட்டமானது இரு நீரோடைகளாய்ப் பிரிகின்றது. (இந்த) வரலாற்றின் விவரங்கள் அதிகம் சிக்கலானவைகளாகின்றன. இதுவரை நமது அத்தியாயங்கள் நாள் வரிசையின்படி கணக்கிடப்பட்ட கால வேளைகளுக்கு இணைவாகப் பொருத்தம் கொண்டுள்ளன. இதே திட்டமானது இந்த அத்தியாத்திற்கும் அடுத்த அத்தியாயத்திற்கும் "இரட்டை அரசு" மற்றும் "யூதா மட்டும்" என்பவற்றைத் தலைப்புகளாகக் கொடுப்பதாயுமிருக்கும்; வரலாற்றின் ஒருமைப்பாட்டுக்காகவும் மற்றும் எளிமைக்காகவும் நாடுகள் பிரிந்திருக்கின்றதின்படியே இவ்விரு இராஜ்யங்களையும் தனித்தனியே கையாளுவது மிகவும் சிறந்ததாகக் காணப்படுகின்றது. ஆகியவற்றிற்கு சிறந்ததாகக் காணப்படுகின்றது.

1. பிளவின் தொடக்கம்.—*அ. இதன் வேர்கள்.*—''இராஜ்யம் நொறுங்குதல் என்பது ஒரு நாளில் ஏற்பட்டதாயிராமல், நூற்றாண்டுகளில் ஏற்பட்ட வளர்ச்சியாக இருந்தது.'' யோசுவாவின் காலத்திலிருந்து, தாவீதின் காலம் வரையிலும் யூதாவின் கோத்திரத்தைக் காட்டிலும், யோசேப்பின் இரண்டு (எப்பிரயீம், மனாசே) கோத்திரங்களும், பென்யமீன் கோத்திரமும் முன் சிறப்புரிமையைப் பற்றிப் பிடித்துக் கொண்டிருந்தன. யோசுவா, தெபொராள், சாமுவேல் ஆகியோர் எப்பிராயீம் கோத்திரத்தைச் சேர்ந்தவர்களாயிருந்தனர்; கிதியோன் மற்றும் அபிமெலேக்கு ஆகியோர் மனாசே கோத்திரத்தைச் சேர்ந்தவர்களாய் இருந்தனர்; சவுலும் யோனத்தானும் பென்யமீன் கோத்திரத்தைச் சேர்ந்தவர்களாயிருந்தனர்.

எப்பிரயீம் கோத்திரமானது விசேஷமாக, மேன்மைத்துவம் மற்றும் சுதந்திரம் ஆகியவற்றின் மேட்டிமையான கருத்துணர்வை மீண்டும் மீண்டும் காண்பித்திருந்தது;[1] இதன் தலைவர்கள் யூதாவின் ஆளுகையிலிருந்து முறித்துக் கொண்டு வெளியே செல்ல தங்களுக்குச் சமயம்

நேரிடுமா என்று காத்துக் கொண்டிருந்தார்கள் என்பதை மட்டுமே நிகழ்ச்சிகள் நிரூபித்தன.

ஆ. ரெகொபெயாம் அரியணை ஏறுதலும் அவர் கொள்கையும்.—‘‘சாலொமோன் ஆயிரம் மனைவிகளையும், ஒரே ஒரு மகனையும் கொண்டிருந்தார். அந்த மகனும் அறிவற்றவனாயிருந்தார்.’’ ரெகொபெயாம் அரியணை ஏறிய பொழுது, மக்கள் அவரிடம் வந்து, சாலொமோனின் ஆட்சியின் கீழ் தங்களை மிகவும் ஒடுக்கியிருந்த வரிவிதிப்புகளை இலகுவாக்கும்படி வேண்டுகோள் விடுத்தார்கள். ரெகொபெயாம், தனக்கு ஆலோசனை கூறிய முதியவர்களின் அறிவுரையைப் புறக்கணித்து விட்டு, இளம் மனிதர்களின் ஆலோசனையைப் பின்பற்றிக் கொண்டு, தனது சுண்டு விரலானது தனது தந்தையின் தொடையே விடப் பருமனாயிருக்கும் என்று பதில் அளிக்கின்றார்.

இ. யெரொபெயாமும் கலகமும்.—சாலொமோன், யெரொபெயாம் என்ற திறமைமிக்க அதிகாரி ஒருவரைப் பணியில் வைத்திருந்தார். அவர் எப்பிராயீம் இனத்தவர் என்பது குறிப்பிடத் தக்கதாகும். தேவனுடைய ஆட்சியின் அடிப்படைகளை மீறும் செயலாக சாலொமோனிடம் இருந்த விக்கிரக ஆராதனையின் நடக்கைக்கான சாபமாக அரசானது பிரிக்கப்பட்டு, யெரொபெயாம் பத்துக் கோத்திரங்களின்மீது அரசாளுவார் என்பது அகிசா என்ற தீர்க்கதரிசி முன்னுரைத்திருந்தார். சாலொமோனின் சந்தேகத்திற்குள்ளான யெரொபெயாம் எகிப்திற்கு ஓடிப் போனார், ஆனால் சாலொமோனின் மரணத்தின்போது மீண்டும் திரும்பி வந்தார். வரிகளை இலகுவாக்குவதற்கு ரெகொபெயாம் வன்மையாய் மறுத்து விட்டதின் பேரில் பத்து கோத்திரங்களினால் யெரோபேயாம் தலைமையில் ஒரு கலகம் நடத்தப்பட்டது. இதன் விளைவாக இரண்டு போட்டி அரசுகள் ஏற்பட்டன:

(1) யூதாவும் பென்யமீனும் என்ற இரு கோத்திரங்களைக் கொண்ட தெற்கு இராஜ்யமானது யூதா என்று அறியப்பட்டது.

(2) பத்து கோத்திரங்களைக் கொண்ட வடக்கு இராஜ்யம் இஸ்ரவேல் என்று அறியப்பட்டது.

2. இரு இராஜ்யங்களின் ஒப்பீடு.—*அ. எல்லையும் மக்கள் தொகையும்.*—ஒரு முக்கியமான கருத்தமைவில், வடக்கு இராஜ்யமானது தெற்கு இராஜ்யத்தை விட அதிகமான வகையில் நாடாயிருந்தது; இது பன்னிரெண்டில் பத்து கோத்திரங்களைக் கொண்டிருந்தது, எனவே இது இஸ்ரவேல் என்ற நாட்டின் பெயரைத் தக்க வைத்துக் கொண்டது. இதன் எல்லைகள் விரிவாயிருந்தது மட்டுமின்றி அவைகள் இயற்கை வளங்களிலும் வரலாற்றுத் தொடர்பான இணைவுகளிலும் மிகவும் வளம் பொருந்தியவைகளாயிருந்தன. யூதாவானது எருசலேமையும் எபிரோனையும் கொண்டிருக்கையில், இஸ்ரவேலானது சீகேமை அதன் செல்வத்தின் நினைவாக கொண்டிருந்தது; ஆசரிப்புக் கூடாரத்தின் முந்திய இருப்பிடமாய் இருந்த சீலோ; சாமுவேல், தீர்க்கதரிசிகளுக்குப் பள்ளிகளைத் தோற்றுவித்திருந்த ஊர்களான பெத்தேல், ராமா மற்றும் கில்கால்; மற்றும் நீண்ட காலமாக ஆராதனையிடமாய் இருந்த தாண் (நியா. 18:14-31) ஆகியவை

இஸ்ரவேலின் எல்லைக்குட்பட்டிருந்தன. மேலும் அந்நாள் வரைக்கும் தக்க வைக்கப்பட்டிருந்த தாவீது பேரரசின் ஆதரிப்புகளும் உடன்படிக்கைகளும் பெரும்பாலும் இஸ்ரவேலுக்குரியவைகளாகவே இருந்தன. இருப்பினும், காலங்கள் கடந்த பொழுது, லேவியர்கள் மற்றும் ஆவிக்குரிய பிற கூறுகள் அதிகமாய் யூதாவுக்கு இடம் பெயர்ந்ததாலும் இவற்றை இஸ்ரவேல் இழந்து போயிற்று (2 நாளா. 15:9, 10).

ஆ. அவர்களின் மதம்/மார்க்கம்.—தொடக்கம் முதல் முடிவு வரையிலும் இஸ்ரவேலின் அரசர்கள் விக்கிரகாராதனைக்காரர்களாகவே இருந்தார்கள், மற்றும் மக்களும் அதிகம் அதிகமாய் அவ்வாறே வளர்ந்தார்கள். இருப்பினும், தொடக்க காலத் தீர்க்கதரிசிகளில் ஏறக்குறைய யாவரும் இஸ்ரவேலைச் சேர்ந்தவர்களாகவோ அல்லது இஸ்ரவேலுக்கு ஊழியம் செய்ய அனுப்பப்பட்டவர்களாகவோ இருந்தனர் என்பது கவனிக்க ஆர்வமுள்ள நிகழ்ச்சியாக உள்ளது. அபியா, செமேயா, எலியா, எலிசா, மிக்காயா, யோனா, ஓசியா, ஆமோஸ், சகரியா, யேகூ ஆகியோர் யாவரும் பிறப்பினாலோ அல்லது ஊழியத்தினாலோ இஸ்ரவேலுக்குரியவர்களாகவே இருந்தார்கள், இவர்கள் வடபகுதியின் தீர்க்கதரிசிகளாகவே இருந்தார்கள். யூதா அடிக்கடி விக்கிரகாராதனையுள்ளவர்களாய் இருந்தாலும், பெரும்பாலும் யெகோவாவுக்கு உண்மையுள்ளவர்களாய் இருந்தார்கள்.

இ. உறுதித் தன்மையின்/நிலைப்புத்தன்மையின் கூறுகள்.—பின்வரும் உண்மைகளில் யூதாவின் மாபெரும் நிலைப்புத் தன்மை காணப்படுகின்றது: (1) யூதாவுக்கு தாவீது மற்றும் சாலொமோன் ஆகியோரின் நகரமும், தேவாலயம் இருந்த நகரமுமான எருசலேம் மட்டுமே எப்பொழுதுமே தலைநகராயிருந்தது. இஸ்ரவேலுக்கோ, ஒன்றின் பின் ஒன்றாக சீகேம், திர்சா, சமாரியா என்று பல தலை நகரங்கள் இருந்தன. (2) இஸ்ரவேலானது இருநூற்று ஐம்பது ஆண்டுகள் மட்டுமே தொடர்ந்து நிலைத்திருந்தது, ஆயினும் அந்த கால வேளையில் அதில் ஒன்பது வம்சங்களைச் சேர்ந்த பத்தொன்பது அரசர்கள் அரியணையில் அமர வந்தனர். ஒவ்வொரு புதிய வம்சமும் தனது இரத்தத்தினால் துடைத்து எறியும்படும்படி (பிறரின்) இரத்தம் சிந்திய புரட்சியினால் (அரசாள்வதை) தொடங்கின. யூதாவோ, வன்முறையால் அதிகாரத்தைக் கைப்பற்றிய அத்தாலியாளைத் தவிர, தாவீதின் வம்சத்தைச் சேர்ந்த இருபது அரசர்களால் மட்டுமே ஆளப்பட்டதாக சுமார் நானூறு ஆண்டுகள் நிலைத்து நின்றது.

II. நான்கு கால கட்டங்கள்.

வடக்கு இராஜ்யத்தின் வரலாறானது மதரீதியாக, சம அளவற்ற நான்கு கால கட்டங்களாகப் பிரிக்கப்படலாம்:

1. விக்கிரக ஆராதனை வேர் கொள்ளுதல்; ஐம்பது ஆண்டுகள், மூன்று வம்சங்கள், ஐந்து ஆளுகைகள்.—இதில் முன்னோடித் தலைமைப் பண்பினராய் இருப்பவர் இந்த இராஜ்யத்தைத் தோற்றுவித்த யெரொபெயாமே ஆவார். இவர் தமது போட்டி (அரசின்) தலைநகரில் இருந்த ஆராதனைக்குரிய ஒரே (இட) மையத்தின் செயல்விளைவினால்

பயம் அடைந்தவராக தனது ஆளுகைப்பகுதிகளில் தொலைதூர வடக்கில் தாண் என்ற இடத்தையும், தெற்கு முனையில் பெத்தேல் என்ற இடத்தை யும் தேர்ந்தெடுத்தார். இவையிரண்டுமே பரிசுத்த இடங்களாக மதிக்கப் பட்டு, ஏற்கனவே புகழ் பெற்றிருந்தன. இவ்விடங்களில் அவர் கன்றுக்குட்டி ஆராதனை என்று அறியப்பட்ட விக்கிரகாராதனை வடிவத்தை அமைத்து வைத்தார். இது, சீனாய் மலையடிவாரத்தில் இஸ்ரவேலர்கள் வீழ்ந்து போன விக்கிரகாராதனையின் வடிவத்தை நினைவுகூருவதாயிருக்கும், மற்றும் யெரெபெயாமே கூட சமீபத்தில் நாடு கடத்தப்பட்டவராய் எகிப்தில் இருந்திருந்தார் என்பதையும் இது நினைவுபடுத்தும். இது அநேகமாக யெகோவாவைப் புறக்கணித்துவிடுதல் என்று அர்த்தப்படுத்தியிருக்காது, ஆனால் காணப்படாத தேவனுக்கு காணப்படுகிற ஒரு உருவத்தைப் பயன்படுத்துதலாக இருந்திருக்கும். அப்படியானால், இது முதலாம் கட்டளையையல்ல, மாறாக இரண்டாம் கட்டளையை மீறிய செயலாய் இருந்தது. சாலொமோனின் விக்கிரகாரதனைகள் நமக்கு மிக மோசமான வைகளாய்க் காணப்படுகின்றன, இருப்பினும், பரிசுத்த வரலாற்றாளர் திகில் இன்றி யெரொபெயாமைக் குறிப்பிட முடியாதிருந்தது. “நேபாத்தின் மகனான யெரொபெயாம் பாவம் செய்து இஸ்ரவேலை(யும்) பாவம் செய்யும்படி வழிநடத்தினான்,”[2] என்பது அவர் என்றென்றைக்கும் பிறருக்கு எச்சரிக்கையாயிருக்கும்படிக்குக்[3] கூறப்பட்ட வார்த்தைகளின் வடிவாக உள்ளது. வழிகளின் பிரிவில் யெரொபெயாம் நின்றிருந்தார். தெய்வீக நியமனத்தினால் அவர் ஒரு வம்சத்தையும் இராஜ்யத்தையும் தோற்றுவிக்க வேண்டியவராயிருந்தார். அந்த வம்சமும் இராஜ்யமும் மகிமையுள்ள ஒரு முடிவை/அடைவிடத்தைக் கொண்டிருந்திருக்கலாம்; ஆனால் அது ஆபிரகாமோ அல்லது யெரொபெயாமோ யாராயிருப்பினும் அவ்வினத் தோற்றுவிப்பாளரைப் பொறுத்த விஷயமாயிருந்தது; மற்றும் யெரொபெ யாமோ தனது கொள்கையினால், பாதி உலகப் பிரகாரமானவராகவும், பாதி சமய ரீதியானவராகவும் இருந்து, இஸ்ரவேலரின் வளமையை என்றென்றைக்குமாகத் தகர்த்து விட்டார். அவர் ஒரு புதிய ஆசாரியத்துவத் தையும் மதப் பண்டிகைகளுக்கான ஒரு புதிய முறைமையையும் உண்டாக்கினார். இக்கொள்கையானது அக்காலத்திற்கு அரசியல் ரீதியாக ஞானமுள்ளதாகக் காணப்பட்டிருக்கலாம், ஆனால் முடிவில் இது அழிக்கக் கூடியதென்று நிரூபிக்கப்பட்டது. இஸ்ரவேலின் அரசியல் பாதுகாப்பு அதன் மதரீதியான தூய்மையில் தான் இருந்தது. இந்தக் கால கட்டத்தின் எஞ்சிய அரசர்களான நாதாப், பாஷா, ஏலா மற்றும் கடைசி சிம்ரி ஆகியோர் வஞ்சகமாய் அரசைக் கைப்பற்றி ஏழு நாட்களில் மகிமையற்ற ஆட்சி செய்து விழுந்து போன பாஷாவைப் போன்றவர்களாகவே இருந்தனர். இந்தக் காலகட்டம் முழுவதிலும் இஸ்ரவேலும் யூதாவும் அழிவூட்டும் வெறுப்பின் நிலையில் இருந்து, அவ்வப்போது வெளிப்படை யான யுத்தத்தில் ஈடுபட்டனர்.

2. விக்கிரகாராதனை வெற்றி முழக்கமிடுகிறது; ஐம்பது ஆண்டுகள், ஒரு வம்சம், நான்கு ஆளுகைகள்.—*அ. உம்ரியும் புதிய தலைநகரும்.*—உம்ரி என்ற பெயர் கொண்ட இராணுவ அதிகாரிதான் இவ்வம்சத்தின் தோற்றுவிப்பாள

ராயிருந்தார். வஞ்சகமாய் ஆட்சியைக் கைப்பற்றியிருந்த சிம்ரியைத் தாக்கி வீழ்த்தி விட்டு, திப்னி என்ற பெயர் கொண்ட துணிகரச் செயல் செய்பவனுடன் ஒரு உள்நாட்டு யுத்தம் நடத்தி இவர் (உம்ரி) பாதுகாப்பாய் அரியணையில் அமர்ந்தார். சிம்ரி திர்சாவில் இருந்த அரண்மனையைத் தனது தலைமையிலேயே நெருப்பிட்டு எரித்தார் (அவரும் அதில் இறந்தார்). உம்ரி திர்சாவைக் கைவிட்டு, சமாரியாவை வாங்கி அதைக் கட்டியெழுப்பினார், அதில் அவ்வரசு வீழும் வரையில் தலைநகராய்த் தொடர்ந்திருந்தது, மற்றும் அவர் அப்பெயரை (சமாரியா) ஒரு மாவட்டத்திற்கு அளித்து, பின்பு மக்களுக்கும் அப்பெயரை வழங்கச் செய்தார்.

ஆ. ஆகாப்; யேசபேல்; பாகாலுக்கு வழிபாடு.—உம்ரியின் மகன் ஆகாப், சீதோனின் அரச ஆசாரியராயிருந்த ஏத்பாகாலின் மகள் யேசபேலைத் திருமணம் செய்து கொண்டார். புறதெய்வ வழிபாட்டுக் கொள்கையுடைய இரத்தமும் மதமும், இரு இராஜ்யங்களிலும் இருந்த எபிரெய அரச குல வம்சங்களின் பல தலைமுறைகளாக விஷம் போலப் பாய்ந்தோடிக் கொண்டிருந்தன. அவள் அதிகார விருப்பமும் வெறி கொண்ட வைராக்கியமும் உடைய பெண்ணாயிருந்தாள், இவளது பெயரானது ஏறக்குறைய மூவாயிரம் ஆண்டுகள் அளவாக ஒரு கூற்றுச் சொல்லாக வெறுக்கப்படத்தக்க பெண்களைக் குறிக்கப் பயன்பட்டு வந்தது. அவள் சிற்றின்பத்திற்கேதுவான பாகால் வணக்கத்தை அறிமுகப்படுத்தினாள், மற்றும் யெகோவாவைத் தொழுது கொள்வதற்கு எதிராகக் கடுமையான துன்புறுத்தல்களைச் செய்யத் தொடங்கினாள், யெகோவாவை வணங்குதல் மக்கள் மத்தியில் ஆழமாக வேரூன்றியிருந்தாலும் இவள் செய்த துன்பங்களினால் வேரறுக்கப்பட்டது.

இ. எலியாவின் யுகம்.—தீர்க்கதரிசியான எலியா இக்கால கட்டத்தில் மிக மேன்மையான பாத்திரமாய் இருந்தார். அவர் ஆகாபின் பாவங்களைக் குறித்து ஆகாபிடம் தைரியமாய் எதிர்ப்புரை கூறி நின்றார்; நாடு முழுவதும் விசுவாசத்தை விட்டு விலகிச் சென்றதற்குத் தண்டனையாக மூன்று ஆண்டுகள் பஞ்சம் ஏற்படும் என்று தீர்க்கதரிசனம் கூறினார்; கேரீத் ஆற்றங்கரையில் காகங்களினால் போஷிக்கப்பட்டார் மற்றும் யேசபேலின் சொந்த ஊரான சீதோனுக்கடுத்த சாறிபாத் என்ற ஊரில் இருந்த ஒரு விதவையாலும் போஷிக்கப்பட்டார்; கடைசியில் மீண்டும் ஆகாப்பை எதிர் கொண்டு கர்மேல் மலையின் மீது நாட்டவர் அனைவரையும் கூடும்படி அறிவிப்பு செய்து, அங்கு பாகால் மற்றும் அஸ்தரோத் என்ற தெய்வங்களின் நூற்றுக்கணக்கான ஆசாரிய - தீர்க்கதரிசிகளிடத்தில் ஒரு சோதனையை முன்மொழிந்தார்: அக்கினியின் மூலம் பதில் கொடுக்கின்றவரே நாட்டின் தேவனாய் இருக்க வேண்டும். பயபக்தியடைந்த மக்கள் கூட்டமானது, எலியாவின் பலி (அக்கினியால்) பட்சிக்கப்பட்ட தெய்வீக பதில்செயலைக் கண்டு அக்கணப் பொழுதுக்கு விக்கிரகாராதனையிலிருந்து திரும்பி கள்ள தீர்க்கதரிசிகளை அழித்துப்போட்டது. எலியாவின் ஜெபத்திற்கு இன்னும் பதில் அளிக்கும் வகையில், நீண்ட காலப் பஞ்சமானது அதிகமான மழையினால் முறி(யடி)க்கப்பட்டது, மற்றும் எலியா ஆகாபின் இரதத்திற்கு முன்பாக வெற்றிகரமாய் யெஸ்ரபேலுக்கு ஓடிச் சென்றார். ஆனால்

நாணமற்ற யேசபேல் பயமுறுத்தும் செய்தியொன்றை எலியாவுக்கு அனுப்பினாள், அவர் ஓரேபுக்கு ஓடிப்போனார். அங்கு தேவன், மனச் சோர்வடைந்த தீர்க்கதரிசியைச் சந்திக்கின்றார், அவரிடத்தில் பாகாலுக்கு ஒருக்காலும் முழங்காற்படியிடாத ஏழாயிரம் பேர் இன்னும் மீதம் இருப்பதாக, "இஸ்ரவேலுக்குள் இஸ்ரவேல்" இருப்பதாகக் கூறி, அவர் (எலியா) தமது ஊழியத்தை முடிக்கும்படி திரும்பி அனுப்பி வைக்கிறார். எலியா திரும்புகின்றார், தமக்குப் பதிலாக தீர்க்கதரிசியாய் இருக்க எலிசாவை அபிஷேகம் செய்விக்கின்றார், ஆகாபின் வீட்டாருக்கு அழிவு வரும் என்று அறிவிக்கின்றார், மற்றும் அக்கினி இரதத்தினால் பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றார், உம்ரி மற்றும் ஆகாப் ஆகியோரின் வம்சங்கள் இரக்கமற்ற யேகூ என்பவனால் இரத்தம் சிந்த அழிக்கப்படுகின்றன. மோசேக்குப் பிறகு வேறு எந்த தீர்க்கதரிசியும் எபிரெயர்களின் சிந்தைகளில் இவ்வளவு தெளிவான கருத்துப் பதிவை விட்டுச் சென்றதில்லை. இவரது பெயரைப் பற்றிப் புராணங்களும் பழமொழிகளும் ஒன்று கூட்டி (கூறப்பட்டு) வந்தன, மற்றும் அவரது மறுவருகையானது பழைய ஏற்பாட்டின் கடைசி தீர்க்கதரிசியினாலும் புதிய ஏற்பாட்டு கால மக்களாலும் ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்டிருந்தது. இருப்பினும், அவர் எழுதியதாகவோ அல்லது பேசியதாகவோ ஏதொன்றும் நமக்குக் கிடைக்கவில்லை. அவரது மகா ஒப்பனையான யோவான் ஸ்நானன் போலவே அவர் (எலியா) கூறியவைகள் அல்ல, மாறாக அவர் செய்தவைகளே அவருக்கு எபிரெய தீர்க்கதரிசிகளின் வரிசையில் அவருடைய உயர்வான இடத்தைக் கொடுத்துள்ளன.

ஈ. அரசியல் சார்ந்த உறவுகள்.—அகசியா மற்றும் யோராம் ஆகியோர் ஆகாபின் வீட்டில் எஞ்சியிருந்த அரசர்களாவார்கள். ஆகாபின் ஆளுகையின் பின்பாதி வரையில் யூதாவின் மீதான வெறுப்பு தொடர்ந்தது, அதன் பிறகு சீரியாவுக்கு எதிராக (இரு நாடுகளும்) ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கையானது இரு அரசக் குடும்பங்களுக்கிடையில் நடந்த கலப்புத் திருமணம் ஒன்றினால் உறுதியாய்ப் பிணைக்கப்பட்டது. சீரியாவுடன் அடிக்கடி யுத்தங்கள் நடந்தன, மோவாப் நாடு தாவீதின் காலத்திலிருந்து தொடர்ந்து பெற்றுக் கொண்டிருந்த சார்பு நிலையைத் தூக்கியெறிந்தது. மோவாபியரின் கல்[4] என்பதின் மூலம் இந்தக் காலகட்டத்தின் மீது ஆர்வம் நிறைந்த பக்க வெளிச்சம் வீசப்படுகின்றது. தூரத்தில் இருந்ததும், மத்திய தரைக் கடல் பகுதியில் ஒரு காலத்தில் ஆளுகையின் வல்லமை நிறைந்ததுமாய் இருந்த அசீரியாவானது மறை நிலையில் இருந்து எழும்பி நூற்று ஐம்பது ஆண்டுகள் செயல்வலிவுள்ளதாகி மேற்கில் இருந்த பல சிற்றரசுகளை விழுங்கிற்று. இந்தக் கால கட்டத்திலிருந்து நமது வரலாற்றுப் பாடத்தில் அசீரியக் கல்வெட்டுகள் அதிகமாய்/அடிக்கடி கருத்தொளி தருகின்றன.

3. விக்கிரகாராதனை தடை செய்யப்படுதல்; நூறு ஆண்டுகள், ஒரு வம்சம், ஐந்து ஆளுகைகள்.—இந்தக் காலத்தில்தான் சிறிய இராஜ்யம் மிகவும் செழிப்புள்ளதாயிருந்தது; ஆனால் இது இஸ்ரவேலின் "இந்திய கோடைக்காலமாய்," அணையப் போகும் நெருப்பின் கடைசி ஜுவாலை

யாய் இருந்தது. எலிசா கட்டியெழுப்பும் வேலையைத் துவங்கி எலியாவை விட நல்ல வெற்றியைக் கண்டார். வம்சத்தைத் தோற்றுவித்தவரான யேகூ, ஒரு திடீர் புரட்சியினால் ஆகாபின் குடும்பத்தை முற்றிலுமாய் அழித்தார் மற்றும் அதோடு பாகால் வழிபாட்டையும் அழித்தார்; ஆனால் யெரொபேயாமின் கன்றுக்குட்டியை வணங்குதலை மீண்டும் துவக்கினார். யோவாகாஸ், யோவாஸ், இரண்டாம் யெரொபேயாம் மற்றும் சகரியா ஆகியோர் அவனைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்தார்கள். இரண்டாம் யெரொபேயாம் நாற்பத்தொன்று ஆண்டுகள் அரசாட்சி செலுத்தி மிகவும் வல்லமையான நிலைக்கு இராஜ்யத்தை உயர்த்தினான். இவர் யோனா தீர்க்கதரிசியால் உதவி செய்யப்பட்டார். மேற்கு ஆசியாவிலேயே விரைவாக இப்போது உயர்ந்து கொண்டிருந்த நினிவே பட்டணத்தில் ஊழியம் செய்ய இவர் (யோனா) அனுப்பப்பட்டிருந்தார். தீர்க்கதரிசி ஓசியாவும் கூட இஸ்ரவேலின் விக்கிரகாராதனைக்கு எதிராக தன் அழகான பேச்சினால் குரல் எழுப்பினார்.

4. விக்கிரகாராதனை அழிவில் முடிவடைதல்; ஐம்பது ஆண்டுகள்; நான்கு வம்சங்கள்; ஐந்து ஆளுகைகள்.—சல்லூம், மனாயீம், பெக்கக்கியா, பெக்கா மற்றும் ஓசியா ஆகியோர் அசீரியாவின் கைபொம்மைகளாக மட்டும் இருந்த அரசர்களில் சிலர் ஆவர். மனாயீமின் ஆட்சிக் காலத்தில் அசீரியர்கள் (மக்களை) நாட்டை விட்டு வெளியேற்றும் வேலையைத் தொடங்கினார்கள். சற்றே வலிவு கொண்ட அரசான பெக்கா, அசீரியாவுக் கெதிராக சீரியாவுடனும், அசீரியாவுக்குக் கப்பம் கட்டிய சிறிய (நாடான) யூதாவுடனும் ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொள்ளுகின்றார். அசீரியாவின் இரண்டாம் திக்லேத் பிலேசர் சீரியாவின் அரசிற்கு ஒரு முடிவு கட்டி, இஸ்ரவேலின் மீது கடுமையான வரி விதிக்கின்றார். அசீரியாவின் நுகத்தி லிருந்து ஓசியா கலகம் செய்கின்ற பொழுது முடிவு வருகின்றது. நான்காம் சல்மனேசர் நாட்டின்மீது படையெடுத்து சமாரியாவை முற்றுகை யிடுகின்றார். நகரமானது மூன்றாண்டுகளாகப் பிடிக்கப்பட்டிருந்தது, அந்த வேளையில் அசீரிய அரியணையில் சல்மனேசருக்கு அடுத்தபடியாக சார்கோன் பதவியேற்கின்றார், இவர் சமாரியாவின் மீதான படை யெடுப்பையும் முற்றுகையையும் முடிவு செய்து, பத்து கோத்திரத்தாரையும் அவர்கள் ஒருக்காலும் மீண்டும் திரும்பியிராத சிறையிருப்பிற்கு இழுத்துச் செல்லுகின்றார். இவர்கள் யெகோவாவிற்கும் தங்கள் இன ஊழியத்திற்கும் உண்மையற்றவர்களாகி தங்கள் இன அடையாளத்தை என்றென்றைக்கு மாக இழந்து போகின்றனர். (சமாரியா/இஸ்ரவேல்) நாட்டிற்குள் கொண்டு வரப்பட்ட அசீரியர்கள் அங்கு பத்து கோத்திரங்களில் எஞ்சியிருந்தவர் களுடன் இரண்டறக் கலக்கின்றனர். இந்த கலப்பினமானது இழிவான மதத்துடன் நூற்றாண்டுகளாகத் தொடர்ந்திருந்தது, மற்றும் கிறிஸ்துவின் காலத்தில் சமாரியர்கள் என்று கூறப்பட்ட இனத்தைக் கொண்டிருந்தது.

குறிப்புகள்

[1]*யோசு. 17:14-18; நியா. 8:1-3; 12:1-6ஐக் காணவும்.* [2]*1இரா. 14:16.* [3]*இவ்விதமாய் யெரொபெயாம் வெளிப்படையாய் வெட்கத்திற்குள்ளானார்.* [4]See Edersheim, “Hist. of Israel and Judah,” Vol. VI., pp. 112-117.

10

தெற்கு இராஜ்யம், கி.மு. 722–586

ரெகொபெயாம் அரியணை ஏறியதிலிருந்து எருசலேமின் வீழ்ச்சி வரை

1 இரா. 12-22; 2 இரா. 1-25; 2 நாளா. 10-36[1]

அறிமுகம்.—*சமாரியாவின் வீழ்ச்சியானது இஸ்ரவேல் இராஜ்யத்திற்கு ஒரு முடிவைக் கொண்டு வந்து, இரட்டை இராஜ்யத்தின் காலத்தை முடித்து வைத்தது. (அதன் பின்) யூதா ஏறக்குறைய நூற்று ஐம்பது ஆண்டுகள் காலத்திற்கு நீடித்திருந்தது; சமாரியாவைக் கைப்பற்றிய நிகழ்ச்சியானது இஸ்ரவேலைக் காட்டிலும் யூதாவுக்கு மிகவும் முக்கியத்துவமற்றதாக இருந்தபடியால், யூதாவின் வரலாற்றில் நானூறு ஆண்டுகள் காலத்தை ஆய்வு செய்வதினால் நாம் ஒருமைப்பாட்டைப் பாதுகாக்கலாம்.*

யூதாவின் வரலாறு ஒரு மாபெரும் பெயரின் நீடித்திருக்கும் செல்வாக்கை விவரிக்கிறது. தாவீதின் ஆளுகையானது தனிச்சிறந்த உயர்ந்த இராஜாவையும் இராஜ்யத்தையும் அளித்திருந்தது. நாட்டின் தீர்க்கதரிசனம் சார்ந்த நம்பிக்கைகளும் உள்ளுணர்வுகளும் அவரையும் அவரது வம்சத்தையும் ஒன்றிணைத்து (சிதறாமல் காத்து) வைத்திருந்தது. சாலொமோனின் விக்கிரகாரதனைகளின் ஒழுக்க ரீதியான அதிர்ச்சிக்குப் பின்பு, அவர்கள் சற்றுக் காலம் யெரோபெயாமுடனும் வடக்கு இராஜ்யத்துடனும் ஒன்றித் திருந்தார்கள். ரெகொபெயாம் கலகத்தை அடக்க முயற்சி செய்யவில்லை. யெரொபெயாமும் யெகூவும் அரச வம்சங்களைத் தோற்றுவிப்பவர்கள் என்று தீர்க்கதரிசனமாகக் குறிப்பிடப்பட்டிருந்தார்கள்; ஆனால் இருவருமே தீர்க்கதரிசனத்துவ நம்பிக்கைகளை முற்றிலும் ஏமாற்றப்படுத்தி விட்டார்கள். கடைசியில், சமாரியாவும் இஸ்ரவேலும் அசீரியாவுக்கு முன்பாகத் தாழ்ந்து சென்ற பிறகு, யூதாவின் சிறிய இராஜ்யமானது அதன் மிகச் சிறந்த கருத்தில், “முழு இனம் சார்ந்த ஆவியைத் தனக்குள் ஒன்றுகூட்டியிருந்தது.”

உண்மையான மதத்தின் தோற்றம் மற்றும் வளர்ச்சியைக் கண்டறிதல் என்ற வேதாகம வரலாற்றின் முதன்மை நோக்கத்தை நாம் மறந்து விடக் கூடாது. அந்தக் குறிக்கோளுடனேயே எபிரெய வரலாறானது படிக்கப்பட வேண்டும். இவ்விதமாய்க் கண்ணோக்கினால், தெற்கு இராஜ்யத்தின் நானூறு ஆண்டுகள் வீழ்ச்சி மற்றும் எழுச்சி ஆகியவை நான்கு கால கட்டங்களாகப் பிரிக்கப்படலாம், அவை ஒவ்வொன்றும் அந்தந்தக்

காலத்தில் ஆண்டு கொண்டிருந்த அரசர்களின் பண்புடன் நெருக்கமாய் இணைக்கப்பட்டுள்ளது. இஸ்ரவேலைப் போலின்றி, யூதா அரசின் ஆட்சிக் காலம் முழுவதிலும் தாவீதின் வம்சம் மட்டுமே ஆண்டு வந்தது என்பதும் நினைவுகூருவதற்கு நல்ல விஷயமாகவே உள்ளது.

I. முதல் வீழ்ச்சியும் எழுச்சியும்.

நான்கு ஆளுகைகள், தொண்ணூறு ஆண்டுகள்.

***1*. ரெகொபெயாம் மற்றும் அபியா ஆகியோரின்கீழ் வீழ்ச்சி.**— *அ. மதம்/மார்க்கம்.*—சாலொமோனின்கீழ் தொடக்கம் பெற்ற புறதெய்வ வழிபாட்டு விருப்பங்கள் அடுத்த இருபது ஆண்டுகள் காலத்திற்குத் தொடர்ந்து பெருகியது. தீர்க்கதரிசிகளின் மறுப்புகள் இருந்த போதிலும், தேவனுக்கு ஆராதனை செய்தல் வீழ்ச்சியுற்று, நாடு முழுவதிலும் புறதெய்வ வழிபாட்டு மேடைகள் பெருவளர்ச்சி பெற்று, மக்களின் மத்தியில் முழுமையான ஒழுக்கவீனங்கள் பரவி மலிந்தன.

ஆ. இஸ்ரவேலுடன் தொடர்புகள்.—யெரொபெயாமின் கீழ் பத்து கோத்திரங்கள் விலகிச் சென்ற வேளையில், கலகத்தை அமர்த்துவதற்காக ரெகொபெயாம் ஒரு படையை எழுப்பி ஏவினார்; ஆனால் தீர்க்கதரிசியான செமேயாவின் அறிவுரையைக் கேட்டு அதற்கு இணங்கி அந்த முயற்சியை கைவிட்டார். இருப்பினும் இரண்டு இராஜ்யங்களும் (ஒன்றின் மீது மற்றொன்று) வெறுப்புணர்வைத் தொடர்ந்து கொண்டிருந்தன; மற்றும் அபியாவின் மூன்றாண்டுகள் கால ஆட்சியின்போது, செமராயீம் என்ற இடத்தில் நடந்த போரில் அவர் இஸ்ரவேலின்மீது நொறுக்கப்பட்ட தோல்வியைத் திணித்தார்.

இ. சீசாக்கின் படையெடுப்பு.—சாலொமோன் எகிப்திய இளவரசி ஒருத்தியைத் திருமணம் செய்து கொண்டிருந்தார்: ஆனால் யெரொபெயாமுக்கு ஆதரவளித்த ஒரு புதிய அரச வம்சமானது நைல் நதியண்டையில் எழும்பிற்று. இந்த வம்சத்தின் அரசரான சீசாக் பலஸ்தீனத்தில் படையெடுத்து எருசலேமைக் கைப்பற்றினார், மற்றும் தேவலாயத்தின் மேன்மை மிக்க பொன் பொருட்கள் யாவற்றையும் எடுத்துக் கொண்டு போனார். சீசாக் தாமே கார்னாக்கில் இருந்த மாபெரும் ஆலயத்தில் மனதில் பதியும் வகையில் வேதாகம விபரங்களின் உறுதிப்பாடு ஒன்றை விட்டுச் சென்றுள்ளார்.[2]

***2*. ஆசா மற்றும் யோசபாத் ஆகியோரின் கீழ் எழுச்சி/உயிர்ப்பித்தல்.**— *அ. சீர்திருத்தங்கள்.*—ஆசாவின் நாற்பத்தியோரு ஆண்டு கால ஆளுகையானது அவருக்கு முன்னிருந்த இரண்டு அரசர்களின் ஆட்சியிலிருந்து தூய்மையிலும் பலத்திலும் குறிப்பிடத் தக்க வகையில் மாறுபடுகின்றது. அவர் பல ஆண்டுகளுக்கு ஆழ்ந்த அமைதியை மகிழ்வுடன் அனுபவித்தார், இதை அவர் புறதெய்வ வழிபாட்டு மேடைகளையும் சொரூபங்களையும் அகற்றியதாலும், யெகோவாவுக்கு ஆராதனையை மீண்டும் ஒழுங்கு படுத்தியதாலும் மேம்படுத்தினார். யோசபாத் இருபத்து ஐந்து ஆண்டுகள் அளவாக நீதியாக ஆண்டு வந்தார். மேலும் அவர் தமது தந்தையின்

சீர்திருத்தப் பணிகளைத் தொடர்ந்து செயல்படுத்தி, முறையான மத அறிவுறுத்தலுக்கு வழியளித்து, யூதத்துவ முறை/அமைப்பைப் புரிந்து கொண்டு மேம்படுத்தினார்.

ஆ. எத்தியோப்பியரான சேராவின் படையெடுப்பு.—சேராவின் கீழ் பத்து லட்சம் பேரின் படையெடுப்பினால் ஆசாவின் அமைதி முறிக்கப் பட்டது. தேவனிடத்தில் உற்சாகமான ஜெபத்துடன் ஆசா யுத்தத்திற்குச் சென்றார், யூதா அந்தப் பகுதியிலிருந்து அடுத்த முந்நூறு ஆண்டுகளுக்கு யுத்தத்தால் பாதிக்கப்படாதபடிக்கு அவ்வளவு தீர்மானமான வெற்றி யடைந்தார். அந்த வெற்றியை ஆசா, ஒரு மாபெரும் சபை கூடுதலில் கொண்டாடினார், அக்கூட்டத்தில் இன உடன்படிக்கை புதுப்பிக்கப் பட்டது மற்றும் சீர்திருத்தப் பணியானது இன்னமும் மேம்படுத்தப்பட்டது.

இ. திருமண ஒப்பந்தம்.—ஆசா தமது வாழ்வின் பிற்பகுதியில் இஸ்ரவேலுக்கு எதிராக சீரியாவுடன் ஒப்பந்தம் செய்து கொண்டார். யோசபாத் தமது தந்தையின் கொள்கையைத் திருப்பிப் போட்டு, இஸ்ரவேலுடன் ஒப்பந்தம் செய்து கொண்டார், தமது மகனை ஆகாபின் மகளுடன் திருமணத்தில் இணைத்து வைத்து, சீரியருக்கு எதிராக ஆகாபுக்கு உதவி செய்தார்.

II. இரண்டாம் வீழ்ச்சியும் உயிர்ப்பித்தலும்/ எழுச்சியும்.

ஒன்பது ஆளுகைகள், இருநூறு ஆண்டுகள்.

1. ***வீழ்ச்சி.****—அ. யோராமும் அத்தாலியாளும்.*—யோசபாத்தின் மகன் யோராம் அரியணைக்கு வந்தார். அவர் ஆகாபின் மகளான அத்தாலி யாளைத் திருமணம் செய்து கொண்டிருந்தார். அவள் தனது தாயாகிய யேசபேலின் உக்கிரமான ஆவியையும் பாகால் வணக்கத்தையும் யூதா நாட்டிற்குள் கொண்டு வந்தாள். ஆசா மற்றும் யோசபாத் ஆகியோரின் பணியானது எடுத்துப் போடப்பட்டது தெளிவாய்க் காணப்படுகின்றது. எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு யோராமுக்கு அடுத்து அவரது மகன் அகசியா அரசாள வந்தார்; ஆனால் ஓராண்டிற்குள்ளாகவே அவர் ஆகாபின் வீட்டாருக்குத் தண்டனையளிக்க (கர்த்தரால் நியமிக்கப்பட்டு இருந்த) யெகூவினால் இரக்கமற்ற அழிவில் வீழ்ந்தார்/மாய்ந்தார். அத்தாலியாள் தப்பிச் சென்று, அரசின் ஆளுகைகளைக் கைப்பற்றிக்கொண்டு சிறு குழந்தையாயிருந்த யோவாஸைத் தவிர அரச குடும்பத்தில் யாவரையும் கொன்று போட்டு, ஆறு ஆண்டுகள் காலத்திற்கு யூதாவின் யேசபேல் என்பதைக் காட்டிலும் அதிக கொடுமையானவளாயிருந்தாள். இப்பொழுது தாவீதின் வம்சமானது ஒரு சிறு குழந்தை மட்டுமே உயிருடன் இருக்கும் அளவு குறைக்கப்பட்டது, மற்றும் அவரது (தாவீதின்) அரியணையில் ஒரு புறதெய்வ வணக்கம் செய்யும் அரசி வீற்றிருந்தாள்; தாவீதின் சந்ததியானது அழிவின் விளிம்பருகில் அவ்வளவாய் நெருங்கிற்று; யோசபாத்தின் தவறான திருமணக் கொள்கையானது அவ்வளவு கசப்பான கனிகளைக் கொண்டு வந்தது.

ஆ. யோவாஸும் பதில்செயலும்.—யோய்தா என்ற முதிர்வயதான பிரதான ஆசாரியரால் எழுப்பப்பட்ட கலகம் ஒன்றில் அத்தாலியாள் கொல்லப்பட்டாள், அவர் இளைஞனான யோவாஸை அரியணையில் அமர்த்தினார். ஒரு சில ஆண்டுகள் காலத்திற்கு அரசாட்சியானது அதன் தூய்மையான நாட்களுக்குத் திரும்பச் சென்றது போல் தோன்றிற்று; ஆனால் யோய்தாவின் மரணத்திற்குப் பிறகு கீழ்நோக்கிச் செல்லும் போக்குகள் மீண்டும் பெருகின, மற்றும் யோவாஸின் ஆட்சியின் கீழ் சகரியா இரத்த சாட்சியாக மரித்தார்.

இ. உசியா.—பின்வந்த அமசியா, உசியா மற்றும் யோதாம் ஆகியோரின் மூன்று ஆட்சிகளில், உசியாவின் ஆட்சி மிகவும் குறிப்பிடத் தக்கதாக உள்ளது. அது திடமானதாயிருந்தது, முக்கியமாக அது ஐம்பத்து இரண்டு ஆண்டு கால வளமிக்க ஆட்சியாயிருந்தது. அவருடைய வெற்றிகளே அவருக்கு அழிவாய் இருந்தது. தூபம் காட்டுதல் என்ற ஆசாரியருக்குரிய செயலை இவர் அரசருக்குரியதாகத் தப்பாக எண்ணிச் செயல்பட்டதால் தொழு நோய் இவரைப் பற்றியது, அதிலிருந்து இவர் ஒருக்காலும் குணமடையவில்லை.

ஈ. ஆகாஸும் விசுவாச விலக்கமும்.—விக்கிரகாராதனையின் செல்வாக்குகள் ஆகாஸின் ஆட்சியில் வெளிப்படையான பொதுவான விசுவாச விலக்கத்தில் முதிர்வடையும் வரையிலும் ஆழமாய் வேர் கொண்டன. பாகாலுக்கு பலிபீடங்களையும் சொரூபங்களையும் எல்லா இடங்களிலும் வைத்ததுடன் திருப்திப்படாத ஆகாஸ், “தன் குமாரர்களை முதலாய் தீக்கடக்கப் பண்ணினான்”;[3] அதாவது அவர்களை மோளேகு தெய்வத்திற்குப் பலி செலுத்தினார். ஒழுக்கச் சிதைவைத் தொடர்ந்து அரசியல் வீழ்ச்சி வந்தது. ஏதோமியர், பெலிஸ்தர், சீரியர், மற்றும் வீழ்ச்சியின் அருகாமையில் இப்பொழுது இருந்த இஸ்ரவேலராலும் கூட தொடர்ந்து துன்புறுத்தப்பட்டு ஆகாஸ், இப்பொழுது வல்லமையின் உச்சத்தில் இருந்த அசீரியாவுக்குத் திரளான கப்பம் செலுத்தி பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டார்.

2. எசேக்கியாவின் கீழ் எழுச்சி/உயிர்ப்பித்தல்.—*அ. ஏசாயாவும் சீர் திருத்தமும்.*—நமக்குக் கிடைத்துள்ள புத்தகங்களை எழுதிய யூதாவின் தொடக்க காலத் தீர்க்கதரிசிகளின் கால கட்டத்தை நாம் அடைந்துள் ளோம்: யோவேல், ஆமோஸ், மீகா, நாகூம் மற்றும் ஏசாயா. ஏசாயாவின் தீர்க்கதரிசன எழுத்துக்கள் “ஐந்தாம் சுவிசேஷம்” என்று அழைக்கப்படலாம், இவர் நான்கு (அரசர்களின்) ஆளுகை காலங்களின் பகுதிகளில் பிரசங்கித்து, ஆலோசனை அளித்து, தீர்க்கதரிசனம் உரைத்தார். இவரே எசேக்கியாவின் ஆளுகை காலத்தில் புகழ்மிக்கவராயிருந்தார். சொல்லப் போனால் இவரே யூதாவில் ஆசாரியரையும் அரசரையும் நிழலிடுகின்ற/மேல் கவிகின்ற முதல் தீர்க்கதரிசியாய் இருக்கின்றார். இஸ்ரவேலில் எலியா மற்றும் எலிசா ஆகிய இருவருமே தங்கள் வீரப்பண்பு ஆளுமைகளால் ஒப்பீட்டளவில் அரசர் களைக் குறுகியவர்களாக்கியிருந்தார்கள். யூதாவில் அது போன்ற இடத்தை நிரப்புவதில் ஏசாயா முதலாமவராயிருந்தார். அவர் ஒரு அரசியலாளா ராகவும் தீர்க்கதரிசியாகவும் இருந்தார், மற்றும் அவர் அரச அரண்மனையில்

அதிகம் காணப்பட்டார். அவரது எரிக்கும் வார்த்தைகள் ஆகாஸின் ஆட்சியில் தொலைந்து போனவைகளாய்க் காணப்பட்டாலும், கடைசியில் அவைகள் கனிகளைத் தந்தன. வடக்கு இராஜ்யமானது அசீரியாவுடனான தனது மரணப் போராட்டத்தில் இருக்கையில், ஏசாயாவின் ஆலோசனை யினால் ஏவப்பட்ட எசேக்கியா மத சீர்திருத்தங்களை மேம்படுத்தியதினால் யூதாவுக்கு வாழ்வின் ஒரு புது அனுபவத்தைக் கொடுத்தார். தாவீதின் நாட்களில் இருந்து, நோக்கத்தில் இவ்வளவு தூய்மையுடனும் தொடர்ந்து செயல்படுதலில் இவ்வளவு நிலைப்பாட்டுடனும் (எசேக்கியாவைப் போல) ஒரு அரசர் அது வரையிலும் அரியணையில் அமர்ந்ததில்லை. பொய்யான பாகால் வணக்கமும் பயங்கரமான மோளேகு சடங்காச்சாரங்களும் ஒழிக்கப்பட்டு யெகோவாவை வழிபட வழி திறக்கப்பட்டது. அவர் (எசேக்கியா) விக்கிரகாராதனையின் பொருளாய் மாறிப் போயிருந்த மோசேயின் வெண்கல சர்ப்பத்தை அழித்துப் போட்டார், மற்றும் எருசலே மில் பஸ்கா பண்டிகையை மீண்டும் நியமித்து, அந்தக் கொண்டாட்டத்தில் கலந்து கொள்ளும்படி இஸ்ரவேலில் எஞ்சியிருந்தவர்களுக்கு அழைப்பு விடுத்தார்.

ஆ. சனகெரிப்பின் படையெடுப்பு.—இந்த ஆளுகையின் போதுதான் அசீரியாவின் சனகெரிப் யூதாவின் மீது படையெடுத்து வந்தார். ஆகாஸ் அசீரியாவுக்குக் கப்பம் கட்டும்படியாயிற்று; ஆனால் எசேக்கியாவோ, ஏசாயாவின் அறிவுரைக்கு எதிராக அசீரியர்களுடன் உடன்படிக்கை செய்து கொள்வதற்குப் பதிலாக எகிப்தியருடன் உடன்படிக்கை செய்து கொண்டார், மற்றும் (அசீரியர்களுக்கு) கப்பம் கட்ட மறுத்தார். சனகெரிப் யூதாவின் மீது படையெடுத்து, பல நகரங்களைக் கைப்பற்றி, இரண்டு இலட்சம் பேரைப் பிடித்துக் கொண்டு போய், எருசலேமைக் கைப்பற்றி னார். அவர் பயமுறுத்தும் எகிப்தியப் படையெடுப்பாலும், விளக்கப்பட முடியாத சில பெருந்துன்பத்தினாலும் பின்னோக்கி இழுக்கப்பட்டு, ஒரே இரவில் ஒரு இலட்சத்து எண்பத்து ஐயாயிரம் மனிதர்களை இழந்து போனார். இந்த நிகழ்ச்சியைப் பற்றிய கவிதையொன்றின் தொடக்கத்தில் கவிஞர் பைரன் அவர்கள் பின்வருமாறு உரைத்தார்: "அசீரியர்கள் ஆட்டு மந்தையின்மீது ஓநாய்கள் போல வந்தனர்.'' நினிவேயில் இருந்த சனகெரிப்பின் கல்வெட்டுக்கள் அவரது வெற்றிகளை நினைவூட்டுகின்றன, ஆனால் இந்தத் துன்பத்தை அவை குறிப்பிடுவதில்லை, ஆயினும் ஹெரோ டோட்டஸ் இதைக் குறிப்பிடுகின்றார்.

III. மூன்றாம் வீழ்ச்சியும் எழுச்சியும்/ உயிர்ப்பித்தலும்.

மூன்று ஆளுகைகள், தொண்ணூறு ஆண்டுகள்.

1. மனாசே மற்றும் ஆமோன் ஆகியோரின் கீழ் வீழ்ச்சி.—எசேக்கியா மற்றும் ஏசாயா ஆகியோரின் சீர் திருத்தங்கள் தற்காலிகமானவைகளாய் மட்டுமே இருந்தன என்பது நிரூபிக்கப்பட்டது, இந்தக் காலம் முழுவதிலும் விக்கிரகாராதனைக்காரக் கூட்டம் ஒன்று அரண்மனையில் இருந்திருக்கும்

என்பதில் ஐயம் இல்லை. எசேக்கியாவின் மரணத்தின்போது இவர்கள் மீண்டும் கை ஓங்கினார்கள், ஐம்பத்து ஐந்து ஆண்டுகள் ஆட்சி செய்த அவரது மகன் மனாசேயின் கீழ் நாடானது முன் எப்போதும் இருந்திராத வகையில் கீழ் நோக்கிய சாலையில் மிக விரைவாய்ச் சென்றது. அறியப்பட்ட விக்கிரகாராதனைகள் யாவையும் மேற்கொள்ளப்பட்டன; பாகால் வழிபாடு, மோளேகு வழிபாடு, கல்தேயரின் விண்மீன் வழிபாடு, சூனியம், எருசலேமை இரத்தத்தினால் நிரப்பிய தீவிரமான துன்புறுத்தல் - இவை போன்றவை இந்த நீண்ட கால ஆட்சியின் குற்றங்களாய் இருந்தன. யூதத்துவப் பாரம்பரியம் நம்புதற்குரியது என்றால், இவ்வேளையில் தான் ஏசாயா இரத்த சாட்சியாக மரணம் அடைந்தார். பாபிலோனில் மனாசே தற்காலிகமாய்ச் சிறைப்பிடித்து வைக்கப்பட்டிருந்தது அவரைத் தெளிவு படுத்தி விக்கிரகாராதனையை இலேசாக கட்டுப்படுத்த உதவிற்று; ஆனால் அவரது மகன் ஆமோன் தமது தந்தையின் மிக மோசமான நடைமுறைகளை அப்படியே செய்து ஒரு புரட்சியில் அழிந்து போனார்.

2. யோசியாவின் கீழ் எழுச்சி/உயிர்ப்பித்தல்.—*அ. எரேமியாவும் சீர்திருத்தங்களும்.*—ஆமோனின் மரணம் எட்டு வயதுக் குழந்தையாய் இருந்த யோசியாவை அரியணைக்குக் கொண்டு வந்தது. அவரது முப்பத்தி ஒரு ஆண்டுகள் ஆட்சியானது அந்தச் சிறு இராஜ்யத்திற்கு சூரிய ஒளியின் கடைசிப் பிரகாசமாய் இருந்தது, அவர் இராஜரீக சீர்திருத்தவாதி என்ற வகையில் எசேக்கியாவுடன் மதிப்பிடப்படுகின்றார்; மற்றும் எரேமியா அவருக்கு உடனிருந்தது, ஏசாயா எசேக்கியாவுடன் இருந்தது போன்ற தாகவே கருதப்பட்டது, தொடக்க காலச் சீர்திருத்தங்கள் பெண் தீர்க்கதரிசி யான உல்தாள் என்பவளால் ஏவப்பட்டிருப்பினும், எரேமியாவின் மாபெரும் நடவடிக்கையானது யோசியாவின் மரணத்தைத் தொடர்ந்து வந்த இருள்மிக்க ஆண்டுகளில் இருந்தது. பதினாறாம் வயதில் யோசியா (நாட்டை ஆளும்) விஷயங்களைத் தனது கைகளில் எடுத்துக் கொண்டார் என்று காணப்படுகின்றது, மற்றும் அவர் தனிப்பட்ட வகையில் தேவனிடம் திரும்பினார்; அவர் தமது இருபதாம் வயதில் எருசலேமை அதன் விக்கிரகாராதனையிலிருந்து தூய்மைப்படுத்தினார்; இருபத்து ஆறாம் வயதில் அவர் ஆலயப் பழுது நீக்கும் பணியை மேற்கொண்டார். பழுது நீக்கும் பணியின்போது, நியாயப்பிரமாணத்தின் பிரதியொன்று கண்டு பிடிக்கப்பட்டது, இது மனாசேயின் நீண்ட இருளான ஆட்சிக் காலத்தின் போது தொலைந்து போயிருந்ததாகக் கண்டறியப்பட்டது. அதன் போதனைகளினாலும் பரிசுத்த எச்சரிக்கைகளினாலும் இன்னும் ஏவப்பட்ட அவர் (யோசியா) சாமுவேலின் நாட்களில் இருந்த பிரகார மாகவே பஸ்காவைக் கடைப்பிடித்தார். இப்பொழுது அசீரியா வீழ்ச்சி யடைந்து கொண்டிருந்தது, யோசியா தனது அரசு எல்லைகளை பத்து கோத்திரங்களின் எல்லைப் பகுதி வரையிலும் விரிவாக்கினார்; குறைந்த பட்சமாக அவர் பெத்தேலிலும் சமாரியாவின் பிறநகர்களிலும் இருந்த கன்றுக்குட்டி வணக்கத்தை நீக்கிப் போட்டு, சீர் திருத்தப் பணியை மேற்பார்வையிடுவதற்காக, தாமே நாடு முழுவதும் பயணம் சென்றார்.

ஆ. மெகிதோவில் யுத்தம்.—யோசியாவின் வளமிக்க ஆட்சியானது

பேரழிவான முடிவைக் கொண்டிருந்தது. மாபெரும் அசீரிய மற்றும் எகிப்தியப் பேரரசுகள் மீண்டும் யுத்தம் செய்து கொண்டன. பார்வோன் நேகோ, ஐப்பிராத்தின் மேல்பகுதியில் இருந்த கர்கேமீஸ் என்ற இடத்தைக் கைப்பற்றச் சென்று கொண்டிருந்தார். இதில் ஞானமற்ற வகையில் தலையிட்ட யோசியா மெகிதோவில் நடந்த யுத்தத்தில் உயிரிழந்தார். யோசியாவின் மரணம் யூதாவிற்குப் பெரும் வீழ்ச்சியாயிற்றென்பது நிரூபிக்கப்பட்டது. இவர் ''தாவீதின் வழிகளில் நடந்த''[4] கடைசி அரசராயிருந்தார், மற்றும் இன உடன்படிக்கைக்கு இவர் பற்றுறுதியுடன் நேர்மையுடன் இருந்தார். எரேமியாவின் புலம்பல் பெரிதாயிருந்தது, இப்புலம்பல் அந்த நல்ல அரசருக்கான இரங்கற் பாடல் ஒன்றில் வெளிப்பட்டது.

IV. *கடைசி வீழ்ச்சியும் சிறைப்படுதலும்/ பிடிக்கப்படுதலும்.*

1. ஒழுக்கச் சிதைவு.—யோசியாவின் சீர் திருத்தங்கள் பெருமளவுக்கு நாட்டின் உறுதிப்பாடுகளில் வேர் கொண்டிருக்கவில்லை என்பது தெளிவாயிருந்தது. மாறாக, அவைகள் ராஜரீக அதிகாரத்தினால் வலிந்து நடைமுறைப்படுத்தப்பட்டன, அந்த அதிகாரம் ஒழிந்துபோன உடனே அவை வீழ்ந்து போயின. எரேமியாவை மையமாகக் கொண்ட ஒரு சிறிய தேர்ந்து கொள்ளப்பட்ட குழு இருந்தது, அதில் தானியேலும் அவரது தோழர்களும் இருந்தனர், அவர்களே எதிர்கால இன வாழ்விற்கான கருவான உண்மை இஸ்ரவேலர்களாயிருந்தனர்; ஆனால் நாட்டின் மக்கள் குழுவானது நம்பிக்கையற்ற வகையில் மோசம் போயிருந்தது. நூறு ஆண்டுகளுக்கும் மேற்பட்ட காலத்திற்கு முன்பாகவே ஏசாயாவும் கூட, "ஐயோ, பாவமுள்ள ஜாதியும், அக்கிரமத்தால் பாரஞ் சுமந்த ஜனமும், பொல்லாதவர்களின் சந்ததியும், கேடு உண்டாக்குகிற புத்திரருமாயிருக்கிறார்கள்; கர்த்தரை விட்டு ... பின்வாங்கிப் போனார்கள் ... உள்ளங்கால் தொடங்கி உச்சந்தலை மட்டும் அதிலே சுகமேயில்லை; அது காயமும், வீக்கமும், நொதிக்கிற இரணமுமுள்ளது; அது சீழ் பிதுக்கப்படாமலும், கட்டப்படாமலும், எண்ணெயினால் ஆற்றப்படாமலும் இருக்கிறது" (ஏசா. *1:4-6*) என்று எழுதியிருந்தார். மற்றும் எரேமியாவின் எழுத்துக்கள் இந்த முடிவின் காலத்தின் முழுப்பகுதியும் ஆழமான இருளில் இருந்ததைக் காண்பிக்கின்றன. விக்கிரகாராதனை, குடி வெறி, பேராசை, இச்சை மற்றும் மிருகத்தனமான வன்முறை ஆகியவை குற்றங்களின் பண்புகளாயிருந்தன. இந்த ஒழுக்கச் சிதைவானது அரசியல் முடிவின் முன்னோடியாயிருந்தது.

2. அடிமைத்தனங்கள் வரிசையாய்த் தொடருதல்.—யோசியாவைத் தொடர்ந்து நான்கு அரசர்கள் ஆண்டனர்: யோவகாஸ், யோயாக்கீம், யோயாக்கீன், மற்றும் சிதேக்கியா. இவர்களில் மூன்றாமவர் யோசியா என்ற நல்ல அரசரின் பேரனாகவும் மற்றவர்கள் யோசியாவின் மகன்களாகவும் இருந்தார்கள். இவர்கள் யாவருமே எகிப்து அல்லது பாபிலோனின் கைபொம்மைகளாயிருந்தனர்; ஏனெனில் இந்தக் காலகட்டத்தின் முற்பகுதி

யில், பல நூற்றாண்டுகளாக மேற்கு ஆசியாவின்மீது அதிகாரம் செலுத்திய அசீரியாவின் பெருமைமிக்க தலை நகரான நினிவே, மேதியா மற்றும் பாபிலோன் ஆகியவற்றின் ஒன்றிணைந்த தாக்குதலில் மூழ்கிப் போயிற்று. அது முதல் பாபிலோனும் எகிப்தும் ஒரு திரிகையின் மேல் மற்றும் கீழ்[5] கற்களைப் போன்று இருக்க அவைகளுக்கிடையில் யூதா தூசியாக அரைக்கப்பட்டுப் போயிற்று. பார்வோன் நேகோயோவகாஸைச் சிறைப் பிடித்துக் கொண்டு, அவரது (யோவகாஸின்) சகோதரரான யோயாக்கீமை அரியணையில் அமர்த்தினார். ஆனால் பாபிலோன் ஆசியாவில் எகிப்தை ஒரு போட்டியாளராக சகித்துக் கொண்டிராது. பாபிலோனின் வல்லமை மிகுந்த அரசரான நேபுகாத்நேச்சாரினால் தொடர்ந்து நடத்தப்பட்ட படையெடுப்புக்களும் சிறையிருப்பிற்கு பிடித்துச் செல்லுதலும் இந்த நாடகத்தை முடித்து வைக்கின்றன.

அ. முதல் சிறையிருப்பு.—அவர் (கி.மு. 606ல்) எருசலேமைக் கைப்பற்றினார், ஆனால் யோயாக்கீம் அரசரை விட்டு விட்டு குறிப்பிட்ட சில மக்களைச் சிறைப்பிடித்துச் சென்றதுடன் திருப்தியடைந்தார், அம்மக்களில் தானியேல், சாத்ராக், மேஷாக் மற்றும் ஆபேத்-நேகோ ஆகியோர் இருந்தார்கள். அவர்கள் அரச குல இரத்தத்தில் உதித்த இளவரசர்களாகவும், நாட்டின் மதத்தின்மீது பற்றுறுதிமிக்கவர்களாகவும் இருந்தபடியால் அவர்களை நாட்டை விட்டு வெளியேறச் செய்ததில் (யோயாக்கீம்) அரசர் மகிழ்ந்திருப்பார் என்பதில் சந்தேகம் இல்லை. அவர் பதினோறு ஆண்டுகள் ஆட்சி செய்த பிறகு கொடூரமான/வன்முறையான வகையில் மரணமடைந்தார்.

ஆ. இரண்டாம் சிறையிருப்பு.—கி.மு. 597ல் நேபுகாத்நேச்சார் இரண்டாம் முறை படையெடுப்பை நடத்தினார். அவர் அரசராயிருந்த யோயாக்கீனைச் சிறைப்பிடித்துச் சென்றார், அவர் (யோயாக்கீன்) முப்பத்தி ஐந்து ஆண்டுகள் சிறைப்பட்டிருந்தார். அதே வேளையில் பிரபுக்களின் குலத்தைச் சேர்ந்த பத்தாயிரம் பேருடன் எசேக்கியேல் தீர்க்கதரிசியும் அடிமைத்தனத்தில் (பாபிலோனுக்கு) இழுத்துச் செல்லப்பட்டார். சிதேக்கியா அரியணையில் அமர்த்தப்பட்டார், அவர் ஐப்பிராத்தின் மாபெரும் முடியரசரின் கீழ் ஒரு சிறு பூச்சியாக பதினோறு ஆண்டுகள் ஆட்சி செய்தார்.

இ. மூன்றாம் சிறையிருப்பு.—இந்தக் காலம் எல்லாவற்றிலும் பாபிலோனிய நுகத்தின் கீழ் போரடித்த எகிப்தியக் குழு ஒன்று எருசலேமில் இருந்தது, அது எகிப்துடன் ஒரு இணைவை/ஒப்பந்தத்தை ஆதரித்துக் கொண்டிருந்தது. நாடானது பாபிலோனிய அடிமைத்தனத்தின் கீழ் எழுபது ஆண்டுகள் இருக்கும் என்ற தேவனுடைய நியாயத்தீர்ப்பை அறிவித்த எரேமியா, அந்த வல்லமைக்கு/அதிகாரத்திற்குக் கீழ்ப்பட்டிருக்கும்படி ஆலோசனை அளித்தார். இதற்காக அவர் அருவருப்பான பாதாள அறையில் சிறை வைக்கப்பட்டார். குறைந்தபட்சம் சில புதிய கலகக்காரர்கள் யூதாவுக்கெதிராக மீண்டும் ஒருமுறை நேபுகாத்நேச்சாரின் படைகளைக் கொண்டு வந்தார்கள். கி.மு. 586ல், சலிப்பூட்டும் முற்றுகையொன்றிற்குப் பின் அவர் எருசலேமைச் சிறைப்பிடித்து, சிதேக்கியாவின் மகன்களை அவர்

கண்களுக்கு முன்பாகவே கொல்லச் செய்து அவரது கண்களைப் பறித்து, (வெண்கல) விலங்கிட்டு அவரைப் பாபிலோனுக்கு இழுத்துச் சென்றார். நகரத்தின் மதில்கள் இடித்துத் தள்ளப்பட்டன, ஆலயமும் அரண்மனை களும் தீக்கிரையாக்கப்பட்டன, மற்றும் உயர்குடி மக்கள் சிறையிருப்பிற்கு கொண்டு செல்லப்பட்டனர். எழுபது ஆண்டுகள் சிறையிருப்பில் பரிசுத்த நகருக்கான ஏக்கத்துடனும், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட திரும்புதலுக் கான ஆவலுடனும் காத்திருந்த விசுவாசமிக்க ஒரு சிலரின் இருதயங்களில் இருந்ததைத் தவிர தாவீதின் நகரும், விலைமதிப்பற்ற நினைவுகளின் நகருமான எருசலேம் இருந்த சுவடே இல்லாது ஒழிந்தது.

குறிப்புகள்

[1]எபிரெய வரலாறு பற்றிய விவரமான மற்றும் முழுமையான படிப்பு எதிலும் தீர்க்கதரிசன எழுத்துக்கள் படிக்கப்பட்டாக வேண்டும். இவைகள் அந்த நாட்டின் பொருள் சார்ந்த, ஒழுக்கம் சார்ந்த, சமூகம் சார்ந்த மற்றும் அரசியல் சார்ந்த நிலைகளின் மீது வெளிச்ச வெள்ளத்தை வீசுகின்றன. அநேகமாக, சிறையிருப்புக்குப் பிற்பாடு எஸ்றாவினால் எழுதப்பட்ட நாளாகமங்கள் தாவீது மற்றும் அவரது வம்சத்தவரின் வரலாறாக உள்ளது என்பது குறிப்பிடத் தக்கதாக இருக்கிறது. சவுலின் ஆளுகையும் வடக்கு இராஜ்யத்தின் வரலாறும் ஏறக்குறைய முற்றிலுமாக ஒதுக்கப்பட்டு உள்ளது. [2]See Edersheim, "Hist. of Israel and Judah," Vol. V., pp. 129, 130. [3]*2 இரா. 16:3.* [4]*2 இரா. 22:2.* [5]இவ்விடத்தில் டீன் "nether" என்று எழுதியிருந்தார்.

11

சிறையிருப்பின் காலம், கி.மு. 586–536

எருசலேமின் வீழ்ச்சியிலிருந்து செருபாபேலின் கீழ் திரும்பி வந்தது வரை

அறிமுகம் —மறுகண்ணோட்டமும் தொகுப்புரையும்.—இப்பொழுது நாம் மனிதனின் மற்றும் பாவத்தின் வரலாறு, மீட்பின் தொடக்க கால நிலைகள் ஆகியவற்றை அடையாளம் கண்டுள்ளோம். தேர்ந்தெடுக்கப் பட்ட மக்களின் பதினைந்து நூற்றாண்டுகள் அளவான நற்பேறுகளை, ஆபிரகாமின் அழைப்பு முதல் பின்வரும் தொடர்ந்த காலங்கள் வரை: முற்பிதாக்கள், அடிமைத்தனம், அலைந்து திரிதல்கள், வெற்றி கொள்ளுதல், நியாயாதிபதிகள், ஒன்றிணைந்த இராஜ்யம், இரட்டை இராஜ்யம், மற்றும் தனியாக யூதா மட்டும் பின் தொடர்ந்து கண்டோம். தாவீது மற்றும் சாலொமோனின் நாட்களில் இன வாழ்வின் மகிமையுள்ள எழுச்சியையும் அதைத் தொடர்ந்த பிரிவினை மற்றும் வீழ்ச்சியையும் நாம் கண்டுள்ளோம்.

வடக்கு இராஜ்யமானது அரசியல் இருட்டிலும் ஆவிக்குரிய இருளிலும் கீழாகச் சென்றுள்ளது. யூதாவோ, நூற்று நாற்பது ஆண்டுகளுக்கும் அதிகமாக தகுதி வாய்ந்த வாழ்வுக்குப் பின்பு முறிந்து போகின்றது, எருசலேம் சிதிலங்களாகின்றது, அரசரும் மக்களும் எழுநூறு மைல்கள் தொலைவில் இருந்த பாபிலோனுக்கு நம்பிக்கையற்ற சிறையிருப்பிற்கு இழுத்துச் செல்லப்படுகின்றனர். எவ்விடத்திலும் மிருகத்தனமும், முழுமை யான மூட நம்பிக்கையும் விக்கிரகாராதனையும் வெற்றி முழக்கமிட்டுக் கொண்டுள்ளது. மனிதனுக்குத் தோன்றுகின்ற (கருத்துக்கள்) யாவற்றிலும் மனித மீட்புக்கான பரிசோதனையானது தோல்வியாகவே உள்ளது; தேவனைப் பற்றிய அறிவானது என்றென்றைக்குமாக ஒழிந்து போயிற்று. ஆனால் இது பரிசோதனையாக இருக்கவில்லை. இருள்மிக்க இரவிலிருந்து நம்பிக்கையின் விண்மீன் எழும்பிற்று. வடக்கு இராஜ்யத்தின் வீழ்ச்சிக்குப் பிறகு, யூதாவின் வீழ்ச்சி மற்றும் யூதா நாடு கடத்தப்பட்ட நிகழ்ச்சி ஆகியவற்றின் போது, மீகா, ஏசாயா, எரேமியா, தானியேல் மற்றும் சகரியா போன்ற தீர்க்கதரிசிகள், கிறிஸ்து உலகளாவிய தம்முடைய ஆவிக்குரிய ஆளுகையைச் செய்வதற்காக வர இருந்தது பற்றிய தங்களின் மிக மேன்மையான தீர்க்கதரிசனங்களை எழுதினார்கள். எபிரெயர்மீது தேவனு டைய ஆளுகை என்பது ஒரு முட்புதர் போன்றதாகவே இருந்தது என்பதும் அதிலிருந்து ஒரு தூய்மையான ஆவிக்குரிய இராஜ்யமானது முழுமையாக

மலர்ந்து கனி தர வேண்டும் என்பதும் மங்கலாக உணரப்பட்டதாக இருக்கத் தொடங்குகின்றது. மலர் மலரும் வரையில் முட்புதர் நிலை நின்றாக வேண்டும். எனவே, யூதா நாடு கடத்தப்பட்டு சிதறடிக்கப் பட்டிருந்தாலும், ஒரு திரும்புதல் நிலையும் இன வாழ்வின் புதுப்பித்தலும் இருக்க வேண்டும்.

ஏசாயா, மீகா, உல்தாள் மற்றும் எரேமியா போன்ற தீர்க்கதரிசிகளினால் அடிமைத்தனம் பற்றிய விஷயங்கள் மீண்டும் மீண்டும் முன்னுரைக்கப் பட்டன.[1] இந்த தீர்க்கதரிசனங்கள் நேபுகாத்நேச்சார் அறியாத நிலை யிலேயே, அவர் எருசலேமின்மீது மேற்கொண்ட தொடர்ந்த படை யெடுப்புக்கள், யூத மக்களை (பாபிலோனுக்கு) கொண்டு செல்லுதல் ஆகியவற்றினால் நிறைவேற்றப்பட்டன.

1. எரேமியாவும் எகிப்துக்கு நாடு கடத்தப்படுதலும் (2 இரா. 25:22-26; எரே. 40-44).—எருசலேமின் அழிவுக்குப் பிறகு எஞ்சியிருந்த குறைவான மக்கள் உழவுத் தொழிலாளர்களாகவும் திராட்சத் தோட்டப் பராமரிப் பாளர்களாகவும் இருப்பதற்கென்று விட்டுச் செல்லப்பட்டனர். எரேமியா பாபிலோனுக்குப் பத்திரமாய் நடத்திச் செல்லப்படுவதற்கு இணங்காமல், தாம் நேசித்த நாட்டின் சேதாரங்களுக்கு மத்தியில் உலாவி வருதலையே தேர்ந்து கொள்கின்றார். ஆனால் எஞ்சியிருந்த மக்கள் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொள்கின்றனர், அவர்களின் ஆளுநராயிருந்த கெதலியா, இஸ்மவேல் என்பவரின் கீழ் செயல்பட்ட யூத குல சூழ்ச்சியாளர்களின் கும்பலினால் கொல்லப்பட்டார். எஞ்சியிருந்தவர்கள் நேபுகாத்நேச்சாரின் பழி வாங்குதலுக்குப் பயந்தவர்களாய் யோகனானின் வழிநடத்துதலின் கீழ் எகிப்துக்குத் தப்பி ஓடுகின்றார்கள். எகிப்துக்குத் தப்பியோடுதலை எரேமியா ஊக்கத்துடன் மறுத்தார், ஆனால் தாம் நேசித்த பழமையான நாட்டை விட்டுப் புறப்படும்படி வற்புறுத்தப்பட்டு, எகிப்துக்கு கடந்து சென்றவர்களுடன் இணைந்து கொள்கின்றார். அங்கு எல்லைப் புற நகரான தக்பானேஸில் இம்மாபெரும் தீர்க்கதரிசி தமது கடைசி தீர்க்கதரிசனத்தை எழுதினார். தொடக்க காலக் கிறிஸ்தவப் பாரம்பரிய வரலாற்றின்படி, அவர் தம்முடன் எகிப்துக்கு நாடு கடந்து வந்திருந்தவர்களாலேயே கொலை செய்யப்பட்டு இரத்த சாட்சியாக மரித்தார் என்பதாகக் கூறப்படுகின்றது; யூதப் பாரம்பரியத்தின்படி, அவர் எகிப்திலிருந்து தப்பி பாபிலோனுக்குச் சென்றதாகக் கூறப்படுகின்றது. ஆனால் ஏசாயா, எசேக்கியேல், தானியேல், பேதுரு, பவுல் மற்றும் யோவான் போன்றவர்களின் மற்ற பல விஷயங்களில் போலவே இவரது விஷயத்திலும் இவரின் எழுத்துக்களினால் வளமூட்டப் பட்டுள்ள வேத வசனங்கள் இவரது வாழ்க்கையின் முடிவுக் காட்சிகள் குறித்து மவுனமாயிருக்கின்றன. எகிப்திலிருந்து இவர் நாடு கடந்து வந்ததாக எந்த விவரமும் இருப்பதில்லை.

2. தானியேலும் பாபிலோனில் முதன் முறை சிறைப்படுதலும் *(2 இரா. 24:1; 2 நாளா. 36:5-8; தானி. 1-12).*—நேபுகாத் நேச்சார், யூதாவின்மீது மூன்று முறை படையெடுத்தார் என்று நாம் கண்டுள்ளோம். முதல் படையெடுப்பில் (கி.மு. 606), அவர் அரச வம்சத்தின் அழகும் அறிவும்மிக்க நான்கு வாலிபர்களை - தானியேல், சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ

ஆகியோரை - பிடித்துக் கொண்டு சென்றார். அவர்கள் அரசரின் அரண்மனையில் கனத்திற்குரிய வகையில் கல்வி புகட்டப்பட்டனர், ஆனால் சீக்கிரமே அவர்கள் பாபிலோனிய ஆடம்பரம், மற்றும் பாபிலோனிய விக்கிரகாராதனை ஆகியவற்றிற்கு எதிராக தங்களின் மாண்புமிக்க நிலைப்பாட்டினை வித்தியாசப்படுத்தி/சிறப்பு படுத்திக் காண்பித்தனர்.

அ. நேபுகாத்நேச்சாரின் கனவு.—பொன்னால் ஆன தலையும், வெள்ளியால் ஆன மார்பும், வெண்கலத்தால் ஆன தொடையும் இரும்பால் ஆன கால்களும் கொண்டதாக நேபுகாத்நேச்சாரின் கனவில் வந்த சிலை பற்றிய விளக்கம் கூறியதினால் தானியேல் முதன்முதலாகக் கவனத்திற்கு வந்தார். தானியேலினால் விளக்கப்பட்டபடி, தலை நேபுகாத்நேச்சாரையும் பாபிலோன் பேரரசையும் குறித்தது; மற்ற பாகங்கள் அவருடைய இராஜ்யத்தை தொடர்ந்து வந்த மாபெரும் பேரரசுகளைக் குறித்தன.

ஆ. நெருப்பின் நடுவில் மூன்று பேர்.—நேபுகாத்நேச்சார் தமது கனவிற்குப் பிறகு பெருமையும் மேட்டிமையும் கொண்டார். அவர் ஒரு பெரிய உருவச்சிலையை அமைத்து, ஒவ்வொரு மனிதரும் அதற்கு முன்பாக விழுந்து வணங்க வேண்டும் என்று ஆணையிட்டார். சாத்ராக், மேஷாக், ஆபேத் நேகோ ஆகியோர் தங்கள் உறுதிப்பாடுகளில் தைரியத்துடன் இருந்து (அவ்வாறு வணங்க) மறுத்து விட்டார்கள். அதற்குத் தண்டனை யாக அவர்கள் அக்கினிச் சூளையில் போடப்பட்டார்கள், ஆனால் அற்புத விதமாகப் பாதுகாக்கப்பட்டார்கள்.

இ. தானியேலின் தரிசனங்கள்.—தொடர்ந்து வர இருந்த உலகப் பேரரசுகள் பற்றி தானியேல் தாமே தரிசனங்கள் பலவற்றைக் கண்டிருந்தார்: பாபிலோனியர், பெர்சியர், மெக்கதோனியர், ரோமர் மற்றும் பூமி முழுவதும் நிரம்பி என்றென்றும் நிலைத்து நிற்குமாறு தேவன் அமைக்கவிருந்த ஒரு இராஜ்யம்.

ஈ. சிங்கக் குகையில் தானியேல்.—பெர்சியாவின் வல்லமையின் எழுச்சிக்கு முன்பாகப் பாபிலோன் கீழே தாழ்ந்து சென்றதைக் காண்பதற்கு தானியேல் உயிருடன் வாழ்ந்தார். அவரது கட்டளையிடும் வல்லமைகள் பெர்ஸிய அரண்மனையாட்களுக்குப் பொறாமையைத் தூண்டி விட்டது, மற்றும் அன்றாட ஜெபத்தில் அவர் கொண்டிருந்த தேவ நம்பிக்கை யினிமித்தம் அவரை அவர்கள் சிங்கங்களுக்கு இரையாக வீசியெறிந்தார்கள், ஆனால் (தேவனுடைய) அருளிரக்கத்தினால் அவர் பாதுகாக்கப்பட்டார்.

3. எசேக்கியேலும் பாபிலோனில் இரண்டாம் முறை சிறைப்படுதலும் *(2 இரா. 24:8-16; 2 நாளா. 36:9, 10; எசே. 1:1, 2).*—நேபுகாத்நேச்சார், தமது இரண்டாம் படையெடுப்பின் போது (கி.மு. சுமார் 597), பத்தாயிரம் பேரை அடிமைகளாய்ப் பிடித்துக் கொண்டு சென்றார், எசேக்கியேல் தீர்க்கதரிசி யும் அவர்களில் இருந்தார். அவர்கள் கேபார் ஆற்றங்கரையில் குடியமர்ந் தார்கள், அந்த ஆறு பாபிலோனுக்கும் முன்னூறு மைல்கள் மேல் பகுதியில் ஐப்பிராத்து நதியுடன் கலந்தது, அவர்களின் மத்தியில் விரைவில் நாடு திரும்புவோம் என்று வாக்குறுதி அளித்த கள்ளத் தீர்க்கதரிசிகள் எழும்பி னார்கள். எருசலேமில் இருந்த எரேமியா ஒரு கடிதத்தை அவர்களுக்கு

எழுதினார், அதில் அவர், சிறையிருப்பு (முதல் முறை கி.மு. 606ல் நாடு விட்டுச் சென்றதிலிருந்து தொடர்ந்து) அடுத்து வரும் எழுபது ஆண்டு களுக்கு நீடிக்கும் என்று கூறினார், மற்றும் அங்கே அவர்கள் வீடுகட்டி, தோட்டம் நாட்டியிருக்கும்படி ஆலோசனை அளித்தார் (எரே. 29). எசேக்கியேல் புத்தகத்தின் பிரதான பகுதிகளைத் தந்த தரிசனங்களை அவர் கேபார் நதியண்டையில் தான் கண்டு எழுதினார்; இந்தக் காலகட்டத்தில் தான் "பாபிலோன் ஆறுகளின் அருகே" என்று தொடங்கும் 137ம் சங்கீதம் எழுதப்பட்டது.

குறிப்பு

[1]*2 இரா. 20:17; 21:10-15; 22:14-17; எரே. 25:9-11; 34:2, 3; மீகா. 3:8-12ஐக் காணவும்.*

12

சிறையிருப்பிற்கு பிந்திய காலம், கி.மு. 536–400

செருபாபேலின் கீழ் திரும்பி வந்ததிலிருந்து பழைய ஏற்பாட்டு நியதியின் முடிவு வரை

பாபிலோனிய சிறையிருப்பைப்பற்றி முன்னுரைக்கப்பட்டது போலவே, சிறையிருப்பிலிருந்து மீண்டும் திரும்பி வருதல் பற்றியும் தனிச்சிறந்த வகையில் முன்னுரைக்கப்பட்டிருந்தது; மற்றும் திரும்பி வருதல் என்பது பாபிலோனின் வீழ்ச்சியுடன் பொதுவாக இணைக்கப்பட்டிருந்தது (இ.வ. ஏசா. 13, 14; எரே. 25:12; 50:51 முதலியன; தானி 9:1, 2). சிறையிருப்பு எழுபது ஆண்டுகள் நீண்டிருக்கும் என்று எரேமியா தீர்க்கதரிசனம் கூறியது கவனிக்கப்படும். சிறையிருப்பில் இருந்து (இஸ்ரவேல்) இனத்தின் இந்தத் திரும்புதலானது ஒரு தனிச்சிறந்த உண்மையாக உள்ளது; வரலாற்றில் இது போன்ற நிகழ்ச்சி வேறெதுவும் இல்லை. திரும்பி வருதலில் மூன்று தெளிவுள்ள காலகட்டங்கள் இருந்தன.

1. செருபாபேலின் கீழ் திரும்பி வருதல் *(கி.மு. 536. தானி. 9; எஸ்றா 1-6).*—சிறையிருப்பின் எழுபது ஆண்டுகள் முடிந்து போயிருந்ததென்று தீர்க்கதரிசனத்தில் இருந்து அறிந்த தானியேல், தமது மக்களுக்காகத் தேவனை நோக்கி ஊக்கத்துடன் ஜெபத்தை ஏறெடுத்தார். பாபிலோனை வெற்றி கொண்டு பெர்ஸியப் பேரரசைத் தோற்றுவித்தவரான மகா கோரேஸ், ஒருவேளை தானியேலினால் செல்வாக்குச் செலுத்தப்பட்டு, யூதர்கள் பலஸ்தீனத்திற்குத் திரும்பும்படி ஆணை ஒன்றைப் பிறப்பித்தார். அரச வம்சத்துப் பிரபுக்களில் ஒருவரான செருபாபேல், சுமார் ஐம்பதாயிரம் பேர் கொண்ட முதல் குழுவை (எருசலேமுக்கு) தலைமையேற்று அழைத்துச் சென்றார். அவர்கள், நேபுகாத்நேச்சார் எடுத்து வந்திருந்த (எருசலேம்) தேவாலயத்துத் தட்டுமுட்டுப் பொருள்களை மீண்டும் எடுத்துக் கொண்டு சென்றார்கள். அவர்கள் (தேவாலயம் இருந்த) பழைய இடத்திலேயே உடனடியாக பலிபீடம் ஒன்றைக் கட்டி, அதன் பின் விரைவிலேயே, இளைஞர்களின் பாராட்டுதல்கள் மற்றும் முதல் தேவாலயத்தின் உன்னத தன்மையைக் கண்டிருந்த முதியவர்களின் கண்ணீர்கள் ஆகியவற்றின் மத்தியில் இரண்டாம் ஆலயத்திற்கான அஸ்திபாரங்கள் இடப்பட்டன.

அந்த வேலையில் தாங்களும் சேர்ந்து கொள்ள சமாரியர்கள் அனுமதி கேட்டார்கள். கலப்பின மக்கள் கூட்டம் மற்றும் அவர்களின் இழிநிலை யான மதம் ஆகியவற்றுடன் உடன்பாடு ஏற்படுத்துவதால் விளையும் செயல்விளைவுகளுக்குப் பயந்த செருபாபேல் அந்தக் கோரிக்கைக்கு இணங்க மறுத்து விட்டார். பிறகு சமாரியர்கள் அந்த வேலையை நிறுத்துவதற்கு பெர்ஸிய அரண்மனையில் தங்கள் செல்வாக்கைப் பயன் படுத்தினார்கள். பதினாறு ஆண்டுகள் அளவாக அவ்வேலையானது தடைப்பட்டு நின்றது. சமாரியர்களிடமிருந்து தொடர்ந்து தொந்தரவுகள் இருந்திருப்பினும் கடைசியில் தீர்க்கதரிசிகளான ஆகாய் மற்றும் சகரியா ஆகியோரின் ஏவுதலின் பேரில் வேலை முடிக்கப்பட்டது. இந்தக் கால வேளை தொடங்கி கிறிஸ்துவின் கால வேளை வரைக்கும் யூதர்களுக்கும் சமாரியர்களுக்கும் இடையில் ஒரு கசப்பான உள் சண்டை தொடர்ந்து இருந்து வந்தது.

2. எஸ்தர் அரசியின் வரலாறு *(எஸ்தர் 1-10).*—எஸ்தரின் புத்தகத்தில் எடுத்துரைக்கப்பட்ட நிகழ்ச்சிகள் முதலாம் மற்றும் இரண்டாம் திரும்புதல்களுக்கு இடைப்பட்ட காலத்தின் ஏதோ ஒரு பகுதியில் நடைபெற்றன. கிரேக்க மற்றும் பெர்ஸிய வரலாற்றின் சஷ்டா(க்களில் ஒருவராயிருக்கலாம் என்று எண்ணப்படக் கூடிய)வான அகாஸ்வேரு (தன் மனைவியான) வஸ்தியின்மீது பிரியம் அற்றுப் போய் அவளை விவாக இரத்துச் செய்கின்றார். அவர் யூத குலத்தின் அழகிய இளம் மங்கையான எஸ்தரை அவளது குலம் பற்றிய விவரம் அறியாமலேயே திருமணம் செய்து கொள்கின்றார். பெர்ஸிய அரண்மனையில் இருந்த ஆமான் என்பவர் தனக்குப் புதிதாய்க் கிடைத்திருந்த பதவி உயர்வினால் மேட்டிமை அடைந்திருந்தார், ஆனாலும் எஸ்தரின் சிறிய தகப்பனாயிருந்த மொர்தெகாய் தன்னை வணங்காததினால் எரிச்சல் அடைந்து பேரரசு முழுவதிலுமிருந்த யூதர்களை அழிக்கத் திட்டமிடுகின்றார். அந்த உத்தர வுக்கு அகாஸ்வேரு அறியாத நிலையிலேயே சம்மதம் தெரிவிக்கின்றார். எஸ்தர் தனது உயிரைப் பணயம் வைத்து, தனது மக்களுக்காக வேண்டுகோள் விடுப்பதற்கு அரசரின் சமூகத்தில் அழைக்கப்படாமலேயே சட்டத்திற்குப் புறம்பாக தைரியமாய் வந்து நிற்கின்றாள். அவளது வேண்டுகோள் ஏற்கப்படுகின்றது, மற்றும் ஆமான் தான் மொர்தெகாய்க் காகச் செய்வித்திருந்த தூக்கு மரத்திலேயே தூக்கில் இடப்பட்டான்.

3. எஸ்றாவின் கீழ் திரும்பி வருதலும் சீர்திருத்தங்களும் *(கி.மு. 458. எஸ்றா 7-10).*—செருபாபேலின் கீழ் திரும்பி வந்து சுமார் எண்பது ஆண்டுகள் ஆன பின்பு, யூத ஆசாரியரான எஸ்றா, ஏழாயிரம் பேர் கொண்ட ஒரு சிறு குழுவை எருசலேமுக்குத் திரும்ப அழைத்து வந்தார். (இந்தக் காலகட்டத்தில்) செருபாபேலின் உடன் வேலைக்காரர்களில் பெரும் பாலானோர் இறந்திருக்க வேண்டும். யூதர்கள் சமாரியர்களுடன் கலப்புத் திருமணம் செய்து மோசேயின் நியாயாப்பிரமாணத்தைப் புறக்கணித்திருந் ததைக் கண்ட எஸ்றா மனத்துயரடைந்தார். அவர் தவறான பயன் பாடுகளைச் சீர்திருத்தி பழைய ஏற்பாட்டு எழுத்துக்களை (மீண்டும்) முறைப்படிப் பதிப்பித்தார். அநேகமாக இந்த வேளையில் தான் ஜெப ஆலய

ஊழியங்கள் வேத வசனங்களின் அறிவுறுத்தலுக்கிணங்க மேன்மையான வகையில் ஏற்படுத்தப்பட்டன என்று கூறலாம்.

4. நெகேமியாவின் திரும்புதல் *(கி.மு. 445. நெகே. 1-13).—யூதர்களில் பெரும்பகுதியினர் திரும்பி வரவில்லை, ஆனால் அவர்கள் பெரும் எண்ணிக்கையில் பேரரசு முழுவதிலும் சிதறியிருந்தனர் என்பதை எஸ்தரின் வரலாறு காண்பிக்கின்றது. சிதறியிருந்த இந்த யூதர்களின் மத்தியில் நெகேமியா இருந்தார். அவர், அரசரான அர்த்தசஷ்டா லாங்கிமனஸ் என்பவருக்கு பானம் தருபவர் என்ற மதிப்பிற்குரிய பதவியில் இருந்தார். அண்மையில் சூஸான் (சூஸா) நகருக்கு வந்து சேர்ந்திருந்த யூதர்களின் கூட்டமொன்றின் மூலம் அவர் எருசலேமின் கைவிடப்பட்ட மற்றும் பாதுகாப்பற்ற நிலை குறித்து அறிந்தார். அவர் அரசரிடத்தில், தாம் எருசலேமுக்குச் செல்லவும் அதன் மதில்களைக் கட்டவும் அனுமதி கேட்டார். (எருசலேம் இருந்த) மாகாணத்தின் ஆளுநர் என்ற நியமனத்தை அரசரிடமிருந்து பெற்றுக் கொண்ட நெகேமியா யூதேயாவுக்குச் சென்றார். சமாரியர்களிடமிருந்து இடைவிடாது வந்த பயமுறுத்துதல்களின் தொந்தரவுக்கு முன்பாகவும் கூட அவர், ஒரு கையில் பட்டயமும் ஒரு கையில் பணிமுட்டுமாக மனிதர்கள் வேலை செய்த நிலையிலும் கூட ஐம்பத்தியிரண்டு நாட்களில் (எருசலேமின்) மதில்களைக் கட்டும் வேலை முடியத்தக்கதாக அப்படிப்பட்ட தைரியத்துடனும் பலத்துடனும் வேலையை நடப்பித்தார். யூதர்களுக்கு ஆளுநராகப் பன்னிரெண்டு ஆண்டுகள் பணியாற்றிய நெகேமியா வறுமைப்படுத்தப்பட்ட மக்களின் சுமைகளை இலகுவாக்கும் வகையில் தமது பணியாளர்களின் குடும்பங்களுக்குத் தமது சொந்த செலவிலேயே பெருந்தன்மையாகப் பராமரிப்பு அளித்தார். பின்பு அவர் பெர்ஸியாவுக்குத் திரும்பினார், ஆனால் பிற்பாடு மீண்டும் எருசலேமுக்குத் திரும்பி, அங்கு ஊடுருவியிருந்த/உட்புகுந்திருந்த கலப்புத் திருமணங்கள், ஓய்வுநாள் மீறுதல்கள் மற்றும் பிற தவறான பயன்பாடுகள் ஆகியவற்றைத் திருத்தினார்.*

5. கடைசி தீர்க்கதரிசி மற்றும் பழைய ஏற்பாட்டின் முடிவு.*—நெகேமியாவின் காலத்தில் அல்லது அதன் பிறகு விரைவில் மல்கியாவினால் எபிரெயத் தீர்க்கதரிசனத்தின் கடைசிக் குறிப்பு உரைக்கப்பட்டது. அவர் ஆசாரியர்களை திருமண உடன்படிக்கையை மீறியதற்காகவும், மக்களை மதத்தில் அவர்கள் கடைப்பிடித்த (வெறுமையான) சடங்காச்சாரங்களுக்காகவும் கடிந்து கொண்டார், மற்றும் அவர் மேசியாவின் முன்னோடியும், புதிய ஏற்பாட்டு யோவான் ஸ்நானன் என்ற "எலியா தீர்க்கதரிசி"யுமானவர் பற்றிய தீர்க்கதரிசனத்தையும் பழைய ஏற்பாட்டு நியதியை/சட்ட நூல்களை தக்க வகையில் முடித்து வைக்கின்றார்.*

6. பரிசுத்த வரலாற்றில் ஒரு இடைவேளை.*—இவ்விதமாகப் பழைய ஏற்பாட்டு வரலாற்றின் தொகுதி முடிவடைகின்றது. நானூறு ஆண்டுகள் அளவாக தீர்க்கதரிசனத்தின் குரலானது அமைதியாய் இருக்கிறது. தேர்ந்து கொள்ளப்பட்ட மக்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நாட்டில் மீண்டுமாக வாழ்கின்றனர், ஆனால் பரந்துபட்ட பேரரசுகளின் ஒரு சிறு துணுக்காக மட்டுமே அவர்கள் இருக்கின்றனர், அவர்கள் ஒரு சுதந்திரமான*

நாட்டவராய் இராது போயினர். அவர்கள் ஐந்நூறு ஆண்டுகளாக அரசியல் வாழ்வில் அதிகம் துன்புற்று, பெர்ஸியர், மெக்கதோனியர், ரோமர் ஆகியோருக்கு வரிசையாக அடிமைப்பட்டு, காத்திருந்தனர் மற்றும் மக்கபேயர்களின் கீழ் அவர்கள் தங்கள் நாட்டுக்கான ஒரு சிறிய ஒளிக்கீற்றைப் பெற்றனர். ஆனால் அரசியல் சுதந்திரத்தின் மீதான கிரகணம் அவர்களின் நாட்டு/இனத் தூய்மையை வலுப்படுத்த மட்டுமே பயன்பட்டது. கிறிஸ்துவுக்கு முந்திய நானூறு ஆண்டுகளில் யூதர்கள் வேறெந்தத் தவறு செய்திருந்தாலும், விக்கிரகாராதனை என்பது அவற்றில் ஒன்றாக இருந்ததே இல்லை. சிறையிருப்பின் கீழ் ஒழுங்கு படுத்தப்பட்டது, தானியேல் மற்றும் அவரது கூட்டாளிகளின்/தோழர்களின் மாண்புமிக்க உதாரணம் மற்றும் எஸ்றா, நெகேமியா ஆகியோரின் ஊழியம் போன்றவை அதை (விக்கிரகாராதனையை) என்றென்றைக்குமாக அவர்களிடமிருந்து நீக்கிப் போட்டு அவர்களைக் குணப்படுத்தியிருந்தன. பலம் வாய்ந்த நாடுகளினால் பலவந்தமாய்த் திணிக்கப்பட்ட விக்கிரகாராதனைகளின் மத்தியிலும், புறக்கணிக்கப்பட்ட/சிறுமைப்படுத்தப்பட்ட ஒரு சின்னஞ் சிறு மக்கள் கூட்டம் தேவனுடைய ஒருமைப்பாட்டையும் ஆவிக்குரிய தன்மையையும் உறுதியாய்ப் பற்றிக் கொண்டிருந்தது; பல தெய்வ வணக்கம் என்ற உலகளாவிய பாலைவனத்தின் மத்தியில் இது ஒரு பசுஞ்சோலையாய் இருந்தது. யூதத்துவத்தின் முட்புதரானது, வாக்குத் தத்தம் பண்ணப்பட்ட தாவீதின் குமாரனும் தேவனுடைய குமாரனு மானவர் அதிலிருந்து மலரும் வரைக்கும், மற்றும் அவரது மதமாகிய உலகளாவிய அன்பு வளர்ந்து செழிக்கும் வரைக்கும் தெய்வீகத்துவமாய்ப் பாதுகாக்கப்பட்டது; பின்பு அது (யூத மார்க்கம்) தீத்துவாலும் அவரது ரோம சேனைகளாலும் நடத்தப்பட்ட யுத்தத்தின் புயலில் என்றென்றைக்குமாகத் துடைத்து எறியப்பட்டது.

புதிய ஏற்பாட்டு வரலாற்றின் வரைக்குறிப்பு

பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளுக்கு மத்தியில் இடைவேளை

I. *அறிமுகம் - வரலாற்றுப் பெரும் பிளவு - தகவலின் ஆதார மூலங்கள்.*
II. *அரசியல் ரீதியான காலகட்டங்கள்.*
III. *வாழ்வு மற்றும் பழக்க வழக்கங்களில் மாற்றங்கள்.*

அறிமுகம்

சுவிசேஷ வரலாறு

பிறப்பும் குழந்தைப் பருவமும்

தயாரிப்பின் காலகட்டம்

I. *நாசரேத்தூரில் அமைதியான ஆண்டுகள்.*
II. *ஸ்நானனின் ஊழியம்.*

தெளிவற்ற கால கட்டம்

I. *கலிலேயாவில் தொடக்க கால ஊழியங்கள்.*
II. *யூதேயாவில் தொடக்க கால ஊழியம்.*

மாபெரும் கலிலேய ஊழியம்

I. *முதல் அல்லது தயாரிப்பு நிலை - சீஷர்களை இரண்டாம் முறை அழைப்பதுவரை*
II. *இரண்டாம் நிலை - அப்போஸ்தலர்களை நியமித்தல் வரை மற்றும் மலைப்பிரசங்கம்.*
III. *மூன்றாம் நிலை - உவமைகளில் போதிப்பதைத் தழுவிக் கொள்ளுதல் வரை*
IV. *நான்காம் நிலை - கப்பர்நகூமில் இருந்த ஜெப ஆலயத்தில் பிரசங்கம் வரை*
V. *ஐந்தாம் நிலை - கூடாரப் பண்டிகையின் போது கலிலேயாவிலிருந்து கடைசியாய்ப் புறப்படுதல் வரை*

பலஸ்தீனத்தின் எல்லாப் பகுதிகளிலும் முடிவு ஊழியம்

இயேசுவின் ஊழியத்தில் கடைசி வாரம்

கடைசி நாள்

நாற்பது நாட்கள்

அப்போஸ்தலிக்க வரலாறு

எருசலேமில் சபை ஸ்தாபிக்கப்படுதலும் வளர்ச்சியும், கி.பி. 30-35

I. *சபை ஸ்தாபிக்கப்படுதல். (அப். 1, 2.)*
II. *எருசலேமில் சபையின் வளர்ச்சி. (அப். 3-7.)*

சபையின் விரிவாக்கம்

புறஜாதியாரின் மத்தியில் பவுலின் ஊழியப்பயணங்கள், கி.பி. 45-58

I. *முதலாம் பயணம். (அப். 13, 14.)*

II. *இரண்டாம் பயணம். (அப். 16-18:22.)*

III. *மூன்றாம் பயணம். (அப். 18:23-21:26.)*

பவுலின் நான்காண்டு சிறைவாசம், கி.பி. 58-63

I. *எருசலேமில் அவரது சிறைவாசம். (அப். 21:27-23:30.)*

II. *செசரியாவில் அவரின் சிறைவாசம். (அப். 23:31-26:32.)*

III. *ரோமாபுரிக்குக் கடற்பயணம். (அப். 27:1-28:15.)*

IV. *ரோமாபுரியில் இரு ஆண்டுகள் சிறைவாசம். (அப். 28:16-31.)*

பின்னாளைய அப்போஸ்தலிக்க வரலாறு

I. *பவுலின் பின்னாளைய வரலாறு.*

II. *மற்ற அப்போஸ்தலர்களின் பின்னாளைய வரலாறு.*

பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளுக்கு மத்தியில் இடைவேளை

I. அறிமுகம்—வரலாற்றுப் பெரும் பிளவு— தகவலின் ஆதார மூலங்கள்.

பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளுக்கு மத்தியில் நானூறு ஆண்டு களுக்கு ஒரு பெரும் பிளவு நீண்டு விரிந்துள்ளது. அந்த நூற்றாண்டுகளின் போது, கிரேக்க நாடானது இலக்கியத்திலும் கலையிலும் தனது தலைசிறந்த படைப்புகளை உண்டாக்கியது; கிரேக்கப் படைகளின் வலிமையை அலெக்சான்டர் (உலகம் எங்கும்) எடுத்துச் சென்றார் மற்றும் கிரேக்கக் கலைகளின் மிகவும் பயனுள்ள வல்லமையானது மேற்கு ஆசியா முழுவதிலும் அவரால் எடுத்துச் செல்லப்பட்டது; தைபர் நதியோரம் இருந்த எல்லைப் புறநகரான ரோமாபுரி “மத்திய தரைக்கடல் பகுதியின் மிகப் பெரும் முடியாட்சி”யாக வளர்ந்திருந்த வேளையில், இது ரோமச் சாலைகளுக்கான தனது மிகப் பெரும் விரிவாக்கம், ரோமச் சட்டங்கள், ரோம நாகரீகம் ஆகியவற்றுடன் தன்னையறியாமலேயே தேவனுடைய நீதியின் அரசுக்கு இன்னும் மாபெரும் விரிவாக்கத்திற்கான வழியைத் தயார் செய்து கொண்டிருந்தது. இந்த நூற்றாண்டுகளின்போது எபிரெய தீர்க்கதரிசியின் குரலும் ஏவப்பட்ட எழுத்தாளரின் எழுதுகோலும் ஒன்று போல மௌனமாயிருந்தன. (இக்காலகட்டத்தில் நடைபெற்ற) யூதர்களின் நடவடிக்கை பற்றிய நமது அறிவுக்கு நாம் பின்வரும் மூன்று முதன்மை ஆதார மூலங்களையே சார்ந்துள்ளோம். அவை யாவன:

1. பழைய ஏற்பாட்டுத் தள்ளுபடியாகமங்கள்.—இவைகள் இந்தக் காலகட்டத்தில் எழுதப்பட்ட யூத பதிவேடுகளும், பழைய ஏற்பாட்டிற்கு ஏவுதல் பெற்றிராத ஒரு பின் இணைப்புமாகும். இவைகள் கால வரலாற்றின் மீது கணிசமான வெளிச்சத்தை வீசுகின்றன, ஆனால் அதிகாரபூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட நூல்கள் என்ற வகையில் இருந்து வெகு தொலைவில் கீழே வீழ்ந்துள்ளன. எகிப்தின் நினைவுச் சின்னங்களும், பாபிலோனின் எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட செங்கற்களும், நினிவேயின் களிமண் பலகைகளும் மற்றும் ஏராளமான பிற கண்டுபிடிப்புகளும் வேதாகம பதிவுகளின் வரலாற்று ரீதியான மிகச் சரியான தன்மையை அதிகமதிகமாய் உறுதிப்படுத்திக் கொண்டிருக்கையில், தள்ளுபடியாகம எழுத்துக்களில்

வழுவிச் செல்லுதல்கள் ஏராளமாய் இருப்பதாக நிரூபிக்கப்பட்டுள்ளது, மற்றும் பிற வரலாற்று தவறுகளும் புவியியல் தவறுகளும் இவற்றில் ஏராளமாய் இருப்பதாகவும் நிரூபிக்கப்பட்டுள்ளது. மக்காபேயர்களின் முதல் புத்தகமானது வரலாற்று ரீதியாக மிகவும் மதிப்புள்ள தொகுப்பாக உள்ளது.

2. யோசிப்பஸ்ஸின் எழுத்துக்கள்.—யோசிப்பஸ் என்பவர் கி.பி. 37ல் பிறந்த யூத வரலாற்றாளர் ஆவார். இவர் தீத்துவினால் எருசலேம் கைப் பற்றப்பட்டு அழிக்கப்பட்டபோது தப்பித்து பின்வரும் தலைப்புக்களில் முக்கியமான இரு புத்தகங்களை எழுதினார். படைப்பு நடந்ததிலிருந்து முழுமையான, வரலாற்றைக் கூறும் "யூதர்களின் பண்டைக்காலம்" மற்றும் கி.மு. 170ல் இருந்து தம் சொந்தக் காலம் வரை தமது சொந்த மக்களின் வரலாற்றைக் கூறுகின்ற "யூதர்களின் யுத்தங்கள்."

3. கிரேக்க மற்றும் ரோமானிய எழுத்தாளர்கள்.

II. *அரசியல் ரீதியான காலகட்டங்கள்.*

அரசியல் வரலாறு ஆறு கால கட்டங்களைக் கொண்டதாக இருக்கிறது, அவை.: (1) பெர்ஸியர்கள்; (2) மக்கெதோனியர்; (3) எகிப்தியர்; (4) சீரியர்; (5) மக்கபெயர் அல்லது சுயாதீனர்; (6) ரோமர்.

1. பெர்ஸியரின் காலகட்டம் (கி.மு. 538-332).—இந்தக் காலகட்ட மானது மகா கோரஸினால் பாபிலோன் பிடிபட்டு அதன் விளைவாக யூதர்களின் அரசப்பற்றானது பெர்சியரின் வல்லமை/அதிகாரம் நோக்கி மாற்றப்பட்டதிலிருந்து தொடங்குகின்றது. ஆகையால் இந்தக் காலகட்டத் தின் பெரும்பகுதியானது பழைய ஏற்பாட்டு வரலாற்றில் சிறையிருப்பின் பிந்திய காலகட்டத்தினால் கூறி முடிக்கப்படுகின்றது. பெர்ஸியர்களுக்குக் கீழ், யூதர்கள் வழக்கமாகத் தங்கள் சொந்தப் பிரதான ஆசாரியரால் ஆளப்பட்டார்கள், இவர் சீரியாவின் சாத்ராப் அல்லது ஆளுநருக்குக் கீழ்ப்பட்டிருந்தார். மொத்தத்தில் பெர்ஸியரின் ஆளுகை மென்மையான தாக இருந்தது. சமாரியர்களுடன் இடர்ப்பாடுகள் தொடர்ந்தன. இவர்கள் பத்து கோத்திரங்களில் எஞ்சியிருந்தவர்கள், குடியமர்த்தப்பட்ட அசீரியர்களுடன் கலப்புறவு கொண்டவர்கள் என்பது நினைவு கூறப்பட வேண்டும். இவர்கள் அடிக்கடி நிலைமாறிய யூதர்களினால் மறுவலிவூட்டப் பட்டனர், அவர்களில் ஒருவராக, கி.மு. 400ல் கெரீசிம் மலையின்மீது ஆலயம் கட்டிய மனாசே என்ற ஆசாரியர் ஒருவரும் இருந்தார் (இ.வ. யோவா. 4:20). சமாரியர்கள் பஞ்சாகமத்தை உரிமையாய்க் கொண்டிருந் தார்கள், தேவன்மீது விசுவாசம் வைத்திருந்தார்கள், பலிகளைச் செலுத்தி னார்கள், மற்றும் மேசியாவுக்காக எதிர்நோக்கியிருந்தார்கள். அவர்களின் மதமானது வழுவிச் சென்ற யூதத்துவம் என்று விவரிக்கப்படலாம்.

2. மக்கெதோனியர்களின் காலம் (கி.மு. 332-323).—கி.மு. 334ன் வசந்த காலத்தில், அலெக்சான்டர் தனது கைப்பற்றுதல்களின் ஈடு இணையற்ற வரிசைத் தொடரில் (ஒரு பகுதியாக) ஆசியாவைக் கடந்தார். கிரேனிகஸ் ஸிலும் இஸ்ஸஸிலும் தரியுவை தோல்வியடையச் செய்த அவர் தீரு

நகரத்தாரின் விடாப்பிடியான ஏழு மாத எதிர்ப்புக்குப் பிறகு அந்நகரைக் கைப்பற்றி, எகிப்துக்குச் செல்லும் வழியில் பலஸ்தீனத்தை முழுவதுமாகக் கைப்பற்றிச் சென்றார். ஊர்வலம் ஒன்றின் முன்பகுதியில் பிரதான ஆசாரியரான ஜாதுவா என்பவர் இருந்தது பற்றிய ஆர்வமிக்க வரலாறு ஒன்றை யோசிப்பஸ் கூறுகின்றார். அவ்வாறு சென்ற அந்தப் பிரதான ஆசாரியர் எருசலேம் நகருக்கு வெளியே அலெக்சான்டரைச் சந்தித்தார்; மற்றும் அந்தக் காட்சியைக் கண்ட அலெக்ஸான்டர் வழக்கத்திற்கு மாறாக[1] எவ்வாறு பயபக்தியடைந்தார்; அவர் எவ்வாறு ஆலயத்தினுள் பிரவேசித்து, யூதர்களின் தேவனுக்குப் பலி செலுத்தினார்; மற்றும் அவர் எவ்வாறு மக்கெதோனியாவில் தாம் கண்ட கனவில் தாம் பெர்சியர்களை வெல்ல வேண்டும் என்று தமக்குக் கூறிய பிரதான ஆசாரியரின் கூற்றுக்கிணங்க தம் சேனைகளை வழக்கத்திற்கு மாறாக நடத்தினார்[2] என்பனவற்றையும் அவர் (யோசிப்பஸ்) விவரித்தார். எவ்வகையிலும், அலெக்சந்தரும் அவருடைய வழிவழி வந்தவர்களும், குடியமர்ந்தவர்கள்/குடியேறியவர்கள் என்ற வகையில் யூதர்களின் தகுதியினால்/மதிப்பினால் மனம் கவரப்பட்டார்கள்; ஏனெனில் அவர்கள் அலெக்சந்திரியா நகரானது ஏராளமான யூத மக்களின் மையமாகும்படியும், யூதக் கல்வியின் கொண்டாடத்தக்க இருக்கையாகும் படியும், நைல் நதிப் பகுதியில் யூதக் குடியமர்ந்தவர்களும் அப்படிப்பட்ட சலுகைகளைக் கொடுத்தார்கள்.

3. எகிப்தியர்களின் காலம் *(கி.மு. 323-204).*—கி.மு. 323ல் அலெக்சான்டர் பாபிலோனில் இறந்தார். அவரது பேரரசைப் பிரித்தல் தொடர்பாக அவரது தளபதிகள் மத்தியில் இருபது ஆண்டுகளாக நடந்த குழப்பமான போராட்டத்திற்குப் பிறகு, ஒழுங்கமைவில் சில அளவீடுகள் உதித்தெழும்பின. ஆசிய மாகாணங்களின் பல பகுதிகளை செல்யூகஸ் (நிக்கோடர்) பெற்றுக் கொண்டார். அவர் கிழக்கில் இருந்த சூசா, பாபிலோன், தமஸ்கு போன்ற பழங்கால தலைநகர்களைக் கடந்து சென்ற பொழுது, மத்திய தரைக்கடல் அருகில் ஆரன்ட்ஸ் மீது அந்தியோகியா என்ற மேன்மைமிக்க நகரைக் கட்டியெழுப்பினார். அது முதல், இரண்டரை நூற்றாண்டுகள் காலத்திற்கு செல்யூஸிடே (செல்யூக்கஸின் பின் சந்ததிகள்) செல்வமிக்க சீரிய அரசை ஆண்டு வந்தார்கள், மற்றும் அங்கு (பல) நூற்றாண்டுகளாக ஆசியாவின் செல்வமும் கலாச்சாரமும் மையம் கொண்டிருந்தன.

தாலமி எகிப்தை வெற்றி கொண்டார், அதன் புதிய தலைநகராயிருந்த அலெக்சந்திரியா மிக விரைவில் கிழக்கில் வர்த்தகமும் இலக்கியமும் மேலோங்கிய பெரு நகராயிற்று. இவ்விரு அரசுகளும் நகரங்களும் நீண்ட காலமாகப் போட்டியில் இருந்தன. சீக்கிரமே தாலமி எருசலேமை செல்யூகஸிடமிருந்து கைப்பற்றினார். தாலமியின் கீழ் (யூதர்கள்) இருந்த நூற்றாண்டானது யூதர்களுப் பொதுவாக வளமையின் காலமாக இருந்தது. மாபெரும் அலெக்சந்திரிய நூலகத்திற்காக தாலமி பிலதெல்பஸின் கட்டளையின்படி எபிரெய வேத வசனங்கள் கிரேக்கில் மொழி பெயர்க்கப்பட்டது மிகவும் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாயிருந்தது. இந்தப் பணி செய்தவர்களின் எண்ணிக்கை பற்றிய பாரம்பரியக் கூற்றின்படி இது

செப்துவஜிந்த் என்று அறியப்படுகின்றது.

4. சீரியர்களின் காலம் *(கி.மு. 204-167).—பலஸ்தீனமானது எதிரெதிரான வல்லமைகளின் இடையில் விரோதத்தின் எலும்புத் துண்டாக மீண்டும் ஆயிற்று. கடைசியில் செலூக்கியர்கள் அந்நாட்டைத் தாலமியிட மிருந்து மீட்டுக் கொண்டார்கள். சீரியர்களின் ஆட்சிக் காலம் இந்த நான்கு நூற்றாண்டுகளிலும் மிகவும் இருளுள்ளதாக இருந்தாலும் மகிமை பொருந்தியதாகவும் இருந்தது. செல்லூக்கியர்கள் ஒழுக்கங்கெட்ட சர்வாதிகாரிகளாய் இருந்தார்கள். அவர்கள் எல்லாரிலும் அந்தியோகஸ் எப்பிபெனேஸ் (கி.மு. 175-164) மிக மிக மோசமானவனாயிருந்தான். ஒருமுறை எகிப்திலிருந்து அவன் தோல்வியுடன் திரும்பி வந்த பொழுது, எருசலேம் மீது தனது பழி தீர்த்துக் கொள்ளுதலை வெளிப்படுத்தினான். அதன் மக்கள் தொகையில் நாற்பதினாயிரும் பேரை அவன் கொன்று குவித்து, தேவாலயத்தின் பொக்கிஷங்களைச் சூறையாடி, பலிபீடத்தின்மீது ஒரு பெண் பன்றியைப் பலியிட்டதன் மூலமாகவும், சுத்தமற்ற (அந்த) மிருகத்தை வேக வைத்த தண்ணீரை தேவாலயத்தின் உட்புறத்தில் தெளித்த தின் மூலமாகவும் அவன் யூதர்களின் மத உணர்வைக் கொந்தளிக்கச் செய்தான். எபிரெய மதத்தையும் ஆவியையும் அழிப்பதற்கு அவன் ஒவ்வொரு வழிமுறையையும் நாடி, நாட்டை கிரேக்கர்களுடையது போல் மாற்றினான். அவன் தேவாலயத்தை மூடி, மரண வேதனையின் மூலம் யூத மதத்தைத் தடை செய்தான். திரளான மக்கள் தங்கள் விசுவாசத்திற்கு மாறாக தங்கள் வாழ்வை/உயிரைத் துணிவுடன் பலியாய்க் கொடுத்தார்கள். வீரார்ந்த இந்த எதிர்ப்பை வழிநடத்திச் சென்றவர்கள் மக்கபேயர்கள் என்று அறியப்பட்ட நாட்டுப்பற்றுள்ள ஆசாரியர்களாய் இருந்தார்கள்.*

5. மக்கபேயர்களின் காலம் *(கி.மு. 167-63).—சுதந்திரத்திற்கான ஒரு யுத்தமானது மத்தத்தியாஸ் என்ற பெயர் கொண்ட வயதான ஆசாரியர் ஒருவரால் தொடங்கப்பட்டு, அவரது மகன்களால் முப்பது ஆண்டுகளாக நடத்தப்பட்டது. யூதர்களின் கட்டபொம்மன் என்று அழைக்கத் தகுதி பெற்ற யூதாஸ் என்பவர், தாமே போரிட்ட பத்துப் போர்களில், ஐந்து போர்களை வென்றார், மற்றும் "மக்காபே" (சுத்தியல்) என்ற பட்டத்தையும் வென்று அதைத் தமது குடும்பத்திற்கு உரியதாக்கினார். யூதாஸ் தேவாலாயத்தை மீண்டும் திறந்து, அதைச் சுத்திகரித்து, மீண்டும் அர்ப்பணம் செய்யுமளவுக்கு வெற்றி வீரராக விளங்கினார், அவரது நினைவைக் கனப் படுத்துவதற்காக பிரதிஷ்டை பண்டிகை தொடர்ந்து ஆசரிக்கப்பட்டு வந்தது (யோவா. 10:22). கடைசியில் யூதாஸ் ஒரு யுத்தத்தில் வீழ்ந்தார்; ஆனால் அவரது சகோதரனான சீமோன் என்பவரால் கடைசியில் கலகத்து டனான ஒரு சுதந்திரம் வெற்றிக் கொள்ளப்பட்டு, சீரியர்களால் அங்கிகரிக் கப்பட்டது. சீமோனின் மகனான ஜான் ஹிர்கானஸ் என்பவர் அரச பட்டத்துடன் அவருக்குப் பின் வந்தார். இவ்விதமாக மக்காபேயர்களின் மூதாதையரான ஹஸ்மோனஸ்[3] என்பவரின் நினைவாகப் பெயரிடப்பட்ட ஹஸ்மோனியன்[4] அரசாட்சி தோற்றுவிக்கப்பட்டது.*

6. ரோமர்களின் காலம் *(கி.மு. 63-கி.பி. 70, பாம்ப்பே என்பவனால் எருசலேம் பிடிக்கப்பட்டதிலிருந்து தீத்துவால் அது அழிக்கப்பட்டது வரை).*

—மக்கெபேயர்கள் ஆட்சியின் முடிவு ஆண்டுகள் பரிதபிக்கப்படத்தக்க உள் நாட்டு விரோதங்கள்/சண்டைகள் நிறைந்த ஆண்டுகளாயிருந்தன. ஹஸ்மோனியன் குடும்பத்தின் பல்வேறு உறுப்பினர்கள் அரியணைக்காகப் போட்டியாளர்களாயினர்; சூழ்ச்சிகளும், எதிர் சூழ்ச்சிகளும், பரஸ்பரம் கொலைகளும் ரோமாபுரியின் எழுச்சியுற்றுக் கொண்டிருந்த அதிகாரத் தினிடம் வேண்டுகோள்களும் (அவர்களின்) வரலாற்றுக் குறிப்புகளைக் கறைப்படுத்தின. கி.மு. 63ல் மகா பாம்ப்பி என்பவன், மூன்றாம் மித்திரி டேட்டிக் யுத்தத்தின் முடிவில் வெற்றி பெற்ற தனது சேனைகளை சீரியாவுக்குள் நடத்திச் சென்று, செல்லூரக்கியர்களின் அரசாட்சிக்கு முடிவு கட்டி, எருசலேமைக் கைப்பற்றியதினால் யூதர்களின் சுதந்திரமான அரசியல் வாழ்வுக்கான கடைசிக் கனல்களை அணைத்துப் போட்டான். சற்று காலத்திற்கு அஸ்மோனியர்கள் தைபரிலிருந்து வெளியிடப்பட்ட சர்வாதி கார வல்லமைக்கு, சீரியாவின் ரோம ஆளுநருக்குக் கீழ்ப்பட்டு உள்ளூர் ஆட்சியாளர்களாய்த் தொடர்ந்தனர்.

ஏரோதியக் குடும்பம்.—ஆனால் இப்பொழுது ஒரு புதிய தனிப்பட்ட/ ஆளுமை சக்தியானது காட்சிக்கு வருகின்றது. ஒரு நூற்றாண்டுக் காலத்திற்கு ஏரோதியரின் குடும்பமானது யூத வரலாற்றில் முக்கியமான பங்கு வகித்தது; இது இயேசு கிறிஸ்துவின் பிறப்பு மற்றும் ஊழியம் ஆகியவையும், சபையின் ஸ்தாபனமும் நடைபெற்ற முக்கியமான நூற்றாண்டாகும். மகா/பெரிய ஏரோது (கி.மு. 37-4) இதுமேய (ஏதோமியர்) வழி வந்தவர் ஆவார். இவரது தகப்பன் அந்திப்பத்தர் என்பவர் கி.மு. 47ல் யூதேயாவின் ஆளுநராக்கப் பட்டார். அதே வேளையில் ஏரோது கலிலேயாவின் ஆளுநராக்கப்பட்டார். கி.மு. 40ல் இவர் ரோம அரசவையினால் யூதேயாவின் அரசராக்கப் பட்டார், ஆனால் தமது அரசை அவர் வெற்றி கொள்ள வேண்டியிருந்தது, இதை அவர் கி.மு. 37ல் நிறைவேற்றினார். இவர் யூத ஆசாரிய - அரசரான ஹிர்கானஸின் பேத்தியான மிரியாம் என்ற பெண்மணியைத் திருமணம் செய்து கொண்டு, இவ்விதமாக அஸ்மோனிய பரம்பரையினருடன் அரியணைக்கான தமது சொந்த உரிமைகோருதல்களைப் பிணைத்தார்/ ஒன்றுபடுத்தினார். ஏரோது அரசிற்குக் கொண்டிருந்த மேதைத் தன்மைக்குச் சமமான ஒன்று மிக அரிதானதாயிருந்தது; ஆனால் அவரது குற்றங்கள் அதை விடப் பெரியவைகளாயிருந்தன. அவர், கீழ்த்தரமான நடக்கை, முழுமையான சிற்றின்பப் பிரியம், மற்றும் மதியற்ற சந்தேகம் ஆகியவற்றினால் மிகவும் அற்பத்தனமாய் நடந்து கொண்டார்; அவரது சாவுக்கேதுவான பொறாமைக்கு முன்பாக பலர் பலியாகினர்; அவரது மாமியார், மைத்துனர், இரு மகன்கள் மற்றும் அவரது சொந்த மனைவியும் அழகிய பெண்மணியுமான மிரியாம் ஆகியோர் இதில் அடங்கினர். அவர் பந்தயங்கள் மற்றும் பிற கிரேக்கப் பழக்கங்களை எருசலேமுக்குள் அறிமுகப் படுத்தியதன் மூலம் யூதர்களின் வெறுப்புக்குள்ளானார். அவர்களின் பார்வைக்கு இவற்றிற்குப் பரிகாரமாக அவர் தேவாலயத்தை மீண்டும் கட்டி, அதை சாலொமோனின் ஆலயத்தைப் பார்க்கிலும் மிகவும் பெரிதாக்கி, செருபாபேல் கட்டிய ஆலயத்தைப் பார்க்கிலும் வளம்மிக்க தாக்கினார். அவர் சமாரியா நகரையும் மீண்டும் கட்டியெழுப்பி அதற்கு

செபஸ்தே என்று பெயரிட்டு, செசரியா என்ற புதிய நகரத்தை நிர்மானித்து அதை பலஸ்தீனத்தின் அரசியல் தலைநகராக்கினார். "அவரது உறவினர் களின் இரத்தத்தினால் அவரது அரியணை குளிப்பாட்டப்பட்டிருந்தது" என்பது உண்மையாயிருப்பினும், அவர் தாவீது மற்றும் சாலொமோனின் ஆளுகைகள் தவிர அரசாட்சியானது முன்பு ஒருபோதும் அது அறிந்திராத அளவு வெளிப்படையான மாபெரும் மேன்மையைத் தந்தார். இருப்பினும், பொருள் சார்ந்த இந்த மேன்மை யாவையும் யூதர்களைப் பார்வையற்றுப் போகச் செய்யவில்லை, அவர்கள் கீழ்ப்படிதலுக்குட்பட்ட இனமாய் இருந்த போதிலும் தங்கள் பாரம்பரியம், தங்கள் மகிமையுள்ள கடந்த காலம் ஆகியவை குறித்துப் பெருமை கொண்டிருந்தார்கள். அவர்களின் விலங்குகள் மெருகூட்டப்பட்டிருக்கலாம்; ஆயினும் அவை இன்னமும் விலங்குகளாகவே இருந்தன. ஏரோது அரசரே கூட அந்நிய இனத்தைச் சேர்ந்தவராகவே இருந்தார், மற்றும் அவர் இன்னொரு அந்நிய இனத்தின் பிரதிநிதியாக அரசாண்டார். சொல்லப் போனால், தாவீதின் கூடாரம் விழுந்து போயிருந்தது, நாட்டின் தேர்ந்து கொள்ளப்பட்ட ஆவிகளான "இஸ்ரவேலருக்குள்ளான இஸ்ரவேலர்கள்" அதை (இஸ்ரவேல் நாட்டை) மீண்டும் மேலே எழுப்பி, முந்தின/பழைய நாட்களில் இருந்தது போல அதை கட்டி எழுப்புகின்றவருக்காக நோக்கியிருந்து ஏங்கியிருந் தார்கள் (ஆமோஸ் 9:11).

III. வாழ்வு மற்றும் பழக்க வழக்கங்களில் மாற்றங்கள்.

1. தொழில்.—எபிரெயர்கள் தொடக்கத்தில் விவசாயிகளாகவும் மேய்ப்புப் பணி செய்பவர்களாகவும் இருந்தனர். சாலொமோன் மற்றும் சில பிற்கால அரசர்களின் நாட்களில் அவர்கள் அந்நிய (நாட்டு) வர்த்தகத் தில் ஓரளவுக்கு ஈடுபட்டார்கள். ஆனால் சிறையிருப்பில் இருந்து பரவலாகச் சிதறியிருந்தது அவர்களை வியாபாரிகளின் இனமாக்கிற்று, இது அவர்கள் ஒருக்காலும் இழந்து போகாத பண்பாயிற்று.

2. மொழி.—சிறையிருப்பின் காலத்திலிருந்து மொழியிலும் மாபெரும் மாறுதல்கள் வந்தன. கல்தேய, சீரிய மற்றும் பெர்ஸிய (மொழி) வடிவங்கள் மெள்ள மெள்ள உள் நுழைந்தன, மற்றும் நூற்றாண்டுகளின் ஓட்டத்தில், விளைவானது, பண்பற்ற இனங்கள்/காட்டுமிராண்டிகள் இத்தாலியில் படையெடுத்துச் சென்ற பிறகு ஏற்பட்டதைப் போன்றதாகவே இருந்தது. நவீன இத்தாலிய மொழி என்பது மிக மேன்மையான இலத்தீனுக்குள் வேர் கொண்டிருப்பினும் இது மேன்மையான இலத்தீன் மொழியாய் இருப்ப தில்லை. இது போன்றே, மேன்மையான எபிரெய மொழியானது செத்துப் போன ஒரு மொழியாயிற்று, மற்றும் கிறிஸ்தவத்தின் தொடக்க காலத்தில் பலஸ்தீனத்தில் அரமாயிக் மொழியானது பொதுவான பேச்சு வழக்கின் மொழியாக இருந்தது.

3. மதம்.—மதத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் பின்வருமாறு தொகுத்துரைக்கப்படலாம்:

அ. விக்கிரகாராதனை என்றென்றைக்குமாக மறைந்து போகின்றது.—அடிமைத்தனத்திற்கு முன்பு அவர்கள் புற இனத் தெய்வ வழிபாட்டைப் போலச் செய்ய நிலையான விருப்பம் கொண்டிருந்ததை நாம் கவனித்திருக் கின்றோம். கடைசியில் இது புறதெய்வயியலை கிளர்வூட்டிய வலிவான அருவருப்புகள் ஒவ்வொன்றும் ஒழிவதற்கு வழி ஏற்படுத்திற்று.

ஆ. ஜெப ஆலயங்களின் எழுச்சி/வளர்ச்சி.—பழைய ஏற்பாட்டில் ஜெப ஆலயங்கள் இருந்தமைக்கான தடயம் எதுவும் இருப்பதில்லை. இது தேவாலாய (ஆராதனை) ஊழியங்கள் இல்லாதொழிந்திருந்த அடிமைத் தனத்தின் போது உதயமாகியிருக்கச் சாத்தியக் கூறு உள்ளது. பத்து யூத ஆண்கள் இருந்தாலே ஒரு ஜெப ஆலயத்தைத் தொடங்கலாம் என்ற நிலை இருந்தது. எருசலேமில் நூற்றுக்கணக்கான ஜெப ஆலயங்கள் இருந்தன, மற்றும் பேரரசின் பெரு நகரங்களிலும் பல ஜெப ஆலயங்கள் இருந்தன. இவைகளின் (ஆராதனை) ஊழியங்கள், அன்றாடப் பலி செலுத்தும் வேளையின் தினசரி ஜெபங்கள், ஓய்வு நாள் (வேத) வாசிப்புகள், மற்றும் வேத வசனங்கள் மீதான விளக்கவுரைகள் ஆகியவற்றைக் கொண்டவை களாகவும், ஒரு ஆசீர்வாதத்துடன் முடிவடைவதாகவும் இருந்தன.

இ. யூதப் பிரிவுகளின் எழுச்சி.—யூதர்களில் பின்வரும் பிரிவுகள் இருந்தன: (1) பரிசேயர்கள்: இவர்கள் மோசேயின் நியாயப்பிரமாணத்தை வாய் மொழியாய்ப் பற்றியிருந்தார்கள். இது பாரம்பரிய வழிமுறையாக அவர்களுக்குக் கையளிக்கப்பட்டிருந்தது, இது எழுதப்பட்ட நியாயப் பிரமாணத்திற்கு இணையாக அதிகாரத்துவம் கொண்டிருந்தது. உயிர்த் தெழுதல் மற்றும் எதிர்கால வாழ்வு ஆகியவற்றின் போதனையை/ உபதேசத்தை அவர்கள் விடாது பற்றிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் மிகவும் கட்டுப்பாடான வகையில் விலகி நிற்பவர்களாயிருந்து, புற இனப்பழக்கங்கள் அறிமுகப் படுத்தப்படுவதை எதிர்த்து நின்றனர். உண்மையில் அவர்கள் நாட்டின் மிகச் சிறந்த பாகத்தினராயிருந்தனர், இவர்களே நாட்டை நாசப்படுத்தும் சக்திகளின் நடுவே நாட்டின் அடையாளத்துவத்தைக் காத்தனர். (2) சதுசேயர்கள்: மேற் கூறப்பட்ட எல்லாக் கருத்துக்களிலும் இவர்கள் பரிசேயர்களை எதிர்த்து நின்று, வாய்மொழி நியாயப்பிரமாணத்தின் அதிகாரத்தை மறுத்து, உயிர்த் தெழுதலையும் எதிர்கால வாழ்வையும் பற்றிய கொள்கையைப் புறக் கணித்து, தங்களிடத்திலிருந்த மற்ற இனங்களுடன் அவர்களின் பழக்க வழக்கங்கள் மற்றும் கருத்துக்கள் ஆகியவற்றுடன் தாராளமான தொடர்பை ஆதரித்து வந்தனர். அவர்கள் ரோமர்களுடன் சாதகமான நிலையில் இருந்து கொள்ளும்படி பரிந்துரைத்த அரசியல்வாதிகளாயிருந்தனர். பிரதான ஆசாரியர் வழக்கமாக சதுசேயக் குழுவைச் சார்ந்தவராகவே இருப்பார். (3) எஸ்ஸென்ஸ்கள்: இவர்கள் சமுதாயத்திலிருந்து விலகியிருந்து, திருமணம் முடிக்காது ஆழ்ந்த தியானத்தில் நேரத்தைச் செலவிடும் துறவிகளின் ஒரு சிறு குழுவாக இருந்தனர். இவர்கள் யூத சந்நியாசிகளாய் இருந்தனர்.

உலகத்தின் மாபெரும் யுகம் வந்த வேளையில் நாடு இப்படி இருந்தது, இனத்தின் நிலை இவ்வாறாக இருந்தது. ஆபிரகாமுடனான உடன்படிக்கை யின் மாம்சப் பிரகாரமான பகுதியானது அடையப்பட்டிருந்தது, மற்றும்

அது தனது பெரிய முன்னேற்றத்தை நீண்ட காலமாக அளித்து வந்திருந்தது. நீண்ட காலமாக நிழலிட்டுக் கொண்டிருந்த நூற்றாண்டுகளினூடே மாபெரும் தீர்க்கதரிசிகளினால் இன்னும் இன்னும் வலியுறுத்தப்பட்டிருந்த ஆவிக்குரிய பகுதியானது இப்பொழுது முழுமையான நிறைவேற்றத்தைக் காண வேண்டியதாக இருந்தது, யூதத்துவத்தின் முட்புதரானது முற்றிப் போய், இயேசுவாகிய கிறிஸ்துவின் உலகளாவிய ஆவிக்குரிய மார்க்கத்தை மலர்விப்பதற்குத் தயாராக உள்ளது.

குறிப்புகள்

[1]இவ்விடத்தில் டீன் “unwonted” என்று எழுதியிருந்தார். [2]Josephus, “Antiquities,” Book XI, chap. viii. [3]அல்லது ஹஸ்மோனியஸ். [4]அல்லது ஹஸ்மோனியன்.

அறிமுகம்

1. நாடும் மக்களும்.—நாம் இப்பொழுது ஆராயவிருக்கும் வரலாறானது, பதினைந்து நூற்றாண்டுகளினூடாக முற்பிதாக்கள், பழைய உடன்படிக்கையின் அரசர்கள் மற்றும் தீர்க்கதரிசிகள் ஆகியோருடன் பழக்கத்தையும் பரிசுத்தத்தையும் சற்றுக் காலம் நமக்குள் வேரூன்றிய வகையில் நம்மைக் காத்திருக்கும். இயற்கையான காட்சியானது சீகேமில் ஆபிரகாம் தமது கூடாரத்தை முதன் முதலாக அமைத்த போதிருந்தவாறே உள்ளது; மற்ற யாவும் மாற்றப்பட்டுள்ளது. பழங்கால மக்களும் நகரங்களும் கண் மறைவாய் மறைந்து போயினர் அல்லது வீழ்ந்து போயின; புதிய மக்களும் நகரங்களும் முன்னணிக்கு வந்துள்ளன(ர்). கானான் நாடு என்பது பெலிஸ்தர் என்பதிலிருந்து பெறப்பட்ட பாலஸ்தீனம் என்று ஆகியிருந்தது. தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களினங்களின் பெயர்கள் அவர்களின் இன வாழ்வின் மாறுபடும் நிலைகளும் மாறுபட்டுக் கொண்டுள்ளன. தொடக்க காலப் பெயரான எபிரெயர்கள் என்பது நிகழ் காலத்தில் அவர்களுக் கிடையில் ஒட்டிக் கொண்டுள்ளது. யாக்கோபின் காலத்திலிருந்தே பயன் படுத்தப்பட்டிருந்த இஸ்ரவேல் என்ற சொற்றொடரானது ரெகொபெயா மின் கீழ் பிரிவினை ஏற்பட்ட பிறகு வடக்கு இராஜ்யத்துக்கே ஏற்புடைய தாயிற்று; யூதா என்பதிலிருந்து வந்த யூதர் என்ற சொற்றொடரானது பழைய ஏற்பாட்டு மற்றும் புதிய ஏற்பாட்டு காலம் முழுவதிலும் பொதுவான இனப்பெயராக இருந்தது. இனமானது முற்காலங்களில் இருந்தது போலத் தனிமைப்பட்டிருக்கவில்லை. வாழ்வு சிக்கலானதாக வளர்ந்துள்ளது. அதற்குள் பல புது அலைகள் பெருக்கெடுத்து வந்துள்ளன. ஒரு ரோம ஆளுநர் தம் அரண்மனையை செசரியாவில் இருந்த புதிய தலைநகரிலோ அல்லது பழைய பரிசுத்த நகரமாகிய எருசலேமிலோ வைத்துக் கொண்டிருந்தார். ரோமச் சேவகர்களும், ரோம வரி வசூலிப்பாளர்களும் எங்கும் நிறைந்துள்ளனர். பழங்கால எபிரெய மொழியானது பள்ளிகளின் பரிசுத்த மொழியாக உள்ளது, அது நவீன இத்தாலியப் பையன் இலத்தீன் மொழியைக் கற்றுக் கொள்வது போலக் கற்றுக் கொள்ளப்பட வேண்டும். அரமாயிக் மொழியானது அந்நாட்டவரின் பொது மொழியாக இருக்கின்றது; அதே வேளையில் கிரேக்கம் இலக்கிய மொழியாகவும், இலத்தீன் அலுவலக வட்டாரங்களின் மொழியாகவும் உள்ளன.

2. பலஸ்தீனத்தின் ஐந்து பிரிவுகள்.—புதிய ஏற்பாட்டு காலங்களில் பலஸ்தீனம் ஐந்து மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது, அவைகளில் மூன்று யோர்தானுக்கு மேற்கேயும், இரண்டு யோர்தானுக்கு கிழக்கேயும் இருந்தன. மேற்கில் இருந்தவை வருமாறு,—

அ. கலிலேயா, வடக்கு எல்லை மாகாணமாக இருந்தது, இதில் குறிப்பிட்ட வகையில் பேசக் கூடிய, கலாச்சாரமற்ற, பிரதானமாக

யூதத்துவமிருப்பினும் பெருமளவில் புற இனத்தாரின் கூறுள்ள மக்கள் தொகை இருந்தது. கலிலேயாக் கடலைச் சுற்றியுள்ள பகுதிகளில் நகரங்களும் கிராமங்களும் ஏராளமாய் இருந்த போதிலும், கப்பர்நகூம் என்பது இதன் பிரதான நகராக இருந்தது.

ஆ. யூதேயா, இது தெற்கில், மிகவும் சுத்தமான யூதத்துவக் கலாச் சாரமும், உயர்குடிமையும் கொண்ட மக்கள் வாழ்ந்த பகுதியாகும். இதில் தாவீது மற்றும் இயேசு ஆகியோர் பிறந்தது தவிர வேறு சிறப்பெதுவு மில்லாத பெத்லகேம் இருந்தது; பெரிய ஏரோதினால் கட்டப்பட்ட ரோமத் தலை நகரான செசரியா மற்றும் பரவலாய்ச் சிதறியிருந்த இனத்தின், இனம் சார்ந்த, மதம் சார்ந்த இருதயம் போன்ற மையப்பகுதியும், அடுப்படிக்கல் போன்றதுமான எருசலேம் ஆகியவை இருந்தன.

இ. சமாரியா, இது மத்தியில் இருந்த பகுதியாகும், இதில் இழி பிறவி (என்று கருதப்பட்டிருந்த) இனமும் மதமும், தங்கள் யூத அயலகத்தவர் களால் வலிவுடன் வெறுக்கப்பட்ட மற்றும் அவர்களை வெறுத்த மக்கள் வாழ்ந்து வந்தார்கள். பழங்காலத்தில் சீகேம் என்று அழைக்கப்பட்டதும், சமாரியர்களின் பண்டைக்காலக் கோயில் இருந்ததுமான சீகார் மாபெரும் ஆர்வத்திற்குரிய ஊராயிருந்தது.

யோர்தானுக்குக் கிழக்கே இருந்த மாகாணங்கள் பின்வருமாறு,—

ஈ. பெரேயா, இது தெற்கில் இருந்ததும், பெரும்பாலும் யூத மக்கள் வாழ்ந்திருந்ததுமான நாடாகும்.

உ. யோர்தானுக்குக் கிழக்கே இருந்தவைகளில் வடக்கு மாகாணம் குறிப்பிட்ட பெயரெதையும் கொண்டிருந்ததில்லை. இது சில வேளைகளில் தெக்கப்போலி (பத்து நகரங்களின் மாகாணம்) என்று அழைக்கப் படுகின்றது; ஆனால் தெக்கப்போலி என்பது தென்பகுதியை மட்டுமே உள்ளடக்கியிருந்தது. இது பழங்கால இராஜ்யமான பாசானுக்கு அருகில் ஏறக்குறைய இணைந்திருப்பதினால், *பாசான் மாகாணம்* என்று அழைக்கப் படலாம். இது பிலிப்புவின் கால் பங்கு அரசாட்சியைக் கொண்டிருந்தது. அங்குள்ள மக்கள் தொகையில் ஏராளமானவர்கள் இனத்தில் புறஜாதி யாராகவும், மதத்தில் புறதெய்வ வழிபாட்டாளர்களாவும் இருந்தனர். இயேசுவின் ஊழியம் இந்த ஐந்து மாகாணங்களிலும் நடந்தேறியது, ஆனால் யூதேயாவும் கலிலேயாவும் பிரதானமான அக்கறைக்குரிய மையங்களாக இருந்தன.

3. பலஸ்தீனத்தின் ஆட்சியாளர்கள்.—*அ. ரோமப் பேரரசர்கள்.*— பலஸ்தீனம் ரோமப் பேரரசர்களுக்குக் கீழ்ப்பட்டிருந்த உள்ளூர் ஆட்சியாளர்களால் ஆளப்பட்டது. கிறிஸ்துவின் காலத்தின் போது, ஆக்டேவியஸ் (அகுஸ்து) இராயன் (கி.மு. 31-கி.பி. 14), மற்றும் திபேரியு (கி.பி. 14-37) ஆகியோர் பேரரசர்களாக இருந்தனர். புதிய ஏற்பாட்டு வரலாற்றின் முக்கியமான பிந்திய பேரரசர்களாக கிலவுதியு (கி.பி. 41-54), நீரோ (கி.பி. 54-68) மற்றும் வெஸ்பாஸியன் (கி.பி. 69-79) ஆகியோர் இருந்தனர்.

ஆ. உள்ளூர் ஆட்சியாளர்கள்.—உள்ளூர் அரசியலானது பின்வருமாறு தொகுத்துரைக்கப்படலாம்: (1) மகா ஏரோதின் அரசு. மகா ஏரோது (ரோம

அரசிற்கு) கீழ்ப்பட்டவராய் இருந்தாலும் தம்முடைய மரணம் கி.பி. 4[1] வரை மேலே பெயரிட்டுக் குறிப்பிடப்பட்ட ஐந்து மாகாணங்களுக்கும் அரசராக வாரிசுரிமையின் பேரில் ஆட்சி செய்தார். (2) டெட்ரார்க்கி (நான்கின் அரசு) கி.மு. 4-கி.பி. 41. ஏரோதின் அரசானது அவரது மகன்களில் மூன்று பேருக்கு சிறு பகுதிகளாய்ப் பிரித்தளிக்கப்பட்டது. அர்க்கெலாயு (மத். 2:22) யூதேயாவையும் சமாரியாவையும் பெற்றுக் கொண்டார். கி.பி. 6ல் அவர் பேரரசரின் ஆதரவின்மையை அனுபவித்தார், அவரது அரசானது பேரரசின் ஆளுநர்களின் தொடர் வரிசைக்கு கீழானது, அவர்களில் ஆறாமவராக வந்தவர் பொந்தியு பிலாத்து ஆவார். அந்திப்பா (கால் பங்கு தேசாதிபதியான ஏரோது, மத். 14:3) கலிலேயாவையும் பெரேயாவையும் பெற்றுக் கொண்டார். பிலிப்பு (லூக். 3:1) பாசான் மாகாணத்தின் கால் பங்கு தேசாதிபதியானார். லூக்கா 3:1ல் நான்காவது கால் பங்கு குறிப்பிடப் பட்டுள்ளது. லைசானியஸ் என்பவர் ஏரோதியாக் குடும்பத்தில் ஒருவராய் இருந்ததில்லை, மற்றும் அபிலேன் மகா ஏரோதின் ஆளுகை எல்லை களுக்குப் புறம்பே இருந்தது. (3) முதலாம் ஏரோது அகிரிப்பாவின் அரசு, கி.பி. 41-44.[2] ஏரோது அகிரிப்பா (அப். 12:1-23) மகா ஏரோதின் பேரனாக இருந்தார். பேரரசரான கலிகுல்லாவின் ஆதரவு மூலம் பஸ்தீனம் முழுவதை யும் கூடுதலாக அபிலேனையும் அவருக்குக் கீழ் ஒன்றிணைத்திருந்தது; எனவே அவர் சாலொமோனுக்குப் பிறகு வேறெந்த யூத அரசரைக் காட்டிலும் மிகப் பெரிய எல்லைகள் கொண்ட நாட்டை ஆண்டார். (4) இரண்டாம் அகிரிப்பா அரசர், கி.பி. 44-66.[3] ஏரோது அகிரிப்பா அரசரின் மரணத்தின் போது, ஒரு புதிய பிரிவு ஏற்படுத்தப்பட்டது. அவரது மகனான இரண்டாம் ஏரோது அகிரிப்பாவுக்கு (அப். 26:2) பிலிப்பு மற்றும் லைஸானியஸ் ஆகியோரின் இரு பழைய காற்பங்குகள் தரப்பட்டன. அவைகளை அவர், கி.பி. 70ல் எருசலேமும் யூத மாநிலமும் அழிக்கப்படும் வரையிலும் ஆட்சி செய்தார். மரியாதையினிமித்தம் மட்டுமே அவர் “அகிரிப்பா அரசர்” என்று அழைக்கப்பட்டார். பலஸ்தீனத்தின் பிற மாகாணங்கள் பொந்தியு பிலாத்துவின் காலத்தில் போல ஆளுநர்களுக்குக் கீழாக வைக்கப்பட்டன. பேலிக்ஸ், கி.பி. 53-60 (அப். 23, 24) மற்றும் பெஸ்து, கி.பி. 60-62 (அப். 24-26) ஆகியோர் புதிய ஏற்பாட்டில் பெயர் குறிப்பிடப்பட்ட பிற ஆளுநர்களாய் இருந்தனர்.

குறிப்புகள்

[1]*கிறிஸ்துவின் பிறப்பிலிருந்து காலத்தைக் கணக்கிடும் நமது கணக்கு முறை யானது நான்காம் நூற்றாண்டிலிருந்து பயன்பாட்டிற்கு வந்தது. டினோஷியுஸ் எக்ஷீஜஸ் என்ற துறவி இந்தக் காலக் கணக்கீட்டை செய்தார். அவர் நான்காண்டு களைத் தவற விட்டு விட்டார். அநேகமாக கிறிஸ்து பிறந்த ஒரு ஆண்டிற்குள்ளாகவே (மகா) ஏரோது மரணம் அடைந்திருக்கலாம்.* [2]*கி.பி.37ல் முதலாம் ஏரோது அகிரிப்பா பலஸ்தீனத்தின் வடகிழக்கு எல்லைப் பகுதிகளைத் தம் அரசாகப் பெற்று அரசர் என்ற பட்டத்தைப் பெற்றார். கி.பி. 39ல் கலிலேயாவும் பெரேயாவும் அவரது அரசுடன் இணைக்கப்பட்டன. கி.பி. 41ல் யூதேயாவும் சமாரியாவும் அவருக்குக் கொடுக்கப்பட்டன. பின்வருபவர்களைப் போன்ற சில எழுத்தாளர்கள், இவரது ஆட்சிக் காலம் கி.பி. 37-44 என்று தேதியிடுகின்றனர்: மெர்ரில்* C. டென்னி, *புதிய ஏற்பாட்டு ஆராய்ச்சி* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1985); *இராபர்ட் கன்ரீ, புதிய ஏற்பாட்டின் ஒரு ஆராய்ச்சி* (Grand Rapids, Mich.: Zondervan, 1970); *மற்றும் இராபர்ட் குரோமாக்கி, புதிய ஏற்பாட்டு ஆராய்ச்சி* (Grand Rapids, Mich.: Baker Book House, 1974). [3]*கி.பி. 66ல் ரோமாபுரிக்கு எதிரான யூதர்களின் போர் நடந்தது, இதனால் ரோம படைத் தளபதியான தீத்து எருசலேமுக்குத் தனது படைகளுடன் செல்லும்படி நிர்ப்பந்திக்கப்பட்டு, கி.பி. 70ல் எருசலேம் நகரை அழித்தார்.*

13

சுவிசேஷ வரலாறு

அல்லது, இயேசு கிறிஸ்துவின் சொந்த ஊழியமும், பணியும், கி.மு. 5-கி.பி. 30[1]

அறிமுகம்

1. வேதாகம வரலாற்றின் மையச் சித்தரிப்புருவாக கிறிஸ்து.—வேதாகம வரலாற்று வரிசைகள் யாவும் கிறிஸ்துவை நோக்கியே பாடப் பொருளை அளிக்கின்றன. அவர் சர்ப்பத்தின் தலையை நசுக்கும் "ஸ்திரீயின் வித்தாக" (ஆதி. 3:15), பூமியின் சகல இனங்களையும் (தமக்குள்) ஆசீர்வதிக்கும் ஆபிரகாமின் "சந்ததியாக" (ஆதி. 12:1-3) வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவராயிருந்தார். புறதெய்வ ஆராதனைகளுக்கு இணையாயிருந்த, முற்பிதாக்கள் மற்றும் யூதர்கள் ஆகியோரால் நீண்ட நூற்றாண்டுக் காலமாய்ச் செலுத்தப்பட்ட பலிகள் தங்களின் ஆழமான தனிச் சிறப்புகளைக் கொண்டிருந்தது என்பதில் ஐயம் இல்லை. பாவம் பற்றிய உலகளாவிய உணர்ந்தறிதலானது உயிரைப் பலியிடுதலில் தனது குரலை எழுப்பியது, இது சமாதானம் மற்றும் மன்னிப்புக்கான மனித இருதயங்களின் இரங்கத்தக்க கதறுதலாயிருந்தது. ஆனால் எபிரெய ஆசாரியத்துவம் மற்றும் பலிகள் ஆகியவை தங்களில் தனி வகையான முக்கியத்துவம் கொண்ட முதன்மை தனிச் சிறப்புடையவைகளாயிருந்தன. நூற்றாண்டுகளின் இளைப்பான பயண வழியினூடே அவைகள், மனித குலத்தின் மீட்புக்காக, தெய்வீகத்தின் சுய பலியிடுதலை அதிகமதிகமாய்ச் சுட்டிக் காண்பித்தன: அவரே "உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியானவர்" (யோவா. 1:29). இவ்விதமாக மாதிரிகள் மற்றும் தீர்க்கதரிசனங்களின் எண்ணற்ற வரிசைகள் கிறிஸ்துவின் தலை(மை)யைப் பாடப் பொருளாகக் கொண்டிருந்தன. இதே போன்றதொரு வழியில் புதிய உடன்படிக்கையின் வரிசை முறைகள் கிறிஸ்துவை நோக்கிப் பின்னோடுகின்றன. நாம் கிறிஸ்துவைப் பிரசங்கிக்கின்றோம், கிறிஸ்துவை விசுவாசிக்கின்றோம், கிறிஸ்துவை அறிக்கையிடுகின்றோம், கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெறுகின்றோம், கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை நினைவுகூரும் நாளில் கிறிஸ்துவின் மரணத்தின் நினைவாக இராப் போஜனத்தில் பங்கேற்கின்றோம். கிறிஸ்துவின் மூலம் மீட்பு என்பதே வேதாகமத்தின் எல்லாப் புத்தகங்களையும் ஒன்றாயிணைக்கின்ற இரத்தாம்பர நூலாக உள்ளது.

2. உலக வரலாற்றிற்குத் திறவுகோலாகக் கிறிஸ்து.—இயேசுவின் பிறப்பு

என்பது மைய அச்சுப் போன்ற நிகழ்ச்சியாக உள்ளது. எபிரெய இனத்தைத் தேர்ந்து கொள்ளுதலும் அவர்களைப் பாதுகாத்தலும் அவரது வருகைக்கான அருளிரக்கமுள்ள தயாரிப்புகளாயிருந்தன; அலெக்ஸாண்டரின் வெற்றிகள் மற்றும் கிரேக்க மொழியின் பரவுகை; ரோமப் பேரரசின் எழுச்சி, அதன் சட்ட முறைமைகள், மற்றும் சாலைகள், நாகரீகம்; யூதர்கள் தங்களின் பரிசுத்த வேத வசனங்களுடன் பரவலாய்ச் சிதறுதல்; கிரேக்கத் தத்துவத்தின் சாரப்படுத்தும் செல்வாக்கு; புற தெய்வங்களின் மீதான விசுவாசம் சிதைவுறு தல், மற்றும் கிழக்கிலிருந்து ஒரு மாபெரும் ஆட்சியாளர் எழும்புவாரென்ற மிகப் பரவலான எதிர்பார்ப்பு. மற்றும் ரோமப் பேரரசானது தனது நிலப் பகுதிகளை அழிவிற்குள் மூழ்கடித்த காட்டு மிராண்டிகளுக்கு (ஆனாலும் இவர்கள் உலகத்தின் விதியை உருவாக்கும் பலம் வாய்ந்த நாடுகளைத் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டிருந்தனர்) கிறிஸ்தவத்தைக் கொடுக்கு மளவுக்குத் தனது நரம்புகளில் கிறிஸ்தவத்தை முழுமையாக ஏற்கும் வரையிலும் தொடர்ந்திருந்ததென்பது தற்செயலான நிகழ்ச்சி அல்ல.

3. வரலாற்றின் ஆதார மூலங்கள்.—இவைகள் நான்கு சிறு நினைவு களாய் உள்ளன. இவைகள் மத்தேயு, மாற்கு, லூக்கா மற்றும் யோவான் சுவிசேஷங்கள் என்று பொதுவாக அழைக்கப்படுகின்றன.

அ. மத்தேயு (லேவி) என்பவர் இயேசுவின் சீஷராவதற்காகத் தமது ஆயக்கார அல்லது வரி வசூலிப்பு அலுவலகத்தை விட்டு வந்தார் (மத். 9:9; மாற். 2:14). பிற்பாடு இவர் பன்னிரு அப்போஸ்தலர்களில் ஒருவராகத் தேர்ந்து கொள்ளப்பட்டார் (மத். 10:3). இவர் யூதர்களுக்கென்று விசேஷ மாய் எழுதினார். (1) இவர் பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்களை அறுபத்தி ஐந்து முறைகள் சுட்டிக் காண்பிக்கின்றார். ஒரு அதிகாரத்தில் உள்ளதைக் காணுங்கள், மத்தேயு 2:5, 6, 15, 17, 23. (2) எருசலேமுக்கான இவரின் மிகப் பிரியமான பெயர் "பரிசுத்த நகரம்" என்பதாக உள்ளது (4:5; 24:15; 27:53). இவர் இயேசுவை "தாவீதின் குமாரன்" என்று எட்டுமுறை குறிப்பிடுகின்றார் (1:20; 9:27; 12:23), முதலியன.

ஆ. மாற்கு, இயேசுவின் சொந்த சீஷரல்ல, ஆனால் இவர் பேதுருவால் மனம் மாற்றப்பட்டவரும் (1 பேது. 5:13), பவுலின் (பயணத்) துணையாளியு மாக (அப். 13:5; இ.வ. அப். 12:25; 2 தீமோ. 4:11) இருந்தார். இவர் பழைய ஏற்பாட்டிலிருந்து சில மேற்கோள்களைக் குறிப்பிட்டு, யூதப் பழக்க வழக்கங்களுக்குத் (2:18; 13:3; 14:12) தமது மறைவான கருத்துக்களை விளக்கமாய்த் தருவதால் யூதரல்லாத வாசகர்களுக்கு எழுதினார் என்பது தெளிவாகின்றது.

இ. லூக்கா இயேசுவின் சொந்த சீஷர் அல்ல (1:1-4). இவர் ஒரு மருத்துவராயிருந்தார் (கொலோ. 4:14), மற்றும் முதன் முதலாக இவர் பவுலின் பயணத் துணைவர் என்ற வகையில் காட்சியளிக்கின்றார் (அப். 16:10 மற்றும் நடபடிகளில் உள்ள "நாங்கள்" என்ற பிற வசனப்பகுதிகள்).

ஈ. யோவான், முதல் ஐந்து சீஷர்களில் ஒருவராயிருந்தார் (1:35-51). இவர் ஒரு அப்போஸ்தலரானார் (மத். 10:2) மற்றும் "இயேசு மிகவும் அன்பு செய்த" சீஷர் என்று குறிப்பிடப்படுகின்றார் (13:23; 19:26; 20:2). இவர் தொடக்கத்தில் மீன் பிடிப்பவராயிருந்தார் (லூக். 5:1-11).

மத்தேயுவும் லூக்காவும், இயேசுவின் பிறப்பு மற்றும் குழந்தைப் பருவம் பற்றிய விவரத்தைத் தருகின்றனர். மாற்கு, யோவான் ஸ்நானனின் ஊழியம் மற்றும் இயேசு ஞானஸ்நானம் பெறுதல் ஆகியவற்றுடன் தனது நூலைத் தொடங்குகின்றார். மற்ற(மூ)வர்களும் மரித்த நீண்ட நாட்களுக்குப்பின் யோவான் எழுதுகின்றார், அவர்கள் கொடுத்ததை விட்டு விட்ட இவர், இயேசுவின் உரையாடல்களில் பலவற்றைக் கூடுதலாகத் தருகின்றார்/சேர்த்துள்ளார். இவர் (இயேசுவின்) பிறப்பு, ஞானஸ்நானம், சோதிக்கப்படுதல், மலைப்பிரசங்கம், உவமைகள் யாவும், மறுரூபமாகுதல், கர்த்தருடைய பந்தியை ஏற்படுத்துதல், மற்றும் கெத்சமெனேயில் பெருந்துன்பம் ஆகியவற்றை விட்டு விடுகின்றார். முதல் மூன்று சுவிசேஷ விவரங்களின் ஒத்த தன்மையின் காரணமாக அவைகள் ஒப்பீட்டு சுவிசேஷங்கள் என்று அழைக்கப்படுகின்றன.

குறிப்பு

[1]நாளிடுதலின் இன்னொரு வகையான வழிமுறையிலிருந்து இந்தக் காலத்திற்கு கி.மு.2-கி.பி. 33 என்ற காலம் மாற்றாகத் தரப்படுகின்றது.

14

பிறப்பும் குழந்தைப் பருவமும்

மத்தேயு 1, 2; லூக்கா 1, 2

1. தரிசனங்களின் வரிசைத் தொடர்.—சுவிசேஷ வரலாறு நான்கு தரிசனங்களின் வரிசைத் தொடருடன் தொடங்குகின்றது.

அ. சகரியாவுக்கு தரிசனம்.—சகரியா குற்றமில்லாத வாழ்க்கையைக் கொண்ட வயது முதிர்ந்த ஆசாரியராயிருந்தார். தேவாலயத்தில் அவர் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கையில், மேசியாவின் வருகையை தானியேலுக்கு வெளிப்படுத்திய (தானி. 9:21-23) காபிரியேல் என்னும் தூதர் அவருக்குத் (சகரியாவுக்குத்) தோன்றினார், அவர் (காபிரியேல்) அவருடைய (சகரியாவினுடைய) மனைவியாகிய எலிசபெத்துக்கு ஒரு மகன் பிறப்பதன் மூலம் அவர்களின் ஜெபங்கள் பதில் அளிக்கப்பட வேண்டியவையாக இருப்பதாக அறிவித்தார். இவ்வாக்குத்தத்தத்தின் அடையாளம் மற்றும் முத்திரையாக இதன் நிறைவேற்றம் வரையிலும் அவர் ஊமையாய் இருக்க வேண்டியிருந்தது.

ஆ. மரியாளுக்குத் தரிசனம்.—எலிசபெத்துக்கு, தாவீதின் வம்சத்தில் வந்த மரியாள் என்றொரு உறவுப் பெண் இருந்தாள். அவள் யோசேப்பு என்ற பெயர் கொண்ட மனிதருக்கு (திருமணம் செய்விக்க) நியமிக்கப் பட்டிருந்தாலும், இன்னும் திருமணம் ஆகாதவளாயிருந்தாள். அவளும் ஒரு மகனைப் பெறுவாள் என்ற மகிழ்ச்சியான செய்தியுடன் அதே தூதர் (காபிரியேல்) அவளிடத்திற்கு அனுப்பப்பட்டார்: அக்குழந்தை பரிசுத்த ஆவியின் வழித் தோன்றலாக இருக்குமாதலால், தேவனுடைய குமாரன் என்றழைக்கப்படுவார், அவர் மனிதர்களின் இரட்சகராயிருப்பார். சந்தோஷத்தில் மூழ்கிய மரியாள், கலிலேயாவின் நாசரேத்திலிருந்த தனது இல்லத்திலிருந்து புறப்பட்டு தனது உறவினளை(எலிசபெத்தை)ச் சந்திப்பதற்காக யூதேயாவின் மலை நாட்டிற்குச் சென்றாள்.

இ. யோசேப்புக்கு (சொப்பனத்தில்) தரிசனம்.—மரியாள் (மீண்டும்) நாசரேத்தூருக்குத் திரும்பி வந்த பொழுது, அவளது சந்தோஷத்தின்மீது வருத்தத்தின் மேகங்கள் நிழலிட்டன. யூதர்கள் மத்தியில் திருமண நிச்சயதார்த்தம் என்பது திருமணத்தைப் போன்றே பரிசுத்தமானதாயிருந்தது; மரியாள் அந்த பந்தத்தை மீறியதாகக் காணப்பட்டது அவளுக்கு அவகீர்த்தியான மரணத்தைக் கொண்டு வருவதாயிருந்தது. ஆனால் யோசேப்புக்கு ஒளியூட்டிய மூன்றாவது தரிசனமானது நிகழ்ச்சிகளின் மேன்மையான முக்கியத்துவத்தை உணர்த்தியதுடன், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட குமாரன் இம்மானுவேல்—தேவன் நம்மோடிருக்கிறார் என்ற பெயர் உடையவராயிருப்பார் என்று தீர்க்கதரிசனமும் கூடுதலா

யுரைக்கப்பட்டது (இ.வ. மத். 1:23; ஏசா. 7:14).

2. பெத்லகேமில் முன்னணைத் தொட்டில்.—*ஏற்ற காலத்தில் இவ்விரு வாக்குத்தத்தங்களும் நிறைவேற்றப்பட்டன. (தேவனுடைய) தெய்வீக ஆணையின்படி சகரியாவும் எலிசபெத்தும் பெற்ற மகனுக்கு யோவான் என்று பெயரிடப்பட்டது. ஒரு சில மாதங்களுக்குப் பிறகு மரியாள் தனது முதற்பேறான மகனைப் பெற்றாள், (தனக்கு கிடைத்த) தரிசனத்தில் கூறப்பட்டதற்கிணங்க அவரை இயேசு—இரட்சகர் என்று அழைத்தாள். பிற வழி முறைகள் பலவற்றைப் போன்றே இங்கும் மனிதனுடைய திட்டங்கள் தெய்வீக நோக்கத்துடன் அறியா வகையிலேயே உள்ளுறவு படுத்தப்பட்டன. மேசியா பெத்லகேமில் பிறக்க வேண்டியதாயிருந்தது (மீகா. 5:2). மரியாளுடைய இல்லமோ தொலைவில் இருந்த நாசரேத்தூரில் இருந்தது. அகுஸ்து ராயனிடமிருந்து பிறப்பிக்கப்பட்ட மக்கள் தொகைக் கணக்கெடுப்பிற்கான ஆணையானது மரியாளையும் யோசேப்பையும் அவர்களின் சொந்த ஊரான/கிராமமான பெத்லகேமுக்கு அனுப்பியது. மார்ட்டின் லூத்தரின் தாய்க்குப் போலவே, இல்லத்திற்கு வெளியே பிரசவ வேதனையின் விளங்காத வலிகள் மரியாளையும் ஆட் கொண்டன. சத்திரம் கூட்டத்தால் நிரம்பி வழிந்தது, இந்தத் தாழ்மையான தம்பதியார், தொழுவத்தில் தங்கக் கூடிய அளவுக்குத் தான் அவர்களால் ஒரு தங்கும் இடத்தைக் காண முடிந்தது. அங்கே, அகுஸ்து ராயன் பரந்துபட்ட பேரரசின் திட்டங்களில் வெகு மும்முரமாய் ஈடுபட்டிருக்கையில், ஏரோது புதிய கொடுஞ் செயல்களைத் திட்டமிட்டுக் கொண்டிருக்கையில், மற்றும் மாபெரும் உலகத்தில் ஒவ்வொருவரும் தமது சொந்த வழியைப் பின்பற்றி சென்று கொண்டிருக்கையில், மிகச் சிறப்பான நிகழ்ச்சி பற்றி அனைவரும் அறியாதிருக்கையில், தெய்வீக மனிதர் பிறந்தார்.*

3. மேய்ப்பர்களுக்குத் தரிசனம்.—*பூமியானது தனது அரசரின் வருகை பற்றி அறியாதிருந்தது; ஆனால் பரலோகத்தினால் அதை மௌனமாய்க் காத்துக் கொள்ள முடியாமற் போயிற்று. தூதர்கள் மகிழ்ச்சி அலைகளைக் கொண்டு வந்தார்கள், மற்றும் "பூமியின் மீது சமாதானம்"[1] என்ற தங்களின் பாடலைப் பாடினார்கள். இதை அவர்கள் அரசவையில் அரசர்களுக்கோ, அகம்பாவமுள்ள ஆசாரியர்களுக்கோ அல்லது பகட்டுக்காரப் பரிசேயர் களுக்கோ பாடவில்லை, ஆனால் தாழ்மையான மேய்ப்பர்களுக்குப் பாடினார்கள். அவர்கள் உடனே அவரது எளிமையான தொட்டிலுக்குச் சென்றார்கள், அவர்களே உலகத்தின் மீட்பருக்கு முதன் முதலாய் இப்பூமி யில் மரியாதை செலுத்தியவர்களாய் இருந்தார்கள். அவர்கள், "அவருடைய உபதேசத்தை விருப்பத்தோடே கேட்ட"[2] பொது மக்கள் மற்றும் அவருடைய சீஷர்களின் தொகையில் இருந்த மக்கள் ஆகியோரின் முன்னோடிகளாகவும் பிரதிநிதிகளாகவும் இருந்தார்கள்.*

4. தேவாலயத்தில் (இந்தக்) குழு.—*யூதப் பழக்கத்தின்படி எட்டாம் நாளில் விருத்தசேதனமும் பெயரிடுதலும் நடைபெற்றது. நாற்பது நாட்கள் முடிந்த பொழுது, பிள்ளைப் பிறப்பு நிகழ்வுக்குச் செலுத்த வேண்டிய பலியை (லேவி. 12) செலுத்துவதற்காக மரியாள் (பெத்லகேமில் இருந்து) ஆறு மைல்கள் தொலைவில் இருந்த எருசலேமுக்கு வந்தாள். "தேவாலயத்*

தின் கர்த்தர் கர்த்தருடைய தேவாலயத்திற்கு வந்தார்." அதன் மேன்மை மிக்க முற்றத்தில் இருந்த வேதபாரகர் மற்றும் ஆசாரியருடைய இலேசான கவனத்தை (மட்டுமே) ஈர்க்கக் கூடிய அளவுக்கு அவர்களின் ஏழ்மை (இ.வ. லூக். 2:24; லேவி. 12:8) தெளிவாய் விளங்கியது. ஆனால் பெத்லகேமின் மலைகளில் போன்றே, அங்கும் (எருசலேமில்) கூட தெய்வீகத் தூண்டுதல் களுக்குத் திறந்திருந்தவைகளும் நீண்ட காலமாய் எதிர்பார்க்கப்பட்ட மேசியாவை மகிழ்வுடன் உணர்ந்தறிந்து மெய்சிலிர்த்தவைகளுமான ஆத்து மாக்கள் இருந்தனர். அப்படிப்பட்டவர்களில் முதிர் வயதான சிமியோன் மற்றும் அன்னாள் ஆகியோர் பெயர் குறிப்பிடப்படுகின்றார்கள். அவர்கள் எபிரெய இனத்தை மாண்புறச் செய்திருந்த தீர்க்கதரிசன ஆவியின் பிரதிநிதிகளாய் இருக்கின்றனர், மற்றும் இயேசுவை மேசியா என்று முதன் முதலாய் வெளிப்படையாக அறிக்கையிட்டவர்களாய் இருந்தனர்.

5. ஞானிகளின் வருகை.—*ஆனால் பெத்லகேமின் குழந்தையினுடைய தொட்டிலை இஸ்ரவேலின் குடியானவர்களும் தீர்க்கதரிசன ஆவிக(ளையுடைவர்க)ளும் மாத்திரம் சுற்றிச் சூழ்ந்திருக்கவில்லை. மாபெரும் தொலைவிலிருந்த வரம் பெற்ற ஆத்துமாக்களும் கூட (இயேசு பிறப்பு பற்றிய) வெளிப்படுத்துதலினால் மெய்சிலிர்த்தனர். கிறிஸ்துவுக்கு மரியாதை செலுத்திய வட்டாரத்தினுள் தேவ பக்தியற்ற உலகமும் குறிப்பிடப்பட்டது. "கிழக்கிலிருந்து சாஸ்திரிகள் எருசலேமுக்கு வந்து, யூதருக்கு இராஜாவாகப் பிறந்திருக்கிறவர் எங்கே? கிழக்கிலே அவருடைய நட்சத்திரத்தைக் கண்டு, அவரைப் பணிந்து கொள்ள வந்தோம் என்றார்கள்."[3] அவர்களின் பெயர்கள் மற்றும் அவர்களின் நாடுகள் பற்றிய பாரம்பரிய வரலாறுகளும், அந்த நட்சத்திரத்தின் இயல்பு மற்றும் அவர்களின் அறிவின் அளவு பற்றிய யூகங்களும் பயனற்றவைகளாய் உள்ளன. ஆனால் அவர்கள், மிகப் பரந்த அளவில் (தேவனுக்கு) புறம்பே இருந்த தேவபக்தியற்ற உலகின் தெளிவற்ற ஏக்கங்கள் மற்றும் நம்பிக்கை யின் பிரதிநிதிகளாக நிலைநின்றனர், மற்றும் தேவபக்தியற்ற உலகம் யாவும் நமது அரசரை அன்புடன் ஆராதிப்பதில் ஒன்றிணையும் காலத்தின் தீர்க்கதரிசனமாகவும் இருந்தனர்.*

6. ஏரோதின் கட்டளையும் எகிப்துக்குத் தப்பியோடுதலும்.—*ஏரோது மன வேதனை என்ற வியாதியில் மூழ்கிக் கொண்டிருந்தார். அமைதி யற்றிருப்பதற்கு அவரிடத்தில் அனைத்துக் காரணங்களும் இருந்தன, ஏனெனில் அவரது அரியணையானது அவரது பொறாமை நிறைந்த வெறுப்பினால் பாதிக்கப்பட்டவர்களின் (அழிவின்) மீதுதான் நிலை கொண்டிருந்தது. அவரது அரசாட்சி முழுவதிலும் திரைமறைவான சூழ்ச்சிகள் பரந்து கிடந்தன. அப்படிப்பட்ட வேளையில், அப்படிப்பட்ட மனிதருக்கு, ஞானிகளின் விசாரணையானது குறுவாளால் குத்தப்பட்டது போலிருந்தது. ஆனாலும் பயங்கரத்தையும், கொலை செய்யும் நோக்கத்தை யும் மறைத்து வைத்த ஏரோது, ஞானிகளிடத்தில் அவர்கள் பிள்ளையைக் கண்டறிந்ததும் தமக்குத் தகவல் அளிக்கும்படி கட்டளையிட்டார். அவர்களோ தெய்வீக அறிவிப்புக்குக் கீழ்ப்படிந்து வேறு வழியாகத் தங்கள் நாட்டிற்குத் திரும்பிச் சென்றார்கள். ஏரோது, பெத்லகேமிலும் அதன்*

சுற்றுப்புறங்களிலும் இருந்த ஒன்றுமறியாதவர்களின்(குழந்தைகள்)மீது மூர்க்கத்தனத்தைக் காட்டினார். ஆனால் பாவத்திற்காக மனமுவந்த பலியாக அவர் (இயேசு) தம்மையே ஒப்புக் கொடுக்கக் தயாராகும் வரையிலும் அவரது உயிருக்கு எதிராக ஏதொரு சதிச் செயலும் வெற்றி யடையக் கூடாதிருந்தது. “அவர் (ஏரோது) தனது பட்டயத்தைக் கூட்டிற் குள் செலுத்தினார், ஆனால் பறவை பறந்து சென்று விட்டது.” எப்பொழு துமே தெய்வீக நடத்துதல்களின் மீது கவனமாயிருந்த யோசேப்பு, ஏரோதின் எல்லைகளுக்கு அப்பால் இருந்ததும், ஆனாலும் ஏராளமான யூத மக்களின் வட்டாரத்திற்குள்ளாக இருந்ததுமான எகிப்துக்குத் தப்பிச் சென்றிருந்தார். பிறகு விரைவிலேயே ஏரோது மரித்தார். ஆனாலும் யூதேயாவில் தனது தகப்பனின் அரியணைக்கும் கொள்கைக்கும் தகப்பனுக்குப் பின் வந்த மகனாகிய அர்கெலாயுவுக்குப் பயந்த யோசேப்பு நாசரேத்திலிருந்த தனது சொந்த இல்லம் திரும்பினார்.

குறிப்புகள்

[1]லூக். 2:14. [2]மாற். 12:37. [3]மத். 2:1, 2.

15

தயாரிப்பின் காலகட்டம்

மத். 3-4:11; மாற். 1:1-13;
லூக். 2:40-4:13; யோவா. 1:19-28

I. நாசரேத்தூரில் அமைதியான ஆண்டுகள்.

முப்பது ஆண்டுகளாக இயேசுவின் இல்லமானது/இருப்பிடமானது நாசரேத்தூரில் இருந்தது. நாட்டுப் புறத்திலிருந்த அந்தச் சிறு கிராமமானது யூதேயா மற்றும் எருசலேமில் இருந்த அதிக கலாச்சாரம் வாய்ந்த யூதர்களால் இழிவாய்க் கருதப்பட்டிருந்தது; மற்றும் இயேசு மறைவில்/இருளில் இருந்து உதித்தெழும்பிய பொழுது, அவரும் அவருடைய சீடர்களும் நசரேயர்கள் என்று இகழ்ச்சியாக அழைக்கப்பட்டனர்.

1. ***சுவிசேஷங்களில் சுய கட்டுப்பாடு.***—*அவரது (இயேசுவின்) தொட்டில், அவரது ஊழியம் மற்றும் அவரது சிலுவை ஆகியவற்றைச் சுற்றிலும் கூடிய (மக்கள்) கூட்டத்தின் நிகழ்ச்சிகளினுடைய வளமைக்கு, இந்த முப்பது ஆண்டுகளின் அமைதி குறிப்பிடத்தக்க வகையில் நேர்மாறாக உள்ளது. ஏவுதல் பெற்றிராத மனிதர்கள் (தனி மனிதர்களின்) வரலாற்றுக் குறிப்பை இவ்விதமாக எழுவதில்லை. அவர்கள், பிள்ளைப் பிராய நிகழ்ச்சிகள், மலருகின்ற மேதையின் அடையாளங்கள் மற்றும் நிச்சயத் தன்மைகள் பற்றி அதிகம் கூற அவற்றில் நிலைத்த கருத்துக் கொண்டுள்ளனர். தள்ளுபடி செய்யப்பட்ட சுவிசேஷங்களின் எழுத்தாளர்கள் இயேசுவின் தொடக்க ஆண்டுகள் பற்றி இவ்விதமான ஆவியைக் கொண்டு எழுதினார்கள். அவரைக் கனப்படுத்துவற்கென்று அவர்கள் தங்கள் (புத்தகங்களின்) பக்கங்களை, நடந்ததாகவும் காலத்திற்கு முந்தியதாகவும் உள்ள அற்புதங்கள் பற்றிய விவரங்களினால் நிரப்புகின்றனர், ஆனால் உண்மையில் அவைகள் அவரைக் கனவீனப்படுத்துபவைகளாகவே உள்ளன. நமது சுவிசேஷங்களின் சுயகட்டுப்பாடானது அவைகளின் வரலாற்றினுடைய உண்மைத்தன்மைக்கும் எழுத்தாளர்களின் ஏவுதல் பெற்ற தன்மைக்கும் நிரூபணமாய் உள்ளது.*

2. கல்வி சார்ந்த செல்வாக்குகள்.—*இயேசு சோம்பேறித்தனத்திலோ அல்லது அறியாமையிலோ வளரவில்லை. அவர் ஒரு தச்சராக, தச்சர் ஒருவரின் புகழ் பெற்ற மகனாக இருந்தார் (மத். 13:55; மாற். 6:3). ஒவ்வொரு யூதச் சிறுவனும் தொழில் ஒன்றைக் கற்றறிந்தனர். குடியானவர்கள் வாசிக்கவும் எழுதவும் கூடியவர்களாயிருந்தனர். அவரது கல்லாமை பற்றிய வசனக் குறிப்பு (யோவா. 7:15) அவர் இரபீக்களின் பள்ளியில் கல்வி கல்லாததை மட்டுமே அர்த்தப்படுத்துகின்றது; நமது கூற்றுப்படி, அவர் ஒரு*

கல்லூரிப் படிப்பு படித்தவரல்ல. அவர் மூன்று மொழிகளில் பழக்கம் கொண்டவராய் இருந்தார்: அவரது தாய் மொழியான அரமாயிக்; வேத வசனங்களின் மூலமொழியான எபிரெயம், மற்றும் இலக்கிய மொழியான கிரேக்கம், வேத வசனங்களின் முழுமையான பிரதியொன்றைச் சொந்த மாய்க் கொண்டிருக்கக் கூடாத அளவுக்கு அவர் ஏழையாய் இருந்திருப் பினும், (அவர் வாழ்ந்த) கிராமத்தின் ஜெப ஆலயம் அவர் அதைப் பெற வழி செய்திருக்கும்; அந்தத் தச்சரின் இல்லத்தில் வேத வசனத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறு பிரிவுகள் சொந்தமாக வைத்துக் காக்கப்பட்டும் இருந்திருக்கலாம்.

3. எருசலேமுக்கு அவரது வருகை.—கல்விக்கான முக்கியமான ஒரு வழி முறை குறிப்பிடப்பட்டுள்ளது (லூக். 2:46-51). அவரது பெற்றோர்கள் ஆண்டுதோறும் பஸ்காவிற்காக எருசலேம் சென்றார்கள். அந்தப் பயண மானது வரலாற்று இணைவுகளில் வளம்மிக்க நாட்டினூடே எண்பது மைல்கள் கடந்து செல்லுவதாக இருந்தது. எருசலேம் நகரம் அதன் மக்களால், வேறு எந்தத் தலைநகரைக் காட்டிலும் மிகவும் அதிகமாய் நேசிக்கப்பட்டது. பல நாடுகளிலிருந்து வந்த பல மொழிகளைப் பேசும் (யூத) மக்கள் அதன் தெருக்களில் நிரம்பி வழிந்து அதன் தேவாலயத்தில் கூட்டமாய்க் கூடினார்கள். மதிநுட்பம் வாய்ந்த, உற்சாகமான ஒரு சிறுவனுக்கு இப்படிப்பட்ட வருடாந்திரப் பயணமானது, தன்னிலேயே ஒரு கல்வியாய் இருந்திருக்க வேண்டும். முப்பது ஆண்டுகளில் ஒரே ஒரு முறைதான் தெளிவின்மையின் திரையானது தூக்கப்பட்டுள்ளது. பன்னிரெண்டு வயது என்பது யூதச் சிறுவனுக்குத் திரும்புமுனையாக இருந்தது. அவர் பன்னிரெண்டு வயதில் (தச்சுத்) தொழிலைக் கற்கத் தொடங்கினார்; “வளர்ந்தவர்” என்றழைக்கப்பட்டார்; இனியும் அவர் தந்தையினால் விற்கப்பட/விருப்பத்திற்குப் பயன்படுத்தப்படக் கூடாத வராயிருந்தார்; தோல் சுருள்களை வைக்கும் பெட்டியை அணியத் தொடங் கினார், மற்றும் “நியாயப்பிரமாணத்தின் மகன்” என்றழைக்கப்பட்டார். இந்தச் சிக்கலான வயதில் இயேசு எருசலேமுக்குத் தமது முதற் பயணத்தை மேற்கொண்டார் என்று காணப்படுகின்றது. அவர் தவறவிடப்பட்ட பொழுது பயணக் குழுவானது வீடு நோக்கிய பயணத்தில் ஒரு நாளை முடித்திருந்தது. அவர்களது பெற்றோர் எருசலேமுக்குத் திரும்பி வந்து ஒரு நாள் முழுவதும் ஏக்கத்தோடு அவரைத் தேடினார்கள். கடைசியில் அவர்கள் அவரைத் தெருவில் (விளையாடும்) பையன்களுடன் காணவில்லை; சுற்றிப் பார்த்துக் கொண்டிருந்தவராகவும் காணவில்லை, ஆனால் தேவாலயத்தில் நியாயப்பிரமாண வல்லுநர்கள் போதிப்பதைக் கேட்பவராகவும், அவர்களிடத்தில் கேள்வி கேட்பவராகவும் அவரைக் கண்டனர். “நீங்கள் ஏன் என்னைத் தேடினீர்கள்? என் பிதாவுக்கடுத்தவைகளில் நான் இருக்க வேண்டியதென்று அறியீர்களா?”[1] பதிவு செய்யப்பட்ட அவரது முதல் வார்த்தைகள் இப்படிப்பட்டவைகளாய் உள்ளன, மற்றும் இவை அவரது முழு வாழ்வுக்கும் திறவுகோல் குறிப்பாக உள்ளன. அவர்களுடன் அவர் நாசரேத்தூருக்குத் திரும்பி வந்தாலும், அவர்களுக்குத் தொடர்ந்து கீழ்ப் படிந்திருந்தாலும், ஆண்டுதோறும் எருசலேமுக்குச் சென்ற பயணமானது

அவரது பண்பு வடிவமைக்கப்படுதல் மற்றும் அவரது திட்டத்தின் பக்குவமடைதல் ஆகியவற்றில் முக்கியமான செல்வாக்கை வகித்தன என்பதில் சந்தேகமில்லை.

இயேசு தமது தெய்வீக இயல்பையும் நபர்த்தன்மையையும் பற்றிய உணர்வடைந்தது எவ்வாறு மற்றும் எப்படி என்று நாம் கேட்காதிருக்க முடியாது. அது அவருக்குள் திடீரென்று மின்னலடித்ததா அல்லது சாதாரணக் குழந்தையிடம் காணப்படும் உணர்வுள்ள நபர்த்தன்மைபோல் படிப்படியாக உதயமாயிற்றா? அது அவரது பிறப்பு பற்றிய அமைதியான இல்ல உரையாடல்களிலிருந்து எழும்பிற்றா அல்லது அவருக்குள்ளாகவே இருந்து வெளிப்பட்டதா? இப்படிப்பட்ட கேள்விகள் நம்மை நமது ஆழத்திற்கப்பாலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளவைகளுக்கு அப்பாலும் கொண்டு செல்லுகின்றன. இருப்பினும், அவர் தம் பன்னிரு வயதில் தமது தெய்வீகப் பெற்றோர்த்துவம் பற்றி முழு உணர்வுடையவராயிருந்தார் என்று தெளிவாய்க் காணப்படுகின்றது.

4. அமைதியான ஆண்டுகளின் பாடங்கள்.—இயேசு தமது பிதாவுக் கடுத்த அலுவல்களில் மூன்று ஆண்டுகள் மட்டுமே வெளிப்படையாக ஈடுபட்டிருந்தார்; இருப்பினும் அவர் திரளான கூட்டங்களுக்குப் போதித்த வேளையிலும், அல்லது நம் பாவங்களுக்காகச் சிலுவையில் மரித்த பொழுது செய்தது போன்றே அமைதியான (30) ஆண்டுகளிலும் தேவனுடைய ஊழியத்தை உண்மையாகவே செய்து வந்தார். இயேசு என்னவாக இருந்தார் என்பதைக் கொண்டே அவர் செய்தவை அளவிடப்படுகின்றன; அவர் முப்பது ஆண்டுகளில், “ஞானத்திலும், வளர்த்தியிலும், தேவனுடைய கிருபையிலும் மனுஷர் தயவிலும்”[2] அதிகமதிகமாய் விருத்தியடைந்தார். பண்பு என்பதே உலகின் இன்றியமையாத தேவையாக உள்ளது; மற்றும் நாசரேத்தின் இருளிலிருந்து வெளிவந்த இப்படிப்பட்ட ஒரு மனிதத் துவத்தை உற்பத்தி செய்ததற்கான எந்த ஆண்டும் வீணாக்கப்படவில்லை.

II. ஸ்நானனின் ஊழியம்.

1. தீர்க்கதரிசனத்தின் மறுமலர்ச்சி.—வெளிப்படையான தீர்க்க தரிசனத்தின் கடைசிக் குரல் கேட்கப்பட்டு நான்கு நூற்றாண்டுகள் கடந்து சென்றிருந்தன. கடைசி எபிரெயத் தீர்க்கதரிசியும் (மல். 4:5, 6) மற்றும் ஏசாயாவும் கூட (ஏசா. 40:3), மேசியாவுக்கு முன்னோடியைக் குறித்து முன்னுரைத்திருந்தனர். (யோவானின்) பிறப்பு பற்றிய அறிவிப்பின் போதும், மீண்டும் அவரது பிறப்பின் போதும் யோவான் அம்முன்னோடி யென்று சுட்டிக்காட்டப்பட்டிருந்தார். அவரது பிறப்பு மற்றும் விருத்த சேதனம் பற்றிய விவரமான குறிப்பிற்குப் பிறகு, முப்பது ஆண்டுகளுக்கு அவரைப் பற்றிய விஷயங்கள் எல்லாவற்றையும் ஒரே ஒரு வாக்கியத்தில் பதிவு செய்துள்ளதாக உள்ளது (லூக். 1:80). அவர் பிறப்பிலிருந்தே நசரேயனாய்[3] இருக்க வேண்டியிருந்தது (லூக். 1:15; இ.வ. எண். 6:1-5); மற்றும் அவர் பாலை நிலத்திலிருந்து உதித்தெழுந்து வந்த பொழுது, அது பழைய எபிரெயத் தீர்க்கதரிசிகளின் பழக்கத்திலிருந்து வலிவுடன்

பற்றியிழுக்கப்பட்டதாயிருந்தது. நீண்ட காலமாக அவர் தனிமைப் பட்டிருந்ததென்பது, சந்தேகமின்றி, சுய ஒழுக்கக் கட்டுப்பாட்டிலும் அக்காலத்தின் பாவங்கள்மீதான ஆழமிக்க தியானத்திலும் மற்றும் மேசியாவைப் பற்றியும் அவரது இராஜ்யத்தைப் பற்றியும் தீர்க்கதரிசனக் காட்சிகளிலும் செலவிடப்பட்டிருக்கும். அவர் நகரங்களை நாடவில்லை, ஆனால் வனாந்தரத்தில் பிரசங்கித்தார், அது யோர்தான் நதிக்கரையோர மாய் எளிய குடியமர்வுப் பகுதியில் இருந்த நிலையில் செய்யப்பட்டது.

2. அவரது ஊழியத்தின் வல்லமை.—அவரது இரண்டாண்டுகள் ஊழியமானது பெரும்பாலான ஐம்பதாண்டுகள் ஊழியத்தைக் காட்டிலும் அதிகமானவற்றை நிறைவேற்றியது. அவர் "ஒரு அற்புதத்தையும் செய்ய வில்லை" (யோவா. 10:41), ஆனால் விரைவிலேயே நாடு முழுவதும் அவரது காலடியின் கீழ் வரப் பெற்றிருந்தது. முரட்டுத்தனமான கிராம மக்கள் மட்டுமின்றி, தலைநகரிலிருந்த பண்பட்ட வேதபாரகர்களும் பரிசேயர் களும் கூட இந்த இரண்டாவது எலியாவின் கூற்றைக் கேட்பதற்கு கூட்டமாய் வந்தார்கள். கடைசியில் தங்கள் ஆத்துமாக்களுக்கான செய்தியுடன் ஒரு மனிதர் வந்திருந்ததாக மக்கள் இங்கு உணர்ந்தார்கள். அவர் அந்த நாட்களின் போதகர்களைப் போன்று வெந்தயம், புதினா, சீரகம் ஆகியவற்றின் கேள்விகள் பற்றியோ, தோல் சுருள் பெட்டிகளின் அகலம் பற்றியோ அல்லது ஓய்வு நாள் பிரயாண தூரத்தின் நீளம் பற்றியோ ஏற்பட்ட கேள்விகளில் தீவிரம் காட்டவில்லை. நாட்டை/இனத்தை வெறுமையிலிருந்து உண்மை நிலைக்குத் திரும்ப அழைப்பித்தல் என்பதே அவரது ஊழியத்தின் ஒரு பாகமாய் இருந்தது. அவர் படை வீரர்களின் வன்முறையை, ஆயக்காரர்களின் பேராசையை, பரிசேயர்களின் மாய் மாலத்தை மற்றும் எல்லாருடைய சுயநலத்தைக் கண்டித்தார் (லூக். 3:10-14).

3. இராஜ்யம் சமீபித்துள்ளது.—யோவானின் ஊழியம் தன்னில்தானே முடிந்து போன ஒன்றாயிருக்கவில்லை. அது ஒரு *தயாரிப்பாக* இருந்தது. "மனந்திரும்புங்கள், பரலோக இராஜ்யம் சமீபித்திருக்கிறது"[4] என்பதே அதன் சுமையாய் இருந்தது. அவர் தாம் கிறிஸ்து என்று உரிமைகோர வில்லை, ஆனால் தாம் ஆயத்தக் குரலொலியாய் இருப்பதை உரிமை கொண்டாடினார் (யோவா. 1:19-23). தமது செய்தியை வலியுறுத்து வதற்காக அவர் "மனந்திரும்புதல்" மற்றும் "மன்னிப்புக்கான" ஞானஸ் நானத்தினால் (மக்களை) முழுக்காட்டினார்; அதே வேளையில் "வரப் போகிறவராயிருந்த" மற்றும் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் கொடுக்க இருந்தவரை விசுவாசிக்கும்படி மக்களை அழைத்தார் (மாற். 1:7, 8; இ.வ. அப். 19:4). ஆழ்ந்த உறக்கத்திலிருந்த இனத்தை தட்டியெழுப்புதல், அதன் உணர்வைத் துரிதப்படுத்துதல், மேசியா பற்றிய எதிர்பார்ப்பின் ஜுவாலை யைத் தூண்டிவிடுதல், முதலாவது தம் மீது அதனை மையப்படுத்துதல், பின்பு அதை இயேசுவை நோக்கி மாற்றுதல்—இவை போன்றதே அவரது சுருக்கமான ஊழியத்தின் நோக்கமும் விளைவுமாய் இருந்தது.

4. இயேசு ஞானஸ்நானம் பெறுதல்.—இயேசு ஞானஸ்நானம் பெறும் நிகழ்ச்சியுடன் உச்சக்கட்டம் வந்தது. பாவம் நிறைந்த கூட்டத்தினருடன் ஒரு நாள், மரியாளின் பாவமற்ற மகன் வந்தார். அவ்விருவரும் (முன்)

எப்பொழுதாவது சந்தித்திருந்தார்களா என்பது பற்றி நாம் அறிவதில்லை. (ஆனால்) அவரை மேசியா என்ற வகையில் யோவான் அதுவரை அறிந்திருந்ததில்லை என்பது உறுதி (யோவா. 1:31-34). ஆனால் பரிசேயரையும் அரசரையும் தைரியமாய் எதிர்கொள்ள வல்லமை கொண்டிருந்த சிங்கம் போன்ற அந்தத் தீர்க்கதரிசி இயேசு என்ற இணையற்ற மனிதத்துவத்திற்கு முன்பாக ஆழ்ந்த தாழ்மையுடன் வீழ்ந்து வணங்கினார்; "நான் உம்மிடத்தில் ஞானஸ்நானம் பெற வேண்டியதாயிருக்க, நீர் என்னிடத்தில் வரலாமா?"[5] இயேசு பெற்ற ஞானஸ்நானம், நாம் பெற்ற ஞானஸ்நானத்தைப் போன்றதல்ல; அது "மனந்திரும்புதலுக்கான" ஞானஸ்நானமாகவோ, அல்லது "மன்னிப்புக்கான" ஞானஸ்நானமாகவோ இல்லாதிருந்தது. இருப்பினும் இது யோவான் மற்றும் இயேசு ஆகிய இருவருக்கும் ஆழ்ந்த பொருள் உள்ள தனிச் சிறப்பை அணிவித்தது. யோவானைப் பொறுத்தமட்டில், திறந்த வானமும், இறங்கி வந்த ஆவியானவரும், "இவரே என் நேச குமாரன்"[6] என்ற தெய்வீகக் குரலும், இவரே மேசியா இவருக்கு முன் தாம் சிறுக வேண்டும் என்பதைச் சந்தேகத்திற்கு இடமின்றி மெய்ப்பித்தன. நமக்குப் போன்றே இயேசுவுக்கும் ஞானஸ்நானம் வாழ்வில் ஒரு திருப்புமுனையைக் குறிப்பிட்டது; ஆவியானவர் பொழியப்பட்டார்; அவரது தெய்வீக மகவுரிமை சொந்தமாக்கப்பட்டது: "தண்ணீருக்குள் மூழ்கும் முன்பாகவே பரிசுத்தமும் சுத்தமுமாய் இருந்த அவர் தண்ணீரிலிருந்து உயர்வான மகிமையின் ஒளியுள்ள முகத்துடன் எழுந்திருந்திருக்க வேண்டும். அவரது கடந்த காலம் மூடப்பட்டது; ஒரு புதிய யுகம் தொடங்கியிருந்தது. அதுவே ஒரு புதிய வாழ்வில் அவர் பிரவேசித்த தருணமாய் இருந்தது. கடந்து சென்ற ஆண்டுகள் யோர்தான் ஆற்றுத் தண்ணீரில் புதைக்கப்பட்டன. அங்கு அவர் மனித குமாரனாகிய இயேசுவாகப் பிரவேசித்து, அதிலிருந்து அவர் தேவனுடைய கிறிஸ்துவாக எழும்பினார்."[7]

5. சோதிக்கப்படுதல்.—இயேசு இப்பொழுது தம்முடைய மாபெரும் ஊழியத்தின் நுழைவாயிலில் இருக்கின்றார். முப்பது ஆண்டுகளினூடாக அவரது மனித இயல்பானது தெய்வீகத்திற்குத் தகுதி வாய்ந்த ஒரு கருவியாகப் பக்குவப்பட்டிருந்தது. அவரது திட்டங்களும் அதே அளவுக்குப் பக்குவப்பட்டிருந்தன. முடிவு வரையிலும் அவற்றை நிலையாகப் பின்பற்ற அவர் தைரியம் கொண்டிருப்பாரா? அதுதான் சோதிக்கப்படுதலானது பதில் தர வேண்டிய கேள்வியாக இருந்தது. இதற்கான திறவுகோலானது, அற்புத ஊழியம் செய்யும் அரசியல் ரீதியான மேசியாவை நோக்கியிருந்த யூதர்களின் எதிர்பார்ப்பில் காணப்பட வேண்டியதாக உள்ளது. சோதனைக்காரான் வெளிப்படையான வடிவத்தில் வந்தானா? அல்லது அவன் நம்மை உள்ளான மற்றும் பாவம் நிறைந்த ஆலோசனைகளினால் மிகவும் அடிக்கடி வெற்றிகரமாகத் தாக்குவது போல இயேசுவைத் தாக்கினானா? இதை நாம் ஒருக்காலும் அறியாமல் போகலாம். சோதனையானது மூன்று வடிவங்களில் வந்ததென்று நாம் அறிகின்றோம்:

அ. உடல் ரீதியான பசியின் மூலம்.—"இந்தக் கல்லுகள் அப்பங்களாகும்படி சொல்லும்"[8]; இது, (1) அவருடைய தந்தையின் கவனிப்பின்மீது நம்பிக்கையின்மை, (2) அவரது அற்புதம் செய்யும் வல்லமையைச்

சுயத்திற்காகப் பயன்படுத்துதல் ஆகியவற்றிற்கான சோதனையாயிருந்தது. ஆனால் ஊழியம் கொள்வதற்கல்ல, ஊழியம் செய்வதற்கே"[9] வந்த அவர் தமது இயற்கைக்கு மேலான வரங்களை சுயநல நோக்கங்களுக்காக துஷ்பிரயோகம் செய்வதினால் தொடங்க மாட்டார்.

ஆ. தேவனில் அவர் கொண்டுள்ள நம்பிக்கையின் மூலம்.—"நீர் தேவனுடைய குமாரனேயானால் தாழக்குதியும்"[10] ஆனால் தேவனுடைய பராமரிப்பின்மீது அவ நம்பிக்கை கொள்ளாத ஒருவர், திரளான கூட்டத்தைத் திகைக்கச் செய்வதற்கு அந்தப் பராமரிப்பை முன் அனுமானம் செய்து கொள்ள மாட்டார்.

இ. ஆளுகைக்கான அவருடை திட்டங்களின் மூலம்.—இயேசு மேசியாவாக உள்ளார். அவர் இந்த பூமி முழுவதன் மீதும் ஆளுகை செய்ய வேண்டியவராய் இருக்கின்றார். "நீர் சாஷ்டாங்கமாய் விழுந்து என்னைப் பணிந்து கொண்டால்"[11] ஆவிக்குரிய வழிமுறைகளினால் மெதுவாக வெற்றி கொள்ளக் காத்திராதே. மாம்சப் பிரகாரமான ஆயுதங்களைப் பயன்படுத்து. உன் மக்கள் மீதான பூமிக்குரிய நம்பிக்கைகளுடன் ஒப்பந்தம் செய்து கொள். உன்னால் வெற்றி கொள்ளப்பட முடியாத அரியணை எது? இது யானைப் பாகன் தனது பட்டயத்தை உருவிய பொழுது இணங்கிச் சென்ற சோதனையாகவும், சபையானது நிர்ப்பந்திக்கப்படுதலை ஒப்புக்கொள்ளும் பொழுதெல்லாம் இணங்கிச் செல்லுகின்ற சோதனையாகவும் இருந்தது.

இயேசு வெற்றி பெற்றார், சோதனைக்காரன் "சில காலம் அவரை விட்டு விலகிப் போனான்"[12] ஆயினும் பொறாமை கொண்ட வேதபாரகர்கள், யூதாஸ் மற்றும் சனதெரீன் சங்கத்தாரின் சூழ்ச்சிகள் மற்றும் சிலுவையைச் சுற்றிலும் ஆர்ப்பாட்டமிட்ட வெறுப்பு ஆகியவற்றின் வடிவில் அவன் மீண்டும் திரும்பி வந்தான். ஆனால் "எல்லா விதத்திலும் நம்மைப் போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராய் இருக்கிற" (எபி. 4:15) அவருடைய உறுதியான ஆத்துமாவிற்கெதிராக எவ்வித வல்லடிகளும் வெற்றி கொள்ள இயலாதிருந்தது.

குறிப்புகள்

[1]லூக். 2:49. [2]லூக். 2:52. [3]அல்லது நாசிரித். [4]மத். 3:2; 4:17; மாற். 1:14ஆ, 15ஐயும் காணவும். [5]மத். 3:14. [6]மத். 3:17. [7]Geikies "Life of Christ," Vol. 1., p. 413. [8]மத். 4:3; லூக். 4:3. [9]மத். 20:28; மாற். 10:45. [10]மத். 4:6; லூக். 4:9.

[11]மத்.4:9; லூக். 4:7. [12]லூக். 4:13; மத். 4:11ஐயும் காணவும்.

16

தெளிவற்ற கால கட்டம்

யோர்தானுக்குத் திரும்பியதிலிருந்து கலிலேயாவுக்குத் திரும்பியது வரைக்கும் யோவான் 1:29-4:54

இந்தக் காலகட்டத்தின் தன்மைகள்.—இந்தக் காலகட்டம்—பின் குளிர்காலத்திலிருந்து முன் குளிர்காலம் வரை உள்ள - ஒன்பது அல்லது பத்து மாதங்களைக் கொண்டுள்ளது. இதன் பதிவேடுகள் வெகு சிலவாகவும் துணுக்கானதாகவும் உள்ளன. இந்தக் காரணத்தினாலும், மற்றும் இயேசு மெதுவாகவே பொதுக் கவனத்திற்கு வந்தார் என்ற உண்மையினாலும், இது தெளிவற்ற காலகட்டம் என்று அழைக்கப்பட்டுள்ளது. இது பெரும்பாலும் யூதேயாவிலேயே செலவிடப்பட்டது, மற்றும் இதைப் பற்றி நாம் அறிந்துள்ள சில விஷயங்களுக்காக நாம் யோவானுக்குக் கடன் பட்டுள்ளோம். இது அதிகமான அற்புதங்கள் நிகழ்த்துதல் என்பதற்கு மாறாக, போதித்தலின் ஆண்டாகவும், வெளிப்படையான உரையாடல் என்பதற்கு மாறாக, தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான போதனையின் ஆண்டாகவும் இருந்தது. இயேசுவின் ஊழியத்தினுடைய வளரும் வல்லமைக்கு முன்பாக யோவானின் ஊழியம் தேயத் தொடங்கினாலும், அது தொடர்ந்துகொண்டுதான் இருந்தது (யோவா. 4:1-3). தொடக்க நாட்கள் கலிலேயாவில் கடந்து சென்றன; இக்காலகட்டத்தின் பெரும் பாலான பகுதியானது யூதேயாவில் கடந்து சென்றது.

I. கலிலேயாவில் தொடக்க கால ஊழியங்கள்.

1. முதல் சீஷர்கள்.—இயேசு சோதிக்கப்பட்ட பிறகு தமது சகாப்தத்தை ஏற்படுத்தும் ஊழியத்தில் பிரவேசிப்பதற்காக யோர்தானுக்குத் திரும்பினார். அங்கு அவர் தேவ ஆட்டுக்குட்டி என்று யோவானால் சுட்டிக் காட்டப்பட்டார். ஐந்து இளம் மனிதர்கள், ஒரு பகுதி யோவானின் சாட்சியத்தினாலும், சந்தேகமின்றி இயேசுவின் சொந்த போதனை மற்றும் ஆளுமைத் தன்மையினால் அதிகம் வல்லமை நிறைந்த வகையிலும் அவருடைய சீஷத்துவத்திற்குள் இழுக்கப்பட்டனர். யோவானின் சீஷர்கள் இயேசுவின் (சீஷத்துவ) அமைப்பினுள் மொத்தமாகச் செல்லாதிருந்தனர்; ஆயினும் இந்தக் காலம் முழுவதிலும் இயேசு பெருகத் தொடர்ந்தார் மற்றும் யோவான் சிறுகத் தொடந்தார்; மற்றும் மாபெரும் ஆத்துமாவைக் கொண்ட முன்னோடி அவ்விதமாகவே அதைக் கொண்டிருப்பார் (யோவா.

3:25-30). இந்த முதல் ஐந்து சீஷர்களின் பெயர்கள் மறக்கப்படக் கூடாது. அவைகள் யோவான், அந்திரேயா, பேதுரு, பிலிப்பு மற்றும் நத்தானியேல் என்பவைகளாக உள்ளன.

2. முதல் அற்புதம்.—இயேசு உடனடியாக யோர்தானின் கீழ்ப்பகுதியை விட்டுத் தாம் புதிதாய்க் கண்டறிந்த சீஷர்களுடன் புறப்பட்டு, தனது சொந்த மாகாணமாகிய கலிலேயாவில் ஒரு சிறு சுற்றுப் பயணத்திற்குச் சென்றார். அச்சமயம் நாசரேத்தின் அருகில் இருந்த கானா என்ற ஊரில் திருமணம் ஒன்று நடைபெற்றது. இங்கு அவர் தம்முடைய தாயைச் சந்தித்தார், மற்றும் நாம் அற்புதங்கள் என்று அழைக்கின்ற வியத்தகு செயல்களில் முதலாவதை அவர் இங்கு நிகழ்த்தினார். அபரிமிதமான உபசரிப்பு என்பது கிழக்கத்திய ஒழுக்க நெறிகளின் முதுகெலும்பாக உள்ளது; மற்றும் இயேசு தண்ணீரைத் திராட்ச இரசமாக்கியதன் மூலம் விருந்தில் நிழலிடக் காத்திருந்த அவமானத்தை விலக்கினார்.

"உணர்வுள்ள தண்ணீர் தனது கர்த்தரைக் கண்டு சிவந்தது."

ஒரு அற்புதம் என்பது அற்புதமாகவே உள்ளது. அதைக் குறித்துத் தத்துவ விவாதம் செய்தல் என்பது பயனற்றதாக உள்ளது. நாம் அதன் இயல்பைப் பற்றி, இயற்கையின் சாதாரண செயல்முறைகளை உணர்வது போல் சிறிதளவே புரிந்துகொள்ளுகின்றோம். இயேசு தாமே எல்லா அற்புதங்களிலும் மகா பெரியவராக—காலங்களின் ஒழுக்க ரீதியான அற்புதமாக—இருந்தார். நமக்கு இயற்கைக்கப்பாற்பட்டதாக உள்ளது அவருடைய இயல்பாய் இருந்தது. படைப்பில் தேவனே திறவுகோலாய் இருந்தது போன்று, இயேசு தாமே தமது கிரியைகளுக்குத் திறவுகோலாய் இருக்கின்றார்.

3. கலிலேய ஊழியத்தின் முடிவு.—இயேசு தம் தாய் மற்றும் சீஷர்கள் ஆகியோர் உடன் வர, கப்பர்நகூமுக்குச் சென்றார், அதைப் பிற்பாடு, அவர் தமது கலிலேய ஊழியத்தின் மையமாக ஆக்கினார். அங்கிருந்து அவர், நாட்டின் தலைநகரான எருசலேமுக்குச் சென்றார். இவ்விதமாகத் தொடக்க கால கலிலேய ஊழியம் முடிவடைந்தது. இந்தப் பதிவேடு சுருக்கமாய் இருப்பது போன்றே, இது யோவானின் ஊழியத்துடனான ஆர்வமிக்க இரு நேரதிர்க் கருத்துக்களையும் தருகின்றது: (1) இயேசு அற்புதங்களைச் செய்பவராய் இருக்க வேண்டியிருந்தது; (2) அவர் பொதுமக்களின் பொதுவான வாழ்வுடன் கலந்திருந்தார். யோவான் ஒரு தனிமைவாதியாக/தனியாய் வசிப்பவராக மனிதர்களின் இருப்பிடங்களை விட்டு விலகிய வராக, வனாந்தரத்தில் பிரசங்கிப்பவராக இருந்தார். மனித குலத்தை மீட்க வந்தவரோ, எல்லா வகுப்பாரிடத்திலும் தாராளமாகக் கலந்து, செல்வந்தர் களின் உபசரிப்பைப் பகிர்ந்து கொண்டு, ஏழைகளின் வீடுகளில் பிரவேசித்து, ஜெப ஆலயத்திலும் தனிப்பட்ட வீட்டிலும், தனிமையான வனாந்திரத்திலும், நாட்டுப்புறக் கிராமத்தின் சுறுசுறுப்பான கடற்கரை யிலும், மும்முரமான நகரின் கடைவீதியிலும், மற்றும் பெருமை கொண்ட தலைநகரிலும் கூட உரையாற்றினார்.

II. யூதேயாவில் தொடக்க கால ஊழியம்.

1. அறிமுகம்.—கலிலேயாவில் இயேசுவின் ஊழியம் நிச்சயமாகவே தனிமைப் பண்புகளைக் கொண்டிருந்தது, மற்றும் இது அவர் தம் சீஷர்களின் விசுவாசத்தை உறுதிப்படுத்துவதற்காகவே இருந்தது (யோவா. 2:11). இப்பொழுது அவர், நாட்டின் தலைநகரிலேயே, தமது ஊழியத்தின் அதிகம் வெளிப்படையான வளர்நிலையில் பிரவேசிக்கின்றார். இவ்வித மாக அவரை மேசியா என்று ஏற்றுக் கொள்வதற்கான முதல் வாய்ப்பானது யூதேயா மற்றும் எருசலேமுக்கும், நாட்டின் ஆட்சியாளர்களுக்கும் தரப்பட்டது. அவர் கலிலேயா ஊழியத்திலிருந்து திரும்பி வந்தது வரையிலும் அவர்கள் அவரைப் புறக்கணித்திருந்ததில்லை.

2. தேவாலயத்தைச் சுத்திகரித்தல்.—ஆவிக்குரிய ஆராதனைக்கான வைராக்கியமும், வாழ்வின் தூய்மையும் பழைய தீர்க்கதரிசிகளின் பண்பாயிருந்தது. இந்த இளம் தீர்க்கதரிசி அதே ஆவியுடன் எருசலேமில் தம் ஊழியத்தைத் துவங்குகின்றார். பலி செலுத்துவதற்கு (விற்பனைக்கு) வைக்கப்பட்டிருந்த ஆயிரக்கணக்கான மிருகங்கள் தேவாலய வளாகத்தை ஒரு மாட்டுத் தொழுவமாக்கியிருந்தன; தேவாலய முற்றங்களிலேயே காசுக்காரர்கள் தங்கள் வாடிக்கையாளர்களுடன் பேரம் பேசிக் கொண்டிருந்தார்கள். எப்பொழுதும் வலுவான ஒழுக்க உறுதிப்பாடுகளை அணிவிக்கும் அந்த அதிகாரத்துடன் இயேசு தேவாலயத்திலிருந்து மந்தை களையும் வர்த்தகர்களையும் துரத்தினார்.[1] அவருடைய தைரியமான/ வீரமிக்க செயல்பாடானது கீழ்த்தரமான ஆட்சியாளர்களிடமிருந்து உண்மையான வருத்தத்தின் மெய்சிலிர்ப்பை எழுப்பவில்லை. மாறாக அது அவர்களின் வெறுப்புணர்வை எழுப்பியது. தலைநகரில் புறக்கணிக்கப் பட்ட நிலையில் அவர் யூதேயாவின் நாட்டுப்புற மாகாணங்களுக்குச் சென்றார்.

3. நிக்கொதேமுவுடன் உரையாடல்.—இயேசு நகரத்தில் தங்கியிருந்த பொழுது, சில அற்புதங்கள் செய்ததின் மூலம் தமது மேசியாத்துவத்தை உறுதிப்படுத்தியிருந்தார் (யோவா. 2:23; 3:2; 4:45). ஆட்சியாளர்களில் குறைந்தபட்சம், நிக்கொதேமு என்ற பெயர் கொண்ட ஒரு பரிசேயர் தனது வகுப்பாரின் வெறுப்புணர்வைப் பகிர்ந்து கொள்ளாதிருந்தார். இயேசுவின் உதடுகளிலிருந்து வீழ்ந்தவற்றிலேயே மிகவும் ஆழமான உரையாடல்களில் ஒன்றான அவருடைய இராஜ்யத்தின் ஆவிக்குரிய இயல்பு பற்றிய உரையாடலுக்கு நாம் அந்த இளம் போதகருடன் நிக்கொதேமு மேற்கொண்ட இரவு நேரப் பேட்டிக்குக் கடன்பட்டுள்ளோம்.[2]

4. நாட்டுப்புற ஊழியம்: யோவானுடைய கடைசி சாட்சியம்.—நாம் (ஏற்கனவே) கண்டுள்ளபடி நகரிலிருந்து (வெறுத்து) ஒதுக்கப்பட்ட இயேசு நாட்டுப்புறத்தில் (சென்று) இளைப்பாறியிருந்தார் (யோவா. 3:22). (இதில்) எந்த நிகழ்ச்சியும் (நாம் அறியும்படி வேதாகமத்தில்) பாதுகாத்து வைக்கப் படவில்லை; ஆனால் இயேசு யூதேயாவில் எட்டுமாதங்கள் தங்கியிருந்தார் என்பதை நாம் யோவான் 4:35ல் இருந்து உய்த்துணரலாம். அது கனி நிறைந்த மற்றும் வளருகின்ற ஊழியமாய் இருந்ததென்பது யோவானு டைய சீஷர்களின் பொறாமையிலிருந்து காண்பிக்கப்படுகின்றது

(யோவான் 3:26). படைத்தலைவர்களின் பொறாமையினால் எண்ணிறந்த யுத்தங்கள் தோல்வியைத் தழுவியிருக்கின்றன. யோவான் ஒரு மாறுபட்ட அச்சில் வார்க்கப்பட்டவராயிருந்தார்; மற்றும் அவரது சீஷர்களின் இயல்பான பொறாமையானது இரண்டு வித்தியாசங்களை காட்டுகிறது. தனிப்பட்ட வகையில் யோவானின் வித்தியாசமும், மேசியாவுக்கு அவர் அளிக்கின்ற மாண்புமிக்க கடைசி புகழுரையும் ஆகும். மேசியா முன்பாக (இயேசு முன்பாக) இவர் (யோவான்) சிறுக வேண்டியதாயிருந்தது.

5. தொடக்க கால யூதேய ஊழியத்தின் முடிவு.—யோவான் பரிசேயர் களால் புறக்கணிக்கப்பட்டிருந்தார் (லூக். 7:30). அவர்கள் இயேசுவின் பெரிய வெற்றிகள் மற்றும் உயர்வான ஆவிக்குரிய தன்மை ஆகியவை பற்றி இன்னும் அதிகமாக வெறுப்புக் கொண்டிருந்தார்கள். பரிசேயர்களின் இந்த வெறுப்பு, யோவானின் சீஷர்களுடைய வெறுப்புணர்வு, எல்லாவற்றிற்கும் மேலாக யோவான் சிறை வைக்கப்பட்டது ஆகியவை இயேசுவை அவரது பிரயாசங்களின் காட்சியை யூதேயாவிலிருந்து கலிலேயாவுக்கு மாற்றும்படி செய்தன (இ.வ. யோவா. 4:1-3; மத். 4:1-12).

6. சமாரியப் பெண்.—சமாரியாவானது, இழிவாய்க் கருதப்பட்ட தன் மக்களினத்துடன் யூதேயாவுக்கும் கலிலேயாவுக்கும் இடையில் அமைந்து கிடந்தது. யோர்தானுக்குக் கிழக்கே கடந்து செல்வதன் மூலம் யூதர்கள் அதை (சமாரியாவை) பொதுவாகத் தவிர்த்து வந்தார்கள். ஆனால் இயேசு ஏற்கனவே யூதேயாவின் வடக்கிலிருந்து வெகு தொலைவில் இருந்தார்; மேலும் அவருடைய இருதயத்தில் இன தப்பெண்ணங்கள் எதுவும் இருந்ததில்லை. சமாரியப் பெண்ணுடன் (அவரது) உரையாடலை யோவான் பாதுகாத்து வைத்துள்ளார். அவருடைய (இயேசுவினுடைய) வாழ்வும் வார்த்தையும் ஊழியங்களும் ஏற்கனவே, யோவான், அந்திரேயா, பேதுரு மற்றும் திரளான கூட்டத்தாரிடம் உறுதிப்பாட்டை ஏற்படுத்தி யிருந்தன; ஆனால் அவரது மேசியாத்துவம் பற்றிப் பதிவு செய்யப்பட்ட மிகத் தொடக்க கால தனிச்சிறப்புள்ள அறைகூவல் வெறுக்கப்பட்ட/ஒதுக்கப்பட்ட இனத்தைச் சேர்ந்த பெயர் அறியப்படாத ஒரு பெண்ணிடம் ஏற்படுத்தப்பட்டதென்பது அழகாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறிப்புகள்

[1]இயேசுவின் ஊழியத்தில் வந்த முதல் பஸ்காவின் போது நடந்த தேவாலய சுத்திகரிப்பானது, அவரது கடைசி பஸ்காவின்போது பின்னால் நடந்ததுடன் குழப்பிக் கொள்ளப்படக் கூடாது (இ.வ. மத். 21:12). [2]யூதர்களுக்குப் பயந்ததினால் நிக்கொதேமு இரவில் வந்திருந்தார் என்று சாதாரணமாக சொல்லப்படுகிறது. அது அப்படி இருக்கக் கூடும், ஆனால் அநேகமாக அப்படியல்ல. அவரைப் பற்றி நாம் அறிந்திருக்கிற கொஞ்சமும் கூட அதிகம் சாதகமாகவே இருக்கிறது (இ.வ. யோவா. 7:50; 19:39). அவர் இரவில் வந்ததின் காரணம், இடைஞ்சல்படாத சம்பாஷணைக் காகவே என்பதுதான் சரியானதாக இருக்கும்.

17

மாபெரும் கலிலேய ஊழியம்

கலிலேயாவுக்குத் திரும்பியதிலிருந்து கூடாரப் பண்டிகை வரையில்

அறிமுகம்.—*அ. காலமும் இடமும்.*—இந்தக் கால கட்டமானது - இயேசுவின் (மொத்த) ஊழிய காலத்தில் பாதிக்கும் மேற்பட்டதான—ஒராண்டும் ஒன்பது மாதங்களும் கொண்டதாக உள்ளது. இதன் தொடக்க மாதங்களில் இயேசு ஒரே ஒரு முறை எருசலேமுக்குச் சென்றிருந்தார். இதன் கடைசி ஆறு மாதங்கள் கலிலேயாவின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பின்னடைதல்களின் வரிசைத் தொடரினால் குறிக்கப் பட்டன. இந்த எதிர்பார்ப்புகளுடன் கலிலேயா காட்சியாகவும் கப்பர்நகூம் மையமாகவும் இருக்க, கிறிஸ்துவின் ஊழியத்தினுடைய முக்கிய பகுதி அமைகின்றது.

ஆ. இயல்பு.—இது பின்வருவனவற்றின் காலகட்டமாய் இருந்தது: *(1)* மிக வலுவான செயல்பாடு. இது பயணங்கள், அன்பு மற்றும் வல்லமை யின் அற்புதங்கள், வெளிப்படையான உரைகள் மற்றும் தனிப்பட்ட போதனைகள் ஆகியவற்றினால் நிரம்பப் பெற்று, அடிக்கடி இரவில் வெகு நேரம் கழித்து ஓய்வெடுக்கச் செல்லுதல் அல்லது அதிகாலையில் ஜெபிக்கச் செல்லுதல் ஆகியவற்றைக் கொண்டதாயிருந்தது. *(2)* மக்கள் கூட்டங்களில் பிரபலமாகுதல். எல்லாப் பகுதிகளிலும் எல்லா வகுப்புகளிலும் இருந்து வந்த மக்கள் கூட்டம் அவரது வசனங்களைப் பற்றிப் பிடித்துக் கொண்டு, சாட்சியளித்து அல்லது தாங்களே நேரடியாக அனுபவப்பட்டிருந்தனர், எனவே அவர் பெரும்பாலும் கிராமப் புறத்தில் இருக்கும்படி அவரது வழியை அவர்கள் நகரங்களில் இடைமறித்தனர். *(3)* வேதபாரகர், பரிசேயர்கள் மற்றும் கடைசியில் ஏரோது அந்திப்பா ஆகியோரின் வெறுப்புணர்வு வளர்ந்தது. *(4)* இவ்வூழியத்தின் முடிவு மாதங்களில், மக்களிடத்தில் புகழ்ச்சி குறைந்து, அதன் விளைவாகக் கலிலேயாவிலிருந்து விலகிச் செல்லுதல்.

I. முதல் அல்லது தயாரிப்பு நிலை — சீஷர்களை இரண்டாம் முறை அழைப்பது வரை

1. நாசரேத்தூரில் புறக்கணிக்கப்படுதல் (லூக். *4:14-30*).—பையனா யிருந்த இயேசு நன்கு அறியப்பட்டு அன்புகூரப்பட்ட கிராமம் ஒன்று கலிலேயாவில் உள்ளது என்று ஒருவர் நினைக்கக் கூடும். இயேசு தாம்

ஞானஸ்நானம் பெறுவதற்காக நாசரேத்தூரிலிருந்து புறப்பட்டுச் சென்று ஒரு முழு ஆண்டு அல்லது அதற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்தது. இப்பொழுது அவர், எருசலேமில் செய்திருந்தது போன்றே நாசரேத்தில் உள்ள மனிதர்களுடைய விசவாசத்திற்குத் தம்மைக் கையளிப்பதற்காக வந்தார். வழியில் அவர் (கப்பர்நகூமில் இருந்த) ராஜாவின் மனிதனுடைய மகனைக் கானாவூரில் இருந்தபடியே குணப்படுத்தி அங்கு இரண்டாம் அற்புதத்தைச் செய்தார் (யோவா. 4:46-54), மற்றும் அநேகமாக அவர் தாம் சிறுவயதில் வளர்ந்த இடத்திற்குச் செல்லும் பயணத்தின்போது போதித்திருப்பார். நாசரேத்தூரில் ஏற்பட்ட விளைவு எருசலேமில் ஏற்பட்டதைப் போன்றதாகவே இருந்தது. இந்த இளம் *தச்சர்*,—இவர் களுக்குப் போதிக்க அதிகாரம் இவருக்கு எங்கிருந்து வந்தது? இயேசு முப்பது ஆண்டுகளாக யார் மத்தியில் வாழ்ந்திருந்தாரோ, அம்மக்களே அவரது உயிரைப் போக்க வகை நாடினார்கள் என்பது அம்மனிதர்கள் (மணக் கண்) பார்வையற்ற தன்மையின் மீதான கவலைக்குரிய விளக்கவுரையாக உள்ளது.

2. கப்பர்நகூம் தேர்ந்தெடுக்கப்பட்டது (மத். 4:12-16).—இயேசு நாசரேத்தை விட்டு கப்பர்நகூமுக்கு வந்தார். கலிலேயாக் கடலின் வடமேற்குக் கடற்கரையில் இருந்த மக்கள் தொகையும் வர்த்தகமும் மும்முரப்பட்டிருந்த இந்த மையமானது மாபெரும் கலிலேய ஊழியத்திற்கு மையமாக நன்கு தேர்ந்து கொள்ளப்பட்டிருந்தது. ஏறக்குறைய இரு ஆண்டுகள் அளவாக இயேசு இவ்விடத்தில் பல வாரங்களுக்கு ஒரு போதும் இல்லாதிருக்கவில்லை என்று காணப்படுகின்றது. அவர் கப்பர்நகூமிலிருந்து தமது (ஊழியப்) பயணங்களை அமைத்துக் கொண்டார்; அவ்விடத்திற்கு அவர் திரும்பி வந்தார். இந்தக் காலகட்டம் முழுவதிலும் அவருக்கு இருப்பிடம் ஏதேனும் இருந்தது என்று கூறப்படுமென்றால் அது இங்குதான் (கப்பர்நகூமில்தான்) இருந்தது.

3. அற்புதமான மீன் பிடித்தலும் சீஷர்களை இரண்டாம் முறை அழைத்தலும் (மத். 4:18-22; லூக். 5:1-11).—கப்பர்நகூமில் (சீஷர்களை) தேர்ந்தெடுத்து சற்றுக்காலத்திற்குப் பிறகு, இயேசு சீஷர்களை இரண்டாம் முறை குறிப்பிடத்தக்க விதத்தில் அழைத்தார். இது அவர்கள் யாவரையும் மிக ஆழமாக மனதில் பதிய வைக்குமளவுக்கு அற்புதமாய் ஏராளமான மீன்களைப் பிடித்த செயலின் தொடர்பாக நடைபெற்றது. பேதுரு, அந்திரேயா, யாக்கோபு மற்றும் யோவான் ஆகியோர் மீனவர்களாய் இருந்தனர். அவர்களில் மூவர், முதல் ஐந்து சீஷர்களின் குழுவில் இருந்தனர் (யோவா. 1:35-42). இந்தப் பிந்திய அழைப்பானது முந்திய அழைப்பில் இருந்து இரண்டு அம்சங்களில் மாறுபடுகின்றது: இது அவர்களை இயேசு வுடன் அதிகம் நிலைப்புத்தன்மையுடன் இணைத்து வைத்தது, மற்றும் இது ஊழியத்திற்கான தனிச் சிறந்த அழைப்பாக இருந்தது. அவரைச் சுற்றியிருந்த இந்தக் கூட்டமானது அதிகம் நிலைப்புத் தன்மை கொண்ட சீஷர்களின் அமைப்பாக, எதிர்கால அப்போஸ்தலர்களின் முளைக் கருக்களாக இருந்தது, இது தயாரிப்பு நிலையின் முடிவைக் குறிக்கின்றது.

II. இரண்டாம் நிலை - அப்போஸ்தலர்களை நியமித்தல் வரை மற்றும் மலைப்பிரசங்கம்

1. கப்பர்நகூமில் நினைவுகூரத் தக்க ஒரு ஓய்வுநாள் *(மாற்கு 1:21-34).—இயேசு தமது நான்கு சீஷர்களுடன் கப்பர்நகூமுக்குத் திரும்பினார், மற்றும் உடனே அவர் மிக வலுவான செயல்பாடுள்ள வெளிப்படையான ஊழியத்தினுள் பிரவேசித்தார். ஜெப ஆலயத்தினுள் சென்ற அவர், "அவர்கள் பிரம்மித்துப் போகுமளவு" அப்படிப்பட்ட அதிகாரத்துடன் போதித்தார். ஆனால் அசுத்த ஆவி கொண்ட ஒருவரை அங்கு அன்று அவர் குணமாக்கியதுதான் அவர்களிடையே அதிகத் திகைப்பை ஏற்படுத்தியது. இது கப்பர்நகூமில் இயேசுவின் முதல் அற்புதமாக இருந்தது, மற்றும் அசுத்த ஆவி பிடித்தவர்களைக் குணப்படுத்தியது பற்றிய முதல் பதிவாக இருந்தது. அந்தகாரத்தின் இரகசிய சக்திகளின் மீதான இந்த வெற்றிகளைக் காட்டிலும் மக்கள் வேறெந்த அற்புதம் செய்யப்பட்ட போதும் அதிகம் வியப்படைந்த தாகக் காணப்படுவதில்லை (இ.வ. லூக். 4:36, 37; 10:17). இதைத் தொடர்ந்து அவர் பேதுருவின் மாமியை அப்பெண்மணியின் இல்லத்திலேயே குணமாக் கினார், மற்றும் பல்வேறு வியாதிகளால் துன்புற்று உதவி செய்யும் கரங்களால் அவரிடம் கொண்டு வரப்பட்ட திரளான கூட்டத்தாரை சூரியன் மறையும் வரையில், ஓய்வு நாள் முடியும் வரையில் குணமாக்கிக் கொண்டிருந்தார்.*

2. கலிலேயாவில் மாபெரும் பயணம் *(மாற். 1:35-45).—அடுத்த நாள் காலையில் மிக முன்னதாக (எழுந்து) தனிப்பட்ட ஜெபத்திற்காக நழுவிச் சென்ற இயேசு அவர் தம் சீஷர்களால் பின் தொடரப்பட்டார். கூட்டத் தைத் தவிர்ப்பதில் மும்முரமாயிருந்த நிலையில் அவர் கலிலேயாவில் விரிவாகப் பயணம் செய்து, இராஜ்யத்தின் நற்செய்தியை எங்கும் பிரசங்கித்துக் கொண்டு எல்லா இடங்களிலும் பல்வேறு வியாதிகளைக் குணமாக்கிக் கொண்டு வந்தார். நாடு முழுவதும் உணர்வெழுச்சியின் உற்சாகத்தில் இருந்தது; பலஸ்தீனத்தின் ஒவ்வொரு மாகாணத்திலிருந்தும் மக்கள் கூட்டம் கூட்டமாக அவரிடம் வந்தனர் (மத். 4:24, 25). தொழு நோயாளி ஒருவரைக் குணமாக்கிய விவரம் ஒன்றில் மட்டுமே அற்புதம் பற்றிய நிகழ்ச்சி விரிவாகத் தரப்படுகின்றது.*

3. ஒரு திமிர்வாதக்காரரைக் குணமாக்குதல்—எதிர்ப்பின் தொடக்கங் கள் *(மாற்கு 2:1-12).—மக்கள் கூட்டத்தின் மத்தியில் இயேசுவின் புகழானது ஒரு முழு ஆண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கால அளவுக்குத் தொடர்ந்தது. ஆனால் விரைவிலேயே பழக்கவழக்கங்களின் பாதுகாவலர் கள் ஆகிய வேதபாரகர், பரிசேயர்களிடமிருந்து வெறுப்புணர்வின்/ பகைமையுணர்வின் முறுமுறுத்தல் கேட்கப்பட்டது. ஒரு திமிர்வாதக் காரரைக் குணமாக்கியது தொடர்பாக அவர்களின் விமர்சனம் எழும்பிற்று. இந்த வேளையிலிருந்து, எருசலேம் மற்றும் எங்குமுள்ள அதிகாரிகளின் ஒற்றர்கள் அவருடைய அடிவைப்புகளில் மோப்பம் பிடிக்க விடாது பின்தொடர்ந்தார்கள்.*

4. மத்தேயுவை அழைத்தலும் அவரது விருந்தளிப்பும் *(மத். 9:9-13; லூக்.*

5:27-32).—இயேசுவைச் சுற்றிச் சூழ்ந்திருந்த மக்களின் வகுப்பு நிலையானது மேல் தட்டு மக்களின் குற்றச் சாட்டிற்கான இன்னொரு காரணமாயிற்று. ஒரு வகுப்பார் என்ற முறையில் ஆயக்காரர்கள் பேராசையும் பணம் பறிக்கும் தீய குணமும் கொண்டவர்களாய் இருந்தனர்; மற்றும் அவர்கள் ரோம அரசின் கருவிகளாயிருந்த காரணத்தினால் யூதர்களால் இழிவாகக் கருதப்பட்டார்கள். இவர்களில் ஒருவரான மத்தேயு அல்லது லேவி இயேசுவின் சீஷரானார், மற்றும் இவர் தம் எஜமானருக்காக ஒரு விருந்தை ஏற்பாடு செய்தார், அவ்விருந்தில் கலந்து கொள்ளும்படி பல ஆயக்காரர் களும் பாவிகளும் அழைக்கப்பட்டிருந்தார்கள். "நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்க வந்தேன்"[1] என்ற அழகிய கூற்றை நாம் பெறுவதற்கு, பரிசேயர்களின் விமர்சனத்திற்கே கடன் பட்டவர்களாய் இருக்கின்றோம்.

5. யாவீருவின் மகள்—இடைநிலை அற்புதம் (மாற்கு *5:22-43).*—இயேசு, வியாதி, இயற்கை மற்றும் அசுத்த ஆவிகள் மீதான தம்முடைய வல்லமையை/அதிகாரத்தைக் காண்பித்திருந்தார். மரணத்தின் மீதான அவருடைய அதிகாரத்தை செயல்விளக்கப்படுத்துவது நிலைத்திருந்தது. மத்தேயு அளித்த விருந்தில் (இயேசுவின்) உரையின் போதோ அல்லது அதைத் தொடர்ந்தோ, கப்பர்நகூம் ஜெப ஆலயத் தலைவர், மரணத் தருவாயிலிருந்த தம் மகளுக்காக வேண்டுதல் செய்ய அங்கு வந்தார். இப்படிப்பட்ட அழைப்புக்கு இயேசு ஒருபொழுதும் செவி கொடுக்காமல் இருந்ததில்லை. இதற்காகப் புறப்பட்டுச் செல்லும் வழியில் பெரும்பாடுள்ள பெண் ஒருத்தியின் இரத்தப் போக்கு குணமடைதல் நடைபெற்றது - இது இடைநிலை அற்புதம் என்ற தக்க வகையிலான பெயரால் குறிக்கப்பட்டது. அவர்கள் யாவீரின் வீட்டை அடைந்த பொழுது அந்தச் சிறுமி மரணத் துயிலில் துயில் கொண்டிருந்ததைக் காண்கின்றனர்; ஆனால் பாவத்தி லிருந்தும் கல்லறையிலிருந்தும் நம்மை மீட்க வந்தவர் அந்தப் பெண்ணை உயிருள்ளவளாகவும் நலமுள்ளவளாகவும் அவளது பெற்றோரின் கரங்களில் ஒப்படைத்தார்.

6. இரண்டாம் பஸ்கா (யோவான் *5:1-47).*—ஒப்பீட்டு (சுவிசேஷ) எழுத்தாளர்கள் இயேசு சிலுவையில் அறையப்பட்ட ஒரே ஒரு பஸ்காவை மட்டுமே குறிப்பிடுகின்றனர். யோவான் 5:1ல் வரும் "பண்டிகை" என்பது பஸ்காவாயிருக்குமென்றால், மொத்தம் நான்கு பஸ்கா பண்டிகைகளை யோவான் குறிப்பிடுகின்றார். எவ்வகையிலும், தம் ஊழியத்தின் இந்த வேளையில் இயேசு எருசலேமுக்கு வருகின்றார். இதில் பெதஸ்தா குளத்தினருகில் உதவியற்ற ஒரு மனிதரைக் குணமாக்கிய நிகழ்ச்சி மட்டுமே பதிவு செய்யப்பட்டுள்ளது. அது ஒரு ஓய்வுநாளாய் இருந்தது, மற்றும் அது பற்றிய யூதர்களின் விமர்சனம் யோவான் ஐந்தாம் அதிகாரத்தில் தரப்பட்டுள்ள விரிவான உரைக்கு வழியமைத்தது.

7. மேலும் ஒரு ஓய்வுநாள் விமர்சனம் (மத். *12:1-14).*—கலிலேயாவுக்குத் திரும்பிச் செல்லும் வழியில் இயேசுவின் சீஷர்கள் ஓய்வு நாளன்று கோதுமை அல்லது வாற்கோதுமையின் கதிர்களைப் பறித்து தானியத்தை உண்பதற் காக அவற்றைக் கைகளில் கசக்கியதற்காக விமர்சிக்கப்பட்டனர். கப்பர்

நகூமிலோ அல்லது வழியில் ஏதேனும் ஒரு கிராமத்திலோ ஓய்வு நாளில் இயேசு சூம்பின கையுடைய மனிதன் ஒருவனைக் குணமாக்கியதற்காக விமர்சிக்கப்பட்டார். இந்தக் கடைசி நிகழ்ச்சியில் அவருடைய விரோதிகள் அவரைக் கொலை செய்யத் திட்டமிடுமளவுக்குச் சென்றனர், இது அவர்களின் மதத்தினுடைய சம்பிரதாயம் மற்றும் தகுதியற்ற தன்மைக்கு பலத்த ஒரு விளக்கமாக உள்ளது.

8. பன்னிருவரும் மலைப்பிரசங்கமும் *(மத். 5-7).*—இயேசுவின் சொந்த ஊழியமானது வல்லமை உள்ளதாய் இருந்தது போன்றே, அது மிகவும் சுருக்கமானதாகவும் இருக்க வேண்டியதாயிற்று. அதன் செல்வாக்கு நிலைத்திருக்க வேண்டுமென்றால், அதன் மிக மேன்மையான உண்மைகளுக்குச் சாட்சிகளாய் இருக்கச் (சில மனிதர்கள்) பயிற்றுவிக்கப்பட்டு, தகுதிப்படுத்தப்படுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டியதாயிருந்தது. இந்த நோக்கத்திற்காக, இயேசு தமது சீஷர்களின் குழுவிலிருந்து விசேஷித்த பயிற்சிக்காகவும் அறிவுறுத்துதலுக்காகவும் பன்னிருவரைத் தேர்ந்து கொண்டார்.[2]

இதன் பிறகு, மலைப்பிரசங்கம் என்று என்றென்றும் அறிப்படுகின்ற நிகழ்ச்சி தொடருகின்றது. இதுவே நமக்குக் கிடைத்துள்ள இயேசுவின் வெளிப்படையான உரைகளில் மிக நீண்ட தனி உரையாக உள்ளது. இது அவருடைய இராஜ்யத்தின் கொள்கைகளினுடைய மிக மேன்மையான தொகுப்புரையாக உள்ளது, இது அடிப்படையான சத்தியங்களின் உருவாக்கமாகவும், சீனாய் மலையில், தரப்பட்ட நியாயப்பிரமாணத்திற்கு வலிவான நேர்மாறான கருத்துருவாக்கமாகவும் உள்ளது. இது பன்னிருவருக்கும் மற்றும் சீஷர்களின் பரந்த வட்டாரத்திற்கும் கையளிக்கப்பட்டிருந்தது, ஆனால் இது தொலைவிலிருந்தும் அருகிலிருந்தும் வந்திருந்த மிக ஏராளமான வகை ஒன்றாய்க் கலக்கப்பட்ட மக்கள் கூட்டத்திற்கு முன்னிலையில் தரப்பட்டது. பன்னிருவரைத் தேர்ந்து கொள்ளுதலும் மலைப்பிரசங்கமும் இயேசுவின் ஊழியத்தில் ஒரு திருப்புமுனையைக் குறிப்பிட்டன. நாட்டின் சட்ட போதகர்கள் அவரைப் புறக்கணித்திருந்தனர்; ஆனால் மலையின்மீது இந்நாளில் உரைகளில் இருந்த "நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று மறுபடி மறுபடி உரைக்கப்பட்ட கூற்று, விஷயங்களின் புதிய ஒழுங்குமுறை சமீபத்தில் இருந்தது என்பதை வெளிப்படையான கவனத்திற்குக் கொண்டு வந்தது.

III. மூன்றாம் நிலை—உவமைகளில் போதிப்பதைத் தழுவிக் கொள்ளுதல் வரை

1. தொடர்ந்த பிரயாசங்கள்.—இயேசு தம் மாபெரும் ஊழியப் பணியை கப்பர்நகூமிலும் அதனைச் சுற்றிலுமிருந்த பகுதிகளிலும் தொடர்ந்து செய்தார். ரோம நூற்றுக்கதிபதியின் வேலைக்காரர் ஒருவரைக் குணப்படுத்திய நிகழ்ச்சியானது (மத். 8:5-13) அவருக்கு, புறஜாதியாரில் இருந்த மாபெரும் விசுவாசத்திற்கான விவரிப்பாகவும், அவரது இராஜ்யத்தின் உலகளாவிய தன்மைக்கான தீர்க்கதரிசனக் குறிப்பாகவும் இருந்தது.

இரண்டாம் முறையாக அவர் மரித்த ஒருவரை உயிரோடு எழுப்பினார், அதாவது நாயீன் நகர விதவையின் மகனை உயிரோடெழுப்பினார் (லூக். 7:11-17). இயேசுவின் முழு ஊழியத்திலும் மிகவும் நெஞ்சைத் தொட்ட நிகழ்ச்சிகளில் ஒன்று இந்தக் கட்டத்திற்குரியதாக உள்ளது. பரிசேயர் ஒருவரின் உணவு மேஜையில் இயேசு அமர்ந்திருக்கையில் மனம் வருந்திய (விபசார) பெண் ஒருத்தி தனது கண்ணீரால் அவரது பாதங்களைக் கழுவி, அவற்றை விலை உயர்ந்த தைலத்தினால் அபிஷேகம் செய்வித்தாள் (லூக். 7:36-50). விருந்திற்கு அழைத்தவரின் விமர்சனம், கடன்காரர்கள் இருவரைப் பற்றி அவரது விருந்தினரின் (இயேசுவின்) அழகிய பாடத்தைக் கொண்டு வரக் காரணமாயிற்று.

2. யோவானைக் குறித்து இயேசுவின் சாட்சியம் (லூக். 7:18-35).—இயேசு யூதேயாவை விட்டு வெளியேறியதற்கு யோவான் சிறை வைக்கப்பட்டது(ம்) ஒரு காரணமாயிருந்தது. யோவானின் கழுகுக்கொத்த ஆவியானது ஓராண்டு காலத்திற்கு சவக்கடலின் கிழக்குக் கடற்கரையில் இருந்த "கருங் குகையில்" கூண்டிலிடப்பட்டிருந்தது. அவர் இயேசுவுக்கு ஞானஸ்நானம் கொடுத்த வேளையில் வானங்கள் திறந்ததைக் கண்டிருந் தார், மற்றும் தெய்வீகக் குரலொலியைக் கேட்டிருந்தார், மற்றும் அவரை (இயேசுவை) மேசியா என்று சுட்டிக்காட்டியிருந்தார். ஆனால் இயேசுவோ யோவான் எதிர்பார்த்திருந்த அளவுக்கு ஊழியம் செய்யாதிருந்தார். ஏரோதுகளும், பிலாத்துக்களும், காய்பாக்களும் இன்னும் அதிகாரத்தில் இருந்தனர். ஏன் அவர் நாட்டைத் தூற்றி, பதரை எரித்து, நீதியில் ஆளுகை செய்யாதிருக்கின்றார்? ஒருவேளை இப்படிப்பட்ட எண்ணங்களுடன் யோவான் இயேசுவிடத்தில் இரண்டு சீஷர்களை அனுப்பி, "வரவேண்டிய வர் நீர் தாமா? அல்லது வேறொருவர் வரக் காத்திருக்க வேண்டுமா?" என்று கேட்கச் செய்திருக்கலாம். இயேசு அவர்களைத் தாம் செய்து கொண்டிருந்த உபகாரப் பணிகள் பற்றிய வார்த்தைகளுடன் அனுப்பினார், பிறகு அவர் (இயேசு) யோவான் மீது தமது உயர்வான புகழுரையை அறிவிக்கின்றார்.

3. உவமையில் போதிப்பதைத் தழுவிக் கொள்ளுதல் (மத். 8; மாற். 4:1-34).—நாம் இயேசுவின் உவமைகளினுடைய முதல் மாபெரும் தொகுப்பை அடைந்துள்ளோம். பெரேயா ஊழியத்தில் ஒன்றும், நமது கர்த்தருடைய வெளிப்படையான ஊழியத்தின் கடைசி நாளில் ஒன்றும் ஆக இரு மாபெரும் (உவமைத்) தொகுப்புகள் கிடைக்கின்றன. உவமை வடிவை அறிமுகப்படுத்துதல் சீஷர்களுக்கு திகைப்பூட்டுவதாக இருந்தது (மத். 13:10). இதற்குத் திறவுகோலானது வேதபாரகர் மற்றும் பரிசேயரின் பகையுணர்விலும் நம்பிக்கையற்ற மாய்மாலத்திலும் காணப்பட்டுள்ளது. உபகாரச் செயலுக்கான அற்புதங்கள் ஒன்றன் பின் ஒன்றாக நிகழ்த்தப் பட்டன; இருப்பினும் அவர்கள் அவரது வல்லமை பிசாசின் பிரபுவிட மிருந்து வந்ததாகக் குறிப்பிட்டனர் (மத். 12:22-37), மற்றும் அதன் பிறகு அவர்கள் அவரிடத்திலிருந்து ஒரு அடையாளத்தைக்கோருமளவுக்கு வெட்கக்கேடு கொண்டிருந்தனர் (மத். 12:38-45). இயேசு, மன்னிப்பே கிடைக்கப் பெறாத பாவமான, பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமான பாவம் அவர்களிடம் இருந்ததைக் குறிப்பிட்டு அப்பாவத்தின் பேரளவின்

கருத்தை அவர்களுக்கு விளக்கப்படுத்தினார். ஆட்சியாளர்களுடன் மோதல்கள் பெருகுவதைத் தவிர்ப்பதற்காகவே அவர் தம் போதனையை உவமைகளினால் மூடினார், அவற்றை தனிப்பட்ட முறையில் தம்முடைய சீஷர்களுக்கு விளக்கப்படுத்தினார் (மத். 13:10-16). அவரது பாடங்களுக்கு அழகையும் வலிவையும் கூட்டுதல் என்பது ஐயத்திற்கிடமின்றி இன்னொரு காரணமாயிருந்தது. ஆனால் உவமை வடிவத்தைத் தழுவிக் கொள்ளுதல் என்பது வேதபாரகர் மற்றும் பரிசேயர் ஆகியோரிடத்தில் வளர்ந்த வெறுப்பு உணர்வுடன் நெருங்கிய தொடர்பு கொண்ட திருப்புமுனையைக் குறிக்கின்றது.

IV. நான்காம் நிலை—கப்பர்நகூமில் இருந்த ஜெப ஆலயத்தில் பிரசங்கம் வரை

1. கடுங்காற்று அமர்த்தப்படுதலும் கதரேன் நாட்டிலிருந்த அசுத்த ஆவி கொண்டவர்களும் *(மத். 8:18-34).*—உவமைகளின் நாளானது இயேசுவுக்கு மாபெரும் நாளாய் இருந்தது. அவர் அசுத்த ஆவிகளுடன், சூழ்ச்சி செய்து கொண்டிருந்த பகைவர்களுடன், தம்மை நாடிய நண்பர்களுடன் போரிட்டுக் கொண்டிருந்தார், மற்றும் அந்த நாளை அவர் அழியாத் தன்மை கொண்ட தம்முடைய உவமைகளுடன் முடித்திருந்தார். தமது பிரயாசங் களினால் களைப்புற்ற நிலையில் அவர் சிறு கடலை (கலிலேயாக் கடலை) கடந்து செல்லும்படி கட்டளைகள் கொடுத்தார், இதுவே பதிவு செய்யப் பட்ட அவரது முதல் கடற்பயணமாக உள்ளது எனினும் இதுவே கடைசியானதல்ல. திடீரென்று எழுந்த கடுங்காற்று, வலிவார்ந்த முன்னெச்சரிக்கை, எஜமானரின் அமைதியான ஆழ்துயில், "இரையாதே, அமைதலாயிரு"[3] என்று அவர் கடலைக் கடிந்து கொண்டது மற்றும் காற்றும் அலைகளும் உடனடியாக அமைதியானது ஆகியவை மிகவும் நேர்த்தியான எளிமைத்தன்மையுடன் கூறப்பட்டுள்ளன. ஒரு அற்புதம் இன்னொரு அற்புதத்தை விடப் பெரியது என்பது உண்மையாய் இராது இருக்கலாம்; ஆனால் குறிப்பிட்ட சில அற்புதங்கள் அங்கிருந்தவர்களை/அற்புதம் செய்யப்பட்டவர்களை மற்ற அற்புதங்கள் செய்யாத அளவுக்கு பெருவியப்பிலும் பக்தியிலும் ஆழ்த்தின என்பது உண்மையாக உள்ளது. "இவர் எப்படிப்பட்டவரோ, காற்றும் கடலும் இவருக்குக் கீழ்ப் படிகிறதே."[4] கிழக்கு கரையில் இயேசு மனிதர்களை வியப்பில் ஆழ்த்திய இன்னொரு அற்புதத்தைச் செய்தார்.[5] அசுத்த ஆவி பிடித்திருந்த இருவர் அவரைச் சந்தித்தனர், அவர்களில் ஒருவர் அசுத்த ஆவிகளின் பெரும் படையொன்றினால் துன்புற்றிருந்தார். அசுத்த ஆவிகளால் தீவிரமாய்ப் பிடிக்கப்பட்டிருந்தவர்(கள்) ஆடையணிந்து தெளிவான மனநிலையில் இருந்ததைக் கதரேன் நாட்டினர் கண்ட பொழுது திகைப்படைந்தனர், ஆனால் தங்கள் பன்றிக் கூட்டத்தை இழந்து போனதால் அவர்கள் கோபம் அடைந்தனர்; இயேசு அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி, மேற்குக் கரையை நோக்கி கடலை மீண்டும் கடந்து சென்றார்.

2. பன்னிருவரின் முதல் ஊழியம் *(மத். 9:35-11:1).*—கலிலேயாவுக்குத்

திரும்பிய பிறகு இயேசு தமது இளமை பருவ இல்லத்திற்கு இரண்டாவதும் கடைசி முறையுமாக வந்தார்; ஆனால் நாசரேத்தூரார் மீண்டும் ஒருமுறை அவரைப் புறக்கணித்தனர். ஊழியம் இன்னமும் செய்யப்பட வேண்டிய தாயிருந்தது. ஒருவரே செய்வதற்கு அது மிகவும் பெரியதாயிருந்தது, இப்பொழுது பிரசங்கிக்கும் கலையில் பணிப்பயிற்சி ஊழியத்தில் பன்னிருவரும் ஈடுபட வேண்டிய வேளை வந்தது. அதன்படியே அவர்கள் இருவர் இருவராக கலிலேயாவில் (ஊழியப்) பயணம் மேற்கொள்ளும் படியும், பிரசங்கித்து, அற்புதங்கள் செய்யும்படியும் அவர் கட்டளை யிட்டார். இந்த வேளையில் இயேசு தம் சொந்த ஊழியத்தைத் தொடர்ந்தார். இயேசு மற்றும் யோவான் ஆகியோரின் ஊழியத்தைப் போன்றே பன்னிருவரின் ஊழியமும் தயாரிப்பாகவே இருந்தது என்பது இவ்விடத்தில் கவனிக்கத்தக்கதாகும். இது இஸ்ரவேல் வீட்டாரில் இழந்து போகப்பட்ட ஆடுகளுடன் வரையறைப்படுத்தப்பட்டது, மற்றும் "மனந்திரும்புங்கள், பரலோக இராஜ்யம் சமீபித்துள்ளது"[6] என்பதே இதன் பாரமாயிருந்தது.

3. யோவான் ஸ்நானனின் மரணம் (*மத். 14:1-12*).—*சற்றுக் காலம் முன்னதாக நடைபெற்றிருந்த யோவானின் மரணமானது இந்தத் தொடர்பில் எடுத்துரைக்கப்படுகின்றது. ஏரோது அந்திப்பா, தனது சகோதரனான பிலிப்பு உயிருடன் இருக்கும் பொழுதே, பிலிப்புவின் மனைவியாயிருந்த ஏரோதியாளை திருமணம் செய்து கொண்டிருந்தான். ஒரு ஆட்சியாளரின் பாவங்களைக் கடிந்து கொள்ள யோவான் தயங்க வில்லை. பழி பாவங்களுக்கு அஞ்சாத ஏரோதியாள் முதலில் யோவானைச் சிறைப்பிடிக்கச் செய்து பின்பு அவர் இரத்த சாட்சியாய் மரிக்கச் செய்யும் வரை ஓய்ந்திருத்தலை அறியாதிருந்தாள், அவள் ஏரோதுவையும் ஓய்ந் திருக்க விடவில்லை. இயேசுவின் வல்லமையான செயல்கள் ஏரோதுவின் காதுகளுக்கு எட்டிய பொழுது, அவன் (ஏரோது), "இவன் யோவான் ஸ்நானான்; இவன் மரித்தோரிலிருந்து எழுந்தான்" (மத். 14:2; இ.வ. மாற். 6:14) என்று கூறினான்.*

4. ஐயாயிரம் பேருக்கு உணவளித்தலும் ஜீவ அப்பம் பற்றிய பிரசங்கமும் (யோவான் 6).—பன்னிருவரும் கலிலேயாவில் தங்கள் ஊழியப் பயணத்திலிருந்து திரும்பி வந்தனர், இயேசு அவர்களுடன் ஓய்ந்திருக்கவும் அவர்களுக்குத் தனிப்பட்ட அறிவுறுத்தல் கொடுக்கவும் மக்கள் அதிகமற்ற கடலின் கிழக்கு பகுதியிலிருந்த மாகாணத்திற்கு வந்தார். ஆனால் இன்னமும் அவரைக் கேட்பதற்காக மக்கள் கூட்டம் அலைமோதிற்று, அவர் இன்னமும் அவர்களுக்குப் போதித்தார். இரவு நெருங்கிக் கொண்டிருந்தது; மக்கள் தங்கள் இல்லங்களில் இருந்து தொலைவில் வந்திருந்தனர், உண்பதற்கு அவர்களிடம் ஒன்றுமில்லாதிருந்தது. மனிதரின் ஒவ்வொரு தேவையின் மீதும் பரிவிரக்கம் கொண்ட இயேசு ஒரு சில அப்பங்களையும் மீன்களையும் அவர்கள் யாவரும் உண்டு திருப்தியடையும் வரையிலும் பலுகிப் பெருகச் செய்தார். இது அவரது புகழின் உச்சகட்டமாய் இருந்தது. அந்தக் கூட்டத்தார் அவரை அரசராக்க விருப்பம் கொண்டனர். இது மூன்றாவது சோதனையின் திரும்புதலாய் இருந்தது. ஆனால் இயேசு

அவ்வகையான மேசியாவாய் இருக்க மாட்டார். கூட்டத்தைக் கலைந்து போகச் செய்து விட்டு, பன்னிருவரையும் கடலைக் கடந்து செல்லும்படி கூறிவிட்டு, அவர் தனிமையில் இருப்பதற்கு மலைக்கு நழுவிச் சென்றார். பிற்பாடு இரவு வேளையில் அவர் புயலினூடே கடல்மீது நடந்து அவர்களிடத்தில் வந்து சேர்ந்தார். ஐயாயிரம் பேருக்கு உணவளித்த அற்புதம் ஒன்றுதான் எல்லா சுவிசேஷங்களிலும் பதிவு செய்யப்பட்டுள்ள ஒரே அற்புதமாக உள்ளது. இதிலிருந்து வளர்ந்ததும், கப்பர்நகூம் ஜெப ஆலயத்தில் உரைக்கப்பட்டதுமான பிரசங்கத்தை யோவான் மட்டுமே பாதுகாத்துள்ளார். அங்கு அவர் (இயேசு) தம்மையே ஜீவ அப்பம் என்று கூறுகின்றார். உற்சாகம் நிறைந்த மக்கள் கூட்டமானது அவர் தங்களின் எதிர்பார்ப்புக்குட்பட்ட வகையான மேசியா அல்ல என்பதைக் காணத் தொடங்குகின்றனர். அவர்களின் கீழான நோக்கங்களுக்கு அவர் இணங்கி யிருந்தால், ஒரு பூமிக்குரிய அரசராயிருப்பதற்கு சம்மதித்திருந்தால், அவர் உடனடியாக மிக மேன்மையான அதிகாரத்திற்கு உயர்த்தப்பட்டிருக்க முடியும். அவர் அதற்காக வந்திருந்ததில்லை. அவரைப் பொறுத்தமட்டில் மனித குல மீட்புக்கான வழி என்பது சிலுவையின் வழியாகவே இருந்தது.

கப்பர்நகூமில் இருந்த ஜெப ஆலயத்தில் செய்யப்பட்ட இந்தப் பிரசங்கமானது இயேசுவின் வாழ்வின் திருப்புமுனைகளில் இன்னொன் றைக் குறிக்கின்றது. "அது முதல் அவருடைய சீஷரில் அநேகர் அவருடனே கூட நடவாமல் பின்வாங்கிப் போனார்கள்" (யோவா. 6:66). வேதபாரகரும் பரிசேயரும் நீண்ட நாட்களாகவே அவரை வெறுத்து வந்தனர்; கதரேன் நாட்டினரும் நாசரேத்தூர் மனிதர்கள் அவரைப் புறக்கணித்து விட்டனர்; ஏரோது அந்திப்பா இயேசுவின்மீது அபாயகரமான ஆர்வத்தை மேற் கொள்ளத் தொடங்கியுள்ளான்; மற்றும் இப்பொழுது அவருடைய சீஷர்களே ஏமாற்றத்துடன் அவரை விட்டுப் புறம்பே திரும்பி விடுகின்றனர்.

V. ஐந்தாம் நிலை—கூடாரப் பண்டிகையின் போது கலிலேயாவிலிருந்து கடைசியாய்ப் புறப்படுதல் வரை

1. கால அளவு.—இயேசு தம்முடைய ஊழியத்தின் மூன்றாவது பஸ்காவில் கலந்து கொள்ளாதிருந்தார். இது அவர் ஐயாயிரம் பேருக்கு உணவளித்த வேளையில் நடைபெற்றது (யோவா. 6:4). ஆகையால், கலிலேய ஊழியத்தின் இந்தக் கடைசி நிலையானது ஏப்ரல் முதல் அக்டோபர் வரை ஆறு மாதங்களாக நீடித்தது.

2. புதிய தோற்றங்கள்.—இந்தக் கால கட்டமானது புதிய மற்றும் மனதில் பதியக் கூடிய வலுவான தோற்றங்களை முன் வைக்கின்றது. இது பின்வருவன வற்றின் காலகட்டமாயிருந்தது,—

அ. அலைந்து திரிதல்.—இயேசு, பெனிக்கியா, பாசான் மாகாணம், மற்றும் தெக்கப்போலி ஆகிய இடங்களுக்கு வரிசையாகப் பயணம் செய்தார். இருப்பினும் அவர் கலிலேயாவில் தமது ஊழியத்தை முற்றிலுமாக விட்டுவிடாதிருந்தார்.

ஆ. தனிமைப்படுதல்.—இயேசு கூட்டங்களை உறுதியாகத் தவிர்த்து, பன்னிருவருடன் தனிமையிலிருப்பதை நாடினார்.

இ. தனிப்பட்ட அறிவுறுத்தல்.—ஒரு சில அற்புதங்கள் மற்றும் ஒரு சிறிது வெளிப்படையான உபதேசங்கள் ஆகியவை பதிவு செய்யப் பட்டுள்ளன. அவர் இராஜ்யத்தின் அடிப்படைக் கொள்கைகளில் பன்னிருவருக்குப் பயிற்சியளித்து, நெருங்கிக் கொண்டிருந்த தம்முடைய மரணத்திற்கு அவர்களைத் தயார் செய்து கொண்டிருந்தார் (இ.வ. மத். 16:21-23; 17:9; மாற். 9:30-32).

3. பெனிக்கே நாட்டிற்கு வருகை (மத். 15:21-28).—எல்லா நாடுகளி லிருந்தும் மனிதர்களை இரட்சிப்பதையே ஊழியமாகக் கொண்டிருந்த இயேசு ஒரே ஒருமுறை தாம் பிறந்த சொந்த நாட்டிற்கு அப்பால் சென்றார். இந்தப் பயணத்தில் நடைபெற்ற—சிரபோனிக்கேயப் பெண்ணின் மகளைக் குணமாக்குதல் என்ற - ஒரே ஒரு நிகழ்ச்சி மட்டுமே பதிவு செய்யப் பட்டுள்ளது. பரிசேயரின் மாய்மாலம் மற்றும் கலிலேயரின் அற்பத்தனம் ஆகியவற்றிற்குப் பின் அவ்வளவு தாழ்மையான, அவ்வளவு வெற்றி கொள்ளப்பட முடியாத அவளது விசுவாசம், சற்று நிம்மதியைக் கொண்டு வந்திருக்க வேண்டும். தீரு, சீதோனைக் கடந்து சென்ற இயேசு தெக்கப் போலிக்கு நீண்ட சுற்று வழியாய்ச் சென்றார். இங்கு மீண்டும் ஒருமுறை அவரைச் சுற்றி மக்கள் கூட்டம் திரண்டது, அவர் மீண்டும் ஒருமுறை அவர்களுக்கு அற்புதமாய் உணவூட்டினார், இம்முறை நாலாயிரம் பேர் இருந்தனர். கடலை கடந்து, மறுபடியும் அவர் கலிலேயாவுக்குத் திரும்பினார். கலிலேய ஊழியத்தின் இந்தக் கடைசி நிலை முழுவதிலும், இயேசு ஏரோது அந்திப்பாவின் எல்லைகளுக்குப் புறம்பே விரிவாய்ப் பயணம் செய்து கொண்டிருக்கையில் அவர் இன்னமும் கலிலேயாவையே மையமாகக் கொண்டு இருந்தார். அவ்வப்போது அவர் அங்கிருந்து புறப்பட்டும், மீண்டும் அங்கு திரும்பி வந்து கொண்டும் இருந்தார்.

4. பிலிப்புச் செசரியாவுக்கு வருதலும், மாபெரும் அறிக்கையும் (மத். 16).—இயேசு கலிலேயாவுக்குத் திரும்பிய பொழுது, பரிசேயர்கள் இவ்வேளையில் சதுசேயர்களால் மறுவலிவூட்டப்பட்டவர்களாகி, தங்கள் தாக்குதல்களைப் புதுப்பித்தார்கள் (மத். 16:1-4); மற்றும் இயேசு இந்தப் பயணத்தில் ஏரோது பிலிப்புவின் எல்லைகளில் செல்லுமாறு அமைத்திருக் கையில் அவர், பரிசேயர்கள் மற்றும் சதுசேயர்கள் ஆகியோரின் "புளித்தமா" குறித்து தம்முடைய சீஷர்களைப் பெருமிதத்துடன் எச்சரித்தார்.

இப்பொழுது அவருடைய ஊழியத்தின் முடிவு நெருங்கிக் கொண்டுள்ளது. அவர், தாம் மேசியாவாக இருப்பதாக முன் ஒரு பொழுதும் முறைப்படி உரிமைகோரியதில்லை. அவர் தாம் செய்த ஊழியங்கள், தாம் பேசிய சத்தியங்கள், தாம் வாழ்ந்த வாழ்வு ஆகியவற்றின் மூலமாக மனிதர்களின் சிந்தனையில் சத்தியமானது படிப்படியாக உதிப்பதை அனு மதித்தல் என்பதையே விரும்பித் தேர்ந்து கொண்டார். ஆனால் விளைவு களைச் சோதித்துப் பார்ப்பதற்கும், அவர்களின் அமைதியான உறுதிப் பாட்டை வெளிப்படையான அறிக்கையாக மாற்றுவதற்கும் உரியவேளை வந்துள்ளது. தனிமையான ஜெபவேளை ஒன்றிற்குப் பின் இயேசு

பன்னிருவரிடத்திலும் இரு கேள்விகளை வைக்கின்றார்:

"மனுஷ குமாரனாகிய என்னை ஜனங்கள் யார் என்று சொல்லு கிறார்கள்?"[7]

இதற்குக் கிடைத்த பல்வேறு பதில்கள், அவரையும் அவரது ஊழியத்தையும் புரிந்துணர்ந்து கொள்வதில் பொது மக்கள் எவ்வளவு முற்றாகத் தவறியிருந்தார்கள் என்பதைக் காண்பிக்கின்றது.

"நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள்?"[8]

"நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து"[9]

இந்த அறிக்கையின் முக்கியத்துவத்தை மிகைப்படுத்துதல் என்பது இயலாத செயலாக உள்ளது. ஒருவேளை அவர்களும் கூட சத்தியத்தை தவற விட்டிருந்தார்கள் (என்போம்).

பேதுரு தாம் அங்கு பேசினார்; அவர் தமக்காக மட்டுமின்றி, பன்னிரு வருக்காகவும் பேசினார். ஆக, இயேசுவின் ஊழியம் தோல்வியடைய வில்லை என்றாயிற்று. அவர் தம்மைச் சுற்றிலுமிருந்த சிறு வட்டத்தில் தம்முடைய எதிர்கால சபைக்கான முளைக் கருவைக் கண்டார், மற்றும் அது சத்தியம் பற்றி பேதுருவின் அறிக்கை என்ற உண்மையான "அப்போஸ் தலரின் போதனை"யின் மீது கட்டப்பட்டிருக்க வேண்டியதாயிற்று. ஆனால் அந்த வேளையில் அது அறிவிக்கப்படக் கூடாது. இயேசு தமது மேசியாத்து வத்திற்கு அவர்களை ஒப்புக்கொடுத்து விட்டு, தமது மேசியாத்துவத்தில் அடங்கியுள்ளவற்றை - புறக்கணிக்கப்படுதல், மரணம், உயிர்த்தெழுதல் - அவர்களுக்கு வெளிப்படுத்துகின்றார். இன்னும் உலகப் பிரகாரமான கருத்துக்களின் சிறு பிள்ளைக்குரிய பிணைப்புகளிலேயே இருந்த பேதுரு இதை மறுக்கிறார். "எனக்குப் பின்னாகப் போ, சாத்தானே"[10] என்பதே எஜமானரின் துரிதமான கடிந்து கொள்ளுதலாக உள்ளது; மற்றும் அதைத் தொடர்ந்து அவர் ஒரு பாடத்தைத் தருகின்றார், அது இன்னமும் அவசியமாகத் தேவைப்படுகின்றது, அந்த சீஷத்துவம் என்பது சுயத்தை மறுத்தல், கிரீடத்தை அணிந்து கொள்ளுமுன்பு சிலுவையைச் சுமத்தல் என்பதையும் அர்த்தப்படுத்துகின்றது.

5. மறுரூபமாகுதல் (மத். 17:1-13).—இந்தக் காலகட்டம் முழுவதிலும் இயேசு இருள் சூழ்ந்த நிழல்களின் மத்தியில் நடந்தார்: அவருக்குப் பின்னால் கலிலேயர்களால் அவர் புறக்கணிக்கப்பட்ட நிகழ்ச்சி இருந்தது; அவருக்கு முன்னால் சிலுவை இருந்தது; இருப்பினும் அவரைச் சுற்றிலும் அசையாத/நிலையான விசுவாசம் கொண்ட சீஷர்களின் குழு இருந்தது; அவருக்கு மேலாக பிதாவின் மாற்றப்பட முடியாத அன்பு இருந்தது. கலிலேயாவில் தமது விரோதிகளை மீண்டும் எதிர்கொள்ளத் திரும்பு முன்பு மற்றும் யூதேயாவில் இருந்த மிகுந்த பகையுணர்வு கொண்ட விரோதிகளை மீண்டும் எதிர்கொள்ளத் திரும்பு முன்பு, தெய்வீக பிரசன்னத்தின் மகா மேன்மையான அடையாளம் ஒன்றும் அங்கீகாரமும் அவருக்கு அருளப் பட்டது. மறுரூபமாகும் காட்சியானது ஒரு பகுதி, சீஷர்களை நோக்கம் கொண்டதாயிருந்தது, ஆனால் பிரதானமாக அவர்களின் எஜமானரை நோக்கம் கொண்டிருந்தது. இக்காட்சி தேர்ந்தெடுக்கப்பட்ட மூவரால்—பேதுரு, யாக்கோபு மற்றும் யோவான் ஆகியோரால்—காணப்பட்டது.

அவர் ஊக்கமான ஜெபத்தில் உள் வாங்கப்பட்டிருக்கையில், மனிதத் திரையினூடே கடந்து வந்த தெய்வீகமானது அவரது முகத்தையும் உடையையும் தெய்வீகக் கதிர்களால் அணிசெய்வித்தது. பழைய ஏற்பாட்டின் மத்தியஸ்தரான மோசேயும், மாபெரும் சீர் திருத்தவாதியான எலியாவும் தோன்றி, எருசலேமில் வரவிருந்த அவரது (இயேசுவின்) பாடுகள் குறித்து அவருடன் பேசினார்கள்; யோர்தான் நதியில் (இயேசு ஞானஸ்நானம் பெற்ற வேளையில்) நடந்தது போலவே அங்கு ஒரு குரலொலி வந்தது, "இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் பிரியமா யிருக்கிறேன்,"[11] என்பதுடன் "இவருக்குச் செவி கொடுங்கள்" என்பது தனிச்சிறந்த வகையில் கூட்டி உரைக்கப்பட்டது. சொல்லப் போனால் இது ஒரு குறிப்பிடத்தக்க காட்சியாய் இருந்தது. இதன் நினைவானது ஒரு அப்போஸ்தலரிடத்தில் நீண்ட நாட்களாகத் தாமதித்து/நிலைத்து இருந்தது (2 பேது. 1:16-18). தீர்க்கதரிசிகளும் அப்போஸ்தலர்களும், பழைய உடன்படிக்கையும் மற்றும் புதியதும், வானமும் பூமியும் சந்திக்கும் நிகழ்ச்சி அங்கு நடைபெற்றது. இது இயேசுவுக்கு, ஏறக்குறைய கனியற்ற ஊழியத்திற்குப் பிதாவின் அங்கீகாரத்தினுடைய முத்திரையாகவும், முடிவு வரையில் அவர் (பிதா) இயேசுவுடன் இருப்பார் என்பதற்கான உறுதிப்பாடாகவும் இருந்தது. சீஷர்களுக்கு இது, அவர்களின் அறிக்கை ஒரு தவறாயிருந்ததில்லை அல்லது அவர்களின் நம்பிக்கை தவறான இடத்தில் வைக்கப்பட்டிருக்கப்படவில்லை என்று அர்த்தப்படுத்திற்று; இனிமேல் அவர்கள் மோசேயின் பிரமாணத்தைக் கேட்கவோ அல்லது அதைப் பிரசங்கிக்கவோ வேண்டியதில்லை, ஆனால் கிறிஸ்துவின் பிரமாணத்தைக் கேட்டு அதையே பிரசங்கிக்க வேண்டும். ஆனால் மீண்டும் அவர்களின் உதடுகளின் மீது தற்காலிக அமைதியின் முத்திரை வைக்கப்பட்டது. இந்த தரிசனத்தின் முழுமையான முக்கியத்துவம் உயிர்த்தெழுதல் மற்றும் பரத்துக்கேறுதல் ஆகியவற்றின் வெளிச்சத்தில்தான் காணப்பட முடியும். தரிசன மலையிலிருந்து இறங்கிய இயேசு சந்திரரோகியாகவும் பிசாசு பிடித்தவனாகவும் இருந்த ஒருவனைக் குணப்படுத்தினார், கப்பர்நகூமுக் குத் திரும்பி வந்தார், எருசலேமில் (தமக்கு) வரக் காத்திருந்த துன்பங்களுக்கு சீஷர்களைத் தயார் செய்வதில் இன்னமும் பிரயாசப்பட்டுக் கொண்டிருந்தார்.

6. கலிலேய ஊழியத்தின் முடிவு.—இயேசு கலிலேயாவில் நீண்ட நாட்கள் தங்கி தாமதிக்கவில்லை. அங்கு அவரது மாபெரும் ஊழியம் செய்யப்பட்டிருந்தது. கூட்டங்களைத் தவிர்க்கவும், ஏதேனும் ஒரு சில அற்புதங்கள் மட்டும் செய்யவும், அவர் தம் இராஜ்யத்தின் ஆவிக்குரிய தன்மை பற்றியும் அதற்குள் பிரவேசிப்பதற்கும் கூட அவர்களுக்குத் தேவைப்படும் குழந்தைக்கொத்த தாழ்மையின் அவசியம் பற்றியும் தமது சீஷர்களின் மனதில் ஆழ்ந்த கருத்தை பதியச் செய்வதற்காக இன்னும் அதிகமாய் தம்மை அவர்களுடன் பிணைத்து பிறரிடமிருந்து விலகியிருந்து கொண்டார் (மத். 18:1-14). மாபெரும் கூடாரப் பண்டிகை சமீப மாயிருந்தது, மற்றும் அந்தச் சிறு குழுவானது சமாரியாவைக் கடந்து மீண்டும் ஒருமுறை எருசலேமுக்குச் சென்றது.

குறிப்புகள்

[1]மத். 9:13; மாற். 2:17; லூக். 5:32. [2]அப்போஸ்தலர்களின் பெயர்ப்பட்டியல்கள் மொத்தம் நான்கு உள்ளன:

மத்தேயு 10:2-4	மாற்கு 3:16-19	லூக்கா 6:14-16	அப். 1:13
சீமோன் பேதுரு	சீமோன் பேதுரு	சீமோன் பேதுரு	சீமோன் பேதுரு
அந்திரேயா	யாக்கோபு	அந்திரேயா	யாக்கோபு
யாக்கோபு	யோவான்	யாக்கோபு	யோவான்
யோவான்	அந்திரேயா	யோவான்	அந்திரேயா
பிலிப்பு	பிலிப்பு	பிலிப்பு	பிலிப்பு
பர்த்தொலொமேயு	பர்த்தொலொமேயு	பர்த்தொலொமேயு	தோமா
தோமா	மத்தேயு	மத்தேயு	பர்த்தொலொமேயு
மத்தேயு	தோமா	தோமா	மத்தேயு
அல்பேயுவின் மகனான யாக்கோபு	அல்பேயுவின் மகனான யாக்கோபு	அல்பேயுவின் மகனான யாக்கோபு	அல்பேயுவின் மகனான யாக்கோபு
ததேயு என்னும் மறுபெயர் கொண்ட லெபேயு	ததேயு	செலோத்தே எனப்பட்ட சீமோன்	செலோத்தே எனப்பட்ட சீமோன்
கானானியனான சீமோன்	கானானியனான சீமோன்	யாக்கோபின் சகோதரனான யூதா	யாக்கோபின் சகோதரனான யூதா
யூதாஸ்காரியோத்	யூதாஸ்காரியோத்	யூதாஸ்காரியோத்	—

கவனத்திற்கு: (1) மூன்று குழுக்கள்/வகைகள் உள்ளன. (2) ஒவ்வொரு பட்டியலிலும் பேதுரு முதலாவதாகவும், பிலிப்பு இரண்டாவதாகவும் அல்பேயுவின் மகன் யாக்கோபு (அல்லது அல்பேயு) மூன்றாவதாகவும் இருக்கின்றார். (3) "செலோத்தே" என்பது "கானானியன்" என்ற அரமாயிக் வார்த்தைக்குரிய கிரேக்க வார்த்தையாக உள்ளது. (4) எல்லாப் பட்டியல்களிலும் யூதாஸ்காரியோத் கடைசியாக உள்ளார். (5) ததேயு என்பவர் அநேகமாக யாக்கோபின் சகோதரனான யூதாவாகவே இருக்கலாம்.

[3]மாற்கு 4:39; மேலும் மத். 8:26; லூக். 8:24 ஆகியவற்றைக் காணவும். [4]மத். 8:27; மேலும் மாற். 4:41; லூக். 8:25 ஆகியவற்றையும் காணவும். [5]டீன் இவ்விடத்தில் "wrought" என்று எழுதியிருந்தார். [6]மத். 3:2; 4:17; மேலும் மாற். 1:14ஆ, 15ஐயும் காணவும். [7]மத். 16:13; மேலும் மாற். 8:27; லூக். 9:18 ஆகியவற்றையும் காணவும். [8]மத். 16:15; மாற். 8:29; லூக். 9:20. [9]மத். 16:16; மேலும் மாற். 8:29; லூக். 9:20 ஆகியவற்றையும் காணவும். [10]மத். 16:23; மாற். 8:33.

[11]மத். 17:5; மேலும் மாற். 9:7; லூக். 9:35 ஆகியவற்றையும் காணவும்.

18

பலஸ்தீனத்தின் எல்லாப் பகுதிகளிலும் முடிவு ஊழியம்

கூடாரப் பண்டிகையிலிருந்து பெத்தானிக்கு வருதல் வரையிலும்

இயேசுவின் ஊழியத்தின் இந்தக் கால கட்டமானது பஸ்காவுக்கு முந்திய ஆறு நாட்கள் தவிர, அக்டோபர் முதல் ஏப்ரல் வரையுள்ள 6 மாத காலத்தில் நடைபெற்றதாகும். இதற்கு முந்திய ஆறு மாதங்களில் இயேசு தேடப்பட்டவராய் இருந்தார். நாம் அவரை வரிசையாக எருசலேமில், யூதேயா நாட்டில், மீண்டும் எருசலேமில், பெரேயாவில் மற்றும் எருசலேமுக்கு அருகில் பெத்தானியாவில் மீண்டும் ஒருமுறை பெரேயாவில் காண்போம், மற்றும் சமாரியா கலிலேயாவின் வழியாக சாத்தியக் கூறுள்ள ஒரு பயணத்திலும், எருசலேமின் சுற்றுப் புறங்களுக்கு கடைசியாகத் திரும்பி வருதலிலும் அவரைக் காண்போம்.

1. எருசலேமில்; கூடாரப் பண்டிகையின் வேளையில் *(யோவா. 7:10; 10:20).—எருசலேமில் இயேசுவின் வருகைகளின் போது வழக்கமாக உள்ளது போலவே இங்கு(ம்) யோவான் சுவிசேஷமே நமக்கு அதிகாரத்துவ முடையதாக உள்ளது. அவர் கலிலேயாவை விட்டுப் புறப்படு முன்னர், இயேசுவின் உறவினர்கள் அவரைப் பண்டிகைக்குச் செல்லும் பயணிகளின் கூட்டத்துடன் சேர்ந்து கொள்ளுமாறும் நாட்டின் தலைநகரான அங்கு அவர் தமது மேசியாத்துவத்தை அறிவிக்கும்படியாகவும் வற்புறுத்தினர். ஆனால் இயேசு தம் சொந்தத் திட்டங்களை வைத்திருந்தார். அவர் தமது நண்பர்களின் உலகப்பிரகாரமான நம்பிக்கைகளுக்கு இணங்கி அவர்களை அபாயத்திற்கு உள்ளாக்க மாட்டார் அல்லது தமது எதிரிகளுடன் காலத்துக்கு முந்திய போராட்டத்தில் இறங்கி விடமாட்டார். பஸ்காவுக்கு இன்னும் ஆறு மாதங்கள் இருந்தன, அப்போது அவர் உலகின் உண்மை யான பஸ்காவாக தம்மைத் தாமே மனமுவந்து கையளிப்பார். எனவே அவரது உறவினர்கள், அவர் பின் தொடர்ந்து வருவாரோ இல்லையோ என்பதை அறியாமலேயே பண்டிகைக்குக் கூட்டமாய்ச் சென்றனர். எருசலேமில் எல்லாருடைய உதடுகளிலிருந்தும் ஒரு கேள்வி வெளிப் பட்டது: "அவர் எங்கே இருக்கிறார்?," கடைசியாக, பண்டிகையின் நடுவில் இயேசு தனியாக எருசலேமுக்கு வந்தார், நேராக தேவாலயத்திற்குச் சென்று போதிக்கத் தொடங்கினார். அவர் ரபீக்களின் பள்ளிகளுடைய மொழியில் பேசாததால், ரபீக்கள் களங்கப்படுத்தப்பட்டனர்; ஆனால் அவர் பயமின்றி*

தொடர்ந்து செயல்பட்டார். விபசாரத்தில் பிடிபட்ட பெண்ணைப் பற்றிய[1] ஒரு நிகழ்ச்சி எடுத்துரைக்கப்பட்டுள்ளது. பிறவியிலேயே பார்வையற்றிருந்த ஒரு மனிதரைக் குணமாக்கிய ஒரு அற்புதம் நடைபெற்றது, இது ஓய்வு நாளில் செய்யப்பட்டதால் மாபெரும் குற்றச்சாட்டு ஏற்படக் காரணமாயிற்று. யூதர்கள் அவரைக் கல்லெறிந்து கொல்லத் தேடுமளவுக்கு விஷயம் தீவிரமாயிற்று. நல்மேய்ப்பனின் அழகிய உருவகத்தின் கீழாக இயேசு தாம் மனமுவந்து தமது மந்தைக்காக உயிரைக் கையளிக்கப் போவதாகவும், மீண்டும் உயிரோடு எழுந்திருக்கப் போவதாகவும் அறிவிக்கின்றார்.

2. யூதேயாவின் நாட்டுப்புற மாகாணங்களில்.—இயேசு, எருசலேமின் யூதர்களுடைய சூழ்ச்சிகளுக்கு முன்பாக ஓய்ந்திருந்து நகருக்கருகில் ஒரு சில வாரங்களைச் செலவிட்டார். ஒரே ஒரு அற்புதம்—இன்னொரு ஓய்வுநாளில் குணமாக்குதல்—பதிவு செய்யப்பட்டுள்ளது; ஆனால் அவர் அறிவுறுத்தல் களில் ஆச்சரியமான செல்வத்தை ஊற்றுகின்றார். அதன் பகுதிகளாக உள்ள மாதிரி ஜெபம், கடுகு விதையின் உவமை, மற்றும் புளித்த மாவின் உவமை ஆகியவை முந்திய கலிலேயப் பாடங்களை மறுபடி கூறுதலாக இருக்கின்றன. இரு அழகிய உவமைகள்—மதியீனனாயிருந்த செல்வந்தன் மற்றும் நல்ல சமாரியன்—புதியதானவைகளாகவும், லூக்காவுக்கே புதுமையானவைகளாகவும் உள்ளன, நாம் இவ்விரு மாதங்களின் வரலாற்றிற்கு இவருக்கே கடன்பட்டுள்ளோம்.

ஆனால் இயேசு தாம் தனிப்பட்ட வகையில் செய்யக்கூடிய இப்படிப் பட்ட சுவிசேஷ ஊழியத்துடன் திருப்தியடைந்து விடவில்லை. காலம் குறுகியதாயிருந்தது, செய்ய வேண்டிய பணிகள் ஏராளமாக எஞ்சி யிருந்தன. கலிலேயாவில் பன்னிருவரை அனுப்பியது போன்றே இப்பொழுது அவர் யூதேயாவில் எழுபது பேர்களை அனுப்புகின்றார். அவர்கள் பழைய செய்தியையே அறிவிக்கும்படி கட்டளையிடப்படுகின்ற னர்: "மனந்திரும்புங்கள், (பரலோக) இராஜ்யம் சமீபித்திருக்கிறது."[2]

இந்தக் காலகட்டத்தில் தான் நாம் பெத்தானியா சகோதரிகளைப் பற்றிய நமது முதல் சிறு குறிப்புகளைப் பெறுகின்றோம் (லூக். 10:38-42): மரியாள் எஜமானருடைய பாதங்களின் கீழ் அமர்ந்திருந்தாள், மார்த்தாளோ "உபசரிப்புப் பணிகளால் தடை செய்யப்பட்டிருந்தாள்."[3]

3. எருசலேமில்; (தேவாலய) பிரதிஷ்டைப் பண்டிகை (யோவா. 10:22-42).—கூடாரப் பண்டிகைக்கு இரு மாதங்கள் பிந்தி, நமது டிசம்பர் மாதத்தில் இயேசு பிரதிஷ்டைப் பண்டிகைக்கு எருசலேமுக்குத் திரும்பி வந்தார். அவரை சாலொமோன் மண்டபத்தில் எதிர்கொண்ட யூதர்கள் அவர் மேசியாவா அல்லவா என்பதை வெளிப்படையாகக் கூறும்படி வற்புறுத்தினார்கள். இயேசு, தமது வெளியரங்கமான உறுதிப்பாடானது, தம் சொந்த வாழ்வு மற்றும் ஊழியத்தின் ஆதாரத்திற்கு சுயமாய்ப் பார்வையற்றுப் போன மனிதர்களிடத்தில் சிறிதளவே மதிப்புடையதாக இருக்கும் என்பதை நன்கு அறிந்திருந்தும் நேரடியான பதில் கூற மறுத்து விட்டார். அவரைக் கொல்வதற்கு அவர்கள் மீண்டும் ஒருமுறை கற்களை எடுத்துக் கொண்டனர். கப்பர்நகூம் மற்றும் கலிலேயா போன்றே

எருசலேமும் யூதேயாவும் மீண்டும் ஒருமுறை அவரது போதனைக்குச் செவியை மூடிக் கொண்டன. இன்னும் ஒரு மாநிலம் அவருக்குத் திறந்திருந்தது, அது யோர்தானுக்கு அப்பால் இருந்த பாதி புறதெய்வ வழிபாட்டு மாநிலமான பெரேயாவாகும். இயேசு அவ்விடம் நோக்கித் தமது முகத்தைத் திருப்பினார்.

4. பெத்தானியில்: லாசருவை உயிரோடெழுப்புதல் *(யோவா. 11:1-54).* —பெரேயாவில் இயேசுவின் ஊழியம் லாசருவின் மரணத்தால் தடைப்படுகின்றது. பெத்தானியிலிருந்த ஒரு சிறு வட்டாரத்தைப் பற்றி அதிகம் அறிந்து கொள்ள நாம் மகிழ்வடைவோம். இயேசுவின் மாபெரும் இருதயமானது உலகம் முழுவதையும் தன்னகத்தே ஏந்திக் கொண்டது; இருப்பினும், தனிப்பட்ட வகையான மென்மையுடன் அவர் "மார்த்தாளையும் அவள் சகோதரியையும், லாசருவையும்" அன்புகூர்ந்தார்.[4] அந்த இல்லத்திற்கு அவர் பதிவு செய்யப்படாத பல வருகைகளை மேற்கொண்டிருந்திருக்க வேண்டும். மரித்துக் கொண்டிருந்த தம் நண்பரையும், துக்கப்பட்டுக் கிடந்த சகோதரிகளையும் விட்டு தொலைவில் அவர் பெரேயாவில் இருக்கும்படி செய்த விஷயம் மாறுபாடுள்ளதல்ல. பல நூற்றுக்கணக்கானவர்களைக் குணமாக்கியது போல அவரை (லாசருவை) குணமாக்கவும் அவர் திரும்பி வந்திருந்தால் அவர்களும் நாமும் கூட எவ்வளவு விஷயங்களைத் தவற விட்டிருப்போம்! கடைசியில் அவர், அவர்களுடன் அழவும், உடைந்து போன இருதயங்களிலிருந்து அவர்களின் விசுவாச அறிக்கையைப் பெறவும், துக்கமுற்ற எண்ணிறந்த ஆத்துமாக்கள் சாயக் கூடிய அந்த வார்த்தைகளைக் கூறவும் திரும்பி வந்தார்: "நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்,"[5] மற்றும் அவர் தம் செயல்களினால் தம் வார்த்தைகளைச் செயல்விளக்கப்படுத்தவும் திரும்பி வந்தார். இயேசு பெரேயாவிலிருந்து திரும்பி வருதல் மற்றும் அவர் லாசருவை மரித்தோரில் இருந்து உயிர்ப்பித்தல் ஆகியவைகளைக் கொண்ட அத்தியாயத்தைத் தவற விட்டிருந்தால் அது இந்த உலகிற்கு நலம் அளித்திருக்காது.

எருசலேமுக்கு அவ்வளவு அருகில் நடந்த அவ்வளவு வியப்புக்குரிய அற்புதமானது ஒரு கலக்கத்தை ஏற்படுத்தத் தவற முடியாமல் போயிற்று. பலர் அவர் மீது விசுவாசம் கொண்டனர்; ஆனால் வானத்திலோ அல்லது பூமியிலோ உள்ள எந்த ஒரு வல்லமையும் மாய்மாலக்காரப் பரிசேயர்களையோ அல்லது சூதுமிக்க சதுசேயர்களையோ விசுவாசிக்கும்படிக் கட்டாயப்படுத்த முடியாதிருந்தது. அபாயமிக்க இந்த அற்புதத்தில் பட்டய முனையில் பல கேள்விகளைச் சுட்டி காண்பித்த நிலையில், அவர்கள் ஒரு கேலி செய்ய ஒரு பொதுவான களத்தைக் கண்டறிந்தார்கள். பிரதான ஆசாரியரான காய்பா என்பவரின் ஆலோசனையில் செயல்பட்ட (ஆலோசனை) சங்கம் அவருக்கு மரணத்தை ஆணையிட்டது. உயிருடன் இருந்த லாசரு பதில் அளிக்க முடியாத விவாதமாயிருந்தார், மற்றும் அவர்கள் லாசருவுக்கும் அதே தண்டனையளிப்பது பற்றிப் பேசினார்கள். ஆகையால் இயேசு எப்பிராயீமில் தங்கியிருந்தார், அங்கிருந்து மீண்டும் ஒருமுறை பெரேயா சென்றார், இம்முறை அவர் பெரும்பாலும் சமாரியா மற்றும் கலிலேயாவின் தென்பகுதியினூடாகப் பயணித்திருப்பார்.

5. பெரேயாவில் ஊழியம் *(லூக். 13:22-17:10; மத். 19-20:28).—* பெரேயாவில் இயேசு ஒப்பீட்டளவில் ஒரு புதிய களத்தினுள் பிரவேசித்தார். இது யோவானின் மிகத் தொடக்க கால ஊழியத்தின் காட்சியாய் இருந்தது (யோவா. 10:40; இ.வ. 1:28); மற்றும் யோவான் விதைத்திருந்ததை இயேசு சந்தேகமின்றி அறுத்தார், ஏனெனில் இங்கு அவரது ஊழியம் இதற்கு முன்பு கலிலேயாவில் பெற்றிருந்த வெற்றியைப் பெற்றது (யோவா. 10:41, 42). பெரேயாவில் (இச்சமயத்தில்) ஒரு அற்புதமாவது செய்யப்பட்டதாகக் குறிப்பிடுதல் என்பது சந்தேகத்திற்குரியதாக உள்ளது; ஆனால் தனிப்பட்ட மற்றும் மென்மையான உற்சாக உணர்வு அடையாளப்படுத்திய போதனை அமைப்பொன்று நமக்கு வந்துள்ளது. இங்கு உவமைகளின் இரண்டாவது தொகுதி உரைக்கப்பட்டது, இது லூக்காவினால் மட்டும் பதிவு செய்யப்பட்டுள்ளது: மாபெரும் விருந்து, காணாமற் போன ஆடு,[6] காணாமற் போன காசு, ஊதாரி மகன், அநீதியான உக்கிராணக்காரன், செல்வந்தனும் லாசருவும், விடாது வற்புறுத்திய விதவை, மற்றும் பரிசேயனும் ஆயக்காரனும். திராட்சத் தோட்டத்தில் வேலை செய்பவர்கள் பற்றிய உவமையை மத்தேயு கூடுதலாய்க் கூறுகின்றார். ஒப்பீட்டு சுவிசேஷ எழுத்தாளர்கள் யாவரும், இயேசு சிறுபிள்ளைகளை ஆசீர்வதித்தது மற்றும் செல்வமிக்க இளம் வயதுள்ள அதிகாரி ஆகிய நிகழ்ச்சிகளைத் தருகின்றனர். அவர்கள் யோர்தானுக்கும் எருசலேமுக்கும் அருகில் நெருங்கிய முடிவு வேளையின் சமீபத்தில், யாக்கோபும் யோவானும் இயேசுவின் வலது புறத்திலும் இடது புறத்திலும் அமரும் பெரு விருப்பம் கொண்ட வேண்டுகோளுடன் வந்தனர். அவர்கள் கிரீடங்களைப் பற்றிக் கனவு கண்டு கொண்டிருந்தனர்; அவரோ சிலுவையை முன்னாக நோக்கிக் காத்திருந்தார். இயேசு பெரேயாவை விட்டு, யோர்தானை எரிகோவுக்கு அருகிலிருந்த வழக்கமான துறையில் கடந்து வந்தார். பழைய நகருக்குள் அவர் கடந்து செல்லுகையில் பார்வையற்ற பர்த்திமேயு பார்வை பெற்றார், ஆயக்காரராயிருந்த சகேயு ஆழமான குணத்தைப் பெற்றார், இது கிறிஸ்து கொண்டு வந்த மிக மேன்மையான ஊழியமாய் உள்ளது. செங்குத்தான உயரத்தில் கிளம்பிச் சென்ற இயேசு பஸ்காவுக்கு ஆறுநாட்கள் முன்னதாக பெத்தானி என்ற புறநகர்ப்பகுதியின் கிராமத்தைச் சென்றடைந்தார். நீண்ட பயணங்கள் முடிகின்றன; முடிவு சமீபமாய் உள்ளது.

குறிப்புகள்

[1]இந்த நிகழ்ச்சி பழைய கைப்பிரதிகளில் இல்லை, ஆனால் அநேகமாக இது யோவான் சுவிசேஷத்தின் பகுதியாய் இராவிட்டாலும், வரலாற்றுப் பூர்வமானதாக இருக்கலாம். [2]மத். 3:2; 4:17; மேலும் மாற். 1:14ஆ, 15லும் காணவும். [3]லூக். 10:40. [4]யோவா. 11:5. [5]யோவா. 11:25. [6]மத். 18:12-14லும் கூறப்பட்டுள்ளது.

19

இயேசுவின் ஊழியத்தில் கடைசி வாரம்

1. பெத்தானியில் அபிஷேகம் *(மத். 26:6-13; மாற். 14:1-11; யோவா. 12:1-8)*.—இயேசு, வெள்ளிக்கிழமை இரவு பெத்தானிக்கு வந்து சேர்ந்தார். அவர், பஸ்கா பண்டிகைக்குச் சென்ற திருப் பயணிகளின் திரளான கூட்டத்தாரின் மத்தியில் ஆர்வத்தின் மையப் பொருளாய் இருந்திருக்க வேண்டும். அவர்கள் நகரிலிருந்த தங்கள் நண்பர்களின் வீடுகளில் அல்லது ஒலிவ மலையின் சரிவுகளிலோ அல்லது கிதரோன் சமவெளியிலோ கூடாரம் அமைத்து தங்கச் சென்றிருக்கையில் அவர் நன்கறியப்பட்ட பெத்தானி இல்லத்தை நாடினார். எப்பொழுதுமே வரவேற்கப்படும் விருந்தினராய் இருந்த அவர் இப்பொழுது மும்முறை வரவேற்கப்படுபவராய் இருப்பார். ஓய்வுநாள் ஓய்ந்திருப்பதில் கடந்து சென்றிருக்கும்; ஆனால் தொழு நோயாளியாய் இருந்த சீமோனின் வீட்டில், அந்த இரவில், அவருக்கு மதிப்பளிக்கும் வகையில் ஒரு விருந்து ஏற்பாடு செய்யப்பட்டது. மரியாள், மார்த்தாள் மற்றும் லாசரு ஆகியோர் அங்கிருந்தனர், அவர்கள் உயிருடன் மீண்டும் எழுப்பப்பட்டிருந்த ஒருவரினிமித்தம் (லாசரு) அகம் மகிழ்ந்து, ஒருவர் மற்றவருடன் ஐக்கியத்தைப் புதுப்பித்து, இவற்றைத் தாங்கள் அதிகமாய்க் கடன்பட்டிருந்த ஒருவர் (இயேசு) முன்னிலையில் செய்தார்கள். ஆனால் ஒருத்தியினுடைய நன்றி உணர்வானது மென்மை யற்ற அல்லது சாதாரணமான வழிமுறைகளில் வெளிப்படுத்தப்பட முடியாதிருந்தது. இனியும் அவளால் தாங்கக் கூடாத வரைக்கும் கர்த்தரு டைய முகத்தை உற்று நோக்கி, அவருடைய கிருபையுள்ள வசனங்களைக் கவனித்துக் கேட்ட அவள் எழுந்தாள், ஒரு விலை உயர்ந்த தைலம் கொண்ட ஜாடி ஒன்றைக் கொண்டு வந்தாள், அதிலிருந்த தைலத்தை முதலில் அவரது தலையில் ஊற்றினாள், பின்பு அவர் (உணவு) மேசையில் சாய்ந்திருக்கையில் அத்தைலத்தை அவள் அவரது பாதங்களில் ஊற்றினாள். இப்பொழுது போலவே அப்பொழுதும் மென்மையற்ற பண்பு கொண்டிருந்த சில ஆத்து மாக்கள் இதனை ''விரயம்'' என்று கண்டனம் செய்தன(ர்); ஆனால் அன்பைத் தூண்டி விடுகிற இயேசுவுக்கு, இது விலைமதிப்பற்ற அன்பாக இருந்தது, "அவளை விட்டுவிடுங்கள் ஏன் அவளைத் தொந்தரவு படுத்து கிறீர்கள்? என்னிடத்தில் நற்கிரியைச் செய்திருக்கிறாள் ... நான் அடக்கம் பண்ணப்படுவதற்கு எத்தனமாக, என் சரீரத்தில் தைலம் பூச முந்திக் கொண்டாள்."[1]

2. ஞாயிற்றுக்கிழமை: வெற்றிகரமான பிரவேசம் *(மத். 21:1-17).— பஸ்கா பண்டிகையின்போது எருசலேம் நகரில், பலஸ்தீனத்தின் மற்றும் பேரரசின் எல்லாப் பகுதிகளிலும் இருந்து வந்திருந்த வெளியாட்களால் அதிக கூட்டம் இருந்தது, அவர்களில் பலர் அவரைக் குறித்துக் கேள்விப் பட்டிருந்தனர், அவர்களில் பெரும்பாலோர் அவர் உரைத்தவற்றைக் கேட்டிருந்தனர். பெரேயா பகுதியில் ஊழியம் மற்றும் லாசருவை உயிருடன் எழுப்பியது ஆகியவை ஒரு புறத்தில் பிரபலமாயிருந்து புகழ்ச்சியைப் புதிதாய் கொழுந்து விட்டெறியத் தூண்டிக் கொண்டிருக்கை யில், மறுபுறத்தில் வெறுப்பின் நெருப்புகளை வளர்த்துக் கொண்டிருந்தன. முடிவு சமீபித்துள்ளது; எனவே இயேசு இனியும் தவிர்க்க முடியாத போராட்டத்தை மூடி மறைத்து வைக்கவில்லை, ஆனால் மேசியாத் துவத்தை வெளிப்படையாகச் செயல்விளக்கப்படுத்துவதற்கு இணங்கு கின்றார். ஆனால் அவர் யுத்தத்தின் அடையாளமான குதிரைக்குப் பதிலாக சமாதானத்தின் அடையாளமான கழுதைக் குட்டியைத் தேர்ந்து கொண்டதின் மூலம் தமது ஆளுகையின் இயல்பைத் தெரியப்படுத்து கின்றார். அவர் ஒலிவ மலையின் உச்சியை அடைந்த வேளையில், நகரிலிருந்து வந்த திரளான கூட்டத்தார், பெத்தானியிலிருந்து அவருடன் வந்து கொண்டிருந்த திரளான கூட்டத்தாரைச் சந்தித்தார்கள்; மற்றும் அவர், சத்தங்களுடனும், ஓசன்னாக்களுடனும், வெற்றிகரமான செயல் விளக்கங்களுடனும் எருசலேமுக்குள் அழைத்துச் செல்லப்படுகின்றார். நகரம் முழுவதும் முரண்படும் உணர்வெழுச்சிகளினால் அதிர்ந்தது. அது ஒரு சுத்தமான மாகாணச் செயல் விளக்கமாயிருந்தது; ஒலிவ மலையிலிருந்து காட்சியில் தோன்றிய எருசலேமுக்காக அழுதிருந்தார், அந்நகரானது அமைதியாகத் தனித்து விடப்பட்டது அல்லது வெளிப்படையாக விமர்சனம் செய்யப்பட்டது. அந்நகரும் கூடத் தனது கர்த்தரை ஏற்றுக் கொண்டிருந்தால் என்ன என்று ஒருவர் கேட்காதிருக்க முடியாது. நாம் (அதற்கு) பதில் கூற(வும்) முடியாது. கடைசியில் புறக்கணித்தலே நடைபெற்றது என்பதை மட்டும் நாம் அறிகின்றோம். உற்சாகம் நிறைந்திருந்த சீஷர்கள் ஏமாற்றம் அடைந்தார்கள் என்பதில் சந்தேகத்திற்கு இடமில்லை. இயேசு, அவர்கள் எதிர்பார்த்து நம்பியிருந்த வகையில் மேசியாத்துவச் செயல்விளக்கத்தைப் பின்பற்றவில்லை; தேவாலயத்தில் இருந்த ஒவ்வொன்றைப் பற்றியும் ஆய்வு மட்டுமே செய்த பிறகு, அவர் இரவு வேளையில் தங்க பெத்தானிக்குத் திரும்பி வந்தார்.*

3. திங்கட்கிழமை: காய்க்காத அத்திமரம்; தேவாலயத்தை இரண்டாம் முறை சுத்திகரித்தல் *(மத். 21:12, 13, 18, 19; மாற்கு 11:12-18).— திங்கட்கிழமை காலையில் நகருக்குச் செல்லும் வழியில் இயேசு ஒரு அற்புதத்தைச் செய்தார், அது ஒரு அற்புதமாகவும் மற்றும் உவமையாகவும் இருந்தது. காய்க்காத அத்தி மரமானது, வழக்கத்திற்கு மாறான தனது இலைகளின் பெருக்கத்தால் வழக்கத்திற்கு மாறான கனி நிறை தன்மை இருப்பதாக (தன்னை) உயர்த்திக் கொண்டிருந்தது. இயேசுவிடமிருந்து வந்த ஒரு வார்த்தையினால் அது அழிந்து போயிற்று: அழிவையே தங்கள் வீழ்ச்சியாகக் கொண்ட பொய்யான நகருக்கும் நாட்டுக்கும், அல்லது*

பொய்யான வாழ்வுக்கும் இது பொருத்தமான நினைவுச் சின்னமாக உள்ளது. இயேசு அதைக் கடந்து தேவாலயத்தில் நுழைகிறார் ஞாயிற்றுக்கிழமை அவர் (இயேசு) மேற்கொண்ட ஆராய்வின் தொடர் நிகழ்ச்சியாக அவர் அதை, தமது முதல் பஸ்காவில் சுத்திகரித்தது போன்றே மீண்டும் சுத்திகரிக்கின்றார். பிலிப்பும் அந்திரேயாவும் வரம் பெற்ற கிரேக்க நாட்டின் பிரதிநிதிகள் சிலரை இயேசுவினிடத்தில் அழைத்து வந்தது பற்றிய ஆர்வமுள்ள நிகழ்ச்சி யோவானால் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளது (12:20-33). அவர் தாம் சிலுவையில் உயர்த்தப்பட்டிருக்கும் பொழுது எல்லா இனத்தவரும் தம்மை நோக்கி இழுக்கப்பட வேண்டிய ஒரு காலத்தை முன்னதாகவே கண்டார். அந்தப் பலியி(ன் காட்சியி)லிருந்து அவருடைய இதயம் பின்னிட்டது; ஆனால் "கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும்"[2] இவ்விதமாக கடைசி வரையிலும் இயேசு தம்முடைய இராஜ்யத்தின் இயல்பை முன் வைப்பதற்கு ஒவ்வொரு நிகழ்ச்சியையும் வாய்ப்பாகப் பற்றிக் கொண்டார். அவர் ஒரு அரசியல் புரட்சியை ஏற்படுத்தி பூமிக்குரிய பேரரசு ஒன்றை அமைப்பதைத் தேர்ந்து கொண்டிருந்தால் அதை அவர் ஒரு நாளிலேயே அமைத்திருக்கலாம்;[3] ஆனால் அந்தக் கேள்வி நீண்ட நாட்களுக்கு முன்பாகவே தீர்வு காணப்பட்டு விட்டது. மனிதரின் கிரீடமும் அவரது சொந்த கிரீடமும் சிலுவையின் வழியிலேயே வர வேண்டும்.

4. செவ்வாய்க்கிழமை: கேள்விகளின் நாள் (மத். 21:23-25:46).—இப்பொழுது நாம் இயேசுவின் வெளிப்படையான ஊழியத்தின் மாபெரும் கடைசி நாளுக்கு வந்துள்ளோம். இது மக்களிடத்தில் அவரது மதிப்பைக் குறைப்பதற்காக வடிவமைக்கப்பட்ட கேள்விகளுடன் தேவாலயத்தில் தொடங்குகின்றது: (1) ஆலோசனை சங்கத்தாரிடமிருந்து வந்த ஒரு குழுவினர் அவருடைய அதிகாரத்துவத்தைத் தொடுகின்றனர்; (2) வரி செலுத்துதல் பற்றி மீண்டும் பரிசேயர்களால்; (3) உயிர்த்தெழுதல் பற்றிச் சதுசேயர்களால்; (4) பெரிய கட்டளை பற்றி மீண்டும் பரிசேயர்களால்; (5) கிறிஸ்துவைப் பற்றி இயேசுவினாலேயே. இயேசு தமது தன்னிகரற்ற பதில்களில் உவமைகளின் மூன்றாம் தொகுதியைப் பின்னிப் பிணைக்கின்றார், அதாவது: இருமகன்கள், பொல்லாத குடியானவன், மற்றும் அரசருடைய மகனின் திருமணம். பிறகு தமது விரோதிகளிடம் திரும்பிய அவர், "வாழ்வு முழுக்க விமர்சனத்தை அடக்கி வைக்கும்'' ஒன்றை அவர்கள் மீது ஊற்றினார். "மாயக்காரராகிய வேத பாரகரே, பரிசேயரே, உங்களுக்கு ஐயோ!"[4] என்ற அவரது ஏழு ஐயோக்களின் திண்மையும் வெம்மையுமான இடி முழுக்கங்கள் அவர்கள் மீது வீழ்ந்தன. அது அவர்களுக்குத் தகுதியானதாகவே இருந்தது; ஆனால் அது மரண அடியாய் இருந்தது என்பதை இயேசு அறிந்திருக்க வேண்டும். இதுமுதல் அவர் இரக்கத்தை எதிர்பார்த்திருக்க முடியாது. இயேசு தேவாலயத்தை விட்டு என்றென்றைக்குமாக வெளியே செல்லும் போது ஏழை விதவையின் இரண்டு காசுகளை (காணிக்கை செலுத்தியதை) அவர் பாராட்டியது என்பது கடைசி நிகழ்ச்சியாய் இருந்தது. மாபெரும் சாபத்தின் முடிவைத் தொடர்ந்து வந்த இந்த அழகிய நிகழ்ச்சி பனிப் பாறையின் நடுவில் பாரிஜாத மலர் போன்று காணப்படுகின்றது.

அவர் பன்னிருவருடன் கடந்து சென்று, ஒலிவ மலையின் சரிவில் நகரத்தின் தேவாலயத்தை நோக்கியவாறு அமர்ந்தார். அங்கு மாபெரும் தேவாலயக் கற்கள் பற்றிய ஒரு சீஷரின் குறிப்புரைக்கும், தமது இரண்டாம் வருகை பற்றிய ஒரு கேள்விக்கும் பதிலுரையாக அவர் எருசலேமின் அழிவு மற்றும் தமது இரண்டாம் வருகை பற்றிய உரையை நிகழ்த்தினார். அவ்வுரை எல்லாவற்றினுடைய பாடமாக உள்ளது, ''விழித்திருங்கள், தயாராயிருங்கள், உங்கள் வாய்ப்புக்களைக் காத்துக் கொள்ளுங்கள்'' என்பதேயாகும். இவற்றை அவர் பத்துக் கன்னிகைகள் மற்றும் தாலந்துகள் ஆகியவற்றின் உவமைகளினால் வலுப்படுத்தினார். பிறகு நியாயத்தீர்ப்பு பற்றி மத்தேயு 25ல் பதிவு செய்யப்பட்டுள்ள மென்மையான சித்தரிப்பு தொடருகின்றது.

இவ்விதமாக இயேசுவின் வெளிப்படையான ஊழியத்தின் மாபெரும் கடைசி நாளானது நிகழ்ச்சியிலும் போதனையிலும் முழுமையானதாகவும் பல்வகைப்பட்டதாகவும் நடந்து முடிகின்றது. இயேசு தமது சீஷர்களுடன் ஒரு சில நிமிடங்கள் நடந்து சென்று, பெத்தானியின் அமைதியான பாதுகாப்பான பகுதியில் மீண்டும் ஒருமுறை ஓய்வு கொண்டார்.

ஆனால் அவரது எதிரிகள் அவ்விதமாக அந்த நாளைத் தங்களுக்குள் முடிக்கவில்லை. அந்தரங்கமாய் நடந்த இரகசியக் கூட்டத்தில் அவர்கள், முதலாவது அவர் சாக வேண்டும் என்றும், இரண்டாவது அவரைக் கொலை செய்யும் நிகழ்ச்சி பண்டிகையின் போது நடைபெறலாகாது என்றும் முடிவு செய்தனர்; ஏனெனில் அவர்கள் மாய்மாலக்காரர்களாய் இருந்தது போன்றே, கோழைகளாகவும் இருந்தனர், நட்புறவான கூட்டங்களின் முன்னிலையில் அவர்மீது கை வைக்க அவர்கள் துணியவில்லை.[5]

இப்பொழுது நாம், வரலாற்றின் புதிர்களில் ஒன்றைச் சந்திக்கின்றோம். சரியான வேளையில் பன்னிருவருக்குள் ஒரு சீஷனாயிருந்தவனும், இயேசுவின் பயணங்கள் மற்றும் தங்கும் இடங்கள் பற்றி அறிபவனுமாயிருந்த யூதாஸ் பணத்துக்காகத் தனது எஜமானரைக் காட்டிக் கொடுக்க முன் வருகின்றான். பேராசையே அவனது நோக்கம் என்பதை எடுத்துரைப்புக்கள் தெளிவாய்ச் சுட்டிக் காண்பிக்கின்றன (மத். 26:14, 15; மாற். 14:10, 11; லூக். 22:3-5; இ.வ. யோவா. 12:4-6). அன்பின் அளிப்பில் அற்பமாகக் குறை கண்டவன் மரியாளின் நன்றி நிறைந்த பலியில் மூன்றில் ஒரு பங்கான முப்பது வெள்ளிக் காசுகளுக்காகத் தனது எஜமானரை விற்றுப் போட்டான்.

5. புதன்கிழமை: புயலுக்கு முன் அமைதி.—இந்த புதன்கிழமையன்று நடந்த நிகழ்ச்சிகள் பற்றிப் பதிவேடு எதுவும் இருப்பதாகக் காணப் படுவதில்லை. நாம் இதன் காட்சிகளைக் கற்பனை செய்து கொள்ளும்படி விடப்படுகின்றோம்—நகரம் முழுவதும் அவர் ஏன் தேவாலயத்திற்கு வரவில்லை என்று வியப்புற்று கவனித்துக் கொண்டுள்ளது; மக்கள் (அவரது உரையைக்) கேட்பதற்கு ஆவலாய் இருக்கின்றனர், அதிகாரிகளோ அவருடைய இரத்தத்தின்மீது தாகமாய் இருக்கின்றனர். ஆனால் அவரது பணி செய்து முடிக்கப்பட்டாயிற்று. அவர் பெத்தானியில் தம் சீஷர்களுடன் தனிப்பட்ட வகையில் பேசிக் கொண்டு இருந்திருக்கலாம்; பெரும்பாலும்

அவர் கடைசிக் காட்சிகளுக்காக அந்த நாளில் ஓய்ந்திருந்து, ஜெபம் நிறைந்த வகையில் தயாரிப்புகளை மேற்கொண்டிருக்கலாம். நாம் இவற்றை அறிவதில்லை. இரகசியத்தின் திரையானது அந்த நாளின் மீது கவிந்து அமர்ந்துள்ளது. "அந்த இரவில் அவர் இப்புவியின்மீது கடைசி முறையாகப் படுத்துறங்கினார். வியாழக்கிழமை காலையில் அவர் மீண்டும் ஒருக்காலும் உறங்காமலிருக்கும்படி துயில் நீங்கி எழுந்தார்."

6. வியாழக்கிழமை: கடைசி இராப்போஜனம் (மத். 26:17-35; யோவா. 13:1-17).—வியாழக்கிழமையன்று ஏதோ ஒரு வேளையில் இயேசு பஸ்கா உணவை ஆயத்தப்படுத்தத் தமது சீஷர்களில் இருவரை நகருக்குள் அனுப்பினார். அந்த இரவில் அவர் பன்னிருவருடன் மீண்டும் ஒருமுறை பந்தி அமர்ந்தார்; ஏனெனில் யூதாஸ் இன்னும் அவரோடிருந்தான்—அவன் தோற்றத்தில் ஒரு சீஷனாக இருந்தான்; இருதயத்திலோ காட்டிக் கொடுப்பவனாக, ஒற்றனாக இருந்தான். அந்தச் சிறு குழுவினர் தங்களுக்குள் யார் முதன்மையானவர் என்று வழக்காடிக் கொண்டு தங்கள் இருக்கைகளில் அமர்ந்து பேசிக் கொண்டிருக்கையில் அவர்கள் மீது ஒரு மேகம் கவிந்தது. அழகுமிக்க மற்றும் தகுதியான வழிமுறையாய் இருப்பினும் அது போலவே செய்ய மிகக் கடினமானதாக இருந்த வழிமுறையொன்றில் இயேசு அவர்களின் பேராவலைக் கடிந்து கொண்டார். மேஜையை விட்டு எழுந்த இயேசு ஒரு சாதாரண வேலைக்காரனைப் போல் அவர்களின் பாதங்களைக் கழுவத் தொடங்கினார், அவர் தாழ்மை மற்றும் ஊழியத்தின் பாடத்தை அவர்களின் இருதயங்களில் பதியச் செய்தார். "உங்களிலொருவன் என்னைக் காட்டிக் கொடுப்பான்"[6] என்று இயேசு கூறிய பொழுது இன்னும் இருளான மேகங்கள் கவிந்தன. யூதாஸ் விரைவிலேயே அவ்விடம் விட்டு அகன்றான்—மற்ற சீஷர்களோ அவன் ஏதோ உபகார ஊழியம் செய்வதற்காகச் செல்வதாக யூகித்தார்கள்; ஆனால் இயேசுவோ அவன் தனது இருளான திட்டத்தைச் செயல்படுத்தச் செல்வதை அறிந்திருந்தார். பின்பு இயேசு, தாம் எல்லாராலும் கைவிடப்படுவதை, தன்னம்பிக்கையுள்ள பேதுருவால் தாம் மறுதலிக்கப்படுவதை வெளிப்படுத்துகின்றார். பின்பு மேகங்கள் விலகுகின்றன, இயேசு அழகுமிக்க, நினைவுகூரும் வகையிலான இராப் போஜனத்தை ஏற்படுத்துகின்றார் மற்றும் யோவான் 14-16ல் உள்ள இணையற்ற உரையைத் தொடங்குகின்றார். அவர் உண்மையான கர்த்தரின் ஜெபத்துடன் தனது உரையாடலை முடிக்கின்றார் (யோவா. 17); இந்த ஜெபமானது விரிவான இதன் வட்டங்களில் அங்கிருந்த அவரது சீஷர்களையும் (அப்போஸ்தலர்களையும்), அவர்களின் வார்த்தையினால் அவர் மீது விசுவாசம் கொள்ளும் யாவரையும், மற்றும் உலகத்தையும் அரவணைக்கின்றது. எனவே, மென்மையான உரையிலும், இந்து உலகத்தையே அரவணைக்கும் ஜெபத்திலும் அந்த நாள் கழிந்து, நள்ளிரவின் நேரம் வரையிலும் தொடர்ந்தது. நிலவொளியில் அவ்வறையை விட்டுக் கடந்து வந்த இயேசு நகரத்தை விட்டு பெத்தானியின் திசை நோக்கித் தமது சீஷர்களுடன் நடக்கலானார்.

7. கெத்சமெனே (மத். 26:36-46).—கெதரோன் என்று அழைக்கப்படும் பள்ளத்தாக்கின் கிழக்கு முனையில் ஒலிவ மலையின் அடிவாரத்தில்

கெத்சமெனே (எண்ணெய் பிழியும் இடம்) என்று அழைக்கப்பட்ட நன்கறியப்பட்ட ஒரு தோட்டம் அல்லது பழத்தோட்டம் இருந்தது. அது இயேசுவுக்குப் பிரியமான ஓய்விடமாய் இருந்தது. ஒலிவ மரங்களின் நிழல்களுக்குள் பிரவேசித்த அவர் தேர்ந்து கொள்ளப்பட்ட மூவரைத் தவிரப் பிறரை அவ்விடத்திலேயே விட்டுவிட்டு, ஜெபம் செய்வதற்காக தோட்டத்திற்குள் இன்னும் சற்றுத் தொலைவு சென்றார். அங்கு சமீபமாய் அம்மூவரையும் விட்டு விட்டு, அவர் நிழல்களினூடாக இன்னும் ஆழமாய் ஊடுருவிச் சென்று சொல்லவொண்ணாப் பெருந்துன்பத்துடன் தமது முகம் குப்புற (தரையில்) வீழ்ந்து கிடந்தார். அவர் "திகிலடையவும்,"[7] "மிகவும் வியாகுப்படவும்"[8] தொடங்கினார்; "மரணத்துக்கேதுவாக மிகவும் துக்க மடைந்தார்"[9]; "அவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய்த் தரையிலே விழுந்தது"[10] அவருடைய உதடுகளிலிருந்து கீழ்ப்படுத்தும்/ மிகவும் பரிதாபமான கதறுதல் மும்முறை வந்தது, "என் பிதாவே, இந்தப் பாத்திரம் என்னை விட்டு நீங்கக் கூடுமானால் நீங்கும்படி செய்யும்; ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக் கடவது"[11] அவர் மும்முறை அம்மூவரிடம் திரும்பி வந்து, அவர்கள் உறங்கிக் கொண்டிருப்பதைக் கண்டார். இதெல்லாம் எதனை அர்த்தப்படுத்து கின்றது? அவரது முகத்திலிருந்து இரத்தம் வியர்வையாய் பெருகியதற்கும், அவரது உதடுகளிலிருந்து பெருந்துக்கத்தின் கதறுதல் வந்ததற்கும் அவரை பலவந்தப் படுத்திக் கொண்டிருந்த சரீரமான பயம் காரணமாயிருந்ததா? அப்படியிருந்தால் அவர் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட பல போர் வீரர்களைக் காட்டிலும், கொலை மேடையின்மீது அழைத்துச் செல்லப் படும் மிருகத்தனமான குற்றவாளிகள் பலரைக் காட்டிலும் குறைவான வீரம் உடையவராக அல்லவா இருந்திருப்பார்? இது வரையிலும் நாம் (ஆர்வத்துடன்) பின்பற்றி வந்த மகிமையுள்ள அவருடைய மனிதத்து வமானது கடைசியில் பரிதாபமிக்க அளவுக்குக் குறுகிப் போயிற்றா? இது யாவும் மிகவும் மேன்மையான அர்த்தம் கொண்டிருப்பதில்லையா? மிகவும் பலம் வாய்ந்த துக்கம் ஒன்று—உலகத்தின் பாவங்கள் மற்றும் துன்பங்கள் என்ற அளவிட முடியாத பாரம் ஒன்று—அவரைத் தரையில் இட்டு நசுக்கவில்லையா? இந்தக் காட்சியானது உயிரோட்டமற்ற யூகம் செய்ய இயலாத அளவுக்கு மிகவும் மென்மையான பரிசுத்தமுள்ளதாக இருக்கிறது. அவரது நோக்கம் பற்றிய அவரது முந்திய சொற்போர்கள் எல்லாவற்றிலும் போன்றே, இதிலிருந்தும் அவர் வெற்றிகரமாய் வெளி வந்தார் என்பதை மட்டும் நாம் அறிகின்றோம்: "தமக்கு உண்டான பயபக்தியினிமித்தம் கேட்கப்பட்டு" (எபி. 5:7); "அப்பொழுது வானத்திலிருந்து ஒரு தூதன் தோன்றி, அவரைப் பலப்படுத்தினான்" (லூக். 22:43).

குறிப்புகள்

[1]*மாற்கு 14:6-8. இந்த அபிஷேகமானது லூக். 7ல் காணப்படும் அபிஷேக நிகழ்ச்சியுடன் குழப்பப் படுத்தப்பட்டு விடக் கூடாது. இயேசுவின் ஊழியத்தில் அது முந்தியது; இது பிந்தியது; அது பரிசேயனான சீமோனின் வீட்டில் நடைபெற்றது; இது தொழுநோயாளியாயிருந்த சீமோனின் வீட்டில் நடைபெற்றது; அது மீட்கப்பட்ட ஒரு பெண்ணினால் செய்விக்கப்பட்டது; இது ஆவிக்குரிய ஆத்துமா கொண்ட மரியாளால் செய்யப்பட்டது; அதில் அப்பெண்ணின் ஒழுக்கக் கேட்டினிமித்தம் (பரிசேயனான) சீமோன் குறை கண்டார்; இதில் (தைலம்) வீணாக்கப்பட்டதன் காரணமாக யூதாஸ் குறை கண்டான்.* [2]*யோவா. 12:24.* [3]*இவ்விடத்தில் டீன்* "wrought" *என்று எழுதினார்.* [4]*மத். 23:13, 14, 15, 23, 25, 27, 29.* [5]*இவ்விடத்தில் டீன்* "durst" *என்று எழுதினார்.* [6]*மத். 26:21; மாற். 14:18; லூக். 22:21; யோவா. 13:21.* [7]*மாற். 14:33; மேலும் மத். 26:37ஐயும் காணவும்.* [8]*மாற். 14:33; மேலும் மத். 26:37ஐயும் காணவும்.* [9]*மத். 26:38; மாற். 14:34.* [10]*லூக். 22:44.*

[11]*மத். 26:39, 42, 44; மேலும் மாற். 14:36, 39, 41; லூக். 22:42-46 ஆகியவற்றையும் காணவும்.*

20

கடைசி நாள்

மத். 26:45-27:66 மற்றும் இணை வசனப்பகுதிகள்

அறிமுகம்.—கிறிஸ்துவின் மரணத்தை, அவருடைய வாழ்வின் இழப்பில் நாம் மிகைப்படுத்துவதாக சில வேளைகளில் உணரப்படுகின்றது. அது சாத்தியமானதாகவே உள்ளது. சிலுவை என்பது பிதாவின் அன்பு மற்றும் இயேசுவின் வாழ்வு ஆகியவற்றின் உச்சகட்டத்தன்மை என்று ஏற்படுத்துவதைத் தவற விடுகின்ற ஒரு கடினமான இயந்திரத்தனமான வழிமுறையில் நிலைத்து இருந்து விடக்கூடிய சாத்தியக் கூறு உள்ளது. இருப்பினும், வேதாகமத்தில் வேறெந்த நாளின் செயல்களும் இதற்குச் சமமான முழுமைத்தன்மையுடன் எடுத்துரைக்கப்படுவதில்லை என்பது ஆலோசனைக்குரிய உண்மையாக உள்ளது. இயேசுவின் முழு வாழ்வும் இவ்வாறு முழுமையாக எடுத்துரைக்கப்பட்டால், அது முழுப் புதிய ஏற்பாட்டைப் போன்று நானூறு தொகுதிகளை நிரப்பி விடும்.

1. காட்டிக் கொடுத்தல்.—இயேசு ஜெபித்துக் கொண்டிருக்கையில் மூன்று சீஷர்களும் உறங்கியிருந்தார்கள். (ஆனால்) யூதாஸ் அவ்வாறு உறங்கவில்லை. அவன் தனது திட்டங்களை முழுமைப்படுத்துவதில் மும்முரமாய் இருந்தான். இயேசு தமது வேண்டுதல்களிலிருந்து எழுந்து, சீஷர்களிடத்தில் திரும்புகையில், யூதாஸ் ஆயுதங்களும் தீப்பந்தங்களும் தரித்திருந்த போர் வீரர்களின் ஒரு குழுவுடன் தோட்டத்திற்குள் நுழைந்தான். இந்த மனிதர்கள் இயேசுவை யார் என்று அறியாதிருந்தார்கள்; ஆனால் இதில் தவறுதல் ஏதேனும் ஏற்பட்டு விடாமல் இருக்க யூதாஸ் ஒரு சைகை கொடுத்திருந்தான்; அவன் இயேசுவிடம் நேராகச் சென்று "ரபீ, வாழ்க"[1] என்று கூறி அவரை முத்தமிட்டான். கலிலேயாவைச் சேர்ந்த புகழ் மிக்க அந்தத் தீர்க்கதரிசியின் காட்சியைக் கண்ட அந்த கூலியாட்கள் (போர்ச் சேவகர்கள்) பயமடைந்து முதலில் பின்னால் தடுமாறி விழுந்தார்கள்; ஆனால் கடைசியில் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு அவர்கள் இயேசுவைப் பிடித்தார்கள், மற்றும் அவரைக் கட்டி, வெளியே நடத்தி வந்தார்கள். இது யாவும் பேதுருவால் சகிக்கக் கூடாததாயிருந்தது, மற்றும் அவருடைய பட்டயத்திலிருந்து மோசமாய்ச் செலுத்தப்பட்ட வீச்சு ஒன்று பிரதான ஆசாரியரின் வேலைக்காரனுடைய காதை வெட்டியது. ஆனால் நண்பர்களாயிருப்பினும், பகைவர்களாயிருப்பினும் பட்டயங்கள் என்பவை ஒன்று போலவே தேவையற்றவைகளாயும் பயனற்றவைகளாயும் இருந்தன. அவர் தமது கட்டளைகளின் கீழ் இருந்த வல்லமையைப் பயன்படுத்த விரும்பியிருந்தால், அவருடைய விரோதிகள் அவற்றிற்

கெதிராய் நிலைநின்றிருக்க முடியாது; மற்றும் அவருடைய சுயமான தீர்மானமுள்ள நோக்கம் மற்றும் யூதரின் வெறுப்பு ஆகியவற்றிற்கு எதிராக அவர் சார்பாக அவருடைய நண்பர்கள் (கூட) அனுகூலமான ஏதொன்றையும் செய்திருக்க முடியாது. தெய்வீக அன்பும், மிகக் கொடூரமான வெறுப்பும், தேவனுடைய மேன்மைமிக்க நோக்கங்களும், மனிதர்களுடைய அற்பத்தனமான நோக்கங்களும், சிலுவையைச் சுற்றிலும் சந்திக்கின்றன, ஒன்று கலக்கின்றன.

2. விசாரணைகள்.—ரோமர்கள் தாங்கள் வெற்றி கொண்ட எல்லா மக்களையும் விட்டு விட்டிருந்தது போலவே யூதர்களையும் பெரிய அளவில் சுயாதீனமுள்ளவர்களாயிருக்கும்படி விட்டு விட்டிருந்தார்கள். யூதர்கள் அமைதி காத்திருந்து, வரிகளைச் செலுத்திக் கொண்டிருந்த மட்டிலும் அவர்கள் தங்கள் உள்ளூர் விவகாரங்களைத் தங்கள் சொந்த வழியிலேயே கையாண்டு கொள்ள முடிந்திருந்தது. ஆனால் அவர்களின் நாட்டுக் குழுவானது (ஆலோசனை சங்கத்தார்) கைதி ஒருவரை மரணத்திற்குப் பாத்திரராகத் தீர்ப்பிட்டிருக்கையில், மரண தண்டனை விதித்தல் என்பது ரோமானிய நீதிமன்றத்திற்கு மாத்திரம் உரிய பணியாய் இருந்தது. இவ்விதமாக இயேசு தனிக்குறிப்பிட்ட இரு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டார்: யூதத்துவ அல்லது போதகத்துவ விசாரணை மற்றும் ரோமானிய அல்லது குடிமைத்துவ விசாரணை. ஒவ்வொரு விசாரணையிலும் பின்வரும் மூன்று நிலைகள் இருந்தன.

அ. யூதத்துவ அல்லது போதகத்துவ விசாரணை.—(1) அன்னாவின் முன்பாக தொடக்க நிலை ஆய்வு செய்யப்படுதல் என்பதே இதன் முதல் படிநிலையாய் இருந்தது. அன்னா பல ஆண்டுகளுக்கு முன்பாகப் பிரதான ஆசாரியராய் இருந்தார், மற்றும் அவர் இன்னமும் சட்ட உரிமைப்படியான பிரதான ஆசாரியர் என்று யூதர்களால் மதிக்கப்பட்டார். அவர் வயது முதிர்ந்தவரும் மாபெரும் செல்வாக்குடையவருமாய் இருந்தார். அவர் இயேசுவிடம் ஒரு சில கேள்விகளைக் கேட்ட பின்பு, கொடூரமான முதல் அறையானது அவர் முன்னிலையிலேயே அவரது (இயேசுவின்) முகத்தில் விழுந்த பிறகுதான், அவரை (இயேசுவை) காய்பாவினிடத்தில் அனுப்பினார்; (2) இரண்டாம் படிநிலையானது காய்பாவுக்கு முன்பாக இருந்தது, இது மிகவும் அதிகமான முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. காய்பா என்பவர் அன்னாவின் மருமகனாயிருந்தார் மற்றும் அவர் ஆலோசனை சங்கத்தின் அல்லது ஆலோசனைக் குழுவின் தலைவர் என்ற வகையில் உண்மையான பிரதான ஆசாரியராயிருந்தார். சூரிய உதயத்திற்கு முன்பு நடக்கும் ஆலோசனை சங்கத்தின் எந்தக் கூட்டமும் சட்ட விரோதமானதாயிருக்கும்; ஆனால் மக்கள் கலகம் விளைவிப்பதற்கு முன்பாக இயேசுவிற்குத் தண்டனைத் தீர்ப்பை நடைமுறையில் பெற்றுக் கொள்ள தலைவர்கள் துரிதமாயிருந்தார்கள் என்பது உறுதி. அறிவுக்குப் பொருத்தமான குற்றச்சாட்டைக் கட்டி அமைப்பது/வடிவமைப்பது மிகவும் கடினமானதாக இருந்தது, நகைப்புக்கிடமான பல குற்றச்சாட்டுகள் முன்கொண்டு வரப்பட்டன, ஆனால் சாட்சிகள் கருத்து வேறுபட்டனர், மற்றும் இயேசு மாண்புமிக்க வகையில் அமைதி காத்து நின்றார். வழக்குரைத்

தலானது இடிந்து விழக்கூடிய/கலைந்து போகக் கூடிய அபாயம் ஏற்பட்ட பொழுது, இயேசு தாமே குற்றத்தை மெய்ப்பிக்கச்செய்யும் வகையில் அவரிடத்தில் காய்பா, "நீ ஸ்தோத்திரிக்கப்பட்ட தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துதானா?"[2] என்று கேட்டார். இதற்கு முன் இயேசு அமைதியாய் இருந்திருந்தார். (ஆனால்) அந்தக் கேள்விக்கு அவர் அமைதியாய் இருக்க முடியாது போயிற்று, மற்றும் அவர், "நான் அவர்தான்"[3] என்று பதில் அளித்தார். "தேவதூஷணம்" என்று காய்பா சத்தமிட்டார். வெறுப்புணர்வு மிகுந்திருந்த நீதிபதிகள், "இவன் மரணத்திற்குப் பாத்திரனாயிருக்கிறான்"[4] என்று எதிரொலித்தனர். இது இயேசு கைது செய்யப்பட்ட பிறகு அந்த நள்ளிரவில் உடனடியாக நடந்திருக்க வேண்டும். சூரிய உதயத்திற்கு இன்னும் நேரம் இருந்தது, ஆலோசனை சங்கத்தின் முழுமையான கூட்டத்திற்கு முன்பிருந்த இடைவேளை நேரமானது எதிர்ப்புத் தெரிவிக்காத கைதியை ஏளனம் செய்வதில் செலவிடப்பட்டது. (3) ஏற்கனவே எடுக்கப்பட்ட முடிவை முறைப்படி முழு ஆலோசனை சங்கத்திற்கும் முன்பாக உறுதிப்படுத்துதல் என்பதே மூன்றாம் படிநிலையாக இருந்தது.

(இந்த) தொடக்கப் படிநிலைகளின்போது ஏதோ ஒரு வேளையில், பேதுருவின் வீழ்ச்சி நடந்தேறியது. இவர் தமது எஜமானருடன் அருகில் இருப்பதற்காக யோவானுடன் சேர்ந்து மறைவாய் வந்து, அங்கு நடந்தவற்றைக் கவனித்துக் கொண்டிருந்தார். அது ஆபத்து நிறைந்த களமாய் இருந்தது; மற்றும் பேதுரு தம்மை ஒருவர் பின் ஒருவராக கலிலேயன் என்று இகழ்ச்சியுடன் சுட்டிக்காட்டுகையில், கர்த்தரை அவர் மும்முறை மறுத்தலிப்பதற்கும், மறுதலிப்புகளுடன் ஆணையிடுதல்களைக் கூட்டிக் கொள்ளவும் கூட இணங்கினார். பாவம் பேதுரு! ஆனால் அவர் நம்பிக்கையற்ற வகையில் இழந்து போகப்படாதிருந்தார். மேட்டிமை நிறைந்த தமது சொந்த புகழ்ச்சியும், இயேசுவின் முன்னுரைத்தலும் நினைவுக்கு வரும் வகையில் சேவல் கூவியது, காய்பாவின் அரண்மனை முற்றத்திற்கு கடந்து சென்ற இயேசு அவ்வேளையில் அவரை (பேதுருவை) மௌனமாக நோக்கியது ஆகியவை அவருக்குள் இருந்த நற்பகுதியைத் தூண்டி எழுப்பின: "அவன் வெளியே போய் மனங் கசந்து அழுதான்."[5]

இன்னும் அதிக துக்கமும் இன்னும் அதிக பயங்கரமுமான பக்கக் காட்சி இன்னொன்று நடந்து கொண்டிருந்தது. யூதாஸும் கூட, நடந்து கொண்டிருந்தவை எல்லாவற்றின் மீதும் கண்ணோக்கமாய் இருந்தான். இயேசு தம்முடைய கட்டுகளை முறித்துப் போட்டு தமது மகிமையை வெளிப்படுத்துவார் என்று அவன் நம்பியிருந்திருக்கலாம். தான் முப்பது சேக்கல்கள் அதிகம் கொண்ட செல்வந்தனாய் இருக்கும் அதே வேளையில், எஜமானர்மீது எந்தத் தீங்கும் விழாது. ஆனால் யூதத்துவ விசாரணையின் மூன்று படிநிலைகளும் முடிவுக்கு வந்தன. இயேசு மரணத்திற்குத் தீர்ப்பிடப்பட்டார். பிலாத்துவின் தீர்ப்பு மட்டுமே தேவையாய் இருக்கிறது. யூதாஸைக் கசப்புணர்வு மேற்கொள்ளுகின்றது. அந்த முப்பது வெள்ளிக் காசுகள் அவனது ஆத்துமாவிற்குள் எரிந்து கொண்டிருக்கின்றன. ஆலோசனைச் சங்கத்தாரின் முன் விரைந்து சென்ற அவன் அவற்றைக் கீழே வீசி எறிகின்றான், மற்றும் "குற்றமில்லாத இரத்தத்தைக் காட்டிக்

கொடுத்தேனே"[6] என்று கூறுகின்றான். "எங்களுக்கென்ன, அது உன்பாடு" என்பது இருதயமற்ற பதிலாக உள்ளது. காட்டிக் கொடுப்பவன் எப்பொழுதுமே அவனைப் பயன்படுத்திக் கொள்பவர்களால் ஒரு கருவி யாகவே பழித்துரைக்கப்படுகின்றான். அவன் வெளியே சென்று நான்று கொண்டு செத்தான் (இ.வ. மத். 27:5; அப். 1:18, 19). அவன் ஏன் ஓடிச் சென்று அப்பொழுதும் கூட இயேசுவின் பாதத்தில் வீழ்ந்து அவருடைய மன்னிப்பின் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளவில்லை? கசப்புணர்வு என்பது மனந்திரும்புதல் அல்ல. யூதாஸ் ஒன்றிற்காக நின்றான்; பேதுரு இன்னொன்றிற்காக நின்றார்.

ஆ. ரோம அல்லது குடிமை விசாரணை.—இங்கும் மூன்று படிநிலைகள் இருந்தன. (1) பிலாத்துவுக்கு முன்பாக. "(இவன் மேல் சாட்டப்பட்ட) குற்றம் என்ன?" என்பதே பிலாத்துவின் முதல் கேள்வியாய் இருந்தது. யூதர்கள் அவரை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கக் காரணமாயிருந்த அவர்களின் தேவதூஷணக் குற்றச்சாட்டானது ரோம நீதிமன்றத்தில் ஏற்றுக் கொள்ளப்படாது. முதலில் அவர்கள், அவர் தீமை செய்கின்றவர் என்ற தெளிவில்லாத குற்றச்சாட்டுகளின்மீது பிலாத்துவிடம் இருந்து தண்டனைக் கான தீர்ப்பைப் பெற்று விட நாடினார்கள்; ஆனால் நியாயம் வழங்குதலின் ரோமக் கருத்தறிவு கொண்ட பிலாத்து, திட்டவட்டமான குற்றச்சாட்டு களைக் கேட்டு வற்புறுத்துகின்றார். "இவன் தன்னைக் கிறிஸ்து என்னப் பட்ட இராஜாவென்றும், இராயருக்கு வரி கொடுக்க வேண்டுவதில்லை யென்றும் சொல்லி,"[7] இதில் இரண்டாவது குற்றச்சாட்டு பொய்யாக இருந்தது; மற்றும் இயேசு தமக்கு இராஜரீகம் எதையேனும் உரிமைகோரி, அரசியல் ரீதியான கருத்தமைவுகளில் அபாயம் எதையும் ஏற்படுத்தவில்லை என்பதில் பிலாத்து, விரைவிலேயே திருப்தியடைந்தார், மற்றும் குற்ற மில்லாதவர் என்று அறிவித்தார். அவர்கள் அதை அவ்வாறு விட்டுவிடுபவர் களாய் இருக்கவில்லை, எனவே அவர் (இயேசு) கலிலேயாவிலிருந்து எருசலேம் வரையிலும் கலகத்தைத் தூண்டினார் என்ற நான்காவது குற்றத்தைச் சுமத்தினர். பிலாத்து சிக்கலான சூழ்நிலையில் இருந்தார். குற்றமறியாத ஒரு மனிதரை தீர்ப்பிட அவர் மனமில்லாதிருந்தார்; யூதர்களின் மனம் புண்படச் செய்வற்கு(ம்) அவர் பயப்பட்டார். ஆனால் கலிலேயன் என்ற வார்த்தையை அவர் பிடித்துக் கொண்டார். அது ஏரோது அரசனின் மாகாணமாயிருந்தது; ஏரோது (எருசலேம்) நகரில் (தான்) இருந்தார்; இந்த இரு ஆளுநர்களும் பகைமை கொண்டிருந்தனர்; இங்கு இது, ஏரோதுக்கு மரியாதை காண்பிக்கவும் பகைமையைக் குணமாக்கவும் ஒரு அரிய வாய்ப்பாகவும், அதே வேளையில் கருத்தொருமைப்படாத மற்றும் அபாயமான வழக்கிலிருந்து விலகிக் கொள்வதற்கான ஒரு வாய்ப் பாகவும் இருந்தது. எனவே பிலாத்து இயேசுவை ஏரோதிடம் அனுப்பி வைத்தார். (2) ஏரோதுக்கு முன்பாக. ஏரோது இயேசுவை சந்திக்க மிக ஆர்வமாகவும், அவர் மூலமாய் சில அற்புதங்கள் செய்யப்படுவதைக் காணும் நம்பிக்கையுடனும் இருந்தார். ஆனால் தம்முடைய சொந்த கொள்கையின்படி (மட்டும்) செயல்பட்ட இயேசு (அந்தப்) பன்றிக்கு முன்னால் முத்தை இரைக்கவில்லை, ஏரோதுவின் கேள்விகள் யாவற்றிற்

கும் அவர் ஒரு வார்த்தை கூடப் பதில் உரைக்கவில்லை. பிறகு இரண்டாவது கேலிக் கூத்து நடைபெற்றது. முற்றிலும் தோல்வியுற்ற ஏரோதுவும் அவரது மிருகத்தனமான படையணியும் இயேசுவுக்கு ஒரு கந்தலாடையை உடுத்துவித்துத் திரும்ப பிலாத்துவிடமே அனுப்பி வைத்தனர். (3) மீண்டும் பிலாத்துக்கு முன்பாக. ஏறக்குறைய இந்த வேளையில், மக்கள் கூட்டமானது பஸ்காவிற்கான வருடாந்திர தயவாக ஒரு கைதியை விடுவிக்கும்படி ஆராவாரமிடத் தொடங்கிற்று. உடனே பிலாத்து இயேசுவை முன்மொழிந்தார். ஆனால் ஆசாரியர்களோ மக்களிடத்தில் மும்முரமாய் வேலை செய்தனர். வெற்றி ஊர்வலத்தின் தலைவராக நகருக்குள் பயணித்திருந்த இயேசு, மற்றும் ஆலோசனை சங்கத்தினரால் தீர்ப்பிடப்பட்டு பிலாத்துவின் தண்டனைத் தீர்ப்புக்குக் காத்திருந்த இயேசுவும் இரண்டு நபர்களாய் இருந்தனர். "இவனையல்ல, பரபாசை விடுதலை பண்ண வேண்டும் ... ; அந்தப் பரபாசென்பவன் கள்ளனாயிருந்தான்."[8] கூட்டத்தாரோடும், தன் மனச்சாட்சியோடும் சற்றே போராடிய பிலாத்து, பின்பு இயேசுவைச் சிலுவையில் அறைய உத்தரவு கொடுப்பதற்கு இணங்கினார். இதற்கு இடைநேரத்தில் பிலாத்துவின் போர் வீரர்கள் தங்கள் ஏளனத்தை சேர்க்கின்றனர், அவருக்குச் சிவப்பான அங்கியை உடுத்தவிட்டு, அவரது கையில் ஒரு கோலைக் கொடுத்து, அவரது தலையின்மீது ஒரு முரடான (முள்) கிரீடத்தை வைத்து அழுத்துகின்றனர்.

ஆறு மடங்கான விசாரணை இவ்விதமாய் முடிகின்றது, இதில் இயேசுவின் மிக மேன்மையான மனிதத்துவத்திற்கு என்றென்றைக்குமான எதிர்த்துவமாக சூழ்ச்சியும், மாய்மாலமும், கோழைத்தனமும், சுயநலக் கொள்கையும் பண்பற்ற மிருகத்தனமும் நிலைநிற்கின்றன. அங்கும் மற்றும் அதற்குப் பிறகும் கூட, கேலி செய்யும் பாணியில் அரச உடை உடுத்துவிக்கப் பட்டு, கூட்டத்தின் இகழ்ச்சிகள் மற்றும் அவமானங்களை நோக்கிக் கொண்டிருந்த அவ்வேளையிலும் கூட அவர், ஏரோதின் அரியணையில் அமர்ந்த எந்த ஒருவரைக் காட்டிலும், அல்லது செசரின் (இராயனின்) கிரீடத்தைத் தரித்து எந்த ஒருவரைக் காட்டிலும் நூறு மடங்கு அதிகப்படியான அரசராகவே இருந்தார்.

3. சிலுவையில் அறைதல்.—*அ. நேரமும் இடமும்.*—சிலுவையில் அறையும்படியான உத்தரவு, காலையில் ஏறக்குறைய ஒன்பது மணி அளவில் கொடுக்கப்பட்டது. இயேசு நகர வாசலுக்கு புறம்பே வெளியேற்றப்பட்டு (எபி. 13:12), எபிரெய மொழியில் கொல்கொதா என்றும் கிரேக்க மொழியில் கிரேனியன் என்றும், இலத்தீன் மொழியில் கல்வாரியம் (கல்வாரி) என்றும்—இவை யாவையும் மண்டை ஓடு என்று அர்த்தப் பட்டன—அழைக்கப்பட்ட இடத்திற்கு இழுத்துச் செல்லப்பட்டார். இது அநேகமாக, நகரத்தின் வடமேற்கில் இருந்த மண்டை ஓட்டின் வடிவம் கொண்ட ஒரு சிறு குன்றாக இருந்திருக்கலாம்.

ஆ. வழியில்.—இயேசு தமது சொந்த சிலுவையைத் தாமே சுமந்து சென்றார்; ஆனால் கொல்கொதாவை அடையும் முன்பே, காவலர்கள் சிரேனே ஊர் இளைஞன் ஒருவனைப் பிடித்து அவன்மீது சிலுவையைச் சுமத்தினார்கள்; இது ஒருவேளை, இரவு விழிப்புகளினாலும் காலையில்

ஏற்பட்ட துன்பங்களினாலும் வெறுமையாக்கப்பட்ட இயேசுவின் பலத்திற்கு அதன் (சிலுவையின்) எடையானது, மிகவும் பெரியதாய் இருந்ததால் நடந்திருக்கலாம். அந்த இருளான/எதிர்ப்பு நிறைந்த வேளை யிலும் கூட அவரது விதியை நினைத்து அழுது புலம்பும் சிலர் காணப் பட்டனர். அவமானத்தின் கீழ் அவ்வளவு நேரம் அமைதியாய் இருந்த அந்த உதடுகள் இப்பொழுது பரிதாபத்தினிமித்தம் திறக்கின்றன; (ஆனால்) அது அவருக்காக இல்லாமல், எருசலேமிற்கு விரைவில் நேரவிருக்கும் அழிவில் மூழ்கிப் போகப்போகின்றவர்களுக்கானதாக இருந்தது.

இ. சிலுவையில்.—இரு நெடுஞ்சாலை கள்வர்கள் அவருடன் கூடச் சிலுவையில் அறையப்பட்டனர். சிலுவையில் அறைதல் என்பது கீழ்த்தர மான குற்றவாளிகளுக்கு ரோமர்கள் தண்டனை நிறைவேற்றும் முறைமை யாக இருந்தது. எருசலேம் பெண்கள் (சிலர்) பரிதாபத்தினிமித்தம், அப்படிப்பட்ட நிகழ்ச்சிகளின் போது மதிமயக்கும் பானத்தைத் தயாரித்து கொண்டு வருவது வழக்கமாயிருந்தது. அப்படிப்பட்டதொரு பானம் இப்பொழுது வழங்கப்பட்டது; ஆனால் இயேசு தமது வலியைப் போக்குவதற்காகக் கூடத் தம் (உணர்வுத்) துறைகளை மூடிமறைக்க மறுத்து விட்டார்.

ஈ. சிலுவையில் இருந்து ஏழு கூற்றுக்கள்.—சிலுவையில் இருந்தவாறே இயேசு கூறியதாக ஏழு கூற்றுக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன: *(1)* இவற்றில் முதலாவது கூற்று அநேகமாக இந்தக் கணத்தில் உரைக்கப் பட்டிருக்கலாம். உடல்கள் முதலில் சிலுவையில் வைத்து ஆணிகளால் அறையப்பட்டன, பின்பு சிலுவைகள் அவற்றின் துளைகளில் முரட்டுத் தனமாய்ச் செருகப்பட்டன. "பிதாவே இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே";[9] இது (சிலுவையில் அறைந்த) சற்று நேரத்திலேயே இயேசுவின் மேல்அங்கியைக் குறித்து சீட்டுப்போட அமர்ந்த முரட்டுத்தனமான போர் வீரர்களைக் குறித் திருந்தது. குற்றம் சுமத்தப்பட்டவர்கள்மீது வைக்கப்படுவதற்குப் பிலாத்து பல குற்றச்சாட்டு(ப் பலகை)களைத் தயார் செய்திருந்தார். அவற்றில் இயேசுவைப் பற்றியதானது எபிரெயம், கிரேக்கம் மற்றும் இலத்தீன் மொழிகளில் பிலாத்துவால் அர்த்தப்படுத்தப்பட்டு, யூதர்களுக்குத் தங்கள் முகத்தில் அறைந்தது போல் உணரப்பட்டிருந்தது: "நசரேயனாகிய இயேசு, யூதருடைய இராஜா."[10] அவர்கள் மறுத்தனர், ஆனால் அம்மறுப்பு எடுபட வில்லை. *(2)* இயேசுவின் தாயான மரியாளும் வேறு இரு மரியாள்களும் யோவானுடன் சிலுவையின் அருகில் நின்றனர். இயேசு தம் தாயிடத்திலும் யோவானிடத்திலும் தமது இரண்டாம் கூற்றை உரைத்தார்: "ஸ்திரீயே, அதோ, உன் மகன்; ... அதோ உன் தாய்"[11] இது தன் மீது காட்டிலும் பிறர் மீது சிந்தனையாய் இருப்பதை உணர்த்திற்று. *(3)* இப்பொழுது, பலவீனங் கள் (அவரிடம்) இருக்கையில் (கூட) பலம் நிறைந்தவர்களின் நோய்ப் படுத்தும் காட்சி தொடங்குகின்றது. பிரதான ஆசாரியர்களும், வேதபாரகர் களும், அதிகாரிகளும், நாட்டின் தலைவர்களும் எப்பொழுதும் ஒன்று கூடும் அப்படிப்பட்ட காட்சியில் கூட்டமாய் ஏளனப் பார்வைகளில் சேர்ந்து கொண்டனர். "மற்றவர்களை இரட்சித்தான்; தன்னைத்தானே இரட்சித்துக்

கொள்ளத் திராணியில்லை"[12] (இது) அவர்கள் கனவு கண்டிருந்ததைக் காட்டிலும் ஆழமான சத்தியமாயிருந்தது: ஏனெனில், அவர் மற்றவர்களை இரட்சிப்பாரென்றால், தம்மைத்தாமே அவர் எவ்வாறு இரட்சித்துக் கொள்ள முடியும்? சிலுவையில் தொங்கிய பரிதபிக்கப்படத்தக்க கள்வர்களும்கூட இந்த நிபந்தனையில் இணைந்து கொண்டார்கள்; முதலில் இருவரும் ஏளனம் செய்தனர் பின்பு அவ்விருவரில் ஒருவன், குற்றம் அறியாதவர் துன்புறுவதினால் பரிதபித்து, மனந்திரும்பி, "ஆண்டவரே, நீர் உம்முடைய இராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும்"[13] என்று ஜெபத்துடன் மையச் சிலுவையை நோக்கித் திரும்பினான். தம்முடைய பெயருக்கும் ஊழியத்திற்கும் கடைசி வரையிலும் உண்மையாக இருந்த இயேசு சிலுவையிலிருந்து மூன்றாம் கூற்றை உரைக்கின்றார், "இன்றைக்கு நீ என்னுடனே கூடப் பரதீசிலிருப்பாய்."[14] (4) பிறகு பன்னிரண்டு மணியிலிருந்து மூன்று மணி வரையிலும் இருளும் அமைதியுமான மணிகள் பின் தொடர்ந்தன. அந்திப் பலி வேளையின் நேரம் நெருங்கிற்று, இருளிலிருந்தும் சிலுவையிலிருந்தும் அந்தப் பொறுமையான உதடுகளினின்று முதலும் கடைசியுமான முறையீடு பரலோகத்தை நோக்கி மேல் எழும்பிச் சென்றது, அது வியப்புக்குரிய/பொருள் விளங்காத வார்த்தைகளாய் உள்ளது, "என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கை விட்டீர்?"[15] விரைவிலேயே அங்கு எஞ்சியுள்ள கூற்றுக்கள் பின் தொடருகின்றன: (5) "தாகமாயிருக்கிறேன்"[16] இது உடல்ரீதியான வேதனையின் முதலும் கடைசியுமான வெளிப்பாடாக உள்ளது. பயபக்தியானது கடின இருதயங்களை மென்மையாக்கிற்று, இயேசு ஒரு பாத்திரம் அளவுக்கு குளிர்ச்சிப் படுத்தும் காடியை பெற்றுக் கொள்கின்றார். மீண்டும் ஒரு தரம் அவர் பேசுகின்றார்: (6) "முடிந்தது"[17]; முடிந்தது என்பது வெறுமனே முடிந்து போனதல்ல, இப்பூமியில் வாழ்ந்த எல்லாவற்றிலும் மிகவும் மாண்பு கொண்ட வாழ்வு முடிந்து போயிற்று; முடிந்தது, மனித மீட்புக்கான ஊழியம் முடிந்து போயிற்று; முடிந்தது, நிறைவேற்றப்பட்டது, முற்பிதாக்களும் தீர்க்கதரிசிகளும் கனவு கண்டிருந்த அதன் கருத்துணர்வைக் காட்டிலும் மிக மிக மேன்மையான ஒன்று, மாதிரிகளும், அடையாளங்களும் மற்றும் பழைய உடன்படிக்கையின் தீர்க்கதரிசனங்களும் முடிந்து போயிற்று. (7) பிறகு இயேசு சிலுவையின் மீது தம் ஏழாம் மற்றும் கடைசிக்கூற்றுடன் தலை சாய்த்துத் தம் ஆவியை ஒப்புக்கொடுத்தார்: "பிதாவே உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்."[18]

உ. பழைய உடன்படிக்கையின் முடிவு.—அவரது மரணக் கதறுதலின் வேளையில், ஒரு பூமியதிர்ச்சியினால் நிலமானது அதிர்ந்தது. தேவாலயத்தின் திரைச் சீலை மேலிருந்து கீழாக இரண்டாய்க் கிழிந்தது; ஏனெனில் இயேசுவின் சிலுவையானது, பழைய ஏற்பாடு தனது மாதிரிகளுடனும், நிழல்களுடனும் முடிவுக்கு வருவதை அடையாளப்படுத்திற்று (கொலோ. 2:14). மனிதர்கள் பயபக்தி நிரம்பப் பெற்றார்கள். ரோம நூற்றுக்கு அதிபதிகூட, "மெய்யாகவே இவர் தேவகுமாரன்தான்"[19] என்று கூறும் நிலைக்கு வந்தார்.

4. அடக்கம்.—சிலுவையில் அறையப்பட்டதைத் தொடர்ந்து வந்த

அடுத்த நாள் பெரிய ஓய்வு நாளாயிருந்தது. யூதர்கள் கொலை செய்ய முடிந்திருந்தது; ஆனால் அவர்கள் ஓய்வு நாளைச் சடங்காச்சார வகையில் தீட்டுப்படுத்த முடியாதிருந்தது; சூரியன் மறைந்த பின்பு உடல்கள் சிலுவைகளில் தொங்கிக் கொண்டிருக்கக் கூடாது. (எனவே சிலுவையில் தொங்கியவர்களின்) மரணத்தை விரைவு படுத்துவகற்காக அவர்களின் கால்கள் முறிக்கப்பட்டன; ஆனால் ஒரு படைவீரன் அவருடைய மார்பில் ஈட்டியால் குத்தியதைத் தொடர்ந்து வெளிப்பட்ட இரத்தமும் தண்ணீரும் காண்பித்த வகையில், அவர் ஏற்கனவே இறந்து போயிருந்தார். இவ்விதமாக இரண்டு தீர்க்கதரிசனங்கள் அறியாமலேயே நிறைவேற்றப்பட்டன (சங். 34:20; 22:16, 17). இயேசுவின் சீஷர்களில் இருவரான அரிமத்தியா யோசேப்பு மற்றும் நிக்கொதேமு ஆகியோரிடத்தில் அவரது சரீரம் ஒப்புவிக்கப்பட்டது; யோசேப்பின் புதுக் கல்லறையில் அச்சரீரத்தை அடக்கம் செய்ய அன்புமிக்க கரங்கள் ஆயத்தப் பணி செய்தன; மற்றும், இன்னும் பயம் நிறைந்த யூதர்களின் வேண்டுகோளுக்கிணங்கி கல்லறையின் மீது ரோம முத்திரை வைக்கப்பட்டு, அதைப் பலமாய்க் காவல் செய்ய ரோமச் சேவகர்கள் நியமிக்கப்பட்டார்கள்.

குறிப்புகள்

[1]*மத். 26:49; மேலும் மாற். 14:45; லூக். 22:47ஐயும் காணவும்.* [2]*மாற். 14:61; மேலும் மத். 26:63; லூக். 22:67ஐயும் காணவும்.* [3]*மாற். 14:62; மேலும் மத். 26:64ஐயும் காணவும்.* [4]*மத். 26:66; மேலும் மாற். 14:64ஐயும் காணவும்.* [5]*மத். 26:75.* [6]*மத். 27:4.* [7]*லூக். 23:2.* [8]*யோவா. 18:40; மேலும் மத். 27:20; மாற். 15:11; லூக். 23:18ஐயும் காணவும்.* [9]*லூக். 23:34.* [10]*யோவா. 19:19; மேலும் மத். 27:37; மாற். 15:26; லூக். 23:38ஐயும் காணவும்.*

[11]*யோவா. 19:26, 27.* [12]*மத். 27:42; மாற். 15:31; லூக். 23:35.* [13]*லூக். 23:42.* [14]*லூக். 23:43.* [15]*மத். 27:46; மாற். 14:34.* [16]*யோவா. 19:28.* [17]*யோவா. 19:30.* [18]*லூக். 23:46.* [19]*மத். 27:54; மாற். 15:39.*

21

நாற்பது நாட்கள்

மத். 28; மாற். 16; லூக். 24; யோவா. 20, 21; அப். 1:1-12

1. **உயிர்த்தெழுதல்.**—மேசியாவின் உயிர்த்தெழுதலானது தீர்க்கதரிசிகளினால் தனிச் சிறந்த வகையில் முன்னுரைக்கப்பட்டிருந்தது (சங். 16:10; ஏசா. 55:3; இ.வ. அப். 2:25-31; 13:34-37), மற்றும் இயேசுவாலேயே இது மீண்டும் மீண்டும் கூறப்பட்டிருந்தது (மத். 16:21; 17:9; 20:19; 26:31, 32). ஆனால் கிறிஸ்து உண்மையிலேயே இறப்பவராயிருப்பார் என்ற வகையில் சிந்திக்க முடியாத அல்லது சிந்திக்காத அளவுக்கு சீஷர்களின் சிந்தைகளில் அரசியல் ரீதியான இராஜ்யம் பற்றிய கருத்துக்கள் முன்னதாக ஆக்கிரமித்து இருந்தன. ஆகையால், அவரது மரணமானது அவர்கள் திகைக்கும்படி, மரத்துப் போகும்படி செய்தது. இயேசு சிலுவையில் மரித்த பொழுது அதன் காரணம் என்ன என்பதைக் காட்டிலும் அதிகம் உதவியற்ற வகையில் இழந்து போகப்படும் காரணம் ஒன்று மனிதத் தோற்றத்திற்கு ஒருக்காலும் இருந்ததில்லை. அரிமத்தியா யோசேப்பின் கல்லறையில் இயேசுவின் உடலுடன் சீஷர்களின் நம்பிக்கையும் புதைக்கப்பட்டது. இயேசு உயிர்த்திராதிருந்தால், அவர்கள் நம்பிக்கைகள் ஒருக்காலும் உயிர்ப்பிக்கப்பட்டிருக்காது. இயேசு உயிர்த்திராவிட்டால், உலகம் ஒருக்காலும் அவரைக் கேள்விப்பட்டிராது. பிறப்பு, நபர்த்துவம், உயிர்த்தெழுதல்—இவை மூன்றும்தான் இன்றியமையாத மற்றும் படைப்பாக்கம் கொண்ட அற்புதங்களாக உள்ளன. இவைகள் கிறிஸ்தவத்தின் முழுமையும் போதுமானதுமான திறவுகோல்களாக உள்ளன. ஓய்வுநாள்—அதிர்ச்சியால் தாக்கப்பட்ட சீஷர்களுக்குத் துக்ககரமான ஓய்வுநாள்—கடந்து சென்றது. மங்கலான உதய நேரத்துடன், "சிலுவையினருகில் கடைசி வரையிலும், கல்லறையருகில் முதன் முதலாக" நின்ற—இரு மரியாள்களும் பிற பெண்களுமான—ஒப்புக்கொடுத்தலுள்ள பெண்கள் வந்தனர். அவர்கள், அடக்கம் நடந்த இடத்தைக் கண்டிருந்தனர், ஆனால் முத்திரையைப் பற்றியோ அல்லது காவலைப் பற்றியோ ஒன்றும் அறியாதிருந்தனர். (இயேசு) சிலுவையில் அறையப்பட்ட அன்றிரவு செய்து முடிக்க நேரமற்றுப் போனதால் (செய்யாது விட்டு விட்ட அடக்க முறைமைகளை) செய்து முடிப்பதற்காகப் பரிமள வர்க்கங்களைக் கொண்டு வந்தனர். ஆனால், கல்லறையானது வெறுமையாக இருந்தது! பேதுருவும் யோவானும் சமீபத்தில் இருந்தனர், விரைவிலேயே அவர்களும் கல்லறைக்கு அருகில் வந்தனர். முதலில் அவர்கள் அனைவரும், (இயேசுவின்) உடல் களவாடப்பட்டு விட்டதாகவே நினைத்தனர்; ஆனால் தூதர்களின் தரிசனமொன்று உயிர்த்தெழுதலை வெளிப்படுத்திற்று.

2. **இயேசுவின் பத்து தரிசனங்கள்.**—(1) மகதலேனா மரியாளுக்கு. சீஷர்கள் எப்போதும் இருந்ததை விட அதிகத் திகைப்புடன் சென்றனர். ஆனால் மரியாள் கல்லறையினிடத்திலேயே தாமதித்து நின்றாள். அவளுக்குப் பரவசப் பார்வையில் இயேசு முதன் முதலாகத் தரிசனமானார், மற்றும் சீஷர்களுக்கான ஒரு செய்தியுடன் அவளை அவர் சந்தித்தார். (2) சற்றுப் பிறகு பிற பெண்களுக்கு. இப்பெண்கள் சீஷர்களைத் தேடிச் சென்ற வேளையில் இயேசு இவர்களுக்குத் தரிசனமாகி, தம் சகோதரர் களுக்கு ஒரு செய்தியுடன் இவர்களையும் அனுப்பினார். (3) சீமோன் பேதுருவுக்கு: இது லூக். 24:33, 34ல் தற்செயலாகக் குறிப்பிடப்படுகிறது; மற்றும் பவுலினாலும் (1 கொரி. 15:5) குறிப்பிடப்படுகின்றது. (4) எம்மாவு என்ற ஊருக்குச் செல்லும் வழியில் இரண்டு சீஷர்களுக்கு. அதே நாளில் கிலெயோப்பா என்பவர், இன்னொரு சீஷருடன் சில வேலையினிமித்தம் பயணமாக எம்மாவு என்ற அருகாமைக் கிராமத்திற்குச் சென்றனர். அவர்கள் வெறுமையான கல்லறையைப் பற்றியும், தூதர்களின் தரிசனம் பற்றியும் கேள்விப்பட்டிருந்தனர். அவர்கள் நடந்து கொண்டே, நடந்த நிகழ்ச்சிகளைப் பேசிக் கொண்டிருக்கையில், இயேசு தாமே அவர்களுடன் சேர்ந்து கொண்டு, அவர்களின் கவலைக்கான காரணத்தை அவர்களிட மிருந்தே வரப் பெற்று, தம்மைக் குறித்த தீர்க்கதரிசனங்களைப்பற்றி அவர்களின் (அகக்) கண்களைத் திறந்து வைத்து, கடைசியில் அப்பத்தைப் பிட்கும் வேளையில் அவர்களுக்குத் தம்மை அறியச் செய்தார். அந்த மாலை வேளையிலேயே எருசலேமிற்குத் திரும்பிய அவர்கள், சீமோனுக்கு[1] இயேசுவின் தரிசனம்பற்றி அப்போஸ்தலர்களும் மற்றவர்களும் ஆவலுடன் பேசிக் கொண்டிருந்ததைக் கண்டார்கள். ஏற்கனவே தூண்டப்பட்டிருந்த நெருப்பிற்கு, இவர்களுடைய சொந்த அனுபவங்களும் எரிபொருளைச் சேர்த்திருக்க வேண்டும். இன்னும் அவர்கள் நம்ப முடியாதவர்களாய் இருந்தார்கள். (5) தோமா இல்லாத வேளையில், அப்போஸ்தலர்களுக்கும் மற்றவர்களுக்கும். உணர்வெழுச்சியின் நடுவில், இயேசு தாமே அவர்கள் மத்தியில் திடீரென்று தோன்றினார், மற்றும் "உங்களுக்குச் சமாதானம்"[2] என்ற வாழ்த்துதலினால் அவர்களை வாழ்த்தினார், மற்றும் அவர்களின் அவிசுவாசத்திற்காக அவர்களைக் கடிந்து கொண்டார். தமது உயிர்த் தெழுதல் மற்றும் அவர்களுக்குத் தமது தரிசனம் ஆகியவற்றின் உண்மை நிலையை உறுதிப்படுத்துவதற்கு அவர் (ஆணிகளால்) துளைக்கப்பட்ட தமது கைகளையும் கால்களையும் காண்பித்தார், மற்றும் அவர்களின் முன்னிலையில் உணவு உண்டார். மேற் கூறிய இந்தத் தரிசனங்கள் எல்லாம் இயேசு உயிர்த்த அதே நாளிலேயே நடைபெற்றன. (6) தோமா உட்பட, அப்போஸ்தலர்களுக்கு. தோமா, ஞாயிற்றுக்கிழமை இரவுக் கூட்டத்தில் இராதிருந்தார், அவர் பிறரின் சாட்சியத்தை நம்பவில்லை. ஒரு வாரத்திற்குப் பிறகு அவர்கள் எல்லாரும் ஒன்றுகூடியிருந்தனர், இயேசு அவர்களுக்கு மீண்டும் தரிசனமானார். தோமா தமது சொந்தக் கருத்துணர்வுகளின்/ புலன்களின் சாட்சியத்திற்கு இணங்கினார் மற்றும் அவர் (பவுலைத் தவிர) உயிர்த்தெழுதலின் உண்மைக்கு மனமாற்றப்பட்ட கடைசி அப்போஸ்தல ரானார். (7) கலிலேயாவின் கடலில் ஏழு சீஷர்களுக்கு. சீஷர்கள் மீன்

பிடித்தல் என்ற தங்களின் பழைய தொழிலுக்குத் திரும்பியிருந்தனர். ஒரு இரவு முழுவதிலும் பலனற்ற வகையில் அவர்கள் கடினமாய் உழைத்த பிறகு, கரையிலிருந்த ஒரு அந்நியரால் தங்களின் வலையை வலது புறத்தில் போடும்படி அறிவுறுத்தப்பட்டனர். அதன் விளைவுகள் அவர்தான் எஜமானர் (இயேசு) என்பதை யோவானுக்கு உடனடியாக வெளிப் படுத்தின; ஆனால் அவரை (இயேசுவை) வாழ்த்துவதற்குப் பேதுருவே முதலில் கரைக்கு நீந்திச் சென்றார். இந்த நிகழ்ச்சியின் போதுதான் இயேசு பேதுருவின் அன்பினுடைய மூன்று மடங்கு வாக்குறுதிகளை அவரிட மிருந்து பெற்றார், இது அவரது மும்மடங்கு மறுதலிப்பின் ரத்தாக இருந்ததென்பதில் ஐயமில்லை. (8) ஐந்நூறு சீஷர்களுக்கு. இது அநேகமாய் அவரது சீஷர்களின் குழுவினர் வாழ்ந்து கொண்டிருந்த கலிலேயாவில் நடந்திருக்கும் (இ.வ. மத். 28:16, 19; 1 கொரி. 15:6). இந்தக் கூட்டம் பற்றிய குறிப்பிட்ட விவரங்கள் எதுவும் நமக்கு கிடைக்கவில்லை. (9) யாக்கோபுக்கு (1 கொரி. 15:7). (10) பரத்துக்கேறுகின்ற வேளையில் ஒலிவ மலையில் அப்போஸ்தலருக்கு. (இயேசுவின்) உயிர்த்தெழுதலில் இருந்து (அவர்) பரத்துக்கேறுதல் வரையிலும், பதிவு செய்யப்பட்டுள்ளவற்றைக் காட்டிலும் மிக அதிகமான முறைகள் இயேசு தமது சீஷர்களுடன் இருந்தார், மற்றும் வரலாற்றுத் துணுக்கில் காணப்படுவதைக் காட்டிலும் அதிகமான அறிவுறுத்தல்களை அவர்களுக்குக் கொடுத்தார். (அப். 1:3ஐக் காணவும்.)

3. கடைசிக் கட்டளை.—இயேசு தமது கடைசி சந்திப்பிலோ அல்லது தமது உயிர்த்தெழுதலுக்குப் பின்னான பல சந்திப்புகளின் பொழுதோ, தமது அப்போஸ்தலர்களுக்கு அவர்களின் நிறைவான/கடைசியான ஊழிய ஆணையை அளித்தார். யோவான் (ஸ்நானன்) செய்த ஊழியம், இயேசுவின் சொந்த ஊழியம், பன்னிருவரின் முதல் ஊழியம், மற்றும் எழுபது பேரின் ஊழியம் ஆகியவை யாவும் தயாரிப்பு நிலைகளாக இருந்தன. "இராஜ்யம் சமீபித்துள்ளது" (இ.வ. மத். 3:2; 4:17; 10:7; லூக். 10:9) என்பதே அவற்றின் செய்தியாய் இருந்தது. அது இஸ்ரவேலுக்கு மட்டும் நிறைவேற்றப்படும்படி கட்டுப்படுத்தப்பட்டிருந்தது (மத். 10:5; 15:24). அப்போஸ்தலர்கள், இயேசுவே கிறிஸ்து என்று பிரசங்கிக்கக் கூட அனுமதிக்கப்பட்டிருந்த தில்லை (மத். 16:20; 17:9). ஒரு சுவிசேஷம் இருப்பதற்காகவும் அது பிரசங்கிக்கப்படுவதற்காகவுமே கிறிஸ்து வாழ்ந்து, பாடுபட்டு, உயிர்த்து எழ வந்தார். இப்பொழுது ஒன்றைத் தவிர எல்லாக் கட்டுப்பாடுகளும் நீக்கப் பட்டுள்ளன. அவர்கள் நிறைவான மற்றும் இறுதியான சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வேண்டியவர்களாய் இருந்தார்கள் - அதாவது, "கிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையே" (1 கொரி. 15:1-4; 2:1); "படைப்பு முழுவதற்கும்"; கிறிஸ்துவில் கொள்ளும் விசுவாசத்தின் மூலம், பாவத்தி லிருந்து மனந்திரும்புதல், "சகல ஜாதிகளையும் சீஷராக்கு"தல் ஆகியவற்றின் மூலம் "பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தில் ஞானஸ்நானம் பெறுதல் ஆகியவற்றை அவர்கள் போதிக்க வேண்டியிருந்தது."[3] ஆனால் அவர்கள் இன்னமும் முழுமையான தகுதி பெற்றிருக்கவில்லை; ஆகையால் "நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள்"[4] (என்று இயேசு கூறியிருந்தார்);

“நீங்கள் சில நாளுக்குள்ளே பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள்”[5] (என்றும் அவர் கூறியிருந்தார்). இப்படிப்பட்ட அர்த்தச் செறிவில்தான் கடைசிக் கட்டளையானது கடந்த பதினெட்டு/இருபது கிறிஸ்தவ நூற்றாண்டுகளாக உலகளாவிய சுவிசேஷ ஊழியமாகச் செய்யப்பட்டு வருகின்றது.

4. பரத்துக்கேறுதல்.—*“நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும்; நான் போகாதிருந்தால், தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார்; நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன்” (யோவா. 16:7).* எனவே இயேசு தமது சீஷர்களை ஒலிவ மலைக்கு வழி நடத்திச் சென்றார், மற்றும் *“தம்முடைய கைகளை உயர்த்தி, அவர்களை ஆசீர்வதித்தார். அவர்களை ஆசீர்வதிக்கையில், அவர்களை விட்டுப் பிரிந்து, பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டார்.”*[6] பரத்துக்கேறுதலானது மேசியாவின் ஊழியத்தின்மீது புத்தொளி பாய்ச்சுகின்றது. அவர்களின் உலகப் பிரகாரமான பழைய கனவுகள் மறையத் தொடங்குகின்றன. மனிதனைத் தேவனிடம் உயர்த்த வேண்டும் என்பதற்காகத் தேவன் மனிதனிடத்திற்கு தாழ இறங்கி வந்துள்ளார். எனவே பதினோருவரும் சந்தோஷமாய் எருசலேமுக்குத் திரும்பினார்கள், மற்றும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவிக்காக சீஷர்கள் காத்திருத்தல் என்பதுடன் சுவிசேஷ வரலாறு முடிகின்றது.

குறிப்புகள்

[1]பேதுரு. [2]லூக். 24:36; யோவா. 20:19. [3]மத். 28:19. [4]லூக். 24:49; மேலும் அப். 1:4ஐயும் காணவும். [5]அப். 1:5. [6]லூக். 24:50, 51.

22

அப்போஸ்தலிக்க வரலாறு

அல்லது, சபை தோற்றுவிக்கப்படுதலும் அதன் விரிவாக்கமும், கி.பி. 30-100[1]

அறிமுகம்.

1. அப்போஸ்தலிக்க வரலாற்றின் ஆதார மூலம்.—இவைகள் பின்வருபவைகளாக உள்ளன,—

அ. நடபடிகளின் புத்தகம்.—இதன் எழுத்தாளர் மூன்றாவது சுவிசேஷத்தை(யும்) எழுதியிருந்தார் (இ.வ. அப். 1:1; லூக். 1:1-4). இவர் பவுலுக்குப் பயணத் துணையாளராய் இருந்தார். அப். 16:10; 20:6 மற்றும் பிற "நாங்கள்" வசனப்பகுதிகளைக் காணவும். லூக்கா பவுலின் உடன் ஊழியக்காரர்களில் ஒருவராயிருந்தார் என்பதை பவுலின் நிருபங்களிலிருந்து நாம் அறிகின்றோம் (கொலோ. 4:14; 2 தீமோ. 4:11; பிலே. 23, 24) மற்றும் சீரான பாரம்பரிய வரலாறுகளும் (நடபடிகள் என்ற) இப்புத்தகத்தை லூக்காதான் எழுதினார் என்பதைக் குறிப்பிடுகின்றன. அப்போஸ்தருடைய நடபடிகள் (The Acts of the Apostles) என்ற இதன் தலைப்புப் பெயரானது மூல நூலின் பாகமாய் இருப்பதில்லை, மற்றும் இத்தலைப்பு தவறாக (நம்மை) வழிநடத்துவதாக உள்ளது. இப்புத்தகமானது அப்போஸ்தலர்களில் சிலருடைய மிகச் சில நடவடிக்கைகளையே எடுத்துரைக்கின்றது. மிகப் பழைய கையெழுத்துப் பிரதிகளில் ஒன்று இதற்கு அப்போஸ்தலருடைய நடபடிகள் (Acts of Apostles) என்ற மிகச் சிறந்த தலைப்பைக் கொடுக்கின்றது.

ஆ. நிருபங்களில் வரலாற்று ரீதியான மறைமுகக் குறிப்புகள்.—மொத்தம் எழுதப்பட்ட இருபத்தியோரு நிருபங்களில் பதிமூன்று நிருபங்கள் பவுலின் எழுதுகோலில் இருந்து வந்தவையாகும்.

இ. வெளிப்படுத்தின விசேஷம்.—இந்தப் புத்தகமானது அப்போஸ்தலரான யோவானின் வாழ்வின் நிகழ்ச்சிகளை பிற அப்போஸ்தலர்கள் (யாவரும்) மரித்து நீண்ட நாட்களுக்குப் பிறகு தருகின்றது.

2. சுவிசேஷ வரலாற்றுடன் உறவுமுறை.—*(1)* சுவிசேஷங்கள் முழுவதிலும் யோவான் (ஸ்நானான்), இயேசு, பன்னிருவர், எழுபது பேர் ஆகியோர் இராஜ்யம் சமீபித்திருந்ததாகவே பிரசங்கிக்கின்றனர். நடபடிகளில் நாம் கிறிஸ்து ஆளுகை செய்வதையும், ஆண்களும் பெண்களும் அவரது சபை அல்லது இராஜ்யத்தில் பிரவேசிப்பதையும் காண்கின்றோம்.

(2) சுவிசேஷங்கள் முழுவதிலும் செய்தியும் களமும் எல்லைக்கு

உட்படுத்தப்பட்டிருந்தன. இயேசுவின் மரணம், உயிர்த்தெழுதல் அல்லது மேசியாத்துவம் ஆகியவற்றைப் பிரசங்கிக்கவோ அல்லது அவருடைய நாமத்தில் பாவமன்னிப்பைப் பிரசங்கிக்கவோ அல்லது பாலஸ்தீனத்திற்கு அப்பால் செல்லவோ அப்போஸ்தலர்கள் அனுமதிக்கப்படாதிருந்தனர். நடபடிகளில் நாம் இவர்களை எல்லா நாடுகளிலும் கிறிஸ்துவை அவருடைய மீட்பின் ஊழியத்தினுடைய முழு நிறைவில் பிரசங்கிக் கின்றவர்களாகவும், அவருடைய நாமத்தில் பாவமன்னிப்பு அளிக்கின்றவர் களாகவும் காண்கின்றோம்.

(3) சுவிசேஷங்களில் கிறிஸ்து தமது பரத்துக்கேறுதல் மற்றும் மகிமையடைதல் ஆகியவற்றின் விளைவாகப் பரிசுத்த ஆவியை வாக்குத் தத்தம் பண்ணுகின்றார். நடபடிகளில் நாம், ஆவியானவர் ஒளியூட்டும் மற்றும் பரிசுத்தப்படுத்தும் வல்லமையுடன் வருவதையும், ஆவியானவரின் பட்டயத்தினால் ஆயிரக்கணக்கானோர் தாக்கப்படுவதையும் காண்கின் றோம். நடபடிகளின் புத்தகம், "பரிசுத்த ஆவியானவரின் சுவிசேஷம்" என்று தக்க வகையிலேயே குறிப்பிடப்பட்டுள்ளது.

3. அப்போஸ்தலிக்க வரலாற்றின் கால கட்டங்கள்.—தற்பொழுது நாம் நடபடிகளின் புத்தகத்தில் மட்டும் படித்துணர்ந்து வரலாற்றைப் பின்வரும் கால கட்டங்களாகப் பிரிக்கின்றோம்:

(1) எருசலேமில் சபை தோற்றுவிக்கப்படுதலும் வளர்ச்சியும் (கி.பி. 30-35).[2]

(2) யூதேயா. சமாரியாவில் சபையின் விரிவாக்கம் மற்றும் புறஜாதியார் மாற்றப்படுதல் (கி.பி. 35-45).

(3) புறஜாதியார் மத்தியில் பவுலின் ஊழியப் பயணங்கள் (கி.பி. 45-48).

(4) பவுலின் நான்காண்டு சிறைவாசம் (கி.பி. 58-63).

குறிப்புகள்

[1]சபையின் ஸ்தாபனத்திற்கான ஒரு மாற்றுத் தேதி கி.பி. 33 என்றுள்ளது. [2]Ibid.

23

எருசலேமில் சபை ஸ்தாபிக்கப்படுதலும் வளர்ச்சியும், கி. பி. 30-35[1]

நடபடிகள் 1-7

I. சபை ஸ்தாபிக்கப்படுதல்.

(அப். 1, 2.)

1. சபையின் உயிர்க்கரு; பத்து நாட்கள் காத்திருத்தல்.—(இயேசுவின்) உயிர்த்தெழுதலுக்குப் பின் எருசலேமில் தங்கியிருந்த அல்லது எஞ்சியிருந்த சீஷர்களின் எண்ணிக்கை நூற்று இருபதாக இருந்தது. கலிலேயாவில் இருந்தவர்கள் உட்பட அவர்கள் குறைந்தது ஐந்நூறு பேர்களாயிருந்தனர் (1 கொரி. 15:6). அந்த நூற்று இருபது பேர், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஆவியானவரை அன்றாடம் எதிர்பார்த்துக் காத்திருக்கையில் ஜெபத்தில் தரித்திருந்தார்கள். காத்திருந்த நாட்களின் போது, பேதுருவின் ஆலோசனை யின் பேரில், அப்போஸ்தலத்துவத்தில் யூதாஸின் தற்கொலையால் ஏற்பட்டிருந்த காலியிடம் மத்தியாவைத் தேர்ந்து கொண்டதன் மூலம் நிரப்பப்பட்டது; கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் பற்றிச் சாட்சி கொடுக்கக் கூடியவராவதற்கு அவரைப் பற்றித் தனிப்பட்ட அறிவுடனிருத்தல் என்பது அப்போஸ்தலராயிருப்பதற்குரிய அத்தியாவசியமான தகுதியாய் இருந்தது (அப். 1:21, 22; 1 கொரி. 9:1).

2. பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம்.—*அ. காலமும் உடன் நிகழ்வுகளும்.*—பஸ்காவன்று கிறிஸ்து பாடுபட்டிருந்தார். அதன் பின் ஐம்பது நாட்கள் கழித்து, மாபெரும் பண்டிகைகளில் இரண்டாவதான பெந்தெகொஸ்தேயன்று ஆவியானவர் வந்தார். அவர் கண்ணுக்கும் காதுக்கும் உணர்ந்தறிதல் தரும் உடன் நிகழ்வுகளுடன் வந்தார்—காற்று வீசுதல் இல்லாதிருப்பினும் பலத்த காற்று அடிக்கிறது போல் ஒரு முழக்கம் உண்டாயிற்று; ஜுவாலை இல்லாவிடினும் அக்கினிமயமான நாவுகள் தோன்றின.

ஆ. சீஷர்கள்மீது அதன் செயல்விளைவு.—பன்னிரு சீஷர்கள் மீதான அதன் செயல்விளைவானது உடனடியானதாக, வல்லமைமிக்கதாக, மாற்றுருக் கொடுப்பதாக இருந்தது: "அவர்களெல்லாரும் பரிசுத்த

ஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத் தொடங்கினார்கள்.''[2] ஆனால் இயற்கைக்கு மேலான உட்கண்ணோட்டமும் வல்லமையும் மட்டுமே அங்கு ஏற்பட்ட செயல்விளைவுகளாய் இருந்ததில்லை. அவர்கள் ஒழுக்க ரீதியாகவும் மாற்றியமைக்கப்பட்டனர். அது முதற் கொண்டு இராஜ்யத்தைப் பற்றிய உலகப் பிரகாரமான கருத்துக்கள் இருப்பதில்லை, அதில் (இராஜ்யத்தில்) முதன்மையான இடங்களைப் பற்றிய சண்டைகளும் இருப்பதில்லை.

இ. இதன் ஆதாரப்பூர்வமான மதிப்பு.—இயேசு தாம் பிதாவினிடத்தில் திரும்பும் நிகழ்வுடன், தேற்றரவாளனின் வருகையைத் தொடர்பு படுத்தியிருந்தார் (யோவா. 15:26, 27; 16:7; இ.வ. 7:39; அப். 2:33). பெந்தெகொஸ்தே (நாளின் நிகழ்ச்சி) என்பது பூமி தனது கர்த்தரை மறுதலித்தமைக்குப் பரலோகத்தின் பதிலாய் இருந்தது; முட்களால் ஆன கிரீடத்திற்குப் பதில் மகிமையின் கிரீடம் (அவ்விடத்தில்) மாற்றி வைக்கப்பட்டது என்பதற்கான வெளிப்படையான அறிவிப்பாய் இருந்தது; இது (யூத) நாட்டவரின் பாவத்திற்கும் இயேசுவின் மேசியாத்துவத்திற்கும் உச்ச கட்டமான நிரூபணமாய் இருந்தது.

ஈ. திரளான கூட்டத்தாரின் மீதான செயல்விளைவு.—அப்போஸ்தலர்களைச் சுற்றி உடனடியாகக் கூடிய ஆயிரக்கணக்கானவர்களும் வியப்படையும் வண்ணம், ஆவியானவரின் ஞானஸ்நானம் உறுதிப்படுத்தும், மாற்றும் வல்லமையுடன் வந்தது; அது மறைமுகமாய் இருந்த போதிலும் செயல் விளைவுடன், பேதுருவின் உதடுகளிலிருந்து உரைக்கப்பட்ட சுவிசேஷத்தின் மூலமாக வந்தது.

3. பேதுருவின் பிரசங்கம்; விளைவுகள்.—பேதுரு உரையாற்றுபவராய் இருக்கின்றார்; அவரது உரையைக் கேட்ட யூதர்கள் பல்வேறு நாடுகளில் பிறந்தவர்களாய் இருந்தனர். தவறான எண்ணத்தை நீக்கிப் போடப் பொருத்தமான ஒரு அறிமுக உரைக்குப் பிறகு, அவர் இயேசுவே கிறிஸ்து என்பதை மெய்ப்பிக்கச் செல்லுகின்றார், (இதை அவர் பின்வரும் நான்கு கருத்துக்களின் மூலம் மெய்ப்பித்தார்:) (1) நன்கறியப்பட்ட அவரது ஊழியங்களினால்; (2) பொல்லாத மனிதர்களால் அறியப்படாமலேயே நிறைவேற்றப்பட்ட தேவனுடைய திட்டமான அவரது மரணத்தினால்; (3) தீர்க்கதரிசிகளினால் முன்னுரைக்கப்பட்டு அப்போஸ்தலர்களினால் உறுதிப்படுத்தப்பட்டிருந்த அவருடைய உயிர்த்தெழுதலினால்; (4) தீர்க்கதரிசிகளினால் முன்னுரைக்கப்பட்டு, பெந்தெகொஸ்தே நாளன்று நிகழ்ந்த அற்புதத்தினால் உறுதிப்படுத்தபட்டிருந்த செயலான பிதாவின் வலது புறத்தில் அவர் உயர்த்தப்பட்டார் என்ற நிகழ்ச்சியினால்.

இதன் விளைவுகள் பின்வருமாறு: (1) குத்தப்பட்ட ஒரு உறுதிப்பாடு; "அவர்கள் இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி"[3]; (2) தீர்க்கமான ஒரு கேள்வி: "நாங்கள் என்ன செய்ய வேண்டும்?"[4] (3) தெளிவான ஒரு பதில்: ''மனந்திரும்பி—ஒவ்வொருவரும்—பாவமன்னிப்புக்கென்று—இயேசு கிறிஸ்துவின் நாமத்திலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்—அப்போது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்''[5]; (4) உடனடியான

கீழ்ப்படிதல்; "அவனுடைய வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள்; அன்றையத் தினம் ஏறக்குறைய மூவாயிரம் பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்"[6]; (5) "அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும்" உறுதியாய்த் தரித்திருத்தல்.[7]

பெந்தெகொஸ்தே நாளான்று "சபையின் பிறந்த நாள்" என்று நன்கு அழைக்கப்படலாம்.

II. எருசலேமில் சபையின் வளர்ச்சி.
(அப். 3-7.)

1. யூதர்களின் முதலாவது உபத்திரவம்.—பெந்தெகொஸ்தேக்குப் பிறகு மிக விரைவிலேயே, தேவாலய வாசலருகே பேதுருவும் யோவானும் ஒரு சப்பாணியைக் குணமாக்கினர். அங்கே கூடி வந்த திரளான கூட்டத்தார், பெந்தெகொஸ்தே நாளன்று பேதுரு செய்த ஊழியத்தின் பின் தொடர்ச்சிக்கு ஒரு வாய்ப்பைப் பேதுருவுக்கு அளித்தனர். அவரது உரையானது சதுசேயர்களால் இடைமறிக்கப்பட்டது, அவர்களைப் பொறுத்தமட்டில் உயிர்த்தெழுதல் என்பது விசேஷித்த வகையில் வெறுக்கத்தக்க கருத்தாயிருந்தது; இரு அப்போஸ்தலர்களும் சிறையில் அடைக்கப்பட்டனர். இருப்பினும் பேதுருவின் உரையானது சீஷர்களின் எண்ணிக்கையை ஐயாயிரமாக உயர்த்திற்று. அடுத்த நாளில் பேதுருவும் யோவானும் ஆலோசனை சங்கத்தார் முன்னிலையில் கொண்டு வரப்பட்டனர், அந்தச் சங்கத்தில் சதுசேயரே பெரும்பான்மையானவர்களாய் இருந்தனர், அவர்கள் (சீஷர்கள்) எந்த அதிகாரத்தின் பேரில் அந்த அற்புதத்தைச் செய்தனர் என்று இவர்கள் (சங்கத்தார்) கேட்டனர். அவர்கள் அது இயேசுவின் வல்லமையினால் நடைபெற்றதென்று தைரியத்துடன் உரிமையாக்கி, தங்களின் நியாயாதிபதிகளிடத்தில் அவருடைய நாமமேயல்லாது வேறொரு நாமத்திலே இரட்சிப்பு இல்லை என்று தைரியமாய் அறிவித்தனர். அதிகாரிகள் அற்புதத்தை மறுக்க முடியாது இருந்தது, எனவே அப்போஸ்தலர்களைப் பயமுறுத்தியதுடன் அவர்கள் திருப்தியடைந்து அவர்களைச் செல்ல அனுமதித்தனர்.

2. (சீஷருக்குள்) இருந்த அபாயங்கள்; அனனியாவும் சப்பீராளும்.—கிறிஸ்தவப் பரிவிரக்கத்திற்கான எடுத்துக்காட்டு ஒன்றை எருசலேமில் இருந்த சபை வழங்குகின்றது (அப். 2:44, 45; 4:34-37). அது கட்டாயமானதாக இருந்ததில்லை (அப். 5:3, 4), ஆனால் முற்றிலும் சுயேச்சையாக ஏற்பட்டதாயிருந்தது. அது உலகளாவியதுமல்ல நிலையானதுமல்ல; இது ஆவியில் அப்போஸ்தலிக்க சபை முழுவதையும் பண்புபடுத்தினாலும் வடிவமைப்பில் இது எருசலேம் நகரின் சபைக்கு மட்டுமே உரியதாயிருந்தது. அனனியாவும் சப்பீராளும் தங்கள் உடமைகளை விற்ற பணத்தில் ஒரு பகுதியை அப்போஸ்தலர்களிடத்தில் கொடுத்தனர், ஆனால் அதை தீய இயல்பான நோக்கத்துடன் செய்தனர். அவர்களின் (இச்செயலுக்கான) தூண்டுதல் பேதுருவினால் வெளிப்படுத்தப்பட்டதும், அவருடைய பாதங்

களில் அவர்கள் உடனடியாக வீழ்ந்து மரணம் அடைந்ததும் சபையார் யாவரையும் பயபக்தியினால் நிரப்பியது. இது மார்க்க விஷயங்களில் உண்மையற்ற தன்மைக்கெதிரான நினைவுச் சின்னமாக புதிய சமூகத்தின் நுழைவாயிலிலேயே நிற்பதாக உள்ளது. பன்னிருவரில் முதலாவது மரணமடைந்தவர் காட்டிக் கொடுத்தவராய் இருந்தார், மற்றும் அவரது மரணம் தற்கொலையால் நிகழ்ந்தது என்பதும், அப்போஸ்தலிக்க சபையில் முதலாவது மரணம் அடைந்தவர்கள் மாய்மாலக்காரர்களாயும் பொய்யர் களாயும் இருந்தார்கள் என்பதும் இவ்விடத்தில் கவனிக்கத் தகுந்த உண்மையாக உள்ளது.

3. யூதர்களின் இரண்டாவது உபத்திரவம்.—நீதியான எல்லா ஒழுங்கு நடவடிக்கையையும் போலவே, அனனியா சப்பீராள் ஆகியோருக்குக் கிடைத்த நியாயத்தீர்ப்பின் செயல்விளைவானது சுவிசேஷத்தின் வல்லமையை அதிகப்படுத்திற்று. எச்சரிக்கையும் கோபமும் அடைந்த ஆலோசனை சங்கத்தார், எல்லா அப்போஸ்தலர்களையும் சிறையில் தள்ளினர். தேவன் அவர்களுக்காக இன்னும் ஊழியப் பணிகளைக் கொண்டிருந்தார், மற்றும் அவருடைய தூதன் சிறைக் கதவைத் திறந்து விட்டு, அவர்கள் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி தேவாலயத்திற்கு அவர்களை அழைத்து வந்து விட்டான். அவர்களின் இரகசியமான தப்பித்தலால் கலக்கமுற்ற அதிகாரிகள் அவர்களை ஆலோசனைச் சங்கத்தின் முன்பாகக் கொண்டு வந்து நிறுத்தினர். அப்போஸ்தலர்கள், மனிதர் களுக்கல்ல ஆனால் தேவனுக்கே தாங்கள் கீழ்ப்படிவதான தங்கள் தீர்மானத்தை அறிவித்தனர்; மற்றும் ஆலோசனை சங்கத்தார் கமாலியேலின் ஆலோசனையின் பேரிலேயே வன்முறையான நடவடிக்கைகளைக் கைவிட்டனர்: “இந்த யோசனையும் இந்தக் கிரியையும் மனுஷரால் உண்டாயிருந்ததானால் ஒழிந்துபோம்; தேவனால் உண்டாயிருந்த தேயானால், அதை ஒழித்து விட உங்களால் கூடாது.”[8] கமாலியேல் ஒரு பரிசேயராக, பவுலின் ஆசிரியராக (அப். 22:3) இருந்தார். இந்த தொடக்க காலத் துன்புறுத்துதல்களில் பரிசேயர்கள் துடிப்புடன் செயல்பட்டிருக்க வில்லை என்பதாகக் காணப்படுகின்றது.

4. பிரயாசத்தில் முதல் பிரிவினை.—சபையானது விரைவிலேயே பல இனத்தவரும் சேர்ந்துள்ள இடமாயிற்று. பெந்தெகொஸ்தே நாளன்று பேதுருவின் உரையைக் கேட்ட மாறுபட்ட நாடுகளைச் சேர்ந்தவர்கள் (அப். 2:8-11) விரைவிலேயே சபையில் அதன் எதிரெதிர் பாகங்களாக ஆயினர். பலஸ்தீனத்திற்குப் புறம்பே யூத இரத்தத்தில் பிறந்தவர்கள் ஹெல்லெனிஸ்டுகள் அல்லது “கிரேக்க(யூத)ர்கள்” என்று அழைக்கப் பட்டார்கள். இவர்கள் நடபடிகளில் அடிக்கடி, “எபிரெயர்கள்” அல்லது பலஸ்தீனிய யூதர்களுக்கு நேரெதிராகத் தோன்றுகின்றனர். இவ்விரு வகுப்பாருக்குமிடையே ஏற்பட்ட பொறாமை/விரோதம், பிரயாசத்தின் முதல் பிரிவினைக்கான காரணமாயிற்று. சபையின் நிறுவன அமைப்பு படிப் படியான வளர்ச்சியாய் இருந்தது. முதலில் அப்போஸ்தலர்கள் எல்லாப் பணி நிலைகளையும் நிரப்பினார்கள். அன்றாடக விசாரணையிலிருந்து கிளம்பிய விரோதத்தை அமைதிப்படுத்துவதற்காக, அப்போஸ்தலர்களின்

பரிந்துரையின் பேரில் சபையானது இந்தப் பணியைக் கவனிப்பதற்காக ஏழு ஆண்களைத் தேர்ந்தெடுத்தது, இவர்கள் யாவரும் கிரேக்கப் பெயருடைய வர்களாயிருந்தனர். இவ்வழி முறையின் வாயிலாக உதவிக்காரரின் பணி நிலை உதித்தெழும்பிற்று. இவ்விதமாக, அப்போஸ்தலர்கள் ஜெபத்திற்கும் வசனத்தைப் போதிக்கும் ஊழியத்திற்கும் தங்களை முழுமையாக ஒப்புக் கொடுக்கக் கூடியவர்களாயினர். ஆசாரியர்கள் பலரும் விசுவாசத்திற்குக் கீழ்ப்படிந்தனர் என்ற சுவிசேஷத்தின் இன்னும் அதிகமான மாபெரும் வெற்றியில் நல்ல செயல் விளைவு காணப்பட்டது.

5. கிறிஸ்தவ இரத்த சாட்சியாக மரித்த முதலாமவர் *(6:8-7:60).* —சபையானது தான் அறிந்திருந்ததைக் காட்டிலும் சிறப்பான பண்புடைய வர்களைத் தேர்ந்தெடுத்திருந்தது. ஏழு உதவிக்காரர்களில் ஒருவரான ஸ்தேவான், கிரேக்கரானவர்களின் விதவைகளுக்கு உணவளிப்பதில் தொடங்கினார்; மிக விரைவிலேயே அவர் கிரேக்கரானர்களின் ஜெப ஆலயங்களில் ஜீவ அப்பத்தைப் பிட்டளிக்கத் தொடங்கினார்.

இந்த வேளை வரைக்கும் சீஷர்கள் மற்றும் யூதர்கள் ஆகியோராலும் கூட, அவர்கள் (சீஷர்கள்) யூதர்களின் தனி வகைப்பட்டதொரு பிரிவு என்பதாகவே கருதப்பட்டனர். புறஜாதியாரை உள்ளடக்கும்படியான பரந்த ஊழியத்திற்கான சிந்தனை எதுவும் உற்சாகப்படுத்தப்பட்டதில்லை. ஆனால் ஸ்தேவான் யூதத்துவத்தினை முடித்து வைக்கும் பணிகளைக் கண்ணோக்கத் தொடங்கி விட்டார் என்பது தெளிவு. இது யூதர்களின் அனைவரையும் ஒரு மென்மையான பகுதியில் தொட்டது. கிரேக்கரான வர்கள் விவாதத்தில் தோல்வியுற்று, துன்புறுத்துதலை மீண்டும் எழுப்பி னார்கள். இப்பொழுது பரிசேயர்கள் செயல்படுபவர்களாகி விட்டார்கள். இரண்டாவது உபத்திரவத்தில் பரிசேயராகிய கமாலியேல் பேதுருவைப் பாதுகாப்பவராகக் காணப்பட்டார்; மூன்றாவது உபத்திரவத்தில், அவரது மாணவரான பவுல் ஸ்தேவானை உபத்திரவிப்பவராகக் காணப்பட்டார். இவர் (ஸ்தேவான்) எருசலேமில் இருந்த சபையில் மிகவும் வளர்நிலை யிலிருந்த ஆவியை உடையவராயிருந்தார், இவர் முதல் கிறிஸ்தவ ரத்த சாட்சியாக மரணித்து வீழ்ந்தார். தமது எஜமானரின் ஆவியைக் கொண்ட வராய் இவர் பின்வரும் ஜெபத்துடன் மரிக்கின்றார்: “ஆண்டவரே, இவர்கள்மேல் இந்தப் பாவத்தைச் சுமத்தாதிரும்.”[9] சபையானது ஸ்தேவானை இழந்தது, ஆனால் விரைவிலேயே பவுலை ஆதாயப்படுத்திக் கொண்டது; நாம் புனிதர் அகஸ்டினோடு சேர்ந்து பின்வருமாறு கூறலாம்,—

Si Stephanus non orasset,
Ecclesia Paulum non haberet.

ஸ்தேவன் ஜெபியாதிருந்திருந்தால்
சபை பவுலைப் பெற்றிருக்காது.

குறிப்புகள்

[1]சபை ஸ்தாபிக்கப்பட்டதற்கு மாற்றுத் தேதியாக கி.பி. 33 உள்ளது. [2]அப். 2:4. [3]அப். 2:37. [4]அப். 2:37. [5]அப். 2:38. [6]அப். 2:41. [7]அப். 2:42. [8]அப். 5:38, 39. [9]அப். 7:60.

24

சபையின் விரிவாக்கம்

யூதேயா மற்றும் சமாரியா முழுவதிலும் மற்றும் புறஜாதியாருக்கு மாற்றப்படுதல், கி.பி. 35-45
அப். 8-12

1. சமாரியாவுக்கு விரிவாக்கம் *(8:1-25).*—"எருசலேமில் தொடங்கி" (லூக். 24:47) என்பது நிறைவேற்றப்பட்டுள்ளது. இப்பொழுது பிரதான கட்டளையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விலகிச் செல்லும் புவியியல் கோடுகளைப் பின்பற்ற வேண்டிய வேளையாக உள்ளது (அப். 1:8). ஆனால் மனிதர்களின் அமளியினால் வற்புறுத்தப்படும் வரையிலும், எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாதுள்ளது; மனிதருடைய திட்டங்கள் தெய்வீகத் திட்டங்களுடன் உட்பிணைக்கப்பட்டுள்ளமைக்க இது இன்னுமொரு எடுத்துக்காட்டாக உள்ளது. ஸ்தேவானுடைய மரணம் அவரைக் கொலை செய்தவர்களின் தாகத்தைத் தணிக்கவில்லை. அது புலிக்கு இரத்தத்தின் ருசி போன்றதாகவே இருந்தது. முந்திய உபத்திரவங்கள் கட்டுப்படுத்தப்பட்டிருந்தன. இப்பொழுதோ பரிசேயரும், சதுசேயரும், ஆசாரியரும், மக்களும் பச்சிளம் குழந்தையின் நிலையில் இருந்த சபைக்கு(எதிராக)த் திரும்பினர். ஆனால் அதன் செயல்விளைவானது சுவிசேஷத்தின் கனல்களை அவிப்பதாயிராமல், புதிய மையங்களை அவர்களுக்கு (சீஷர்களுக்கு) கிளறி விடுவதாயிருந்தது. அப்போஸ்தலர்கள் மாத்திரம் எருசலேமில் தங்கியிருந்தார்கள். சிதறடிக்கப்பட்ட சீஷர்கள் அதிகமான சுவிசேஷகர்களாகி, யூதேயா மற்றும் சாமாரியா முழுவதிலும் பிரசங்கித்தார்கள். அவர்களில் ஒரே ஒருவருடைய பிரயாசங்கள் மட்டும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. ஏழு உதவிக்காரர்களில் ஒருவரான பிலிப்பு சமாரியாவுக்குச் சுவிசேஷத்தை எடுத்துச் சென்றார். அறுநூறு ஆண்டுகள் அளவாக, சமாரியர்கள் ஒரு தனி வகையான மக்களாகப் பாதுகாத்து வைக்கப்பட்டிருந்தார்கள். அதில் ஒரு அருளிரக்கம் இருந்தது. அவர்கள் யூதராகவோ அல்லது புறஜாதியாராகவோ இல்லாமல், (அவர்களில்) ஒருவர் பிறரிடமிருந்து பாதித் தொலைவில் இருந்த இனமாய்க் காணப்பட்டனர். பிலிப்புவின் ஊழியத்தில் ஏறக்குறைய பெந்தெகொஸ்தே நாளின்[1] அற்புத செயல் விளக்கங்கள் காணப்பட்டன; அந்தப் பகுதியில் (ஏற்கனவே) பெயர் அறியப்படாத ஒரு பெண்ணும், அவளது ஊர் மனிதர்களில் பலரும் இயேசுவில் விசுவாசம் கொண்டிருந்தனர், இப்பொழுது இயேசுவின் சீஷர்களில் ஒருவரால் அறிவிக்கப்பட்ட முழுமையான சுவிசேஷத்தைத் திரளான கூட்டத்தார் மகிழ்வுடன் ஏற்றுக்

கொண்டனர். மனமாற்றம் அடைந்தவர்களில், கெட்ட பெயர் கொண்டிருந்த மந்திரவாதியான சீமோன் என்பவரும் இருந்தார். பிலிப்பு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவும், அற்புதங்களைச் செய்யவும் முடிந்திருந்தது, ஆனால் அவரால் ஆவியான வரின் இயற்கைக்கு மேலான அருள் வரங்களைப் பிறருக்குப் பொழியக் கூடாதிருந்தது. அந்த வல்லமை (ஆவியானவருடைய வரங்களைப் பிறருக்குப் பகிர்ந்தளிக்கும் வல்லமை) அப்போஸ்தலர்களுக்கு மட்டுமே உரியதாயிருந்தது. சமாரியர்களுக்குப் பிரசங்கித்தலுக்கான புதிய புறப்பாடானது அப்போஸ்தலர்கள் அவ்விடம் வந்து சேரப் போதிய முக்கியத்துவம் வாய்ந்த காரணமாயிற்று. அவ்வூழியத்தில் திருப்தியுற்ற யோவானும் பேதுருவும் அங்கு சென்று (புதிதாய்) மனம் மாற்றப்பட்டவர்கள் ஆவியானவரைப் பெற்றுக் கொள்ளும்படியாக அவர்கள்மீது தங்கள் கைகளை வைத்து ஜெபித்தனர். சீமோன் முன்பு கொண்டிருந்த அதிகார விருப்பமானது மீண்டும் திரும்பி வந்தது, அவன், பரிசுத்த ஆவியானவருடைய வரங்களைப் பொழிவதற் கான வல்லமையை பெறும் நோக்கத்துடன் அதற்காகப் பேதுருவுக்குப் பணம் கொடுக்க முன் வந்து, தனது பாவங்களுக்காக அப்போஸ்தலரின் கடினமான கடிந்து கொள்ளுதலைப் பெற்றான். இன்றைய நாள் வரையிலும் கூட, பிரசங்க/போதனைப் பணிகளை விலை கொடுத்து வாங்குவதற்கு முயற்சி செய்தல் என்பது இந்த சீமோனின் நினைவாக simony என்றே அழைக்கப்படுகின்றன.

2. மந்திரியின் மனமாற்றம் *(8:26-40)*.—எத்தியோப்பிய அரசியாயிருந்த கந்தாகேயின் பொக்கிஷத்தார் எருசலேமுக்குப் புனிதப் பயணம் சென்று விட்டு, தம் இல்லம் நோக்கித் திரும்பப் பயணம் செய்து கொண்டிருந்தார். பிலிப்பு காசா செல்லும் திசை நோக்கி தேவனால் அனுப்பப்பட்டார். அவர்களின் பாதைகள் சந்திக்கின்றன. ஏசாயா தீர்க்கதரிசியின் ஆகமத்திலிருந்து வாசித்துக் கொண்டிருந்த அந்த அலுவலர், பிலிப்புவைத் தன்னுடன் பயணம் செல்லும்படியும், தீர்க்கதரிசனத்தைத் தனக்கு விளக்கும்படியும் அழைக்கின்றார். பிலிப்பு அவருக்கு இயேசுவைப் பற்றிப் பிரசங்கிக்கின்றார். அதன் விளைவாக அந்த மந்திரி ஞானஸ்நானம் பெற வேண்டும் என்கின்றார். இரதம் நிற்கிறது, இருவரும் வழியில் இருந்த ஒரு சிறு குட்டையில் இறங்குகின்றனர், மனம் மாறிய அவரைப் பிலிப்பு ஞானஸ்நானப்படுத்துகின்றார். அவர் தமக்குள் புதிதாய்த் தோற்றுவிக்கப்பட்ட விசுவாசத்தில் அகம் மகிழ்ந்தவராய்ச் செல்லுகின்றார். அவர் ஒரு புறஜாதியாராய் இருந்திருக்கச் சாத்தியக் கூறு உள்ளது. அப்படியிருந்தால், இது புறஜாதி உலகத்தாருக்கான தனிப்பட்ட மாற்றமாக இருந்தது, மற்றும் இது குடியிருப்பற்ற பகுதியில் நடைபெற்றதால் எருசலேமில் கவனத்தைக் கவரவில்லை, மற்றும் சமூக உறவுகள் எதையும் உள்ளடக்கவில்லை, இது அச்சமயத்தில் எருசலேமில் அறியப்பட்டிருக்கக் கூட முடிந்திராது. அவர் (மந்திரி) பெரும்பாலும் ஒரு கிரேக்க யூதராயிருந்து, நெகேமியாவைப் போல் புறஜாதியாருடைய நாட்டில் உயர் பதவி வகித்திருக்கலாம். பிலிப்பு, செசரியாவுக்கு கடந்து சென்றார், அங்கு நாம் அவரைப் பல ஆண்டுகளுக்குப் பிறகு சந்திப்போம்.

3. சவுலின் மனமாற்றமும் தொடக்க கால ஊழியமும் *(9:1-30).—* *பெந்தெகொஸ்தே நாளுக்குப் பின் கிறிஸ்தவத்தின் வரலாற்றில் சவுலின் மனமாற்றம் மிகவும் வலிவார்ந்த நிகழ்ச்சியாக இருந்தது. இவ்வரலாறு நமக்கு மும்முறை கூறப்படுகிறது: லூக்காவினால் (அப். 9), யூதக் கூட்டத்தாருக்குப் பவுலினால் (அப். 22), மற்றும் அகிரிப்பாவின் முன்னிலையில் மீண்டும் பவுலினால் (அப். 26). ஆதி சபையின் மீது பவுல் தமது மனப் பதிவுகளை வேறெந்த அப்போஸ்தலரைக் காட்டிலும் அதிகமாய் விட்டுச் சென்றார். லூக்காவின் சுவிசேஷம் மற்றும் நடபடிகள் - இவையிரண்டும் அநேகமாகப் பவுலின் ஏவுதல் மற்றும் இயக்கத்தின் கீழாகவே தொகுக்கப்பட்டிருக்க வேண்டும் - என்றே நூல்கள் உட்பட புதிய ஏற்பாட்டின் பாதிக்கும் மேலான அளவானது பவுலிடம் இருந்து தோன்றியதாக உள்ளது.*

நாம் சவுலை (சபைக்கு) மூன்றாவது உபத்திரவம் எழும்பிய வேளையில் எருசலேமில் கண்டதுடன் விட்டு வந்தோம். அந்த உபத்திரவத்தின் மூலகாரணமாய் அவரே விளங்கினார். அவர் தாம் செய்த எல்லாவற்றையும் முழு பெலத்துடனேயே செய்தார். அவருடைய ஊழியமானது சுவிசேஷத்தைப் பிற மையங்களுக்கு அனுப்புதலாயிருக்கும் வரையிலும் தேவன் அவரை ஊழியம் செய்ய அனுமதித்தார்; ஆனால் அவர் தொலைவிலிருந்த தமஸ்குவுக்குத் தமது தீவிரமான சகிப்பின்மையைக் கொண்டு செல்ல நாடிய உடனே தேவன் தம் கரத்தை அவர் மீது வைத்தார். அவரை ஒரு ஊழியராக வும் சாட்சியாகவும் (அப். 26:16), அதாவது ஒரு அப்போஸ்தலராகவும் ஆக்குவதற்காக இயேசு தாமே அவருக்குத் தரிசனமானார்; அவர் (இயேசு) பவுலை பார்வையற்றவராகத் தமஸ்குவுக்கு அனுப்பினார், அங்கு மூன்று நாட்களாக ஜெபத்திலும் உபவாசத்திலும் இருந்த பிறகு அனனியா என்ற சீஷர் மூலம் இன்னும் அறிவுறுத்தப்பட்டு, ஞானஸ்நானம் செய்விக்கப்பட்டார். கலாத்தியர் முதலாம் அதிகாரத்தில் உள்ள விவரத்தை நடபடிகள் ஒன்பதாம் அதிகாரத்தின் விவரத்துடன் ஒப்பிட்டுக் காணுகையில் நாம், அவர் (பவுல்) உடனடியாக தமஸ்குவில் பிரசங்கிக்கத் தொடங்கியதாக அறிகின்றோம்; பின்பு அவர் அரபு தேசத்தில் மூன்று ஆண்டுகள் சென்றிருந் தார்; தாம் இதற்கு முன்பு எழுப்பியிருந்தது போன்ற உபத்திரவத்தின் புயல் ஒன்றை எதிர்கொள்வதற்காகவே தமஸ்குவுக்குத் திரும்பி வந்தார்; எருசலேமுக்குத் தப்பிச் சென்றார், அங்கு அவர்மீது நம்பிக்கை கொண்டிராத சீஷர்களிடம் பர்னபாவால் அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டார்; யூதர்கள் அவருக் கெதிராய்ச் சூழ்ச்சி செய்யத் தொடங்கியது வரையிலும் எருசலேமில் அவர் மிகுந்த தைரியத்துடன் பிரசங்கித்து வந்தார் மற்றும் தேவனிடமிருந்து வந்த ஒரு தரிசனம் (அப். 22:17-21) அவரது சொந்த ஊரான தர்சு நகருக்கு அவரை அனுப்பிற்று. பவுல் எங்கிருந்தாலும் அவர் ஒரு ஊழியக்காரரா கவே இருந்திருக்க வேண்டும்; ஆனால் சில ஆண்டுகளுக்கு மறைவின் திரையொன்று அவரது பிரயாசங்களின்மீது மூடிக் கிடக்கின்றது.

4. புறஜாதியாருக்கு மாற்றம்.—அ. பேதுருவின் மூலமாக; கொர்நேலியு வின் மனமாற்றம் (10).— *இப்பொழுது நாம் (படிக்கின்ற) வரலாற்றில் ஒரு*

புதிய திருப்புமுனைக்கு வருகின்றோம். சபையானது தான் பிறந்த யூதத்துவ (பழைமைவாதம் என்ற) துணிச்சுற்றுகளை அகற்றி விட்டு வெளியே வர வேண்டியதாயிருந்தது. யூதர்களுக்கும் புறஜாதியார்களுக்கும் இடையில் இருந்த இடைவெளியானது, யூதர்களுக்கும் சமாரியர்களுக்கும் இடையி லிருந்த இடைவெளியைக் காட்டிலும் அகலமானதாகவும் ஆழமான தாகவும் இருந்தது. ஆனால் அதற்குப் பாலம் இடப்பட்டிருந்தது. தேவன் வழக்கமாக மாபெரும் சகாப்தங்களுக்கு இருதயங்களை ஒன்றுக்கொன்று ஏற்புடையதாகும்படியும் அதற்கேற்ற நிகழ்ச்சிகளையும் அமைதியாகவே ஏற்பாடு செய்கின்றார். இங்கும் அப்படித்தான் நடந்தது.

அ. கொர்நேலியுவைத் தயார் செய்தல்.—பலஸ்தீனத்தின் அரசியல் தலைநகரான செசரியாவில் கொர்நேலியு என்ற ரோமானிய நூற்றுக்கதிபதி பணியினிமித்தம் தங்க வைக்கப்பட்டிருந்தார். அவர் விருத்தசேதனமற்ற புறஜாதியாராயிருந்த போதிலும், அவர் தேவன்மீது விசுவாசமுள்ளவராய், பக்தியுள்ளவராய், நீதிமானாய், தானதர்மம் செய்பவராய் இருந்தார். அவருக்கு இரட்சிப்புக்கேற்ற வழியை அறிவுறுத்தும்படி பேதுருவை அழைப்பிக்க யோப்பா கடற்கரைக்கு ஆளனுப்பி வைக்கும்படி தேவ தரிசனத்தில் அவர் (கொர்நேலியு) கட்டளையிடப்பட்டார்.

ஆ. பேதுருவைத் தயார் செய்தல்.—பேதுரு சமாரியாவிலிருந்து எருசலேம் திரும்பியதுடன் நாம் அவரை விட்டு வந்தோம். பிற்பாடு அவரை நாம் லித்தாவில் காண்கின்றோம், அங்கே அவர் ஐநேயாவைக் குணமாக்கு கின்றார். பிறகு, தொற்காள் மரணத்தினிமித்தம் அவர் யோப்பாவுக்கு அழைப்பிக்கப்படுகின்றார். அங்கே அவர் தொற்காளுக்கு உயிர் கொடுக்கின் றார்; மற்றும் இவ்விடத்தில் தான் அவரைக் கொர்நேலியுவின் செய்தியாளர் கள் கண்டனர். ஆனால் பேதுருவும் கூட அந்த நிகழ்ச்சிக்குத் தயாரிக்கப்பட வேண்டியதாயிருந்தது. அவர் எந்த மனிதரையும் தீட்டும் அசுத்தமும் உள்ளவரென்று அழைக்கக் கூடாதென்று பரலோகத்திலிருந்து வந்த தரிசனம் அவருக்குப் போதித்தது, மற்றும் அவரைக் கொர்நேலியுவினிடத் தில் செல்லும்படி ஆவியானவர் ஆணையிட்டார். கொர்நேலியு தமது வீட்டார், தமது நண்பர்கள் ஆகியோரை ஒன்றுகூட்டி வைத்திருந்தார். பேதுரு அவர்களுக்குப் பிரசங்கித்து, ஞானஸ்நானத்தின் மூலம் அவர்களை சபையில் ஏற்றுக்கொண்டார்.

இ. இந்நிகழ்ச்சிக்காகத் தற்காப்பு வாதம் செய்யப்பட்டது.—இது எருசலேமில் இருந்த மிகவும் கண்டிப்பான யூதக் கிறிஸ்தவர்களுக்குத் திகைப்பூட்டும் நிகழ்ச்சியாய் இருந்தது. விருத்தசேதனமற்ற புறஜாதியாரின் முழு வீட்டாருடனும் மத மற்றும் சமூக உறவுகளில் பிரவேசித்தல் என்பது (மதப்) பண்புக்கான ஒவ்வொரு சட்டத்தையும் மீறுதல் என்பதாயிருந்தது, அவர் (பேதுரு) எருசலேம் திரும்பிய பொழுது அதைப் பற்றிக் கணக்கு ஒப்புவிக்கும்படி அவர் கேட்டுக் கொள்ளப்பட்டார். ஆனால் தேவன் அவருக்கு ஒரு பதிலைக் கொடுத்திருந்தார். வழக்கமான முறைமைக்கு மாறாக, கொர்நேலியுவின் வீட்டார் ஞானஸ்நானம் பெறுவதற்கு முன்பாகவே ஆவியானவர், இயற்கைக்கு மேலான தமது அருட் கொடைகளை அவர்கள்மீது பொழிந்திருந்தார், இது அவர்களை ஏற்றுக்

கொண்டதற்கான தெய்வீக உத்தரவாதமாயிருந்தது. அது "புறஜாதியாரின் பெந்தெகொஸ்தே"யாயிருந்தது; புதிய புறப்படுதலின் மீது தேவனுடைய முத்திரை என்ற வகையில் இது சபையாரால் சந்தோஷம் நிறைந்த வகையில் அங்கீகரிக்கப்பட்டது.

ஆ. கிரேக்கரானவர்களின் மூலமாக *(11:19-30).*—இந்த நிகழ்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில், தேவன் தம்முடைய சபையை புறஜாதியார் உலகின் மீதான மிகவும் பரவலான தாக்குதலுக்கு/ செயல்பாட்டிற்கு தயார் செய்து கொண்டிருந்தார். பவுலின் (முந்திய) உபத்திரவத்தினால் சிதறிச் சென்றவர்கள் சுவிசேஷத்தை பெனிக்கியா, சீப்புருத் தீவு, மற்றும் அந்தியோகியா நகரம் வரையிலும் எடுத்துச் சென்றிருந்தனர். முதலில் அவர்கள் யூதர்களுக்கு மட்டும் பிரசங்கித்தார்கள். ஆனால் விரைவிலேயே, கிரேக்கரானவர்கள் இனத்தின் மீதான தடைகள் எல்லாவற்றையும் முறித்துப் போட்டு, புறஜாதியாருக்கு (சுவிசேஷத்தை) பிரசங்கிப்பதாக எருசலேமுக்குச் செய்தி வந்தது. உடனடியாக அவர்கள் அந்தியோகியாவுக்கு அந்நியனாயிருந்த பர்னபாவை அனுப்பி வைத்தனர்.

அ. ஒரு புதிய நடத்துனரும் ஒரு புதிய மையமும்.—பர்னபா இந்த ஊழியத்திற்குத் தமது இசைவைத் தெரிவித்ததுடன் நின்று விடவில்லை, ஆனால் சவுலைத் தேடித் தர்சு நகருக்குச் சென்றார். பர்னபாதான் சவுலை எருசலேமிலிருந்த சீஷர்களுக்கு அறிமுகப்படுத்தி வைத்தார் என்பது நினைவில் வைக்கப்பட்டிருக்கும்; இவர் (பர்னபா) "பவுலை தொடக்கத்தில்/ஆதியில் கண்டு பிடித்தவர்" என்று அழைக்கப்படலாம். கடைசியாக மனிதருக்கு இடமும் இடத்துக்கு மனிதரும் கண்டறியப் படுகின்றன(ர்). அந்தியோகியா நகரானது ஆசியாவின் மக்கள் தொகை மற்றும் கலாச்சாரம் ஆகியவற்றின் மாபெரும் மையமாய் இருந்தது; பவுல், சபையில் மிக விசாலமான வலிவு நிறைந்த மனிதராயிருந்தார். அந்தியோகியாவுக்குப் பவுல் வந்து சேர்ந்த பொழுதிலிருந்து பேதுருவும் எருசலேமும் பின்புறத்தில் வீழ்கின்றன(ர்); பவுலும் அந்தியோகியாவும் முன்னணிக்கு வருகின்றன(ர்). ஒரு புதிய மையமும் ஒரு புதிய நடத்துனரும் மேம்படுத்தப் படுகின்றன(ர்), இவ்விரண்டுமே, எருசலேம் மற்றும் அங்கிருந்த நடத்துனர் களைக் காட்டிலும் உலகளாவிய ஊழியத்திற்கு மிகவும் சிறப்பாகப் பொருந்துகின்றன(ர்).

ஆ. புதிய பெயர்.—"முதல் முதல் அந்தியோகியாவிலே சீஷர்களுக்குக் கிறிஸ்தவர்கள் என்கிற பேர் வழங்கிற்று"[2] என்று தனிச் சிறந்த வகையில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இப்பெயர் எருசலேமில் தொடங்கப் பட்டிருக்க முடிவதென்பது மிகவும் அரிது. அங்கு சீஷர்கள் யாவரும் யூதர் களாய் இருந்தனர், அவர்கள் மற்ற யூதரிலிருந்து மிக அரிதாகவே புறஜாதி யாரால் பிரித்தறியப்பட்டனர். அந்தியோகியாவில் சீஷர்களின் அமைப் பானது புறதெய்வ வழிபாட்டு மக்கள் தொகையிலிருந்து வந்து சேர்ந்ததா யிருந்தது. அவர்கள், யூதர் மற்றும் புறதெய்வ வழிபாட்டுக்காரர் ஆகிய இருசாராரிடத்திலிருந்தும் அடிப்படையிலேயே மாறுபட்டவர்களா யிருந்தனர். (கிறிஸ்தவர் என்ற) இப்பெயரானது அவசியமானதாகவும், ஏற்புடையதாகவும் இருந்தது.

*5. **யூதர்களின் நான்காவது உபத்திரவம்.**—பவுலின் ஊழியப் பயணத்தை நூல் பிடித்துப் பின் தொடரு முன்பு லூக்கா, எருசலேமின் நடவடிக்கைகளின் இன்னுமொரு சிறு குறிப்பை நமக்குத் தருகின்றார். பெத்லகேமில் (இயேசு பிறந்த வேளையில்) சிறு குழந்தைகளை கொலை செய்வித்திருந்த ஏரோதுவின் பேரனும், யோவான் ஸ்நானனின் தலையை வெட்டி வீழ்த்திய ஏரோதின் உறவினனுமாகிய முதலாம் ஏரோது அகிரிப்பா என்பவன் ஏரோதியப் பாரம்பரியத்திற்கு உண்மையாயிருக்கும் வகையில் இரத்தம் சிந்தும் துன்புறுத்துதல் ஒன்றைத் தொடங்கினான். அப்போஸ்தலரான யாக்கோபு தனது பாடுகளின் (ஞான)ஸ்நானத்தை தாம் இரத்த சாட்சியாய் மரிப்பதில் கண்டார் (மத். 20:22). அதே போன்றதொரு முடிவிற்காக பேதுரு சிறையில் காத்திருந்தார், ஆனால் சபையாரின் ஜெபம் மற்றும் தேவ தூதரின் ஊழியம் ஆகியவற்றின் மூலமாக அவர் விடுவிக்கப்பட்டு, பல ஆண்டுகள் பிரயாசப்படுவதற்காக மீட்கப்பட்டார். ஏரோது கேவலமான வியாதியொன்றினால் (கி.பி. 44ல்) மரித்தான்; ஆனால் "தேவ வசனம் வளர்ந்து பெருகிற்று."[3]*

குறிப்புகள்

[1]அப். 2ல் பெந்தெகொஸ்தேயன்று நடந்த அற்புதங்களை மறுகண்ணோட்டமிடவும். [2]அப். 11:26. [3]அப். 12:24.

25

புறஜாதியாரின் மத்தியில் பவுலின் ஊழியப்பயணங்கள், கி.பி. 45–58

அப். 13-21:26

I. முதலாம் பயணம்.

(அப். 13, 14.)

1. ஊழியத்தின் அவசரம்.—அந்தியோகியாவில் பவுலும் பர்னபாவும் ஓராண்டுக் காலம் ஒன்றாய் ஊழியம் செய்திருந்தார்கள். சபையானது எண்ணிக்கையில் பெரிதும் வளர்ச்சியுற்றிருந்தது, அதிலும் முக்கியமாக ஆவிக்குரிய வகையில் அதிகம் வளர்ச்சியுற்றிருந்தது. வறுமையிலிருந்த யூத சகோதரர்களுக்கு ஒரு நிதியளிப்புடன் அவர்கள் பர்னபாவையும் சவுலையும் எருசலேமுக்கு அனுப்பிய நிகழ்ச்சியில் அதன் (சபையின்) தாராள குணம் காண்பிக்கப்பட்டிருந்தது (அப். 11:27-30). அதில் போதகர்கள் நிறைந்திருந்தனர் (அப். 13:1), அவர்களுள் பர்னபா முதலாமவராகவும் சவுல் கடைசியானவராகவும் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளனர். மிகப் பரந்த அளவிலான சுவிசேஷ ஊழியம் (செய்யும் கருத்து) அவர்களின் இருதயங்களில் இருந்ததென்று காணப்படுகின்றது; ஏனெனில், "அவர்கள் கர்த்தருக்கு ஆராதனை செய்து, உபவாசித்துக் கொண்டிருக்கிறபோது: பர்னபாவையும் சவுலையும் நான் அழைத்த ஊழியத்துக்காக அவர்களைப் பிரித்து விடுங்கள் என்று பரிசுத்த ஆவியானவர் திருவுளம் பற்றினார்."[1] உபத்திரவத்தின் புறம்பான சக்தியினால் எருசலேம் ஒரு ஊழிய மையமாயிற்று; பரிசுத்த ஆவியானவரின் உள்ளான விசையினால் அந்தியோகியா ஒரு ஊழிய மையமாயிற்று.

2. சீப்புரு(தீ)வுக்கு வருதல்.—பர்னபாவின் சொந்த நாடும், பிரதான/முதன்மையான பகுதியிலிருந்து பார்வைக்கு எட்டிய நாடுமாக இருந்த சீப்புரு(தீ)வே தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் (ஊழியக்) களமாயிருந்தது. எருசலேமில் இருந்து திரும்பியிருந்த யோவான் மாற்கு (அப். 12:25) அவ்வூழியர்களுடன் சென்றார். அந்தத் தீவின் கிழக்கு முனையில் இருந்ததும், கிரேக்கர்களின் பழைய தலைநகருமான சாலமியில் பிரசங்கித்த பின்னர் அவர்கள், தீவின் மேற்கு முனையில் இருந்ததும்,

ரோமர்களின் தலைநகருமான பாப்போவுக்குக் கடந்து சென்றனர். இங்கு ரோம ஆளுநரான செர்கியு பவுல் ஒரு விசுவாசியானார். (ஆனால்) அவரது மனமாற்றமானது பர்இயேசு என்ற பெயர் கொண்ட யூத மந்திரவாதி ஒருவரால் தடை செய்யப்பட்டது. இந்த பிரச்சனையின் சூழ்நிலையில் சவுல் முன்னணி வகிக்கிறார். தெய்வீக ஏவுதலின் உணர்வும், அப்போஸ்தலிக்க வல்லமையும் கொண்டுள்ளதை அறிந்த அவர் அந்த வஞ்சகனிடம் திரும்பி இருளாக்கும் கடிந்து கொள்ளுதலுடன், அவரின் மாய்மாலத்தின்மீது தெய்வீக நியாயத்தீர்ப்பாக உடனடியான பார்வையற்றுப் போகுந்தன்மையை அறிவித்தார். இந்த வேளையிலிருந்து சவுல், பவுல் என்று அழைக்கப்படுகின்றார், மற்றும் ஒப்புக்கொள்ளப்பட்ட நடத்துனராகின்றார்.

3. ஆசியா மைனர் பகுதியில் பயணம்.—ஊழியர்கள் அடுத்ததாக ஆசியா மைனர் பகுதியின் திசை நோக்கித் தங்கள் முகங்களைத் திருப்பினார்கள். பவுல் தனது சொந்த மாகாணமாகிய சிலிசியாவில் பல ஆண்டுகளாகத் தங்கியிருந்திருந்தார். இப்பொழுது அவர்கள் சென்ற மாகாணங்கள் சிலிசியாவுக்கு வடக்கிலும் மேற்கிலும் அமைந்திருந்தன. பெர்கே துறைமுகத்தில் யோவான் மாற்கு, ஊழியத்தைக் கைவிட்டு எருசலேமுக்குத் திரும்பிச் சென்று விட்டார். பவுலும் பர்னபாவும் தொடர்ந்து பயணித்து, பண்பட்டிராத மலை மாவட்டங்களினூடே “ஆறுகளால் வந்த மோசங்களிலும், கள்ளரால் வந்த மோசங்களிலும், அவர்களின் சுய ஜனங்களால் வந்த மோசங்களிலும், அந்நிய ஜனங்களால் வந்த மோசங்களிலும்” (2 கொரி. 11:26) சுற்றி வளைக்கப்பட்டாலும் தொடர்ந்து ஊழியத்தில் ஈடுபட்டனர். அவர்கள், பிசீதியாவின் அந்தியோகியா, இக்கோனியம், லீஸ்திரா மற்றும் தெர்பை ஆகிய இடங்களை வரிசையாகச் சென்று அடைந்து மீண்டும் அதே வழியில் திரும்பி வந்தனர். அந்தியோகியாவில் பவுல் தனது முதல் விரிவான பிரசங்கத்தை அங்கிருந்த ஜெப ஆலயத்தில் பிரசங்கித்தார். யூதர் கூட்டத்தினால் புறக்கணிக்கப்பட்ட நிலையில், அவர் புறஜாதியாரிடத்திற்குத் திரும்பினார். “முன்பு யூதருக்கும் பின்பு கிரேக்கருக்கும்” (ரோமர் 1:16),—இப்படிப்பட்டதே எல்லா இடத்திலும் ஒழுங்கு முறையாய் இருந்தது. எல்லா இடத்திலும் அவர்களின் ஊழியத்தில் மனமாற்றங்களும் பாடுகளும் நிறைந்திருந்தன. லீஸ்திராவில் பவுல் ஒரு சப்பாணியைக் குணமாக்கியிருந்தார், அங்கு அவர்கள், மூடநம்பிக்கை கொண்ட புறதெய்வ வழிபாட்டாளர்களால் முதலில் தேவர்கள் என்று ஆராதிக்கப்பட்டு, பிறகு இக்கோனியத்தில் இருந்து வந்திருந்த யூதர்களின் தூண்டுதலினால் பவுல் கல்லெறியப்பட்டு மரிக்கும்படி விட்டு விடப்பட்டார். புதிய உலகம் ஒன்றைக் கண்டறிந்த கண்டு பிடிப்பாளர்கள் போல் சந்தோஷத்தினால் ஏற்பட்ட மனக்கிளர்ச்சியுடன் அந்தியோகியாவுக்குத் திரும்பிய அவர்கள் தங்களை அப்பயணத்திற்கு அனுப்பியிருந்த சபைக்கு அறிக்கை சமர்ப்பித்தார்கள்.

II. இரண்டாம் பயணம்.

(அப். 16-18:22.)

1. இடைவேளை; எருசலேமில் ஆலோசனை.—புதிய (சூழ்)நிலைகள் புதிய கேள்விகள் எழுவதற்குக் காரணமாகின்றன. சபையானது தன் யூதத்துவ நிலைக்குப் புறம்பே வெகுவாக வளர்ந்து கொண்டுள்ளது. ஆனால் யூதத்துவக் கிறிஸ்தவர்களோ சுவிசேஷத்தின் மேன்மைமிக்க உலகளாவிய தன்மைக்கு மிக மெதுவாகவே உயர்ந்து கொண்டிருந்தனர். புறஜாதியார் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிவதினால் சபைக்குள் பிரவேசித்தல் பற்றிய கேள்வியானது கொர்நேலியுவின் (வீட்டாரிடத்தில்) நடந்த நிகழ்ச்சியினால் தீர்த்து வைக்கப்பட்டது. ஆனால், அவர்கள் (புறஜாதியார்) விருத்தசேதனம் செய்விக்கப்பட்டு யூதராக வேண்டாமா? கிறிஸ்தவம் என்பது யூதத்து வத்தின் ஒரு புதிய மற்றும் திருத்திய பதிப்பாக இல்லையா? எனவே எருசலே மிலிருந்து அந்தியோகியாவுக்கு வந்த சிலர் இவ்விதமாய் வாக்குவாதம் செய்தனர். அங்கு எழுந்த கேள்வி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது; இது அந்தியோகியாவில் இருந்த சபையின் சமாதானத்திற்குப் பயமுறுத்துதலாயிருந்ததுடன், ஊழியர்களின் எதிர்காலப் பிரயாசங்களிலும் ஆழ்ந்த வலுவான செயல்பாடுகள் கொண்டுள்ளதாய் இருந்தது. ஆகையால், பவுலும் பர்னபாவும் இந்தக் கேள்வியுடன் எருசலேமுக்கு அனுப்பப் பட்டார்கள். அங்கு யாக்கோபு தலைமையேற்று நடத்திய ஒரு ஆலோசனைக் கூட்டத்தில், பேதுரு, பவுல் மற்றும் பர்னபா ஆகியோரும் பங்கேற்றிருக்க அந்தக் கேள்வியானது சுயாதீனத்திற்கு ஆதரவாக முடிவு செய்யப்பட்டது. அது வேறு விதமாக முடிவு செய்யப்பட்டிருந்தால், கிறிஸ்தவமானது தனது தொட்டிலிலேயே அழிந்திருக்கும்.

2. பவுலுக்கும் பர்னபாவுக்கும் இடையே ஏற்பட்ட வாக்கு வாதம்.—இந்த ஆலோசனைக் கூட்டம் முடிந்த சில நாட்களுக்குப் பின்பு பவுல் தாங்கள் நிலைநாட்டியிருந்த சபைகளை மீண்டும் சென்று பார்வையிடத் திட்டமிட்டு பர்னபாவிடம் சொன்னார். பர்னபா தனது உறவினரான மாற்குவை (கொலோ. 4:10) மீண்டும் அழைத்துச் செல்ல விரும்பினார்; ஆனால் அவர் (மாற்கு) முந்தியப் பயணத்தில் இடையிலேயே தங்களைக் கை விட்டு வந்து விட்டபடியால் பவுல் அவர்(மாற்கு)மீது நம்பிக்கை கொள்ளாதிருந்தார். அப்பொழுது ஏற்பட்ட விவாதமானது பவுலும் பர்னபாவும் பிரிந்து செல்லுமளவுக்கு மிகவும் கூர்மையான தாயிருந்தது. (ஆயினும்) பிற்காலத்தில் மாற்கு மீண்டும் பவுலின் நம்பிக்கைக் குரியவரானார் என்பதை அறிவது மனதிற்கு மகிழ்ச்சியாய் உள்ளது (2 தீமோ. 4:11).

3. ஆசியா மைனர் பகுதிக்கு இரண்டாம் முறை செல்லுதல்.—பவுலும் பர்னபாவும் (எருசலேமில் நடந்த) ஆலோசனைக் கூட்டத்திற்குப் பின் திரும்பி வருகையில் சீலாவும் அவர்களுடன் சேர்ந்து வந்தார். அவரைப் பவுல் தமது பயணத் துணைவராகத் தேர்ந்து கொண்டு, சீரியா சிலிசியா நாடுகளினூடாகக் கடந்து சென்று சபைகளுக்குச் செல்லும்படி தாம் முன் மொழிந்திருந்த பயணங்களை நிறைவேற்றினார். அவர் லீஸ்திராவில்

தீமோத்தேயு என்னும் பெயர் கொண்ட இளம் சீஷர் ஒருவரைக் கண்டார். அவரது (தீமோத்தேயுவின்) தந்தை ஒரு கிரேக்கராயிருந்தார்; ஆனால் அவர், தனது தாயான ஐனிக்கேயாள், தனது பாட்டியான லோவிசாள் ஆகியோ ரால் தெய்வ பக்தியுள்ளவராக வளர்க்கப்பட்டிருந்தார் (2 தீமோ. 1:5). அவர் பவுலின் முதல் பயணத்தில் அவரால் (பவுலினால்) மனம் மாற்றப்பட்டவர் என்பதில் ஐயமில்லை; மற்றும் பவுல் லீஸ்திராவில் கல்லெறியப்பட்டதை அவர் பார்த்திருப்பார் என்பதிலும் ஐயமில்லை. பவுல் சுயத்தை மறுக்கும் பிரயாசத்தினாலான தமது சொந்த வாழ்வுடன் இளம் வாலிபர்களைப் பலமாய் இணைத்துக் கொண்டார் என்பது அவரது குண நலனில் இருந்த மிகவும் அழகுமிக்க பண்புகளில் ஒன்றாக இருந்தது; மற்றும் இந்த வேளையிலிருந்து தீமோத்தேயு பவுலின் மிக நெருங்கிய உடன் ஊழியரானார்.

ஆனால் பவுல், ஏற்கனவே நிலைநாட்டியிருந்த சபைகளை மீண்டும் பார்வையிடுதல் என்பதை விடப் பெரிய திட்டங்கள் கொண்டிருந்தார்; எனவே அவர் பிரிகியா மற்றும் கலாத்தியா ஆகிய பகுதிகளில் புதிய ஊழியங்களில் வெற்றியடையும்படி செயல்படுவதை வலிந்து நிறைவேற்றினார். தேவனோ, பவுல் தமக்கென்று கொண்டிருந்ததைக் காட்டிலும் மிகப் பெரிய திட்டங்களை அவருக்கென்று வைத்திருந்தார்; பவுலின் வலது மற்றும் இடது புறத்தில் வேலியிட்டுப் பாதுகாத்த தேவன் அவரை துரோவாவுக்கு வழிநடத்தினார். அங்கு அவர் ஒரு தரிசனம் கண்டார், அதில் மக்கெதோனியா தேசத்து மனிதர் ஒருவர் அவருக்குத் தோன்றி, "நீர் மக்கெதோனியாவுக்கு வந்து எங்களுக்கு உதவி செய்ய வேண்டும்"[2] என்று கேட்டுக் கொண்டார். துரோவாவில் பவுல் நின்ற வேளையில் அது ஒரு பிரசவ வேளையைப் போன்றிருந்தது. அவருக்குப் பின்னால் ஆசியா தன் வலிமை வாய்ந்த கடந்த காலத்துடன் கிடந்தது; அவருக்கு முன்னால் ஐரோப்பா இருந்தது; அதன் தென்முனையில் நிகழ்காலத்தின் சகல வல்லமை நிறைந்த தன்மையின் உருவமாக ரோமாபுரி இருந்தது; அப்பகுதிகளில் வடக்கிலும் மேற்கிலும் திரளாய் இருந்த பண்படாத மனிதர்கள் தங்கள் இடைகளில் இன்னும் வலிமை வாய்ந்த எதிர்காலம் கொண்டவர்களாய் இருந்தனர். ''உங்கள் துப்பாக்கிகளை ஐரோப்பாவை நோக்கித் திருப்புங்கள். எதிர்காலத்தை வெற்றி கொள்ளுங்கள்.''

4. ஐரோப்பாவில் சுவிசேஷம் நாட்டப்பட்டது; பிலிப்பியில் தொடக்கம்.—துரோவாவில் லூக்கா பவுலுடன் இணைந்து கொண்டார். இது "நாங்கள்" என்று கூறப்படும் பகுதிகளினால் காண்பிக்கப்பட்டுள்ளது. நெயாப்போலிக்குக் கடற்பயணம் சென்ற ஊழியர்கள் அம்மாவட்டத்தின் முதன்மை நகரான பிலிப்பி நகருக்குச் சென்றனர். பிலிப்பி ஒரு வர்த்தக நகரல்ல ஆனால் இராணுவ நகராயிருந்தது, எனவே அங்கு ஒரு சில யூதர்கள் மட்டும் இருந்தனர், அங்கு ஜெப ஆலயம் இல்லை. ஆனால் பெண்களால் ஆன சனிக்கிழமை ஜெபக் கூட்டம் ஆற்றங்கரையில் நடைபெற்றது, அதில் பவுல் கலந்து கொண்டார். ஐரோப்பாவில் கிறிஸ்தவமானது தனது மறுபிறப்பளிக்கும் ஊழியத்தை ஆற்றங்கரையில் நடந்த ஜெபக் கூட்டத்தில் தொடங்கியது, வர்த்தகம் செய்யும் லீதியாள் என்ற பெண் அதன்

முதற்கனியானாள். விரைவிலேயே ஊழியர்கள் (தங்களுக்குப் பின்னாக வந்து) தெருவில் உரத்த சத்தமிட்டுக் கொண்டிருந்த அசுத்த ஆவி கொண்ட அடிமைப் பெண்ணொருத்தியினால் வரவேற்கத் தகாத விளம்பரம் ஒன்றைப் பெற்றனர். அந்தப் பெண்ணிடத்திலிருந்து அசுத்த ஆவியைத் துரத்தியதாலும், அதன் மூலம் அவளது எஜமானரின் ஆதாயத்தை அழித்துப் போட்டதாலும் பவுலும் சீலாவும் (சவுக்கினால்) அடிக்கப்பட்டு சட்டத்திற்குப் புறம்பான பழக்க வழக்கங்களை அறிமுகப்படுத்தியதாகக் குற்றம் சாட்டப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டார்கள். (அங்கு) இரவில் அவர்களின் பாடல்களும், சிறைக் கதவுகளை விரியத் திறக்கச் செய்த பூமியதிர்ச்சியும், புற தெய்வ வழிபாட்டாளரான சிறைக் காவலரை அவர்கள் முன்பாக மண்டியிடச் செய்தது; மற்றும் பொழுது புலரு முன்பே அவரும் (சிறைக் காவலரும்) அவருடைய வீட்டார் யாவரும் ஞானஸ் நானம் பெற்ற விசுவாசிகளாகி தேவனுக்குள் மன மகிழ்வடைந்தார்கள்.

5. பிலிப்பியிலிருந்து அத்தேனே பட்டணத்திற்கு.—புதிதாய்ப் பிறந்திருந்த (பிராந்திய) சபையைக் கவனித்துக் கொள்ளும்படி லூக்காவை யும் ஒருவேளை தீமோத்தேயுவையும் அங்கு விட்டு விட்டு, அவர்கள் மேற்கு நோக்கி, கருங்கடலையும் ஆதிரியாக் கடலையும் இணைத்த மாபெரும் இராணுவ சாலையான எக்னேஷியா வழியாகப் பயணமானார்கள். அம்பிபோலி மற்றும் அப்போலோனியா பட்டணங்களை கடந்து சென்று, அவர்கள் மெக்கெதோனியாவின் பெருநகரான தெசலோனிக்கே என்ற நகருக்கு வந்தனர். இங்கு பவுல், "தனது வழக்கத்தின்படியே"[3] ஜெப ஆலயத்தில் பல ஓய்வு நாட்களில் கிறிஸ்துவைப் பற்றிப் பிரசங்கித்தார். ஒரு சில யூதர்களும், திரளான கிரேக்கர்களும் விசுவாசித்தனர்; ஆனால் விசுவாசியாத யூதர்கள் அவர்கள் வழக்கத்தின்படியே துன்புறுத்துதலின் புயலொன்றை எழுப்பினார்கள், அதற்கு முன்னதாகவே ஊழியர்கள் பெரோயாவுக்குத் தப்பியோடி விட்டனர். பெரோயா பட்டணத்திலிருந்த யூதர்கள் தினந்தோறும் வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்த்தபடியினால் தெசலோனிக்கேயில் இருந்தவர்களைக் காட்டிலும் நற்குணசாலிகளாய் இருந்தனர். இதன் விளைவாக யூதர்கள் மற்றும் கிரேக்கர்களில் ஏராளமான வர்கள் மனமாற்றம் அடைந்தார்கள். தொடர்ந்து வலியுறுத்தும் தகுதி யுடைய மிக மேன்மையான காரணத்திற்காக தெசலோனிக்கேயின் யூதர்கள் பவுலைத் தொடர்ந்து பின்பற்றி பெரோயாவுக்கும் வந்தனர். பவுல் கடல் வழியே அத்தேனே நகருக்குப் பயணமானார்.

6. அத்தேனேயில் பவுல்.—அத்தேனே நகரானது தலை சிறந்த வரலாற்றில் செயல்பட்டது போல் தெளிவாய்க் காணக் கூடிய வகையில் கிறிஸ்தவத்தில் செயல்படட்டதில்லை. இருப்பினும், பழங்காலத்திய மகிமைகளைக் கொண்டிருந்த அத்தேனே நகரம் சிலுவையில் மிகுந்த ஆவிக்குரிய மகிமைகளை முதன் முதலாக எதிர்கொண்ட வேளையானது மிகவும் ஆழமான ஆர்வத்திற்குரியதாயிருந்தது. பவுல் அத்தேனேயில் தம்முடன் வந்து இணைந்து கொள்ளும்படி சீலாவுக்கும் தீமோத்தேயுவுக் கும் தகவல் அனுப்பியிருந்தார். அதே வேளையில் அவரைச் சுற்றிலுமிருந்த ஆடம்பரமான விக்கிரகாராதனையானது அவரது ஆவியை வைராக்கியம்

அடையச் செய்தது, மற்றும் அவர் யூதருடைய ஜெப ஆலயத்திலும் அகோரா அல்லது நகரின் பொது கூட்டம் நடைபெறும் இடத்திலும் புதிய விசுவாசத்தை முன் வைத்தார். சில தத்துவ ஞானிகளின் ஆர்வம் எழுப்பப் பட்டது, மற்றும் அவர்கள் பவுலை அரியோபேகஸ் (மார்ஸ் மேடை) என்னும் இடத்திற்கு அழைத்துச் சென்றனர், அங்குதான் அத்தேனே நகரின் மிகுந்த மரியாதைக்குரிய நீதிமன்றம் கூடி அமர்ந்தது. வரலாற்றுத் தொடர்புகளில் அவ்வளவு வளம்மிகுந்ததான அவ்விடத்தில் பவுல் நிபுணத்துவம் வாய்ந்த தமது உரைகளில் ஒன்றை எடுத்துரைத்தார். இது அவரிடமிருந்து நமக்கு வந்துள்ள இரண்டாவது உரையாக உள்ளது. தங்கள் நாட்டு வரலாறு மற்றும் மேன்மைமிக்க தீர்க்கதரிசனங்கள் ஆகியவை பற்றி கர்வம் கொண்டிருந்த யூதர்களுக்கு அந்தியோகியாவின் ஜெப ஆலயத்தில் பிரசங்கிக்கப்பட்ட முதல் செய்திக்கும் (அப். 13:16-41), எல்லாக் காலத்திலும் மிகவும் அற்புதமான கலை நுணுக்கத்தின் முன்னிலையில் நயப்பட்டிருந்த கிரேக்கர்களுக்கு அத்தேனேயின் மார்ஸ் மேடையில் பிரசங்கிக்கப்பட்ட (இந்த) இரண்டாவது பிரசங்கத்திற்கும் இடையில் வலிவான நேர்மாறுகள் உள்ளன. ஆனால், விவாதமும் அணுகுமுறையின் வரிசையும் மாறுபட்டிருப் பினும், முடிவு என்பது ஒரே மாதிரியானதாகவே இருந்தது—கிறிஸ்துவும் அவர் சிலுவையில் அறையப்படுதலும், கிறிஸ்துவும் உயிர்த்தெழுதலைப் பிரசங்கிப்பதற்கும். ஆனால் யூதர்கள் தங்கள் பாரம்பரியத்துடன் பின்னிப் பிணைந்திருந்தது போலவே கலாச்சாரப் படுத்தப்பட்டிருந்த அத்தேனே நகரத்தார், தங்கள் தத்துவங்களுடன் பின்னிப்பிணைந்திருந்தனர். இருப்பினும் மார்ஸ் மேடையின் நியாயாதிபதிகளில் ஒருவரான தியோனீசியு என்பவரும் தாமரி என்னும் பெயர் கொண்ட பெண்ணும் உள்ளிட்ட ஒரு சிலர் கிறிஸ்துவுக்கென்று ஆதாயப்படுத்தப்பட்டனர். தீமோத்தேயு அத்தேனேயில் பவுலுடன் சேர்ந்து கொண்டார் என்பது அவரால் (பவுலினால்) அவர் (தீமோத்தேயு) தெசலோனிக்கே நகருக்குத் திருப்பி அனுப்பப்பட்டார் என்பதும் அப். 17:15, 16 மற்றும் 1 தெச. 3:1 ஆகியவற்றின் ஒப்பீட்டிலிருந்து தெளிவாகின்றது. அத்தேனே நகர் என்பது பவுல் துன்புறுத்தப்படாத நகரங்களில் ஒன்றாக இருந்தது; ஆனால் அது கனியற்ற களமாகவும் இருந்தது, அவர் விரைவிலேயே கொரிந்து நகருக்குத் திரும்பினார்.

7. கொரிந்துவில் பவுல் நீண்ட நாட்கள் சஞ்சரித்தல்.—பவுலின் நாட்களில் கிரேக்க நாட்டில் அத்தேனே பட்டணம் (இன்றைய தமிழகத் தின்) மதுரையைப் போன்றும், கொரிந்து பட்டணம் (இன்றைய தமிழகத் தின்) சென்னையைப் போன்றும் இருந்தன. இந்த மாபெரும் வர்த்தகப் பெருநகரில் பவுல் பயத்துடனும் நடுக்கத்துடனும் பிரவேசித்தார் (1 கொரி. 2:3). அவர் அத்தேனேயில் ஒப்பீட்டளவிலான தமது தோல்வியினால் மதிப்பு குறைந்தவராக நினைத்துக் கொண்டார். அவர் பணம் இல்லாதவராகவும் தனியாளாகவும் ஆனார். அவர் தமது அன்றாட உணவைப் பெறுவதற்கு கூடாரம் செய்தல் என்ற தமது தொழிலில் கடமையாற்ற அடைக்கலம் புக வேண்டியதாயிற்று. ஆனால் பவுல் நண்பர்களைக் கண்டறிவதிலோ அல்லது நண்பர்களை ஏற்படுத்திக் கொள்வதிலோ ஒருக்காலும் காத்திருந்ததில்லை.

விரைவிலேயே அவர் தமது சக தொழிலாளிகளான ஆக்கில்லா மற்றும் பிரிஸ்கில்லாள் ஆகியோர் தம் மனதிற்கு இசைந்தவர்களாய் இருக்கக் கண்டார், அவர்கள் (ஒருவேளை) ஏற்கனவே சீஷர்களாயிராதிருப்பினும் விரைவிலேயே சீஷர்களாயினர். அவர்களுடன் வாரம் முழுவதும் வேலை செய்து விட்டு ஓய்வு நாட்களில் ஜெப ஆலயத்தில் அவர் பிரசங்கித்தார். பிலிப்பியிலிருந்து நன் கொடையுடன் சீலாவும் தீமோத்தேயுவும் வந்த பொழுது, அவரது கைகள் (வேலையிலிருந்து) விடுதலையாகின, அவர் ஒன்றரை வருட காலம் முழுவதிலும் ஊழியத்தின் மாபெரும் வல்லமைக்கு தம்மை முழுமையாக ஒப்புக்கொடுத்தார் (இ.வ. அப். 18:5, 9, 10; பிலி. 4:15). தீமோத்தேயுவின் வருகைக்குப் பின் வெகு விரைவிலேயே அவர் தெசலோனிக்கேயருக்கான தமது முதல் நிருபத்தை எழுதினார் (1 தெச. 3:6) சற்றுப் பிறகு இரண்டாம் நிருபத்தையும் எழுதினார். இவைகளே பவுலிடத்திருந்து நமக்கு வந்துள்ள தொடக்க நிருபங்களாகும்.

8. அந்தியோகியாவுக்குத் திரும்புதல்.—கொரிந்துவையும் கெங்கிரேயாவையும் இணைக்கும் நிலப்பகுதியைப் பவுல் ஆக்கில்லாவுடனும் பிரிஸ்கில்லாளுடனும் கடந்த பிறகு, எபேசுவுக்குக் கடல் மார்க்கமாய்ப் பயணமானார். இங்கு ஜெப ஆலயத்தில் அவர் பிரசங்கித்ததானது அவர் அங்கேயே தங்கியிருப்பதை விரும்புமளவுக்கு அவரைக் கேட்டவர்களின் இருதயங்களை அடிமைப்படுத்திற்று; ஆனால் திரும்பி வருவதான ஒரு வாக்குறுதியை அவர்களுக்கு அளித்து விட்டு, அவர் செசரியாவுக்கும் பின் அங்கிருந்து அந்தியோகியாவுக்கும் அவசரமாய்ப் புறப்பட்டார். இவ்வாறாகப் பவுலின் பரந்து விரிந்த இரண்டாம் பயணம் முடிகின்றது. ஆர்வமானது ஐரோப்பா நோக்கி மாறுகின்றது, மற்றும் கடைசியில் அது ரோமாபுரியில் மையம் கொள்ளும்.

III. மூன்றாம் பயணம்.
(அப். 18:23-21:26.)

1. எபேசுவில் பவுலின் மூன்று ஆண்டுகள்.—அந்தியோகியாவில் சில காலம் செலவிடப்பட்ட பின்பு, அம்மாபெரும் ஊழிய சபைக்கு கடைசிப் பிரியாவிடை கூறினார். தாக்குதலுக்கான அவரது அடுத்த முனை எபேசுவாக இருந்தது. இது மூன்றாம் பயணத்தில் ஆர்வத்திற்குரிய மையமாய் இருந்தது. அது நன்கு தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தது; சீரியாவுக்கு அந்தியோகியா எப்படியோ, கிரேக்கத்திற்கு கொரிந்து எப்படியோ, இத்தாலிக்கும் மேற்குக்கும் ரோமாபுரி எப்படியோ அப்படியே மேற்கு ஆசியா மைனரின் சுறுசுறுப்பான வாழ்வுக்கு எபேசு நகரம் அமைந்திருந்தது. பவுல் எபேசுவுக்குச் செல்லும் வழியில் கலாத்தியா பிரிகியா ஆகிய தம் முந்திய மார்க்கத்தினூடாக ஒரு துரிதப்பயணம் மேற்கொண்டார். கொரிந்துவிலிருந்து அவர் அந்தியோகியாவுக்குத் திரும்பி வந்த பயணத்தில் அவர் எபேசுவில் பொதுமக்களின் கருத்தை உணரப் போதுமான அளவுக்கு நீண்ட காலம் தங்கியிருந்து, ஆக்கில்லாவையும் பிரிஸ்கில்லாவையும் அங்கு விட்டுச் சென்றிருந்தார் என்பது நினைவுகூரப்படும். அவர் அங்கிராத

நிலையில் தயாரிப்புப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. அப்பொல்லோ என்னும் பெயருடைய சாதுரியவானான யூதர் ஒருவர் அலெக்சந்திரியாவில் இருந்து எபேசுவுக்கு வந்து சேர்ந்திருந்தார், அவர் யோவானின் ஞானஸ்நானத்தை மாபெரும் வல்லமையுடன் பிரசங்கித்துக் கொண்டிருந்தார். ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் அவருக்கு சுவிசேஷத்தை இன்னும் பூரணமாய் அறிவுறுத்தினர். பிறகு அப்பொல்லோ கொரிந்துவுக்குக் கடந்து சென்று அங்கு பவுல் மிக வெற்றிகரமாய்த் தொடங்கியிருந்த ஊழியத்தைத் தொடர்ந்து செய்தார் (இ.வ. அப். 18:27; 1 கொரி. 3:4-7). பவுல் எபேசுவுக்கு வந்து மூன்று மாதங்கள் ஆன பின்பு ஜெப ஆலயத்தில் பிரசங்கித்தார். கடைசியில் அவர் யூதர்களை விட்டுப் பிரிந்து போகும்படிக்குக் கட்டாயப்படுத்தப்பட்டு, கிறிஸ்தவர்களை ஒரு தனிப்பட்ட சமுதாயமாக அமைக்கும்படி வற்புறுத்தப்பட்டார். இரு ஆண்டுகள் காலத்திற்கு அவர், திறன்னு என்பவரின் பள்ளியில் அன்றாடம் போதித்து, ஆசியாவின் எல்லா மாகாணங்களிலும் இருந்த திரளான யூதர் களையும் கிரேக்கர்களையும் போதனையுடன் அணுகிக் கொண்டிருந்தார். தியானாள் என்ற பெண் தெய்வத்தின் கோயிலில் வெள்ளிச் சிறு கோயில் களில் விற்பனை வீழ்ச்சியடையுமளவுக்குப் பவுலின் பிரசங்கம் அவ்வளவு செயல் வலிவுள்ளதாயிருந்தது. வெள்ளிச் சிற்பாசாரிகளின் ஒரு கும்பலானது பவுலின் உயிரை அழிவுக்குட்படுத்தப் பார்த்தது. பவுல் எபேசுவில் சஞ்சரித்திருந்த இந்த நீண்ட காலத்தில் அவர் அநேகமாக கொரிந்துவுக்கும் சென்றிருக்கலாம் (2 கொரி. 12:14; 13:1). மேலும் அவர் கொரிந்தியருக்குத் தமது முதல் நிருபத்தையும் இங்கிருந்து (எபேசுவிலிருந்து) எழுதினார் (இ.வ. 1 கொரி. 16:5-9; அப். 19:20, 21; 20:1). அவர்களும் அவருக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தனர் (1 கொரி. 7:1), மற்றும் அவரும் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார் (1 கொரி. 5:9). இவ்விரண்டும் நமக்கு வந்து சேரவில்லை.

2. மக்கெதோனியா மற்றும் அகாயா பகுதியில் இரண்டாம் பயணம்.—ஏஜியன் கடலை இன்னும் ஒருமுறை கடந்து சென்ற பவுல் ஐரோப்பாவிற்கு இரண்டாம் முறை பயணம் செய்தார், இதைப் பற்றிய சில விவரங்கள் மட்டுமே நாம் கொண்டுள்ளோம். மக்கெதோனியாவினூடான இந்தப் பயணத்தின்போது ஏதோ ஒரு வேளையில் 2 கொரி. நிருபம் எழுதப்பட்டது என்பது, 2 கொரி. 1:8-10 மற்றும் 2:12, 13 ஆகியவற்றை அப். 20:2 உடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது தெளிவாகின்றது. கொரிந்துவைச் சென்று சேர்ந்த பவுல் அங்கு மூன்று மாதங்கள் தங்கியிருந்தார். அந்த வேளையில் அவர் ரோமருக்கு நிருபத்தை எழுதினார் (இ.வ. ரோமர் 15:25, 26; அப். 20:3, 4; 24:17), அநேகமாக இதை அவர் கெங்கிரேயாவைச் சேர்ந்த பெபேயாளின் மூலம் அனுப்பியிருப்பார் (ரோமர் 16:1). இந்த மூன்றாம் பயணத்தின்போது ஏதோ ஒரு வேளையில் அவர் கொரிந்து அல்லது முன்னதாக எபேசுவில் இருந்தபோது கலாத்தியருக்கு நிருபத்தையும் எழுதினார்.

3. தர்ம சகாயம் சேகரித்தல்.—யூதருக்கும் புறஜாதியாருக்கும் மத்தியி லிருந்த பிரிவினையாகிய நடுச் சுவர் இடிந்து வீழ்வதைக் காணும்படிக்குப் பவுல் ஏக்கம் கொண்டிருந்தார். இது அவரது இருதயத்தின் அருகில்

கிடத்தப்பட்டிருந்த ஒரு முடிவாயிருந்தது. இதற்காக அவர் தமது வாழ்வையே அர்ப்பணித்தார். எருசலேமில் இருந்த ஏழை யூத சகோதரர் களுக்காக அவர் இப்பயணத்தில் புறஜாதியார்களாயிருந்த சகோதரர் களிடம் பணம் சேகரித்தது என்பது அவர் இதை (யூதர்-புறஜாதி என்ற பிரிவினையை) ஒழிக்கக் கையாண்ட ஒரு வழி முறையாய் இருந்தது. பல குறுகிய வசனப் பகுதிகள் இருக்க, 2 கொரிந்தியர் அதிகாரங்கள் எட்டும் ஒன்பதும் இதைப் பற்றியே எடுத்துரைக்கின்றன. இது கலாத்தியா, மக்கெதோனியா மற்றும் அகாயா நாடுகளில் சேகரிக்கப்பட்டது (இ.வ. 1 கொரி. 16:1-3; கலா. 2:10; ரோமர் 15:25, 26; அப். 24:17); இது வாரத்தின் முதல் நாளில் நடைபெற்றது (1 கொரி. 16:1); மற்றும் நேரடியாகவோ அல்லது நிருபத்தின் வாயிலாகவோ அவருடைய வேண்டுகோள்களுக்குக் கூடுதலாக அவர் அந்த நிதியைச் சேகரித்து, பெற்றுத் தருவதற்குத் தீத்துவையும் மற்றவர்களையும் பயன்படுத்தினார் (2 கொரி. 8:6, 18, 23; 1 கொரி. 16:3).

4. திரும்புகைக் கடற் பயணம்.—பவுல் கொரிந்துவிலிருந்து நேரடியாக சீரியாவுக்குக் கடற் பயணம் செல்லத் தீர்மானித்தார், ஆனால் யூதர்களின் விளக்கியுரைக்கப்படாத சூழ்ச்சியான திட்டம் ஒன்று அவர் மக்கெ தோனியா வழியாகச் சுற்றிச் செல்லும்படி அவரை வழிநடத்திற்று. பழைய மற்றும் புதிய நண்பர்களின் நற்தோழமையொன்று மக்கெதோனியாவில் அவரைச் சேர்ந்து கொண்டது (அப். 20:4-6) அவர்களில் தீமோத்தேயுவும் லூக்காவும் இருந்தனர். இதில் பிந்தியவர் (லூக்கா) அநேகமாக பிலிப்பிக்கு சென்ற முதல் பயணத்திலிருந்து அங்கேயே தங்கியிருந்திருக்கலாம் (அப். 16:10, 13, 40; 20:6 ஆகியவற்றில் “அவர்கள்,” “நாங்கள்” என்ற வார்த்தை களின் பயன்பாட்டை ஒப்பிட்டுக் காணவும்). அக்குழுவினர் துரோவாவில் ஒரு வாரம் தங்கியிருந்து வாரத்தின் முதல் நாளில் அப்பம் பிட்குதலுக்கு வந்த சீஷர்களுடன் கூடி(ஆராதித்த)னர் (அப். 20:7). இவ்வசனப் பகுதியானது (1) சீஷர்கள் (பந்தியை) கடைப்பிடித்த நாளை; (2) அதைக் கடைப்பிடித்த விதத்தைக் காண்பிக்கும் வகையில் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. இங்கு பவுல் பிரசங்கித்துக் கொண்டிருக்கையில் சன்னலில் இருந்து தவறி விழுந்து இறந்த ஐத்திகுவை உயிரோடெழுப் பினார். பெந்தெகொஸ்தே நாளுக்கு முன்பாக எருசலேம் சென்று சேர வேண்டுமென்று துரிதப்பட்ட பவுல் எபேசுவில் நிற்கவில்லை, ஆனால் மிலேத்துவில் இருந்து கொண்டு எபேசு சபையின் மூப்பர்களை வரவழைத்து அங்கு தமது எல்லா உரைகளிலும் மிகவும் அழகு வாய்ந்த உரையொன்றை அவர்களுக்கு ஆற்றினார். இது அவர்கள் தொட்ட இடங்கள் எதுவாயிருப் பினும் அங்கு அவர்கள் சீஷர்களைக் கண்டறிந்த வேளையாக, சுவிசேஷம் துரிதமாய்ப் பரவும் வேளையாக இருந்தது: துரோவா, மெலித்தா, தீரு, பித்தொலமாய், இங்கு கடல் பயணம் முடிந்து போனது, மற்றும் செசரியா. இங்கு நாம் நமது பழைய நண்பரான பிலிப்புவைச் சந்திக்கின்றோம் (இ.வ. அப். 8:40), இவர் ஏவுதல் பெற்ற போதகர்களாய்/தீர்க்கதரிசினிகளாய் இருந்த நான்கு மகள்களைப் பெற்றிருந்தார். தீருவிலும் செசரியாவிலும் பவுல் அவருக்கு எருசலேமில் காத்திருந்த அபாயங்கள் பற்றி எச்சரிக்கப்

பட்டார்; ஆனால் அவைகளில் ஏதொன்றும் அவரை கடந்த நான்காண்டு களாக புறஜாதியாரிடம் சேகரிக்கப்பட்டிருந்த நிதியை/சமாதான காணிக்கையை யூதருக்களிக்க எருசலேம் செல்லுவதைத் தடைப் படுத்தவில்லை.

5. எருசலேமில் பவுலுக்கு வரவேற்பு.—இப்பொழுது பவுல் மனமாற்றம் அடைந்து இருபது (score) ஆண்டுகள் ஆகியுள்ளன. அவர் பன்னிரு ஆண்டுகளாக, மாபெரும் புறஜாதியார் மையங்களில் சபையை நிலை நாட்டுதலில் மும்முரமாய் ஈடுபட்டிருந்தார். இரண்டு அல்லது மூன்று முறை அவர் எருசலேமுக்கு அவசரப் பயணமாய் வந்திருந்தார். பன்னிரு ஆண்டுகள் கழிந்த பிறகு தீத்து[4] எருசலேமின் மதில்களை இடித்து வீழ்த்தவிருந்தார். மீண்டும் ஒருமுறை பவுல் வருகின்றார்; இவ்வேளையில் ஒரு இரட்டைக் காணிக்கையுடன்-புறஜாதி கிறிஸ்தவர்கள் அளித்திருந்த தர்மப் பணம் மற்றும் அந்தக் கொடையை ஏவியிருந்த கிருபையின் சுவிசேஷம். அவர்கள் அவரை எவ்விதம் ஏற்றுக்கொள்வார்கள்? யாக்கோபின் கீழ் எருசலேம் சபையின் நடத்துனர்கள் அவருக்கு மனம் குளிர்ந்த வரவேற்பை அளித்தனர். ஆனால் எங்கும் நடந்தது போல் அங்கும் அவர்மீது பழி தூற்றப்பட்டது. தப்பெண்ணங்களை அமைதிப்படுத்து வதற்காக அவர் யாக்கோபின் அறிவுரைக்கு இணங்குகின்றார், ஒரு பொருத்தனை தொடர்பான குறிப்பிட்ட சில சமயச் சடங்குகளைக் கடைப்பிடிக்கின்றார். இது சபையில் எவ்வாறு வெற்றியடைந்தது என்பதை லூக்கா நமக்குக் கூறுவதில்லை. இது அவிசுவாசிகளான யூதரிடத்தில் தோல்வியடைந்தது, மற்றும் பவுல், தாமே ஸ்தேவானைக் கொல்லத் தலைமையேற்று நடத்திய அந்தக் கூட்டத்தைப் போன்ற கும்பல் ஒன்றினால் விரைவில் தேவாலயத்தில் சுற்றி வளைக்கப்பட்டார்.

குறிப்புகள்

[1]அப். 13:2. [2]அப். 16:9. [3]அப். 17:2. [4]டைட்டஸ் ஃபிளேவியஸ் வெஸ்பாஸியானஸ் என்பவர் ரோமாபுரியில் ஆண்ட பேரரசர் ஆவார்.

26

பவுலின் நான்காண்டு சிறைவாசம், கி.பி. 58–63

அப். 21:27-28:31

I. எருசலேமில் அவரது சிறைவாசம். *(அப். 21:27-23:30.)*

அடுத்து வந்த இரு ஆண்டுகளில் எருசலேமிலும் செசரியாவிலும் நடைபெற்ற நிகழ்ச்சிகளை பவுலின் உரைகளின் வரிசையில் வகைப் படுத்துவது மிகச் சிறப்புடையதாயிருக்கும்.

1. கூட்டத்திற்கு அவரது உரை.—*கூட்டமானது பவுலின்மீது விரைவான தாக்குதலைத் தொடுத்திருக்கும்; ஆனால், அவரை அவர்கள் தேவாலயத் திலிருந்து வெளியே இழுத்துக் கொண்டு வந்த பொழுது, போர் வீரர்கள் பலருடன் வந்த சேனாதிபதி அவரை மீட்டார். கூட்டத்தாரிடம் பேசுவதற்கு அனுமதி பெற்றுக் கொண்ட பவுல் அவர்களின் சொந்த மொழியில் உரையாற்றினார். படிக்கட்டுகளின்மீது நின்றபடி உரைக்கப் பட்ட இந்தப் பேச்சானது பவுலின் மனமாற்றம் பற்றிய விவரமான இரண்டாவது எடுத்துரைப்பு ஆகும் (இ.வ. அப். 9:1-18). யூதர்களுடன் பேசுவதில் இயல்பாய் உள்ளது போன்று, அவர் தம் எபிரெய இரத்தம், கல்வி, கிறிஸ்தவர்களுக்கு எதிரான தமது முந்திய வைராக்கியம், அவர் சீஷராகவும் இயேசுவின் அப்போஸ்தலராகவும் ஆன வழிமுறை ஆகியவை பற்றி வலியுறுத்தினார். அவர் புறஜாதியாருக்கான தமது ஊழியத்தைப் பற்றிக் குறிப்பிடும் வரையில் அவர்கள் அவரைக் கவனித்துக் கேட்டார்கள், அப்பொழுது சேனாதிபதி பவுலை கோட்டைக்குள் கொண்டு செல்லும்படி செய்வித்தார். இங்கு பவுல் தமது ரோமக் குடியுரிமையை எடுத்துக் கூறி அடிபடுவதிலிருந்து தம்மைக் காத்துக் கொண்டார்.*

2. ஆலோசனை சங்கத்தின் முன்பாக அவரது உரை.—*அடுத்த நாளில் சேனாதிபதி, பவுலுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை அறிவதற்காக அவரை யூத ஆலோசனைச் சங்கத்தின் முன்பாகக் கொண்டு வந்தார். பவுல் ஆலோசனைச் சங்கத்திற்கு முன்பாக உரையாற்றுதலை மேற்கொண்டார்; ஆனால் அவரை (வாயில்) அடிக்கும்படி பிரதான ஆசாரியரிடமிருந்து வந்த கட்டளையானது அவர் நியாயமான முறையில் (அங்கு) கேட்கப்படலாம் என்பதற்குச் சிறிதளவே நம்பிக்கை உள்ளதென்று அவர் விரைவில் நம்பும் படி செய்தது. சதுசேயருக்கு மிகவும் வெறுப்புள்ளதாயிருந்த பரிசேயரின்*

போதனையான உயிர்த்தெழுதல் என்பது பற்றி (கூற) தமக்குள் திட்டமிட்ட அவர் பரிசேயர்கள் என்ற தமது சொந்த (மார்க்க) குழுவிலிருந்து ஓரளவுக்கு ஆதரவைப் பெற்றார். ஆலோசனைச் சங்கத்தார் உடனடியாக ஒரு உக்கிரமான வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். பவுல் அவர்களால் பீறுண்டு போவதிலிருந்து அவரைக் காப்பாற்றுவதற்காக, சேனாதிபதி அவரை மீண்டும் கோட்டைக்குள் அடைத்து வைத்தார். அடுத்த நாளில், அவரைக் கொல்வதற்கான துணிச்சல்மிக்க சூழ்ச்சியொன்று பவுலின் சகோதரியின் மகன் மூலமாக வெளிப்படுத்தப்பட்டது, உடனே சேனாதிபதி பவுலை இராணுவப் பாதுகாப்புடன் இரவு வேளையிலேயே செசரியாவுக்கு அனுப்பி விட்டார்.

II. செசரியாவில் அவரின் சிறைவாசம்.
(அப். 23:31-26:32.)

1. பேலிக்ஸ் முன்பாக அவரது தற்காப்பு வாதம்.—பவுலின் விரோதிகள் முன் செல்ல மறுத்தவர்களாய் இராதிருந்தார்கள். ஐந்து நாட்களுக்குப் பிறகு பிரதான ஆசாரியர், புகழ்மிக்க வழக்கறிஞராயிருந்த தெர்த்துல்லு என்பவரைத் தம்முடன் அழைத்துக் கொண்டு ஆளுநரிடமிருந்து பவுலுக்குத் தண்டனையை பெற்றுத் தர செசரியாவுக்குச் சென்றார். தெர்த்துல்லு பேலிக்ஸைப் போலியாய்ப் புகழுதல் மற்றும் பவுலைத் தவறாய்க் குறிப்பிடுதல் ஆகியவற்றுடன் வழக்குரைத்தலைத் தொடங்கினார். மிகவும் கௌரவத்துடன் பவுல் குற்றச்சாட்டுகளெல்லாவற்றையும் உதறித் தள்ளினார், ஆனால் உயிர்த்தெழுதலை விசுவாசிப்பதை ஒப்புக் கொண்டார். பவுலின் குற்றமின்மையைப் பேலிக்ஸ் நம்பினார் என்பது தெளிவு, ஆனால் யூதர்களின் மனதைப் புண்படுத்த விரும்பாத அவர் வழக்கை ஒத்தி வைத்தார்.

2. பேலிக்ஸ்ஸுக்கு முன்பாக அவரது பிரசங்கங்கள்.—பேலிக்ஸ், எமெஸாவின் அரசாயிருந்த அசிசுஸ் என்பவரின் மனைவியாய் இருந்த துருசில்லாள் என்பவளைத் திருமணம் செய்து கொண்டிருந்தார். இவள் முதலாம் ஏரோது அகிரிப்பாவின் மகளாக, உண்மையான ஏரோது வம்சத்தவளாக இருந்தாள். அவளது ஆர்வத்தை நிறைவு செய்வதற்காக, பேலிக்ஸ் பவுலைத் தங்கள் முன்பு பிரசங்கிக்கும்படி உத்தரவிட்டார். பவுல், தமது சொந்த வாழ்வு இடர்ப்பாட்டில் இருந்த அந்த வேளையிலும் கூட, பேலிக்ஸின் மனச் சான்றினை நோக்கித் தாக்குதல் விடுத்து குற்ற உணர்வுள்ள நிலையில் இருந்த அந்தத் தம்பதிகளுக்கு முன்பாக இச்சையடக்கத்தைப் பற்றியும், நீதியைப் பற்றியும், இனி வரப் போகின்ற நியாயத்தீர்ப்பு பற்றியும் விளக்கியுரைத்தார், அதனால் பேலிக்ஸ் தமது கைதியின் முன்பாகப் பயந்து நடுங்கினார். ஆனால் அவரை (மீண்டும்) சிறையில் அடைத்த பேலிக்ஸ் பலமுறை அவரை அழைத்துப் பேசினார்; ஆனால் அது சுவிசேஷத்தைக் கேட்பதற்காக அல்ல, பவுலின் விடுதலைக்காக அவரிடமிருந்து இலஞ்சம் பெறுவதற்காகவே அவ்வாறு அழைத்துப் பேசினார்.

3. பெஸ்துவுக்கு முன்பாக அவரது தற்காப்பு வாதம்.—இரு ஆண்டு

களுக்குப் பிறகு, பேலிக்ஸ் தமது தவறான நடவடிக்கைகள் குறித்து ரோமா புரிக்கு வந்து பதில் கொடுக்கும்படி உத்தரவைப் பெற்ற போது, பவுலை ஒரு கைதியாகவே விட்டுச் சென்றார். அவருக்குப் பின் பெஸ்து ஆளுநரா னார். பவுலின் வழக்கைப் புதுப்பித்த யூதர்கள், அவரை எருசலேமுக்குக் கொண்டு வரும்படி ஆரவாரம் இட்டார்கள். பவுல் அவர்களின் குற்றச் சாட்டுகளை மறுத்தார்; மற்றும் எருசலேமுக்குச் செல்லும்படி பெஸ்து முன் மொழிந்ததையும் மறுத்தார், அங்கு செல்வதென்பது சிங்கத்தின் வாயில் அகப்பட்டது போலாகும் என்பதை நன்கறிந்த பவுல் *"நான் இராயருக்கு அபயமிடுகிறேன்"*[1] என்று பதில் அளித்தார். பெஸ்து, "நீ இராயரிடத்திற்கே போகக் கடவாய்"[2] என்று பதில் அளித்தார்.

இரு ஆண்டுகளுக்கு முன்பாகக் கொரிந்துவில் இருக்கையில் பவுல், இன்னும் பரவலான சுவிசேஷ ஊழியத்திற்கான நோக்கம் ஒன்றை வடிவமைத்திருந்தார். ரோமாபுரிக்கும், பிறகு ஸ்பானியா நாட்டிற்கும் செல்வது அவரது திட்டமாய் இருந்தது (ரோமர் 15:23, 24). மீண்டும் ஒருமுறை மனிதர்களின் கொடும் செயலானது தேவனுடைய தீர்மானங் களுடன் ஒத்துழைக்கின்றது. பவுல் தாம் எதிர்பார்த்த வகையில் இல்லா விட்டாலும், ரோமாபுரிக்குச் செல்ல வேண்டியதாகின்றது.

4. அகிரிப்பாவுக்கு முன்பாக அவரது உரை.—பவுலின் வழக்கானது பெஸ்துவைக் கலக்கமடையச் செய்தது. அவரை (பவுலை) இராயரிடத்தில் அனுப்ப வேண்டியதாயிருந்தது, ஆனால் ஆளுநர் இன்னும் தம் கைதிக்கு எதிராகக் குறிப்பிட்டத்தக்க திட்டவட்டமான குற்றச்சாட்டு எதையும் கொண்டிராதிருந்தார். அவர் (பெஸ்து) நன்கு அறிந்திராத யூதப் பழக்க வழக்கங்கள் பற்றியே யூதர்களின் முறையீடு எடுத்துரைத்தது. இவ்வேளை யில் புதிய ஆளுநரைப் பாராட்டுவதற்காக இரண்டாம் ஏரோது அகிரிப்பா செசரியாவுக்கு வந்து சேர்ந்தார். அகிரிப்பா தமது சொந்த சகோதரியான பெர்னிக்கேயாளுடன் வாழ்ந்து கொண்டிருந்தார், அவள் தனது சகோதரி யான துருசில்லாளைப் போன்றே அழகும், மதிநுட்பமும் மற்றும் தீயொழுக் கமும் உடையவளாய் இருந்தாள். அகிரிப்பா ஒரு யூதர் என்ற வகையில் இந்த வழக்கின்மீது ஆர்வம் கொண்டு அதை வெளிப்படுத்தினார், மற்றும் அவர்கள் முன்பாக உரையாற்றும்படி பவுல் அழைக்கப்பட்டார். இதற்கு முன் அவர் (பவுல்) இது போன்றதொரு கூட்டத்திற்கு முன்பாக ஒருக்காலும் உரையாற்றியதில்லை: ஒரு ரோம ஆளுநர்; ஏரோதியர்களின் இரண்டு விரியன்களான அகிரிப்பாவும் அவரது சகோதரி-மனைவியுமான பெர்னிக்கேயாள்; இவர்களுடன் ரோமத் தலைமையகத்தின் முதன்மைப் படை மற்றும் குடிமை அதிகாரிகள் ஆகியோர் ஒன்றுகூடியிருந்தனர். பவுல் தாம் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தியது, தமது மனமாற்றத்துடன் தொடர்புடைய உண்மைகள் ஆகியவற்றை மீண்டும் எடுத்துரைக்கின்றார். அவர் அகிரிப்பா என்ற யூதர் மீது குறிவைக்கின்றார். சுவிசேஷம் தேவனிட மிருந்து வந்துள்ளது மற்றும் அது யூதர்களின் வேத வசனங்களை நிறை வேற்றுகின்றது என்று காண்பித்தலே அவரது மைய நோக்கமாக உள்ளது. புறதெய்வ வழிபாட்டாளரான பெஸ்து, பவுலின் உற்சாகமானது அவரது பைத்தியத் தன்மையால் உண்டானதென்று அறிவித்தலுடன் பவுலின்

உரையை இடைமறிக்கின்றார். நயப்பாங்குள்ள அகிரிப்பாவோ கிறிஸ்த வராகுதல் பற்றிய முரண்பாடான/எதிரிடைப் பொருள் கொண்ட குறிப் பொன்றைக் கூறுகின்றார். நற்பண்புடைய பவுல் எழில்மிக்கதொரு விருப்பத்துடன் (தமது உரையை) முடிக்கின்றார்; கிரீடங்களும், ஆடம்பர உடைகளும், ஆர்ப்பாட்டங்களும் அவருக்குச் சிறியவையாய் இருந்தன; அகிரிப்பாவாயிருப்பினும், அங்கிருந்த வேறு எவராயிருப்பினும் அனை வருமே அவரைப் போன்றே இருந்தனர்; பிறகு அவர் விலங்கிடப்பட்ட தம் கைகளைப் பார்த்து, "இந்தக் கட்டுகள் தவிர"[3] என்று கூடுதலாய்க் கூறுகின் றார். உலகப் பிரகாரமான இந்த உணர்வற்ற மனிதர்கள் சுவிசேஷத்தின் வல்லமையை எதிர்த்திருக்கக் கூடும், ஆனால் பவுலின் வீரார்ந்த குற்றமற்ற தன்மைக்கு எதிராக ஒன்றும் செய்ய முடியாமல் அவருக்கு மரியாதையளிக்க மட்டுமே அவர்களால் முடிந்தது. "இந்த மனுஷன் இராயனுக்கு அபயமிடா திருந்தானானால், இவனை விடுதலை பண்ணலாகும்"[4] என்பதே அவர்களின் தீர்மானமாய் இருந்தது.

III. ரோமாபுரிக்குக் கடற்பயணம்.
(அப். 27:1-28:15.)

1. கப்பலும் (பயணக்) குழுவும்.—கி.பி. 60ன் பின் கோடை காலத்தில் பவுல் செசரியாவிலிருந்து அதிரமித்தியம் செல்லும் கப்பல் ஒன்றில் புறப்பட்டார். சோதித்தறியப்பட்ட இரு நண்பர்கள் அவருடன் துணையாக வந்தனர். அவர் இரு ஆண்டுகளுக்கு முன்பு பிலிப்பியை விட்டுப் புறப்பட்ட திலிருந்து லூக்கா அவருடன் தங்கியிருந்தவராகவோ அல்லது அவருக்கு அண்மையில் இருந்தவராகவோ காணப்படுகின்றார். அவர் (லூக்கா) தம் சுவிசேஷத்தை அநேகமாகப் பவுல் செசரியாவில் சிறை வைக்கப்பட்டிருந்த போது எழுதியிருந்தார். பவுலுடன் அரிஸ்தர்க்குவும் ஒரு சக கைதியாக இருந்தார் (இ.வ. அப். 19:29; 20:4; 27:2; கொலோ. 4:10), இருப்பினும் அவர் மீது சுமத்தப்பட்ட குற்றம் பற்றி ஒன்றும் கூறப்படுவதில்லை. அந்தக் குழுவில் பிற கைதிகளும் இருந்தனர், இவர்கள் யாவரும் யூலியு என்ற நூற்றுக்கதிபதியின் பொறுப்பில் இருந்தனர்.

2. மீறாவுக்கு ஓட்டம்.—பெனிக்கியக் கடற்கரையோரமாய் ஓடிய கப்பல் சீதோன் துறையைத் தொட்டது, அங்கு பவுல் கரைக்குச் சென்று தனது நண்பர்களிடத்தில் உபசரிப்புப் பெற்றுப் புத்துணர்வடையும்படி நூற்றுக்கதிபதி இரக்கத்துடன் அனுமதித்தார். சீதோனிலிருந்து அதிரமித்தியத்திற்கான நேர்ப்பயணமானது சீப்புருத் தீவை வலது புறத்தில் ஒதுக்கி விட்டிருக்கும்; ஆனால் சாதகமற்ற காற்றுகளுக்குப் பயந்து அவர்கள் சீப்புருத் தீவுக்கும் பிரதான நிலத்திற்கும் இடையில் பயணம் செய்தனர். ஆசியா மைனரின் தென் மேற்குக் கரையில் இருந்த மீறாவில் அவர்கள் ரோமாபுரிக்குச் சென்று கொண்டிருந்த அலெக்சந்திரிய தானியக் கப்பலைக் கண்டு, பேரரசின் நகரத்திற்குச் செல்ல அவர்கள் கப்பல் மாறினர்.

3. மாபெரும் புயல்.—கினீது தீவு வரையிலும் காற்று முகமாய் அவர்கள் கரையோரமாய்த் தொடர்ந்து மெதுவாய்ப் பயணிக்கையில், அவர்கள்

கிரேத்தாத் தீவின் உள்தங்குமிடம் ஒன்றைப் பெறுவதற்கு தெற்கு நோக்கி எச்சரிக்கையற்றுத் திரும்பினர். தெற்குக் கரையில் ஏறக்குறைய பாதி வழியில், அவர்கள் நல்ல துறைமுகம் என்ற துறைமுகத்திற்குப் பயணித்தனர். காலம் பிந்தினதினிமித்தம் பவுல் கடற்பயணத்தைத் தள்ளி வைக்கும்படி அறிவுரை கூறினார்; ஆனால் கப்பல் முதலாளியின் முடிவைப் பின்பற்றி, அவர்கள் பயணித்தனர், ஆனால் ஒரு தீவிரமான வட கிழக்குப் புயலினால் பிடிக்கப்பட்டு, அது அவர்களைத் தன் முன்னால் பதினான்கு நாட்களாக உதவியற்ற வகையில் துரத்தியது. பவுலைத் தவிர எல்லாரும் நம்பிக்கையை இழந்து போனார்கள். தேவனிடமிருந்து வந்த இராத் தரிசனம் ஒன்று கப்பற் சேதம் ஏற்படும் என்றும் அந்தக் குழுவினர் முழுவதும் காப்பாற்றப் படுவார்கள் என்றும் உறுதிப்படுத்தியது. எனவே கப்பல் மெலித்தா (மால்ட்டா) தீவுக்குக் கடந்து வந்தது. சரிவு மணற் கரையில் ஓட்டப்பட்டு, இருநூற்று எழுபத்து ஆறு ஆத்துமாக்களும் நீந்தியோ அல்லது கப்பல் சேதத்தில் உடைந்து மிதந்த மரக்கட்டைகளைப் பிடித்துக் கொண்டோ கரையேறினார்கள்.

4. மெலித்தாவில் மாரிக்காலம்.—அந்தத் தீவார் வழக்கத்திற்கு மாறான வகையில் இரக்கம் காண்பித்து, குளிராயிருந்த கடற்பயணிக்களுக்காக நெருப்பு மூட்டினர். ஒரு கைதியாயிருந்தும் குறிப்பிடத் தக்கவராயிருந்த பவுல் கப்பலில் செல்வாக்குடையவராய் இருந்தது போன்று நிலப்பகுதியிலும் தம்மைப் பயனுடையவராக்கிக் கொண்டார். அவர் நெருப்பிற்காக விறகு சேகரித்தவர்களுக்கு மேலானவராய் இருக்கவில்லை; அவர் அந்தத் தீவின் அதிபதியான புபிலியுவின் தந்தையையும், தம்மிடத்தில் கொண்டு வரப்பட்ட பலரையும் குணமாக்கினார். பவுலுடன் இருந்த பயணக் குழுவினர் வசந்த காலத்தில் புறப்பட்டுச் சென்ற பொழுது தீவைச் சேர்ந்தவர்கள் பயனுள்ள பொருட்கள் ஏராளமானவற்றை (கப்பலில்) ஏற்றும் அளவுக்கு அவரது ஊழியங்கள் அப்படிப்பட்ட மேன்மையுடையவைகளாய் இருந்தன.

5. கடல் பயணத்தின் முடிவு.—குளிர் காலத்தில் அங்கு தங்கியிருந்த இன்னொரு அலெக்சந்திரியத் தானியக் கப்பலில் ஏறிய அவர்கள் சீரக்கூசா மற்றும் ரேகியும் நகரங்களைத் தொட்டு கடைசியில் நேப்பிள்ஸ் கரையில் இருந்த புத்தெயோலியில் நங்கூரமிட்டு நின்றது. புத்தெயோலி என்பது அலெக்சந்திரிய வர்த்தகக் கப்பல்களுக்கு மேற்கில் இருந்த திருப்பு/தங்குமுனைகளில் ஒன்றாயிருந்தது, இன்னொன்று தைபர் நதியின் முகத்துவாரத்தில் இருந்த ஒஸ்ட்டியா ஆகும். இங்கு (புத்தெயோலியில்) பவுல் சீஷர்களைக் கண்டார், இங்கிருந்து அவர் "சாலைகளின் இளவரசி" எனப்பட்ட சாலை வழியே அப்பியுபுரம் சென்று, பின் அங்கிருந்து ரோமாபுரிக்குச் சென்றார். ரோமாபுரியில் இருந்த சகோதரர்கள் அவரது வருகையைப் பற்றித் துரிதமாய்க் கேள்விப்பட்டு, அவரைச் சந்திப்பதற்காக அப்பியுபுரம் மற்றும் மூன்று சத்திரம் ஆகிய ஊர்கள் வரைக்கும் வந்தார்கள். பவுல் ஒரு கைதியாக இருந்த போதிலும் வெற்றி ஊர்வலமாக ரோமாபுரிக்குள் நுழைந்தார்.

IV. ரோமாபுரியில் இரு ஆண்டுகள் சிறைவாசம். *(அப். 28:16-31.)*

1. யூதர்களுடன் பவுலின் பேட்டி.—பவுல் புறஜாதியாருக்கான அப்போஸ்தலராயிருப்பதற்காக அழைக்கப்பட்டார். இருப்பினும் (எவ்விடத்திலும்) அவரது செய்தியானது எந்த மாறுபாடுமின்றி முதலாவது யூதர்களாயிருந்த சகோதரர்களுக்கானதாகவே இருந்தது. ஆகையால் அவர் உடனடியாக அந்நகரின் ஆயிரக்கணக்கான யூதர்களுக்குத் தலைவர்களாய் இருந்தவர்களை அழைத்தனுப்பினார். இரண்டாவது கூட்டமொன்றில் அவர் காலை முதல் இரவு வரையில் தேவனுடைய இராஜ்ஜியத்துக்கடுத்த வைகளை அவர்களுக்கு முன்பாக வைத்தார். எங்கும் போலவே இங்கும் இதன் விளைவாகச் சிலர் விசுவாசித்தனர், ஆனால் பெரும்பான்மை யானோர் கிறிஸ்துவைப் புறக்கணித்தனர்; மற்றும் எங்கும் போலவே இங்கும் பவுல் புறஜாதியாரிடம் திரும்பினார்.

2. ரோமாபுரியிலிருந்து பவுலின் நிருபங்கள்.—இந்த முதல் ரோமச் சிறையிருப்பின் போது, பவுல் குறைந்தது பின்வரும் நான்கு நிருபங்களை எழுதினார்:

அ. எபேசியர், கொலோசெயர் மற்றும் பிலேமோன்.—இதற்கான ஆதாரம் பின்வருமாறு: (1) எபேசியர் மற்றும் கொலோசெயர் நிருபங்கள் தீகிக்குவினால் எடுத்துச் செல்லப்பட்டன (எபே. 6:21, 22; கொலோ. 4:7, 8). (2) பிலேமோன் நிருபம் ஒநேசிமுவால் எடுத்துச் செல்லப்பட்டது (பிலே. 10-12). (3) இருவரும் ஒன்றாய்ப் பயணம் செய்தனர் (கொலோ. 4:7-9). (4) பவுல் ஒரு கைதியாய் இருந்தார் (எபே. 3:1). (5) அவர் செசரியா மற்றும் ரோமாபுரி ஆகிய இடங்களில் மாத்திரமே நீண்ட நாள் சிறையில் இருந்தார். பின்பு அவர் ரோமாபுரிக்குச் சென்றார்; இப்பொழுது அவர் விடுதலை யாக்கப்பட்டு பிலேமோனைச் சந்திக்கலாம் என்று நம்பிக்கையாய் இருந்தார் (பிலே. 22).

ஆ. பிலிப்பியர்.—அரண்மனையாட்களைப் பற்றி அவர் மறைமுக மாய்க் குறிப்பிடுதல் என்பது இதை அவர் ரோமாபுரியில் இருந்து எழுதி யிருந்தார் என்று காண்பிக்கின்றது (1:13).

இ. எபிரெயருக்கு எழுதிய நிருபம்.—எபிரெயருக்கு நிருபத்தை எழுதியது யார் என்பது ஐயத்துக்குரியதாக உள்ளது. இது பவுலினால் எழுதப்பட்டிருந்தால், இது அநேகமாக இந்தக் காலகட்டத்தில்தான் எழுதப்பட்டிருக்கும்.

3. ரோமாபுரியில் பவுலின் சுவிசேஷ ஊழியங்கள்.—ரோமாபுரியில் பவுல் அடைக்கப்பட்ட கட்டுப்பாட்டில் காக்கப்பட்டிருந்ததில்லை. அவர் தமக்கு வாடகைக்கு அமர்த்திக் கொண்ட வீட்டில் குடியிருந்து கொண்டு அங்கு வந்த யாவரையும் ஏற்றுக்கொண்டார். இருப்பினும் இரவும் பகலும் அவர் ஒரு படை வீரனுடன் விலங்கிடப்பட்டிருந்தார். ஆனால் விலங்குகள் அவரின் ஆத்துமாக்களுக்காகத் தாகங் கொண்ட கிறிஸ்துவைப் போன்று அக்கறையுணர்வைத் தணித்து விடவில்லை. இந்தக் காலகட்டத்தில் எழுதப்பட்ட நிருபங்கள் கனிமிக்க உழைப்புகளை மறைமுகமாய்

உணர்த்துபவைகளாய் உள்ளன. சுவிசேஷம் இன்னும் பரவுவதற்கேதுவாக அவர் கட்டுகள் விழுந்தன (பிலி. 1:12); இராயனின் வீட்டாரிலும் (பிலி. 4:22) புகழ் பெற்ற அரண்மனையாட்களில் இருந்த படைவீரர்களில் இருந்தும் கூட (பிலி. 1:13) மனமாற்றப்பட்டார்கள் ஆதாயப்படுத்தப்பட்டனர், அவர்களில் பெரிய எண்ணிக்கை கொண்டவர்கள் அந்தக் கைதியிடம் விலங்கிடப்பட்டிருந்தனர். மேலும் அவரைச் சுற்றிலும் ஒப்புக்கொடுத்த உணர்வுடன் கூடியவர்களும் அவருடைய மனதிற்கிசைந்த ஊழியர்களுமாய் இருந்தவர்களின் குழு ஒன்று இருந்தது, அவர்கள் மூலமாக அவர் பன்மடங்கு பெருகினார். அவர்களில் *தீமோத்தேயு, லூக்கா, அரிஸ்தர்க்கு, எப்பாப்பிரா* மற்றும் தொடக்க காலத்தில் "ஊழியத்திற்கு வராது போன"[5] *மாற்குவும்* கூட இருந்தனர். இங்கு லூக்கா எழுதிய வரலாறு திடீரென இடைமுறிகிறது, அது பவுலை உலகின் மாபெரும் தலைநகரில் சுவிசேஷத்திற்கு விரிவான, உறுதியான அஸ்திபாரம் இட்டு நிலைநாட்டுபவராக விட்டுச் செல்லுகிறது, அங்கிருந்து அது (சுவிசேஷம்) பேரரசின் தொலை தூரப்பகுதிகளுக்குக் கதிர் வீச முடியும்.

குறிப்புகள்

[1]*அப். 25:11.* [2]*அப். 25:12.* [3]*அப். 26:29.* [4]*அப். 26:32.* [5]*அப். 15:38.*

27

பின்னாளைய அப்போஸ்தலிக்க வரலாறு

I. பவுலின் பின்னாளைய வரலாறு.

1. அவரது விடுதலை; அதைத் தொடர்ந்த வரலாறு.—பவுல் தமது முதல் ரோமச் சிறையிருப்பிலிருந்து விடுவிக்கப்பட்டார் என்பது அதை அவர் நம்பிக்கையுடன் எதிர்பார்த்திருந்தமையினால் மறைமுகமாக உணர்த்தப் படுவதாகவும் (பிலி. 1:25, 26; 2:24; பிலே. 22) அவரது முந்திய வரலாற்றில் பொருந்தி வராத நிகழ்ச்சிகள் மற்றும் பயணங்களுக்கான மறைவான கருத்துக்களினால் உறுதிப்படுத்தப்படுவதாகவும் மற்றும் உலகளாவிய பாரம்பரியத்தினாலும் உள்ளது.

அவர் மீண்டும் எபேசுவுக்குச் சென்றார் என்பதையும், கிரேத்தாவுக்குப் பயணித்தார் என்பதையும், மற்றும் மக்கெதோனியாவுக்கும் கிரேக்கத் திற்கும் இன்னொரு பயணம் சென்றார் என்பதையும் நாம் 1 தீமோத்தேயு மற்றும் தீத்து நிருபங்களில் இருந்து பெறுகின்றோம். இந்த வேளையின் போது அவர் தீமோத்தேயுவுக்கு முதல் நிருபத்தையும் தீத்துவுக்கு நிருபத்தையும் எழுதினார்.

2. அவருடைய கடைசிச் சிறையிருப்பும் இரத்த சாட்சியான மரணமும்.—பவுல் கி.பி. 63ல் விடுவிக்கப்பட்டிருந்தார். அடுத்த ஆண்டில் ரோமாபுரியின் மாபெரும் தீ விபத்து நேர்ந்தது. பேரரசனாயிருந்த நீரோ தம் மீது (மக்கள்) சந்தேகம் கொள்வதைத் திசை திருப்புவதற்காக கிறிஸ்தவர்களைக் குற்றம்சாட்டி, பேரரசின் முதல் உபத்திரவத்தைத் தொடங்கினான். ரோமாபுரியிலிருந்து தொலைவில் இருந்த பவுல், சற்றுக் காலத்திற்குத் தமது ஊழியத்தை தொடர்ந்தார், ஆனால் கடைசியில் அவர் கைது செய்யப்பட்டு ரோமாபுரிக்குத் திரும்பக் கொண்டு வரப்பட்டார். அவர் சட்டத்திற்குப் புறம்பான தீ வைத்தலைத் தூண்டினார் என்று குற்றம் சாட்டப்பட்டிருக்கக் கூடும். அவரது இரண்டாம் சிறையிருப்பு முதல் சிறையிருப்பைக் காட்டிலும் மிகவும் கடுமையானதாக இருந்தது. அவர் சிறையிலிருந்து, முன்னதாகவே இரத்த சாட்சியாய் மரிக்கப் போகும் எதிர்பார்ப்பில் தமது கடைசி நிருபத்தை—2 தீமோத்தேயுவை - எழுதினார். தமது பழைய நண்பர்கள் இராது போனது, சிலர் அவரைக் கைவிட்டுச் சென்றது ஆகியவை அவரது இருதயத்தைப் பெரிதும் துன்புறச் செய்தன. லூக்கா கடைசி வரையிலும் அவருடன் இருந்தார். இரண்டாம் தீமோத்தேயு நிருபத்தின் கடைசி அதிகாரத்திலிருந்துதான் வயதான இந்த

அப்போஸ்தலர்மீது வேத வசனத்தின் மிகப் பிந்திய வெளிச்சம் வீழ்கின்றது; ஆனால் நம்பத் தகுந்த பாரம்பரியத்தின்படி, அவர் கி.பி. சுமார் 68ல் தீர்ப்பிடப்பட்டு இரத்த சாட்சியாக மரித்தார். கிறிஸ்தவர்கள் மீது மிகவும் அடிக்கடி திணிக்கப்பட்ட மரணத்திலிருந்து பவுலின் ரோமக்குடியுரிமை யானது அவரை தவிர்த்துத் தாமதிக்கப்படச் செய்தது. அவர் அநேகமாக ரோமாபுரியின் மதில்களுக்கு வெளியில்தான் சிரச் சேதம் செய்யப் பட்டிருப்பார். வருங்கால சந்ததிக்கு மனிதரால் ஒப்புவிக்கப்பட்டவை களிலேயே வளமிக்க பரம்பரைச் சொத்தாக உள்ள வாழ்வும் எழுத்துக்களும் உடைய (புறஜாதியாருக்கான) இந்த மாபெரும் அப்போஸ்தலர் இவ்வாறாக வீழ்ந்தார்.

II. மற்ற அப்போஸ்தலர்களின் பின்னாளைய வரலாறு.

1. பேதுருவைப் பற்றிய கடைசி கண்ணோட்டம்.—பேதுரு, அப்போஸ்தலிக்க ஆலோசனைச் சங்கத்தில் இருந்தார் என்பதே (அப். 15:7-11) அவரைப் பற்றிய மிகப் பிந்திய குறிப்பாக உள்ளது. பவுல் ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு கலாத்தியருக்கு எழுதிய தம் நிருபத்தில், அந்தியோகியாவில் பேதுருவின் மாய்மாலத்தை(கலா. 2:9-14)க் குறிப்பிடுகின்றார். இந்த நிகழ்ச்சியானது அநேகமாக, ஆலோசனைக் கூட்டத்திற்குப் பின் விரைவிலேயே, மற்றும் பவுலின் இரண்டாம் ஊழியப் பயணத்திற்கு முற்பட்ட காலத்தில் நடைபெற்றிருந்திருக்கலாம். இது புதிய ஏற்பாட்டில் பேதுருவைப் பற்றிய கடைசியான வரலாற்று மறை குறிப்பாக உள்ளது. ஆனால் அவரது நிருபங்களில் இரண்டு(ம்) நமக்கு வந்துள்ளன. அவற்றுள் முதலாவது நிருபமானது, அநேகமாக பாபிலோன் என்ற உருவகச் சொற்றொடர் கொண்டிருந்த ரோமாபுரியில் இருந்து எழுதப்பட்டிருக்க லாம், மற்றும் இது ஆசியா மைனர் பகுதியில் இருந்த கிறிஸ்தவர்களுக்காக எழுதப்பட்டது (1 பேது. 1:1; 5:13). இதில் சீலா மற்றும் மாற்கு ஆகியோரைப் பற்றிய குறிப்புகள் காணப்படுவதிலிருந்து, இது அநேகமாக பவுலின் முதல் மற்றும் இரண்டாம் ரோமச் சிறையிருப்புகளுக்கு இடைப்பட்ட காலத்தில் எழுதப்பட்டிருக்கலாம் என்று நினைக்க இடமுண்டு. பேதுருவின் இரண்டாம் நிருபமானது இவருக்குப் பவுலின் நிருபத்தைப் பற்றிய (2 பேது. 3:15, 16) பழக்க அறிவு இருந்ததையும் இரத்த சாட்சியான மரணத்தைப் பேதுரு எதிர்பார்த்திருந்ததும் காண்பிக்கப்படுகின்றது (2 பேது. 1:13-15; இ.வ. யோவா. 21:18, 19). தொடக்க காலக் கிறிஸ்தவ எழுத்தாளர்களின் கூற்றுப்படி, அந்த எதிர்பார்ப்பு, ரோமாபுரியில் பவுலின் மரணத்திற்குப் பின் வெகு விரைவில் உய்த்துணரப்பட்டது. பேதுரு ரோமக் குடியுரிமையை மகிழ்வுடன் பெற்றிருந்ததில்லை, எனவே அவர் தமது எஜமானரைப் போன்று சிலுவையில் மரித்தார். பாரம்பரிய வரலாறு நம்பத் தக்கதென்றால், அவர் தம் எஜமானரைப் போலத் துன்புறத் தகுதியற்றவர் என்று எண்ணி, தம்மைத் தலை கீழாகச் சிலுவையில் அறையும்படி கெஞ்சிக் கேட்டுக் கொண்டார்.

2. யோவானின் பின்னாளைய வாழ்வு.—நடபடிகளின் வரலாற்றினுடைய மிகவும் முற்பகுதியிலேயே யோவான் விட்டு விடப்படுகின்றார். சமாரியாவில் பிலிப்புவின் ஊழியம் தொடர்பான விஷயத்தில் (அப். 8:14, 25) அவர் கடைசியாகக் குறிப்பிடப்படுகின்றார். நடபடிகளில் (அப்போஸ்தலர்களின்) ஆலோசனைக் கூட்டம் தொடர்பான விஷயத்தில் அவரது பெயர் குறிப்பிடப்படவில்லை (அப். 15); ஆனால் அது தொடர்பான விஷயத்தில் பவுல் அவரைக் குறிப்பிடுகின்றார் (கலா. 2:9). சுவிசேஷ ஊழியத்தில் யோவான் முக்கியத்துவம் வாய்ந்த நபராயிராதிருப்பினும், பவுலுக்கு அடுத்தபடியாக இவரது எழுத்துக்கள் வேறு எந்த அப்போஸ்தலரின் எழுத்துக்களைக் காட்டிலும் முக்கியத்துவம் வாய்ந்தவைகளாக இருக்கின்றன. கடைசி சுவிசேஷம், மூன்று நிருபங்கள் மற்றும் வெளிப்படுத்தின விசேஷம் ஆகிய புத்தகங்கள் இவரது எழுதுகோலில் இருந்து வந்தவைகளாய் உள்ளன. அவரது பிந்திய ஆண்டுகள் அநேகமாக, செயல்பாடுகளின் மையமாக எபேசுவைக் கொண்டிருந்து, ஆசியா மைனர் பகுதியில் கடந்து சென்றிருக்கலாம். அவர் ஓராண்டு காலத்திற்கு பத்முதீவுக்கு (வெளி. 1:9) நாடு கடத்தப்பட்டிருந்தார், அங்கு அவர் வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தை எழுதினார். அவர் ட்ரேஜனின் காலம் வரையிலும் வாழ்ந்திருந்தார் (கி.பி. 98-117), அவர் நூற்றாண்டின் முடிவில் மரித்தார், ஒருவேளை இவர் ஒருவர் மாத்திரமே தமது விசுவாசத்தைத் தமது இரத்தத்தினால் முத்திரையிடாத அப்போஸ்தலராயிருந்தார்.

3. மற்ற அப்போஸ்தலர்கள்—முடிவுரை.—நாம் ஏற்கனவே கண்டுள்ளபடி (அப். 12:1, 2) யோவானின் சகோதரனாயிருந்த யாக்கோபு தான் முதலில் இரத்த சாட்சியாக மரணம் அடைந்து வீழ்ந்தவராவார். மற்ற அப்போஸ்தலர்களைப் பற்றிப் புதிய ஏற்பாடு வேறு ஏதாவது எடுத்துரைக்கின்றதா என்பது சந்தேகமே. யாக்கோபு மற்றும் யூதா ஆகியோர் எழுதிய இரு நிருபங்கள் எஞ்சியுள்ளன. இதை எழுதியவர்கள் இயேசுவின் சகோதரர்களாய் இருக்கலாம் என்ற கருத்துக்கு அதிகமதிகமாய் ஆதரவு பெருகினாலும் இதை எழுதியவர்களை அடையாளப்படுத்துதல் என்பது தீர்த்து வைக்கப்படாத கேள்விகளில் ஒன்றாகவே உள்ளது. பாரம்பரிய வரலாறானது, வெவ்வேறு அப்போஸ்தலர்கள் வெவ்வேறு நாடுகளுக்கு சுவிசேஷப் பணி செய்ய சென்றதை தொடர்பு படுத்தி யோவான் தவிர மற்ற யாவரும் இரத்த சாட்சியாக மரணம் அடைந்ததை எடுத்துரைக்கின்றது.

எல்லாருடைய கடைசிப் பிரயாசங்கள் மீதும், அப்போஸ்தலர்களில் மாபெரும் நபர்களாய் விளங்கியவர்களின் கடைசிப் பிரயாசங்கள் மீதும் கூடக் கவிந்துள்ள தெளிவற்ற நிலையானது மிகவும் ஆழ்ந்து குறிப்பிடக் கூடியதாக உள்ளது. அப்போஸ்தலிக்க வரலாற்றில் தனி நபருக்கான கூறானது கீழான நிலையிலேயே உள்ளது. மனிதர்களைச் சுற்றி ஆர்வத்தின் ஒரு அளவு (மட்டுமே) ஒன்று கூடுகின்றது; ஆனால் மிக மேன்மையான ஆர்வம் என்பது எப்பொழுதும் விரிவடையும் வட்டாரங்களைக் கொண்ட ஊழியத்தையே மையங் கொண்டதாக உள்ளது. இதற்கு நேர்மாறாக சுவிசேஷ வரலாற்றில் தனிநபருக்கான கூறானது பலம் மிகுந்து நிற்கிறது. ஆர்வமானது ஒரு நபரில் மையங் கொண்டுள்ளது. கிறிஸ்து தாமே தமது

வசனம் மற்றும் தமது ஊழியம் எதனைக் காட்டிலும் எப்பொழுதும் பெரியவராயிருக்கின்றார். அவர் பூமியிலிருந்து சென்றது வரைக்கும் தெளிவற்ற நிலை என்று எதுவும் இருப்பதில்லை. அவர் சுவிசேஷங்களுக்கு மாத்திரமோ, அல்லது புதிய ஏற்பாட்டுக்கு மாத்திரமோ இல்லாது, வேதாகம வரலாறு முழுவதற்கும் முதன்மைக்குத் திறவுகோல் கல்லாக உள்ளார். அவரில்லையேல் இந்த முழுப்பின்னலும் நம்பிக்கையற்ற அழிவாக/ சிதிலமாக வீழ்ச்சியடையும்; அவர் இருக்கும் பொழுது, இது இணையற்ற நீடித்த அழகாக நிலைநிற்கின்றது.

படிப்பு உதவிகள்,
பழைய ஏற்பாட்டு

பழைய ஏற்பாட்டுப் புத்தகங்களின் ஆய்வுக் கருத்துக்கள்

ஆதியாகமம் : தொடக்கங்களின் புத்தகம்
யாத்திராகமம் : அடிமைத்தனத்திலிருந்து நாடானது வரை
லேவியராகமம் : பிரமாணங்கள், பிரமாணங்கள், பிரமாணங்கள்
எண்ணாகமம் : வனாந்தரத்தில் அலைந்து திரிதல்கள்
உபாகமம் : மோவாபியச் சமவெளியில் புத்துணர்வூட்டுதல்/உயிர்ப்பித்தல்
யோசுவா : நிலத்தைப் பற்றிய வாக்குத்தத்தத்தின் நிறைவேற்றம்
நியாயாதிபதிகள் : ஒவ்வொருவரும் அவரவர் பார்வைக்குச் சரியானபடி செய்த காலம்
ரூத் : அன்பின் பற்றுறுதி
1 சாமுவேல் : மாற்றத்தின் காலம்
2 சாமுவேல் : மாற்றத்தின் காலம்
1 இராஜாக்கள் : தீர்க்கதரிசிகளும் அரசர்களும்
2 இராஜாக்கள் : தீர்க்கதரிசிகளும் அரசர்களும்
1 நாளாகமம் : ஆசாரியர்களும் அரசர்களும்
2 நாளாகமம் : ஆசாரியர்களும் அரசர்களும்
எஸ்றா : அடிமைத்தனத்தில் பிடிக்கப்பட்டவர்களின் முதல் இரண்டு திரும்புதல்கள் - ஆலயத்தை மீண்டும் கட்டுதல் மற்றும் சீர்திருத்தங்கள்.
நெகேமியா : எருசலேம் நகரை மீண்டும் கட்டுதல்
எஸ்தர் : யூதர்களை அழிவில் இருந்து காப்பாற்றுதல்
யோபு : நீதிமான் துன்பப்படுவது ஏன்?
சங்கீதம் : யூதர்களின் பாடல் புத்தகம்
நீதிமொழிகள் : ஞானமும் பலனும் உள்ள வாழ்க்கைக்கான வசனங்கள்
பிரசங்கி : "இந்த பூமியில் நாம் என்ன செய்ய வேண்டும்?"
உன்னதப்பாட்டு : அன்பின் விரும்பத்தக்க தன்மை
ஏசாயா : மேசியாத்துவத் தீர்க்கதரிசி
எரேமியா : அழுகின்ற தீர்க்கதரிசி
புலம்பல் : ஐந்து துக்கம் நிறைந்த பாடல்கள்
எசேக்கியேல் : கேபார் ஆற்றங்கரையின் தீர்க்கதரிசி
தானியேல் : நோக்கம், ஜெபம் மற்றும் தீர்க்கதரிசனம் ஆகியவற்றின் தீர்க்கதரிசி
ஓசியா : முறிந்து போன குடும்பத்துடன் இருந்த தீர்க்கதரிசி
யோவேல் : வெட்டுக் கிளி வாதை மற்றும் பெந்தெகொஸ்தே ஆகியவற்றின் தீர்க்கதரிசி
ஆமோஸ் : சமூக நீதி மற்றும் இலக்கிட நடை ஆகியவற்றின் தீர்க்கதரிசி
ஒபதியா : ஏதோம், ஏதோம், ஏதோம்

யோனா : தப்பெண்ணம் கொண்ட தீர்க்கதரிசி
மீகா : எளியவர்கள் மற்றும் சிலேடையின் தீர்க்கதரிசி
நாகூம் : நினிவேயின் சவ அடக்கப் பாடல்
ஆபகூக் : "இருந்த போதிலும்" என்பதன் தீர்க்கதரிசி
செப்பனியா : நியாயத்தீர்ப்பின் விளக்குடன் இருந்த தீர்க்கதரிசி (1:12)
ஆகாய் : நாடு கடத்தலுக்குப் பின் வந்த இலக்கிய ரீதியாகப் புத்தி கூறும் தீர்க்கதரிசி
சகரியா : நாடு கடத்தலுக்குப் பின் வந்த அடையாள ரீதியாகப் புத்தி கூறும் தீர்க்கதரிசி
மல்கியா : கடைசி வார்த்தை கொண்டிருந்த தீர்க்கதரிசி: ஒரு யுகத்தின் முடிவிற்கு தேவனுடைய வார்த்தை

ஆசரிப்புக் கூடாரம்

மகா பரிசுத்த ஸ்தலத்தில் (15 சதுர அடி) இருந்த உடன்படிக்கைப் பேழையில் பத்து கட்டளைகள் செதுக்கப்பட்ட கற்பலகைகள் இரண்டும், மன்னா வைத்த பொற்பாத்திரமும், ஆரோனுடைய தளிர்த்த கோலும் இருந்தன. கிருபாசனத்தின் மேல் மூடியானது இரண்டு கேருபீம்களின் உருவங்கள் கொண்டு அலங்கரிக்கப் பட்டிருந்தது.

பரிசுத்த ஸ்தலத்தில் (30 அடி X 15 அடி) (1) பொன் குத்துவிளக்கு (அல்லது விளக்குத்தண்டு); (2) தேவ சமூகத்து அப்ப மேஜை; மற்றும் (3) தூபப்பீடம் ஆகியவை இருந்தன.

வெளிப்பிரகாரத்தில் (150 அடி X 30 அடி) (1) தகன பலிபீடம் (அல்லது வெண்கல பலி பீடம்) மற்றும் (2) வெண்கலத் தொட்டி ஆகியவை இருந்தன.

யாக்கோபின் 12 மகன்கள்

லேயாளின் மகன்கள்
1. ரூபன்
2. சிமியோன்
3. லேவி
4. யூதா
5. இசக்கார்
6. செபுலோன்

சில்பாளின்
(லேயாளின் வேலைக்காரி)
மகன்கள்
7. காத்
8. ஆசேர்

பில்காளின்
(ராகேலின் வேலைக்காரி)
மகன்கள்
9. தாண்
10. நப்தலி

ராகேலின் மகன்கள்
11. யோசேப்பு
12. பென்யமீன்

இஸ்ரவேலின் 12 கோத்திரங்கள்

1. ரூபன்
2. சிமியோன்
   (லேவி கோத்திரத்தார் ஆசாரியர்களின் உதவியாளர்களாய் இருந்தபடியால் கானானை வெற்றி கொண்டதைத் தொடர்ந்து அவர்களுக்கு நிலப்பங்குகள் தரப்படவில்லை)
3. யூதா
4. இசக்கார்
5. செபுலோன்
6. காத்
7. ஆசேர்
8. தான்
9. நப்தலி
10. எப்பிராயீம்*
11. மனாசே*
    (*யோசேப்பின் மகன்களான இவ்விருவருமே யாக்கோபினால் தத்தெடுத்துக் கொள்ளப்பட்ட காரணத்தினால் இவ்விரு கோத்திரங்களாயினர்.)
12. பென்யமீன்

மோசே: அவரது வாழ்வின் மூன்று பருவங்கள்

40 ஆண்டுகள் எகிப்தில் ஒரு இளவரசராக
40 ஆண்டுகள் மீதியானில் ஒரு மேய்ப்பராக
40 ஆண்டுகள் வனாந்தரத்தில் இஸ்ரவேலரை நடத்திச் சென்ற ஒரு தீர்க்கதரிசியாக

இஸ்ரவேலின் நியாயாதிபதிகள்

அ. மெசொப்பொத்தாமியரின் ஒடுக்குதல்
 1. ஒத்னியேல்
ஆ. மோவாபியரின் ஒடுக்குதல்
 2. ஏகூத்
இ. பெலிஸ்தரின் ஒடுக்குதல்
 3. சம்கார்
ஈ. கானானியரின் ஒடுக்குதல்
 4. தெபோராள்
உ. மீதியானியரின் ஒடுக்குதல்
 5. கிதியோன்
 6. அபிமெலேக்
 7. தோலா
 8. யாயீர்
எ. அம்மோனியரின் ஒடுக்குதல்
 9. யெப்தா
 10. இப்சான்
 11. ஏலோன்
 12. அப்தோன்
ஏ. பெலிஸ்தரின் ஒடுக்குதல்
 13. சிம்சோன்
ஐ. 1 சாமுவேலில்
 14. ஏலி
 15. சாமுவேல்

இராஜாக்கள் மற்றும் நாளாகமங்கள் புத்தகங்களின் ஒப்பீட்டு வேறுபாடுகள்

1 & 2 இராஜாக்கள்	***1 & 2 நாளாகமங்கள்***
தீர்க்கதரிசன நோக்கம் கொண்டது	ஆசாரியத்துவ நோக்கம் கொண்டது
யுத்தங்கள் மிகவும் வெளித் தெரிவிக்கப்பட்டன	ஆலயம் மிகவும் வெளித் தெரிவிக்கப்பட்டது
அரியணைகளின் பொக்கிஷம்	தாவீதின் வம்சம் தொடருதல்
இஸ்ரவேல் மற்றும் யூதாவின் பதிவேடு	யூதாவைப் பற்றிய அடிப்படையான பதிவேடு
ஒழுக்கம்	மீட்பு

இஸ்ரவேலின் அரசர்கள்

1. யெரொபெயாம்
2. நாதாப்
3. பாஷா
4. ஏலா
5. சிம்ரி
6. உம்ரி
7. ஆகாப்
8. அகசியா
9. யோராம்*
10. யெகூ
11. யோவகாஸ்
12. யோவாஸ்**
13. யெரொபெயாம் II
14. சகரியா
15. சல்லூம்
16. மனாயீம்
17. பெக்கக்கியா
18. பெக்கா
19. ஓசியா

*அல்லது Jehoram

**அல்லது யோவகாசு

யூதாவின் அரசர்கள்

1. ரெகொபெயாம்
2. அபியா *
3. ஆசா
4. யோசபாத்
5. யோராம்
6. அகசியா
7. அத்தாலியாள்
8. யோவாஸ்
9. அமசியா
10. உசியா**
11. யோதாம்
12. ஆகாஸ்
13. எசேக்கியா
14. மனாசே
15. ஆமோன்
16. யோசியா
17. யோய்தா
18. யோயாக்கீம்
19. யோயாக்கீன்***
20. சிதேக்கியா

*அல்லது Abijam

**அல்லது அசரியா

***அல்லது எக்கோனியா, கோனியா

தீர்க்கதரிசிகளை வகைப்படுத்துதல்[1]

I. *(தீர்க்கதரிசியின்) செய்தியைப் பெறுபவர்களின்படி*
   அ. *இஸ்ரவேலுக்கு:* ஓசியா, ஆமோஸ்
   ஆ. *யூதாவுக்கு:* யோவேல், ஏசாயா, மீகா, செப்பனியா, எரேமியா, ஆபகூக், ஆகாய், சகரியா, மல்கியா
   இ. *நினிவேக்கு:* யோனா, நாகூம்
   ஈ. *பாபிலோனுக்கு:* தானியேல்
   உ. *சிறையிருப்பிலிருப்பவர்களுக்கு:* எசேக்கியேல்
   ஊ. *ஏதோமுக்கு:* ஒபதியா

II. *செப்துவஜிந்தின்படி (இந்த ஏற்பாடு ஆங்கில மொழிபெயர்ப்பு களினால் பின்பற்றப்படுகிறது.)*
   அ. *பெரிய தீர்க்கதரிசிகள்:* ஏசாயா, எரேமியா (புலம்பல்), எசேக்கியேல், தானியேல்
   ஆ. *சிறிய தீர்க்கதரிசிகள்:* ஓசியா, யோவேல், ஆமோஸ், ஒபதியா, யோனா, மீகா, நாகூம், ஆபகூக், செப்பனியா, ஆகாய், சகரியா, மல்கியா

III. *நாள் வரிசைக் காலக் கணக்கின்படி*
   அ. *சிறையிருப்பிற்குமுன்பு:* ஒபதியா, யோவேல், யோனா, ஓசியா, ஆமோஸ், ஏசாயா, மீகா, நாகூம், செப்பனியா, எரேமியா, ஆபகூக்
   ஆ. *சிறையிருப்பின் போது:* எசேக்கியேல், தானியேல்
   இ. *சிறையிருப்பிற்குப் பின்பு:* ஆகாய், சகரியா, மல்கியா

IV. *புறஜாதி உலகின் அதிகார/ஆட்சிக் காலங்களின்படி*
   அ. *அசீரியர்களின் காலம்:* ஒபதியா, யோவேல், யோனா, ஓசியா, ஆமோஸ், ஏசாயா, மீகா, நாகூம்
   ஆ. *பாபிலோனியர்களின் காலம்:* செப்பனியா, எரேமியா, ஆபகூக், தானியேல், எசேக்கியேல்
   இ. *பெர்ஸியர்களின் காலம்:* ஆகாய், சகரியா, மல்கியா

V. *தீர்க்கதரிசிகளின் காலத்தின்படி (தீர்க்கதரிசியின் ஊழியத்தின் தோராயமான தொடக்க ஆண்டு)*

ஒபதியா (கி.மு. 845); யோவேல் (கி.மு. 835); யோனா (கி.மு. 783); ஓசியா (கி.மு. 760); ஆமோஸ் (கி.மு. 760); ஏசாயா (கி.மு. 739); மீகா (கி.மு. 735); நாகூம் (கி.மு. 650); செப்பனியா (கி.மு. 640); எரேமியா (கி.மு. 627); ஆபகூக் (கி.மு. 609); தானியேல் (கி.மு. 605); எசேக்கியேல் (கி.மு. 593); ஆகாய் (கி.மு. 520); சகரியா (கி.மு. 520); மல்கியா (கி.மு. 433).

[1]Hobart E. Freeman, *An Introduction to the Old Testament Prophets* (Chicago: Moody Press, 1968), 136.

எபிரெய வேதாகமத்தின் மூன்று பிரதானப் பிரிவுகள்

I. *நியாயப்பிரமாணம்* - தோரா (5 புத்தகங்கள்)
   அ. ஆதியாகமம்
   ஆ. யாத்திராகமம்
   இ. லேவியராகமம்
   ஈ. எண்ணாகமம்
   உ. உபாகமம்
II. *தீர்க்கதரிசிகள்* - நபியீம் (8 புத்தகங்கள்)
   அ. முற்கால தீர்க்கதரிசிகள்
      1. யோசுவா
      2. நியாயாதிபதிகள்
      3. சாமுவேல் (1 & 2)
      4. இராஜாக்கள் (1 & 2)
   ஆ. பிற்காலத் தீர்க்கதரிசிகள்
      1. ஏசாயா
      2. எரேமியா
      3. எசேக்கியேல்
      4. பன்னிருவரின் புத்தகங்கள் (சிறிய தீர்க்கதரிசிகள்)
III. *பதிவேடுகள்* - கேத்துபிம் (11 புத்தகங்கள்)
   அ. சங்கீதங்கள், நீதிமொழிகள், யோபு
   ஆ. ஐந்து சுருள்கள் - மெகில்லோத்
      1. உன்னதப்பாட்டு
      2. ரூத்
      3. புலம்பல்
      4. பிரசங்கி
      5. எஸ்தர்
   இ. தானியேல், எஸ்றா/நெகேமியா, நாளாகமம் (1 & 2)

செப்துவஜிந்த்தின் நான்கு பிரதான பிரிவுகள்

(எபிரெய வேதாகமத்தின் கிரேக்க மொழிபெயர்ப்பு)

I. நியாயப்பிரமாணம்: பெண்டட்டாகுக் (5 புத்தகங்கள்)
   ஆதியாகமம் முதல் உபாகமம் வரை
II. வரலாறு (12)
   யோசுவா முதல் எஸ்தர் வரை
III. கவிதை (5)
   யோபு முதல் உன்னதப்பாட்டு வரை
IV. தீர்க்கதரிசனம் (17)
   ஏசாயா முதல் மல்கியா வரை
   அ. பெரியவை - ஏசாயா முதல் தானியேல் வரை (5)
   ஆ. சிறியவை - ஓசியா முதல் மல்கியா வரை (12)

படிப்பு உதவிகள்,

புதிய ஏற்பாட்டு

புதிய ஏற்பாட்டின் 27 புத்தகங்களின் வகைப்பாடு

1. வாழ்க்கை வரலாறு
   - அ. மத்தேயு
   - ஆ. மாற்கு
   - இ. லூக்கா
   - ஈ. யோவான்
2. சரித்திரம்
   - அ. நடபடிகள்
3. பவுலின் நிருபங்கள்
   - அ. ரோமர்
   - ஆ. 1 கொரிந்தியர்
   - இ. 2 கொரிந்தியர்
   - ஈ. கலாத்தியர்
   - உ. எபேசியர்
   - ஊ. பிலிப்பியர்
   - எ. கொலோசெயர்
   - ஏ. 1 தெசலோனிக்கேயர்
   - ஐ. 2 தெசலோனிக்கேயர்
   - ஒ. 1 தீமோத்தேயு
   - ஓ. 2 தீமோத்தேயு
   - ஔ. தீத்து
   - ஃ. பிலேமோன்
4. பொது நிருபங்கள்
   - அ. எபிரெயர்
   - ஆ. யாக்கோபு
   - இ. 1 பேதுரு
   - ஈ. 2 பேதுரு
   - உ. 1 யோவான்
   - ஊ. 2 யோவான்
   - எ. 3 யோவான்
   - ஏ. யூதா
5. தீர்க்கதரிசனம்
   - அ. வெளிப்படுத்தின விசேஷம்

புதிய ஏற்பாட்டுப் புத்தகங்களின் பாடக் கருத்துக்கள்

மத்தேயு : யூதர்களுக்கான சுவிசேஷம்
மாற்கு : ரோமர்களுக்கான சுவிசேஷம்
லூக்கா : புறஜாதியாருக்குக்கான சுவிசேஷம்
யோவான்: விசுவாசத்தின் சுவிசேஷம்
அப். நட : பிரதான கட்டளையின் நிறைவேற்றம்
ரோமர் : மனிதர்களை மீட்க தேவனின் திட்டம்
1 கொரி. : அறிக்கைகள் விவாதிக்கப்படுதல்:
வினாக்கள் விடையளிக்கப்படுதல்
2 கொரி. : அப்போஸ்தலிக்கத் தற்பாதுகாப்பு
கலாத்தியர் : கிறிஸ்துவுக்குள் சுதந்திரம்
எபேசியர் : சபை, தேவனுடைய அநாதி தீர்மானம்
பிலிப்பியர் : சந்தோஷத்தின் நிருபம்
கொலோசெயர் : கிறிஸ்து, எல்லாவற்றிற்கும் தலை
1 தெச. : இரண்டாம் வருகையைக் கொண்டு
ஒருவர் மற்றவரைத் தேற்றுதல்
2 தெச. : பாவ மனிதன்
1 தீமோத்தேயு : உதவிக்காரர்கள், மூப்பர்கள் ஆகியோரின் தகுதிகள்
2 தீமோத்தேயு : பவுல் எழுதிய கடைசி நிருபம்
தீத்து : சபையை ஒழுங்கமைத்தல்
பிலேமோன் : ஒநேசிமுவுக்காக ஒரு வேண்டுகோள்
எபிரெயர் : பழையதற்காக புதியதை விட்டு விடாதிருத்தல்
யாக்கோபு : நடைமுறை தேவபக்தி
1 பேதுரு : துன்பங்களின் மத்தியில் நம்பிக்கை
2 பேதுரு : கள்ள போதகர்கள் வருகின்றனர்!
1 யோவான் : அன்பு மற்றும் உறுதிப்பாடு ஆகியவற்றின் நிருபம்
2 யோவான் : சத்தியத்தில் நிலைத்திருத்தல்
3 யோவான் : காயு, தியோத்திரேப்பு, தெமெத்திரியு
யூதா : விசுவாசத்திற்காக தைரியமாய்ப் போராடுதல்
வெளி. : கர்த்தருடைய மக்கள் வெற்றியடையப் போகின்றார்கள்

புதிய ஏற்பாட்டு நூல்கள் எழுதப்பட்ட கால வரிசை அட்டவணை

புத்தகம்	தேதி
மத்தேயு	*கி.பி. 60?*
மாற்கு	*65*
லூக்கா	ca. *60*
யோவான்	*90*s
நடபடிகள்	*62*
ரோமர்	*54-59*
1 கொரிந்தியர்	*53-54*
2 கொரிந்தியர்	*54-55*
கலாத்தியர்	*48-49*
எபேசியர்	ca.*62*
பிலிப்பியர்	ca.*62*
கொலோசெயர்	ca.*62*
1 தெசலோனிக்கேயர்	*51-52*
2 தெசலோனிக்கேயர்	*52-53*
1 தீமோத்தேயு, 2 தீமோத்தேயு, தீத்து	*64-68*
பிலேமோன்	ca.*62*
எபிரெயர்	*63-66*
யாக்கோபு	*44-45*
1 பேதுரு	*64-67*
2 பேதுரு	*67-68*
1 யோவான், 2 யோவான், 3 யோவான்	*90-95*
யூதா	*65-70*
வெளிப்படுத்தின விசேஷம்	*90-96*

புதிய ஏற்பாட்டின் எழுத்தாளர்கள்

எழுத்தாளர்	***புத்தகம்***
மத்தேயு	*மத்தேயு*
மாற்கு	*மாற்கு*
லூக்கா	*லூக்கா; நடபடிகள்*
யோவான்	*யோவான்; 1, 2, 3 யோவான்; வெளி. விசேஷம்*
யாக்கோபு	*யாக்கோபு*
யூதா	*யூதா*
?	*எபிரெயர்*
பவுல்	*ரோமர்; 1, 2 கொரிந்தியர்; கலாத்தியர்; எபேசியர்; பிலிப்பியர்; கொலோசெயர்; 1, 2 தெசலோனிக்கேயர்; 1, 2 தீமோத்தேயு; தீத்து; பிலேமோன்*
பேதுரு	*1, 2 பேதுரு*

இயேசுவின் அற்புதங்கள்

	மத்தேயு	மாற்கு	லூக்கா	யோவான்
திரளான மீன்களைப் பிடிக்கச் செய்தல்			5:4-11	
தொழுநோய் கொண்ட மனிதன் குணமாக்கப்படுதல்	8:2-4	1:40-42	5:12, 13	
ரோம நூற்றுக்கதிபதியின் வேலையாள் குணமாக்கப்படுதல்	8:5-13		7:1-10	
நாயீன் நகரத்து விதவையின் மகன் உயிரோடு எழுப்பப்படுதல்			7:11-15	
பேதுருவின் மாமி குணமாக்கப்படுதல்	8:14, 15	1:30-32	4:38, 39	
புயலை அமர்த்துதல்	8:23-27	4:37-41	8:22-25	
கதரேனிய அசுத்த ஆவி பிடித்த மனிதன் குணமாக்கப்படுதல்	8:28-34	5:1-15	8:27-35	
திமிர்வாதக்காரன் குணமாக்கப்படுதல்	9:2-7	2:3-12	5:18-25	
யாவீருவின் மகள் உயிரோடு எழுப்பப்படுதல்	9:18, 19, 23-25	5:22-24, 38-42	8:41, 42, 49-56	
உதிரப் போக்குள்ள பெண் குணமாக்கப்படுதல்	9:20-22	5:25-29	8:43-48	
பார்வையற்ற இரண்டு மனிதர் குணமாக்கப்படுதல்	9:27-31			
பிசாசு பிடித்த ஊமையான மனிதன் குணமாக்கப்படுதல்	9:32-33			
சூம்பின கையுடைய மனிதன் குணமாக்கப்படுதல்	12:10-13	3:1-5	6:6-10	
பார்வையற்ற, ஊமையான, அசுத்த ஆவியுடையவன் குணமாக்கப்படுதல்	12:22		11:14	
5,000 பேருக்கு உணவளித்தல்	14:15-21	6:35-44	9:12-17	6:5-13
தண்ணீரின்மீது நடத்தல்	14:25	6:48-51		6:19-21
சிரபோனிக்கேய பெண்ணின் மகள் குணமாக்கப்படுதல்	15:21-28	7:24-30		
4,000 பேருக்கு உணவளித்தல்	15:32-38	8:1-9		
அசுத்த ஆவி கொண்ட பையன் குணமாக்கப்படுதல்	17:14-18	9:17-29	9:38-43	
மீனின் வாயில் நாணயம்	17:24-27			
பார்வையற்ற இருவர் (ஒருவரின் பெயர் பர்த்திமேயு) குணமாக்கப்படுதல்	20:29-34	10:46-52	18:35-43	
காய்க்காத அத்தி மரம் பட்டுப் போகுதல்	21:18-22	11:12-14, 20-25		
செவிட்டு ஊமை குணமாக்கப்படுதல்		7:31-37		

	மத்தேயு	மாற்கு	லூக்கா	யோவான்
ஜெப ஆலயத்தில் அசுத்த ஆவியுடையவர் குணமாக்கப்படுதல்		*1:23-26*	*4:33-35*	
பெத்சாயிதா குளத்தில் பார்வையற்ற மனிதர் குணமாக்கப்படுதல்		*8:22-26*		
கூனியானபெண் குணமாக்கப்படுதல்			*13:11-13*	
நீர்க்கோவை வியாதியுள்ளவர் குணமாக்கப்படுதல்			*14:1-4*	
தொழுநோயாளிகள் பத்துப் பேர் குணமாக்கப்படுதல்			*17:11-19*	
பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனைக் குணமாக்குதல்			*22:50, 51*	
தண்ணீரைத் திராட்ச இரசமாக்குதல்				*2:1-11*
கப்பர்நகூமில் அதிகாரியின் மகன் குணமாக்கப்படுதல்				*4:46-54*
பெதஸ்தா குளத்தருகில் நோயாளி குணமாக்கப்படுதல்				*5:1-9*
பிறவிலேயே பார்வையற்ற மனிதர் குணமாக்கப்படுதல்				*9:1-7*
லாசரு உயிர்ப்பிக்கப்படுதல்				*11:1-44*
இன்னொரு திரளான மீன்களைப் பிடிக்கச் செய்தல்				*21:1-11*

இயேசுவின் உவமைகள்

	மத்தேயு	மாற்கு	லூக்கா
மரக்காலின் கீழ் விளக்கு	5:14, 15	4:21-22	8:16; 11:33
ஞானமுள்ள மற்றும் மதியீனமான கட்டுபவர்கள்	7:24-27		6:47-49
புதிய ஆடையும் பழைய வஸ்திரமும்	9:16	2:21	5:36
பழந்துருத்திகளில் புதுத் திராட்ச ரசம்	9:17	2:22	5:37-38
விதைப்பவனும் நிலங்களும்	13:3-8, 18-23	4:3-8, 14-20	8:5-8, 11-15
களைகள் (ஆகாத செடிகள்)	13:24-30, 36-43		
கடுகு விதை	13:31, 32	4:30-32	13:18, 19
புளித்தமா	13:33		13:20, 21
மறைத்து வைக்கப்பட்ட புதையல்	13:44		
விலையேறப் பெற்ற முத்து	13:45, 46		
மீன் பிடி வலை/கடலில் போடப்பட்ட இழு வலை	13:47-50		
வீட்டு எஜமானர்	13:52		
காணாமற் போன ஆடு	18:12-14		15:4-7
இரக்கமற்ற வேலைக்காரன்	18:23-34		
திராட்சத் தோட்ட வேலையாட்கள்	20:1-16		
தந்தையும் இரண்டு மகன்களும்	21:28-32		
பொல்லாத குடியானவன்	21:33-44	12:1-11	20:9-18
அரசருடைய மகனின் திருமணம்	22:2-14		
அத்தி மரத்தில் இளந்துளிர்கள்	24:32-35	13:28, 29	21:29-31
உண்மையும் ஞானமும் உள்ள வேலைக்காரன்	24:45-51		12:42-48
பத்துக் கன்னிகைகள்	25:1-13		
தாலந்துகள் (மினாக்கள்)	25:14-30		19:12-27
செம்மறி ஆடுகளும் வெள்ளாடுகளும்	25:31-46		

	மத்தேயு	மாற்கு	லூக்கா
விதை வளருதல்		4:26-29	
விழித்திருக்கும் வேலைக்காரர்கள்		13:35-37	12:35-40
இரு கடன்காரர்கள்			7:41-43
நல்ல சமாரியன்			10:30-37
நள்ளிரவில் தேவையுடன் வந்த நண்பன்			11:5-8
செல்வந்தனாயிருந்த மதியீனன்			12:16-21
கனியற்ற அத்தி மரம்			13:6-9
விருந்தில் கடைசி இடம்			14:7-14
மாபெரும் விருந்து			14:16-24
சீஷத்துவத்தின் விலை			14:28-33
காணாமற் போன காசு			15:8-10
காணாமற் போன (ஊதாரி) மகன்			15:11-32
அநீதியான உக்கிராணக்காரன்			16:1-8
செல்வந்தனும் லாசருவும்			16:19-31
எஜமானனும் அவனது வேலைக்காரனும்			17:7-10
வற்புறுத்திய (தொடர்ந்து விண்ணப்பித்த) விதவை			18:2-8
பரிசேயனும் ஆயக்காரனும்			18:10-14

உயிர்த்தெழுதலுக்குப் பின் இயேசுவின் தரிசனங்கள்

யாருக்கு:	எப்பொழுது:	மத்.	மாற்.	லூக்.	யோவா.	அப். நட.	1 கொரி.
1. கல்லறையில் மகதலேனா மரியாளுக்கு	ஞாயிறு அதிகாலையில்		16:9-11		20:11-18		
2. பிற பெண்களுக்கு	ஞாயிறு அதிகாலையில்	28:5-10	16:2-8	24:1-10			
3. எம்மாவு சாலையில் பயணித்தவர்களுக்கு	ஞாயிறு நடுப்பகலில்			24:13-32			
4. எருசலேமில் பேதுருவுக்கு	ஞாயிற்றுக்கிழமை			24:34			15:5
5. மேல்வீட்டில் பத்து சீஷர்களுக்கு	ஞாயிற்றுக்கிழமை மாலையில்		16:14	24:36-43	20:19-25		
6. மேல்வீட்டில் பதினோரு சீஷர்களுக்கு	ஒரு வாரத்திற்குப் பிறகு				20:26-31		15:5
7. கலிலேயாக் கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த ஏழு சீஷர்களுக்கு	பிற்பாடு				21:1-23		
8. 500க்கு அதிகமானவர்களுக்கு	பிற்பாடு						15:6
9. யாக்கோபுக்கு	பிற்பாடு						15:7
10. ஒலிவ மலையில் பரத்துக்கேறுகையில் பதினோரு சீஷர்களுக்கு	உயிர்த்தெழுந்து 40 நாட்களுக்குப் பிறகு	28:16-20	16:15-18	24:44-49		1:3-8	

பவுலின் ஊழியப் பயணங்களும் ரோமாபுரிக்குப் பயணமும்

பயணம்	வேத வசனம்	காலம்	சென்ற இடங்கள்	எழுதிய நிருபங்கள்
முதலாவது	அப். 13:1-14:28	கி.பி. 46-48	சீரியாவின் அந்தியோகியா, செலுக்கியா, சீப்புரு, சாலமி, பாப்போ, பிசீதியாவின் அந்தியோகியா, இக்கோனியம், லீஸ்தீரா, தெர்பை, அத்தாலியா.	ஒன்றுமில்லை
இரண்டாவது	அப். 15:36-18:22	கி.பி. 49-52	சீரியாவின் அந்தியோகியா, சிலிசியா, தெர்பை லீஸ்தீரா, பிரிகியா, கலாத்தியா, துரோவா, பிலிப்பி, அம்பிபோலி, அப்பொலோனியா, தெசலோனிக்கே, பெரேயா, அத்தேனே, கொரிந்து, கெங்கிரேயா, எபேசு, செசரியா, எருசலேம்.	1தெசலோனிக்கேயர் 2 தெசலோனிக்கேயர்
மூன்றாவது	அப். 18:23-21:17	கி.பி. 53-58	சீரியாவின் அந்தியோகியா, கலாத்தியா, பிரிகியா, எபேசு, துரோவா, மெக்கெதோனியா (பிலிப்பி), கிரேக்கம், கொரிந்து, பிலிப்பி, ஆசோ, மித்திலேனே, கீயூ, சாமோ, துரோகில்லியும், மிலேத்து, கோஸ், ரோது, பத்தாரா, தீரு, தாலமி, செசரியா, எருசலேம்.	1 கொரிந்தியர் 2 கொரிந்தியர் ரோமர்
ரோமாபுரிக்கு	அப். 21:15-28:16	கி.பி. 61-63	எருசலேம், அந்திப்பத்திரி, செசரியா, சீதோன், மீறா, நல்ல துறைமுகம், மெலித்தா, சிரக்கீயு, ரேகியு, புத்தெயோலி, அப்பியு சந்தை, ரோமாபுரி.	எபேசியர் பிலிப்பியர் கொலோசெயர் பிலேமோன்

எபேசியருக்கு எழுதிய நிருபத்தில் கொடுக்கப்பட்டபடி “கிறிஸ்துவுக்குள்” நமக்கு உள்ள ஆசீர்வாதங்கள்

நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் இருக்கிறோம்	*(1:1)*
கிறிஸ்துவுக்குள் ஆசீர்வதிக்கப்படுகிறோம்	*(1:3)*
அவருக்குள் தேர்ந்து கொள்ளப்பட்டுள்ளோம்	*(1:4)*
கிறிஸ்துவால் சுவிகரிக்கப்பட்டுள்ளோம்	*(1:6)*
பிரியமானவருக்குள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளோம்	*(1:5)*
கிறிஸ்துவுக்குள் மீட்கப்பட்டு மன்னிக்கப்பட்டுள்ளோம்	*(1:7)*
தமது தயவுள்ள சித்தத்தை அவருக்குள் வெளிப்படுத்தினார்	*(1:8)*
சகலமும் கிறிஸ்துவை மையம் கொண்டுள்ளது	*(1:9)*
கிறிஸ்துவுக்குள் (தேவனுடைய) சுதந்தரமாகிறோம்	*(1:12)*
கிறிஸ்துவுக்குள் மகிமையடைகின்றோம்	*(1:11)*
கிறிஸ்துவின் மீது விசுவாசம்	*(1:15)*
அவருக்குள் ஞானம்	*(1:17)*
அவருக்குள் நம்பிக்கை	*(1:18)*
அவருக்குள் வல்லமை	*(1:19, 20)*
கிரிஸ்துவுக்குள் துரிதப்படுத்தப்படுகின்றோம்	*(2:6, 7)*
கிறிஸ்துவுக்குள் படைக்கப்பட்டுள்ளோம்	*(2:10)*
கிறிஸ்துவுக்குள் (தேவனுக்குச்) சமீபமாக்கப்படுகிறோம்	*(2:13)*
கிறிஸ்துவுக்குள் வளருகின்றோம்	*(2:21)*
கிறிஸ்துவுக்குள் கட்டப்படுகின்றோம்	*(2:22)*
கிறிஸ்துவுக்குள் அவருடைய வாக்குத்தத்தங்களுக்கு உடன் பங்காளிகள் ஆகிறோம்	*(3:3)*
தேவனுடைய ஞானம் கிறிஸ்துவுக்குள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது	*(3:10, 11)*
கிறிஸ்துவின் மூலம் தைரியமும் (தேவனிடம்) சேரும் சிலாக்கியமும் உண்டாயிருக்கின்றது	*(3:12)*

பவுலின் எழுத்துக்களில் இருந்து

ஊழியக்காரரான பவுல் ...

... பிரிக்கப்பட்டிருந்தார்	*ரோமர் 1:1*
... ஊழியம் செய்தார்	*ரோமர் 1:9*
... இரட்சிக்கப்பட்டார்	*ரோமர் 1:16*

எப்படிக் கொடுக்க வேண்டுமென்று பவுல் நமக்குக் கூறுகின்றார்

உங்கள் ஏழ்மையிலிருந்து கொடுங்கள்	*2 கொரி. 8:2*
உதாரத்துவமாய்க் கொடுங்கள்	*2 கொரி. 8:2*
மனப்பூர்வமாய்க் கொடுங்கள்	*2 கொரி. 9:7*
வரவுக்குத் தக்கதாகக் கொடுங்கள்	*2 கொரி. 8:12, 13, 14*
உற்சாகமாய்க் கொடுங்கள்	*2 கொரி. 9:7*
ஏராளமாய்க் கொடுங்கள்	*2 கொரி. 9:6*

"உறுதியாய் நிலைநிற்கும்"படி பவுல் கூறுகின்றார்

... விசுவாசத்தில்	*1 கொரி. 16:13*
... சுயாதீனத்தில்	*கலா. 5:1*
... ஆவியில்	*பிலி. 1:27*
... கர்த்தருக்குள்	*பிலி. 4:1*

ஆவியின் கனியைப் பவுல் பட்டியலிடுகின்றார்

தேவனை நோக்கியவை - அன்பு, சந்தோஷம், சமாதானம்
மற்றவர்களை நோக்கியவை - நீடிய பொறுமை, தயவு, நற்குணம்
என்னை நோக்கியவை - விசுவாசம், சாந்தம்,
இச்சையடக்கம் *கலா. 5:22, 23*

"அவருக்குள் [கிறிஸ்துவுக்குள்] நாம் ..." என்று பவுல் கூறுகின்றார்

அவருக்குள் நடக்கிறோம்	*கொலோ. 2:6*
அவருக்குள் வேர் கொண்டுள்ளோம்	*கொலோ. 2:7*
அவருக்குள் கட்டப்பட்டுள்ளோம்	*கொலோ. 2:7*
அவருக்குள் பூரணமாக்கப்படுகிறோம்	*கொலோ. 2:10*
அவருக்குள் மரித்துள்ளோம்	*கொலோ. 2:20*
அவருக்குள் உயிர்ப்பிக்கப்பட்டுள்ளோம்	*கொலோ. 3:1*
அவருக்குள் மறைந்துள்ளோம்	*கொலோ. 3:3*

கிறிஸ்தவர்கள் கீழ்க் கண்டவற்றைச் செய்யும்படி பவுல் வற்புறுத்தினார்

அவருக்குப் பற்றுறுதியுடனிருங்கள்	*1 தெச. 2:15*
உலகத்தில் சுவிசேஷ ஊழியம் செய்யுங்கள்	*1 தெச. 3:1*
அவரது ஊழியர்களுக்காக ஜெபியுங்கள்	*1 தெச. 3:1, 2*
அவருக்காகப் பொறுமையுடன் காத்திருங்கள்	*1 தெச. 3:5*
பரிசுத்தமாக வாழுங்கள்	*1 தெச. 3:6-14*

தீத்துவுக்குள் இருந்த "நற்செயல்கள்" பற்றிப் பவுல் பேசுகின்றார்

நற்செயல்களுக்கு மாதிரி	*தீத்து 2:7*
நற்செயல்களில் பக்தி வைராக்கியம் உள்ளவர்	*தீத்து 2:14*
சகல வித நற்செயல்களும் செய்யத் தயாராயிருப்பவர்	*தீத்து 3:1*
நற்செயல்கள் செய்ய ஜாக்கிரதையுள்ளவர்	*தீத்து 3:8*
குறைவுகளை நீக்குகிறதற்கேதுவாக நற்செயல்களைப் பாரமரிக்கிறவர்	*தீத்து 3:14*

பொதுவான நிருபங்களிலிருந்தும் வெளிப்படுத்தின விசேஷத்திலிருந்தும்

ஏழு விலையேறப்பெற்ற காரியங்கள்

விலையேறப்பெற்ற விசுவாசம் சோதிக்கப்படுதல்	*1 பேது. 1:7*
விலையேறப்பெற்ற இரத்தம்	*1 பேது. 1:19*
விலையேறப்பெற்ற மூலைக்கல்	*1 பேது. 2:4, 6*
விலையேறப்பெற்ற கிறிஸ்து	*1 பேது. 2:7*
விலையேறப்பெற்ற ஆவி	*1 பேது. 3:4*
விலையேறப்பெற்ற விசுவாசம்	*2 பேது. 1:1*
விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்கள்	*2 பேது. 1:4*

கள்ளப் போதகர்களின் வருகை, செல்வாக்கு மற்றும் அழிவு *(2 பேதுரு 2)*

கேட்டுக்கேதுவான வேதப் புரட்டுகளைக் கொண்டு வரும்	*2:1*
தங்களைக் கிரயத்துக்குக் கொண்ட ஆண்டவரை மறுதலிக்கும்	*2:1*
சத்திய மார்க்கம் தூஷிக்கப்படும்	*2:2*
தந்திரமான வார்த்தைகளால் உங்களை வசப்படுத்திக் கொள்ளும்	*2:3*
அசுத்த இச்சையோடு மாம்சத்திற்கேற்றபடி நடக்கும்	*2:10*
கர்த்தத்துவத்தை அசட்டை பண்ணும்	*2:10*
துணிகரக்காரர், அகங்காரிகள்	*2:10*
மகத்துவங்களைத் தூஷிக்க அஞ்சாதவர்கள்	*2:10*
புத்தியற்ற மிருக ஜீவன்கள்	*2:12*
தங்களுக்குத் தெரியாதவைகளைத் தூஷிக்கிறவர்கள்	*2:12*

ஒரு நாள் வாழ்வை இன்பமென்று எண்ணுகிறவர்கள்	2:13
சமூகத்தில் கறைகளும் இச்சைகளுமாயிருப்பார்கள்	2:13
உங்களோடே விருந்துண்ணுகையில் தங்கள் வஞ்சனைகளில் உல்லாசமாய் வாழ்கிறவர்கள்	2:13
விபசார மயக்கத்தால் நிறைந்து பாவத்தை விட்டோயாதவைகளுமாயிருக்கிற கண்களை உடையவர்கள்	2:14
உறுதியில்லாத ஆத்துமாக்களைத் தந்திரமாய் பிடிக்கிறவர்கள்	2:14
பொருளாசையில் பழகின இருதயத்தையுடையவர்கள்	2:14
சாபத்தின் பிள்ளைகள்	2:14
தப்பி நடந்தவர்கள்	2:15
தண்ணீரில்லாத கிணறுகள்	2:17
சுழல் காற்றினால் அடியுண்டோடுகிற மேகங்கள்	2:17
அகந்தையான வீண் வார்த்தைகளைப் பேசுகிறவர்கள்	2:18
மாம்ச இச்சைகளால் தந்திரமாய் பிடிக்கிறவர்கள்	2:18
கேட்டுக்கு அடிமைகளாயிருக்கிறவர்கள்	2:19

ஏழு புதிய காரியங்கள்

ஒரு புதிய வானமும் பூமியும்	வெளி. 21:1
ஒரு புதிய ஜனங்கள்	வெளி. 21:2-8
ஒரு புதிய மணவாட்டி	வெளி. 21:9
ஒரு புதிய இல்லம்	வெளி. 21:10-21
ஒரு புதிய தேவாலயம்	வெளி. 21:22
ஒரு புதிய வெளிச்சம்	வெளி. 21:23-27
ஒரு புதிய பரதீசு	வெளி. 22:1-5

வெளிப்படுத்தின விசேஷத்தில் ஆசியாவிலிருந்த 7 சபைகளுக்கு இயேசுவின் கடிதங்கள்

	எபேசு	சிமிர்னா	பெர்கமு	தியத்தீரா	சர்தை	பிலதெல்பியா	லவோதிக்கேயா
இயற்பெயர்	*2:1*	*2:8*	*2:12*	*2:18*	*3:1*	*3:7*	*3:14*
புகழ்ச்சி	*2:2, 3, 6*	*2:9*	*2:13*	*2:19, 24*	*3:4*	*3:8, 10*	ஒன்றுமில்லை
கண்டனம்	*2:4*	ஒன்றுமில்லை	*2:14, 15*	*2:20, 21*	*3:1*	ஒன்றுமில்லை	*3:15, 17*
ஆலோசனை	*2:5*	*2:10*	*2:16*	*2:25*	*3:2, 3*	*3:11*	*3:18, 19*
எச்சரிக்கை	*2:5*	ஒன்றுமில்லை	*2:16*	*2:22, 23*	*3:3*	*3:11*	*3:18*
அறிவுறுத்துதல்	*2:7*	*2:11*	*2:17*	*2:29*	*3:6*	*3:13*	*3:22*
வாக்குத்தத்தம்	*2:7*	*2:11*	*2:17*	*2:26-28*	*3:5*	*3:10, 12*	*3:20, 21*

ஒவ்வொரு சபையின் முதன்மைப் பண்பு பின்வருமாறு: *எபேசு*—ஆவிக்குரிய வீழ்ச்சி; *சிமிர்னா*—வீரத்துடன் சகித்திருத்தல்; *பெர்கமு*—தவறான சகிப்புத் தன்மை; *தியத்தீரா*—உலகத்துடன் ஒத்துப் போகுதல்; *சர்தை*—மத உணர்வுடமை; *பிலதெல்பியா*—உண்மையான தேவபக்தி; *லவோதிக்கேயா*—ஆபத்தான அலட்சியம்.